ஓ

மகாபரத சூடாமணி

என்னும்

பாவ ராக தாள சிங்காராதி

முதல் மூன்று அத்தியாயங்கள்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 90

ஓ

மகாபரத சூடாமணி

என்னும்

பாவ ராக தாள சிங்காராதி

முதல் மூன்று அத்தியாயங்கள்



முன்னுரை

ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள்

பதிப்பாசிரியர்

ரா. விசுவநாதையர்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 90

1994

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலையம் வெளியீடு எண்.11

முதற்பதிப்பு 1955
மறுபதிப்பு 1994 பிரதிகள் 1200

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 90

விலை ரூ.48

தி சிடி பிரிண்டிங் ஒர்க்ஸ்
இராயப்பேட்டை, சென்னை - 14

முக்கியமானது. அதுவே சிவபெருமான் ஆடும் நாட்டியம். முயலகனைக் கொன்று அவன் உடல்மீது நின்று ஆடியதே புஜங்க நடனம். இந்த நடனத்தைச் சிவபெருமான் பதஞ்சலி முனிவர்க் கும், வியாக்கிரபாத முனிவர்க்கும் சிதம்பரத்தில் ஆடிக்காட்டிய தாக நூல்கள் கூறுகின்றன.

மகாபரத சூடாமணி என்னும் இந்நூல் நாட்டிய சாத்திர இலக்கணத்தைக் கொண்டுள்ளது. 'ஐயரவர்கள் சேகரித்து வைத்தி ருந்த நூல்களில் இதுவும் ஒன்று. இந்நூலை நன்கு ஆராய்ந்து திரு. ரா. விசுவநாதையர் அவர்கள் 1955 - ஆண்டில் இசையுலகிற்கு அளித்தார்கள். பல இசை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க இரண்டாம் பதிப்பாக நூல் நிலையம் இசையுலகிற்கு இப்பொழுது அளிக்கின்றது.

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறை
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம்

பெசன்ட் நகர்
சென்னை 90
10.8.94

FOREWORD

It gives me great pleasure to write a short foreword to this very rare and valuable work, **Mahabharata Chudamani**. It forms part of the many treasures collected by the late Mahamahopadhyaya Dr. U. V. Swaminatha Aiyar, and it gives much valuable information in Tamil on Natya and Music. We all know that Dance originates from Bharata the great Rishi who was a devotee of Sri Nataraja. Our ancient culture is rooted in Sanskrit but it is only the South that has kept the teaching alive. The Yogi of Yogis, Nataraja, shows to the world what His Dance is and brings salvation to the ignorant world. Nataraja as the Yogi-Artist and the Saviour of the world is a Living Being to the Saints of the Tamil literature. Through this Living Spirit, the Dance becomes a dynamic expression. Therefore, in Tamil and through Tamil literature and poetry, we contact Nataraja. To those who have this experience, the Dance in its real and mystic sense (not degraded as it often is today) becomes a source of inspiration. This book therefore is valuable in giving a knowledge of the Sastra and the technique through which the Divine Spirit expresses itself. I recommend it to all students of Dance and Music for Music is Dance and Dance is Music. The second part of this book is on Music, not Music for

the Dance but Music. The essence of the two Arts is one and therefore the great works on the Dance include Music. I hope that this work will become part of the Tamil Library of Art in every institution.

I am grateful to the staff of the Swaminatha Aiyar Library and specially to its devoted Curator Sri Visvanatha Aiyar for their service.

RUKMINI DEVI

திருச்சிற்றம்பலம்

முகவுரை

மண்ணீத் திகழ நடம தாடும்
வரைசிலம் பார்க்கின்ற பாதங் கண்டேன்
விண்ணிற் றிகழு மடியுங் கண்டேன்
வேடம் பலவாஞ் சரிதை கண்டேன்
நண்ணிப் பிரியா மழுவுங் கண்டே
னலு மறையங்க மோதக் கண்டேன்
வண்ணப் பொலிந்திலங்கு கோலங் கண்டேன்
வாய்மூ ரடிகளிநான் கண்ட வாறே.

அமிழ்தினும் இனிய நம் தமிழ் இயல், இசை, நாடகம் என்ற மூப்பகுதிகளைப் பெற்றுள்ளதென்பதை யாவரும் அறிவர். அவற்றுள் நாடகப் பகுதியே ஏனைய இரண்டையும் தன்னுள் பெற்றுத் திகழ்வதாகும் என்பது ஆன்றோர் கருத்து. **தமிழ்விடுதூதின்** ஆசிரியர்,

—உற்றகலாப்
பண்கள்முதற் பெண்களொடும் பால்பொரு நாடகமாம்
பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றுயே

என்று கூறியதும் இதற்குச் சான்றாகும்.

நாடகத் தமிழ் நம் நாட்டில் தொன்றுதொட்டே வளர்ந்துவந்த தொன்றாகும். மூன்று சங்கங்களிலும் விளங்கிவந்த நாடகத்தமிழ் நூல்கள் பெரும்பாலும் இறந்தொழிந்தன. **சிலப்பதிகார** நூலினாலும் அதன் உரைகளாலும் அவை எழுந்த காலத்தில் தமிழகத்தில் நாடக இலக்கண இலக்கிய நூல்கள் பல இருந்தமையை அறிகிறோம். அந்நூலுக்கு உரைகண்ட **அடியார்க்கு நல்லார்** காலத்திலும் பண்டைப் பெரு நூல்கள் பல இறந்துபோனவை நீங்கலாக, எஞ்சியிருந்த நூல்கள் பல அவருக்குக் கிடைத்தமையையும் உணர்கிறோம்.

நாடகக்கலையின் சிறந்த பகுதியான **அபிநயம்** என்பது மிகப் பழங்காலம் முதலே மக்களால் பெரிதும் போற்றப்பெற்று வளர்ந்து வந்துள்ளது. **பரத சாஸ்திரம், சங்கீதரத்நாகரம்** போன்ற வடமொழி நூல்

கள் நாடகம், இசை ஆகிய இரண்டையும் நன்கு விவரித்துக் கூறியுள்ளன. அவற்றிலுள்ள அபிநயப்பகுதியைப் பிற்காலத்தினர் தனிக்கலையாகப் பிரித்துப் பெருக்கி வந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. நந்திகேசுவரரால் இயற்றப்பெற்ற அபிநயதர்ப்பணம் என்ற நூல் பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு இப்பொழுது பல்லோராலும் கையாளப்பட்டு வருவதையும் நாம் உணர்வோம். இவ்வாறே அபிநயத்துக்கென்றே எழுந்த நூல்கள் பல இந்திய மொழிகளிலும் காணக்கிடைக்கின்றன. அவையெல்லாம் அச்சேறுமானால் உலகம் மிகுந்த பயனடையும் என்பது திண்ணம்.

மகாபரத சூடாமணி என்னும் பாவ ராக தாள சிங்காராதி அபிநய தர்ப்பண விலாசம் என்னும் இத்தமிழ் நூலும் இத்தகையனவற்றுள் ஒன்றே. இதன் ஆசிரியர் யார் என்பதும் அவருடைய காலம் இன்னதென்பதும் திட்டமாக அறியக்கூட இயலவில்லை. அவர் எழுதிய முகவுரையில் "பரத சாஸ்திரக் கர்த்தாக்கள் இயம்பியிருப்பவை அளவற்றனவாயினும், அவற்றிற் சிலர் கூறிய சாஸ்திரங்களில் அடிமுதல் கடைவரை கிடையாதாயினும், அவற்றில் அகப்பட்டவைகளிலுள்ள பாதாதிகேசம்வரை அவ்வவ்விடங்களில் சொல்லியிருப்பவைகளை அவரவர் நாமங்களுடனே வரிசை சேர்த்துத் தொடங்கக் குருவின் திருவடிகளை மனதில் நினைத்துப் புத்தியில் தோன்றிய வரையில் சொல்லியிருக்கிறேன்" என்று கூறுகின்றார்.

பின்னும் அவர், "சார்ங்க தேவ மகாமுனிவர் இப்பரத சாஸ்திரங்கள் யாவையும் சேர்த்து, அவரவர்கள் மதத்தைக் குறிப்பிட்டு இலக்ஷம் கிரந்தமாக மகாபரதம் என்ற பெயரிட்டு ஒரு நூலைச் சோமராய மகாராஜனுக்கு உபதேசித்ததில், அவரவர்கள் சொல்லிய கிரந்தங்களில் என் வசம் அகப்பட்ட மட்டும் அவற்றைப் பார்த்து என் புத்திக்குத் தோன்றினவரையிலும் ஊகித்து அடியில் விவரிக்கலானேன்" என்றும் கூறியிருப்பதிலிருந்து சோமராய மகாராஜன் கேட்ட மகாபரதம் என்ற நூலே இதற்கு மூல மென்றும், இவ்வாசிரியர் அதனை அப்படியே மொழிபெயர்க்காமல், தாமும் பல நூல்களை ஆராய்ந்து மகாபரத சூடாமணி என்ற இதனை எழுதினரென்றும், இதற்குப் பாவ ராக தாள சிங்காராதி அபிநயதர்ப்பண விலாசம் என்ற பெயர் இவரால் கொடுக்கப் பெற்றிருக்கக் கூடும் என்றும் கருத இடமுண்டாகிறது. சூடாமணி என்றும், விலாசம் என்றும் கொடுக்கப் பெற்ற இணைப்புச் சொற்கள் மகாபரதம், அபிநயதர்ப்பணம் என்ற மூல நூல்களுக்கு உரிய பெயர்களினின்று இதனை வேறுபடுத்திக் காட்ட அமைக்கப்பட்டிருக்கக்கூடும்.

இந்நூல் நிலையத்தின் முதல் வெளியீடான **பரதசேனுபதீயம்** என்னும் நூலிற் காணப்பெறும்,

சார்ங்க தேவன் றன்பெரு முணர்வால்
நவரச முகத்தினும் பதார்த்த முத்தத்தினும்
இராக மங்கத்தினுந் தாளம் பதத்தினும்
சித்தம் சிவத்தினுஞ் செய்து நிர்த்திக்க
அவன்சிங் கார சேகரப் பெயரடைந்து
தன்மதம் பிறர்மத முறவோ ரிலக்கங்
கிரந்த முடையவோர் சார்பு நூல் கிளத்தி
அதற்கு மாபரத மெனும்பே ரளித்தனன்
பின்னர்ச்சில் வாணுள் பல்பிணி யுடைய
சிற்றறி வினரிதைக் கற்றலரிதெனத்
தெரிந்ததைச் சுருக்கிநற் சகத்திரஞ் செய்து
மாபரத சூடா மணிப்பெயர் புனைந்து
சோமநா தற்குச் சொற்றனன் ருனே. (63)

என்ற அகவலால், சார்ங்கதேவர் சோமநாதனுக்கு கூறிய **மகாபரதம்** என்ற பெயருடன் இலக்ஷம் கிரந்தங்கொண்ட வடமொழி நூலொன்று உண்டு என்பதும், அதனைச் சுருக்கி 4000 கிரந்தங்களில் அவரே **மகாபரத சூடாமணி** என்ற இதனை இயற்றினர் என்பதும் உறுதியாகின்றன.

மகாபரத சூடாமணி என்னும் இத்தமிழ் நூலின் காண்காவது அத்தியாயமான **சங்கீதாதி ராக மேள லக்ஷணம்** என்ற பகுதி இந்நூல் நிலையப் பதிப்பாக முன்பே வெளிவந்துள்ளது. அதன் கூட்டுப் பதிப்பாளராக உதவிய **ஸ்ரீமான் சங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கடராம ஐயரவர்கள்** தம் ஆராய்ச்சி முன்னுரையில், "இந்த ஸோமனார்யன் என்பவர் சுமார் 300 வருஷங்களுக்கு உட்பட்டு இருந்திருப்பதாக ஊகிக்கலாம்; இவர் இயற்றியநூல் நாட்டிய சூடாமணி என்பதாகும்; இதன் பிரதி சென்னைக் கீழ்த்திசைக் கையெழுத்துப் புத்தகசாலையில் முழுமையும் இருக்கிறதென்று தெரிகிறது. இதில் ஸங்கீதத்தின் மற்ற அம்சங்களோடு நாட்டியத்தையும் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதாக அறிகிறோம்" என்று கூறியிருப்பதும் ஆராயத்தக்கது.

மேலும் இந்நூலாசிரியர் **பரதலாரலங்கிரகத்தின்** உரையென்ற ஓர் ஆந்திரபாஷ்யகாவ்யத்தினின்றும் சில விஷயங்களை எடுத்துக் கூறுகிறார். இன்னும் இவருடைய பாயிரத்தில் அவயவபேதங்களுக்குக்கூறப்படும் சங்கியைகள், பின்னுள்ள அவற்றின் விரிவுகளைக்கூறும் பகுதிகளில்

காணும் சங்கையகளுடன் மாறுபட்டுள்ளன. இக்காரணங்களால் ஆசிரியர் ஒரு கிரந்தத்தை மொழிபெயர்க்கத் தொடங்கிப் பின் வேறு பல நூல்களையும் கண்டு, அவற்றிலுள்ளவற்றையுங்கூட்டி தாம் நூலை யாத்துள்ளார் என்பதும் தோன்றுகிறது.

இத்தமிழ் நூல், 1. நாட்டியோபயோக அவயவபேத விதியோக லக்ஷணம், 2. முகூர்த்தாதி எழுவகைத் தோற்ற அபிநய லக்ஷணம், 3. சபாநாயகாதி சர்வ வாத்திய பாத்திர லக்ஷணம், 4. சங்கீதாதி ராக மேள லக்ஷணம், 5. தாளாதி மாத்திர கணித லக்ஷணம் என்ற ஐந்து அத்தியாயங்களைக் கொண்டதற்கக் காணப்படுகிறது. இவற்றுள் ஐந்தாவதான தாளப்பகுதி காணப்பெறுதது தமிழ் நாடு செய்த தவக்குறைவே ; நான்காவதான ஸங்கீதப்பகுதி தனியே இந்நூல் கிடையத்தின் பிரசுரமாக 14—1—55 அன்று வெளியாயிற்று. இப் பொழுது வெளிவருவது நாட்டியத்தின் பல பகுதிகளையும் விரிவாகக் கூறும் முதல் மூன்று அத்தியாயங்களேயாகும்.

இவற்றுள் முதல் அத்தியாயம் நாடகம், நிருத்தம், நிருத்தியம் ஆகியவற்றின் விவரங்களையும், அபிநயங்களின் பாகுபாடுகளையும் சாஸ்திரங்களிற் கூறியவாறு முகவுரையில் சுருக்கமாகச் சுட்டிப் பின் அவயவபேத நிரூபணம் என்ற தலைப்பில் நாட்டியத்திற்கு இன்றியமையாத அவயவ பேதங்களையும், அவற்றின் இலக்கணங்களையும் விநியோகங்களையும் மிக விரிவாகச் சொல்லுகின்றது. இன்னும் இப்பகுதியில் முத்திரைகள், அடைவுகள், நவரசங்கள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளும் கூறப்படுகின்றன. முகவுரையையன்றி இதனிலுள்ள பிரகரணங்களின் தொகை 22 ; செய்யுட்களின் எண்ணிக்கை 510. இவற்றுள் 133, 134 ஆம் செய்யுட்களுக்கும் 146, 147, 425 ஆம் செய்யுட்களுக்கும் ஆசிரியரின் உரைகள் உள்ளன ; அவை உள்ளபடியே கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியின் சிறப்பு, அவயவபேதங்களின் பாகுபாடுகளும், விநியோகங்களும் பிற நூல்களில் உள்ளனவற்றைவிட அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப்பதோடு, ஒற்றைக் கைகளின் உட்பிரிவுகளாகச் சிலிட்டம், கண்டம், சங்கீர்ணம், பிரதேசம் போன்ற பல நூதன உட்பிரிவுகளும் கொடுக்கப்பட்டிருப்பதுமாகும். இவ்வாறு மிக விரிவாயமைந்த இப்பகுதியின் பயன் இரண்டாவது அத்தியாயத்தால் நன்கு விளங்குகிறது.

இரண்டாம் அத்தியாயம் காலம், ஸ்தாவராதி எழுவகைத் தோற்றங்கள் இவைகளுக்குரிய அபிநயங்களைக் கூறுவது. இதனில் 299 செய்யுட்கள் உள்ளன. காலத்தைப் பற்றி நம் பெரியோர்

கள் வகுத்துள்ள பல பிரிவுகளுக்கும், அபிநயங்கள் கூறப்பட்டுள்ளன. உலகப் படைப்பினை எழுவகையாகப் பிரித்து அவற்றுள் இப்பரதகண்டத்தில் காணக்கூடிய பற்பலவற்றிற்கும், சாதி, குலம், நிலை என்ற பாகுபாடுற்ற உயிர்ப்பிரிவுகளான மானிடர், தேவர், அசுரர் ஆகியோர்க்கும் நுட்பமாக அபிநயம் கூறிச் செல்வது இவ்வத்தியாயத்தின் தனிச் சிறப்பாகும். இதனில் ஒரு வசனப்பகுதியும் கடைசியில் அமைந்துள்ளது. இவ்வத்தியாயத்துள் அமைந்துள்ள மொத்தப்பொருள்களின் பெயர்களினுடையவும் அவற்றிற்குரிய அபிநயங்களினுடையவும் எண்ணிக்கை 914. இவற்றுள் முகவர்த்தாதி 209; ஸ்தாவராதி 639; உரைநடையிலுள்ளவை 66. இவற்றுள் ஒரு பொருளுக்கே கூறப்பட்ட அபிநய வேறுபாடுகள் சில உண்டு. இவை மத வேறுபாடுகளால் அமைந்தவை.

மூன்றுவது அத்தியாயம் வாத்தியங்கள், சபையின் அமைப்பு, பாத்திர லக்ஷணம், ஆகியவற்றை விளக்குவது. இதனில் 214 செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் முதல் 27 செய்யுட்கட்கும், பிறகு 879 ஆம் செய்யுட்கும் ஆசிரியரே எழுதிய உரைகள் உள்ளன; அவை உள்ளபடியே அச்சிடப்பட்டுள்ளன. இவ்வத்தியாயம் வாத்தியக்கருவிகள் சிலவற்றின் இலக்ஷணம், உபயோகம் இவற்றை விளக்கமாகக் கூறுவது காணத்தக்கது. மத்தளம், மிருதங்கம் ஆகிய இரு தோல்கருவிகளையும் இந்நூல் தனித்தனியே எடுத்துக் கூறினும் சில இடங்களில் இவற்றை மயங்கிக் கூறிச் செல்வதாகக் காணப்படுவது ஆராயத்தக்கது. முகவீணை, நாகசுரம் (மொழி பாம்பு) குழல், வீணை இவற்றிற்கு விரிவான இலக்ஷணங்கள் கூறப்படவில்லை. நாதசுரம், தேங்காய் உடைத்தல், விருதுலக்ஷணம் முதலிய பல பகுதிகள் இவ்வத்தியாயத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளமை இதன் தனிச் சிறப்பாகும்.

மேலே குறித்தவற்றுல் இந்நூலின் இம்மூன்று அத்தியாயங்கள் பரத நாட்டியத்திற்குரிய பல விஷயங்களை விரிவாகவும் நூதனமாகவும் எடுத்துரைப்பனவாகும் என்பது விளங்கும். ஆசிரியர் தாம் கூறும் நூதனப் பகுதிகளுக்கு மேற்கோள்களாகப் பிறர் மதங்களைக் காட்டிச் செல்வது போற்றத்தக்கது. முகவுரையில் ஆசிரியர் பரதம் வந்த வகை என்ற தலைப்பில் 72 கிரந்தகர்த்தாக்களின் பெயர்களைக் கூறியிருப்பதும், நூலினின் உள்ளே அவர்களில் 24 பெயர்களைச் சுட்டி இலக்கண விதியோகங்களைச் சொல்லிச் செல்வதையும் நோக்கும்போது பரத சாஸ்திரம் நம் நாட்டில் எவ்வளவு விரிவடைந்திருந்தது என்பதையும் எவ்வளவு பரத நூல்கள் தமிழில் இருந்தன

என்பதையும் நாம் உணராமல் இருக்கமுடியாது. இவற்றுள் பல வற்றைத் தம் நூலால் உலகுக்கு ஆசிரியர் உபகரித்துள்ளதைத் தமிழகம் எந்நாளும் மறவாது.

இந்நூலின் பதிப்பிற்கு உதவியாயிருந்த நூல்கள் பல. அவற் றுள் மிக முக்கியமானவை.

1. பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரம்—வடமொழி—பம்பாய்—*1943.*
2. மேற்படி அத்தியாயங்கள் *1-15.* ஆங்கில மொழி பெயர்ப்பு—மனேமோகன் கோஷ்—கல்கத்தா—*1950.*
3. ஸங்கீத ரத்னகரம்—அடையாறு—*1955.*
4. அபிநயதர்ப்பணம். ஆங்கிலம்—ஆனந்தக்குமாரசாமி—நியூயார்க்—*1936.*
5. அபிநயதர்ப்பணம்—வடமொழி—ஆங்கில மொழி பெயர்ப் புடன்—மனேமோகன் கோஷ்—கல்கத்தா—*1934.*
6. அபிநயதர்ப்பணம்—தெலுங்கு—சென்னை—.
7. அபிநயதர்ப்பணம்—தமிழ் (சுவடி. அச்சாகாதது) இந் நூல்நிலையம்.
8. சிலப்பதிகாரம். ஸ்ரீ ஐயரவர்கள் பதிப்பு. *1950.*
9. பரதகோசம்—திருப்பதி—*1951.*
10. பரதசேனபதீயம்—இந்நூல்நிலையப்பதிப்பு. *1944.*
11. பரதசங்கிரகம்—அண்ணுமலைநகர். *1954.*

இவற்றுள் (7) **அபிநய தர்ப்பணம்** என்ற தமிழ் நூல், இந்நூல் நிலையத்திலுள்ள சுவடிகளுள் ஒன்றாகும். இதன் ஆசிரியர் **வீரராகவையன்** என்பவர் என்றும், அவர் குருகூர் நம்மாழ்வார்பால் ஈடுபாடுடையவர் என்றும் தெரியவருகிறது. இச்சுவடியில் *129* விருத்தங்கள் உள்ளன. காவ்யதீர்த்த மனேமோகன்கோஷ் எம். ஏ., அவர்களால் கல்கத்தா ஸம்ஸ்கிருத வரிசையில் வெளிவந்துள்ள நந்திகேசுவரர் அபிநயதர்ப்பண நூலில் உள்ள முதல் 49 சுலோகங் களை நீக்கி, எஞ்சியுள்ள பகுதியின் நேர் மொழிபெயர்ப்பாகவே இத் தமிழ் நூல் அமைந்திருக்கிறது. இவ்வபிநயதர்ப்பணச் சுவடியி லுள்ள விருத்தங்கள் **மகாபரத சூடாமணி** என்ற இந்நூலிலுள்ள விருத்தங்களோடு பலவிடங்களில் எழுத்துக்கெழுத்து ஒன்றியிருப் பது வியப்பைத் தருவதாகின்றது. இவ்விரு தமிழ் நூலாசிரியர்

களுள் எவர் முந்தியவர் என்று ஆராயக்கூடுமானால், அதனால் தமிழ் அபிநயதர்ப்பணம் என்ற நூலே விரித்து எழுதப் பெற்றது அபிநய தர்ப்பண விலாசமாகுமா, அல்லது அபிநயதர்ப்பண விலாசத்தின் சுருக்கம் அபிநயதர்ப்பணமாகுமா என்பது விளங்கும். தமிழ் அபி நயதர்ப்பண நூல் பாடல்கள் மாறுபட்ட இடங்கள் இப்பதிப்பின் அடிக்குறிப்புக்களில் காட்டப்பட்டிருக்கின்றன.

அடுத்ததாக, ஸ்ரீ ஆனந்த கே. குமாரசாமி அவர்களும் துக்கி ரால கோபால கிருஷ்ணையா அவர்களும் நியூயார்க்கில் ஆங்கிலத்தில் பதிப்பித்துள்ள மிரர் ஆப் கெஸ்சர் (Mirror of Gesture) என்ற அபிநய தர்ப்பண நூலும், சென்னையில் வாவிள்ளா ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களின் பதிப்பகத்திலிருந்து வெளிவந்துள்ள தெலுங்கு அபிநய தர்ப்பண நூலும் பெரும்பாலும் ஒத்துச்செல்லு கின்றன. ஆங்கில நூலின் முகவுரையில் ஸ்ரீ ஆனந்தக்குமாரசாமி யார் நீடாமங்கலம் திருவேங்கடாசாரியார் அவர்கள் பதிப்பித்த தெலுங்கு அபிநயதர்ப்பண நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பாகவே தம் பதிப்பு வெளிவந்துள்ளது என்று கூறியிருப்பதால் தெலுங்கி லுள்ள அபிநயதர்ப்பணமும் ஸ்ரீ ஆனந்தக்குமாரசாமியாரால் பதிப் பிக்கப்பட்ட ஆங்கிலப்பதிப்பும் ஒன்றேயாகும் என்று கூறலாம்.

இவ்விதம் இப்பொழுது மாணவர்க்குக் கிடைக்கும் அபிநயதர்ப் பண நூல்கள் இருபகுதிகளாக இருக்கின்றன. இவற்றுள் கோஷ் பதிப்பித்ததும் (பதிப்பிக்கப்பெறுத தமிழ் அபிநயதர்ப்பணமும்) மிகச் சுருக்கமானவை; ஆனந்தக்குமாரசாமியாரதும், தெலுங்குப் பதிப்பும் முன் கூறியவற்றில் உள்ளனவற்றோடு, மதாந்திரங்களாகக் கூறப்படும் அதிகப்படியான செய்திகளைக் கொண்டு சிறிதளவு விரி வாக உள்ளன. இப்பொழுது வெளிவரும் **மகாபரத சூடாமணி** மேலே கூறப்பட்ட இருவகை அபிநயதர்ப்பண நூல்களில் கூறப்பட்ட வற்றை யெல்லாம் தன்னுள் கொண்டிருப்பதோடு, அவற்றில் கூறப் படாத பல செய்திகளையும் கொண்டுள்ளதாக அமைந்திருக்கிறது. இக்காரணம்பற்றியே இந்நூல் **அபிநயதர்ப்பண விலாசம்** என்ற பெய ரைப் பெற்றதுபோலும். ஆகவே, இப்பதிப்புடன் அபிநயதர்ப்பணம் மூன்று உருவங்களில் வளர்ந்துள்ளமை அறியப்படும். இன்னும் உள்ளவை எத்துணையோ?

இவ்விதம் எழுந்துள்ள பலவகை அபிநயதர்ப்பண நூல்களுள் எது மூலமானது என்று கூறுவது அரியதொன்றே. அச்சில்

வெளிவராத பல நூல்களும் வெளி வருவதன் இன்றியமையாமையை இப்பதிப்புக்களால் நாம் ஒருவாறு உணரலாம்.

இப்பதிப்பின் நூலாசிரியரைப் பற்றித் திட்டமாக அறிவதற்கு நமக்கு வாய்ப்பு ஒன்றுமில்லை என்று முன்பே கூறினேம். கடவுள் வாழ்த்தாக மதுரை மீனாட்சி சுந்தரேசுவரரை (பக். 12) இவர் வணங்குவதையும், இராஜலக்ஷணம் கூறும்போது 'வழுதிதன் குலத்தில் வந்து வயங்குமன் னவனேயாகி' என்றும் (பக். 338) பாண்டியமன்னனைக் கூறுவதையும் கொண்டு இவர் பாண்டிநாட்டைச் சேர்ந்தவர் என்று கொள்ளலாகும். மற்றும் நட்டுவக்கலையிலும் இசைக்கலையிலும் இவர் மிகுந்த தேர்ச்சியும் அனுபவமுமுடைய வராகவும் காணப்படுகிறார். நாதசுரத்தின் தன்மைகளை விளக்கமாகக் கூறுவதிலிருந்து அக்கலையிலும் இவர் மிகச் சிறந்து விளங்கின மையை ஊகிக்கலாம். இவர் தம் காலத்தில் கிடைத்த பற்பல நாட்டியக்கலை நூல்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டு மென்றும், தமிழில் பரதக்கலைக்கு இவர் ஒரு மகோபகாரி என்றும் நாம் இந்நூலால் நன்கு அறியலாம், இவர் காலத்தைப் பற்றி இந் நூலின் நான்காம் அத்தியாயத்தின் ஆராய்ச்சி முன்னுரையில் குறிப் பித்திருப்பதையும் காண்க. இன்னும், இந்நூலில் 'பேனு, சர்கத்' முதலிய ஆங்கிலத் திரிபுச்சொற்கள் அமைந்திருத்தலும் இவர் காலத்தை அறிய உதவுகின்றன.

இந்நூலாசிரியர் தம் நூலை யாப்பதற்கும் பிறமொழிகளிலிருந்து பல நூல்களை ஆராய்ந்துள்ளார் என்பதோடு, தமிழிலிருந்த பல நூல்களையும் இவர் கையாண்டுள்ளார் என்பதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. அச்சில் வெளிவராத தமிழ் அபிநயதர்ப்பண நூற்பாடல்களுக்கும் இந்நூற்பாடல் பலவற்றிற்கும் உள்ள ஒற் றுமைகளை மேலே சுட்டினேம். பிரம்பு லக்ஷணம் என்ற பகுதி யிலுள்ள சில பாடல்கள் பரத சங்கிரஹம் என்ற நூலில் சிற்சில வேறு பாடுகளுடன் காணப்படுகின்றன ; தேங்காய் லக்ஷணம் ஒரு தனி நூலாகவே அமைந்துள்ளது போலும் ; நாதசுர லக்ஷணப் பாடல் களின் போக்கு பிற பாடல்களின் போக்கிலிருந்து பெரிதும் மாறுபட் டுள்ளது ; இன்னும் இவ்விதமானவை பல உண்டு. இவற்றுள் எந்த நூலிலிருந்து எது எடுக்கப்பட்டது என்று சொல்லமுடியாத நிலையில் நாம் இன்று இருக்கிறோம். ஆராய்ச்சி முன்னேற்றத்தால் இச்சிக்கல்கள் தீரக்கூடும்.

2168

இப்பதிப்பிற்கு மூலமாயுள்ளவை ஸ்ரீ ஐயரவர்கள் தேடி வைத்த அருஞ்சுவடிகளுள் இருந்த இரண்டு காகிதப் புத்தகங்களே. அவற்றுள் ஒரிடத்தில், 'மதுரையிலிருந்த பழைய ஏடு பார்த்தும், சுக்வர ஹ ஆடி மாதம் எழுதியிருந்த அட்டைப்புத்தகத்தைப் பார்த்தும், கிரந்த சுலோகத்தைப் பரிசோதித்தும் (1065) ஆம் வருஷ சர்வசித்து வருஷம் ஆடி மாதம் இப்பிரதி எழுதப்பட்டது' என்று இப்பிரதிகள் எழுதப்பட்ட காலம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனின்று இன்றைக்கு ஏறக்குறைய 68 ஆண்டுகட்குமுன் இக்காகிதப் பிரதி எழுதப்பெற்றமை புலனுகிறது. அதற்குமுன் ஒரு நூருண்டேனும் இந்நூல் தோன்றி ஆகியிருக்கலாம். ஆகவே இந்நூலின் காலத்தை இன்றைக்கு ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்குமுன் என்று ஒருவாறு ஊகிக்கலாம்.

பிரதியில், பாடல்கள் சிற்பிரிக்கப்படாமலும், வழூஉச் சொற்களும் கிராமியச் சொற்களும் நிறைந்தும் காணப்பட்டன. ஆசிரியர் பலவிதங்களான செய்யுள்கள் இயற்றுவதில் ஆற்றல் பெற்றுள்ளனரே எனினும், சிற்சில இடங்களில் யாப்பிலக்கண விதிகளுக்குப் புறம்பாக அவர் செல்கின்றார். எதுகையை ஒட்டி எழுத்துப் பிழைகளுள்ள சொற்களையும் அவர் அமைக்கின்றார்; வடமொழிச் சொற்கள் பல இவருடைய யாப்பில் முற்றிலும் உருமாறிவிட்டன. இவற்றையெல்லாம் நீக்கமுயன்றால் மூலத்துக்குக் கேடு உண்டாகி விடுமோ என்ற அச்சம் உண்டாகியதால் முடிந்தவரையில் மூலத்தைத் திருத்தாமலும் படிப்பவர்க்குப் பயன்படுமாறும் பதிப்பிக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பெற்றன. செய்யுட்களிலிருந்து பொருள் பெறுவது யாவர்க்குமே எளிதாகாதாகையால், பலர்க்கும் பயன்படும்படியாகச் சுருக்க உரைகள், தலைப்புக்கள் கொடுத்து எழுதப்பெற்றுள்ளன. மேற்கோளாகக் காட்டத்தக்க பிற சில நூல்களுக்கும் இந்நூலுக்குமுள்ள ஒப்புமை வேற்றுமைகளைக் காட்டி அடிக்குறிப்புக்கள் வரையப்பெற்றுள்ளன. நூலின் அமைதியையும், அதனில் அடங்கியுள்ள பொருள்களையும் ஒருமிக்கக் காட்டப் பொருளடக்கமும், அரும்பத அகராதியும் பயன்படும். இவ்வாறு இந்நூலறிவோடு, கலையறிவையும் ஒருங்கே மாணவர்கள் பெறுவதற்குச் சாத்தியமான முறைகள் பலவும் இப்பதிப்பில் கையாளப்பெற்றுள்ளமை இதனைப் படிப்பவர்களுக்குப் புலனுகும்.

இவ்வரிய முயற்சியைச் சிறந்த வடமொழி அறிவும் பரசாஸ்திர அறிவும் பெற்றவரே எடுத்துக்கொள்ளத் தகுதியுடையவராவர். இவ்விரண்டிலும் சிறிதும் தகுதிபெறுத யான் இதனை மேற்கொள்ள

நேர்ந்தது இறைவன் செயலேயாகும். இதனிலுள்ள தவறுகளை அறிஞர்கள் அன்புடன் பொறுத்துக் கொள்வார்களாக.

இந்நூலின் முதல் நூறு செய்யுள்களுக்கும் குறிப்புரை, அடிக் குறிப்பு முதலியவற்றை முதலில் எழுதிக் கலாக்ஷேத்ர, நாட்டிய ஆசிரியையும், சிறந்த வடமொழியறிவும் நாட்டியக்கலையறிவும் பெற்ற ஸ்ரீமதி எஸ். சாரதா அவர்களிடமும், அடையாறு நூல்நிலைய ஸம்ஸ்கிருத பண்டிதரும், பல இசை, நாடக நூல்களின் பதிப்பாசிரியருமான ஸ்ரீ கே. இராமச்சந்திர சர்மா அவர்களிடமும் காட்டினேன். அவர்கள் அவற்றைப் பார்த்து முறை நேரியதே என்று கூறி அவ்வாறே எஞ்சிய பகுதிகளுக்கும் எழுதலாமென்று ஊக்கினர்கள். வடமொழிச் சொற்களின் உண்மை உருவங்களையும் பொருள்களையும் காண்பதிலும், வடமொழி மூலநூல்களை அறிவதிலும் உறுதுணையாயிருந்ததோடு இந்நூலைப் பதிப்பிக்கும் காலத்தும், அச்சிடுங் காலத்தும் முழுமையும் உடனிருந்து அன்புடன் உதவியவர் இந்நூல்நிலையப் புத்தகப் பாதுகாப்பாளரும் சிறந்த கல்விமானுமான வியாகரண சிரோமணி ஸ்ரீ தி. இராமானுஜ ஐயங்காரவர்களாவர். செய்யுட்களின் உருவங்களில் இடர்ப்பாடு தோன்றியபோதெல்லாம் அவற்றை அன்புடன் ஆராய்ந்து அச்சிக்கல்களை நீக்கிப் பொருள் காண உதவியவர்கள் சிறந்த தமிழ்ப்புலமை வாய்ந்த அன்பர்கள் ஸ்ரீ ல. ஸ்ரீநிவாஸ ஐயரவர்களும், ஸ்ரீ வடிவேலு முதலியாரவர்களுமாவர். இவர்கள் அனைவர்பாலும் எனக்குள்ள நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல், சென்னை அரசாங்கக் கீழ்த்திசை நூல் வரிசையில் வெளியாகிறது. இதன் செலவுக்கு அரசியலார் பேருதவி புரிந்துள்ளனர். அவர்களுக்கும் இவ்வரிசை நூல்களின் பொதுப் பதிப்பாசிரியரான உயர்திருவாளர் டி. சந்திரசேகரன், எம். ஏ., எல். டி., அவர்களுக்கும் இந்நிலையம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

இப்பதிப்பின் முன்னணியாக விளங்கும் ஸ்ரீ நடராஜர் திருவுருவப்படம் ஸ்ரீ S. V. இராமமூர்த்தி அவர்களிடமுள்ள மூல விக்ரகத்தின் படப்பிரதியாகும். இதன் ப்ளாக்கை உபயோகப்படுத்திக்கொள்ளக் கலாக்ஷேத்ரம் உதவிபுரிந்தது. அவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றி.

இந்நூலை மிக விரைவிலும் அழகாகவும் அச்சிட்டு உதவிய இரத்னம் (பிராஞ்சு) பிரஸுக்கும் என் மனமார்ந்த நன்றி உரியன.

இந்நூல்நிலையம் இங்கு நிறுவப்படுவதற்கு அமைந்த சில காரணங்களுள் இப்பதிப்பின் மூலப் பிரதிகளின் இருப்பு ஒன்றாகும். இந்நிலையத்தின் அத்யக்ஷர் ஸ்ரீமதி ருக்மிணி தேவியார் பல ஆண்டுகளாகவே இதனைப் பதிப்பிக்கவேண்டுமென்ற பேரவாவினைப் பெற்றிருந்தார்கள். இத்தன் பதிப்புக் காலத்தில் அவர்கள் காட்டிவந்த அன்பும், ஊக்கமும் அளவிடற்கரியன. அவர்கள் அன்புடன் இப்பதிப்பிற்குச் சிறந்த முன்னுரையொன்று உதவினமை மிகவும் போற்றத்தக்கது. அவர்கள் இந்நிலைய வாயிலாகச் செய்துவரும் தமிழ்ப் பணிக்கு உலகம் அவர்கள்பால் என்றும் கடமைப்பட்டுள்ளது.

இந்நிலையத்தின் ஸ்தாபனத்துக்குப் பேருதவி புரிந்தவரும், இதன் முதல் அமைச்சராக ஏழு ஆண்டுகள் பணிசெய்து பல நூல்களை வெளியிட்டவரும், இந்நூலைப் பதிப்பிக்க வேண்டுமென்ற பேரவா பூண்டிருந்தவரும், ஸ்ரீ ஐயரவர்களின் அருந்தவப் புதல்வருமான காலஞ்சென்ற ஸ்ரீ S. கலியாணசுந்தரையர் அவர்களின் நினைவுக்கு இப்பதிப்பை மிகுந்த பக்தியுடன் அர்ப்பணம் செய்கிறேன்.

இந்நிலையத்தின் பணிகளை உலகம் ஏற்று இதனை இன்னும் பயனுறச்செய்ய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளில் வணங்குகின்றேன்.

1—6—1955. ரா. விசுவநாதன்.

பொருள் அடக்கம்

முதல் அத்தியாயம்
(1 — 187)

	பொருள்	பக்க எண்
	முகவுரை ...	1-32
	பரதலக்ஷணம்; பாவார்த்த லக்ஷணம்; பாவாலங்காரலக்ஷணம் 5; பாவவிருத்தி லக்ஷணம் 7; ஆறங்கங்கள் வந்தவகை; வேதஸாரம் 8; பரதம் என்பதற்குப் பொருள்: பிரவிசார சேஷ்டை; பரதம் வந்தவகை 9.	
1.	கடவுள் வாழ்த்து ...	11-12
2.	அவையடக்கம் ...	13
3.	நூலின் வரலாறு ...	13-17
	நாந்தி 17	
4.	பாயிரம் ...	18-21
	காரணம் 20	
5.	நாட்டிய விவரம் ...	21
6.	அபிநய விவரம் ...	21-28
	நான்குவித அபிநயம் 23 - 28; ஆங்கிகாபிநயம் 24; சூசிகாபிநயம்; பரம்பராபிநயம், தொன்நூபிநயம்; ஆவாக்ய தொன்தாபிநயம்; பாலிகதொன்தாபிநயம் 25; அநுபாவிக தொன்தாபிநயம்; இலாட்டணிகாபிநயம்; சுத்த லாட்சணிகாபிநயம் 26.	
	வாசிகாபிநயம் நான்குவகை: *சுகீதவாசிகம்; உபகீத வாசிகம், சுசப்தவாசிகம்; உபசப்தவாசிகாபிநயம் 27.*	
	ஆகாரியாபிநயம் மூன்றுவகை: *கிரீடாகாரியாபிநயம் 27; அபிசாரி ஆகாரியம்; விபசிசாரி ஆகாரியம் 28.*	
	சாத்விகாபிநயம் இரண்டுவகை: *சாட்சுஷிய சாத்விகம், மானஸ சாத்விகம் 28.*	

	பொருள்	பக்க எண்
7.	விருத்தி *சித்தவிருத்தி ; பாவியவிருத்தி*	... 29
8.	நாட்டகம், நிருத்தம், நிருத்தியம்	... 29-30
9.	தாண்டவம், லாஸ்யம் *உத்தான தாண்டவம், சுகுமார லாசியம்* 30.	
10.	வெகுவான அபிநயம், அற்பமான அபிநயம்	... 31
11.	திரியாங்கம் *அங்கங்கள்; பிரத்தியாங்கங்கள்* 31; *உபாங்கங்கள்* 32.	... 31-32

அவயவபேத நிரூபணம்

1.	சிரோபேதப் பிரகரணம் *சம ; உத்வாகித* 34 ; *அதோமுக* 35 ; *ஆலோளித ; கம்பித* 36 ; *துத ; பராவிருத்த* 37 ; *ஊட்சிப்த, பரிவாகித* 38 ; *நிகஞ்சித ; அஞ்சித ; விதூத, ஆதூத* 39 ; *அவ துத, அகம்பித* 40 ; *இசுகாந்தான, திரியக்கதானன (திரியங்முதோங்முத) ; அராதிக; பார்சுவாபிமுக* 41.	... 33-41
2.	நயனபேதப் பிரகரணம் *சம* 44 ; *ஆலோகித ; சாசி ; பிரலோகித* 45 ; *நிமீ லித ; உல்லோகித ; அநுவிருத்த* 46 ; *அவலோகித ; துரித ; சூசனு, உக்கிர* 47 ; *தூர ; காந்தா* 48 : *பயாநக ; கருணு* 49 ; *மூடாம்பக ; அத்புத* 50 ; *வீர ; விகற்ப ; விப் பிராந்த, விஷாண* 51 ; *விப்லுத ; வித்ர்க்கித, திணு* 52 ; *திரஸ்தா, கிரஸ்தா ; இருட்டா* 53 ; *மலிநீ, லலித ; குஞ் சித, ஆசியா* 54 ; *அச்சுதா ; சங்கித, மதம்* (*கருண, மத் திம, அதரும*) 55-56.	... 42-56
3.	புருவபேத்ப் பிரகரணம் *மித, அமித* 56 ; *உத்வர்த்திக, அபவர்த்திக* 57.	... 56-57
4.	நாசிபேதப் பிரகரணம் *அச்விட்ட, சிலிட்ட ; கம்பித, சிலிட்டபுட ; சத்புட* 58.	... 57-58

	பொருள்	பக்க எண்
5.	அதரபேதப் பிரகரணம் சம, சுபாவ ; விகசித, ஈஷார்ஹய 59.	59
6.	முகராகப் பிரகரணம் ... சுவாபாவிக, பிரசன்ன, இரத்த, சியாம 60.	60
7.	கண்டபேதப் பிரகரணம் ... சுந்தரி 61 ; திரச்சீன ; பரிவர்த்தன ; பிரகம்பித 62.	61-62
8.	புஜபேதப் பிரகரணம் ... ஊர்த்வ, அதோமுக, த்ரியக்கத, அபவித்த, பிரஸாரித, அஞ்சித, மண்டலகதி, சுவத்திக, உத்வேஷ்டித, பிருஷ்டானுஸாரித, நம்ர, ஆவித்த, சரல, குஞ்சித, ஆந்தோளித, உத்ஸாரித 63.	63
9.	மார்புபேதப் பிரகரணம் ... சம, உத்வாஹித 63 ; பிரகம்பித 64.	63-64
10.	வயிறுபேதப் பிரகரணம் ... சலனோதர ; லம்போதர, கர்வோதர 64.	64-65
11.	பிருஷ்டபேதப் பிரகரணம் ... சம, லளித ; வலித 65.	65
12.	இடுப்புப்பேதப் பிரகரணம் ... சுபாவ ; நமித, அநமித 66.	66
13.	பார்சுவபேதப் பிரகரணம் ... ஆலோளித ; குஞ்சித, விலோளித 67.	67
14.	கரகேத்ரமென்னும் பாணித்தானப் பிரகரணம் ...	68
15.	சிரக்கர கருமமென்னும் சிரப்பாணி கர்மப் பிரகரணம் ...	68
16.	கரப்ரசாரமென்னும் அஸ்தவாதச ப்ராணப்பிரகரணம்.	69-73

பிரஸாரண, குஞ்சித, ரேசித, புங்கித 69 ; பிரேரித, அபவேஷ்டித, உத்வேஷ்டித, வியாவிருத்த, பரிவிருத்த ; சங்கேதகரப்பிரசார (நிர்த்திஷ்ட, ஊகித) 70 ; சின்னகரப்

பொருள் பக்க எண்

பிரசார ; பதார்த்தடிக 72 ; அஸ்த அங்குலிகளின் தேவதைகள் 73.

17. அசம்யுத அஸ்த லக்ஷணமாகிய கரகரணமென்னும் ஒற்றக்கை லக்ஷணம் ... 73-135

பதாகம் (சங்கீர்ண, சிலிட்ட, தல) 74-79 ; திரிபதாகம் (சலித) 79-80 ; அர்த்தபதாகம் (வக்கிரார்த்த) 81 ; கர்த்தரீமுகம் (சிலிட்டகர்த்தரீ) 82-83 ; மயூரம் (சிலிட்ட) 84 ; அர்த்த சந்திரன் (சிலிட்ட, யுக்த, இரேகா, தலரேகா) 85-88 ; அராளம் (சிலிட்ட) 89 ; சுகதுண்டம் (சிலிட்ட, பிரம) 90-92 ; முட்டி (அர்த்த, சிலிட்ட, சங்கீர்ண) 92-94 ; சிகரம் (அர்த்த. சங்கீர்ண) 94-96 ; கபித்தம் (சிலிட்ட, அர்த்த) 96-98 ; கடகாமுகம் (சிலிட்ட, இரத்ன) 99 ; சூசி (அர்த்த, வக்ர) 100-102 ; பதுமகோசம் (சிலிட்ட) 103-104 ; சர்ப்பசீர்ஷம் (சலன சர்ப்ப) 105-106 ; மிருகசிரம் (சிலிட்ட, முஷ்டி, சங்கோச) 107-109 ; சிம்மமுகம் (சிலிட்ட, வக்கிரதந்த, சங்கீர்ண, தல) 109-111 ; காங்கூலம் (சிலிட்ட, சங்கீர்ண) 111-112 ; அல பதுமம் (சிலிட்ட) 113 ; பாணம் (சங்கீர்ண) 114-115 ; பிரமரம் (சிலிட்ட, பூர்வ) 115-116 ; சந்தம்சம் (சிலிட்ட) 117 ; தாம்பிர சூடம் (மதாந்திர) 118 ; முகுளம் (அர்த்த, சிலிட்ட, கண்ட, முட்டி, மத்திம, சந்தம்ச, பிரதேச) 119-120 ; சதுரம் (அர்த்த, கண்ட, சர்ப்ப) 121-123 ; அம்சாசியம் (சிலிட்ட) 123-125 ; அம்சபட்சம் (சிலிட்ட) 126 ; பூர்ணநாட ; திரிசூலம் ; 127 ; வியாக்கிரம் ; பிண்டி 128 ; சலவக்ஷம் ; தூபம் ; மண்டூகம் 129 ; பிரம்ம ; வர்ஜித ; மானுஷ 130 ; கஜமுக 131 ; மென் னிலே ; கூர்ம ; திரிலிங்க 132 ; சாலேய 133 ; சிலீமுக ; சங்க 134 ; வலம்புரி ; இலதை, மண்டல 135.

18. சம்யுத அஸ்த லக்ஷணம் ...136-159

அஞ்சலி ; கபோத 138 ; கற்கடக 139 ; சுவத்திக ; டோள 140 ; புட்பபுட 141 ; உத்சங்க 142 ; சிவலிங்க ; கடகாவர்த்தன 143 ; கர்த்தரீசுவத்திக ; சகட 144 ; சங்க ; சக்ர ; சம்புட 145 ; பாச ; கீலக ; 146 ; மச்ச ; கூர்ம 147 : வராக ; கருட ; நாக பந்த 148 ; கட்டுவ ; பேருண்ட 149 ; கஜதந்த ; அவகித்த 150 : கலச ; நிடத ; வர்த்தமான 151 ; பட்சவஞ்சித ; உத்தான

பொருள் பக்க எண்

வஞ்சித 152 ; தாடனபதாக ; அபயவரத ; உபசார 153 ; பதும முகுள ; பாரதி : மல்லித்த 154 ; திரிஞான ; சஷாகிருதி ; சம்யமி ; சதுரச்ர 155 ; திரிபதாக சுவத்திக ; பதாகசுவத்திக ; மித்திரோத் சங்க 156 ; திலக ; வைஷ்ணவ 157 ; வல்லபாயுத ; ரதாமோத 158 ; சம்யுத அஸ்த அதிதெய்வங்கள் 158-159.

19. நிர்த்த அஸ்த லக்ஷணம் ...160-168

சதுரச்ர, உத்விருத்த ; தலமுக, சுவத்திக 161 ; விப்ரகீர்ண, அராளகடகாமுக ; ஆவித்த வக்த்ர, சூச்யாசிய 162 ; ரேசித, அர்த்த ரேசித ; நிதம்ப, பல்லவ 163 ; கேசபந்த, உத்தானவஞ்சித ; லதா கர, கரி 164 ; பட்சவஞ்சித, பட்சப் பிரத்யோதக ; தண்டபட்ச ; கருடபட்ச, ஊர்த்வமண்டலி 165; பார்சுவமண்டலி, உரோமண்டலி ; உரப்பார்சுவமண்டலி 166 ; முட்டிகச்சுவத்திக, நளினபத்மகோச ; அலபத்ம, உல்பண 167 ; வலித, லலித 168.

20. முத்திரா ஹஸ்த லக்ஷணம் 168-174

சுரபி 168 ; கௌஸ்துப ; இரவி ; பதும 169 ; பிரசன்ன ; சந்நிகித ; சந்நிரோதன 170 ; யோனி ; நிர்யாண 171 ; சகட ; ஆவாகன ; ஸ்தாபன 172 ; அவகுண்டன; க்ரதித ; ஷண்முகோன் முக ; பாதுகை 173 ; முஸல ; விஸ்தார ; இக்ஷு ; கும்ப 174 ; *மகாபரதத்தில் சார்ஞ்தேவர் கூறிய காயத்திரி முத்திரைகள்* 174.

21. பாதபேதப் பிரகரணம் ...175-181

சம 175 ; மண்டல ; குஞ்சித 176 ; அஞ்சித ; வடிம்பு ; தாடித 177 ; நாகபந்த ; சாட்கதி ; கருடநிலை 178 ; நிருத்தநிலை 179 ; அடைவுகள் : உத்தம 179 ; மத்திம ; அதம 180 ; *அடைவிற்கு அஸ்தங்கள்* 180-181.

22. நவரசபேதப் பிரகரணம் ...182-187

நகை 182 ; துக்கம் ; இளிவரல் 183 ; மருட்கை ; அச்சம் 184 ; பெருமை 185 ; வீரம் ; உவகை 186 ; சாந்தி 187.



இரண்டாம் அத்தியாயம்

(188 — 282)

பொருள் பக்க எண்

முகூர்த்தாதி அபிநயம் ...188-202

காலத்தின் அபிநயம் 188; யுகங்கள் 189; வருடங்கள் 190-192; அயனம்; ருது 193; மாதங்கள் 194; பக்ஷம்; திதி 195; வாரங்கள்; நிரகங்கள் 196; நக்ஷத்திரங்கள் 197-8; யோகங்கள் 198; கரணங்கள் 199; லக்னங்கள் 200; நவக்கோள்கள் 202.

1. ஸ்தாவராதி அபிநயம் ...202-221

உலகங்கள் 202-3; மலைகள் 204-5; கடல்கள் 205-6; நதிகள் 207-9; குளம், படி, கிணறு 209; சுரப்பிறப்புத் தீவுகள் 210; விருக்ஷங்கள் 210-14; தேசங்கள் 214-217; பட்டணம், ஊர், கிராமம் 217; வீடுகளும் பகுதிகளும் 217-18; சாலைகள் 218-221.

2. ஜலஜந்துக்கள் 221

3. ஊர்வன ...221-222

4. பறவைகள் ...222-224

5. விலங்குகள் ...224-228

6. மனிதப்பகுதி ...229-254

மானிடர் பொது 229; ஜாதிகள் 229-300.

நாயகிகள்; மடந்தையர் 231; நற்சாதிப் பெண்கள் 232; அஷ்டவித நாயகிகள் 233-35; நால்வகை முதல்வர் 235; மூவித நாயகர்கள் 236; பாந்தவ்யம் 237-39; அரசர்கள் 239-42; அரசச்சின்னங்கள் 242; வேசியர் 243;

சங்கீதம் :—சப்த சுரம் 243; இராகங்கள், 244-247; நவரசம் 247-48; புணர்ச்சி முதலியன 248; பாந்தவ்ய அபிநயம் 249; சர்வாங்க அபிநயம் 250; இரத்தினங்கள் 251; நவ உலோகங்கள், 252; நவரசாபிநயம் 253; எண்கள்; சாஸ்திரம் 254.

பொருள் பக்க எண்

7. தேவர் முதலியோர், பிற்சேர்பு ...255-282

தேவர் 255-57 ; சிவகணங்கள் 257-59 ; தேவியர் 259-61 ; பிறதேவர் முதலியோர் 262-65 ; அசுரர் முதலியோர் 266-69 ; இருடிகள் 269-75 ; காமதேனு முதலின 275-77 ; தசாவதாரம் 277-78 ; பிற்சேர்பு :—தாம்பூலம் முதலியன, ஆபரணங்கள் முதலியன, உடை முதலியன, சாலைகள் முதலியன, பிரம்சாரி முதலியோர், இலட்சுமி முதலியோர், சிம்மாசனம் முதலியன, புணர்ச்சிவகை 279-82.

மூன்றும் அத்தியாயம்

(283 — 360)

1. தோற்கருவி ...283-299

மத்தளம் :—மத்தளம் 283-86 ; துணைகளின் அதிதேவதைகள், தத்தித்தென்னம் பிறந்தவகை 287-88 ; நாத லக்ஷணம் 288 ; மத்தள பஞ்சப்பிராணன் 289 ; உத்தம மத்திம அதம வாத்தியங்கள், சிவனிருப்பிடம், நிருத்த பஞ்சப் பிராணன் 290 ; **மத்தள அக்ஷர லக்ஷணம் :**—அதிதெய்வங்கள், அக்ஷரங் குறினெடில் விவரம், குருலகு சப்தங்களின் விவரம், அக்ஷரத்தின் உரு 291 ; அக்ஷர நிறம், அக்ஷரபீஜம், அதிதெய்வம், பலன் கொடுப்போர்கள், ஓசையின் கணம் 292 ; வாத்தியக்காரருக்குப் பஞ்சப்பிராணன், மத்தள மரங்களும் அளவும் 293 ; மத்தளம் வாசிக்கும்வகை 294.

பஞ்சக்கருவிகளின் லக்ஷணம், தோற்கருவி 36க்கு லக்ஷணம் 295 ; உத்தம வாத்தியங்கள், மத்திம வாத்தியம், அதம வாத்தியம் 296 ; வீர வாத்தியம் 297 ; மிருதங்க லக்ஷணம் 297 ; **வாத்தியங்களின் தொனி லக்ஷணம் :**—மிருதங்கத்தொனி, திமிலீத்தொனி, அனுவாத்தியத் தொனி, கரடிகை வாத்தியத்தொனி, டக்கா வாத்தியத் தொனி, படகத்தொனி, முரசு, கைம்மணிகளின்தொனி, உடுக்குத்தொனி, தவில், தம்பட்டத்தொனி, மத்தளத் தொனி 298-99.

	பொருள்	பக்க எண்
2.	துளைக்கருவி	...299-307

மங்கள வாத்தியம் 299; நாதசுரத்தின் லக்ஷணம் முதலியன 300-304; தேவதைகள் 304-5; நாதசுரத்தின் பாஷை 305-6; நாதசுரத்துளைகள் பன்னிரண்டுக்கு அதி தேவதைகள் 306; புல்லாங்குழல் 307.

3.	கஞ்சக்கருவி	...307-308

கஞ்சக்கருவி, ஜாலரா, வெண்கலம் பிறந்த விவரம் 307-9.

4.	தாளவகைகள்	...308-309

சுத்ததாளம், சாளகதாளம், சங்கீர்ணதாளம் 308-9.

5.	பாட்கன் முதலியோர் லக்ஷணம்	...309-312

பாடகன், தாளகிரி 309; மிருதங்கி, முகவீணை, நாக சுரம், வேணுக்காரர்கள் 310; வைணிகன், சுருதிக்காரன் 311; தவில்காரன், டம்மாரக்காரன், பேரிகைக்காரன் 312.

6.	நட்டுவன்	...312-315
7.	பாத்திர லக்ஷணம்	...316-323

பாத்திர லக்ஷணம் 316-17; பாத்திரத்தின் பகிப்பிராணன், அந்தப்பிராணன் 318; பாத்திர அலங்காரம் 319-20; வஸ்திர லக்ஷணம், ரவிக்கை 320; கிண்கிணி லக்ஷணம் 321; அபாத்திர லக்ஷணம் 322-23.

8.	தண்ட லக்ஷணம்	...323-326
9.	தேங்காய் லக்ஷணம்	...326-331
10.	பிரம்பு லக்ஷணம்	...331-333
11.	உடைக்கச்சை லக்ஷணம்	...334
12.	நாடக அரங்கம் முதலியன	...334-349

சங்கஸ்தாபனம் 334; வாஸ்துவின் மாதம் 334; வாஸ்து எழு நாள் 336; மண்டபலக்ஷணம் 336-37; நடன சாலே 337-8; இசாஜலக்ஷணம் 338-40; மந்திரி லக்ஷணம்

பொருள் பக்க எண்

340 ; சபாலக்ஷணம், சபாசப்தாங்க லக்ஷணம், சபா மண்டபம் 341 ; சபாநாயக லக்ஷணம் 342 ; சபாநாதன் இருப்பு, சபையிலுள்ளோர் லக்ஷணம் 343 ; சபையில் பாத்திரமிருக்கும் லக்ஷணம் 344 ; சபை வணக்கம், அரங்கபூமி லக்ஷணம், அரங்க பூமியைத் தொழுதல் 345 ; அரங்கத்தில் பாத்திரம் இருக்கும் லக்ஷணம், அரங்க தேவஸ்துதி 346-47 ; பாத்திர நட்டுவபாந்தவ்யம், பாத்திர மேளபாந்தவ்யம், பாத்திர சொரூப லக்ஷணம் 347-49.

13. நாட்டியக்கிரமம் ...349-351

கணபதி பூஜை 349 ; நாட்டியக்கிரமம், நாட்டியமேளக் கோவை 350-51.

14. பெண்களின் வகை ...351-352

நாட்டிய உத்தம மத்திம அதம தேசப்பெண் 351 ; நாட்டியப் பெண்வயது, பெண்பருவம், மணப்பெண் லக்ஷணம், மணப்பெண் பருவம் 352.

15. சில நாட்டிய வகைகள் ...353-357

கத்தி நாட்டியம், பேரணி நாட்டியம், நாட்டியாரம் பாந்த்ய வந்தனம் 353 ; உட்கார்ந்த அபிநயம், நின்ற அபிநயம் 354 ; நாட்டியம் செய்யும் ஸ்தலங்களின் லக்ஷணம் 355 ; நாட்டியப்பலன், நாட்டியத்தின் அசுபபலன் 356 ; நீச நாட்டியம், சாபவிவரம் 357.

16. விருது லக்ஷணம் ...357-360

தேவதைகள் 357 ; நிறம், சாதி, அணியும் இடங்கள் 358 ; விருதுகளும் அணிபவர்களும், பரதம் என்பதற்கு லக்ஷணம் 359 ; நம்பியார் தீபமெடுத்தல் 360.

அநுபந்தம் ...361-365

ஒற்றைக்கை ; இரட்டைக்கை 361 ; தானகம் 362 ; அங்கநிலை 363 ; டாளவங்கம், தாளசந்தி அங்கம் 364.

ஓ

திருச்சிற்றம்பலம்

மகாபரத சூடாமணி

என்னும்

பாவ ராக தாள சிங்காராதி அபிநயதர்ப்பண விலாசம்

முதல் அத்தியாயம்

நாட்டிய உபயோக அவயவபேத விநியோக லக்ஷணம்

ஓ

ஸ்ரீகுருப்யோ நம:

கணபதி துணை

முகவுரை

ஸ்ரீ மகா கணேசனைத் துதிசெய்து, பிரமதேவன் மனைவியாகிய சரசுவதியைப் பக்தியாய் நமஸ்கரித்து, பரதத்துக்கு முதன்மைக்காரர்களாகிய பார்வதி கொழுநனுகிய பரமசிவனையும், சரசுவதியின் மணாளனுகிய பிரமதேவனையும், இலக்குமி நாயகனன விஷ்ணுவையும் அடிபணிந்து, முருகக்கடவுளை வணங்கி, அகஸ்திய மகாமுனிவர்க்குக் கைகூப்பி, வால்மீகி முதலிய மகாகவிகளைப் போற்றி, ஷண்மதங்களையும் ஸ்தாபித்த சங்கராச்சாரியாரை வந்தனம் செய்து, மற்று முள்ள மகாகவிஞர்களுக்குந் தாழ்ந்து, முன் நான்கு வேதங்களினின்றும் உதித்த அநேக சாஸ்திரங்களில் இனிமையான பரத சாஸ்திரத்தை அதற்கு அதிகாரிகள் அதை எளிதில் தெரிந்து கொள்ளும்படி அந்தச் சாஸ்திரக் கர்த்தாக்கள் இயம்பியிருப்பவை அளவற்றனவாயினும், அவற்றிற் சிலர் கூறிய சாஸ்திரங்களில் அடிமுதல் கடைவரை கிடையாதாயினும், அவற்றில் அகப்பட்டவைகளிலுள்ள பாதாதிகேசம் வரை அவ்வவ்விடத்தில் சொல்லியிருப்பவைகளை அவ்வவர்கள் நாமங்களுடனே வரிசை சேர்த்துந் தொடங்கக் குருவின் திருவடிகளை மனதில் நினைத்துப் புத்தியில் தோன்றிய வரையில் சொல்லியிருக்கிறேன்.

ஆதியில் நடேச மூர்த்தியாகிய பரமசிவன் நடனம் செய்து ஆனந்தித்து, அவ்வகையைப் பிரமன் விட்டுணு பார்வதியாகிய

குறிப்புரை

1. பரதத்தின் தோற்றத்தைப் பற்றிப் பரதமுனிவர் இயற்றிய நாட்டிய சாஸ்திரம் முதல் அத்தியாயம் பின்வருமாறு பகருகிறது :—

"பண்டைக் காலத்தில் ஸ்வாயம்புவ மநுவோடு கிருதயுகம் முடிவடைந்து வைவஸ்வத மநுவின் ஆட்சியுடன் திரேதாயுகம் தோன்றின பின், மக்கள் இராமிய தர்மங்களில் ஈடுபட்டு, காம லோபங்களின் வயத்தராகி, பொறாமை கோபம் இவற்றால் பீடிக்கப்பட்டு, தங்கள் இன்பங்களெல்லாம் துன்பங்களோடு கலக்கப்பட்டவராயினர். அவ்வாறாக, ஜம்பூத்தீவின் உலகபாலகர்கள், தானவர், கந்தருவர், யக்ஷர், அரக்கர், நாகர், தேவர்களாகியோர் இந்திரனைத் தம் தலைவர்களாகக் கொண்டு பிரமனை அடைந்து அவரை நோக்கி, "ஐயனே! எங்கள் பொழுது போக்குக்காகக் கேட்பதும் பார்ப்பதுமான ஒன்றை ஆக்கித்தரல் வேண்டும். வேதங்களைக் கொண்டு எல்லார்க்கும் ஒப்பப்பொருந்தக் கூடிய ஒரு (புதிய) வேதத்தைப் படைத்தருள்க" என்று விண்ணப்பித்தனர்.

'அப்படியே யாகட்டு' மென்று பிரமதேவன் கூறி, இந்திரன் முதலியோர்க்கு விடை கொடுத்தனுப்பி விட்டு, யோகத்திலிருந்து நான்கு வேதங்களையும் ஸ்மரித்தார். அப்பொழுது அவர் பின்வருமாறு நினைத்தார்; "இதிகாஸங்களைக் கொண்டு நான் ஐந்தாம் வேதமாக நாட்டிய வேதத்தைப் படைப்பேன்; அஃது அறம் பொருள்களையும் கீர்த்தியையும் தரத்தக்கதாகும்; வருங்கால மக்களுக்கு வழிகாட்டியாகவும், அவர்களுடைய செயல்களுக்கு உதவியுள்ளதாகவும், எல்லாச் சாஸ்திரங்களின் உபதேசங்களைக் கொண்டதாகவும், எல்லாச் சிறப்புக் கலைகளின் நுட்பங்களைப் பொருந்தியதாகவும் அஃது ஆகும்" இந்தத் தீர்மானத்துடன் அத்தப் பகவான் நான்கு வேதங்களையும் நினைத்து அவற்றிலிருந்து இந்த நாட்டிய வேதத்தைத் தோற்றுவித்தார்.

* * * *

பிரமன் என்னை (பரதமுனியை) நோக்கி, "குற்றமற்ற நீ உன் நூறு மக்களுடன் இதை (நாட்டிய வேதத்தை)ப் பிரயோகிக்க" என்றருளினர். நான் பிரமனிடமிருந்து அந்நாட்டிய வேதத்தைக் கற்றுக்கொண்டு அதைப் பிரயோகிக்கும் வகையை என் சாமர்த்தியமுள்ள மக்களுக்கும் உபதேசித்தேன்"

[நாட்டியசாஸ். அதி. 1 : 6 - 40.]

இவ்வாறே ஒவ்வொரு பரதநூலும் சிற்சில மாறுபாடுகளுடன் பரதத்தின் தோற்றத்தைப் பற்றிக் கூறுவதை ஆங்காங்கே காண்க.

மூவருக்கு உபதேசம் செய்தனர். அவர்களில் பிரமன் பரதமுனிக்கு உபதேசித்தார்; அவர் கற்று, ஈசுவர சந்நிதியில் பிரசித்தப்படுத்த, அந்த மகிழ்ச்சியால் பார்வதி எழுந்து நர்த்தனம் செய்ததைப் பரம சிவன் கண்டு களிகூர்ந்து, ஸ்திரீகளுடைய நர்த்தனம் சிறந்திருப்ப தால், இதைப் பரமசிவன் உத்தரவின்படி பரதமுனியால் உமா தேவிக்கு உபதேசித்ததில், அவள் அவ்வுபதேசத்தைக் கொண்டாடி, ஈசுவரனைப் பிரீதி செய்து, மேல் வடதேசத்து க்ஷத்திரியப் பெண்களையும், தக்ஷிண தேசத்துச் சூத்திரப் பெண்களையும் தாசிகளாக்கி, அவர்களோடு அந்த அந்தத் தேசாசாரக் கிரமமாய் நாட்டியாபிநயங் களைப் போதித்த அவ்வகையால் பூலோகத்தில் பிரசித்தமாயிற்று.

இதை விஷ்ணு அறிந்து நாரதருக்கு உபதேசிக்க, அவர் கற்று ஈசுவர சந்நிதியில் பிரசித்தப்படுத்தித் தேவலோகத்தில் விசுவாவசு முதலிய கந்தர்வர்களுக்கும், அப்ஸரஸ்திரீகளுக்கும், பூலோகத்தில் தத்திலாதி ரிஷிகளுக்கும், பாதாளத்தில் மகாநாகர்களுக்கும் உப தேசித்ததில் இம்மூன்று உலகங்களிலும் பிரசித்தமாயிற்று.

மற்றும் இதைப் பார்வதி கணபதிக்கு உபதேசிக்க, அவர் கற்று, நடேசுரன் முதலானவர்களுக்கு உபதேசிக்க, எங்கணும் பிரசித்த மாயிற்று.

மற்றும் அவ்வுமை இதை முருகக்கடவுளுக்கு உபதேசிக்க, அவரால் உலகெங்கும் பிரசித்தமாயிற்று.

நந்திதேவர் இந்திரனுக்கு உபதேசிக்க அவன் அரம்பை முதலிய ஸ்திரீகளுக்கு உபதேசிக்க, அவர்கள் கோபிகா ஸ்திரீகளுக்கு உப தேசிக்க உலகெங்கும் பிரஸித்தமாயிற்று.

[1]சார்ங்கதேவ மகாமுனியானவர் இப்பரத சாஸ்திரங்கள் யாவையும் சேர்த்து, அவரவர்கள் மதத்தைக் குறிப்பிட்டு இலக்ஷம் கிரந்தமாக,

---

1. இங்குக் கூறியபடி சார்ங்கதேவர் இலக்ஷம் கிரந்தங்கொண்ட மகாபரதம் என்ற நூல் இயற்றிய செய்திக்கு வேறு ஆதாரம் தெரியவில்லை.

சங்கீதரத்நாகரம் என்ற ஒரு நூல் சார்ங்கதேவரால் கி. பி. 1230-இல் எழுதப்பெற்றது. இவர் தேவகிரியில் யாதவகுல சிங்கணதேவனின் ஆஸ்தானகவியாயிருந்தார் என்பர். இவர் தந்தை காஷ்மீரத்திலிருந்து வந்தவர் என்று தெரிகிறது. இவர் நாட்டிய சாஸ்திரத்தின் வியாக்கி யான கர்த்தாவாகிய அபிநவகுப்தாசாரியாரின் மதத்தைத் தழுவித் தம் நூலை இயற்றினர் என்று சொல்லப்படுகிறது. நிருத்தம் என்பது சங்கீத ரத்நாகரத்தின் ஒரு பகுதி.

மகாபரதமென்று பெயரிட்டு ஒரு நூலைச் [2]சோமராய மகாராஜனுக்கு உபதேசித்ததில், அவரவர்கள் சொல்லிய இரந்தங்களில் என் வசம் அகப்பட்ட மட்டும் அவற்றைப் பார்த்து என் புத்திக்குத் தோன்றின வரையிலும் ஊகித்து அடியில் விவரிக்கலானேன்.

---

2. சோமராய மகாராஜன் யாரென்று நிச்சயிக்கக் கூடவில்லை. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் சோமப்பெயர் தாங்கிய சில கிரந்தகர்த்தாக்களின் பெயர்கள் பின்வருமாறு :—

(அ) கலியாணி நகரத்தையாண்ட சோமேசுவரன் என்ற சளுக்கிய மன்னன் (1127–1134): இவன் இயற்றிய நூல்களுள் சங்கீதகல்பத்ருமா என்பது ஒன்று.

(ஆ) சௌராஷ்டிர தேசமன்னனான சோமராஜதேவன் (1177); இவன் ஒரு சங்கீதரத்னாவளியின் ஆசிரியன்.

(இ) சோமபூபாலன் என்னும் சோமராஜன்; இவன் மற்றொரு சங்கீத ரத்னாவளியை (1180) இயற்றினான்

(ஈ) பால்குறுக்கி சோமநாதன் இயற்றியது பண்டிதாராத்ய சரிதம் (1270) என்ற சங்கீத நூல். இது தெலுங்கிலுள்ளது.

1–2. இக்கருத்தைப் பற்றிப் பரதசேனாபதீயம் 63-ஆம் செய்யுள் கூறுவதை ஓர்க : அச்செய்யுள்,

சாரங்க தேவன் தன்பெரு மூணர்வால்
நவரச முகத்தினும் பதார்த்த மத்தத்தினும்
இராக மங்கத்தினும் தாளம் பதத்தினும்
சித்தம் சிவத்தினுஞ் செய்து நிர்த்திக்க,
அவன்சிங் காரசே கரப் பெயரடைந்து
தன்மதம் பிறர்மத முறவோ ரிலக்கங்
கிரந்த முடையவோர் சார்புநூல் கிளத்தி
அதற்கு மாபரத மெனும்பே ரளித்தனன்;
பின்னர்ச்சில் வாஞுள் பல்பிணி யுடைய
சிற்றறி வினரிதைக் கற்ற லரிதெனக்
தெரிந்ததைச் சுருக்கிநாற் சகத்திரஞ் செய்து
மாபரத சூடா மணிப்பெயர் புனைந்து
சோமநா தற்குச் சொற்றனன் ரூனே.

[1]பரதஸார ஸங்கிரகத்தில் பிரமதேவன் பரதமுனிக்கருளிய பரத லக்ஷணம், பாவார்த்த லக்ஷணம், பாவாலங்கார லக்ஷணம், பாவவிருத்தி லக்ஷணம் ஆக நான்கு. இது ஆந்திர பத்திய காவியத்தின் உரை :—

1. பரத லக்ஷணம்[2]

பகாரம் பாவமாகும் ; ரகாரம் ராகமாகும் : தகாரம் தாளமாகும் ; மகாரம் சுருதியாகும் இவை நாலும் கூடியது பரதம்.

2. பாவார்த்த லக்ஷணம்[3]

பாவமென்பது விகாரமில்லாத மனிதனுடைய விக்கிரியைகள். அது சம்யுக்தமாகக் கழுத்து, புருவம், கண் முதலான அவயவங்களின் சலனத்தினல் உண்டாகும்.

3. பாவாலங்கார லக்ஷணம்

அப்படிப்பட்ட பாவத்தினுண்டான அர்த்தபேதங்கள் அநுபாவமென்றும், விபாவமென்றும், சாத்விகபாவமென்றும், வியபிசாரிபாவமென்றும், ஸ்தாயிபாவமென்றும் ஐந்தாகும். இதற்குப் பாவாலங்காரம் என்று பெயராகும்.

---

1. பரதஸாரஸங்கிரகம் என்ற பெயருடன் பலநூல்கள் காணப்படுகின்றன.

(1) ஜகஜ்ஜோதிமல்லர் இயற்றியது ; இது வடமொழியிலுள்ளது ; இதன் காலம் தெரியவில்லை.

(2) வித்யாசக்ரவர்த்தி செய்தது ; இதுவும் வடமொழி நூல் ; இதன் காலம் 1280.

(3) சிக்கதேவராயர் இயற்றியது ; இவர் ஹரிபால்ன் செய்த ஸங்கீத ஸுதாகரத்தைப் பின்பற்றித் தம்நூலே இயற்றியுள்ளார் ; இவர்காலம் 1700.

(4) முடும்பிநரசிம்மாச்சாரியார் இயற்றியது ; இவர் கோதாவரிப் பிரதேசத்தினர் ; இந்நூல் வடமொழியும் தெலுங்கும் கலந்ததாக உள்ளது ; இதனில் முக்கியமாகச் சொல்லப்படுவது அங்காபிநயம் ; இதன் காலம் 1750 ; இங்கே குறிக்கப்பெற்ற நூல் இதுவே யாகலாம்.

2. பரதலக்ஷணத்தைப் பற்றிப் பரதசேனபதீயம் பாடல்கள் 3-10 விளக்கமாகக் கூறுகின்றன.

3. பாவம் இன்னதென்றும் அதன் தன்மைகள் யாவையென்றும் நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

(அ) நாட்டிய சாஸ்திரம் (7-ஆம் அத்யாயம்):-கூறுவனவற்றின் சாராம்சம் பின்வருமாறு : பாவிக்கின்றதால் (நிரம்புவதால்) பாவமாயிற்று ? இல்லை. சொற்கள், அபிநயங்கள், காண்பித்தல் இவற்றுல் நாடகத்தின் பொருளே ஊட்டுவது பாவமாகும். பாவம் கருவியாகும் ; காரணமுமாகும். ஆகவே 'பாவய' என்ற பகுதி 'ஊட்டு' என்று பொருள்படும்.

வாக்கினலும், அங்கங்களினலும், முகராகங்களினலும் சத்துவங்களைத் தோற்றுவித்தலினலும், கவியின் உள் எண்ணங்கள் (காண்பவரின் மனத்தில்) புகுத்தப்படுவதால் இவை பாவங்கள் எனப்பெற்றன.

நாட்டியங்களில் பலவகையான ரஸங்களை அவை உண்டாக்குவதால் அவை பாவங்கள் எனவும் பெயர் பெற்றன.

இதனைப்பற்றி அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையில் கூறுவதும் கவனிக்கத் தக்கது.

(ஆ) தசரூபகம் (iv : 1 - 8) கூறுவன :—

பாவம் என்பது சுகதுக்கங்கள் போன்ற (சத்துவ) நிலைகளால் உண்டாக்கப்பட்டு அந்நிலைகளை உணரும் தன்மையாகும்.

ஸ்தாயீபாவமானது விபாவம் (Determinant), அநுபாவம் (Consequent), ஸத்வபாவம் (Involuntary states), வியபிசாரி பாவம் (Tranitory states) என்ற நால்வகை பாவங்களினலும் சுக உணர்ச்சியைக் கொடுப்பது.

விபாவம் : பாவங்களை உணர்வதனலே அவற்றின் வளர்ச்சிக்குக் காரணமாகவிருப்பது. அது ஆலம்பனம் (Fundamental), உத்தீபனம் (Excitant) என இருவகைப்படும்.

அநுபாவம் : ஓர் உணர்ச்சியைக் குறிக்க வெளியிலே தோற்றுவது; விபாவம் காரணம்; அநுபாவம் காரியம்.

ஸத்வபாவம் : இது மூன் சொன்னவைகளினின்று வேறானது. இது சத்துவத்திலிருந்து (Inner nature) தோன்றுவது. பாவங்களை உணர்வதற்கு இதுவே காரணம். இது எட்டு வகைப்படும்.

வியபிசாரிபாவம் : கடலில் அலைகள்போல் இது ஸ்தாயீபாவத்தில் தோன்றி, அதனுடனேயே கூடி, அதனிலேயே மூழ்குவது. இது முப்பத்துமூன்று வகைப்படும்.

(இ) பரதசேனபதீயம் பாவத்தைப் பற்றிக் கூறுபவை :—

(1) பாவப் பகுதி பகருங் காலை
அகத்தி னினைத்த தறுவாம் (25).

(2) மானஸம் பாவம் (11).

(3) பாவத்தின் தத்துவம் சிவன் ; தொழில் திருவ்ஷ்டி (18).

(ஈ) அபிநயதர்ப்பணம்—" ஏற்கனவே சாந்தநிலையிலுள்ள மனத்தில் முதன் முதல் ரசம் பிறப்பது பாவமாகும். ரசம் ஏறஏறக் கண், புருவம் முதலானவற்றில் அது தன்னைத் தோற்றுவிக்கும். அப்பொழுது அதற்கு ஹாவம் என்பது பெயர். பாவம் தோற்றுவிக்கப்படாத மனநிலை ; ஹாவம் தோற்றுவிக்கப்படும் சுவை ; அதைப் புலப்படுத்துவது சேஷ்டை ; ரஸம் என்பது சுவை ; வியஞ்ஜனம் என்பது தோற்றம்.

(ஆனந்த குமாரஸ்வாமி : அபிநயதர்ப்பணம் பக். 33.)

இவற்றுள், அநுபாவம் அந்தரங்கத்தை வெளியிடுவதாகும். இந்த அநுபாவத்தில் பேதங்கள் நான்கு விதம். அவற்றின் விவரம் : நிஜைப்புண்டாவதெல்லாம் சித்தஜாநுபாவம்; அவயவங்களினால் எந்த வஸ்துவையும் காட்டுவது காத்திரஜாநுபாவம்; வாக்கினாற்சொல்வ தெல்லாம் வாகாரம்பாநுபாவம்: மூவிதப் பிரபந்தங்களின் சீர் புத்தியாரம் பாநுபாவமாகும்.[1]

4. பாவவிருத்திலக்ஷணம்[2]

இவற்றில் சித்தவிருத்தி யென்றும் பாவியவிருத்தி யென்றும் கூறப் படும் இருவகையில் சிந்திக்கும் பாவங்கள் சித்த விருத்தியாகும். இவ்விருத்திகள் அபிநயம் என்று பெயர்பெறும். இந்த அபிநயம் ஆங் கிகம், வாசிகம், ஆகாரியம், சாத்விகம், என்று நான்கு வகைப்படும் என்றனர்.[3]

பரதஸார ஸங்கிரகத்தில் விஷ்ணு நாரதருக்கு அருளிய பாவ உத் பவம், அபிநய உத்பவம், லிபி உத்பவம், நாத உத்பவம், அபிநய நியாய லக்ஷணம் ஆக 5

ஆந்திர பத்தியகாவியத்தின் உரை :—நினைத்தது பாவம்; நினைத் தசைத்தது அபிநயம், இது பரப்பிரமத்திலுண்டான சப்தப் பிரம மாகும், இந்தச் சப்தபிரமமாவது வருணத்மகம், தொன்யாத்மகம் என்ற இவற்றோடு கூடியிருக்கும். வேத வேதாங்கங்களான அக்ஷரங்கள் வருணத்மகமாகும்.

அபிநயம் அவயவங்களினலே ஆங்கிகாபிநயமென்றும், சொற்களாலே வாசிகாபிநயமென்றும், அலங்கார பூஷணங்களினலே ஆஹாரியாபிநய மென்றும், ரசபாவங்களினலே சாத்விகாபிநயமென்றும் நான்கு வகைப்படும்.

இவ்வபிநயங்களுக்கு மூன்று வித நியாயங்களுண்டு.

---

1. பரதசேனாபதீயம் செய்யுள் 44-ஐக் காண்க.

2. "சிங்காராதி நவரசங்களைக் காட்டி அபிநயிப்பதைச் சித்த விருத்தியென்றும், அஸ்தம் அங்கங்களினல் விஸ்தரித்துக் காட்டி அபி நயிப்பதைப் பாவியவிருத்தி என்றும் கூறினர்" (பரதசேனா : 37 உரை). இந்நூல் 49-51 செய்யுட்களையும் காண்க.

3. அபிநயத்தின் விளக்கங்களை இந்நூல் 28 முதல் 48 வரையி லுள்ள செய்யுட்களில் காண்க.

4. இவை சாரீர (கைகால்களினவை), முகஜ (முகத்தினவை), சேஷ்டாகிருத (செயல்களால் ஆனவை) எனப்படும்.

மேற் சொன்ன நான்குவித அபிநயங்களும் சேர்த்துக் காட்டுவது நாட்டியமென்றும், பதார்த்தத்தினாலும் காத்திரவிக்ஷேபத்தினாலும் பாவாபாவத்தினாலும் காட்டுவது நிருத்தமென்றும், கீத வாத்திய தாளங் களினாலே பிரயோகிப்பது நர்த்தனமென்றும் பெயர்களாயின.[1]

மகேசுவரன் தேவிக்கருளிய, **ஆறங்கங்கள் வந்தவகை ; வேதஸாரம் ; பரதம் என்பதற்குப் பொருள் ; பிரவிசார சேஷ்டை** ஆக 4.

ஆந்திரபத்திய காவியத்தின் உரை:—

ஆறங்கங்கள் வந்தவகை

சப்த சாஸ்திரம் முகம் ; சோதிடசாஸ்திரம் நேத்திரம் ; சிக்ஷா சாஸ்திரம் கிராணம் என்ற முக்கு ; கல்ப சாஸ்திரம் கரம் ; சந்தசு சாஸ்திரம் பாதம் ; நிருக்த சாஸ்திரம் செவி.[2]

வேத ஸாரம்

இந்த ஆறங்கமும் கூடியிருக்கிற வேதங்களின் ஸாரமாவது : ருக்வேத ஸாரம் பாட்யம் ; யஜுர் வேத ஸாரம் அபிநயம் ; சாமவேத ஸாரம் கீதம் ; அதர்வண வேதஸாரம் இரசம்[3]

---

1. நாட்டியம் முதலியவற்றின் தன்மைகளைச் செய்யுள்கள் 52, 53 விவரிக்கும். அங்குள்ள விவரங்களோடு இவற்றை ஒப்பிடுக.

அபிநயதர்ப்பணம் (2–16), தசரூபகம் (1–14), சங்கீதரத்னாகரம் (vii : 28) இவற்றையும் காண்க.

2. முகம் வியாகரணம் தஸ்ய ஜ்யோதிஷம் நேத்ரமுச்யதே
நிருக்தம் ச்ரோத்ரமுத்திஷ்டம் சந்தஸாம் விசிதி : பதே:
சிக்ஷா க்ராணந் து வேதஸ்ய ஹஸ்தௌ கல்பாந் ப்ரசக்ஷதே
(மணிமேகலை உரை மேற்கோள்.)

கற்பங் கைசந் தங்கா லெண்கண்
டெற்றெ னிருத்தஞ் செவிசிக் கைமுக்
குற்ற வியாகர ணமுகம் பெற்று
(மணிமேகலை 27 : 100 - 102.)

3. நாட்டிய சாஸ்திரம் [I : 17 - .]
ஜக்ராஹ பாட்யம் ருக்வேதாத் ஸாமப்யோ கீதமேவ ச
யஜுர்வேதாதபிநயாந் ரஸாநாதர்வணாதபி

பரதம் என்பதற்குப் பொருள் : பிரவிசார சேஷ்டை

இவ்வேத ஸாரங்கள் நான்கும் கூடியது தாண்டவமாகும்.[1] இது உத்தான தாண்டவ மென்றும், சுகுமார லாசியமென்றும் இருவகைப் பிரவிசாரமென்றும் பேராகும்.[2] இதில் நின்றுடியபிநயிப்பது **சுகுமாரலாசியம்**; இதுவே **பரதமென்று** சகல சிவர்களிடத்திலும் (பாவராக தாள மென்றும்) விளங்கி வருகிறது, அதாவது, அவயவச் சேஷ்டைகளினுலே பாவமென்றும், கண்டத் தொனியினுலே இராகமென்றும், இதுவே பரதமென்றும் ஆதியில் உமையவ(ளுக்குப்) பரமசிவன் சொன்னது.

பரதம் வந்த வகை

சதாசிவம்	ஆகாஜூகூ[1]	யாஷ்டன்[2]	வாமனன்
பார்வதி	சைகதேசன்	கோகளமுனி	புரசியன்
விஷ்ணு	சித்திரசேனன்	குண்டலி	கியாதி
பிரமா	ரம்பா	அர்ச்சுனன்	மதங்கன்
காசிபர்	நாரதர்	[3]சார்ங்கிதேவரிஷி	பாட்டன்[4]
சரசுவதி	தும்புரு	இராவணன்	பங்களகௌசிகன்
கணபதி	பராசரர்	பாணாசுரன்	கோரக்ஷகன்
ஷண்முகன்	வியாசர்	உஷாதேவி	வானதிபுனேந்தோன்

---

1. தாண்டவ லாஸ்யங்களின் விவரங்களும், உத்தான தாண்டவம், சுகுமாரலாசியம் இவற்றின் விளக்கங்களும் இந்நூல் 54, 55 செய்யுட்களில் கூறப்பட்டுள்ளன.

"கணநாதராகிய நந்திகேசுவரர் நாட்டியம், நிருத்தியம், நிருத்தம் என்ற மூன்றினுள் ஒவ்வொன்றையும் உந்நானாண்டவம், சுகுமாரலாசியம் என்றிருவகை செய்து அவற்றையும் கஞ்சக் கருவியாதி வாத்திய இலக்கணங்களையும் பிருங்கிமுனி, உருத்திர கணிகையர் அவர் புத்திரர் முதலியோர்க்கு உபதேசித்தனர். (பரதசேஞ. 55 உரை.)

2. இருவகைப் பிரசாரம் என்பன மேலே கூறிய உத்தான தாண்டவமும், சுகுமாரலாசியமுமே.

பரதம் வந்தவகை நூலுக்கு நூல் சிற்சில மாறுதல்களுடன் குறிக்கப்பட்டிருக்கிறது.

பின்வருவன நேரான வடமொழிப் பெயர்கள்

1. ஹாஹா ஹூஹூ. 2. யாஷ்டிகன். 3. சார்ங்கதேவர். 4. பட்டன்.

நந்திகேசுவரன்	வசிஷ்டர்	நடேசகரன்	இராஜ சேகர பாண்டியன்[7]
தத்திலமுனி	அகஸ்தியர்	சார்த்தூலன்	விக்கிரமார்க்கன்
பிரகஸ்பதி	யாஜ்ஞவல்கியர்	அநுமான்	போஜன்
சுக்கிரன்	அத்திரி	லோவட்டன்[5]	அரிபாலீயன்[8]
துர்க்கை	மதங்கமுனி	ராகளன்[6]	க்ஷேத்திர ராஜன்
இந்திரன்	சக்திமுனி	சிவாச்சாரி	சங்கீதரத்னகரன்[9]
கம்பளன்	பிருங்கிமுனி	வாசுகி	சோமநாதன்
சந்திரன்	பரதமுனி	பரமர்ஷி	அபிநவகுப்தன்
வாயுதேவன்	தண்டு	சங்குகன்	மாத்திரகுப்தம்[10]
விசுவாவசு	உத்திஷ்டன்	நைகன்	கல்லிநாதன்[11]

இக்கர்த்தாக்களில் சில பேர்களுடனும், விநியோகத்துடனும், சில பேரில்லாமல் விநியோகமட்டும், தன் கைவசப்பட்ட சில சாத்திரங்களைத் திரட்டிச் சேர்த்து மேல் சொன்னபடி விவரிக்கின்றது.

சுபம்

---

5. லோல்லடன். 6. ராஹலன். 7. இராசசேகரன் பொருட்டுச் சிவபெருமான் கால்மாறியாடிய வரலாறு திருவிளையாடலில் கூறப்படுகிறது. 8. ஹரிபால தேவன்.

3, 9. இவ்விரு பெயர்களும் ஒருவரையே குறிக்குமோ என்பது ஆராயற்பாலது.

10. மாத்ருகுப்தன்

11. சங்கீதரத்னகரத்துக்கு வியாக்யானம் செய்தவருள் ஒருவர் கல்லிநாதர்.

இனி, பரதசேநாபதீயத்தால் விளங்கும் சில உண்மைகள் :-

உமாமகேசுவரி கணபதிக்கும் ஷண்முகர்க்கும் பரதநூலை உபதேசித்தாள்.

கணபதி, நிருத்தகணபதியாகித் தம்பெயரால் ஒரு நூல்செய்து வசிட்டாதியர்க்கு உபதேசித்தார்.

அநுமான் செய்தது அநுமகடகம்.

விஷ்ணு செய்தது நீதப்பிரபந்தம்.

வியாசர் செய்தது வியாசகடகம்.



1. கடவுள் வாழ்த்து

கணபதி தோத்திரம்

ஆதிநா ரீசன் அருளும் பரதநூல்
மேதினியி லன்புடன்யான் விள்ளவே—மோதுமுடன்
மாங்கனியை வாங்க வரனவல மாகவந்த
காங்கயன்முன் மூன்றுமிபங் காப்பு. 1

(இதன் பொருள்.) ஆதி நாளில் ஈசுவரன் அருளிய பரதநூலை நான் பூமியில் அன்புடன் கூறுவதற்கு, மோதகத்தையும் மாங்கனியையும் பெற்றுக் கொள்வதற்காகப் பரமேசுவரனைப் பிரதக்ஷிணமாக வந்தவனும், முருகக் கடவுளுக்கு முன் தோன்றியவனுமான யானை முகன் (விநாயகன்) காக்க.

சுப்பிரமணியர் துதி

வேழமுகத் தோன்றனக்கு மெய்த்துணையா மெய்ப்பொருளே
ஆழிபுனை யும்மாலுக் காமருகா—நீள்புவிமேல்
ஆதிமூ லப்பரத மன்புடன்யா னோதுதற்கு
ஆதரவு செய்தாள்கு கா. 2

யானைமுகக் கடவுளான விநாயகரின் மெய்த்தம்பியாகிய உண்மைப் பொருளே! சக்கராயுதத்தைத் தரிக்கும் திருமாலின் மருகனே! நீண்ட உலகில் ஆதிமூல பரதம் என்ற நூலை அன்புடன் நான் ஓதுவதற்கு ஆதரவு காட்டி ஆள்வாயாக; குகனே!

---

1. ஈசுவரன் பரத நூலை அருளிய வரலாற்றை முகவுரையிற் காண்க. காங்கயன் - சுப்பிரமணியக்கடவுள்; கங்காபுத்திரன் என்பது பொருள். இபம் - யானை; இங்குக் கணபதியைக் குறித்தது.

2. 'சார்ஙிதேவர் இலட்சம் சிரத்தமாக மகாபரதமென்று பெயரிட்டு ஒரு நூலைச் சோமராய மகாராஜனுக்கு உபதேசித்ததாக' இந்நூலின் முகவுரையிற் கூறப்பட்டிருக்கிறது. பிரமன் 36,000 சுலோகங்களில் நாட்டியவேதம் என்னும் நூலை முதலில் இயற்றினன் என்றும், பிறகு அவனே அந்நூலைச் சுருக்கி, 12,000 சுலோகங்களில், ஆதிபரதம் என்றும் சதாசிவபரதம் என்றும் பெயரிட்டு வெளியிட்டனரென்றும், இவ்விரு நூல்களையும் பின்பற்றியே பரதர் தம் நாட்டிய சாஸ்திரத்தை இயற்றினர் என்றும் கூறுவர். இப்பாடலில் சுட்டப்பெற்ற ஆதிமூலப்பரதத்தைப்பற்றி அறிய இயலவில்லை.

சரசுவதி

நாவு தவறுமல் நற்சொற்கள் மாறுமல்
மேவு பரதவிதம் விள்ளவே—பூவுலகை
ஆளுகின்ற மாவாணி யம்மையே நாயடியேன்
வாழும் படிக்கிசைந்து வா. 3

நாக்குத் தவறுமலும் நல்ல சொற்கள் மாறுமலும் பரத நூலின் பல பகுதிகளையும் நான் கூறுவதற்கு, பூமியை ஆளும் பெரிய வாணியம்மையே! நாய் போன்ற அடியவனை நான் வாழும் படி மனம் பொருந்தி அருள்வாயாக.

மதுரை மீனாட்சிசுந்தரேசுரர் துதி

ஆதிமூ லப்பரத மையமிலா தோதுதற்குச்
சாதனையா யென்னுவிற் றுணிருந்து—ஓதவருள்
தேனூர் கடம்பவனத் தேதோன்றி வாழ்மதுரை
மீனாட்சி சொக்கலிங்க மே. 4

தேன் நிறைந்த கடம்பவனத்திலே தோன்றி வாழ்வை யுடைய மதுரையிலே கோயில் கொண்டருளிய ஸ்ரீமீனாட்சி சுந்தரக் கடவுளே! நான் ஆதிமூலப் பரதத்தைச் சந்தேதமில்லாமல் ஓதுவதற்கு உதவியாய் என் நாவிலிருந்து அருள் செய்வாயாக.

திருநடன வணக்கம்

பிரமன்ரு ளம்போட மால்படகந்
தனைமுழக்கப் பேராம் வாணி
அருமையரம் வீணைகொளச் சீங்குழலி
ரவிசசியு மடைவா யூதக்
கிருபையுடன் தேவரொலி செய்யநந்தி
மத்தளம்சங் கீதத் தைத்தும்
புருமுழங்க ரசம்பிறக்கச் சிவனடி
நடனத்தைப் போற்று வேனே. 5

பிரமன் தாளம் போடவும், திருமால் படகவாத்தியத்தை முழக்கவும், புகழ் மிக்க ஸரஸ்வதி அருமையான வீணையை மீட்டவும், அழகிய குழலோ இரவியும் சசியும் அடைவாக ஊதவும், தேவர்கள் அன்புடன் வாழ்த்தொலி செய்யவும், நந்தி மத்தளம் வாசிக்கவும், தும்புரு பாடவும், சிவபெருமான் நவரஸங்களையும் தோற்றுவித்துக் கொண்டு ஆடும் திருநடனத்தை வணங்குவேன்.

2. அவையடக்கம்

இந்துப்பா லிரவி தீப மீசனுட் டியமி ரத்னம்
சிந்துகற் பகம்பூ தங்கச் சிகரிதட் சணியும் பத்தர்
தந்தைதா யேற்றூற் போலத் தகைமைசேர் நூல்வல் லோர்கள்
எந்தன்மேற் கருணை கூர்ந்து ஏற்பரிந் நூலை மாதோ. 6

பக்தர்கள் சந்திரனுக்குப் பாலும், சூரியனுக்குத் தீபமும், ஈசனுக்கு நாட்டியமும், இரத்தினத்துக்குச் சிந்தூரமும், கற்பகத்துக்குப் பூவும், தங்கச் சிகரிக்குத் தட்சணியும் கொடுக்க, அவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டமையை ஒப்ப, சாஸ்திரங்களில் வல்லவர்கள் என்மீது கருணை கூர்ந்து இந்நூலை ஏற்றுக்கொள்வார்களாக.

3. நூலின் வரலாறு

ஆதியாம் பொருளில் முக்குணஞ் சேரவம்
பரமெனுஞ் சத்தப் பிரமம்
ஆயதிற் றோன்று நாதம் தேவானுத்
மகந்தொன் னியாத்து மிகமென்
றோதிய விரண்டு வகையுடன் றனித்த
வுமையொரு பாகன்முன் னளில்
உலகெனுங் கலக ளீரெட்டை மேவி
யொப்பிலா வானந்த முதலா
ஏதமிற் றூண்டவம் பதினாறு மேற்கையா
யாடிடு மப்போ தேந்திய
வுடுக்குக் கிண்கிணி கெச்ச மிவற்றுள்
வியாகரண சூத்தி ரங்கள்
மீதுறுங் கணமுத லாகிய நூல்கள்
விளங்குறு மவற்றுளிப் பரதம்
விண்ணவர் புகழ வாடியிப் பயனை
விரிஞ்சனுக் கோதின னரனே. 7

மூலப்பொருளில் முக்குணங்கள்கூட, சப்தப்பிரமத்தில் நாதம் தோன்றிற்று; அது தேவானுத்மகம்(?), தொன்யாத்மகம் என்ற இரு வகைப்பட்டது. அவற்றுடன் பரமேசுவரன் உலகமென்ற பதினாறு

---

6. சிகரி - கும்பம் ; தங்கச்சிகரி - மேருவும்ஆம்.

கலிகளுடன் பொருந்தி, [1]ஆனந்தம் முதலான பதினாறு தாண்டவங் களையும் ஏற்று ஆடினர்; அவர் அப்போது ஏந்திய உடுக்கை, கிண் கிணி, கெச்சை ஆகியவற்றிலிருந்து வியாகரண சூத்திரங்கள், கணங் கள் முதலிய நூல்கள் தோன்றின. அவற்றுள் அச்சிவபிரான் தேவர் கள் புகழும் வண்ணம் பரதத்தை ஆடி அதன் பயனைப் பிரமனுக்கு ஓதினர்.

---

7. முக்குணம் - இராஜஸம், தாமஸம், சத்துவம்.

நாதத்தின் இருவகை: தேவநாத்மகம்; தொன்யாத்மகம். "வருணத் மகம், நாதாத்மகம் என்று நாதப்பிரமம் இருவகைப்படுமென்றும், அவற் றுள் நாதாத்மகமே தொன்யாத்மகம் என்று பெயர் பெறும்" என்றும் கூறு வர் பரதசேனுபதீயம்: 8, 32, 37.

1. தாண்டவம்—'தாவலும் ஆடலும் செலுத்தலும் தாண்டவம்' (பிங்கலநிகண்டு 594)

தாண்டவம் ஆனந்தம், சந்தியா, கௌரி, திரிபுர, காளி, முனி, சங்கார, உக்கிர, பூத, பிரளய, புஜங்க, சுத்த தாண்டவங்களாகிய பன் னிரண்டு தாண்டவங்களும் அவற்றின் விளக்கங்களும் பரதசேனுபதீயம் சூத்திரம் 2-லும் அதன் உரையிலும் கூறப்பட்டுள்ளன.

இன்னும் அகோர, ஊர்த்துவ, ஆச்சரிய, ஆனந்த, சௌந்தரிய, அற்புத, அகவரத, சண்ட என்றவை போன்ற பிறவகைத் தாண்டவங்களும் உண்டு. தாண்டவம் நூற்றெட்டு என்றும் கூறப்படும்.

தாண்டவம் பதினாறு :—

ஆதி யனுப் பிரகாசமும் பீடம் புட்பாஞ்சலிமிக்
காது புயங்கமும் தேசியும் தேசியொத்துக் கருதும்
நீதி நிழல்வைப்பு வகுப்புடன் வாக்கியம் கோர்கவுத்தம்
ஓது தணுக்குத் தெண்ட பாதமு மீரெட்டென்றோதினரே.

(பரதசங்கிரகம் பக். 134–142.)

என்ற செய்யுளின்படி பதினாறு தாண்டவங்களாவன :—

ஆதி, அணு, பிரகாசம், பீடம், புட்பாஞ்சலி, புயங்கம், தேசி, தேசி யொத்து, நீதி, நிழல், வைப்பு, வகுப்பு, வாக்கியம், கவுத்துவம், தணுக்கு, தெண்டபாதம், (ஊர்த்துவம்).

இவை அகமார்க்கப் பொருள் தாண்டவம் எனப்பெறும்.

2161

விரிஞ்சனம் முறையை மறையுளர் ராய்ந்து
விதிகளைப் பயன்படும் போது
வேதமா மிருக்கு தன்னுள் வாத்தியமு
மேன்மையா மெசுர்வேதந் தன்னுள்
அரிதென விளங்கு மபிநய மும்பே
ராகிய சாமவேதத் துளகி
லங்கொண் டாடுங் கீதமு மற்று
மதர்வண வேதத் துள்ரசமு
முறைகொளக் கண்டு சாத்திரந் திரட்டி
முப்பத் திரண்டு லட்ச
மதாய்மு முங்கிய கிரந்தந் தர்மார்த்த (காம)
மோக்ஷமீந் திடுமெனப் பின்னும்
திரைகொளுந் துக்கம் பயம்சோகம் வெறுப்புத்
தீங்குறு பேதங்க ளர்த்துத்
திறம்பெறு மானந் தந்தரு மெனவே
செப்பியே வாழ்த்தி னன்மலரோன். 8

அவ்வாறு பெற்ற முறையைப் பிரமன் வேதத்தினுள் ஆராய்ந்து விதிகளை உருவாக்கும் காலத்தில் இருக்கு வேதத்திலிருந்து பாட்டியமும், மேன்மையான யஜுர் வேதத்திலிருந்து அருமையாக விளங்கும் அபிநயமும், பெருமைபெற்ற ஸாம வேதத்திலிருந்து உலகம் கொண்டாடும் கீதமும், அதர்வண வேதத்திலிருந்து இரசமும், (இவை அவ்வவற்றில் உள்ளபடியை அறிந்து எடுத்து) ஒரு சாஸ்திரத்தை உண்டாக்கி 32 இலட்சம் கொண்டதாய் அதனைச் செய்தருளினன். பின்னும் அப்பிரமன் அந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளையும் தருமென்றும் அலைமோதும் துக்கம், பயம், சோகம், வெறுப்பு, தீமைகளைக் கொடுக்கும் வேற்றுமை ஆகியவைகளை நீக்கி வலிமையுள்ள ஆனந்தத்தைத் தரும் என்றும் சொல்லி வாழ்த்தினன்.

அம்முறை தன்னை நந்திகண் டேநா
லாயிரங் கிரந்த மதாக
அருளிய வதனைப் பர்தமா முனிவன்
அறிந்தர லோக்கியே நடிக்க,
இம்முறை பெண்பா லாயில்நன் றென்றே
ஈசனுர் கிணைந்திட வுமையாள்

இன்பமே பயக்க வீசன்முன் ஙடி
யெழில்பெற, இவ்விரு முறையைத்
தம்மிலே வாணு சுரன்மகட் குரைக்கத்
தையலுடன் சார்ஞி தேவன்,
தக்ஷிண கும்பமுனி பாட்டன் பிருங்கி
சார்ந்தநாதன் பிரகற் பதியும்
செம்மைசேர் சுங்கன் தத்தில லனுமன்
சிறந்தகோ களனருச் சுனனும்
திறமைசேர் * * (9)

அதனை (பிரமன் இயற்றிய சாஸ்திரத்தை) நந்திகேசுவரன் பார்த்து, நாலாயிரம் கிரந்தத்தில் ஒரு நூலைத் தான் இயற்றி யருள, அதனைப் பரதமாமுனிவன் அறிந்து, அரன் முன்னிலையில் நடிக்க, ஈசுவரன், "இதனைப் பெண்பாலர் நடித்திடுவராயின் நல மாகும்" என்று கினைத்தனர். அதனை அறிந்து உமையவள் ஈசுவரனுக்கு இன்பம் உண்டாகும்படி அவர் முன் ஆடி அழகுபடுத் தினள். இவ்வாறுண்டான இரண்டு முறைகளையும் அவ்விருவர் களும் வாணுசுரன் மகளுக்கு உரைத்தனர். பிறகு சார்ஞிதேவர், அகஸ்தியர், பாட்டனாகிய [1]பிருங்கி, சார்ந்தநாதன், பிரகஸ்பதி, செம்மை மிகுந்த சுங்கன், தத்திலன், அநுமன், சிறந்த கோகளன், அச்சுனன், இன்னும்,

காசிபன் வியாசன் வாணி கம்பளன் வாயு தேவன்
பேசிய யாஞ்ஞ வல்கன் வசிட்டனுஞ் சேடன் பின்னும்
மாசிலா தோங்கு விச்சு வாவசு வுடனே பேராந்
தேசம தாளும் ராஜ சேகர வழுதி மற்றும். 10

காசிபன், வியாசன், ஸரஸ்வதி, கம்பளன், வாயுதேவன், யாஞ்ஞவல்கன், வசிட்டன், சேஷன், குற்றமற்றோங்கும் விச்சுவாவசு, பெரிய இராஜ்யத்தை ஆளும் இராஜசேகர பாண்டியன்,

---

9. இருமுறை: பரதன் ஆடிய முறையும், உமை ஆடிய முறையும். தாண்டவம், லாஸ்யம் என்ற இருமுறைகள் எனினும் ஆம். வாணுசுரன் மகள் - உஷை. இப்பாடலின் இறுதி சிதைந்துள்ளது.

நந்திகேசுவரர் இயற்றியது பரதார்ணவம் எனப்படும். இது நாலு லக்ஷம் கொண்டது என்பர். கரணபூஷணம் என்ற ஒரு நூலையும் இவர் இயற்றியதாகக் கூறுவர்.

1. பிருகு என்றும் ஆகலாம்.

திறமான ராவணனும் வாணு சூரன்
சீராகு மரசர்களில் விக்ர மார்க்கன்
மருவிலா வரம்பையரும் போஜ னேடு
வாசுகியும் சத்திமுனி யுலகில் மற்றும்
வருசோம நாதன் கோரட்சகன் பேர்வா
னதியைப் புனைந்தோனும் வகைக டேர்ந்து
முறையாக நூல்களை யுண்டாக்கித் தாமுமுன்
நடித்துமுல கோர்க்கு முரைத்திட் டானே. 11

வலிமை மிகுந்த இராவணன், வாணுசுரன், சிறந்த அரசர் களுள் விக்ரமார்க்கன், குற்றமற்ற அரம்பையர், போஜன், வாசுகி, சத்திமுனி, சோமநாதன், கோரட்சகன், வானதியைப் புனைந் தோன் ஆகியோர் தாம் தாம் நூல்களை ஆராய்ந்து தாமும் நூல்களை உண்டாக்கியும், நடித்தும், உலகோர்க்கு உரைத்திட்டார்கள்.

நாந்தி

நந்தியே நட்டுவனும் நாட்டியனே யீச்சுரனும்
சிந்தைமகிழ்ந் தந்தரத் தேயிருந்து—முந்த
நடனந் தொடங்கினது நாந்தியா மென்பர்
மடமயிலே நாந்தி வகை. 12

நந்தி நட்டுவனுகவும், ஈசுவரனே நாட்டியனுகவும் அமைந்து அவர் அந்தரத்திலே நடனத்தைத் தொடங்கியது நாந்தியாகும். மடமயிலே! இதுவே நாந்தியின் வகையாகும்.

---

11. இங்குக் கொடுக்கப்பெற்ற வரிசைமுறை முன் கொடுக்கப் பெற்ற தனேடு மாறுகிறது.

12. நாந்தீ என்பதன் பொருள் :—

நாந்தீ = இதனல் தேவர்கள் சந்தோஷிக்கிறார்கள்.
,, பூர்வாங்கத்தின் ஒரு பகுதி.

நந்தியை (காளையை)த் தனக்குக் கொடியாக வைத்துக் கொண்ட உலகநாயகரான பரமசிவன் உலகத்தொடக்கத்தில் நடனமாடத் தொடங் கினர். அப்பொழுது அப்பரமசிவனின் கற்பனையால் நந்தி (காளை) ரங்க மாயிருக்கும் தன்மையை அடைந்தார். அந்த நந்தியின் ஸம்பந்தமாகச் செய்யும் பூஜை நாந்தீ எனப்படும். அது தேவதைகளின் நமஸ்காரம் முதலிய மங்களங்களை வெளிப்படுத்துவது ஆகும். இவ்வாறு சாரதாதனயர் கூறுகிறார்.

4. பாயிரம்

ஆதியா யெங்குந் தானு யனுதியாய் நிறைந்து நின்ற
சோதியாம் பரம னுடுந் தொழிலது வாணி முன்னுள்
நீதியாய் வடம னூலால் நிகழ்த்தின ளெவருங் காண
மேதினி தனிலே யானும் விளம்பினேன் பரத நூலை. 13

ஆதியாயும், எங்கும் தானுயும், அநாதியாயும், நிறைந்து நின்ற சோதிப்பொருளான பரமசிவனுர் ஆடின ஆட்டத்தை, ஸரஸ்வதி தேவியானவள் முற்காலத்தில் வடமொழியில் நேர்மை யாக ஒரு வடமொழி நூலாக எழுதியருளினுள். அப்படிப்பட்ட பரதநூலை நானும் உலகத்துக்குக் கூறலானேன்.

நூலதைத் தமிழாற் பாடு நுணுக்கத்தை யறிந்து கொள்வீர்
மேலங்க முபாங்கம் பிரத்தி யாங்கத்தின் விவர பேதம்
கோலமா மங்க மேழு குறித்திடு பிரத்தி யாங்கம்
சாலவே யொன்ப தாகச் சாற்றுபாங் கமுமீ ராறே. 14

இந்நூலை நான் தமிழில் எழுதியிருக்கும் நுணுக்க முறை களை அறிந்து கொள்வீர்களாக. [1]அங்கம், உபாங்கம், பிரத்தியாங் கம் இவற்றின் விவரங்களும் பேதங்களும் கூறப்படும். அங்கம் ஏழு; பிரத்தியாங்கம் ஒன்பது; உபாங்கங்கள் பன்னிரண்டு.

சீராறு நயன பேதஞ் செப்பக்கேள் முப்பத் தாறும்
ஈராறு மேழுஞ் சென்னிக் கிசைத்ததோர் பேத மாகும்
ஓராறு மூன்று மேசு வாற்பகிட் டையென வோதும்
வேரூரு மறிய வெண்ணு வெகுநிட்டை யெட்ட தாமே. 15

எட்டதா மிமையின் பேத மிசைந்திடு புருவ மேழாம்
வட்டமாம் நாசி யாறும் வளம்பெறு மிதழு மாறும்
ஒட்டிடுந் தந்த நாலா முருசிகாட் டிடுநா வைந்தும்
கட்டிடாச் சுவாசம் நாலு கதுப்பாறு பேதஞ் சொல்லே. 16

15-16. கண்களின் பேதங்கள் ஆறும், முப்பத்தாறும். தலை யின் பேதங்கள் பத்தென்பது. அற்ப நிட்டை ஒன்பது; வெகு நிட்டை எட்டு.

---

1. அங்கம், பிரத்யங்கம் உபாங்கம் என்பதே முறை.

இப்பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் எண்கள் இந்நூலின் இலக் கணங் கூறும் பிற்பகுதிகளில் உள்ள எண்களோடு ஒத்துவரவில்லை. மாறுபட்டவை பெரும்பாலும் பிற நூல்களில் ஒத்துள்ளனவாகலாம்.

இமைகளின் பேதம் எட்டு; புருவ பேதங்கள் ஏழு; நாசி பேதங்கள் ஆறு; இதழ் பேதங்கள் ஆறு; பற்களின் பேதங்கள் நான்கு; நாவின் பேதங்கள் ஐந்து; சுவாசத்தின் பேதம் நாலு; கதுப்பின் பேதம் ஆறு.

சொல்லிய வதன மாரூஞ் சுமுகமு மேழு தாகும்
மெல்லிய கண்ட மொன்பான் விளங்கிய புயமீ ரைந்தாம்
நல்லமா தாந்திரத்தோள் நாலுட னிரண்ட தாகும்
அல்லலொன் றில்லா மேனிக் கமைத்த பேதங்க ளைந்தாம்.

வதனபேதம் ஆறு; முகம் ஏழு; கழுத்து ஒன்பது; புயம் பத்து; தோள் ஆறு; மேனியின் பேதங்கள் ஐந்து.

ஆமணிக் கட்ட தாரூ மூவகை யைவி ரற்கே
காமினி யொருகை பேத நவி லுவோ முத்த மிழ்க்கை
நேமமூ வெட்டாங் கைகள் நிறைந்தமா தாந்தி ரக்கை
ஓமென விருப தாகு மூலகப்பிர சித்தக் கைகேள். 18

கைமூன்று பத்தொன் றேதான் காட்டினேம் பிரவர்த்த மானஞ்
செய்யொத்த கையீ ராறு செப்புமா தாந்தி ரத்தில்
எய்யும்பூ லோகக் கைக ளீரைந்தா மென்றி சைப்பாய்
பொய்யிலாத் தேசி யான பொதுக்கையும் பத்தே யாகும்.

ஆகிய வகைக ளாறுக் கமைத்த கைநூற் றூறு
வாகுசே ரிருகைப் பேதம் வளர்த்திடு நாற்ப தாகும்
சேகர முத்தி ரைக்கை சேர்ப்பது மூப்பத் தொன்றும்
மோகமா நிருத்தக் கைகள் மூப்பத் திரண்டென் பாரே. 20

18-20. மணிக்கட்டுகளின் பேதங்கள் ஆறு. ஐந்து விரல்களின் பேதங்கள் மூன்று.

இனி கைகளின் பேதங்கள்; அவை ஆறு வகைப்படும்:—

முத்தமிழ்க்கை 24; மதாந்திரக்கை 20; ஏற்றைக்கை 30; பிரவர்த்தமானக்கை 12; பூலோகத்திய மதாந்திரக்கை 10; பொதுக்கை 10; இவற்றின் தொகை 106.

இனி இருகைப் பேதங்கள் 40; முத்திரக்கை 31; நிருத்தக்கை 32.

பார்த்திடு வயிறி டுப்புப் பாரிச முதுகு நான்கும்
சேர்த்திடு நங்கான் காகச் சிறந்திடு தொடையோ ரைந்து
நேர்த்தியா முழந்தா ளைந்து நேர்கணைக் காலு மைந்து
சாத்திய பாத பேதம் கணிப்பத்தா யுரைக்கு நூலே. 21

வயிறு, இடுப்பு, பரிசம், முதுகு ஆகிய நான்கிற்கும் பேதங் கள் நான்கு நான்காகும்; தொடை பேதம் ஐந்து; முழந்தாள் பேதம் ஐந்து; கணைக்கால் ஐந்து; பாதபேதங்கள் பத்து.

உரைத்திடு மங்க மூன்றி லுதித்திடு மவய வங்கள்
நிரைத்திடு மிருபத் தெட்டாய் நிகழ்த்திடுந் தேசிச் சாரி
விரித்தது முப்பத் தைந்து விளங்குமா காசச் சாரி
குறித்தபத் தொன்ப தென்றே கூறுதே சிகமீ ரேழே. 22

சொல்லப்படும் மூன்று அங்கங்களிலும் தோன்றும் அவயவங் கள் இருபத்தெட்டு. தேசிச்சாரி முப்பத்தைந்து; ஆகாசச்சாரி பத்தொன்பது; தேசிகம் பதினொன்று.

ஈரெட் டதாம்பூ சாரித் திழிதலிற் கேற்கை யாகும்
ஓரெட்டிற் பாதி சுத்த மண்டல மென்றே யோது
நீரெட்டும் பாரும் விண்ணு நேர்ந்த மண்டல மிரண்டும்
பாரெட்டும் நூறும் பத்தும் பதினொன்று பேத மாமே. 23

பூ சாரி பதினாறு; சுத்த மண்டலம் நாலு; மண்டலம் இரண்டு.

கரணம்

ஆமெனு முற்புலி தக்கர ணங்கள் முப்பத் தாறும்
தாமென்னு மடிப்புத் தொண்ணூற் றாறுமாங் கரண நாலாம்
சோமப் பாலுண்டு கண்டு சொன்ன தாம் பாணித் தானம்
நாமிப்பால் பதின்மூன் றென்று நாட்டுநூல் நவர சங்கேள்.

உத்புலிதக்கரணங்கள் முப்பத்தாறு; தாம் என்னும் அடிப்பு தொண்ணூற்றாறு; கரணங்கள் நான்கு; பாணித்தானம் பதின் மூன்று; இனி, நவரசங்கள்.

நவரச மொன்ப தாகு நடனதாண் டவநூற் றெட்டாம்
தவமிகு மேகக் கூத்தைச் சார்ந்திடி லாற தாகும்
பவமறு பிரமக் கூத்தின் பேதமோ பதின்மூன் றாகும்
கவனமாம் பலகோ லங்க ளெட்டெனக் கருது நூலே. 25

நவரசம் ஒன்பது; நடன தாண்டவம் நூற்றெட்டு; ஏகக் கூத்தைச் சார்ந்திடில் ஆறுகும்; பிரமக் கூத்தின் பேதங்கள் பதின்மூன்று; பல கோலங்கள் (பலவகைக் கூத்துக்கள்?) எட்டு என்று நூல் கூறும்.

கருது நூ லகமார்க் கங்கள் கட்டளை விதம னேகம்
சுருதியா லறிந்த தாதித் தொழிலதும் பலவ தாகும்
மறுதொழில் முநிந்து நின்ற துத்தீப னமதே யாகும்
பருதியாம் பரத நூலின் பாயிர முரைத்த தின்றே. 26

அகமார்க்கங்களும் கட்டளை விதங்களும் பலவிதம்; வேதங் களினுல் அறியப்பெற்றனவும், ஆதித்தொழிலவையான அவை பல. மறு தொழில்கள் முடிந்து நின்றவை உத்தீபனம் எனப்படும்.

5. நாட்டிய விவரம்

உரைத்திட்ட நாட்டியந்தா னுயரதி ரசசிங் காரம்
இருத்திட்ட மாமநிற் றெளிந்தநிர்த் தனம னேகம்
விரித்திட்ட நிர்த்த னந்தான் அபிநய மெனவிளம்பும்
குறித்திட்ட வபிநயங்க ளாவது கூறக் கேளே. 27

சொல்லப்பட்ட நாட்டியம் ரசங்களுள் உயர்ந்ததான சிங்கார ரசம் பொருந்தியதாகும். அந்நாட்டியத்துள் அமைந்த நர்த்தனங்கள் அனேகம். நர்த்தனம் என்பது அபிநயம். இனி அபிநயங்களைப் பற்றிக் கூறுவோம்;

6. அபிநய விவரம்

கூறக்கேள் பிறந்த கீதப் பிரபந்தங்க ளின்கு றிப்பின்
சாரத்தைச் சபையோர்க் கெல்லாந் தருணம றிச்சி யாகப்
பேரொத்த பாத்தி ரந்தான் பிரியமா யபிந யித்துச்
சீரொத்துக் காட்டு கின்ற செழிப்பபி நயம தாமே. 28

---

27. இச்செய்யுள் நாட்டியம், நர்த்தனமென்னும் அபிநயம் ஆகிய இவற்றின் தன்மைகளைக் கூறுகிறது.

நாட்டியம்:

இங்கு நாட்டியம் சிருங்கார ரசம் பொருந்தியது எனக் கூறப் பெற்றிருக்கிறது. நான்குவித அபிநயங்களும் சேர்த்துக் காட்டுவது நாட்டியம் என்று இந்நூல் முன்பு கூறியுள்ளது.

தோன்றிய கீதப் பிரபந்தங்களின் குறிப்பின் சாரத்தைச் சபையோர்க்கெல்லாம் பார்க்கும்போதே மகிழ்ச்சியுண்டாகும்படி பாத்திரமானவள் பிரியத்துடன் அபிநயித்தும் தாளத்துக்கொத்தும் காட்டுகின்ற வள்மே அபிநயம் என்பதாகும்.

சீர் - தாளம் ; சிறப்பு என்றும் கொள்ளலாம்.

இனி, நாட்டியம் முதலிய சொற்களைப் பற்றிப் பிற நூல்கள் கூறுவன :—

1. தசரூபகம் (I 7–13).

நாட்டியம் (Drama) நிலைமைகளினுடைய போலி.

நிருத்தியம் (Pantomime) பாவங்களை ஆச்ரயித்திருப்பது.

நிருத்தம் (Dance) தாளலயங்களை ஆச்ரயித்திருப்பது.

2. அபிநயதர்ப்பணம் (கோஷ், 15–16).

நாட்டியம் அல்லது நாடகம் பழங்கதையைக் கொண்டது.

நிருத்தம் அபிநயத்தால் பாவங்களைப் புலப்படுத்தாதது.

நிருத்தியம் இரஸபாவங்களைச் சூசிப்பது.

3. சிலப்பதிகாரம்—

நாட்டியம் என்பது புறநடம் (பக். 76).

நாடகம் கதை தழுவி வருவது (பக். 2, 20, 80).

நிருத்தம் தாண்டவம் நிருத்தம் நாட்டியம் என்பன மூன்று கூறு பாடுகள் (பக். 76).

4. பரதசேனுபதீயம் (பக். 25–27).

நடனம் நாட்டியம் தாண்டவம் நிருத்தியம்
நிருத்த மைவகைச் சத்தியி னிமித்தம்
ஆதியின் மூனைவ ஞடி யருளினன் (33)

ஆடூஉ, மகடூஉ வேடமிட்டு நடிப்பதை நடனம் எனவும், பெண்புருட வேடமிட்டு நடிப்பதை நாட்டியம் எனவும், புருடன் புருடனுகவே நடிப்பதை நிருத்தியம் எனவும், பெண் பெண்ணுகவே நடிப்பதை நிருத்தம் எனவும், பரமசிவமே தாண்டவாதிபதி எனவும் கூறுவாருமுளர்.

28. அபிநயம் என்ற சொல்லுக்கு நாட்டிய சாஸ்திரம் (viii–6) கூறும் பொருள் பின்வருமாறு :—

'அபி என்னும் உபஸர்க்கத்தை முன்னே கொண்ட நீ என்ற வினைப்பகுதிக்கு 'நாடகத்தின் பிரயோகத்தை அதன் தாத்பரியம்

21651

நான்குவித அபிநயம்

ஆமபி நயங்கள் நான்கா மதின்வகை யேதென் றோதில்
சேமமாங் கீக மென்றும், செப்புவா சீக மென்றும்,
பூமதா காரிய மென்றும், பொருந்துஞ்சாத் வீக மென்றும்,
நாமங்க ளின்னும் வேறாய் நவின்றது நூலின் பாங்கே. 29

அவ்வபிநயங்கள் நான்கு வகைப்படும். அவை ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், சாத்விகம் என்னும் பெயர்களையுடையனவாம்.

பாங்காகு மபிந யத்தின் பான்மையாய் விளங்கு மந்த
ஆங்கீக மதுவே சாயி அமைத்தவா சிகசஞ் சாயி
ஓங்குமா காரி யந்தா னுயரனு சாயி யாகும்
சாங்கமாஞ் சாத்வி கந்தான் விபசாயி யெனவே சாற்றும்.

இவ்வபிநயங்களுள் ஆங்கிகம் சாயி என்றும், வாசிகம் சஞ்சாயி என்றும், ஆகாரியம் அநுசாயி என்றும், சாத்விகம் விபசாயி என்றும் கூறப்படும்.

விளங்குவதற்காகத் தூக்கிச் செல்வது எதுவோ அது அபிநயமாகும்' என்றது. (அபிநயம் - முன்னே செலுத்துவது).

பாத்திரங்களின் (உடல், மனம் இவற்றின்) நிலைமைகளைத் தோற்றுவித்தல் அபிநயம் என்பது ஸாஹித்யதர்ப்பணம் (vi. 2).

ரஸ பாவங்களைத் தோற்றுவிப்பதற்குரிய அசைவுகள் அபிநயம் என்பது மல்லிநாதரின் கிராதார்ஜுநீயத்தின் உரை (x. 42).

சிலப்பதிகாரம்—

அபிநயமென்றது பாவகம்; அஃது இருபத்துநான்கு வகைத்து (பக்- 85).

29. அங்கங்களினாலே அபிநயிக்கப்படுவது ஆங்கிகம்; சொற்களாலே விளக்குவது வாசிகம்; இது காவிய நாடகங்களிலே இடம் பெறுவது; ஹார, கேயூர, வேஷாதிகளால் செய்யப்படுவது ஆஹார்யம்; ஸாத்விகம் முதலான பாவங்களாலே நிறைவேற்றுவது சாத்விகம்.

இந்நூலின் 31-ஆம் செய்யுளையும் காண்க.

சாற்றுமாங் கீக மென்ற சரீரத்தி னபிந யங்கள்
ஏற்றிடு வாசி கந்தான் வாக்கபி நயமென் றேற்கும
தோற்றுமா காரி யந்தான் அலங்காரஞ் சாத்வீ கஞ்சொல்
தேற்றமா நடன பாவ லயமபி நயமாஞ் சாற்றும். 31

ஆங்கிகம், சரீரத்தால் செய்யப்படும் அபிநயங்களாம்; வாசிகம் வாக்கினுல் செய்யப்படும் அபிநயங்கள்; ஆகாரியம் அலங்காரங்கள்; சாத்விகம், நடனபாவம், லயம் ஆகியவை.

ஆங்கிகாபிநயம்

ஆங்கிகா வபிநயம் மீரா ரூகும் பேதங் கேளாய்
பாங்கதா மங்க காரம் சிரோபேதம் பாத சாரி
தாங்குதாண் டவத்தி னோடே தானப் பிரமணஞ் சேர்ந்து
தீங்கிலாக் கரண மஸ்தம் நேத்திர பேத மற்றும். 32

ஆங்கிகாபிநயம் பன்னிரண்டாகும். அவற்றின் பேதங்களைக் கேட்பாயாக. அவை, அங்ககாரம், சிரோபேதம், பாதசாரி, தாண்டவம், தானப்பிரமணம், கரணம், அஸ்தம், நேத்திரபேதம்;

ஓதுமே பேத மின்னும் உருசர சக்தி யோடே
மாதுடை சப்த நாட்யம் மண்டல மாகும் பின்னும்
தீதிலாப் பேத மாகும் தேசிக கதியா மென்றும்
பேதத்தி லாங்கி கனான் காம்விதம் பேசும் பாரே. 33

உருசரசக்தி, சப்தம், நாட்டியம், மண்டலம். பின்னும் தேசிக கதி என்ற பேதத்தில் ஆங்கிகாபிநயம் நான்கு விதமாகவும் பேசப்படும். (அவற்றை அடுத்த செய்யுளுட் காண்க.)

இவ்வாங்கிகாபிநயத்தின் நான்குவகை

ஆனசூ சிகம தென்றும், பாவாபி நயமி தென்றும்,
ஞானஞ்சேர் தொந்த மென்றும், லாட்சணி கமதா மென்றும்,
தேனுறு மொழியி னோளே செப்புமிவ் வகையாம் நாலில்
பூணவே முதலிற் சூசி கத்திற்குப் புகலு நூலே. 34

அந்நால்வகைகள் சூசிகம், பாவாபிநயம், தொந்தம், லாட்சணிகம் என் பவையாம்.

இவற்றுள் சூசிகம் முதலிற் கூறப்படும்.

31-32. ஆங்கிகாபிநயம் (1) அங்காபிநயம் (2) ப்ரத்யங்காபிநயம் (3) உபாங்காபிநயம் என்று 3 வகையாகவும் கூறப்படும். இவற்றின் விவரங்களைப் பின் 58-60 செய்யுட்களிற் காண்க.

சூசிகாபிநயம்

சாருமே சூசி கந்தான் தாவர சங்க மத்தில்
பேருறு மெவற்றை யேனும் பிசகாமற் கைகால் தன்னுல்
நேரதா யபிந யத்து நிச்சய மாகக் காட்டித்
தேரிய வாக்கி னுலே சொல்லிக்காட் டுவதாய்ச் செப்பே. 35

சூசிகம் என்பது, தாவர ஜங்கமங்களில் எவற்றையேனும் கைகளாலும் கால்களாலும் பிசகாமலும் நிச்சயமாகவும் அபிநயத்துக் காட்டியும் வாக்கினுல் சொல்லிக் காட்டியும் செய்வதாகும்.

பாவாபிநயம் ; தொந்தாபிநயம்

பாவாபி நயமே யாருந் தலைகண்ணுற் பாவங் காட்டும்
நீவிய தொந்தஞ் சென்னி நேத்திரம் பாதங் கையால்
யாவருந் தெரியக் காட்ட லாமதன் விதங்கள் மூன்று
ஆவாக்ய பாவி கத்தோ டனுபாவிக தொந்த மொன்றே. 36

தலையாலும் கண்களாலும் பாவங்களைக் காட்டுவது பாவாபிநயமாகும். தலை, கண், பாதம், கை ஆகியவற்றுல் யாவருக்கும் தெரியக் காட்டல் தொந்தாபிநயம் ; அதன் வகைகள் மூன்று :—அவை ஆவாக்யதொந்தாபிநயம் ; பாவிகதொந்தாபிநயம் ; அநுபாவிக தொந்தாபிநயம் என்பனவாம். அவை வருமாறு.

ஆவாக்யதொந்தாபிநயம்

சொல்லுமா வாக்கி யத்துத் தொந்தமாம் பாட கன்தான்
மெல்லவே பாடும் போது மெல்லிய ருசித மாகச்
சில்லெனப் புளகங் கொள்ளத் திறமாக நடிப்ப தென்றே
வில்லெனும் புருவ மாதே ! விண்டனர் நூல்வல் லோரே. 37

ஆவாக்கிய தொந்தாபிநயம் என்பது பாடகன் மெதுவாகப் பாடிக்கொண்டிருக்க, நடிகை உசிதமாகவும், ஜில்லெனப் புளகாங்கிதம் கொள்ளும்படியாகவும், திறமாகவும் நடிப்பதாகும். இவ்வாறு பரத நூல் வல்லோர்கள் கூறினர்.

பாவிகதொந்தாபிநயம்

பாவிக தொந்த மென்னப் படுவது சென்னி யுங்கண்
மேவுமற் றெதனு லேனு மெல்லியர் பாடிக் கொண்டு
பாவலர் மகிழ வாடும் பயனென வோதும் நூலில்
கூவிளங் கனியை யொத்துக் குவிந்தகற் றனத்தி னுளே. 38

பாவிகதொந்தாபிநயம் என்பது, நடிகையர் பாடிக்கொண்டு, தலையாலும் கண்ணாலும் மற்று வேறு எதனாலும் கவிஞர்கள் மகிழ, ஆடுவது என்று நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

அநுபாவிக தொந்தாபிநயம்

அனுபா விகத்தொந் தந்தா மாவது பாடு வானும்
வனிதையுஞ் சேர்ந்து பாடி வளர்சிரங் கண்கை கால்கள்
எனுமங்கங் களினால் நன்று யிணங்கவே யபிந யித்தல்
வினவிய பரத நூலில் விண்டன ரறிந்து கொள்ளே. 39

அநுபாவிகத் தொந்தாபிநயம் என்பது பாடுகின்றவனும் ஆடுபவளும் சேர்ந்து பாடி, தலை, கண், கை, கால்கள் என்னும் அங்கங்களினால் பாடலும் ஆடலும் ஒன்றோடொன்று இணங்கும்படி ஆடுதலாகும் என்று பரதநூலார் கூறினர்.

இலாட்சணிகாபிநயம்

இயல்புலாட் சணிக மாவ தேதெனி லுலகி லுள்ள
சுயமதாம் வஸ்து நாமம் சொல்லாம லிதுதா னென்று
பயனதை யாருங் கண்டு பாவனை கொள்வ தாக
நியமமா முருவங் காட்டி நேர்பிடித் திடலா மென்னே. 40

இலாட்சணிகாபிநயம் என்பது உலகிலுள்ள சுயமான வஸ்துக்களின் பெயரை இன்னதென்று கூறாமல், யாரும் கண்டு அறிந்து கொள்ளும்படி, பாவனைகளை அவற்றிற்கேற்ற உருவங்களைத் தோற்றுவித்து ஆடுவதாகும்.

சுத்தலாட்சணிகாபிநயம்

சுத்தலாட் சணிக மேலே சொல்லும்வஸ் துக்க ளுக்கு
வைத்திடு நாமஞ் சொல்லி வளம்படப் பிடித்துக் காட்டல்
நித்தம தாகு மென்று நேர்படப் பரத நூலோர்
வித்தக மொழி யினாலே விண்டனர் கண்டு தேறே. 41

சுத்தலாட்சணிகாபிநயம் மேலே கூறப்பட்ட வஸ்துக்களுக்கு வைக்கப்பட்டுள்ள பெயர்களைச் சொல்லி வளம்படப் பிடித்துக் காட்டல் என்று பரத நூல்கள் கூறும்.



வாசிகாபிநயம் நான்குவகை

சுகீத வாசிகம்

ஒதுசு கீத வாச்ய முபகீத வாச்ய முஞ்சோந்
தோதுசு சப்த வாச்ய முபசப்த வாசி கம்மென்
நீதிற்சு கீத வாச்ய மாகு மினிதாம் பாத்திரம்
கீதத்தைத் தானே பாடிக் கொண்டபி நயத்தற் கென்னே.

வாசிகாபிநயம் நான்கு வகைப்படும். அவை, சுகீத வாசிகம், உபகீதவாசிகம், சுசப்த வாசிகம், உபசப்தவாசிகம் என்பனவாம். இவற் றுள் சுகீதவாசிகாபிநயம், பாத்திரமானவள் கீதத்தைத் தானே பாடிக் கொண்டு அபிநயித்தல்.

உபகீத வாசிகம் சுசப்த வாசிகம்

உபகீத வாசி கந்தான் ஒதுமே பாட கன்தான்
சபைமெய்க்கப் பாடும் போது தையல ரபிந யித்தல்
விபுலமாம் சுசப்த வாச்ய மெல்லியர் கணிப்பித் தேதான்
சுபமதாய் நடனஞ் செய்வ தாமெனச் சொல்லு நூலே. 43

உபகீதவாசிகாபிநயமாவது, பாடகன் சபை மெச்சும்படி பாடும் போது தையலர் அபிநயித்தல்; சுசப்தவாசிகம் என்பது அவள் கணிப் பித்துக்கொண்டே நடனம் செய்வதாம்.

உபசப்த வாசிகாபிநயம்

வருமுப சப்த வாச்ய மாவது நட்டு வன்ரூன்
திறமதாய்க் கணிப்பப் பாத்ர மாடியே யபிந யித்தல்
தருமெனப் பரத நூலோர் தரணியி லறிய முன்னுள்
மருவிய முலியி னோளே வகுத்தன ரறிந்து கூறே. 44

உபசப்தவாசிகாபிநயம் என்பது, நட்டுவன் திறமாகக் கணிக்கப் பாத்திரம் ஆடி அபிநயித்தல். இவ்வாறு முன்னுளில் பரத நூலோர் வகுத்தனர்.

ஆகாரியாபிநயம் மூன்று வகை

நிஜாகாரியாபிநயம்

ஆகாரி யபிந யந்தான் அங்கத முடியு மார்ப
டாகையாந் தட்டிச் சல்ல டம்முலக் கச்சு மற்றும்
வாகுள் அரைஞா ணென்னுந் திகழ்பணி சிறக்க வாடற்
காகுமே யிதற்குச் சொல்லு நிஜாகாரிய மென்னும் பேரே.

42. வாச்யம், வாசிசம், இங்கு ஒரு பொருளன.

ஆகாரியாபிநயம் என்பது, அங்கதம், முடி, மார்புப் படாகை தட்டிசீ சல்லடம், முலீலக்கச்சு, அரைஞாண், என்று சொல்லப்பட்ட ஒளி பொருந்திய ஆபரணங்களைச் சிறப்பாக அணிந்துகொண்டு ஆடுவதாகும். இது நிஜாகாரியாபிநயமாகும்.

அபிசாரி ஆகாரியம்

இதிலபி சாரி யென்னு மாகாரிய விலக்க ணந்தான்
மதியெனத் துலங்கு மோரா மாயண நாட கங்கள்
முதலான தற்கு வேடம் பூண்டாடு வதென மூட்டுங்
கதிரெனு மொழியி னுளே கருதுமிந் நூலிற் றானே. 46

பொங்குகிற ஒளிபோன்ற சொற்களை உடையவளே! அபிசாரி என்னும் ஆகாரியத்தின் இலக்கணமாவது, இராமாயண நாடகங்கள் முதலானவற்றிற்கு ஏற்றபடி வேடங்கள் பூண்டு ஆடுவதாகும்.

வியபிசாரி ஆகாரியம்

விபசாரி யபிந யந்தான் விள்ளுமந் தந்தத் தேசச்
சபைகொளப் பலவா நாட்டி யங்கட்குச் சாதி நேராய்
உபமானத் தோடே ராமா யணமுதல் நாட கங்கள்
உபயோகப் படவே காட்டற் குற்றபூ ஷணங்க ளென்னே.

விபசாரி ஆகாரிய அபிநயம் என்பது அந்த அந்த நாட்டுச் சபையோர் ஏற்றுக்கொள்ளும்படி, பலவகை நாட்டியங்களுக்கு ஒத்த உபமானங்களோடு சாதி ஒத்து அமையும்படி இராமாயணம் முதலான நாடகங்களை நடித்துக் காட்டுவதற்கு உகந்த பூஷணங்கள் அணிந்து ஆடுவதாகும்.

சாத்விகாபிநயம் இரண்டு வகை

சாட்சுஷியசாத்விகம் வியஞ்சகசாத்விகம்

சாத்விக வபிநயஞ் சாட்சு ஷியவியஞ் சகம தென்று
போற்றிடு மிருவி தத்தி லெண்ணுஞ்சாட் சுஷந்த னக்குப்
பாத்திரங் கண்ணி னுல பிநயித்தல் வியஞ்ச கந்தான்
நேத்திரந் தலீல ளாலே நேரபி நயப்ப தாமே. 48

சாத்விகாபிநயம் இருவகைப்படும்; அவை சாட்சுஷிய சாத்விகம், வியஞ்சக சாத்விகம். சாட்சுஷியம்: பாத்திரம் கண்ணினால் அபிநயித்தலாகும்; வியஞ்சகம்: கண், தலீல இவற்றினாலே அபிநயித்தல்.

7. விருத்தி

சித்த விருத்தி

செப்பிய நாட்டி யந்தான் செய்வதிற் பலபே தங்கள்
அப்பெனுஞ் சித்த விர்த்தி யாமாம்பா வியவி ருத்தி
இப்படிக் காகுஞ் சித்த விருத்தியி னியல்பா முற்றும்
ஒப்பிய ரசத்தைக் காட்டு முயர்முகந் தனிலென் பாரே. 49

கூறப்பட்ட நாட்டியத்தைச் செய்வதில் பல பேதங்கள் உண்டு; அவை சித்த விருத்தி, பாவிய விருத்தி என இருவகையாகும். சித்த விருத்தியின் இயல்பாவது, இரசத்தை முகத்தினில் காட்டுவது என்பர்.

பாரேநீ சிங்கா ரத்தை மனதுட்பா விக்கும் போது
சீரான முகத்திற் றோன்றுஞ் சிறந்தவீ ரத்தை யென்றும்
கோராரும் வதன பாவம் நினைத்திடல் சோகந் தன்னை
வேரூகா ததுபோ லாகுஞ் சித்தத்தின் விருத்தி தானே. 50

சிருங்காரத்தை மனத்துட் பாவிக்கும்போது அது முகத்தில் தோன்றும்; வீரத்தையும், சோகத்தையும் அவ்வாறே முகம் காட்டும். இதுவே சித்த விருத்தி.

பாவிய விருத்தி

விருத்தியாம் பாவி யத்தை விளம்புநூ லெவருங் காணத்
திருத்தமாம் வார்த்தை யாலே சிறந்திடும் பொருளை யெல்லாம்
உறுப்பெனு மபிந யத்தா லுகந்ததைப் பிரித்துக் காட்டி
னருத்தின்மீ தேறு மீச னியற்றும்பா வியமி தாமே. 51

பொருள்களை யெல்லாம் திருத்தமாயுள்ள சொற்களாலே யாவரும் தெரிந்துகொள்ளும்படி செய்தல் பாவிய விருத்தி யென்று நூல் கூறும். உறுப்புக்களினாலே அபிநயிக்கப்படும் கருத்தைப் பிரித்துக் காட்டுவதற்கு இது ஆகும். இவ்வாறு இடபவாகனனை சிவபெருமான் இப்பாவியத்தைச் செய்தருளினன்.

8. நாடகம், நிருத்தம், நிருத்தியம்

நாட்டியம் நிருத்தம் நிர்த்தியம் நவிலுமூ விதமாம்
பூட்டிய நாட கத்தில் பூருவ கதைக டன்னைக்
காட்டியே யபிந யித்தற் காமெனப் பரத நூலோர்
வாட்டமில் லாமற் சொன்ன வகையிதை யறிந்து கொள்ளே.

நிருத்தமாம் ரசபா வத்தை நீக்கிய வடைவி னலே
பொருத்தவின் யாசந் தாள லயந்தனைப் பொருந்தக் காட்டல்
நிருத்தியம் ரசபா வங்கள் நேர்கூட்டி விநியோ கித்தல்
திருத்தம தாகு மென்று செப்புமிம் மூன்றுஞ் சேர்ந்தே. 53

நாட்டியம், நிருத்தம், நிருத்தியம் என்று கூறப்படும் வித்தங்கள் மூன்றுங் கூடிய நாடகத்தில் பழைமையான கதைகளைக் காட்டி அபிநயித்தல். நிருத்த மென்பது ரஸ பாவங்களை நீக்கி அடைவு களினலே பொருத்தப்பட்ட விந்யாசம், தாளம், லயம் ஆகியவற்றைப் பொருந்தக் காட்டுதல். நிருத்தியம் என்பது ரஸ பாவங்களைக் கூட்டி அபிநயித்தல்.

9. தாண்டவம் லாஸ்யம்

தாண்டவ லாஸ்ய மென்ன விருவகை யாகச் சாற்றும்
தாண்டவந் தனிலுத் தான தாண்டவ மெனவோர் கூறும்
தூண்டிய லாசி யத்திற் சுகுமார லாசிய மென்றும்
வீண்டறி தற்சுாய்ச் சொன்ன விவரத்தை யறிந்து கொள்ளே.

உத்தானதாண்டவம் சுகுமாரலாசியம்

நிரையுமுத் தான தாண்ட வமதாகின் றபிந யித்தல்
உரைசகு மார லாசிய மூட்கார்ந் தபிந யித்தல்
முறையாகு மென்று ரைத்தார் மூதறி வுடைய மேலோர்
திரைகொளு முததி தன்னிற் செழித்தசெங் கமல மாதே. 55

தாண்டவம், லாஸ்யம் என்று (நாட்டியம்) இருவகையாகச் சொல்லப்படும். தாண்டவத்தில் உத்தானதாண்டவம் என்பது ஒரு கூறு. அது நின்று அபிநயித்தலாகும். லாஸ்யத்தில் சுகுமாரலாசியம் என்பது ஒரு கூறு. இது உட்கார்ந்து அபிநயித்தல்.

54–55 சிவபெருமான் தம் மேன்மையான நாட்டியத்தை நினைவு படுத்திக்கொண்டு தம் கணங்கள் மூலமாகப் பரதமுனிக்கு அதனை உப தேசிக்கச்செய்தார். இதற்குமுன் பார்வதி மூலமாக அவருக்கு லாஸ்யத் தைப் போதிப்பித்தார். தண்டு ரிஷியினிடமிருந்து தாண்டவத்தைக் கற்றுக்கொண்டு ரிஷிகள் மானிடர்களுக்கு அதனைக் கற்பித்தார்கள். பார்வதி லாஸ்யத்தை உஷைக்குச் சொல்லிக்கொடுத்தாள்.

(அபிநயதர்ப்பணம் : கோஷ் : 2-7)

" தாண்டவம் நிருத்தம் நாட்டியமென்னும் மூன்று கூறுபாட்டினும் நாட்டிய மென்பது புறநடத்தை "

' சிலப். 3 : 158, உரைகள் '

10. வெகுவான அபிநயம், அற்பமான அபிநயம்

ஆங்கிகா வபிந யத்தில் வெகுவென்று மற்ப மென்றும்
பாங்காகும் வெகுவே தென்னில் பண்பாஞ்சா லீயக்கை ரண்டும்
நீங்காமற் காட்டும் போது நேர்வாணு சூரன் கைபோல்
தாங்கா தனேக மாகத் தான்காட்டல் வெகுவாம் பாரே. 56

என்றதோ ரற்பம் தன்னே யியம்புதா லெவருங் காணச்
சென்றதோர் பொருளு மின்னஞ் சேர்பொரு டனேயு மாங்கே
நின்றதோர் வர்த்த மான பொருளேயு நேர்மை யீதென்
றென்றிச்சூ சனேய தாக வுகந்திதைக் காட்டு மற்பம் 57

ஆங்கிகாபிநயத்தில் வெகுவானஅபிநயம் அற்பமான அபிநயம் என்று இரண்டு வகைகள் உண்டு. அவற்றுள் வெகுவான அபிநயம் யாதென்றால், இரண்டு கைகளையும் விடாமற் காட்டும் போது, வாணுசுரன் (ஆயிரம்) கைகளைப்போல் அநேகம் கைகளாகக் காணும்படி அபிநயித்தல். அற்பமான அபிநயம் என்பது இறந்தகாலம், வருங்காலம், நிகழ்காலம் ஆகிய முக்காலங்களில் பொருள்கள் நிற்கும் நிலைமை இன்தென்று குறிப்பால் அறியும்படியாகக் கைகளைக் காட்டுதலாகும்.

11. திரியாங்கம்

அங்கங்கள்

காட்டிய திரியாங் கத்தின் தொகைபேதங் காண முன்னம்
தேட்டமா மொவ்வொன் றிற்கே சேரவ யவங்கள் சொல்லும்
காட்டமா மங்கத் திற்கு நவில்சிரம் விரல்கை மார்பு
கூட்டிடைப் பக்கம் பாத மேழெனப் பிரித்து நூலே 58

திரியாங்கத்தின் (அங்கம், பிரத்தியாங்கம், உபாங்கம் இவை திரியாங்கம் எனப்படும்) பேதங்களைக் கூறுவோம். அங்கங்கள் தலை, விரல், கை, மார்பு, இடை, பக்கம், பாதம் என்று ஏழு.

பிரத்தியாங்கங்கள்

கூறுமே பிரத்தி யாங்கங் குறிப்பதாம் புயங்க ழுத்து
தேறிய வயிறு மணிக்கட் டிருதுடை முழந்தாள் செப்பும்
மாறுகேள் கணைக்கா லோடு முதுகின்பா கத்தைச்சேர்த்துக்
கோரிய பூஷ ணுதி கூட்டிய தொன்பான் பாரே. 59

பிரத்தியாங்கங்கள்—புயம், கழுத்து, வயிறு, மணிக்கட்டு, இரு துடைகள், முழந்தாள், கணைக்கால் இவற்றோடு முதுகையும் கூட்டி, பூஷணுதிகளையும் சேர்த்து ஒன்பது என்று கூறுவார்கள்.

உபாங்கங்கள்

மேன்மையா முபாங்கந் தன்னை விளம்புமே விழிக போலம்
தானிமை புருவத் தோடு நாசியுஞ் சுவாசந் தந்தம்
தேன்பயி லதர நாக்கு மோவாயுஞ் சோதி சேர்ந்த
வான்பயி லரிநே ரான வதனத்தோ டிரா றென்றே. 60

உபாங்கங்கள் விழி, கபோலம், இமை, புருவம், நாசி, சுவாசம், பல், அதரம், நாக்கு, மோவாய், அரி, (தோள் ?) வதனம் ஆகிய பன்னிரண்டென்று கூறுவர்.

முகவுரை முற்றும்

58-60 : நாட்டிய சாஸ்திரம் (viii : 13) அங்கம் என்பன தலை, கைகள், மார்பு, பக்கம், இடுப்பு பாதம் என்னும் ஆறென்றும், உபாங்கம் என்பன கண்கள், புருவங்கள், நாசி, கீழ் உதடு, கன்னம் ஆகிய ஆறென்றும் கூறும்.

அபிநயதர்ப்பணம் (கோஷ். 42 49) அங்கம் என்பன தலை, கைகள், மார்பு, பக்கம், இடுப்பு பாதம் என்ற ஆறென்றும் அதனோடு கழுத்தையும் கூட்டி ஏழாகவும் சொல்வார்கள் என்றும் ; பிரத்யங்கம் தோள்பட்டை புஜம், முதுகு, வயிறு, துடை, பிருஷ்டம் ஆகிய ஆறென்றும் அவற்றோடு மணிக்கட்டும், முழங்கை, முழங்கால் இவற்றையும், கழுத்தையும் கூட்டிப் பிறர் உரைப்பரென்றும், உபாங்கம் தோள், கண்கள், புருவம், விழி, கன்னம், நாசி, தாடை, உதடு, பல், நா, முகவாய், முகம் இவற்றைக் கூட்டிப் பன்னிரண்டென்றும் இவற்றோடு குதிகால், மணிக்கட்டு, கரல் விரல், கைவிரல்கள் இவற்றையும் கூட்டி உரைப்பரென்றும் கூறுகிறது.

அவயவபேத நிரூபணம்

1. சிரோபேதப் பிரகரணம்

சிரமுதற் சமமா முத்வா கிதமதோ முகஞ்சி றந்த
தரமாலோ ளிதமாங் கம்பி தம்துதம் பராவி ருத்தம்
திரமாமுட் சிப்த மோடு பரிவா கிதம்நிகஞ் சிதம்சே
கரமாமஞ் சிதவி தூத மாதூதமாங் கருது நூலே. 61

கருதும வதுதத் தோட கம்பித மிசுகாந் தானம்
திரியக்க தான னந்தான் சிறந்திடு மராதி கம்பார்
மருவிய பார்சு வாபி முகம்சிரம் பதினெட் டொன்று.
சுருதியாம் பேத மென்னு மதின்வினி யோகஞ் சொல்லும்.

சிரோபேதங்களாவன ;—1. சமம், 2. உத்வாகிதம், 3. அதோ முகம், 4. ஆலோளிதம், 5. கம்பிதம், 6. துதம், 7. பரா விருத்தம், 8. உட்சிப்தம், 9. பரிவாகிதம், 10. நிகஞ்சிதம், 11. அஞ்சிதம், 12. விதூதம், 13. ஆதூதம், 14. அவதுதம், 15. அகம்பிதம், 16. இசுகாந்தானம், 17. திரியக்கதானனம், 18. அராதிகம், 19. பார்சுவாபிமுகம் என்று சிரோபேதங்கள் பத் தொன்பதாகக் கூறப்படும்.

இவ்வத்தியாயம் முதலில் நாட்டியத்தின் உபயோகத்துக்குரிய அவயவ பேதங்களின் இலக்கணங்களையும் அவற்றின் விநியோகங்களையும் கூறப் புகுகின்றது. அபிநயத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் யாவும் இப்பகுதி யையே விரிவாக விளக்குகின்றன. பரதசாஸ்திரம், பால்ராமபரதம், அபிநய தர்ப்பணம் என்ற பெயரால் ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ள நூல்கள் ஆகிய பலவும் இப்பகுதியை விளக் கும் முறைகளில் (இலக்கணங்களிலும், விநியோகங்களிலும்) ஒன்றிலுள்ள படியே பிரிதொன்றிலில்லாமல் பல அம்சங்களைக் கூட்டியும் குறைத்தும் சொல்லுகின்றன. அவற்றையெல்லாம் எடுத்தெழுதுவது பயன்படுமாயி னும், விரிவஞ்சி இங்கே காட்டப்படவில்லை. அச்சில் வெளிவராததும், மிகச்சுருக்கியதும், எம் நூல் நிலையச் சுவடிகளில் ஒன்று யுள்ளதுமான அபிநயதர்ப்பணம் என்னும் நூலிலிருந்தும், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்கள் சிலவற்றிலிருந்து மட்டுமே ஒப்புமைகளை இக் குறிப்புக்களில் காட்டத் துணிகின்றோம்.

61–62. நாட்டிய சாஸ்திரம் (viii. 17–18) 13 சிரசுகளையே கூறும். அவை, அகம்பித, கம்பித, துத, விதுத, பரிவாகித, உத்வாகித, அவதுத, அஞ்சித, நிஹஞ்சித, பராவிருத்த, உத்க்ஷிப்த, அதோகத, லோலித என்பவை.

1. சமசிரசு

சொல்லிய சமசி ரத்தின் ரெருகுப்பசை யாது நிற்றல்
கல்லதோர் விநியோ கந்தான் நடத்திடுந் தொழிலா ரம்பம்
எல்லையிற் பிரணய கோபத் திலுந்தம்பா காரந் தன்னில்
வல்லவ கருவத் தோடு நிராசையில் வருமென் பாரே. 63

இலக்கணம் : அசையாது நிற்றல்.

விநியோகம் : தொழிலாரம்பம் : எல்லையில்லாத பிரணயகோபம் : ஸ்தம்பித்திருத்தல், கர்வம், நிராசை.

2. உத்வாகிதச்சிரசு

பாருத்வா கிதஞ் சிரமேற் பார்ப்பது விநியோ கங்கேள்
மேருவின் முடியுஞ் சந்திரன் விண்ணுறு முடுக்க ளோடு
தேருரை கலசம் பட்சி சிறந்தெழுந் துவசத் தம்பம்
நேர்படப் பார்க்கும் போதாம் நிகழுதோ முகஞ்சொல் வாரே.

இலக். : தலையை மேலே தூக்கிப் பார்ப்பது.

அபிநயதர்ப்பணம் (தமிழ் 1)

வருசம முகத்தோ டுத்து வாகித முகமே யென்ப
விருமதோ முகமே யாலோ லிதமுகந் திதமுகந் தானே
பாவிருத் தங்கம் பிதஞ்சீர் பட்சமுட் சித்த மென்ப
பரிவாகி தத்தி னோடொன் பதுவகை சிரசு தானே.

1. ஸமசிரஸ் (ஒரேநிலையான தலை)

நாட்டிய சாஸ்திரத்தில் இச்சிரசு கூறப்படவில்லை.

அபி. த. (தமிழ் 2–3)

அலையாமற் கீழ்பால் மேல்பால் அடர்ப்பக் கங்களிற் சர்யாது
நிலையான தலையின் நாமம் நிகழ்த்தினர் சமமே யென்று
மலையாமல் வினியோ கங்கள் வழுத்தவே சேளாய் மாதே
பலவான கரும மாரம் பங்களுக் காகு மென்ப.

அருளில தாதற்குங் கூடும் ஆண்பெண்ணி னூட லுக்குந்
தருசபா ரம்பத் துக்குந் தம்பனங் களுக்கு மென்ப
வருகரு வங்க ளுக்கும் வழுத்தினர் சமமு கந்தான்
உரிமையராய்ப் பின்னோர் சென்னி உத்துவா கிதஞ் சொல்வாரே.

10. நிகஞ்சிதச்சிரசு

ஆசையாய்ப் பெரியோ ரைக்கண் டழைப்பதே யாகு மற்றும்
பேசுமே நிகஞ்சி தத்தோ ளிரண்டுமே லுயர்த்திப் பின்னும்
கூசிய கழுத்த மைத்தல் குறிப்பதா மயிர்க்கூச் சோடி
ராசியாய்த் தழுவிக் கூடில் நல்லசந் தோஷத் தென்னே.

இலக். : இரண்டு தோள்களையும் உயர்த்திப் பிறகு கழுத்தைக் கூசி அமைத்தல்.

விநி. : மயிர்க்கூச்சு ; தழுவிக்கூடல் ; சந்தோஷம்.

11. அஞ்சிதச் சிரசு

என்னவே முன்னோர் நூலி லியம்புவ ரஞ்சி தந்தான்
சென்னியோர் தோளிற் சாய்த்தல் சேர்விநி யோக மோகம்
தன்னி லும் விசாரஞ் சோகஞ் சஞ்சல மதிலா மேலோர்
நண்ணியே வரும்போ தாகும் நவில்விதூ தக்கூ றுகேளே

இலக். : தலையை ஒரு தோளில் சாய்த்தல்

விநி. : மோகம் ; விசாரம் ; சோகம் ; சஞ்சலம் ; மேலோர் நெருங்கி வரும்போது.

12. விதூதச் சிரசு 13. ஆதூதச் சிரசு

விதூதமே தலைந டுக்கல் விதமது மத்ய பானம்
போதையி லவிழ்த்த முண்ணும் போதினிற் றிறமை யாகும்
ஆதூத மிருபு றம்பார்த் தப்புறம் மேலே பார்ப்ப
தோதுமாச் சரியஞ் சந்தோ டத்தி லுந் துலங்கு மென்னே

---

10. நிஹஞ்சிதசிரஸ்

நா. சா. (viii : 31) கழுத்து ஒருபுறம் சாய்த்து, இரு தோள்களையும் உயர்த்தல். கர்வம், விலாஸம், லலிதம், அலக்ஷியம். மயக்கம் போடுவது போல நடித்தல் ; அன்பினை வாய் பேசாமல் காட்டுதல் ; கோபங் கொண்டதுபோல் நடித்தல் ; மானம் ; இவற்றைக் கொண்ட ஸ்திரீயால் பிரயோகிப்பது.

11. அஞ்சிதசிரஸ் (வளைந்தது)

நா. சா. (viii : 29) தலையைச் சிறிதளவு ஒரு புறமாகச் சாய்த்தல். வியாதி, மூர்ச்சை, மத்தம் (மயக்கம்) கவலை, துக்கம்.

விதூதச்சிரசு.

இலக்: தலைநடுக்கல்.

விதி.: கள்குடித்தலால் உண்டான போதையில்; மருந்து உண்ணும்போது.

ஆதூதச்சிரசு

இலக்.: இருபுறமும் பார்த்துப் பின்மேலே பார்ப்பது.

விதி.: ஆச்சரியம்: சந்தோஷம்.

14. அவதுதச் சிரசு 15. அகம்பிதச் சிரசு.

அவதுத மிருபு றம்பார்த் தண்ணாந்து கீழே பார்ப்ப
தெவையெதி லென்பா யாகி லிருவெனுஞ் சைக்கி னைக்காம்
நவிலகம் பிதந்தான் சென்னி நலமூட னசைத்தல் வார்த்தை
செவையென வணக்கஞ் செய்யல் செப்புமே யிசுகாந் தானம்

அவதுதச்சிரசு.

இலக்.: இருபுறங்களிலும் பாத்து, அண்ணாந்து, கீழே பார்ப்பது.

விதி.: 'இரு' என்று சொல்லும் சமிஞ்ஞைக்கு.

அகம்பிதச்சிரசு.

இலக்.: தலையை அழகாக அசைத்தல்.

விதி.: பேச்சு, 'செவ்வையாயிருக்கிற' தென்று தலையசைத்தல்; வணக்கம் கூறுதல்.

---

12. விதூதசிரஸ்.

நா. சா. (vii: 24) *தலையை வேகமாக அசைத்தல். ஜலதோஷம்; பீதி, ஜுரம், குடியின் முதற்படி.*

13. ஆதூத சிரஸ்.

(நெதளவு உயரத்துக்கு வேகமாகத் திருப்புதல்).

காட்டிய சாஸ்திரத்தில் இல்லை.

14. அவதுதசிரஸ் (கீழ்நோக்கி யசைத்தல்).

நா. சா. (viii: 28) *தலையை ஒருமுறை கீழ்நோக்கி அசைத்தல். செய்தியனுப்புதல்; தேவ ஆவாஹனம்; சம்பாஷணை; ஒருவரை அருகில்வர அழைத்தல்.*

15. அகம்பிதசிரஸ் (மிதமாக அசைத்தல்).

நா. சா. (viii: 19–20) *தலையை மெதுவாக மேலும் கீழும் அசைத்தல். சமிஞ்ஞை காட்டல்; உபதேசம்; பிரச்னித்தல்: சுபாவமுறையில் அழைத்தல்; கட்டளையிடல்.*

16. இசுகாந்தானச் சிரசு. 17. திரியக்கதானனச்சிரசு.

இசுகாந் தானஞ் சென்னி யியல்புடன் றோளில் வைத்தல்
இசைவது தூக்க மந்த மினிநேச மூர்ச்சை யாகும்
திசைபுகழ் திரியக்க தானனந் திரும்பிப் பார்த்து
விசையுடன் மேலே நோக்கல் விதியோகங் கருவ மாமே.

இசுகாந்தானச்சிரசு.

இலக்.: தலையை இயல்பாகத் தோளில் வைத்தல்.
விதி.: தூக்கம்; மந்தம்; நேசம்; மூர்ச்சை.

திரியக்கதானனம்.

இலக்.: திரும்பிப் பார்த்து விசையுடன் மேலே நோக்கல்.
விதி.: கருவம்.

18. அராதிகச் சிரசு. 19. பார்சுவாபிமுகச்சிரசு

கருவம்விட் டராதி கத்தைக் கேள்சற்றே தோளை நோக்கி
மருவிய சிரநே ராக்கல் வகைபிறர் மனத்தைக் காணல்
பருவமாம் பார்சு வாபி முகமது பக்கம் நோக்கல்
தருணமாச் சரியந் தன்னிற் றுன்வருஞ் சிரம தாமே

அராதிகச்சிரசு.

இலக்.: சற்றே தோளை நோக்கிச் சாய்த்து, பிறகு அதனை நேராக்கல்.
விதி.: பிறர் மனத்தைக் காணல்.

பார்சுவாபிமுகச்சிரசு.

இலக்.: பக்கம் நோக்கல்.
விதி.: ஆச்சரியம்.

சிரோபேதப் பிரகரணம் முற்றும்

---

16. ஸ்கந்தாநதம், 17. திர்யக்கதாநநம், 18. ஆராத்ரிகம், 19. பார்ச்வாபிமுமம் இவை நாட்டிய சாஸ்திரத்தில் இல்லை.

குறிப்பு.

நாட்டிய சாஸ்திரத்தில் 13 சிரசுகளும், அபி. த. நெலுங்கில், முதலில் 9 சிரசுகளும் பிறகு 24 சிரசுகளுமாக 33 சிரசுகளும், ஆநந்தக்குமாரசாமி பதிப்பில் தெலுங்கிலுள்ளனபோலும், மனோமோஹன் கோஷ் பதிப்பில் 9 சிரசுகளும், தமிழில் 9 சிரசுகளும், இப்புத்தகத்தில் 19 சிரசுகளும் கூறப்பட்டுள்ளன.

திருஷ்டி பேதங்கள்

பாதருடைய நாட்டிய சாஸ்திரத்தின் எட்டாம் அத்தியாயத்தில் 37-ஆவது சுலோகம் முதல் 96 ஆவது சுலோகம் வரையில் திருஷ்டி லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன. அவை 36 ஆகக் கூறப்பட்டுப் பின்வரு மாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

I. (1) காந்தா: (2) பயானகா, (3) ஹாஸ்யா (4) கருணை, (5) அத்புதா, (6) ரௌத்ரீ, (7) வீரா, (8) பீபத்ஸா, ஆகிய எட்டும் ரஸதிருஷ்டிகள் (Sentiments).

II. (9) ஸ்நிக்தா, (10) ஹ்ருஷ்டா, (11) தீனை, (12) க்ருத்தா, (13) த்ருப்தா, (14) பயான்விதா, (15) ஜுகுப்ஸிதா, (16) விஸ்மிதா ஆகிய எட்டும் ஸ்தாயிபாவ திருஷ்டிகள் (Dominant States)

III. (17) சூன்யா, (18) மலினை, (19) சாந்தா, (20) லஜ்ஜான்விதா, (21) ம்லானை, (22) சங்கிதா, (23) விஷண்ணை, (24) முகுளா, (25) குஞ்சிதா, (26) அபிதப்தா, (27) ஜிஹ்மா, (28) லலிதா, (29) விதர்க்கிதா, (30) அர்த்தமுகுளா, (31) விப்ராந்தா, (32) விப்லுதா, (33) ஆகேகரா, (34) விகோசா, (35) த்ரஸ்தா, (36) மதிரா—ஆகிய இருபதும் சஞ்சாயிபாவ திருஷ்டிகள் (Transitory States).

பிறகு 95-102 ஆம் சுலோகங்களில் விழிகளின் அபிநயங்களை, (1) ப்ரமணம் (சுற்றிவருதல்), (2) வலனம் (திரும்புதல்), (3) பாடனம் (தர்ப்பித்தல்), (4) சலனம் (நடுக்குதல்), (5) ஸம்ப்ரவேசனம் (உள்ளுக்கு இழுத்தல்), (6) விவர்த்தனம் (பக்கத்தில் திருப்புதல்), (7) ஸமுத்வ்ருத்தம் (மேலே தூக்குதல்), (8) நிஷ்கிரமம் (வெளியே தள்ளுதல்), (19) ப்ரகிருதம் (இயற்கை) என ஒன்பதாகக் கூறி அவற்றிற்கு இலக்ஷணங்களும் விநியோகங்களும் அமைப்பர். இன்னும், ஸம, சாசி, அநுவ்ருதம், ஆலோகிதம், விலோகிதம், ப்ரலோகிதம், உல்லோகிதம், அவலோகிதம் ஆகிய எட்டுத் திருஷ்டிகளிலும் இவ்விழிகள் அமையும் முறையையும் கூறுவர். (103-107).

பிறகு 108 முதல் 115 சுலோகங்களில் விழிகளின் அபிநயங்களை 9 ஆகப்பகுத்தி, (1) உன்மேஷ (திறப்பு), (2) நிமேஷ (மூடல்), (3) ப்ரஸ்ருத (விரித்தல்), (4) குஞ்சித (சுருக்கம்), (5) ஸம (சமம்), (6) விவர்த்தித (உயரத்தூக்கல்), (7) ஸ்புரித (நடுக்கம்), (8) பிஹித (ஒய்ந்திருத்தல்), (9) விதாவித (ஒட்டப்படுதல்) ஆகக் காட்டுவர். அவற்றின் விநியோகங்களும் கூறப்படும்.

அபிநயதர்ப்பணம்.

தெலுங்குப் பதிப்பும் ஆரத்தக்குமாரசர்மி அவர்களின் பதிப்பும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. அவற்றின் விவரம்—,

பரதசாஸ்திரத்தில் எட்டு திருஷ்டி பேதங்களே கூறப்பட்டிருக்கின்றனவென்றும் அவை (1) ஸம, (2) ஆலோகிதம், (3) சாசி, (4) ப்ரலோகிதம், (5) நிமீலிதம் (6) உல்லோகிதம், (7) அநுவ்ருத்தம், (8) அவலோகிதம் என்பன வென்றும் கூறிக் கிரந்தாந்தரங்களில் பின்வரும் 44 திருஷ்டிபேதங்கள் காண்கின்றன என்றும் கூறி அவற்றிற்கெல்லாம் இலக்ஷணங்களும் விதியோகங்களும் காட்டப்பட்டுள்ளன. அவை ;

(1) ஸம, (2) ப்ரலோகித, (3) சிருங்கார, (4) ஸ்நிக்த, (5) உல்லோகித, (6) அத்புத, (7) கருண, (8) விஸ்மய, (9) த்ருப்த, (10) விஷண்ண, (11) பயாநக, (12) சாசி, (14) த்ருத, (14) வீர, (15) ரௌத்ர, (16) தூர, (17) இங்கித, (18) விலோகித, (19) விதர்க்கித, (20) சங்கித, (21) அபிதப்த, (22) அவலோகித, (23) சூன்ய, (24) ஹ்ருஷ்ட, (25) உக்ர, (26) விப்ராந்த, (27) சாந்த, (28) ப்ரீலித, (29) சூசன, (30) லஜ்ஜித, (31) மலின, (32) த்ரஸ்த, (33) ம்லாந, (34) முகுள, (35) குஞ்சித, (36) ஆகாச, (37) அர்த்தமுகுள, (38) அநுவ்ருத்த, (39) விப்லுத, (40) ஜிஹ்ம, (41) விகோச, (42) மதிர, (43) ஹ்ருதய, (44) லலித என்பனவாம்.

தமிழிலுள்ள அபிநயதர்ப்பணத்திலும், மனோமோகன் கோஷ் அவர்கள் பதிப்பித்த அபிநயதர்ப்பணத்திலும் முன்கூறிய எட்டு திருஷ்டி பேதங்களே கூறப்பட்டுள்ளன.

---

2. நயன பேதப் பிரகரணம்

ஆகுமே நயன பாவ மபிநய முப்பத் தாறும்
தோகையே சம்மாந் திர்ஷ்டி தொகுத்தவா லோகி தக்கண்
வேகமாஞ் சாசி யும்பி ராலோகி தக்கண் மீது
பாசஞ்சேர் நிமீலி தக்கண் பகருமுல் லோகி தக்கண் 77

கண்ணவ லோகி தத்தோ டநுவிர்த்தந் துரிதக் கண்ணும்
நண்ணுமே நயனஞ் சூச னதிவ்ஷ்டி யுக்தி ரக்கண்
திண்ணிய தூர திவ்ஷ்டி சீர்காந்தைக் கண்ணி னேடே
உண்ணும்ப யாந கக்கண் ணுடன்கரு ணைக்கண் ணுமே. 78

மேனிமூ டாம்ப கக்கண் மீதிலா மற்பு தக்கண்
பானுநேர் வீரக் கண்ணும் பகர்ந்திடு விகற்பக் கண்ணும்
தேனே விப்பி ராந்தக்கண் செப்பும்வி ஷாணக் கண்ணும்
மானேவிப் புலுதாக் கண்ணும் வளர்விதர்க் கிதாக்கண் ணுமே.

ஆமேதீ ஷக்கண் ணேடு மருள்திரஸ் தாக்கண் கிருஸ்து
கேமமா மிருட்டாக் கண்ணும் நீதிசேர் மலினி யென்னும்
சேமமா லளிதக் கண்ணுஞ் செப்புங்குஞ் சித்தக்கண் ணென்றும்
காமியே ஆசி யாக்கண் காணச்சு தாக்க ணென்றே. 80

தாக்குஞ்சங் கிதக் கண்ணுய்ச் சாற்றிமேல் மதக்கண் ணிற்கும்
பார்மூ வித்தப்பே ராகும் பகர்கரு ணைம தக்கண்
ணைக்குமத் திமமதக் கண்ண தருமம தக்கண் ணென்று
நோக்குமிக் கண்கள் போய் நுவலும் விதியோ கங்கேள். 81

நயன பாவ அபிநயம் முப்பத்தாருகும். அவை:— (1) சமம். (2) ஆலோகிதம். (3) சாசி. (4) பிரலோகிதம். (5) நிமீலிதம். (6) உல்லோகிதம், (7) அநுவிருத்தம், (8) அவலோகிதம், (9) துரிதம், (10) சூசனு, (11) உக்கிரம், (12) தாரம், (13) காந்தம், (14) பயாநகம், (15) கருணை, (16) மூடாப்பாகக்கண், (17) அற்புதம், (18) வீரம், (19) விகற்பம், (20) விப்பிராந்தக்கண், (21) விஷாணம், (22) விப்புலுதா, (23) வித்தர்க்கிதா, (24) தீனு, (25) திரஸ்தா, (26) கிரஸ்தா, (27) இருட்டா, (28) மலிநீ, (29) லளித, (30) குஞ்சித, (31) ஆசியா, (32) அச்சுதா, (33) சங்கித, (34) கருணைமதம், (35) மத்திமமதம், (36) அதருமமதம்.

1. சம திருஷ்டி.

இமையவர் போலே கண்க ளிரண்டுமூ டாமற் பார்த்தல்
சமதிஷ்டி விதியோ கங்கேள் தராசுநன் னாட்டியா ரம்பம்
அமலவின் டேவ ரூப மாச்சரி யங்க ளுக்கும்
விமலியே வேறோர் காரிய மேவு சிந்தைக்கு மாமே. 82

இலக்: தேவர்களைப்போல் கண்கள் இரண்டும் மூடாமல் பார்த்தல்,

விதி: தராசு, நாட்டியாரம்பம், ஆகாயம், தேவ உருவங்கள், ஆச்சரியங்கள், பிறர் காரியத்தை நினைக்கும் சிந்தை.

ஸமதிருஷ்டி (ஒத்த கிலை).

அபி. த. (தமிழ் 15) மேலுள்ளபாட்டே.

2. ஆலோகித திருஷ்டி.

நிகழ்சாடை யாய்ப்பிர மித்துத் திறத்துடன் சுழற்றிப்பார்த்தல்
பகருமா லோகி தக்கண் பற்றிய விதியோ கங்கேள்
சகலமும் பார்க்க வுங்குய வன்றிரிக் கைக்கு மிச்சை
மிகவா னதற்குஞ் சிந்தை மேவிய பிரமைக்குந் தானே. 83

இலக்: சாடையாய், பிரமித்துத் திறமையுடன் சுழற்றிப்பார்த்தல்.

விதி: சகலமும் பார்த்தல், குயவன் திரிசக்கரம், இச்சை மிக ஆனது, சிந்தையில் பொருந்திய பிரமை.

3. சாசி திருஷ்டி.

பாரிசங் களிற்கு றுக்கே பார்ப்பது சாசி திஷ்டி
நேருறும் விதியோ கங்கேள் நீட்டிய பார்வை கிள்ளை
ஏறுவீ சையை முறுக்க லிங்கிதஞ் சூச னைக்கும்
பாரவி சாரிக் கூத்து பாணவிலக் குக்குந் தானே. 84

இலக்: பக்கங்களிற் குறுக்கே பார்ப்பது.

விதி: நீட்டிய பார்வை; கிளி; வீசையை முறுக்கல்; இங்கிதம்; சூசனை; விசாரிக் கூத்து; அம்பினுல் குறிபார்த்தல்.

4. பிரலோகித திருஷ்டி.

பக்கமி ரண்டும் பார்த்தல் பிராலோ கிதந்தா னுகும்
மிக்கவே விதியோ கங்கேள் வெகுசம்பாத் தியமி ரண்டு
பக்கஞ்சேர் பொருள்க ளெல்லாம் பார்க்கவு மசைவ தற்கு
மிக்கநேர் மொழியாய்ப் புத்தி யீனங்க ளுக்கு மாமே. 85

இலக்: இரண்டு பக்கங்களும் பார்த்தல்.

விதி: மிகுந்த சம்பாத்தியம், இருபக்கங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களையும் பார்த்தல்; அசைவது; புத்தியீனங்கள்.

---

2. ஆலோகிததிருஷ்டி (சுற்றிப் பார்த்தல்)

அபி. த. (தமிழ் 16) மேலுள்ளபாட்டே

3. ஸாசி திருஷ்டி (பக்கப்பார்வை).

அபி. த. (தமிழ் 17).

பாரி சங்களிற் குறுக்கே பார்ப்பது சாசி திட்டி
நேருறு விதியோ கங்கேள் நீடிய மரணங் கிள்ளை
யோரு சைப்பந் தோடத் தானிங் கிதஞ்சூசனைக்கும்
பார் விசாரிக் கூத்து பாண விலக்குக்குந் தானே

4. ப்ரலோகித திருஷ்டி (அகன்ற பார்வை)

அபி. த. (தமிழ் 18) இந்நூலில் உள்ளபடியே.

5. நிமீலித திருஷ்டி.

அரைவிழி யாய்வி ழித்தா லாகுநி மீலி தந்தான்
உரைவிநி யோகங் கேளா யுற்றிடு நமக்கா ரங்கள்
பரவசஞ் செபந் தியானம் பைத்தியங் கொஞ்சப் பார்வை
இருடிவே டங்க ளுக்கு மியல்நிமீ லிதமே யாமே. 86

இலக்: அரைவிழியாய் விழித்தல்.

விதி: நமஸ்காரங்கள்; பரவசம்; ஜபம்; தியானம்; பைத்தியம் கொஞ்சப் பார்வை; இருஷிவேஷம்.

6. உல்லோகித திருஷ்டி.

உயரவே பார்த்த திஷ்டி யுல்லோகி தந்தா னாகும்
சயமுறு விநியோ கங்கேள் தேவமண் டலங்கள் சந்திரன்
நயமுறு சிகரி கட்கும் நற்கொடி நுனிக ளுக்கும்
உயர்பாலிற் பொருட்கும் பூர்வ முறுஜன்மங் கட்குந் தானே

இலக்: உயரப்பார்த்த பார்வை உல்லோகிதம்.

விதி: தேவ மண்டலங்கள்; சந்திரன்; கோபுரங்கள்; கொடி நுனிகள்; உயரிடங்களிலுள்ள பொருள்கள்; முன்பிறப்புக்கள்.

7. அநுவிருத்த திருஷ்டி.

மேலிடங் கீழி டத்தும் மிகவிரைந் தேகண் ணுற்பார்த்
தாலனு விர்த்த திஷ்டி யதற்கினி விநியோ கங்கேள்
கோவியே மேவு பொல்லாக் கோபங்கட் காகு மப்பால்
சாலவே மந்தி ரிக்கும் பலவேலை களிலு மாமே.

இலக்: மேலேயும் கீழேயும் மிக விரைந்தே பார்த்தல்.

விதி: பொல்லாக் கோபங்கள்; மந்திரி; பலவேலைகள்.

---

5. நிமீலித திருஷ்டி (மூடின கண்)

அபி. நி. (தமிழ் 19) இத்தூலில் உள்ளபடியே.

6. உல்லோகித திருஷ்டி (மேலே பார்த்தல்).

அபி. நி. (தமிழ் 20) இத்தூலிலுள்ளது போன்றதே.

7. அநுவிருத்த திருஷ்டி (பின் வருவது)

அபி. நி. (தமிழ் 21) மேலேயுள்ள தமிழ்ச் செய்யுளோப்போன்றே முதல் 3 வரிகளும் அமைந்து 4 ஆம் வரி 'அவலோ கிதக்கண் களுக் கடை யாளம் சொல்லு வாரே' என்றுள்ளது.

8. அவலோகித திருஷ்டி.

அவனியைப் பார்த்த திஷ்டி யவலோகி தந்தா ஞகும்
நவில்விஷி யோகங் கேளாய் நடக்கநன் னீழற் பார்க்கப்
புவியினில் விசாரஞ் சூரம் புராணங்கள் படிப்ப தற்கும்
கவனம தாகத் தன்றே கம்பார்க்க வந்தா ஞமே. 89

இலக்: தரையைப் பார்ப்பது.

விதி: நடத்தல்; நிழல்பார்த்தல்; விசாரம்; சூரம்; புராணங்கள் படிப்பது; கவனமாய்த் தன் தேகம் பார்த்தல்.



9. துரித திருஷ்டி.

கேளுநீ பிரபந் தத்துங் கீதத்து மீதிற் பூசும்
பாழிலாச் சந்த னத்தும் பகர்வீர ரசத்து மற்ற
வேழம்போ லேக றுத்த விழிகளை யுருட்டி நோக்கல்
ஆழவே துரித திஷ்டி யாகுமென் றுரைப்பர் மாதே. 90.

இலக்: கருவிழிகளை, யானையைப்போல், உருட்டி நோக்கல்.

விதி: பிரபந்தம்; கீதம்; உடம்பிலே பூசும் சந்தனம்; வீரரசம்,

10. தூர திருஷ்டி. 11. உக்கிர திருஷ்டி.

மேலுந்தே சங்கள் பார்ப்ப தினுகாட் டியத்தும் பாணம்
சாலவே தொடுக்கும் போதும் பதிவிர தைதன் னீதிப்
பாலினு மனங்க ளுற்ற கலவியி லும்பார்க் குள்ளே
கோலுஞ்சிங் கார மாதி ரசங்களைக் குறிக்கும் போதே. 91

போதுநேர் நயனந் தன்னைப் பொருந்தவே சுழித்து மூடி
ஏதமில் சூச னக்கண் ணென்ற னருக்கி ரக்கண்
ஓதுமே பைத்தி யம்மே லுற்றவன் கோபம் வேகம்
தீதிலாப் பயர சத்தி லிருகடை சிவந்து பாரே. 92

---

8. அவலோகித திருஷ்டி (கீழ்நோக்குவது)

அபி. த. (தமிழ் 22) இச்செய்யுளை ஒத்திருக்கிறது.

9. தூர திருஷ்டி. 10. ஸாசனதிருஷ்டி. 11. உக்கிரதிருஷ்டி.

9, 10, 11 திருஷ்டிகள் காட்டிய சாஸ்திரத்திலும், அபிநய தர்ப்பணத்திலும் இல்லை.

சூசனி திருஷ்டி.

இலக்: கண்ணைச் சுழித்து மூடுதல்.

விதி: மேல் தேசங்களைப் பார்த்தல்; நாட்டியம்; பாணம் தொடுத்தல்; பதிவிரதைகளின் கற்பு நிலை; மன்மத லீலைகள்; சிருங்காரரசங்கள்.

உக்கிர திருஷ்டி.

இலக்: இருகடைக்கண்களும் சிவந்துபார்த்தல்.

விதி: பைத்தியம் கொண்டவன்; கோபம்; வேகம்; பயரசம்.

12. தூரதிருஷ்டி

சுகமுறுந் தூர திருஷ்டி சொலுஞ்சிறி துயர நோக்கல்
அகவிநி யோகங் கள்ளுஞ் சாராய மருந்து வோனும்
தகுங்கைகா னீட்ட லீதிற் ரூலகு மென்றே முன்னள்
தகைமைசேர் பரத நூலோர் சாற்றின ரிதுவென் ரோதே.

இலக்: சிறிது உயர நோக்கல்.

விதி: கள்ளையும், சாராயத்தையும் அருந்துபவன் கை, கால்களை நீட்டல்.

13. காந்தக்கண்

கல்லெனுங் காந்தைக் கண்ணுங் கருவிழி பெரிதாய்ப் பார்த்தல்
வல்லப விதியோ கந்தான் வளர்பிரமை யதிச யித்தும்
நல்லபெண் வதனம் பார்த்தல் நாடுஞ்சித் திரவு றுப்பும்
புல்லிய சிங்கா ரத்தும் பொருமதி ரவியி டத்தும். 94

இடமாகு மிரதத் தோடு மிணங்குபாய் மாவி டத்தும்
கொடுமுடி கோபு ரத்துங் கூடுங்கண் ணுடி பார்த்தல்
மடமயிற் பலபொ ருட்கள் பார்ப்பதி லாகு மற்றும்
திடமதாய் முகத்தில் வீர ரசமது சனிக்குந் தானே. 95

இலக்: கருவிழியைப் பெரிதாக்கிப் பார்த்தல்.

விதி: பிரமை, அதிசயித்தல், பெண்வதனம் பார்த்தல், சித்திர உறுப்பு, சிருங்காரம், மதி, ரவி. இரதத்தில் பூட்டிய குதிரை, கொடு முடி, கோபுரம், கண்ணுடி பார்த்தல், பெண்கள் பொருள்களைப் பார்த்தல், முகத்தில் வீரரசம் சனித்தல்.

---

12. தூரதிருஷ்டி (சேய்மை)
13. காந்தாதிருஷ்டி (அழகு)

1. காட்டிய உபயோக..... லக்ஷணம் 49

14. பயாநகதிருஷ்டி

காட்டியே கண்கண் மூடிக் கருவிழி பார்ப்ப தாகச்
சூட்டும்ப யாந கக்கண் சொல்லும்வி நியோக மையல்
கூட்டும்லாஞ் சனையும் வாஞ்சை கொளுமூக்குக் கண்ணு ழக்கும்
ஈட்டமாம் புத்த கத்து மெழும்சலிப் பி லுமுணர் வாமே. 96

இலக்.: கண்ணைத் திறந்து பிறகு மூடி, பிறகு கருவிழியால் பார்ப்பது.

விநி.: மையல்: லாஞ்சனை; வாஞ்சை; மூக்குக்கண்ணுடி; புத்தகத்தில் எழும் சலிப்பு.

15. கருணதிருஷ்டி

பார்க்குமாங் கருணை திஷ்டி படர்கடை நடுவி ரித்து
ஏற்கவே யிடையி ரண்டு மிடுக்கியே பார்ப்ப தாகும்
தீர்க்கமாம் விதியோ கங்கள் செப்பக்கே ளிரவி தன்னை
மார்க்கமாய்ப் பார்க்கும் போதும் மந்திரத் தியானஞ் சேவை.

சேவையாம் பகைவ ரோடெ திர்மொழி செப்புங் காலும்
கோவைநேர் விழியி னைவால் கூசிக்கண் பார்க்கும் போதும்
பூவையே சிந்தை யன்பு பொருந்தமெய்ச் சிலுப்பும் போதும்
மேவிய தவத்தோர் நாசி நுனிபார்த்த லசதி யென்பேன். 98

நுனிபார்க் குங்கல் யாணப் பெண்ணுறுந் தலைக விழ்ந்து நாணல்
அணியதாய்த் திரிவா யில்வைத் ததன்குறி பார்க்கும் போதும்
இணையிலா மைய லாசை யிருகண்டுள் விழுந்த போதும்
துணிவதா மருந்த ருந்தற் சூழ்புகை தனிலு மாமே. 99

இலக்.: இரண்டு கண்களின் ஓரங்களின் நடுவை விரித்து, இடைக்கண்களால் இடுக்கிப் பார்ப்பது.

விநி.: சூரியனைப் பார்த்தல்; மந்திரத்தியானம்; சேவை; பகைவரோடு எதிர்மொழி செப்புதல்; கண்ணேவால் கண் கூசிப் பார்த்தல்: சிந்தை அன்பு பொருந்த உடலைச் சிலுப்புதல்; தவசிகள் மூக்கின் நுனியைப் பார்த்தல்; அசதி; மணப்பெண் தலை கவிழ்ந்து நாணி நுனித்துப் பார்த்தல்; வாயில் திரிவைத்துக்

---

14. பயாநகதிருஷ்டி (பயங்கரம்)

நா. சா. (viii : 45) இமைகளை உயரத் தூக்கி, நிலைக்கச்செய்து, கண்கள் பிரகாசிக்க உயர்த்திப் பார்ப்பது: பெரும்பயம்.

குறிபார்த்தல் : மையல் : ஆசை ; கண்களில் தூசி விழுந்திருத்தல் ; மருந்து அருந்தல் ; புகை சூழ்ந்திருத்தல்.

16. மூடாம்பகக்கண்

தொய்யுமூ டாம்பகக் கண்ணி மைகள்சூட் சித்துப் பார்த்தல்
மெய்யிதின் விநியோ கங்கேள் விரைந்திடுஞ் சிந்தை நோயும்
தையலே மயக்கந் தியானந் தன்னிலுந் துக்க மாகும்
ஐயமில் லாத நித்திரை யறைந்ததை யறிந்து கொள்ளே.

இலக். : இமைகள் சூட்சித்துப் பார்த்தல்.

விநி. : விரைந்திடும் சிந்தைநோய் : மயக்கம் : தியானம் : துக்கம் : நித்திரை.

17. அத்புததிருஷ்டி

தேடிய வற்பு தக்கண் சீரதைச் செப்பக் கேண்மின்
வாடியே சோம்பி நோக்கல் தன்னிலே நிமைகள் சற்றே
நாடியே துடிது டிக்க நயம்பெறு நயனத் துள்ளே
கூடிய கருவி ழிச்சஞ் சலமது கொளவே நோக்கும். 101
நோக்கியே விநியோ கங்கே ளொருவரை நோகச் சொன்னேம்
தாக்கவே யென்ற போதுஞ் சரீரநோய் கொண்ட போதும்
தேக்கியே யதுவுண் டாகு மெனப்பர தச்சீ ருற்றோர்
ஆக்கமா யபிந யிக்கு மடவுரை செய்தா ரன்றே. 102

இலக். : வாடிச்சோம்பி நோக்கல் : இமைகள் சற்று நாடித் துடிக்கக் கருவிழி சஞ்சலங் கொண்டு நோக்கல்.

விநி. : ஒருவரைத் தாக்கும் பொருட்டு 'அவரை நோகச் சொன்னேம்' என்னும் போதும், சரீரம் நோய் கொண்ட போதும்.

---

15. கருணதிருஷ்டி (அருள்)

நா. சா. (viii : 47) மேல் இமை இறங்கி, விழி அசைவற்று நின்று (மனத்தயரால்), பார்வை மூக்கு நுனியை நோக்கிக் கண்ணீர் ததும்பப் பார்ப்பது.

16. மூடாம்பகக்கண் (இதனைப் பிறிதொரு நூல் மூடாம்பரக்கண் என்று கூறும்)

17. அத்புததிருஷ்டி (அற்புதம்)

நா. சா. (viii : 48) இமை ஓரத்தில் சற்று வளைந்து, கண்கள் ஆச்சரியத்தால் உயர்த்தப்பட்டு, விழிகள் ஓரம் வரையில் அழகாக விரிந்து பார்ப்பது.

18. வீரதிருஷ்டி

செய்யவே யிமையுங் கண்ணுஞ் சீரசை யாதி ருத்திப்
பையவே புருவந் தன்னை நெரித்துக்கண் சிவப்ப தாக்கி
நொய்யவே பொரும லாக நோக்குதல் வீரக் கண்ணும்
மெய்பிது விநியோ கந்தான் வீரர்மேற் பாய்வ தாமே. 103

இலக்.: இமையும் கண்ணும் அசையாதிருத்தி, மெதுவாகப் புருவத்தை நெரித்து, கண்ணைச் சிவக்கச் செய்து, நொய்மையாகவும் பொருமலாகவும் நோக்குதல்.

விநி.: வீரர் மேல் பாய்வது.

19. விகற்பதிருஷ்டி

கேளுநீ யிருகண் டன்னைக் கெம்பீர மாய்த்தி றந்து
ஆழியாங் கடைக்கண் சற்றே குவித்தசை யாமற் சீராய்த்
தோழியே கருவி ழிக்காற் றுலங்கவே பார்ப்ப தாகும்
மீழுறும் விப்பி ராந்தம்; விஷாணமு நிகழ்த்து நூலே. 104

இலக்.: இரு கண்களையும் கம்பீரமாய்த் திறந்து, கடைக்கண்ணைச் சற்றே குவித்து, அசையாமல், சீராய்ப் பார்ப்பது.

20. விப்பிராந்ததிருஷ்டி 21. விஷாணதிருஷ்டி

யோகமாம் விழிதி றந்து ஒக்கவே பரப ரப்பாய்
வேகமாய்ப் பார்ப்ப தென்றே விள்ளுவர் விஷாண திஷ்டிக்
காகுமாங் கடைக்கண் சொக்கி யிமைகளைத் திறந்து கண்ணைப்
பாகுமாய் நிமையைக் கொட்டிப் பார்ப்பது வாகும் பேரே.

இலக்.: விப்ராந்தக்கண் இருவிழிகளும் திறந்து, அவை இரண்டும் ஒருமிக்கப் பரபரப்பாய் வேகமாய்ப் பார்ப்பது; விஷாணக்கண்

---

18. வீரதிருஷ்டி (வீரம்)

ந. சா. (viii: 50) பிரகாசமாய், முழுமையும் திறந்து, சலித்து, கம்பீரத்துடன், விழி கண்ணில் நடுவில் பிரகாசிப்பது.

19. விகற்ப திருஷ்டி (வேறுபாடு)

கடைக்கண் சொக்கி, இமைகளைத் திறந்து, கண் இமையைக் கொட்டிப் பார்ப்பது ஆகும்.

விதி. : கூறப்படவில்லை.

22. விப்புலுதநிருஷ்டி

பாருவிப் புலுதா திஷ்டி பயன்விழித் திருக்கும் போது
கோரிய தூண்டு இல்லை யெனநிமை கொட்ட லாகும்
மாறிய துக்கத் தும்முன் மத்தத்தும் பெருந்து மென்றே
நாரியே பரத நூலோர் நயம்பட வுரைத்த வாறே. 106

இலக். : விழித்திருக்கும்போது, கோரியது 'உண்டு, இல்லை' என்று இமைகளைக் கொட்டுதலாகும்.

விதி. : துக்கம், உன்மத்தம்.

23. விதர்க்கிதநிருஷ்டி 24. தீனு நிருஷ்டி

உரைக்கும்வி தர்க்கி தாக்கண் ணுறுமிமை யுந்து டித்துப்
பொருக்கவே பரப ரப்பாய்ப் பொருந்தநாற் றிசையு நோக்கும்
வெருக்கத்தீ னுதிஷ் டிக்கு மேலிமை சிறுக்கக் கொட்டிக்
கருவிழிச் சற்ற மைத்துக் கண்ணீர்த் தும்பப் பார்த்தல்.

விதர்க்கிதநிருஷ்டி

இலக். : கண்ணும் இமையும் துடித்துப் பரபரப்பாய் நாற்றிசையும் நோக்குவது.

---

20. விப்ராந்தநிருஷ்டி (குழப்பம்)

நா. சா. (viii : 76) விழிகளும் இமைகளும் அசைத்து கொண்டும், கண்ணின் கடு கன்றுகத் திறந்து பூரணமாகப் பிரகாசிப்பது. குழப்பம், அவகாசம், சஞ்சலம்.

21. விஷண்ணநிருஷ்டி (வருத்தம்)

நா. சா. (viii : 68) மனம் ஒய்ந்து, விழிகளே கன்றுக விலக்கி இமை கொட்டாமலும், விழிகள் பெரும்பாலும் அசையாமலும் பார்ப்பது ; கம் பிக்கையின்மை.

22. விப்புலுதநிருஷ்டி (சஞ்சலம்)

நா சா. (viii : 77) இமைகள் முதலில் கடுங்கி, பிறகு அசையாமலும் நின்று, விழிகள் மறுபடியும் கலங்குவது. உறுதியின்மை, பயித்தியம், துக்கம், சாவு இவற்றால் உண்டான துன்பம்.

23 முதல் 36 முடிய விநியோகம் கூறப்படவில்லை.

தீனு திருஷ்டி

இலக்.: மேல் இமை சிறிதளவு கொட்டி, கருவிழி சற்றுக் காட்டி, கண்ணீர் தளும்பப் பார்த்தல்.

25. திரஸ்தா திருஷ்டி 26. கிரஸ்தா திருஷ்டி

பார்த்திடுங் திரஸ்தா திஷ்டி பகருவோ முண்ண டுக்கச்
சேர்த்திடு மிமைது டிக்கத் திருவிழி சலிக்க நோக்கும்
ஆர்த்திடு மிமைச வித்து அணிபுரு வம்நெ ரித்துக்
கோர்த்திடும் விழியை யேறப் பார்க்குங் கிரஸ்தாக் கணென்றே.

திரஸ்தா திருஷ்டி

இலக்.: உள் நடுக்க, இமை துடிக்க, விழி சலிக்க நோக்கல்.

கிரஸ்தா திருஷ்டி

இமை சலித்து, புருவம் நெரித்து, விழி ஏறப் பார்த்தல்.

27. இருட்டாக்கண்

காலத்து மிருட்டாக் கண்ணிற் காங்கரு விழியைச் சற்றே
ஏலவே சொருகி யேய நிமைகொட் டியேக போலம்
சாலவுன் னதமாய்ப் பார்ப்ப தாமெனப் பரத நூலோர்
நீலவேல் விழியி னுளே நிலையறிந் துரைசெய் தாரே. 109

இலக்.: கருவிழியைச் சற்றே சொருகி ஓய்ந்து, இமைகளைக் கொட்டி, கபோலத்தை நிமிர்த்துப் பார்ப்பது.

---

23. விதர்க்கிததிருஷ்டி (ஊகித்தல்)

நா. சா. (viii : 74) விழிகள் ஆலோசிப்பதற்காக மேலே தூக்கப்பட்டு, விழிகள் நன்றாய்த் திறந்து, கீழ் நோக்கிப் பார்ப்பது. யோசனை, ஞாபகப் படுத்திக் கொள்ளுதல்.

24. தீனு திருஷ்டி (இரக்கம்)

நா. சா. (viii : 55) கீழிமை மெதுவாகச் சரிந்து, விழிகள் சற்று வீங்கி, நகர்ச்சி மெதுவாக இருப்பது. துக்கம்.

25. த்ரஸ்தா திருஷ்டி (அச்சுறுத்தப்பட்டது)

நா. சா. (viii : 80) அச்சத்தால் இமைகள் இழுபட, விழிகள் நடுங்கிக் கொண்டு, நடுக்கண் பெரும் அச்சத்தால் பீதியடைந்திருப்பது. பயம்.

26. க்ரஸ்தா திருஷ்டி

இது பிற நூல்களில் இல்லை.

27. ஹ்ருஷ்டா திருஷ்டி (சிரிப்பு)

நா. சா. (viii : 54) பார்வை சிறிது வளைந்து, விழிகள் முழுமையும் தெரியாமல், மெதுவாய் நகர்வது.

28. மலிநீ திருஷ்டி 29. லலித திருஷ்டி

செய்யவே வொன்றைப் பார்த்துத் திரும்பிப்போ குவது போலப்
பையவே யிமையைச் சற்றே பணியமூ டுவதாந் திஷ்டிக்
கையுறு மலிநீ யாகுங் கடைமூடிப் புருவஞ் சேர்த்து
மெய்யுறு கண்டி றந்து பார்ப்பது லலித மென்னே. 110

மலிநீ திருஷ்டி

இலக்.: ஒன்றைப் பார்த்துத் திரும்பிப் போவதுபோல, மெது வாக இமையைச் சற்றே பணிய மூடுவது.

லலித திருஷ்டி

இலக்.: கடை மூடி, புருவம் சேர்த்து, (பிறகு) கண் திறந்து பார்ப்பது.

30. குஞ்சித திருஷ்டி 31. ஆசியாக்கண்

மேவிய குஞ்சி தக்க ணிமைபாதி மூடிப் பக்கம்
தாவிச்சஞ் சலமாய்ப் பார்ப்ப தாகுமே யாசி யாக்கண்
பாவையே விழியைச் சற்றே சுருங்கவாச் சரியம் பார்த்துக்
கூவியே சிரித்த லென்றே குறித்திதை விண்டார் மானே.

குஞ்சிததிருஷ்டி

இலக்.: இமை பாதி மூடி, விழி பக்கம் தாவிச் சஞ்சலமாய்ப் பார்த்தல்.

ஆசியாக்கண்

இலக்.: விழியைச் சற்றே சுருங்கச் செய்து ஆச்சரியமாகப் பார்த்துக் கூவிச் சிரித்தல்.

---

28. மலிநதிருஷ்டி (பசப்புற்றது)

நா. சா. (viii: 63) விழியோரங்கள் அசையாமல் வெளுத்திருப்பது; அரை இமைகள் மூடியிருப்பது. அதைரியம், நிறம் மாறுதல்.

29. லலிததிருஷ்டி (மென்மை)

நா. சா. (viii: 73) கண்கடைகள் குறுகி, இமைகள் சலித்து, காதலைக் காட்டி, புன்னகையுடன் இனிமையாய் இருப்பது.

30. குஞ்சிததிருஷ்டி (குறுகியது அல்லது வளைந்தது)

நா. சா. (viii: 70) இமை ஓரங்கள் சுருக்கப்பட்டு, மயிர்கள் வளைந்து விழிகளும் சுருக்கப்பட்டுள்ள பார்வை. பொறுமை, பிடிக்காத வஸ்து, கண் வலிக்கும்படி கஷ்டப்பட்டுப் பார்ப்பது.

31. ஆசியாதிருஷ்டி

இது, விஸ்மயதிருஷ்டியின் திரிபு போலும்.

2161

32. அச்சுதா திருஷ்டி

விள்ளவே யச்சு தாக்கண் ணுமதின் விவரங் கேண்மின்
உள்ளுடன் புறம்புந் தோற்ற வொளியது நிறக்குங் காட்டும்
வெள்ளியாம் விழிபொ ருந்தி மேலிடப் பார்ப்ப தல்லோ
வள்ளிதாய்ப் பரத நூலோர் வகுத்தனர் புலன நிந்தே. 112

இலக்.: உள்ளும் புறமும் தோற்றவும், ஒளி நிறக்கவும் காட்டுவதும், வெள்ளை விழி மேலிடப் பார்ப்பதும் ஆகும்.

33. சங்கிததிருஷ்டி. 34. மதக்கண்.

தெரிவையே சங்கி தக்கண் திறமதாய் விழித்துப் பார்த்து
மறுபடி யிமையை மூடி வளர்கடைக் கண்ணுற் பார்த்தல்
முருகாகு மதக்கண் டன்னுள் மூவகை யான பேதம்
பெருமையாம் பயன நிந்து பிணக்கற வுரைக்கு நூலே. 113

இலக்.: கண்ணைத் திறமாய் விழித்துப் பார்த்து, மறுபடி இமையை மூடி, கடைக்கண்ணால் பார்த்தல் சங்கித திருஷ்டியாகும்.

மதக்கண் என்பது மூவகைப்படும். அவை அடுத்த பாடல்களில் கூறப்படும்.

34. கருணைமதக்கண். 35. மத்திம மதக்கண்.

மின்னுங் கருணை மதக்கண் விழித்தோரஞ் சரித்து நன்ரூய்ப்
பன்னிய விகார முற்றுப் பார்க்குமத் திமம தக்கண்
நின்னய மாகச் சற்றே நிமைகளை விழித்து மூடி
உன்னியே யசைத்துப் பார்ப்ப தொக்குமென் றுரைசெய் தாரே.

இலக்.: கருணை மதக்கண்: விழித்து, ஓரம் சரித்து, விகாரமுற்றுப் பார்த்தல்.

மத்திம மதக்கண்: நிர்ணயமாகச் சற்றே இமைகளை விழித்து மூடி, அசைத்துப் பார்ப்பது.

---

32. அச்சுதா திருஷ்டி (கழிவாமை).

33. சங்கிததிருஷ்டி (சங்கேதகம்).

நா. சா. (viii: 86-93) ஒரு முறை நகர்ந்தும் ஒருமுறை நின்றும், விழி சற்று உயர்ந்து, வக்ரமாய்த் திறந்து, மந்தமாயுள்ள பார்வை, சங்கை, பயம்.

மதக்கண்கள் பிற நூல்களில் காணப்படவில்லை.

36. அதருமமதக்கண்.

வாரிசூழ்ந் திடும தர்ம மதக்கண்ணின் விபரங் கேண்மோ
நேரதாம் விழியைக் கீழே நிலைபார்த்துப் பிரயா சத்தில்
கோரியே நிமையைச் சேர்த்துக் கொட்டுத லாகு மென்றே
கூறினர் பரதங் கற்ற குருபரம் பரையி னரே. 115

இலக்.: விழியைக் கீழே திருப்பிப் பார்த்து, பிரயாசைப்பட்டு இமைகளைச் சேர்த்துக் கொட்டுதலாகும.

நயனபேதப் பிரகரணம் முற்றும்.

3. புருவபேதப் பிரகரணம்

புருவபே தங்கள் நான்காய்ப் புகன்றனர் மிதமா மென்றும்
பருவமா மமித மென்றும் பாரிலுத் வர்த்தி யென்றும்
மருவப வர்த்தி யென்றும் வகுத்தன ரெவருங் காண
சருவியே யொவ்வொன் றிற்குந் தான்விதி யோகஞ் செப்பும்.

புருவ பேதங்களை நான்காகச் சொன்னர்கள். அவை (1) மிதம், (2) அமிதம், (3) உத்வர்த்திதம், (4) அப வர்த்திதம்.

இனி அவற்றின் விதியோகம் சொல்வோம்.

1. மிதப்புருவம். 2. அமிதப் புருவம்.

செப்பிய மிதப்பு ருவஞ் சிறந்துமேல் சிறித சைத்தால்
ஒப்புமே சாடை செய்த லுகந்துவே டிக்கைப் பேச்சாம்
மெப்புவ மிதப்பு ருவம் மிகுந்துமே லசைப்ப தாகும்
தப்பிலா நாட கச்சூ சனைதனிற் காணு மென்னே. 117

இந்நூலில் பாயிரத்தில் (16-ல்) புருவபேதம் ஏழு என்று குறிக்கப் பட்டிருக்கின்றது.

புருவ பேதத்தைப்பற்றி

(1) நாட்டிய சாஸ்திரம்: (viii: 121-125) (1) உத்ஷேப (உயர்த்துதல்) (2) பாடன (தாழ்த்துதல்) (3) ப்ருகுடி (நெருக்குதல்) (4) சதுர (சாமர்த்தியம்) (5) குஞ்சித (சுருக்குதல்) (6) ரேசித (நகர்தல்) (7) சகஜ (இயற்கை என்றும்).

(2) அபிநயதர்ப்பணம் தெலுங்குப் பிரதியும் (172-179) ஆநந்தக்குமார ஸ்வாமியின் பதிப்பும் (பக். 43-44); (1) சகஜ, (2) பதித, (3) உத்கிப்த, (4) சதுர, (5) ரேசித, (6) குஞ்சித என்றும் 6 புருவ பேதங்கள் கூறி இலக்கணக்களும் விநியோகங்களும் அமைக்கின்றன.

(3) அபிநயதர்ப்பணம் தமிழ்ச் சுவடியும் மனோமோகன் கோஷ் நூலும் இவற்றைப்பற்றிக் கூறவில்லை.

மிதப்புருவம்.

இலக்.: புருவம் சிறந்து மேலே சிறிதசைத்தல்.

விநி.: சாடை செய்தல், மனமுவந்தவேடிக்கைப்பேச்சுப்பேசுதல்.

அமிதப்புருவம்.

இலக்.: மிகுந்துமேல் அசைப்பது.

விநி.: நாடகச் சூசனையில் காண்பது.

3. உத்வர்த்திதப் புருவம். 4. அபவர்த்திதப் புருவம்.

என்னவுத் வர்த்தி தந்தா னியம்புது மேலே நோக்கில்
சொன்னவிந் யோகம் ஞானந் தொலையாதா லோச னைக்காம்
பொன்னப வர்த்தி தந்தான் பூருகீழ் நோக்கிற் றுக்கம்
பன்னென முதலா மென்றே பார்த்திபன் மொழிந்த வாறே.

உத்வர்த்திதப் புருவம்.

இலக்.: மேலே நோக்குதல்.

விநி.: ஞானம், தீர்க்காலோசனை.

அபவர்த்திதப் புருவம்.

இலக்.: புருவம் கீழ் நோக்குதல்.

விநி.: துக்கம்.

இவை பார்த்திபன் கூறியவை.

புருவபேதப் பிரகரணம் முற்றும்.

4. நாசிபேதப் பிரகரணம்.

நாசியின் பேத மைந்தாய் நவிலுமச் சிலிட்டஞ் சிலிட்டம்
மாசிலாக் கம்பி தஞ்சேர் வருசிலிட்ட புடமா மென்றும்
பேசுசத் புடந்தா னென்றும் பேதங்க ளொவ்வொன் றிற்கும்
வாசியாய்க் காட்டு மந்த வகையது விவரஞ் சொல்லும்.

மூக்கின் பேதங்கள்.

நாசியின் பேதங்கள் ஐந்தாய்ச் சொல்லப்படும். அவை அச்சிலிட்டம், சிலிட்டம், கம்பிதம், சிலிட்டபுடம், சத்புடம், என்பன.

இந்நூலில் பாயிரத்தில் (16) நாசிபேதம் ஆறென்று கூறப்பட்டிருக்கிறது.

நா-சா. (viii: 126-132); ஸங். ரத்னா. (7: 465 - 470)(1) ஸதா, (2) மத்தா, (3) விக்ருஷ்டா, (4) ஸோச்வாஸா, (5) விகூர்ணிதா (விகூணிதா), (6) ஸ்வாபாவிகா என்ற ஆறு நாசி பேதங்கள் கூறப்படுகின்றன. அபிநயதர்ப்பண நூல்களில் நாசிபேதங்கள் கூறப்படவில்லை.

1. அச்லிட்டநாசி. 2. சிலிட்டநாசி.

சொல்லுமச் சிலிட்ட நாசி தூக்குதல் வலது பக்கம்
மெல்லவே சாடை யாகு மேலான கபட மாகும்
அல்லவே சிலிட்ட மென்றும் ஆட்டிட லிடது நாசி
நல்லதாய்த் தூர திஷ்டிக் காமென வுகந்து நாடே. 120

அச்லிட்டநாசி.

இலக்.: நாசியை வலப்பக்கம்மாகத் தூக்குதல்.
விநி.: சாடை; கபடம்,

சிலிட்டநாசி.

இலக்.: இடநாசி ஆட்டுதல்.
விநி.: தூர திருஷ்டி.

3. கம்பிதநாசி. 4. சிலிட்டபுட்நாசி.

காட்டிடு கம்பி தந்தா னிருநாசி தூக்கி யாட்டல்
கூடுவா சனையி லொப்பும் கொள்ளுநோய் ஜன்னி கட்காம்
சூடும்சி லிட்டபு டம்தொ லவிலா தசைத்தல் நாசி
வேடிக்கை தனிலு மின்னம் விரகமுஞ் சோக மென்னே.

கம்பித நாசி.

இலக்.: இரு நாசிகளையும் தூக்கி ஆட்டல்.
விநி.: வாசனையை ஒப்புக்கொள்ளல்; ஜன்னி நோய்.

சிலிட்டபுடம்.

இலக்.: நாசியை இடைவிடாமல் அசைத்தல்.
விநி.: வேடிக்கை, விரகம், சோகம்.

5. சத்புடநாசி.

எண்ணியே தூக்கியி ருக்கு மிருநாசி சத்பு டந்தான்
நுண்ணிய விநியோ கங்கேள் நுணுக்கமா மசூயை தன்னில்
கண்ணியே வருமென் றேதி நவிலுஷா தேவி சொன்ன
திண்ணிய நாசி பேதந் தெளிந்துநீ யறிந்து பாரே. 122

சத்புடநாசி.

இலக்.: இருநாசிகளும் தூக்கியிருத்தல்.
விநி.: அசூயை.
இவ்வாறு கூறியவர் உஷாதேவி.

நாசிபேதப் பிரகரணம் முற்றும்.

சிலிட்டபுடத்தை சதா என்பர் நாட்ய சாஸ்திரக்காரர். (viii. 126).

5. அதரபேதப் பிரகரணம்.

1. சமவதரம். 2. சுபாவவதரம்.

அதரபே தங்கள் நான்கா யம்புவி தனிலே செப்பும்
விதமது சமசு பாவம் விகசிதம் ஈஷார்ஷ யம்மாம்
முதல்சமம் வாயை மூடி யிருத்தலாங் கோபந் துக்கம்
இதமுடன் சுபாவ மாகும் இளநகை தயவு வஞ்சம். 123

அதரம் - உதடு: அதர பேதங்கள் நான்காம். அவை, (1) சமம், (2) சுபாவம், (3) விகசிதம். (4) ஈஷார்ஷயம் என்றனர்.

1. சமவதரம்.

இலக்.: வாயை மூடியிருத்தல்.
விநி.: கோபம்; துக்கம்.

2. சுபாவ அதரம்.

இலக்.: இள நகை.
விநி.: தயவு; வஞ்சம்.

3. விகசித அதரம் 4. [1]ஈஷார்ஷயவதரம்.

வஞ்சம திலாது மிக்கு மகிழ்வது விகசி தந்தான்
மிஞ்சிய சந்தோ ஷாதி களுக்குமே விளம்ப லாகும்
எஞ்சிய ஈஷார்ஷ யந்தான் இயம்பின்வாய் நகைத்தல் கோணி.
அஞ்சாடை சைகை யென்று அநுமனு மறைந்த வாறே.

விகசித அதரம்.

இலக்.: மிகவும் மகிழ்வது.
விநி.: சந்தோஷாதிகள்.

ஈஷார்ஷய அதரம்.

இலக்.: வாய்கோணி நகைத்தல்.
விநி.: சாடை; சைகை.

இது, அநுமன் உரைத்தது.

அதரபேதப் பிரகரணம் முற்றும்.

இந்நூலில் பாயிரத்தில் (16) இதழ்பேதம் ஆறென்று கூறப்பட்டிருக்கின்றது. நா. சா. (viii: 137-139) (1) விவர்த்தனம், (2) கம்பனம், (3) விஸர்க்கம், (4) லிகிகூஹனம், (5) ஸந்தஷ்டகம், (6) ஸமுத்தகம். இவற்றோடு ஸ-ர. (7:488-95) (7) உத்வ்ருத்தம், (8) விகாஸி, (9) ஆயத, (10) ரேசித இவற்றையும் கூட்டிச்சொல்லும்; அபிநயதர்ப்பணக்களில் இஃது இல்லை.

1. குறிப்பு:—இப்பெயர் ஈஷதார்ஸ்யம் என்றிருக்கலாம் போலும்.

6. முகராகப் பிரகரணம்.

முகராகம் நான்க தாக மொழிந்தனர் சுவாபா வத்தில்
இகலிலாப் பிரசன் னத்தோ டிரத்தமுஞ் சியாம மென்னச்
சுகமுறும் வதன மாதே தொடுத்தவிம் முகபே தங்கட்
ககமகிழ்ந்து பரதமுனி யறைந்த விதி யோகங் கேளே. 125

முகராகம் - முகத்தின் நிறம்,

பரத முனிவர் முகத்தின் நிறங்களே நான்கென்று கூறினர் அவை, சுவாபாவிகம், பிரஸந்நம், இரக்தம், சியாமம், என்பன.

1. சுவாபாவிக முகம். 2. பிரசன்னமுகம்.
3. இரத்தமுகம் 4. சியாமமுகம்.

மன தினில் விகார மின்றி மருவுதல் சுவாபா வந்தான்
கன தத்த சந்தோஷ மாகக் கருதும் பிரசன்ன மாகும்
இனங்கிரு பையுமுன் கோபம் வீரமு மிரத்த மென்பர்
மன தினிற் றுக்கங் கொண்டு வகுத்தது சியாம மாமே. 126

சுவாபாவிகமுகம்: மனத்தினில் விகாரமில்லாமல் இருத்தல்.

பிரசன்னமுகம்: மனம் மிகுந்த சந்தோஷத்துடன் இருத்தல்.

இரத்தமுகம்: கிருபை, முன்கோபம், வீரம் இவற்றுடன் இருத்தல்.

சியாமம்: மனத்தில் துக்கம் கொண்டிருத்தல்.

முகராகப் பிரகரணம் முற்றும்.

இந்நூலின் பாயிரத்தில் (17) "சொல்லிய, வதனமாறும் சுமுகமு மேழதாகும்" என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டிய சாஸ்திரம் (viii: 157-160); ஸ.ர. (7:527-531).

ஸ்வாபாவிக—இயற்கைமுகம்: இயற்கையும் அலங்யமுமானமுகம்.

ப்ரஸன்ன—பிரகாசமுகம்: ஆச்சரியம், ஹாஸ்யம், சிருங்காரம்.

ரக்த—இரத்த முகம்: வீரம், ரௌத்ரம், கருணை, குடிலமயக்கம்.

சியாமம்—கருமுகம் பயாநகம், பீபத்ஸம்.

7. கண்டபேதப் பிரகரணம்.

உறுதியாங் கண்ட பேத மொன்பானன் ஞட்டி யத்தில்
கருதுமுற் பத்தி பேதங் கார்ட்டுநால் வகைய தாய்ச்சுந்
தரிதிறச் சீனத் தோடு சார்பரி வர்த்த கண்டம்
வரும்ப்ர கும்பி தமாங் கண்ட வகைதனீ யறிந்து கொள்ளே.

நாட்டியத்தில் ஒன்பது கண்டபேதங்கள் கூறப்படும், அவை உற்பத்தி பேதங்களால் நான்காகும். அவை; (1) சுந்தரி, (2) திரச்சீனம், (3) பரிவர்த்தம். 4. ப்ரகும்பிதம்.

1. சுந்தரிகண்டம்.

சுந்தரி யிலக்க ணங்கேள் தூய்கழுத் தைக்கு றுக்கி
விந்தையா யசைத்துக் காட்டும் விதத்தைச்சுந் தரியா மென்பர்
பந்தமாம் விதியோ கங்கேள் ரத்னங்கள் பார்ப்ப தாகு
மந்தமாம் வீணை வாத்ய மருள்தேவ தைக்கு மன்னும். 128

அதற்காகு நமஸ்கா ரங்க ளடர்பல கார்யா ரம்பம்
மதித்தசி நேகா ரம்பம் மருவிய நல்லோ ரென்னில்
கதித்திடும் பைத்தி யத்துங் கனிந்திடு சரசங் கட்கும்
உதித்தசந் தோஷங் கட்கு முகந்தசுந் தரியாம் பாரே. 129

இலக்.: கழுத்தைக்குறுக்கி விந்தையாய் அசைத்துக் காட்டுதல்.

விநி.: இரத்னங்கள் பார்ப்பது; வீணைவாத்யம்; தேவதா நமஸ்காரங்கள்; பல காரியாரம்பம்; நல்லோர் சிநேகாரம்பம்; பயித்தியம்; சரசங்கள்; சந்தோஷம்.

அபிநய தர்ப்பண நூல்கள் நான்கும் மேலே கூறிய நான்கு கண்டங்களையே கூறும். இங்குக் காட்டப்பெற்ற ஒன்பது கண்டங்களையும் நா. - சா. (viii: 167-70); ஸ - ர. (7: 329-35): பின்வருமாறு அமைக்கும்: ஸமா, ஸதா, உந்நதா, த்ர்யஸ்ரா, ரேசிதா, குஞ்சிதா, அஞ்சிதா, வலிதா, விவ்ருத்தா.

1. சுந்தரி க்ரியா.

1. அபி. த. (தமிழ் 23-24)

சுந்தரி திரச்சீ னத்தான் றுலங்கிய பரிவர்த் தினியே
வந்திடு பிரகும்பி தம்நால் வகைப்படு கண்டந் தன்னில்
சுந்தரி யிலக்க ணங்கேள் சொல்கழுத் தைக்கு றுக்கே
விந்தை யாயசைத் தகண்ட மேவுசுந் தரியே யாமே.

அதற்கினி விதியோ கங்கே ளடர்பல கார்யா ரம்பம்
மதித்தசி நேகா ரம்பம் மருவிய நல்லார் தங்கள்
கதித்தப யித்தி யங்கள் கனிந்திடு சரசங் கட்கும்
உதித்தசந் தோஷங் கட்கு முவந்தசுந் தரியே யாமே.

2. திரச்சீனகண்டம்.

பரம்புபோ வதுபோ லிரண்டு பக்கத்து முயர்பா லாகத்
தேம்பவே யசைத்த கண்டந் திரச்சீனம் விஞ்யோ கங்கேள்
பாம்புபோங் கதிக ளுக்கும் பரியகத் திக்கும் நீல
ஆம்பலின் விழிய ணங்கே ஆயாசங் கட்கு மாமே. 130

இலக்.: பாம்பு போவதுபோல், இரண்டு பக்கங்களிலும் உயர்ந்து அசைத்தல்.

விநி.: பாம்பின் கதிகள்; பெரிய கத்தி, ஆயாசங்கள்.

3. பரிவர்த்தன கண்டம்.

தெரியிடம் வலத்திற் பாதி திங்களைப் போல சைத்தால்
பரிவர்த்த னக்க ளந்தான் பகர்ந்திடு விஞ்யோ கங்கேள்
அரியசிங் கார நாட்டிய மாசையின் ஞர்க போலம்
பருகவு மாகு மென்றே பகர்ந்தனர் பரத நூலோர். 131

இலக்.: வலப்பக்கமாக அர்த்த சந்திரனைப்போல் அசைத்தல்.

விநி.: சிங்கார நாட்டியம்: ஆசை நாயகியின் கபோலத்தைப் பருகுதல் (முத்தமிடல்).

4. பிரகம்பித கண்டம்.

திறமொடு முன்னும் பின்னுஞ் சீரார்கண் டத்தை மாடப்
புறவுபோ லசைத்த கண்டம் பிரகம்பி தந்தா ஞகும்
உறுவிஞி யோகங் கேளா யுனக்கென் பதுஉஞ் சால
நிறைகொளுந் தேசி நாட்டியம் நீண்மாலை நந்தி வாக்கே.

இலக்.: மாடப்புருவைப்போல் முன்னும் பின்னும் கழுத்தை யசைத்தல்.

விநி.: 'உனக்கு' என்பது; தேசிய நாட்டியம். நீண்ட மாலைகள்.

இவை நந்தி வாக்கு.

கண்டபேதப் பிரகரணம் முற்றும்.

---

2. தீரச்சீனக்ரீவா.

1. அபி. த. (தமிழ் 25) மேலே உள்ளபாடலே உள்ளது.

3. பரிவர்த்திதக்ரீவா.

அபி. த. (தமிழ் 26) ஷை செய்யுளே உள்ளது.

4. ப்ரகம்பிதக்ரீவா.

அபி. த. (தமிழ் 27) இப்பாடலே உள்ளது.

8. புஜபேதப் பிரகரணம்.

புஜபேத மூர்த்வ மென்றும் புகலதோ முகந்தா னென்றும்
அசைவிலாத் திரியக் தம்மோ டபவித்தம் பிரசாரி தந்தான்
கசிவுள அஞ்சித தம்மண் டலகதி சுவத்தி கந்தான்
திசைகொளுத் வர்த்தி தம்பி ருஷ்டாநு சாரிதமா மின்னம்.
நமிரமா விடமே சரலம் நற்குஞ் சிதந்தா னென்றும்
அமருமாந் தோளி தத்தோ டருளுச் சரிதமே யென்றும்
இமையவ ரிருடி தோளுக் கியம்பின பேதம் பத்தாம்
கமழ்தச வதன னாறு புஜபேதங் கருதி னானே. 134

(1) ‘ஊர்த்வம் உயர்ந்து காட்டல், (2) அதோமுகம் தணிந்து காட்டல். (3) த்ரியக்கதம் பக்கத்திற் காட்டல். (4) அபவித்தம் தோளைத் தொடுதல். (5) பிரஸாரிதம் முன்னே நீட்டல். (6) அஞ்சிதம் மார்பில் வைத்தல். (7) மண்டலகதி நாலு திக்கும் நீட்டல். (8) சுவத்திகம் கைகட்டிக் கொள்ளுதல். (9) உத்வர்த்திதம் (உத்வேஷ்டிதம்) உயரச் சுற்றுதல். (10) பிருஷ்டானுஸாரிதம் பின்னே நீட்டல். (11) நம்ரம் கையை வளைத்து ஏந்தல். (12) ஆவிடம் (ஆவித்தம்) வளைத்து வாங்குதல். (13) சரலம் பக்கத்தில் நீட்டி வாங்குதல்(?). (14) குஞ்சிதம் முழங்கையை வளைத்து முடியாகப் பிடித்தல். (15) ஆந்தோளிதம் கையை வீசி நடத்தல். (16) உத்ஸாரிதம் போகச்சொல்லி நடத்தலாம்.

இவற்றுள் பத்து பிரகஸ்பதி கூறியவை; ஆறு இராவணன் கூறியவை,

புஜபேதப் பிரகரணம் முற்றும்.

---

9. மார்புபேதப் பிரகரணம்.

1. சமமார்பு. 2. உத்வாகித மார்பு.

வருமார்பு பேத மூன்று வளர்சம முத்வா கிதந்தான்
நிரைப்ரகம் பிதமே யென்றும் நிகழ்த்தினர் விநியோ கங்கேள்
தருசம மசையா நிற்கில் துக்கமுத் வாகி தந்தான்
பருமார்பு தூக்கி லென்னைப் பாரெனுஞ் சிலம்ப மாமே. 135

இந்நூலில் பாயிரத்தில் (17) புஜபேதம் பத்தென்று கூறப்பட்டிருக்கின்றது. ஸ - ர. : (7 : 335-37) இப்பதினாறையே கூறும்.

புஜபேதங்கள் பத்தெனப் பகரும் நாட்டிய சாஸ்திரம் (ix 212-213): அவை, திரியக், ஊர்த்வகதம், அதோமுகம், ஆவித்தம், அபவித்தம், மண்டலம், ஸ்வஸ்திகம், அஞ்சிதம், குஞ்சிதம், ப்ரஸ்தகம் என்பன.

3. பிரகம்பித மார்பு.

ஆமெனப் பிரகம் பிதந்தான் மார்பதைச் சிறித சைத்தல்
ஓமெனும் பெரியோர் முன்பு முகந்திடும் நல்லோ ரென்னல்
சாமகா னங்கள் பாடிற் றணிந்திடும் பயனைக் காட்டல்
நேமமாய் மார்பு பேதம் நிகழ்த்தினன் வானோர் கோமான்.

மார்பு பேதம் மூன்று: அவை, (1) சமம், (2) உத்வாகிதம் (3) பிரகம்பிதம் என்பன.

சமம்:

இலக்.: அசையாமல் நிற்பது:

விதி.: துக்கம்.

உத்வாகிதம்:

இலக்.: மார்பு தூக்கி நிற்பது.

விதி.: 'என்னைப்பார்'. என்பது.

பிரகம்பிதம்:

இலக்.: மார்பைச் சிறிது அசைத்தல்.

விதி.: பெரியோர் முன்பு நல்லோர் என்னல்; சாமகானம் பாடித் தணிந்திடும் பயனைக்காட்டல். இவை இந்திரன் கூறியவை.

மார்பு பேதப் பிரகரணம் முற்றும்.

---

10. வயிறு பேதப் பிரகரணம்.

1. சலனோதரம்.

சாற்றிய வயிறு பேதஞ் சலனோ தரந்தா னென்றும்
போற்றுலம் போத ரந்தான் புகல்கர்வ வுதர மென்றும்
தோற்றுமிம் மூன்று தன்னிற் சொல்சல னோத ரந்தான்
மாற்றியே விடாத சைத்த வயிறுமாச் சரிய மாமே.

2. லம்போதரம். 3. கர்வோதரம்.

ஆமெனுச் சாக மேப்ப மாகுலம் போத ரந்தான்
சேமரா ஜாங்க மேன்மை செப்புகர் வோத ரந்தான்
தாமென வெட்கிக் காட்டத் தான்விர கங்க ளுக்காம்
ஓமென வயிறு பேத முரைத்தன னிங்க ரன்ரூன்.

மார்பு பேதங்கள்

நா. சா. (x: 1-9): ஸ-ர. (7: 296-7). (1) ஆபுக்னம் (கொஞ்சம்வளைந்தது), (2) நிர்ப்புக்னம் (வளையாதது), (3) ப்ரகம்பிதம் (ஆடுதல்), (4) உத்வாஹிதம் (உயர்த்தியது), (5) சமம் (இயற்கை). என ஐந்து மார்புகள் கூறப்பட்டுள்ளன.

வயிற்றின் பேதங்கள் சலனோதரம், லம்போதரம், கர்வோதரம் என மூன்று வகைப்படும். இவற்றுள்,

சலனோதரம் :

இலக். : வயிற்றை மாற்றி மாற்றி விடாது அசைத்தல் :

விநி. : மாச்சரியம். உற்சாகம் ; ஏப்பம்.

லம்போதரம் : ராஜாங்க மேன்மை.

கர்வோதரம் :

இலக் : வெட்கிக் (வற்றிக் ?) காட்டுதல் :

விநி. : விரகங்கள்.

இது, ஐங்கரன் (விநாயகர்) மதம்.

வயிறுபேதப் பிரகரணம் முற்றும்.

11. பிருஷ்டபேதப் பிரகரணம்.

1. சமம். 2. லளிதம்.

மூதுகுபே தங்கள் மூன்றாய் மொழிசம பிருஷ்ட மென்று
மிதமொடு லளிதம் வலித மிதின்விங் யோகங் கேளே
விதுமதுல் லாசத் தாலே விரிசம பிருஷ்ட மாகும்
பதியாம லுயர்ந்த பிருஷ்டம் லளிதமாம் பகரு மின்னும். 139

வலித பிருஷ்டம்.

பகருமே தீரம் வீரம் பாரினிற் சுமைதாங் கிக்காம்
இகந்தனில் வலித பிருஷ்ட மேழைபோற் றணிந்து காட்டல்
விகற்பமில் லாதோ னென்று மிகுயோகி பக்த னென்றும்
அகமகிழ் பிருஷ்ட பேதம் அறுமுக னுரைத்த வாறே. 140

பிருஷ்டம் - முதுகு.

இது அறுமுகன் உரைத்தது.

வயிறு பேதங்கள்

இந்நூலில் பரயிரத்தில் (21) வயிறுபேதம் நான்கென்று கூறப் பட்டிருக்கின்றது.

நாட்டிய சாஸ்திரம் (x : 19-20) வயிறு பேதங்களைப் பின்வருமாறு கூறும்:—1. கூமா (மெல்லியது) : சிரிப்பு, அழுகை, மூச்சு உள்ளிழுத்தல், கொட்டாவி. 2. கல்வா (குழிந்தது) : கோய், தபசு, களைப்பு, பசி. 3. பூர்ண (முழுமையானது) : மூச்சுவெளிவிடுவது. உடல் பருத்திருத்தல், நோய், அளவுக்கு மிஞ்சின உணவு.

ஸ - ர. (7: 353-56) கூமா, கல்ல, பூர்ண என்று மூன்றைக் கூறிப்பின் மதாந்தரமாக ரிக்தபூர்ணத்தையும் கூறும்.

முதுகு பேதங்கள் மூன்று : அவை சமபிருஷ்டம், ஸ்ரீதம், வலிதம்.

சமபிருஷ்டம் : உல்லாசத்தாலே விரிந்திருத்தல்.

ஸ்ரீதபிருஷ்டம் : பதியாமல் உயர்ந்தது. விநி. : தீரம், வீரம், சுமைதாங்கி.

வலிதபிருஷ்டம் : ஏழைபோல் தணிந்து காட்டல். விநி. : விகற்ப மில்லாதோன் என்றும், யோகி, பக்தன் என்றும் காட்டல்.

பிருஷ்டபேதப் பிரகரணம் முற்றும்.

12. இடுப்புப் பேதப் பிரகரணம்.

1. சுபாவ நடு.

இயம்பிய நடுவின் பேத மிசைவுடன் மூன்ற தாகும்
நயம்பெறு சுபாவ மென்று நமிதம னமித மென்றும்
சயம்பெறு நடுசு பாவம் சற்றசை யாது நிற்றல்
மயமெனும் யோகம் ஞானம் வழிதனக் கொவ்வு மின்னே.

2. நமித நடு. 3. அநமிதநடு.

ஒவ்வுமே மிக்க சைத்த லுக்கமே நமிதந் தானும்
நவ்வுமி லேச்சர் தியானம் நடையதாங் கிச்சு மாகும்
செவ்விய நமிதந் தானுஞ் சிறிதசைத் தந்த ரங்கம்
தவ்விய மருங்கு பேதந் தத்தில னுரைத்த வாறே. 142

இடுப்பின் பேதங்கள் மூன்று ; அவை, சுபாவம், நமிதம், அநமிதம்.

சுபாவம் : இடுப்பு சற்று அசையாது நிற்றல். விநி. : யோகம், ஞானவழி.

நமிதம் : மிக்கு அசைத்தல். விநி : மிலேச்சர், தியானம் ; நடையதாங்கிச் சுமாகும் (?)

அநமிதம் : சிறிதசைத்தல். விநி. : அந்தரங்கம்.

இவற்றைக் கூறியவன் தத்திலன்.

இடுப்புப்பேதப் பிரகரணம் முற்றும்.

இந்நூலில் பாயிரத்தில் (21) பிருஷ்ட பேதங்கள் நான்கெனக் கூறப்பட்டிருக்கின்றன. நா. சா. (x-25-26) : இடுப்பின் பேதங்கள் ஐந்தாகக் கூறப்படுகின்றன. அவை (1) சிங்க, (ஒரு பக்கமாகத் திருப்பியது), 2)) நிவிருத்த (சுற்றி வருவது), (3) ரேசித (பக்கத்தில் திருப்புவது), (4) பிரகம்பித, (அசைத்தது), (5) உத்வாஹித (உயர்த்தியது). ஸ்ரீ. (7: 307-11) ஷி ஐந்தும் சில எழுத்து வேறுபாடுகளுடன் உள்ளன.

13. பார்சுவ பேதப் பிரகரணம்.

1. ஆலோளித பார்சுவம்.

மூந்தவே பக்க பேத மூன்றிலா லோளித தந்தான்
பந்தகுஞ் சிதமே யென்றும் பகர்விலோ ளிதமே யென்றும்
வந்தமா லோளி தந்தான் வளரிடப் பக்கஞ் சாய்த்தல்
தொந்தமா மபிந யத்திற் றுலங்குநற் சயன மாமே. 143

2. குஞ்சித பார்சுவம். 3. விலோளித பார்சுவம்.

துலங்கிய குஞ்சி தந்தான் சுழற்றியே முன்னும் பின்னும்
நலம்பெறு பக்கஞ் சாய்தல் நற்சபை வழக்குப் பேச்சாம்
இலங்கிய வலது பக்க மிசைத்தவி லோளி தந்தான்
குலுங்கவே சரம்பார்த் தென்னக் கோகள னுரைத்த வாறே

பார்சுவம் - பக்கம் ; விலாப்புறம்.

பார்சுவ பேதங்கள் மூன்று: அவை, ஆலோளித பார்சுவம், குஞ்சிதபார்சுவம், விலோளித பார்சுவம்.

இலக்கணமும் விநியோகமும் :

ஆலோளித பார்சுவம் : இடப்பக்கத்தில் சாய்தல் ; தொந்தாபி நயத்தில் சயனத்துக்கு ஆகும்.

2. குஞ்சித பார்சுவம் : முன்னும் பின்னும் சுற்றிப் பக்கம் சாய்தல் ; நற்சபையில் வழக்குப்பேசல்.

3. விலோளித பார்சுவம் : வலப்பக்கம் சாய்தல் : சரம்பார்த்தல்.

இவற்றை உரைத்தவன் கோகளன்.

பார்சுவபேதப் பிரகரணம் முற்றும்.

பாயிரம் 21 இப்பேதம் நான்கு என்னும்.

நா. சா.: (x-10-17) ஸ - ர. (7 : 303-6): ஐந்து பக்கங்களைக் கூறும்: அவை, நத (வளைந்தது), சமுந்நத (உயர்த்தியது), ப்ரஸாரித (அகன்றது), விவர்த்தித (சுற்றியது), அபஸ்ருத, (திரும்பத் தள்ளியது).

14. கரகேத்திரமென்னும் பாணித்தானப் பிரகரணம்

சீர்மிகு பாணித் தானஞ் செப்பிடிற் பதின்மூன் றாகும்
கோர்வல மிடமுன் பின்கீழ் மேல்சிரம் நெற்றி கன்னம்
வார்புஜ மார்பு தொங்கி மருங்குலித் தான மன்றி
ஏர்பெறு மபிந யித்தல் மற்றிட மேவா தென்னே. 145

பாணித்தானம்-அபிநயத்தில் கைகள் வைக்கும் இடம். இவை பதின்மூன்றும்: அவை, வலம், இடம், முன், பின், கீழ், மேல், தலை, நெற்றி, கன்னம், புஜம், மார்பு, வயிறு, பக்கம். இவற்றையன்றி வேறிடங்களில் அபிநயித்தல் தகாது. கேத்திரம் - க்ஷேத்ரம்.

ஸ - ர. வயிற்றை விட்டு, துடை, சீர்ஷகம் சேர்த்துக் கூறும்.

கரகேத்திரமென்னும் பாணித்தானப் பிரகரணம் முற்றும்.

---

15. சிரக்கர கருமமென்னும்சிரப்பாணி கர்மப் பிரகரணம்

செப்புமுத் தான னந்தான் சிலேஷம் விச்லேஷ மாகும்
மொப்புர க்ஷணமாம் க்ஷேப மோடன நிக்கிர கந்தான்
அப்புமே உத்கிருஷ் டத்தோ டாகிருஷ் டம்வி கிருஷ்டம்மே
தப்பிலாத் துரோட னஞ்சே தனந்தர் டனந்தா னின்னம்.
இன்னமும் பேத னத்தோ டியம்புசு போட னந்தான்
பின்னுமோ டனமா மாவா கனம்விசற் சனமே யென்றும்
பன்னுதற் சனமா மென்றே பகர்சிரோ பாணி கர்மம்
என்னில்பத் தொன்பா னென்றே யிசைத்தனன் கும்ப யோனி

உத்தூனனம் - சிம்பிமுகீவிடுகிறது. சிலேஷம் - ஆலிங்கனம் செய்வது. விசிலேஷம் - ஆலிங்கனம் விடுகிறது. ரக்ஷணம் - அபயாஸ்தம். க்ஷேபம்-தள்ளுகிறது. மோக்ஷணம்-பிடித்ததைப் பிடித்தல்(?). நிக்கிரகம் - பிடித்ததை விடுதல். உத்க்ருஷ்டம் - கீறுதல். ஆக்ருஷ்டம்-அறுக்குதல். விக்ருஷ்டம் - கத்தரித்தல். துரோடனம் - இழுத்தல். சேதனம் - வெட்டுதல். தாடனம் - அடித்தல். பேதனம் - பிளத்தல். சுபோடனம் - தெறித்தல். மோடனம் - மத்திமவிரல் வளைத்து முன் நீட்டல். ஆவாகனம்-அழைத்தல். விசர்ச்சனம்-விடுத்தல். தர்ச்சனம்-அதட்டுதல். சிரப்பாணிகர்மம் - சிரசுங்கையும் கூடிய பாவம் பத்தொன்பது.

இவ்வாறு கூறியவன் அகத்தியன்.

சிரக்கர கருமமென்னும் சிரப்பாணி கர்மப் பிரகரணம் முற்றும்.

நா - சா. (ix: 160-3) உத்கர்ஷணம், விகர்ஷணம், வ்யாகர்ஷணம், பரிக்ரஹம், ஆஹ்வானம், தாடனம், தர்ஜனம், ஸம்ச்லேஷம், வியோகம், ரக்ஷணம், மோக்ஷணம், விக்ஷேபம், தூனனம், விஸர்க்கம், தர்ஜனம், சேதனம், பேதனம், ஸ்போடனம், மோஹனம். ஸ - ர. (7: 543-45) துரோடனம் என்பதைத் தோலனமென்று மாற்றி, பரிக்ரஹம் என்பதைக் கூட்டி (20) ஆக்கும்.



16. கரப்ரசாரமென்னும் அஸ்ததுவாதச ப்ராணப் பிரகரணம்

நாட்டமாங் கரங்க ளுக்கு நவின்றதோர் பிராணக் கையைச்
சூட்டுமே யீரா றுகச் சொல்லுமிக் கரத்தி னும்மே
கூட்டும்ப்ர சார ணக்கை குஞ்சித ரேசி தக்கை
நீட்டவே புங்கி தக்கை நிகழ்பிரே ரிதக்கை மற்றும் 148

இனவப வேஷ்டி தம்முத் வேஷ்டி தம் வியாவி ருத்தம்
கனபரி வர்த்தஞ் சங்கே தத்துள சின்ன கம்பின்
ஞினமிலாப் பதார்த்த டீகஞ் செப்புங்கை பிராண னிற்கு
ஈனவுற விலக்க ணத்தை நவி லுவோம் நூலி யாய்ந்தே. 149

கைகளுக்குரிய பிராணன்களைப் (நகர்ச்சிகள்) பன்னிரண்டாகக் கூறுவர். அவை :—பிரஸாரண, குஞ்சித, ரேசித, புங்கித, பிரேரித, அபவேஷ்டித, உத்வேஷ்டித, வியாவிருத்த, பரிவிருத்த, சங்கேத, சின்ன, பதார்த்தடீகங்களாகும்.

இனி இவற்றின் இலக்கணங்களைக் கூறுவோம் :—

1. பிரஸாரணம் 2. குஞ்சிதம் 3. ரேசிதம்
4. புங்கிதம்

அங்குலி களீமுன் னீட்டப் பிரசார ணம்ம சைத்தல்
தங்குரே சிதம்வ ளைத்தாற் குஞ்சித ஞ் சாற்று மூன்றும்
செங்கையின் சேஷ்டை யென்று பதாகாதி யெதிராய் நீட்டப்
புங்கித மாகு மென்று புகன்றனர் நூல்வல் லோரே. 150

பிரஸாரணம்- அங்குலிகளை முன் நீட்டல்.

ரேசிதம் - அசைத்தல்.

குஞ்சிதம் - வளைத்தல்.

இவை மூன்றும் கையின் சேஷ்டைகள்.

புங்கிதம் - பதாகாதி எதிராய் நீட்டல்.

அபிநய தர்ப்பணம் (1) தெலுங்குப் பதிப்பு (188-201), (2) ஆனந்த குமாரஸ்வாமி பதிப்பு (பக். 44-45) ஆகியவற்றில் கண்ட பேதங்களுக்குப் பின்னும், ஹஸ்தபேதங்களுக்கு முன்னும் துவாதசஹஸ்தப்ராண லக்ஷணங்கள் மேலே கூறியவாறே கூறப்படுகின்றன.

5. பிரேரிதம் 6. அபவேஷ்டிதம் 7. உத்வேஷ்டிதம்
8. வியாவிருத்தம் 9. பரிவிருத்தம்

பிரிகரம் பின்பு நீளிற் பிரேரிதம் விளம்புங் கீழே
சரியப வேஷ்டி தம்முத் வேஷ்டிதம் மேலே நோக்கல்
வரும்வலப் பக்கம் நீளில் வியாவிர்த் தமதுநேர் நீளில்
பரிவர்த்த மெனவிவ் வாறு பகர்கைக் குக்குண மீதென்றே.

பிரேரிதம் - *பிரித்தகை பிறகு நீளுதல்.*
அபவேஷ்டிதம் - *கீழே சரிந்திருத்தல்.*
உத்வேஷ்டிதம் - *மேலே நோக்கல்.*
வியாவிருத்தம் - *வலப்பக்கம் நீளல்.*
பரிவிருத்தம் - *நேர் நீளல்.*

4-9-ம் கைகளின் குணங்கள்.

10. சங்கேத கரப்பிரசாரம்

சொல்லுசங் கேத பேத மிருவகை துலங்குங் கையை
நில்லென வொன்றைக் காட்டி னிர்த்திஷ்ட சங்கே தம்மாம்
வல்லவ மூகத் தாலே வகுத்தகை பொருந்த யார்க்கும்
உல்லின மின்றிச் சாற்று மூகிதச் சங்கே தக்கை. 152

சங்கேத நிர்ண யத்தைச் சாற்றுவோ மின்னு மாடை
இங்கிதப் பணிகள் சர்ப்பம் பசுபட்சி முதலா யேற்கும்
சிங்கள(ர) நவர சங்கள் நித்திப்புப் புளிப்போ டாறும்
அங்கக லிங்க தேச முதலெலம்பத் தாரே டின்னும். 153

நவரத்ந முப்ப ரீகைக் கோட்டைவீ தியுர்தேர் நாகம்
பவபரி யாயு தங்கா லாளப்பெண் மைபகருங் காது
தவமுறு நாசி கண்கள் தனமுத லாய்வி ளங்கும்
அவயவங் கனைச்சங் கேதத் தாலபி நயிக்க லாமே. 154

நிர்த்திஷ்ட சங்கேதம் ஊகித சங்கேதம்

அருள்ஜன்ம நாளைக் கொண்டு அபிநயிப் பதுநிர்த் திஷ்டம்
உருவதாந் திரசா ரங்க ளுற்றவஸ் துக்க ளுக்குத்
தருஜன்ம நாட்கொண் டேறுஞ் சாற்றும்போர் நாட்கொண் டேனும்
பெருமையா மபிந யித்தல் பேசுமூ கிதம தென்றே. 155

152. சங்கேதகரப்பிரசாரம் இரண்டு வகை. அவை நிர்த்திஷ்ட சங்கேதம், ஊகித சங்கேதம். கையை 'நில்' என்று ஒன்றைக் காட்டுவது நிர்த்திஷ்டம்; ஊகிதசங்கேதந்தையானது, கையைப் பொருத்திக் காட்டுகையாலே யார்க்கும் ஊகிக்கும்படி காட்டுவது.

சங்கேத நிர்ணயம்

153-154. இனிச் சங்கேத நிர்ணயத்தைச் சொல்லுவோம்; ஆடை, பணிகள், சர்ப்பம், பசு, பட்சி முதலாக உள்ளவற்றிற்கும்,

சிங்காரம், முதலிய நவரசங்களுக்கும், தித்திப்பு, புளிப்பு முதலான ஆறு ருசிகளுக்கும், அங்க கலிங்க முதலான ஐம்பத்தாறு தேசங்களுக்கும், நவரத்னம், உப்பரிகை, கோட்டை, வீதி, தேர், நாகம், பரி, ஆயுதம், காலாள், பெண்மை, காது, நாசி, கண்கள், தனம் முதலான அவயவங்களுக்கும் சங்கேதத்தால் அபிநயிக்கலாம்.

ஜன்ம நாளைக்கொண்டு அபிநயிப்பது நிர்த்திஷ்ட சங்கேதம், ஸ்திர சரங்களான பொருள்களுக்கு ஜன்மநாள் கொண்டாவது, பேர்நாள் கொண்டாவது அபிநயித்தல் ஊகித சங்கேதம்.

150–155. அபி. த. (தெலு. (188-201) & ஆந்த (பக். 44–45).

1. ப்ரஸாரணம் - (வெளி நீட்டல்) : விரல்களை நீட்டல்.

2. குஞ்சிதம் - (வளைத்தது - சரய்த்தது) - விரல்களை மடக்குதல்.

3. ரேசிதம் - (பிரித்தது) - விரல்களைப் பிரித்தல்.

4. புங்கிதம் - (இறக்கைபோல் படபடப்பது) - பதாகாதிஹஸ்தங்களிலே கையை முன்னே நீட்டி, (விரல்களை) விரித்து, வளைத்து, பிரித்திருப்பது.

5. அபவேஷ்டிதம் (கீழ்நோக்கி முறுக்குவது) - கை கீழ்நோக்கி நிற்பது.

6. பிரேரிதம் (செலுத்துவது) - கையைப் பின்புறமாக நீட்டி (விரல்களை) விரித்து, வளைத்து, அல்லது பிரித்து வைத்தல்.

7. உத்வேஷ்டிதம் (மேல்நோக்கி நீட்டுவது) - உள்ளங்கைமேல் நோக்க வைத்துக் கையை நீட்டுவது.

8. வ்யாவிருத்தம் (திரும்புதல்) - கையைப் பார்சுவ பாகங்களிலே மேலே தூக்குவது.

9. பரிவிருத்தம் (சுற்றித் திரும்புதல்) - பார்சுவங்களிலிருந்து கையை முன்னே கொண்டு வருவது.

10. சங்கேதம் (குறிப்பு) - சொற்களில்லாமல் கருத்துக்களைத் தெரிவித்தல்.

11. சின்னம் (குறி) - நாட்டிய கர்மத்திலே ஸ்தாவர ஜங்கமங்களை அறிவுக்கும் சின்னங்கள். அவை 8—

(1) ஆகாரம், (2) முகம், (3) இடம், (4) கொடி, (5) ஆயுதங்கள், (6) பிரயோஜனங்கள், (7) வியரப்பியம், (8) சேஷ்டை இவற்றைக் காண்பிப்பது.

12. பதார்த்தடீகா (சொற்பொருள் விளக்கம்)-சொற்களின் பொருள்களை அறிவிப்பது.

அபவேட்டிதம், உபவேட்டிதம், வியாவர்த்திதம், ப்ராவர்த்திதம் என்ற நான்கினையும் வர்த்தனை என்று, சிலப். குறிப்புரை (81) ; கைகளின் காரணங்கள் என்று நா. சா. (1: 205 - 210); (ஸ - ர) 7: 537-42) வும் கூறும்.

11. சின்ன கரப்பிரசாரம்

கையினுற் காட்டுஞ் சின்னம் பிரத்தியக்ஷம் பரோக்ஷ மாகச்
செய்யவி ளங்கு மீது திரஞ்சர முதலா யுள்ள
மெய்யாம் வஸ்துக் கள்யாவு மிருநான்கு பேத மாகும்
ஐயமி லாம லென்றே யறைந்தனர் விவரங் கேளே. 156

செப்புமா காரங் காட்டற் நிருமுக நிரீக்ஷ ணம்நேர்
நிற்பதோ ரெல்லை யும்ப தாகமா யுதமு நீள
ஒப்பும் பிரயோ சனத்தோ நிரிய தலங்கள் சேஷ்டை
அற்புத மாகக் காட்டு மதுசின்ன சக்கை யாமே. 157

156–157. ஸ்திரம், சரம் முதலாயுள்ள வஸ்துக்களெல்லாம் எட்டுவித வேற்றுமைகளுள்ளன. அவ்வேற்றுமைகள் (*1*) ஆகாரம், (*2*) முகம், நிரீக்ஷணம், (*3*) நேர் நிற்பதோர் எல்லை, (*4*) பதாகம், (*5*) ஆயுதம், (*6*) பிரயோசனம், (*7*) தலங்கள், (*8*) சேஷ்டை இவற்றைப் பிரத்தியக்ஷமாகவும் பரோக்ஷமாகவும் காட்டுவது சின்னம்.

12. பதார்த்த டீகம்

ஆமெனும் பதார்த்த டீக வஸ்தமோர் பத்தி னுட்பம்
தாமறிந் ததனைக் கையாற் நூன்காட்ட நிச்ச யித்தல்
ஆமிந்த வஸ்த ப்ராணம் நவின்றது வாத சத்தில்
பூமியி லறிந்தா மென்னப் பொருந்துமிம் மூன்றுந் தானே.

நவிலஸ்த துவாத சப்பி ராணமா மீரா நூயு
தவுபா ணிப்பிர விசாரத் தின்குணஞ் சேஷ்டை தானும்
குவிமுலை மாதே கேளாய்க் குணசோம ராச னுக்குத்
தவமிகு சார்ஞ் தேவர் சாற்றினர் பரத நூலில். 159

மேலே கூறிய பத்து விதமான பேதங்களுள்ள வஸ்துக்களைத் தாம் நுட்பமாக அறிந்ததை, (பேச்சில்லாமல்) கையாற் காட்டி நிச்சயித்தல் பதார்த்த டீகமாகும். துவாதச அஸ்தப் பிரமாணங்களின் இம்மூன்றும் (பாணிப்பிரவிசாரம், குணம், சேஷ்டை என்ற மூன்றும் ?) இதனுள் அடங்கும். இவ்வாறு கூறப்பட்ட பாணிப் பிரசாரத்தின் குணங்கள் தொழில்களாகிய பன்னிரண்டான அஸ்த துவாதசப் பிரமாணங்களின் குணங்களையும் செயல்களையும் மிகுந்த தவசியான சார்ங்கதேவர் சோமராசனுக்குத் தாமியற்றிய பரதநூலில் கூறினர்.

சோமராசனுக்குச் சார்ங்கதேவர் கூறியது.

சின்ன கரப்பிரசாரம் இங்குக் கூறியபடியே அபிநயதர்ப்பணம் தெலுங்குப்பதிப்பிலும், (198–200), ஆனந்தக்குமாரசாமியாரின் பதிப்பிலும் (பக். 45) உள்ளன.

அஸ்த அங்குலிகளின் தேவதைகள்

மணிக்கட்டி னயனங் குட்டஞ் சதாசிவன் மயேச்சு ரன்தற்
சனிமத்தி மையரீக் கணேச னஞமி கைத்தான்
கனிட்டைமன் மதனும் பாநு கலியகம் புறமாம் விண்மீன்
இனிநகம் சுரர்தான் ரேகை விரலிலக் கணமி தாமே. 160

கை, விரல்களுக்குரிய தேவதைகள்

மணிகட்டு		அயன் (பிரம்மன்)
அங்குட்டம்	(கட்டைவிரல்)	சதாசிவன்
தர்ச்சனி	(சுட்டுவிரல்)	மகேசுவரன்
மத்திமை	(நடுவிரல்)	அரி
அநாமிகை	(பவித்திரவிரல்)	கணேசன்
கனிட்டை	(சிறுவிரல்)	மன்மதன்
அகங்கை		பாநு (சூரியன்)
புறங்கை		சந்திரன்
நகம்		நக்ஷத்திரம்
ரேகை		தேவர்.

கரப்பிரசாரமென்னும் அஸ்த துவாதச ப்ராணப் பிரகரணம் முற்றும்.

---

17. அசம்யுத அஸ்தலக்ஷணமாகிய கரகரணமென்னும் ஒற்றைக்கை லக்ஷணம்

பதாகத் திரிபதாக வர்த்த பதாககர்த் தரிம யூரம்
சுதாவர்த் தசகத்ர னேட ராளசுக துண்ட முட்டி
சதாசிக ரங்க பித்தம் தகுகட காமு கஞ்சு
சிதானெனப் பதும கோசஞ் சிரசர்ப்ப மிருக சீர்ஷம். 161

தருசிம்ம முககாங் கூல மலபதுமம் தானும் பாணம்
பிரமரஞ் சந்தம் சம்காம் பிரசூட முகுள மாஞ்ச
துரமமு சாசியமமு சப்பக் கஞ்சொ லும் பூர்ண நாபங்
கருதிரு பத்தெட் டாமொற் றைக்கையி லக்க ணங்கேள்.

ஒற்றைக்கைகள் இருபத்தெட்டு : அவை

(1) பதாகம் : (2) திரிபதாகம் : (3) அர்த்தபதாகம் : (4) கர்த்தரி : (5) மயூரம் : (6) அர்த்தசந்திரன் : (7) அராளம் : (8) சுகதுண்டம் : (9) முட்டி : (10) சிகரம் : (11) கபித்தம் : (12) கடகாமுகம் : (13) சூசி :

(14) பதுமகோசம்: (15) சர்ப்பசிரம் : (16) மிருகசீர்ஷம் : (17) சிம்மமுகம் : (18) காங்கூலம் : (19) அலபதுமம் : (20) பாணம் : (21) பிரமரம் : (22) சந்தம்சம் : (23) தாம்பிரசூடம் : (24) முகுளம் : (25) சதுரம் : (26) அம்சாசியம் : (27) அம்சபக்கம் : (28) பூர்ணகாபம்.

1. பதாக அஸ்தம்

பிறப்பு

அப்பதா கம்பி றந்த தயனிட மதன்கு லங்கேள்
முப்புரி நூலோ னுகு மொழிகிறம் வெண்மை யாகும்
அப்பணிந் திலகு மீசன் அதற்கிரு டியெனத் தோன்றும்
செப்பிய வதிதெய் வந்தான் றிருமாலென் றோது நூலே.

இந்நூலில் ஒற்றைக் கைகள் 28 என்று கூறிப் பின் 47 கைகளுக்கு விளக்கங்கள் கூறப்படுகின்றன.

[அசம்யுதம், சம்யுதம் எனக் கைகள் இரண்டு; அசம்யுதம் ஒற்றைக் கை ; சம்யுதம்-இரட்டைக்கை ; இவற்றுடன் நிருத்தக்கையையும் கூட்டி மூன்றாக வகுப்பர் காட்டிய சாஸ்திர ஆசிரியர்].

சிலப். (1 : 3 : 18 உரை) : ஒற்றைக்கைக்குப் பிண்டிக்கை, இணையா வினைக்கை, என்ற வேறு பெயர்களையும் கூறி, அதன் தொகை 33 என்றும் விரிக்கும். அவை :-" இணையா வினைக்கை யிளம்புங் காலை, அணைவுறு பதாகை திரிபதா கையே, கத்திரிகை தூப மராள மிளம்பிறை, சுகதுண் டம்மே முட்டி கடகம், சூசி பதும கோசிகந் துணிந்த, மாசில்காங்கூலம் வழுவது கபித்தம், விற்பிடி குடங்கை யலாபத் திரமே, பிரமரர் தன்னெடு தாம்பிர சூடம், பிசாச முகுளம் பிண்டி தெரிநிலை, பேசிய மெய்ந்நிலை, யுன்ன மண்டலம், சதுர மான்றலை சங்கே வண்டே, அதிர்வி லிலதை கபோத மகரமுகம், வலம்புரி தன்னெடு முப்பத்து மூன்றென், நிலங்கு மொழிப் புலவ ரிசைத்தன ரென்ப".

நா - சா. : 24 ஒற்றைக்கைகளையே கூறும் : அதனில் (1) மயூரம், (2) சிம்மமுகம், (3) பாணம், (4) பூர்ணகாபம் என்பன கூறப்படவில்லை. ஸ - ர - : விலும் 24 கைகளே. ஆனால் அர்த்த பதாகம் இல்லை ; பூர்ணகாபம் ஊர்ணகாபம் என்றுளது.

அபி. த. நூல்களில் 28 ஒற்றைக்கைகளே கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் (1) சந்திரகலா, (2) திரிசூலம் என்ற இரு கைகளும் கூட்டப் பட்டு (1) பாணம், (2) பூர்ணகாபம் என்றவை விடப்பட்டுள்ளன.

பதாகம் பிறந்தது பிரமாவினிடம்; அதன் குலம் அந்தணர் குலம்; நிறம் வெண்மை; இருடி, கங்காதரன்; அதிதெய்வம் திருமால்.

இலக்கணமும் விநியோகமும்

அங்குலி நாலு நீட்டி அங்குட்டந் தனவ ளைத்த
செங்கையைப் பதாக மென்று செப்பினர் விநியோ கங்கேள்
மங்கையே நாட்யா ரம்பம் வாரிநீ ரோடல் காடு
தங்குமிந் துவைநிந் தித்த தனதடங் கட்கு மாமே. 164

அஞ்சன மலிகா ரோலை அங்கனம் நடன பாவம்
நெஞ்சென அரசன் மாவு நிலமதி கதவு வீதி
பஞ்சணை விபக்தி யேழும் பந்தடி காற்று முன்னம்
மிஞ்சியே நதியி லோடும் வெள்ளத்தின் மீது நீச்சாம். 165

நீச்சுடன் மௌனஞ் சத்தியம் நிலைவிலாக் காலங் கந்தப்
பூச்சுடன் சமர்த்தன் புண்ணியன் போதனை போகச் சொல்லல்
ஆச்சென்னப் பெருக்கித் தீத்த லளந்திடு முழமும் வேலும்
ஏச்சுள சூதுக் காயை யெறிந்திடல் வெயில் மறைப்பாம்.

மறைப்புடன் வாளின் ரூபம் வளர்த்தியுங் குட்டை கூதல்
விரைப்புடன் காய்தல் வீரம் வெகுதய வாசீர் வாதம்
சிறப்புள தெய்வ லோகத் தினைசுட்டு நீட்ட லாணல்
உறப்புடன் செவிடு தன்னி லோங்கியே யடித்த லாமே.

அடித்திடும் பெரியோர் கண்டிப் பகங்கையாற் றயிரின் மத்தைப்
பிடித்துக் கடைதல் மூடல் பெருவழி நடத்தல் வேண்டாம்
அடித்திட வடேயென் றேசி யழைத்தலுந் தொடுதல் தன்னைப்
படித்திட வுரைக்குங் கையின் பதாகமே வருமென் றோதே.

---

1. பதாகத்தின் தோற்றம்: பிரமன் பரப்பிரும்மத்தை ஒருமுறை பார்க்கப் போனபோது பதாகா (கொடி) உருவத்தில் கையை நீட்டி, 'ஜய ஜய பவ!' என்று ஸ்தோத்திரம் பண்ணினார்: அக்காரணத்தால் அப்படிப் பிடிக்கப்பட்ட ஹஸ்த பதாகம் என்று உலகத்தில் பெயர் பெற்றது.

இதன் அதிதேவதை பரப்பிரமம்.

[அபிநயதர்ப்பணம் தெலு: 215–218: ஆந்த. பக். 46]

164. இலக்.: நான்கு விரல்களையும் நீட்டி, கட்டைவிரலை வளைத்தல்.

164-168. விநி.: நாட்யாரம்பம்; கடலலை நகர்ச்சி; காடு; சந்திரனைப் பழித்தல்; ஸ்தனதடம்; அஞ்சனம்; மலை; மேகம்; ஓலை; நடனபாவம்; அரசன்; குதிரை; நிலம்; சந்திரன்; கதவு; வீதி; மெத்தை; ஏழு வேற்றுமை உருபுகள்; பந்தடி; காற்று; நதியிலோடும் வெள்ளநீச்சு; மௌனம்; சத்தியம்; காலம்; கந்தப்பூச்சு; சமர்த்தன்; புண்ணியன்; போதனை; போகச்சொல்லல்; ஆயிற்று எனல்; பெருக்கித்தள்ளுதல்; முழம்; வேல்; சூதுக்காயை எறிந்திடல்; வெயில் மறைப்பு; வாளின் உருவம்; வளர்ச்சி; குட்டை; குளம்; கோபித்தல்; வீரம்; வெகுதயவு; ஆசீர்வாதம்; தெய்வலோகத்தைச் சுட்டிக் காட்டல்; ஊக்கம்; வேகமாகச் செவியில் அறைதல்; பெரியோர் கண்டிப்பு; உள்ளங்கையால் மத்தைப் பிடித்துத் தயிர் கடைதல்; மூடல்; பெருவழி நடத்தல்; 'அடே! அடித்திட வேண்டாம்' என்றல்; ஏசி அழைத்தல்; தொடுதல் தன்னைப் பின்பற்ற உரைத்தல்; இவை பதாகத்தால் குறிக்கப்படும்.

---

1. பதாகஹஸ்தம் (கொடி)

நா. சா. (ix-17-26) இலக்.: விரல்கள் ஒன்றோடொன்று நெருங்கியிருக்க நீட்டிக் கட்டை விரலை வளைப்பது. விநி.: அடித்தல்: எரியும் வெயில், மகிழ்ச்சியடைதல்; தன்னைத்தானே கருவத்தோடு குறிக்கும் போது இக்கையை முன் நெற்றியின்முன் வைக்கவேண்டும்; வெயிலின் கொடுமை; மழைப்பொழிவு, மலர்மழை இவற்றைக் குறிக்க இரண்டு பதாகைக் கைகளை, விரல்களை விரித்தும் அவற்றை அசைத்துக்கொண்டும், கூட்டி வைக்கவேண்டும். ஆழமற்ற நீர்க்குட்டை, மலர்ப்பரிசு, புல், தரையிலிட்ட கோலம் இவற்றைக் குறிக்க இரண்டு பதாகக்கைகளை ஸ்வஸ்திக நிலையில் வைக்கவேண்டும்.

வஸ்து ஏதேனும் மூடப்பட்டோ, திறக்கப்பட்டோ, காக்கப்பட்டோ, அடர்த்தியாகவோ, ஒளிக்கப்பட்டோ உள்ளதைக்காட்ட இரண்டு பதாகைக் கைகளின் விரல்களைக் கீழ் நோக்கிக் காட்டவேண்டும் காற்று, கடலலைகளின் நகர்ச்சி, அவை கரையில் மோதுவது, வெள்ள

சங்கிண்ணி பதாகம்

பதாகமென் றுரைத்த நந்தி பரதத்திற் குகந்த கையில்
விதாயமாய் மத்திமத்தை விரைவுடன் மடக்கிச் சுட்டைச்
சுதாவுடன நாமி கத்தாற் றொட்டுமே நீட்டி நாக்காற்
சதாபுகழ் பெண்கள் தங்கள் தானத்தி லுருவந் தானே.

இவற்றைக்காட்ட இருபதாகக்கைகளே, விரல்கள் கீழ் நோக்கியிருக்கவும் அவை மேலும் கீழுமாக அசையவும் அமைக்க வேண்டும். ஊக்கம், பல என்ற எண், மக்கட்கூட்டம், உயரம், பறையடித்தல், பறவைகள் உயரப்பறத்தல் இவற்றைக் குறிக்க இக்கையை ரேசகமாக வைக்கவேண்டும். அலம்பின, அழுத்தின, தலக்கின, பொடியாக்கின, மலைமேல் தூக்கின, வேர்பறித்த இவ்வகையான எந்தப் பொருளையும் இரண்டு பதாகக் கைகளே ஒன்றோடொன்று தேய்ப்பதால் காட்டலாம். புருஷன் ஸ்திரீ இவர்களைக் காட்டவும் இக்கை பயன்படும்.

சிலப்பதிகாரம் (பக். 93) : "நான்கு விரலும் தம்முள் ஒட்டி நிமிரப் பெருவிரல் குஞ்சித்து நிற்பது ; என்னே, பதாகையென்பது பகருங்காலைப் பெருவிரல் குஞ்சித் தலாவிர ஞான்கு, மருவி நிமிரு மரபிற் றென்ப' என்றாகலின். (சிலப். 1 : 3 : 18 உரை).

ஸ. - ர. (7 : 102) தர்ஜனியில் மூலத்தில் கட்டை விரலை வளைத்து, மற்றவற்றை நெருக்கி நீட்டுதல்.

அபி. த. தமிழ் : (31–34)

அங்குலி நாலும் நீட்டி யங்குட் டத்தினை வளைத்த
செங்கையைப் பதாக மென்று செப்பினர் வினியோ கங்கேள்
மங்கையே நாட்டியா ரம்பம் வாரிதீ ரோடல் காடு
தங்கு மிந்துவை நிந்தித்த தனதடங் கட்குந் தானே. (1)

இரவுக்கும் நதிக்கும் தெய்வ ரெய்திய கூட்டங் கட்கும்
தூரகங் கண்டனங் காற்றுக்குந் தூய தோரூப சாந்திக்கும்
தெரிக வலைகள் பிரதா பஞ்செய் பிரசாத சயனம்
ரவு சந்திரகாந் கைக்க பாடஞ் சாத்துதற் குந்தானே. (2)

ன்னமே எழுவிபத் திக்கு மலைக்கும் வீதியிற் செல்வோர்க்கும்
ன்னுடல் வண்ணத் துக்கு மருவுதன் றேகத் துக்கும்
ான்னதோர் சபதத் திற்கும் சொற்பமாம் பாவ னைக்கும்
ன்பனே யோலை திண்ணைத் திரவியந் தொடவு மென்ப. (3)

ர் வாதத் துக்கு மரசர்க்கு மங்கங் கென்று
சந் திக்க வுந்தான் பெறுசுகிர் தங்க ளுக்கும்
சமபுத் திக்குந் திசழ்ந்துமுன் செல்லு தற்கு
கத்தி தன்னே யணியவும் பதாகந் தானே. (4)

தானென வுரைத்த ரூபந் தண்ணீர்பால் வருஷம் மாசம்
ஏனெனக் கேட்டல் துக்கம் வில்லீனப் பிடித்தி முத்தல்
மோனமா மழைவி கார மொய்குழல் விளக்கு மாறுபோல்
நானெனக் கையாற் றூத்தல் ஈவமுடன் தியானம் கேட்பாம்.

கேட்டிடு மனையிற் கந்தங் கிண்ணத்திற் ரெடுதல் ரூபத்
தீட்டியாங் காடா லிங்ன மதின்மகிழ் சுரத லீலை
நாட்டிய பூரட் டாதி நல்கவே யதுமந் தன்றன்
பாட்டிலே சங்கீர் ணப்ப தாகமென் றுரைத்தான் பாரே.

169. இலக்.: நந்தி பரதத்தில் கூறியபடி, பதாகக்கையில் நடுவிரலை விரைவுடன் மடக்கிச் சுட்டுவிரலை பவித்திரவிரலால் தொட்டு, நீட்டித் தானத்தில் வைத்தல்.

170 விநி.: தண்ணீர், பால், வருஷம், மாதம், 'ஏன்' எனக் கேட்டல், துக்கம், வில்லைப்பிடித்திமுத்தல், மௌனம், மழை, விகாரம், கூந்தல், விளக்குமாறு, 'நான்' என்று கையினால் காட்டல், தியானம்;

171. மனை, கந்தம், கிண்ணத்தைத் தொடுதல், சுட்டி, காடா லிங்னத்தில், சுரதலீலை, பூரட்டாதி. இவ்வாறு அநுமன் சங்கீர்ணபாதகத்தின் விதியோகம் என்று கூறினன்.

சிலிட்டபதாகம்

பாருமே பதாகந் தன்னிற் பதிகனி வீளையு மாகி
சாருமே குக்க லிற்கும் தானணி முதுகி னிற்கும்
நீரின்மேல் வட்டப் பூச்சி நிகழ்த்துமர்ச் சுனம தத்திற்
கூறுமே யிதுசி லிட்ட பதாகமென் றுரைத்தல் கொள்ளே.

சிலிட்ட பதாகம்: இஃது அருச்சுனமதம்.

172. பதாகத்தில் சிறுவிரலை வளைத்தால், நாய், முதுகு, நீர்ப்பூச்சி இவற்றைக் குறிக்கும்.

தலபதாகம்

அணிபதா கக்க ரத்தி லங்குட்டங் கனியு யர்த்தித்
தணியவே மற்ற மூன்று விரல்தனைச் சாடை யாக
நுனிதனை யடக்கிக் காட்டல் நுவல்தல பதாகைக் கையாம்
பணியுலா விதியோ கந்தான் உடும்புக்கும் பகர லாமே. 173


2161

1. காட்டிய உபயோக.....விநாயகன் மதம் 79

பகருமே நரம்பி ழுத்துப் பதைத்திடு ஜன்னி ரோகம்
தகையுள குட்ட ரோகஞ் சார்ந்திடு ராமப் பற்றும்
அகமகிழ்ந் தோது மின்ன மகத்தியின் மலர்க ளுக்கும்
தகுமென விநாய கன்றன் மதத்தினிற் சாற்றும் பாரே. 174

173-174. இலக்.: பதாகக்கையில் கட்டை விரலையும் சுண்டு விரலையும் உயர்த்தி, மற்ற மூன்று விரல்களைச் சிறிதளவு தணித்துச் சாடையாக அடக்கிக் காட்டல்.

விநி.: உடும்பு. நரம்புகளை இழுத்துப் பதைக்கச் செய்யும் ஜன்னி, குட்டரோகம், ராமப்பற்று (ஒரு நோய்), அகத்தியின் மலர்கள்.

இது விநாயகன் மதம்.

2. திரிபதாக அஸ்தம்.

இத்திரி பதாகந் தோன்று மிணங்கவே மாலி டத்திற்
சுத்தமாஞ் சாதி வேந்தன் துலங்கிய நிறம்சி வப்பாம்
சத்திவேற் கரத்திற் கொண்ட சாமியே யிருடி யாகும்
சித்தியா மதிதெய் வந்தான் சிவனெனச் சொல்லு நூலே.

அன்னமே பதாகந் தன்னி லகாமிகாங் குலியா மொன்று
தன்னையே வளைக்கத் திரிபதா கம்விநி யோகங் கேளு
மன்னிய வருட மாதம் வருருது தினங்க ளுக்கும்
முன்னிய வாரு கோற்கு முயுத்தங்க ளுக்கும் விள்ளே. 176

விண்டதோர் கபோல ரேகை விளங்கிய திருமா லுக்கும்
சண்டையிற் பாணம் போடல் தரிக்கும் சிரீடம் கோபம்
எண்டிசை புகழ்தே வேந்த்ர னிலகிய திலதம் காமம்
மண்டிய வாசங் காதும் மங்கள மரமு மாமே. 177

மரமுடன் சுடர்வி ளக்கு வச்சிரா யுதமே நெஞ்சில்
திரமுடன் வைத்தால் ஞானச் செவிக்கரு கிடகி மித்தம்
உரமுடன் தபித்தால் வைதல் ஒங்கிய மூன்று மாகும்
திரமறிந் தளித்து வாங்க றம்பதி சேர்க்கை யாமே. 178

தானெனப் புருவ மத்தி தன்னிலே வைத்தாற் றெய்வம்
ஆனதோர் முகத்தி னேரா யமைத்திடி லோட மாகும்
மானமாய்ப் புயத்தில் வைத்தால் வம்சமாம் சவாதை டுத்தல்
தானென வுரைக்கும் வீர ரசமுடன் ருமும் பூவே. 179

சலிதத்திரி பதாகம்.

திரிபதா கத்த சைத்தாற் செலுமது சலித மென்னும்
திரிபதா கமதா மீதுதிக ழீட்டி திருப்ப றாளைக்
குறுகவே குவிப்ப தற்குங் குடுகுடுப் பையையாட் டற்கும்
பெருமரக் கொம்பா டற்கு பலத்தரோ கணிக்கு மாமே.

175. தோற்றம் - திருமாலிடம். சாதி - அரசசாதி. நிறம் - சிவப்பு. இருடி - வேலாயுதன், அதிதெய்வம் - சிவன்.

176 - 79. இலக். : பதாகக்கையில் மோதிர விரலை வளைத்துக் காட்டல்.

விதி. : வருடம், மாதம், ருது, தினங்கள், வாருகோல் (துடைப்பம்), யுத்தங்கள். கபோல ரேகை. திருமால், சண்டையிற் பாணம் போடல், கிரீடம், கோபம், தேவேந்திரன், திலகம், நாமம், நல்ல வாசனை, காது, மங்கலம். (இக்கையை நெஞ்சில் வைக்க), சுடர் விளக்கு, வச்சிராயுதம் ; (செவிக்கருகில் வைக்க), நிமித்தம் ; (மார்பில் வைத்தால்) வைதல் ; மூன்று. வைத்து வாங்கத்தம்பதி சேர்க்கை யாம். (?)

புருவமத்தி தன்னிலே வைத்தால், தெய்வம் ; முகத்தின் நேராய் அமைத்தால், ஓடம் ; புயத்தில் வைத்தால், வம்சம், சவால் கூறுதல் 'நான்' என்று கூறும் வீராம்சம் ; தாழம்பூ.

சலிதத்திரிபதாகம்

180. இலக். : திரிபதாகத்தை அசைப்பது.

விதி. : ஈட்டி திருப்பல், தாள்களைக் குறுக்கக் குவித்தல் ; குடு குடுப்பையை யாட்டுதல் ; பெருமரக்கொம்பு ஆடல் ; ரோகிணி.

---

2. த்ரிபதாகஹஸ்தம்.

நா. சா. (ix : 26-38). பதாகத்தின் மூன்றும்(?) வீரலை மடக்குவது. பிரார்த்தனை, தாழ்ச்சி, 'போய்வா' என்று சொல்வது ; தடுப்பு, தழுவு, தாக்குவது, வணக்கம், ஒப்பிட்டுப்பார்த்தல், மாறுபாடு கூறுதல், புண்ணிய வஸ்துக்களைக்கொண்டு தலையைத்தொடுதல் அல்லது அவற்றைத் தலையில் வைத்தல், தலைப்பாகைவைத்தல், முடிசூட்டுதல், வாயை அல்லது காது களை மூடுதல்.

இக்கையை விரல்கள் கீழ்நோக்கி வைத்து, மேலும் கீழும் அசைப்பது, சிறுபறவைகள், சிற்றூறு, பாம்பு, தேனீ, முதலியவற்றின் ஓட்டத்தைக் காட்டும். திரிபதாகத்தின் மூன்றும் விரலால் கண்ணீர் அல்லது திலகம் துடைத்தல், கூந்தலைத் தொடுதல் ஆகியவற்றைச் செயயலாம்.

இரண்டு திரிபதாகக்கைகளை ஸ்வஸ்திகமாக வைத்தல் குருக்களின் பாதங்களை வணங்குவதைக் காட்டும். கலியாணத்தைக் குறிக்க, இரு

3. அர்த்தபதாகம்.

சொல்லுமர்த் தபதா கந்தான் தோன்றும்பி ருகுவி டத்தில்
புல்லுமே குலத்தில் வேந்தன் புகழ்கிறம் பொன்ன தாகும்
அல்லலில் லாம லோது மப்பிரு திருடி யென்றே
சொல்லுமே யதிதெய் வந்தான் திருமா லுஞ் சிவனு மாமே.
கண்டதி ரிபதா கத்திற் கனிட்டிகை தனவ ளத்துக்
கொண்டகர்த் தபதா கம்பின் கூறிய விநியோ கங்கேள்
வண்டமிழ்ப் பலகை தீரம் வருமிரு பேர்க ளென்னல்
துண்டிக்குஞ் சூர்க்கத் திக்குந் துவசத்துஞ் சிகரத் தாமே.

வக்கிரார்த்த பதாகம்.

தக்கவர்த் தபதா கத்திற் றற்சனி மத்தி மத்தை
வக்கிர மாய்வ ளத்தல் வக்ரார்த்த பதாக மீது
மிக்கவங் குசமு ளீள்பல் வேடதா ரிக்கு மீன்கொத்
திக்குமி டுக்கித் தேள்கொ டுக்கிற்குஞ் செப்ப லாமே. 183

திரிபதாகக் கைகளின் நுனிகளும் சந்தித்துக் காட்டவேண்டும். அவை சாய்ந்து ஸ்வஸ்திக நிலையில் நிறுத்தப்பட்டால், நிரகங்களைக் காட்டும். உள்ளங்கை கீழ்நோக்கி வைக்கப்பட்டால், சங்கியாசி; இரண்டும் ஒன்றை யொன்று பார்ப்பதுபோல் வைத்தால், கதவு; கடலினுள் நெருப்பு, யுத்தம், கடலில் கொடிய பிராணிகளைக் குறிக்க, இரண்டு கைகளில் ஒன்றை முகத்திற்கு நேரே உயர்த்தி, வீரல்களைக் கீழ்நோக்கி வைத்து அவற்றை ஆட்டவேண்டும். இக்கைகள் குரங்கின் குதி, அலையோட்டம், காற்று வீச்சு, ஸ்திரீகளின் குதித்தல் இவற்றையும் காட்டும். பிறைச்சந்திரனைக் காட்ட, இக்கையின் கட்டைவிரலை முன்னே நீட்டுக; ஓர் அரசன் தன் பகைவன்மீது போர்க்கெழுவதைக் காட்ட இக்கையைப் பின்னுக்குத் திருப்புக.

சிலப்.: (பக். 93) திரிபதாகையாவது - பதாகைக் கையின் அணிவிரல் மூடக்குவது; என்னே? "திரிப தாகை தெரியுங் காலை, யறைப தாகையி னணிவிரன் மூடக்கினுஞ் தாமென மொழிப வறிந்தி னோரே" என்றாகலின்.

அபி. நூ. (தமிழ் 36.)). இரண்டு செய்யுட்கள் உள. முதற்செய்யுள் இந்நூலின் 176 ஆம் செய்யுளே. மற்றது பின்வருமாறு :—

*மகுடங்கள் மரங்க ளுக்கும் வச்சிரா யுதந்த னக்கும்
மிகுதாளி யின்பூ வுக்கும் விளக்கொடக் கினிச்சுவா லுக்கும்
பகர்பெறு கபோலம் ரேகை பத்திரம் பாணங் கட்கு
மகிழ்ந் தீந்து வாங்கு தற்கும் வழுத்தினர் திரிப தாகம். 36*

181. அர்த்தபதாகத்தின் தோற்றம், பிருகிவிடம்: குலம் க்ஷத்திரியகுலம்: நிறம், பொன்; இருடி, பிருகு; அதிதெய்வம், திருமாலும் சிவனும் ஆகும்.

182. இலக்.: திரிபதாகத்தில் சுண்டுவிரலை வளைத்தல்.

விநி.: தமிழ்ப் பலகை; தீரம்; 'இருவர் வருவர்' என்றல்; சூர்க்கத்தி; துவசம்; சிகரம்.

வக்கிரார்த்த பதாகம்.

183 இலக்.: அர்த்தபதாகத்தில் சுட்டுவிரல், நடுவிரலை வக்கிரமாய் வளைத்தல்.

விநி.: அங்குசம்; மீண்டபல்; வேடதாரி; மீன்கொத்தி; இடுக்கி; தேள் கொடுக்கு.

4. கர்த்தரீமுக அஸ்தம்.

இக்கர்த்த ரீமு கந்தா னிறையோ னிடத்திற் றோன்றும்
மூக்கிய குலமாம் வேந்தன் மொழிநிறஞ் சிவப்பு தாகும்
தொக்குலா விருடி யேவ ருணனதி தெய்வந் தோன்றும்
சக்கரந் தாங்கும் கையோ னென்னவே சாற்று நூலே.

அர்த்தப தாகத் திற்றற் சனிகனி பின்ன தாக
வைத்தல் கர்த்தரி முக்கை வயணங் கேளாண் பெண்ணீணப்பி
ரித்திடல் விபரீ தங்கள் புரண்டிடல் கண்க டைக்கு
மொய்த்திடு மரணம் பேத முகில்மின்ன லுக்கு மாமே. 185

வையத்தில் வீழ்த லுக்கும் வளர்கொடி களுக்கும் போக
சையோகம் விரகத் திற்குந் தனிக்கோல மிடுத லுக்கும்
பையதோ முகமாய் வைக்கப் பட்சிகண் மூக்கிற் காகும்
எய்யுமுத் வேஷ்டி தத்தா லிதயவி கார மாமே. 186

ஆமது சந்த டிக்கு மாகுபுங் கிதமாம் வேகம்
தாமது சிரமேல் வைக்கச் சாவென்பர் நெற்றி தன்னில்
போமது நிந்த னைக்கும் பொருந்திய சோத னைக்கும்
மாமார்பு நேராய் வைத்தல் மனதுபே தித்த லாமே. 187

---

3. அர்த்தபதாகஹஸ்தம்: (அரைக்கொடி).

இந்த அஸ்தம் நா. சா.வீலும் ஸ. ர.வீலும் சிலப்பதிகாரத்திலும் கூறப்படவில்லை. தமிழ் அபி. த. (37) இந்நூலிலுள்ள 182 செய்யுளைப் போன்றதே.

மதிபே தங்க ளிரட்டை மஞ்சமாம் நாபி தன்னில்
இதமுடன் வைத்த லாழ்ந்த இதவஞ்ச கபட மாகும்.
விதங்களிப் பொருளே யெல்லாம் விதித்தனர் பரத நூலோர்
கதிகர்த்த ரீமு கக்கைக் காம்விநி யோக மென்றே. 188

சிலிட்ட கர்த்தரீமுகம்.

கர்த்தரீ முகக்கை யின்றன் கவட்டுக்கு ளங்குட் டத்தை
வைத்தது புதனுக் காகும் வன்னிம ரம்வ ராளிக்
கத்தமா மெனவே சுங்கன் பரதத்தி னிற்சி லிட்டக்
கர்த்தரி முகக்கை நேர்மை கருதிய தறிந்து கொள்ளே. 189

184. தோற்றம் - சிவபெருமானிடம்; குலம் - அரசர்குலம்; நிறம் - சிவப்பு; இருடி - வருணன். அதிதெய்வம் - சக்கரபாணி (திருமால்).

185 - 188. இலக்.: அர்த்தபதாகத்தில் சுட்டு விரலைச் சுண்டு விரலின் பின்னதாக வைத்தல்.

விநி.: ஆண் பெண்ணைப் பிரித்திடல்; விபரீதங்கள்; புரண்டிடல்; கண்கடை; மரணம்; பேதபாவனை; முகிலின் மின்னல்; தரையில் வீழ்தல்; வளர்கொடிகள்; போகசையோக விரகம்; கோல மிடுதல்; (அதோ முகமாய் வைக்க), பறவைகளின் அலகு; (உத்வேஷ்டிதத்தால்), இதய விகாரம், சந்தடி; (புங்கிதமாய் வைத்தால்), வேகம்; (சிரசின்மேல் வைக்க), சாவு; (நெற்றியில் வைக்க), நிந்தனை, சோதனை; (மார்பு நேராய் வைக்க), மனது பேதித்தல், மதிபே தங்கள், இரட்டை மஞ்சம்; (நாபியில் வைக்க), ஆழ்ந்த நயவஞ்சக கபடம்.

சிலிட்ட கர்த்தரீமுகம்.

189. இலக்.: கர்த்தரீமுகக்கையின் கவட்டுக்குள் கட்டைவிரலை வைப்பது.

விநி.: புதன்; வன்னிமரம், வராளி.

இல்வாறு சுங்கன் பரதத்தினில் கூறப்பட்டுள்ளது.

---

4. கர்த்தரீமுக ஹஸ்தம். (கத்தரிக்கோலின் அலகுகள்)

நா. சா. (ix : 39-41) **கர்த்தரீமுகம் கிரிபதாக அஸ்தத்தில் தர்ஜனியைப் பின்புறமாக வளைத்தல். இக்கை (கீழ்நோக்கிக் காட்ட), வழிகாட்டல், காலுக்கு அழகு செய்தல் அல்லது பூச்சுப் பூசுதல், குழந்தைகள் தவழ்தல்; (வீரல்கள் உயர நோக்கிக் காட்ட), கடித்தல், கொம்புகள், கடிதங்கள்; (கடிவாள் பின்புறமாக வளைக்கப்பட்டால்), கீழே விழுதல்,**

5. மயூர அஸ்தம்.

ஆகிய விம்ம பூர மழையுண்டோ னிடத்திற் ரேன்றும்
மீகமா கியகு லத்தில் விஞ்சையன் நிறங்க றுப்பாம்
சோகந்தீ ரிருடி யாகுஞ் சுகனதி தெய்வ மேக
வாகன னகு மென்றே வழுத்தினர் பரத நூலோர். 190

மையுரு கர்த்த ரிக்கை வருமிலக் கணத்த நாமி
கையுட னங்குட் டத்தைக் கலந்திட மயூர மாகும்
வையுறும் விரியோ கங்கேள் மயிலுக்குங் கொடிக ளுக்கும்
எய்யுமாஞ் சக்க ரத்தோ டியல்கூந் தலுக்கு மாமே. 191

கூந்தற் சிறுக்க ணிக்குங் குடுகுடுப் பைக்குங் கோல
வாந்திசெய் வதற்கும் ரத்த மலர்மாலை சாற்ற லுக்கும்
பாந்தமா மரியா தைக்கும் பட்சியின் கூட்டத் துக்கும்
ஏந்திய நுதலில் நாம மிடல்தி ளகத்து மாமே. 192

மேலதா மைதீட் டற்கும் விழிநீரைச் சிதறு தற்கும்
சாலவே பயங்காட் டற்குஞ் சாத்திர வாதத் திற்கும்
ஆலஞ்சேர் விழியி னுளே யருள்பிரா ணயாமத் திற்கும்
மாலதாய்க் கமழ்ந்து பூத்த மலர்கொய்த லுக்கு மாமே. 193

சிலிட்ட மயூரம்.

ஆகுமே மயூரந் தன்னி லழகிய மத்தி மத்தைத்
தாகமாய் வளைக்கச் செய்வாய் தன்னுடன் பரிக்கு மென்றே
பாகமாய் விளங்குஞ் சுக்ர பரதத்தி லுரைத்த வாற்றை
யூகஞ்சே ருஞ்சி லிட்ட மயூரமா யுரைத்த வாறே. 194

சாவு, அளவுமீறுதல், தலைகீழாதல், கலக்கம், நம்புதல்; (இரண்டு கர்த்தரீ முகக்கைகள் சம்யுக்தமாகச் சேர்த்தாலும், ஒற்றைக்கை அஸம்யுக்தமாக விருந்தாலும்), மான், காட்டெருமை, எருமை, ஐராவதம், காளை, கோபுரம், மலையுச்சி. ஸ - ர. (7: 119) திரிபதாகத்தின் சுட்டுவிரல் நடுவிரலின் பின் பொருக்தாமல் இருத்தல்.

2. சிலப். (பக். 93)
திரிபதாகையின் முடங்கிய அணிவிரற் புறத்ததாகிய நடுவிரலைச் சுட்டுவிரலோடு பொருந்த நிமிர்ப்பது. என்னை, 'கத்தரிகையே காண்டக விரிப்பின், அத்திரி பதாகையின் அணியின் புறத்தைச் சுட்டக மொட்ட விட்டுநிமிர்ப் பதுவே' என்றாராகலின்.

அபி. நி. (தமிழ் 38-39): சிற்சில வேற்றுமைகளுடன் இந்நூலின் 185, 186 செய்யுட்களே.

190. தோற்றம் ; மழையுண்டோன் (வருணன்)? குலம் - வித்யாதரகுலம். நிறம் : கருமை ; இருடி - சுகன் ; அதி தெய்வம் - மேகவாகனன் (இந்திரன்).

191. இலக்.: கர்த்தரிக்கைக் கையில் மோதிர விரலோடு கட்டை விரலைக் கலப்பது.

191—194. விநி.: மயில் ; கொடிகள் ; சக்கரம் ; கூந்தல் ; சுருட்டைக் கூந்தல் ; குடுகுடுப்பை ; வாந்தி செய்வது ; இரத்தின மாலை, மலர்மாலை சாற்றல் ; மரியாதை ; பறவைக் கூட்டம் ; நெற்றியில் நர்மமிடல் ; திலகம் ; மைதீட்டல் ; கண்ணீரைச் சிதறுதல் ; பயங் காட்டல் ; சாத்திரவாதம் ; பிராணயாமம் ; பூத்தமலர் கொய்தல்.

சிலிட்ட மயூரம்.

இலக். : மயூரத்தில் மத்திமத்தை வகோத்தல்.

விநி. : தன்னுடன் தாங்குதல்.

இது சுக்கிரபரதம்.

6. அர்த்த சந்திர அஸ்தம்

துதிக்குமிவ் வர்த்த சந்திரன் ரேன்றுமம் புலியி டத்தே
மதிக்கின்ற குலமாம் வைசியன் வண்ணமே தூம மாகும்
கதியரு ளிருடி யத்திரி கருதுமே யதிதெய் வந்தான்
விதிதலை கையிற் கொண்டோ னென்னவே விள்ளு நூலே.
திட்டம்ப தாகக் கையிற் சேருமங் குட்டந் தன்னைச்
சட்டமாய் நீட்ட வர்த்த சந்த்ரனும் விநியோ கங்கேள்
அட்டமிச் சந்தி ரன்பல் லாயுதங் கண்டத் திற்கை
இட்டுத்தள் ளவந்தே வாபி டேகங்க ளுக்குந் தானே. 196

5. மயூர ஓஸ்தம்—மயில்.

இக்கை நா - சா ; ஸ - ர ; விஷம் சிலப்பதிகார உரையிலும் கூறப்படவில்லை.

அபி. நி. (தமிழ் 39-40).

அமையுறு மயூர வத்தம் வருமிலக் கணம ளுமி
கையுட னங்குட் டத்தைக் கலந்திட மயூரக் தானே.
மயூரக்கை விநியோ கங்கேள் மயிலுக்குங் கொடிக ளுக்கும்
இயலுறு சக்கரத்தன்னை யெறியவும் கூந்த லுக்கும்
நயனங்கள் திலதத் துக்கும் லலாடத் துக்குங்கண் ணீராம்
பயங்காட்டல் சாத்திர வாதம் பிரசித்தங் களுக்குந் தானே.

பாத்திரங் களுக்கு மேவும் பவங்கட்கு மிடைக்கு மென்ப
சாத்திய தியானங் கட்குந் தனக்குள்சிந் தைக்கு மென்பி
ராத்தினை களுக்கு மூணர் பால்நமஸ் காரங் கட்கும்
காத்திரந் தொடவு மேவுங் கரமர்த்த சந்த்ரன் றனே. 197

தான்சர நோட்டம் பார்த்தற் றனிப்பாவங் கேள்வி கேட்டல்
வானுறு குயவன் கையால் மண்பிடித் திடலோ டொத்து
யானைக்கா தசைத்தல் வில்லி னடையாளங் காட்டப் பெண்கள்
கானமா மஞ்சட் பூசற் கண்ணுடி பார்த்தல் சொல்லே. 198

சொல்லுவ ரிடைபி டித்தற் சூழுமாத் திரையைத் தள்ளி
புல்லிய தாள மொத்துப் போடுதல் பிரதிபிம் பத்தின்
வல்லிய வர்த்த சந்த்ர பாணத்தும் பொருந்து மென்று
கல்விசேர் பரத நூலோர் காட்டு மிவ்வா றுணர்ந்தே. 199

தெரியக்கை ரேகை பார்த்தல் திரிப்பதாங் கயிறு நூற்கும்
தரையிற்கை கூடு தற்குந் தலைசுற்றி யாடு தற்கும்
நெரிநெட்டி சுற்று தற்கும் நிகழ்த்துங் கர்ப்பூர தீபங்
கரமுகம் வைப்ப தற்கும் கதிரொளி பார்ப்ப தென்னே. 200

என்னவே பண்டி தன்கை காட்டென நீட்டு தற்கும்
இன்னும் பாணத் திற்கை யிதமுட னீர்ப்புரோ கஷித்தல்
நன்னய மாகக் கண்ணு டிக்குப மான மென்பர்
கன்னியே அர்த்த சந்திரன் கைதனை யாய்ந்து ணர்ந்தே. 201

ஆயந்தகன் னத்தில் வைக்கி லதுவேசிந் தனையாஞ் செல்வம்
தோய்ந்தமுன் கையில் வைக்கில் துலங்கிய கடக மேதான்
வாய்ந்தப வேஷ்டி தச்சீர் வைத்திடிற் புலிய தாகும்
காய்ந்தொளிர் கழுத்தில் வைக்கிற் கருதுப்ப சத்திற் கென்னே

கருதுங்கா தருகே வைத்தால் காணுமாச் சரிய மூந்திக்
கருகிடை மிடையிற் பூண்ட லம்பிய சதங்கைக் காகும்
பெருகிய மார்பின் கிட்டப் பிடித்திடத் தியான மாகும்
செருவிய புயத்தில் வைத்தாற் கருடனுஞ் சிறகு மாமே. 203

ஓதிய முகத்தி னேரா யசைத்ததை யுறகி றுத்தத்
தீதிலாக் கதலி வாழை மரத்திற்குங் கலகத் திற்கும்
நீதிசேர் மூக்கின் முன்னே யசையாம லிருத்த நீழல்
போதவே யர்த்த சந்த்ரன் விநியோகம் பொருந்தும் பாரே.

சிலிட்ட சந்திரன், யுக்த சந்திரன்.

பாரார்த்த சந்திர னிற்க னிவளைக்கச் சிலிட்ட சந்திரன்
கூர்சுங் கனுக்கென் றேசுக் கிரபர தத்திற் கூறும்
நேரணி வளைக்க யுக்த சந்திர னேந்தாம் பிறைக்கும்
ஊருத்தி ராடங் கெள்ளைக் கோதுமர்ச் சுனம தத்தே. 205

இரேகா சந்திரன்.

யுத்தசந் திரக்கை தன்னி லூருமத் திமைவ ளைக்க
முக்திசே ரிரேகா சந்திரன் உரைசனி திரிபு ரைக்கும்
பக்தியாங் கண்டா ராகம் பகர்சுக்ர பரதத் தேவி
யக்தவு ரைத்த சொல்லே யறிந்தபி நயிக்க வென்றே. 206

மானேதற் சனியங் குட்ட நீட்டிமற் றதைம டக்க
மீனெனு மிரேகா சந்த்ர விநியோகம் விநயம் ஞானம்
மானமாம் கியாதி நன்மை நன்மையென் பதற்கும் வாழ்த்தும்
தேனேசந் திரக லாவாய்ச் செப்பின னிதைத்தா னந்தி. 207

தலரேகா சந்திரன்.

தகுரேகா சந்திர னிற்றற் சனியங்குட் டம்வ ளைத்தல்
மிகுதல ரேகா சந்திரன் விநியோக மீச விருக்ஷம்
அகத்திப்பூ வளையம் பின்ன மகமகிழ்ந் தருளு மாதே
இகத்தினி லொற்றைக் கொம்ப னியம்பினன் பரத நூலில்.

195. தோற்றம் : சந்திரன் ; குலம் - வைசியன் ; நிறம் - புகை ; இருடி - அத்திரி ; அதிதெய்வம் - சிவன்.

196. இலக்.: பதாகக் கையில் கட்டைவிரலை மீட்டல்.

196-201. விரி : அட்டமிச் சந்திரன் ; ஈட்டி ; கழுத்திற் கைவைத்துத்தள்ளுதல் ; தேவாபிடேகங்கள் ; பாத்திரங்கள் : உற் பவங்கள்; இடை; தியானம்; தனக்குள் ஆலோசித்தல் ; பிரசார்த்தனை; ஊணர்பால் நமஸ்காரங்கள் ; அங்கங்களைத் தொடுதல் ; சரநோட்டம் பார்த்தல் ; பாவம் ; கேள்விகேட்டல் ; குயவன் கையால் மண் பிடித் திடல் ; யானை காதசைத்தல் ; வில் ; பெண்கள் மஞ்சட்பூசல் ; கண் ணுடி பார்த்தல் ; இடைபிடித்தல் ; மாத்திரையைத் தள்ளித் தாளம் போடல் ; பிரதிபிம்பம் ; அர்த்தசந்திரபாணம் ; கைரேகைபார்த்தல் ; கயிறு திரித்தல் ; நூல்திரித்தல், தரையில்கைகூட்டுதல் ; தலை சுற்றி யாடுதல் ; நெரிநெட்டி (சம்பங்கோரை) சுற்றுதல்; கர்ப்பூரத்தை ஒற்றிக் கையை முகத்தில் வைத்தல் ; சூரிய ஒளி பார்த்தல் ; வைத்தி யன் 'கைகாட்டென' நீட்டுதல்; பாணத்தில் கைவைத்து ஈர்த்தல் ; புரோக்ஷித்தல் ; கண்ணுடி ;

202-204. இக்கையைக் கன்னத்தருகே வைத்தால், சிந்தனை ; முன் கையில் வைக்கில், கடகம் ; அபவேஷ்டிதமாக வைக்கில், புலி ; கழுத்தில் வைக்கில், உப்புசம் ; காதருகில் வைக்கில், ஆச்சரியம்; இடையில் வைக்கில், சதங்கை ; மார்பினருகில் வைக்கில், தியானம் ;

புஜத்தில் வைக்கில், கருடன் ; சிறகு ; முகத்தின் நேராக அசைத்து நிறுத்தினால், கதலிவாழைமரம், கலகம் ; மூக்கின் முன்னே அசையாமல் நிறுத்தினால், நிழல்.

சிலிட்ட சந்திரன்.

205. இலக். : அர்த்த சந்திரக்கையில் சுண்டுவிரலை வளைத்தல்.

விநி. : சுங்கன் (மீன் வகைகளில் ஒன்று)

இது, சுக்கிரபரதம்.

யுக்த சந்திரன்.

இலக் : மோதிரவிரலை வளைத்தல்.

விநி. : ஐந்தாம் பிறை ; உத்திராடம் ; கெள்ளு (ஒருமீன்).

இது, அர்ச்சுனன் மதம்.

இரேகா சந்திரன்

206. இலக். : யுக்தசந்திரக்கையில் மத்திமத்தை வளைத்தல்.

விநி. : வக்ரசனி ; கண்டாராகம்.

இவ்வாறு சுக்ரபரதம் கூறும்

மீனெனும் (?) இரேகாசந்திரன்.

207. இலக். : தற்சனியையும் அங்குட்டத்தையும் நீட்டி மற்றதை மடக்குவது.

விநி. : விநயம் ; ஞானம் ; கியாதி ; 'நன்மை நன்மை' என்பது ; வாழ்த்து.

இதனையே "சந்திரகலா" என்று கூறியவர் நந்தி.

தலரேகாசந்திரன்

208. இலக். : இரேகாசந்திரக்கையில் சுட்டுவிரலையும் கட்டை விரலையும் வளைத்தல்.

விநி. : ஈசவிருக்ஷம், அக்தப்பூ, வினயம், பின்னம்.

இவ்வாறு கூறியவன் விநாயகன்.

---

6. அர்த்தசந்திரஹஸ்தம் (அரைமதி).

நா. சா. (ix : 43 - 45) கட்டைவிரலும் மற்றவிரல்களும் கூடி வில் போல் வளைப்பது. இளமரங்கள்; அர்த்தசந்திரன்; சங்கு; கலாசம் (ஜாடி); வளையல்; தாக்கித் திறத்தல்; முயற்சி; மென்மை; பானம். இக்கையால் பெண்கள் இடுப்பு, ஒட்டியாணம், முகம், தாளபத்ரம் (காதணி) கடுக்கன் இவற்றையும் குறிப்பர்.

ஸ-ர. (7 : 117) கட்டைவிரல் மற்றவிரல்களின் பின் சந்திரலேகையைப் போலிருத்தல்.

சிலப். : இக்கை சிலப்பதிகாரத்தில் கூறப்படவில்லை. அபி. (தமிழ் (41–42). இத்தூலிலுள்ள 196, 197, பாடல்களே உள்ளன.

7. அராள அஸ்தம்

இடுமிவ் வராளத் திற்கு மியல்பென்னும் பரத நூலில்
குடத்துதித் தோன்பாற் றோன்றும் குலமது பலவ தாகும்
கடுநிறம் வெள்ளை யாமக் கலசச்சே யிருடி யாகும்
தொடுமதி தெய்வ மப்பிற் றுயிலுமந் நெடியோ னென்றே.

தையலே பதாகந் தன்னிற் றற்சனி தனைவ ளைத்த
கையரா ளமதே யாகும் விநியோகங் கருதக் கேளாய்
மெய்யுகந் தமுத பானம் விடபானங் களுக்கு மென்றும்
வையகத் திற்பிர சண்ட வாயுவிற் காகு மென்னே. 210

நேமித்த பந்து மார்க்க நிர்த்தமாந் தராசு நிற்றற்
காமின்னஞ் சக்ர வாளப் பட்சிக்காம் காதில் வைக்கத்
தாமது போத னைக்கா மார்பினிற் பெருமை சாரும்
சேமமாய் நுதலில் வைத்தால் அமாவாசை யெனவே செப்பும்.

சேர்த்தது நாபி தன்னில் வைத்திடல் நீர்ச்சு ழிக்காம்
பூர்த்தியாய் மார்பு நேரிற் புங்கித மாக வைக்க
நேர்த்தியாம் விழிய ணங்கே நிகழ்கூ ஷ்மா ரனாகும்
பார்த்துநீ யராளக் கையின் பகர்விதி யோக மென்னே. 212

சிலிட்ட அராளம்

அராளமா மஸ்தந் தன்னி லடுத்தமத் திமைவ ளைக்கப்
புரமுதற் பட்சி கட்காம். புக லுங்கொங் கணதே சத்தும்
பராவிய துசாவந் திக்கும் பகருமென் றனுமந் தன்றன்
நிராம யஞ்சி லிட்ட வராளமாம் நிகழ்த்தி னனே. 213

209. தோற்றம் - அகத்தியனிடத்தில்; குலம் - மிச்ரஜாதி. நிறம் - வெள்ளை. இருடி - அகத்தியன்; அதிதெய்வம் - திருமால்.

210. இலக்.: பதாகக்கையில் தர்ச்சனியை வளைத்தல்.

210-212. விதி.: அமுதபானம்; விடபானங்கள்; பிரசண்ட வாயு; பந்து; மார்க்கநிருத்தம்; தராசுநிற்றல்; சக்ரவாளப்பறவை;

இக்கையைக் காதில் வைக்க :—போதனை
,, மார்பில் வைக்க :—பெருமை
,, நெற்றியில் வைக்க :—அமாவாசை
,, நாபியில் வைக்க :—நீர்ச்சுழி
,, மார்புக்கு நேரே புங்கிதமாக வைக்க :—கூஷ்மாரன் (ஓர்அரசன்).

சிலிட்ட அராளம்

இலக்.: அராள அஸ்தத்தில் மத்திமத்தை வளைத்தல்.

விநி.: புரு முதலிய பட்சிகள்; கொங்கணதேசம்; துசாவந்தி.

இவ்வாறு கூறியவன் அநுமான்.

8. சுகதுண்ட அஸ்தம்

இதம்பெறப் பரத நூலோ ரியம்பினர் சுகதுண் டந்தான்
உதித்தது துர்க்கை தன்னு ளுயர்குல மறையோ னுகும்
மதித்திடு நிறஞ்சி வப்பு வன்முனி தாரு வாசன்
எதித்திடு மதிதெய் வம்ம ரீசியே யாகு மென்றே 214

---

7. அராளஹஸ்தம் (வளைந்தது)

நா. சா. (ix. 46-52). தர்ச்சனியையும் கட்டைவிரலையும் வளைத்துப் பிறவிரல்கள் நிமிர்ந்து நிற்பது. தைரியம், கர்வம், வீரம், அழகு, திருப்தி, வானப்பொருள்கள், நிதர்சனம், ஆசீர்வதித்தல், இன்னும் பிற நல்ல நிலைமைகள், ஸ்திரீகள் கூந்தலை வாரிமுடித்தல், அல்லது பிரித்தல், அவர்கள் சரீரம் முழுமையும் பார்த்துக் கொள்ளுதல்.

இரண்டு அராள அஸ்தங்கள் ஒன்றையொன்று சுற்றிக் கொண்டு ஸ்வஸ்திக ரூபத்தில் அமைந்தால், கலியாணத்தில் பெண் மணமகனைச் சுற்றி வருதல், விவாகம் ஆகியவை. இக்கைகள், சுற்றிச்சுற்றி வருதலையும், வட்டப்பொருள்களையும், ஒருவரை வராதே என்று சொல்வதையும், பெருங்கூட்டத்தையும், தரையில் ஒழுங்காக வைக்கப்பட்ட பொருள்களையும் குறிக்கும். எவரையேனும் அழைக்க, 'வராதே' என்று சொல்ல, வேரோடு ஒன்றைப்பறிக்க, பல விஷயங்களைப்பேச, வியர்வையைத் துடைக்க, நல்ல வாசனை பிடிக்க, வைய, முன்னே திரிபதாகக் கையைச் சொன்னேம்; ஆனால் இவற்றிற்கு ஸ்திரீகள் அராளக்கையை உபயோகிக்கிறார்கள்.

சிலப் (பக். 93) பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரல் முடக்கி ஒழிந்த விரன்மூன்றும் நிமிர்ந்து வளைவது; என்னே? "அராள மாவது தறிவரக் கிளப்பிற், பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரன் முடக்கி, விரல் கண் மூன்று நிமிர்த்தகம் வளைத்தற், குரியதென்ப வுணர்ந்திசி னோரே" என்றராகலின். ஸ-ர. வும் இப்படியே கூறும்.

அபி. த. (தமிழ் 43). இந்நூலின் 210 பாடலே சில சொல் மாறுபாடுகளோடு காணப்படுகிறது.

அகமகி முராளத் தன்னி லநாமிகை விரல்வ ளைத்தால்
சுகதுண்ட வஸ்த மாகுஞ் சொல்விநி யோகங் கேளாய்
பகர்பண மெய்த லுக்ர பாவனை களுக்கு மற்றும்
மகிழுமுள் ளர்த்தங் கட்கு மர்மங்க டனக்கு மாமே. 215

உக்கிர வுத்திரா கார முகந்தசொற் பகுத்துக் காட்டல்
தக்கதோ ரீட்டி கட்குஞ் சாளய நாட்டி யத்தும்
நிக்கபுங் கிதமாய் வைக்க நிகழ்பிண்டி பாலத் திற்கும்
மிக்கவா யுதங்க ளுக்கு மேவுமிச் சுகதண் டக்கை. 216

தானக் கரமே நோக்கத் தததுண்ட நாய னுக்கும்
வானத்தைப் பார்த்த வஸ்தம் விரல்மணிக் கையோ டொத்துப்
பானுபோற் சுற்றி யாடல் பாஞ்சால புருட னுக்காம்
மோனமாஞ் சுகதுண் டக்கை விநியோக முறையி தாமே.

சிலிட்ட சுகதுண்டம்

ஆகுமே சுகதுண் டத்தி லடிநுனி சேரா வண்ணம்
தாகமாய் மத்தி மத்தை வளைத்திடில் விருச்சி கந்தான்
ஏகமாங் கங்கை நீரில் எழில்மண்ணி லுர்ஜெந் துவிற்கும்
பாகமா யறிந்து கூறும் பயன்சிலிட்ட சுகதுண் டத்தே.

பிரம சுகதுண்டம்

நிகடகா முகத்திற் றற்சனி யங்குட்டம் கூட்டிப் பிரம்ம
சுகதுண்டம் விநியோகம் வைரி முதற்பக்கி கட்குச் சொல்லும்
அகமகிழ்ந் திவற்றை யெல்லா மம்பிகை யருளும் யானை
முகவன்றன் மதத்தில் நன்றாய் முழங்கிய தறிந்து கூறே.

சுகதுண்டம்

214. தோற்றம் - துர்க்கை. குலம் - மறையோன்; நிறம் - சிவப்பு; முனி - தூர்வாஸர்; அதிதெய்வம் - மரீசி.

215-216. இலக்.: அராளத்தில் அநாமிகையை (மோதிரவிரல்) வளைத்தால் சுகதுண்டமாகும்.

விநி.: பணம் அடைதல்; உக்ரபாவனை; உள்ளர்த்தம்; மர்மங்கள்; மிகக்கொடிய கோபம்; பிரியமான சொல்லைப் பகுத்துக்காட்டல்; ஈட்டி; சாளயநாட்டியம். புங்கிதமாய் வைக்க ... மிக்க ஆயுதங்கள்.

217. அக்கரத்தைத் தான் நோக்கப் பிடித்தால், தததுண்ட நாயன், (அகன்ற முகமுள்ள வீரன் (?)) அஸ்தம் வானத்தைப் பார்க்கப் பிடித்து, விரல்கள் மணிக்கையோடொத்துப் பானுபோற்சுற்றி யாடல், பாஞ்சால புருடன்.

(இப்பாடலின் பொருள் விளக்கமாயில்லை).

சிலிட்ட சுகதுண்டம்

218. இலக்.: சுகதுண்டத்தில் மத்திமத்தை அடியும் நுனியும் சேராதபடி வளைத்திடுதல் சிலிட்டசுகதுண்டமாம்.

விநி.: தேள்; கங்கைநீரில் ஊரும் ஐந்து; மண்ணில் ஊரும் ஐந்து.

பிரம சுகதுண்டம்

219. இலக்.: கடகாமுகக்கையில் தர்ச்சனியையும் அங்குட்டத்தையும் கூட்டுவது.

விநி.: வைரி (வல்லூறு) முதலான பறவைகள்.

இது, விநாயகன் மதம்.

9. முட்டி அஸ்தம்

ஓதுமிம் முட்டிக் கைதா னுதித்தது மானி டத்தில்
நீதன்சேர் குலத்திற் சூத்ரன் நிறமது நீல் மாகும்
ஆதர வாமு ருத்திர னிருஷியா மதிதெய் வந்தான்
மீதுரை செய்யு நூலில் வீரபத் திரனு மென்றே. 220

அங்குலி நாலையு முள்ளங் கையின் வளைத்த தன்மேல்
அங்குட்டம் வளைத்தால் முட்டி யஸ்தமாம் விநியோ கங்கேள்
தங்கிய திறங்க ளுக்குந் தலைமயிர் பிடிப்ப தற்கும்
திங்கள்மல் லர்கள் யுத்தம் சேலைகட் டுதற்கி யம்பே. 221

---

8. சுகதுண்டஹஸ்தம் (கிளிமூக்கு)

நா. சா. (ix. 53-54): 'நான் இல்லை; நீ இல்லை' என்பது, 'அது நடவாது' என்பது; பிரார்த்தனை; விடைபெறுவது; திட்டுவது.

சிலப். (ப்பக். 93) "சுகதுண்ட மென்பது தொழில்பெறக் கிளப்பிற், சுட்டுவிரலும் பெருவிரனு, மொட்டி யுகிர்நுனை கௌவி முன்வளைந்; தநாமிகை முடங்கப் பேட்டொடு சிறுவிர, றான்மிக நிமிர்ந்த தகுதித் தென்ப" ஸ - ர. (7: 137) அராளத்தின் தர்ஜனியும் அநாமிகையும் மிக வளைச

நூலின் 215 போன்றதே.

ஆமெனுங் குழல்வ குத்துக் கோதுத லேங்க ரற்கும்
மேமமால் வணங்கிக் கொட்டுங் கோபுரஞ் சிகர நேராம்
காமியர் லீலை தன்னில் ரகக்குறி கர்ட்டு தற்கும்
மாமலே வேலன் கையில் பிடித்திடும் வேற்கு மாமே. 229

ஆனன நேராய் வைக்க வற்பனும் புயநே ராகத்
தானது வைக்க நேராய்த்த தறுண்ட நாய னுக்கும்
மானமாங் கண்ட நேராய் வைக்கச் சிநேக னுகும்
பூணுமே வியாவி ருத்தம் பரிவிருத்தம் பொருந்த வோட்டம்.

பொருந்துகை மார்பு நேராய்ச் சலனமாய்ப் பிடிக்க வப்போ
வரிந்தோலை யெழுது தற்கும் வாகான வெழுத்தா ணிக்கும்
அறிந்துணர் பரத நூலோ ருளிய சிகரக் கையின்
திருந்திய விதியோ கங்கேள் செப்பின ரெவருங் காண. 231

அர்த்த சிகரம்

செப்பிய சிகரந் தன்னி லணிகனி சேர நீண்டு
நிற்பதூர்க் குருவிக் காகு நெடியகாட் டுப்பு ரூவும்
ஒப்பவே கோக ளன்றன் மதத்தினி லுதித்த நாமம்
எப்பவும் புகல்வா ரர்த்த சிகரக்கை யென்றி யம்பே. 232

சங்கீர்ண சிகரம்

கூறுமூட் டியிலங் குட்டங் கொஞ்சமா யெடுத்தி டச்சங்
கீரணச் சிகர மாகும் விதியோகங் கழுகுக் கென்றும்
சீருறும் பரத நூலிற் செப்பின ருலகிற் காணப்
பேருறும் கோக ளன்ம தத்தினிற் பெரிதாய் மானே. 233

226. தோற்றம் - ஈசன் ; குலம் - கந்தருவன் ; நிறம் - கறுப்பு ; இருடி - அருச்சுனன் ; அதிதேவதை - மன்மதன்.

227. இலக்.: முட்டிக்கையில் அங்குட்டத்தை உயர நீட்டச் சிகரக்கையாகும்.

227-229. விநி.: அதரம் (உதடு) ; வில் ; ஆலிங்கனங்கள் ; மன்மதன் ; இலிங்கம் ; நிச்சயமான வரம்பு ; இல்லை என்பது ; நினைத்தல் ; இளைத்த ரூபங்கள் ; நாதம் ; பல் ; பிதுர்கர்மம் ; பக்கங்கள் ; அபிநயவாரம்பம் ; நாதம் சேர்ந்த மணிகளை ஸ்திரீகளின் இடையிற்கட்டி விரைந்திழுத்தல் ; கூந்தலை வருத்துக் கோதுதல் ; விகாய

கருக்கு வணங்கிக் குட்டிக் கொள்ளுதல்; கோபுரம்; சிகரம்; காம லீலைகளில் நகக்குறி காட்டுதல்; முருகன் கைவேல்.

230-1. இக்கையை முகத்தின் நேராக வைக்க :—அற்பன்
,, புஜத்தின் நேராக வைக்க:—நோய்; தததுண்ட நாயன்(?)
,, கண்டத்தின் நேராக வைக்க :—சிநேகன்
,, வியாவிருத்தமாகவும் பரிவிருத்தமாகவும் வைக்க :—ஓட்டம்
,, மார்பு நேராய்ச் சலனமாய்ப் பிடிக்க :—வரிந்து ஓலை எழுதுதல்; எழுத்தாணி.

அர்த்த சிகரம்

232. இலக்.: சிகரக்கையில் அணி, சுண்டுவிரல்களை நீட்டிநிற்பது.
விநி. : ஊர்க்குருவி; காட்டுப்புரு.

இது, நோகளன் மதம்.

சங்கீர்ண சிகரம்

233. இலக்.: முட்டிக்கையில் சிறிதளவு கட்டைவிரலை எடுப்பது.
விநி. : கழுகு;

இதுவும் நோகளன் மதம்.

11. கபித்த அஸ்தம்

சொல்லிய விக்க பித்தந் தோன்றுமே மாலி டத்தில்
புல்குல மிருடி வண்ணம் புகலுமே வெண்சி வப்பு
அல்லிலா விருடி நார தன்னதி தெய்வ மாகும்
வில்லெனும் பிரம னென்றே விண்டனர் பரத நூலோர்.

இச்சையாஞ் சிகரந் தன்னி லிலங்குமங் குட்டந் தன்னைத்
தர்ச்சனி யுடனே சேர்த்த தாகுமே கபித்த வஸ்தம்
லட்சுமி பார்வ திக்கும் நீள்வலை வீசு தற்கும்
பச்சமாய்ச் சித்தி ரம்போற் படமெழு திடவே யாகும். 235

---

10. சிகர ஹஸ்தம் (உச்சி)

நா. சா. (ix : 57–58) : கடிவாளம்; சவுக்கு; அங்குசம்; வில், தோமரம், சக்தி இவற்றை வீசுதல்; உதடுகளுக்கும் பாதங்களுக்கும் சாயம் பூசுதல்; கூந்தலை உயர்த்துதல்.

சிலப். இக்கை கூறப்படவில்லை.

அபி. நா. (தமிழ் 46–47) இந்நூலின் 227, 228 செய்யுட்களை.

விரும்பிய தூப தீபம் வெட்டெனுந் தாளங் கட்கும்
பிரம்புகள் கவரி யால வட்டத்தைப் பிடிப்ப தற்கும்
நிரம்புமா லாத்தி யேந்த லெழுத்தாணி தீட்டு தல்நேர்
இருபுறங் காட்டு கின்ற கயிறது பிடிப்ப தென்னே. 236

தெருவில்லுண் டைகள் தராசு துலாக்கோல் களைப்பி டித்தல்
பரகூசி துண்டி பிண்டம் பசுமூலப் பால்க றத்தல்
விரசுள்ள நெசவு நூலைப் பிடித்திடல் விரல்நி மிர்த்தல்
இறைப்பது தானி யத்து மிபத்துக் கோல்பி டித்தல். 237

பிடிஜப மாலை தன்னைச் செபித்தலு மோலை தன்னைப்
பிடித்ததை வாரு தற்கும் பின்புவாத் தியமு ழக்கம்
அடிமுரு சாதி கத்தி னதின்வாரைத் தொட்டி ழுத்தல்
வடித்தமுக் காடு போடல் மலர்ச்செண்டு தரிப்ப தாமே. 238

ஆக்கவே வதன நேராய் வைக்கவா சரிஷ ணத்தாம்
பார்க்கவே புகைபா ணத்துப் பகர்நெற்றி சமயங் காலம்
நோக்கவி ரண்டு கையால் நுவலிடி வருண னுக்காம்
ஏற்கவே கபித்தக் கையின் விநியோக மென்றி யம்பே. 239

சிலிட்ட கபித்தம் அர்த்த கபித்தம்

இயம்புங்க பித்தந் தன்னி லெழுகனி விரலை நீட்ட
நயம்பெறுங் குயிலுங் கிள்ளை நவிலுமா ளவதே சத்தும்
செய்சிலிட் டக்க பித்தஞ் சேரணி விரலை நீட்டும்
கையர்த்த கபித்த நாண வந்தான்கா ளுங்கோ ழிக்கே. 240

தெளுங்கெழு தெழுத்தா ணிக்கை பிடித்திடல் மைனு விற்கும்
நலுங்கிடற் கோலம் போடல் காட்டிய காகங் கோழி
சலங்களிற் றிரியும் நாரை கொக்குநீர்க் காக முந்தான்
நிலந்தனிற் காட்டு மர்த்த கபித்தக்கை நிகழ்த்தி னரே. 241

கபித்தக்கை

234. தோற்றம் - திருமால்; குலம் - குஷிகுலம்; நிறம் - வெண்சிவப்பு; இருடி - நாரதன்; தெய்வம் - பிரமன்.

235. இலக்; சிகரக்கையில் கட்டைவிரலைச் சுட்டுவிரல் சேர்வது.

235-239. விநி.: இலக்குமி; பார்வதி; வலைவீச்சு; படமெழுதல்; தூபதீபம்; தாளங்கள்; பிரம்புகள்; வெண்சாமரை பிடித்தல்;

ஆலவட்டம் பிடித்தல்; ஆரத்தி ஏந்தல்; எழுத்தாணி தீட்டுதல்; இரண்டு பக்கங்களைக்காட்டக் கயிறுபிடித்தல்; வில்லுண்டைகள்; தராசு, துலாக்கோல் பிடித்தல்; ஊசித்துண்டம்; பசுக்கறத்தல்; நெசவுநூல் பிடித்தல்; விரல் நிமிர்த்தல்; தானிய உமி இறைத்தல்; பத்துக்கோல் பிடித்தல்; ஜபமாலை பிடித்து ஜபித்தல்; ஓலை பிடித்து வாருதல்; வாத்திய முழக்கம்; முரசம் முதலியவற்றின் வாரைத் தொட்டிழுத்தல்; முக்காடு போடல்; மலர்ச்செண்டு தரித்தல்;

இக்கையை முகத்தின் நேராய் வைக்க, ஆகர்ஷணம், புகை, பாணம்.

நெற்றியில் வைக்க, சமயம், காலம்.

இருகைகளாற் செய்ய, இடியைத்தரும் விருணன்.

சிலிட்ட கபித்தம்

240-241. இலக். : கபித்தக்கையில் கனிஷ்டவிரலை நீட்டல்.

விநி. : குயில்; இளிப்பிள்ளை; மாளவதேசம்,

அர்த்த கபித்தம்

இலக். : சிலிட்டகபித்தக்கையில் மோதிரவிரலை நீட்டுதல்.

விநி. : நாணவந்தான்; காளங்கோழி; தெலுங்கு; எழுத்தாணி கையிற் பிடித்தல்; மைனை; நலுங்கிடல்; கோலம்போடல்; காகம்; கோழி; நாரை; கொக்கு; நீர்க்காகம்.

---

11. கபித்த ஹஸ்தம்

நா. சா. (59-60) *சிகரக்கையில் சுட்டுவிரலை வளைத்து, கட்டை விரலால் அழுத்துவது. ''அங்குசம், வாள், வில், சக்கரம், தோமரம், குந்தம், சக்தி, இடி, அம்பு ஆகிய ஆயுதங்களைக் காட்டவும், உண்மையும், மூழுமையும் செயல்களைக் குறிக்கவும் பயன்படும்.*

சிலப். (பக். 94). *சுட்டுவிரலனியும் பெருவிரலனியும் உகிர்நுனை கௌவிப் பிடிப்பது: என்னை? 'கபித்த மென்பது காணுங் காலைச் சுட்டுப் பெருவிர லொட்டி நுனி கௌவி, யல்லமூன்று மெல்லப்பிடிப் பதுவே' என்றாராகலின்.*

அபி. த. (தமிழ் 48-49). *இந்நூலின் 235, 236 பாடல்கள் சில மாறு பாடுகளுடன் காணப்படுகின்றன. பார்வதி என்பதற்குப் பதிலாக ஸரஸ்வதி என்று கூறப்பட்டிருக்கிறது.*

12. கடகாமுக அஸ்தம்

கடகாமு கந்தோன் றும்பார்க் கவனிடங் குலத்திற் றேவன்
திடமுறும் வண்ணஞ் செம்பொன் செப்புமே யிருடி பார்த்தன்
மடலவிழ் குழலி னுளே வழுத்துமே யதிதெய் வந்தான்
முடிபெறு மிராம னென்றே மொழிந்திடும் பரத நூலே. 242

தங்குக பித்தக் கையிற் றற்சனி மத்தி மத்தோ
டங்குட்டந் தன்னே மீட்ட வதுதட காமு கந்தான்
பொங்கமாய்ப் பேசு தற்கும் பூவிற்கும் பார்வை கட்கும்
துங்கமாம் நாணி லம்பு தொடுத்திழுத் திடவு மாமே. 243

திடமுடன் மலர்கள் கொய்தல் செம்பொனு பரணஞ் சார்த்தல்
நடைபாத சாரி நாட்யம் நவிலுந்திட் டாந்த ரத்தும்
அடைவுடன் சுருள்கொ டுத்தல் அடுப்புப்பே னுப்பி டித்துக்
கடுதாசி யெழுது தற்குங் காணலாஞ் சுவாதி முத்தி. 244

முத்துரத் தினங்க ளுக்கு மோகநாக வல்லி கட்கு
முத்திராங் கிதங்க ளுக்கு முதிர்ந்தவா சங்க ளுக்கும்
கத்தூரி யாதி யாகக் கமழ்வஸ்துச் சிமிழ்த்த னக்கும்
கைத்தா லேகாட் டுங்கட காமுகக் கையி தாமே. 245

சிலிட்ட கடகாமுகம்

கடகர்மு கக்கை தன்னிற் கனியணி விரல்கள் நீட்டி
வடிவுடன் மத்தி மத்தை வஜீத்திட லுமைய வட்கும்
பிடித்தெழு தோலை கையிற் பிடிசெண்டு தந்தி மீட்டல்
கடிவாளம் பிடிக்கச் சிலிஷ்ட கடகாமு கக்கை யாமே. 246

இரத்ன கடகாமுகம்

கடகாமு கத்திற் றற்ச னியைக்கூட்டிக் காட்ட ரத்ன
கடகா முகக்கை யாகுங் கருதிய விதியோ கங்கேள்
கொடியிடை யாளே யட்ட வசுக்களுக் கெனவே கூறும்
திடமுள நார தன்ம தத்தினிற் றேர்ந்து பாரே. 247

கடகாமுகக்கை

242. தோற்றம் - சுக்கிரன்; குலம் - தேவன்; நிறம் - செம்பொன்; இருடி - அருச்சுனன்; அதிதெய்வம் - (பட்டாபி)ராமன்.

243-245. இலக். : கபித்தக் கையில் தர்ச்சனி, மத்திமம் அங்குட்டம் இவற்றை மீட்டுதல்.

விநி.: மகிழ்ச்சியாய்ப் பேசுதல், பூ, பார்வை, நாணில் அம்பு தொடுத்திழுத்திடல், மலர்கள் கொய்தல், செம்பொனுபரணம் சாற்றுதல், பாதசாரிநாட்டியம், திருட்டாந்தரம், சுருள்கொடுத்தல், அடுப்பு, பேனுப்பிடித்துக் கடுதாசு எழுதுதல், சுவாதி, முத்து, ரத்னங்கள், நாகவல்லி, முத்திராங்கிதங்கள், வாசங்கள், கத்தூரி முதலிய வாசனைத் திரவியங்கள் வைக்கும் சிமிழ்.

சிலிட்ட கடகாமுகம்

246. **இலக்.:** கடகாமுகக் கையில் சிறுவிரல், அணிவிரல்களை நீட்டி நடுவிரலை வளைத்தல்.

விநி.: உமையவள்; பிடித்தெழுதும் ஓலை; கையிற்பிடி செண்டு; தந்தி மீட்டல்; கடிவாளம் பிடித்தல்.

இரந்ன கடகாமுகம்

247. **இலக்.:** கடகாமுகத்தில் தர்ச்சனியைக் கூட்டிக் காட்டல்.

விநி.: அட்டவசுக்கள்.

இது நாரதன் மதம்.

13. சூசி அஸ்தம்

பேணுமிச் சூசிக் கைதான் பிரமதே வன்பாற் றோன்றும்
நாணிலாக் குலத்திற் றேவன் நன்மைசேர் நிறமாம் வெள்ளை
தோணுமே யிருடி யாகச் சூரிய னதிதெய் வந்தான்
வீணிலா விசுவ கர்மன் என்னவே விள்ளு நூலே. 248

கடகாமு கக்கை தன்னிற் கருதுந்தற் சனியை நீட்டத்
திடமுறு சூசி யென்று செப்பினர் விநியோ கங்கேள்
படருமோ ரர்த்தத் திற்கும் பரப்பிரம்ம பாவ னைக்கும்
அடர்நூ றிலக்க மோசை யாதவ னுக்கு மாமே. 249

---

12. கடகாமுக ஹஸ்தம்

நா. சா. (ix-61-64). கபித்தக்கையில் மோதிரவிரலையும் சுண்டு விரலையும் உயர்த்தி வளைத்தல். யாகம், பலி, குடை, கடிவாளம் இழுத்தல், வீசிறி, கண்ணுடியைப் பிடித்தல், கோலம்போடல், பொடிசெய்தல், பெரியதடிகளை எடுத்தல், முத்துமாலையை நோக்கல், மாலைகளை எடுத்தல், தூணிகளின் விளிம்புகளைச் சேர்த்தல், கடைதல், அம்புகளை விடுதல், பூக்களைப் பறித்தல், அங்குசத்தைச் சுழற்றல், கயிறு, ஒரு ஸ்திரீயைப் பார்த்தல். ஸ - ர. வீணும் இலக்கணம் இப்படியே.

அதுவது வென்ப தற்கு மாச்ச ரியங்க ளுக்கும்
எதுவோவ தென்ப தற்கு மிசைகொள்ளா மாவ ளிக்கும்
கதிக்கப் பல்விளக்கு தற்குங் காரிகா லீலை கட்கும்
துதிநிலத் தெழுது தற்குந் தோன்றுகா டனஞ்சக் ரத்தும்.
சக்கரஞ் சுழற்றல் வட்டச் சடைதனத் தவிட மாலை
உக்கிரக் தானி ளைத்த வுடல்பிரித் திடமுன் மூக்கு
மிக்கதுங் துமிய டித்தல் வேளான்மண் டிரிகை வண்டில்
தக்கவு ருலகம் வெய்யிற் றங்கிய குடைக்கு மென்ப. 251

பக்கத்தி லுயர மாகப் பகர்கை சாய்ந்திடா விற்கும்
நிற்குங்கை புங்கி தத்தால் நீர்நீங் களென்ப தற்கும்
அக்கியம் பரிவிருத் தத்தா லவளவ னவரா மென்ப
சக்கிய வதோமு கத்தாற் சாற்றுகாம் காங்க ளென்றே.
என்றகை நெஞ்சில் வைக்கச் சத்திய வசன மிய்யும்
நின்றவ யிற்றி லாட்ட மயிர்க்கூச்சல் கோர்த்துக் கிச்சு
முன்றிடி லுருளை யாகுஞ் செவிக்குநேர் குண்ட லத்து
நன்றென விகியோ கத்தால் நாட்டிய சூசி யாமே. 253

அர்த்த சூசி.

இருந்ததோர் கபித்தந் தன்னி லலகுதற் சனியை நீட்டத்
தெரிந்திடு மர்த்த சூசி செப்பினர் விகியோ கங்கேள்
பெரும்புழு முளைக ளுக்கும் பேசிய பட்ச பாதம்
சிறந்திடு மர்த்த சூசிக் கையெனச் செப்பு மாதே. 254

வக்ரசூசி.

மாதேகேள் சூசி தன்னிற் றற்சனி வளைக்கு மாகில்
நீதியாம் வக்ர சூசி நிகழ்த்துங்கை விகியோ கங்கேள்
காதினி லணிய வாணைக் கரியஸ்த மென்றும் தைக்கும்
போதுசி பிடிப்ப தற்கும் பொருந்துமென் றுரைசெய் மானே

248. தோற்றம் - பிரமதேவன். குலம் - தேவகுலம். நிறம் - வெள்ளை. இருடி - சூரியன். அதிதெய்வம் - விசுவகருமன்.

249. இலக். : கடகாமுகக்கையில் தர்ச்சனி விரலை நீட்டுதல்.

249–253. விநி. : ஒன்றென்னுமெண் ; பரப்பிரம்ம பாவனை ; நூறு என்னும் இலக்கம் ; ஓசை ; ஆதவன் ; 'அது, அது' என்பதற்கு ; ஆச்சரியங்கள் ; 'எதுவோ? அது' என்பதற்கு ;

நாமாவளி பாடுதல்; பல் விளக்குதல்; காரிகை லீலைகள்; நிலத் தெழுதல்; தாடனம்; சக்கரம்; சக்கரஞ் சுழற்றல்; வட்டச்சடை; தனத்தவிடமாலை(?); உக்கிரம்; இளைத்த உடல்; முன்மூக்கு; துந்துமி யடித்தல்; வண்டில்; ஊர்; உலகம்; வெயிலில் பிடித்த குடை; சுயவன் சக்கரம்;

இக்கை பக்கத்தில் உயரமாகச் சாய்ந்திட; இரவு.
புங்கிதமாக நிற்க; 'நீ, நீர், நீங்கள்' என்பதற்கு.
பரிவிருத்தமாக்க; 'அவள், அவன், அவர்' என்பதற்கு,
ஆதோமுகமாக்க; 'நாம், நாங்கள்' என்பதற்கு.
நெஞ்சில் வைக்க; சத்யவசனம் கூறுதல்.
வயிற்றில் வைத்து ஆட்ட; மயிர்க்கூச்சல்.
நேர் தூக்கிச் சுழற்றிட; உருளை.
செவி நேராக்க; குண்டலம்.

அர்த்த சூசி.

254. இலக்.: கபித்தக்கையில் சுட்டுவிரலை நீட்டல்.
விநி.: புழு; முளைகள்; பட்சபாதம் பேசல்.

வக்ர சூசி.

255. இலக்.: சூசிக்கையில் தர்ச்சனி விரல் வளைந்து நிற்பது.
விநி.: காதணி; ஆணை; யானைக்கை; தைக்கும் ஊசி பிடித்தல். (காதினில் அணிய என்று கொண்டும் பொருள் கொள்ளலாம்).

---

13. ஸுசீ ஹஸ்தம் (ஊசி)

நா. சா. (ix: 65-71). கடகாமுகத்தில் சுட்டுவிரலை மேலே தூக்கி வளைக்க, சக்கரம், மின்னல், கொடிகள், மலர்கள், தேரடி, வளைந்துவளைந்து போதல், சம்மதம் என்ற குரல், பாம்புக்குட்டி, இளந்தளிர், வாசனைப் புகை, விளக்கு, கொடிகள், சிகண்டம் (ஜில்பா குடுமி), கீழேவிழல், வளைவு, வட்டம்.

சுட்டுவிரல் உயர்த்தப்பட்டால், சுவஸ்திரம், மூக்கு, ஒன்று என்னும் எண், தடி.

சுட்டுவிரல் வளைக்கப்பட்டு வாயினடியில் வைத்தால், பல்.

இக்கையைச் சுழற்றினால், ஒருவனிடமிருந்து எல்லாவற்றையும் பறித்தல்.

சுட்டுவிரலை அடிக்கடி உயர்த்தித் தாழ்த்தினால், நீண்ட படிப்பு, நீண்ட நாள்.

சுட்டுவிரலை வளைத்து முகத்திற்கருகே மேலும் கீழும் ஆட்டினால், ஒரு வாக்கியம்.

14. பதுமகோச அஸ்தம்.

பதுமகோ சக்கை தோன்றும் பரந்தாம னிடங்கு லந்தான்
மதியுள வியக்கன் வண்ணம் வெண்மையா யிருடி- வாழ்த்தும்
விதியென மதிதெய் வந்தான் விள்ளும்பார்க் கவனு மென்று
சதிர்பெறு பரத நூலோர் சாற்றினர் முறைதெ ரிந்தே. 256

அவ்விரலே நீட்டி, அசைத்து, மேலே தூக்கினால், 'இல்லே' என்பது.

(72-75). கோபம், வியர்வை, தலைமயிர், காதணி, வளையல், கன்னத்தை அழகு செய்தல் இவற்றை குறிக்க இக்கையை அசைக்க.

கர்வம், 'நான் இருக்கிறேன்', பகைவன், 'இவர்யார்' காது சொறிதல் இவற்றிற்கு இக்கையை நெற்றியில் வைக்க.

இரு சூசிமுகக் கைகளைக் கூட்டினால் மனிதர்களின் சேர்க்கை, பிரித்தால் மனிதர்களின் பிரிவு, குறுக்கே வைத்தால் சண்டை, ஒன்றன் மீது ஒன்றை வைத்து அழுத்தினால் கட்டுப்பாடு.

இரு சூசிமுகக்கைகளை நேருக்கு நேராய் வைத்து இடப்புறத்தில் தனியே வைத்தால் அஸ்தமனம், வலப்புறத்தில் வைத்தால் இரவின் முடிவு.

76. இக்கையை முன்னே அசைத்தால், உருவம், கல், நீர்ச்சுழி, இயந்திரம், குன்று; சோறுபோடலுக்கு இக்கையை அதோமுகமாக வைக்க.

77. சிவபிரானைக் குறிக்க, இக்கையைத் தலைகீழாக்கி நெற்றிசேர் பிடிக்க. இக்கையை நெற்றிக்கருகில் குறுக்கே பிடிக்க, இந்திரன்.

78. இரண்டு சூசிமுகக்கைகள் சந்திரவட்டத்தைக் குறிக்கும்; நெற்றிக் கருகில் வைக்க, இந்திரன் கொடி எழுச்சி.

79. இக்கையைச் சுழற்றச் சந்திரன். விளிம்பு; நெற்றியில் வைத்தால், சிவபிரானின் நெற்றிக்கண்.

சிலப். (பக். 94)

சூசி யென்பது தூணியுங் காலே, நடுவிரல் பெருவிரல் என்றிவை தம்மில், அடைவுடன் ஒற்றிச் சுட்டுவிரல் நிமிர, ஒழிந்தன வழிவழி மூடங்கி நிற்ப, மொழிந்தனர் மாதோ முடிபறிந் தோரே.

ஸ - ர. (7 : 147) கட்காமுகத்தின் தர்ஜனி உயரே நீட்டுதல்.

அபி. நா. (தமிழ் 52-53) இந்நூலின் 250, 251 செய்யுட்கள்.

அங்குலி தனைப்ப ரப்பி யைவிரல் நுனிவ ளைத்த
செங்கைதான் பதும கோசஞ் செப்பினர் விநியோ கங்கேள்
பங்கய மலருக் குஞ்செம் பரத்தம்பூ விற்கும் பெண்கள்
கொங்கைக்கும் பந்துக் கும்பூங் கொத்துக்கும் மணிக்கு மாமே.

மாம்பழங் களுக்கும் புஷ்ப வருஷங்க ளுக்கு நல்வி
ளாம்பழங் களுடன் வில்வப் பழமுதற் கனிக ளுக்கும்
பூம்பந்து களுக்கு மற்ப போசன விதானங் கட்கும்
தாம்படர் பூத்து வட்டந் துலங்குமுட் டைக்கு மாமே. 258

என்பதோ முகமாய் வைக்க வேனுகத் தும்பிக் கையாம்
நன்புமுத் வேஷ்டி தத்தால் நவிலலா மின்ன ளுக்கு
செம்பொடு வெள்ளி தங்கப் பாத்திரங் கட்குங் கிண்ணி
சம்பும்வி யாவி ருத்தம் பாவிருத்தஞ் சக்கர வாளம். 259

ஆழிக்கும் கப்ப ரைக்கும் வளர்கபா லங்க ளுக்கும்
காழிமி டாக்க ளுக்கு நற்ரெண்ணை சகோரத் திற்கும்
பாழிலாத் தேங்காய் தாளம் பழத்துக்கும் பஞ்சா னிக்கும்
தோழியே பதும கோசஞ் சொல்விநி யோக மாமே. 260

சிலிட்ட பதுமகோசம்.

வரூபது மகோசக் கையில் நுனிவிர ளுள்ம டக்கில்
தருசிலிட் டபது மகோச மாமுப மானந் தானும்
அருமையாங் குட்ட ரோகம் ஐந்தலை நாக மென்பார்
விரிதலை கோது தற்கும் விளம்பினர் பரத நூலோர். 261

பதுமகோசக்கை.

256. தோற்றம் ; பரந்தாமன் ; குலம் - யக்ஷகுலம் ; நிறம் - வெண்மை ; இருடி - பிரமன் ; அதிதேவதை - பார்க்கவன்.

257. இலக். : ஐவிரல்களைப் பரப்பி அவற்றின் நுனிகளை வளைத்தல்.

257-258 விதி. : தாமரைமலர் ; செம்பருத்திப்பூ ; கொங்கை ; பந்து ; பூங்கொத்து ; மணி ; மாம்பழம் ; புஷ்பவர்ஷம் ; விளாம்பழம், வில்வப்பழம் போன்ற கனிகள் ; பூம்பந்துகள் ; அற்பபோசனம் ; விதானம் ; புகைப்படலம் ; வட்டமுட்டை.

259. இக்கையை அதோமுகமாக வைக்க, வேல்நுனி (போன்ற) தும்பிக்கை ; உத்வேஷ்டிதமாக வைக்க, மின்னல், செம்பு வெள்ளி தங்கப்

பாத்திரம், இண்ணி; வியாவிருத்தமாக வைக்க, விருத்தப்பா, சக்ர வாளம் சமுத்திரம், கப்பரை, கபாலம், நாழி, மிடா, தொன்னை, சகோரப் பறவை, தேங்காய், தாளம், பழம், பஞ்சானி.

சிலிட்ட பதுமகோசம்.

261. இலக்.: பதுமகோசக்கையில் நுனிவிரல்கள் உள்மடக்கில் சிலிட்ட பதுமகோசமாகும்.

விநி.: குட்டரோகம், ஐந்தலை நாகம், தலை கோதுதல்.

15. சர்ப்ப சீர்ஷ அஸ்தம்.

சர்ப்பசி ரக்கை தோன்றுஞ் சக்கரக் கையன் றன்பால்
கற்பதாங் குலத்திற் றேவன் கடுநிறம் மஞ்ச ளாகும்
துப்புறு மிருடி வாச வன்சொலு மதிதெய் வந்தான்
செப்பெனு முலூயி ஞளே சிவனென்னச் சொல்லு நூலே.

விரைசேர்ப தாகந் தன்னுள் விரல்களே வளைத்தாற் சர்ப்ப
சிரவஸ்த மாம தற்குச் செப்பினர் விதியோ கங்கேள்
அரவிற்கு மந்தத் திற்கும் யாமனமத் தகங்க ளுக்கும்
மருவுசந் தனங்க ளுக்கு மல்லர்தோள் களுக்கு மூன்னே.

---

14. பத்மகோசஹஸ்தம் (தாமரை மொட்டுக்கை).

[illegible]83). கட்டை விரல்களுள்பட எல்லா விரல்களையும் [illegible]ளைக்க; (அவை ஒன்றோடொன்று தொட [illegible]கள்; ஸ்திரீகளின் மார்பு; இவற்றிற்கு, [illegible]ப நுனியில் வகை... இன்னும், இக்கை தேவபூஜை, கப்பப் [illegible]ள சுமத்தல், பெட்டி, அந்திமச் சடங்கின் முதல் நாளுக்குரிய அடை, [illegible]கள் இவற்றையும் குறிக்கும். விரல்களே அசைத்துக்கொண்டு இரு கைகளே மணிக்கட்டுக்களிடம் சேர்த்தால் நன்கு மலர்ந்த தாமண்மலரைக் குறிக்கும். ஸ.-ர. (7: 142) இலக்.: நா. சா. வைப் போன்றதே.

சிலப். (பக். 94). பதும கோசிகம் பகருங் காலை
ஒப்பக் கைவளைத் தைந்து விரலு
மெய்ப்பட வகன்ற விதியிற் றாகும்.

அபி. த. (தமிழ் 56-57) இந்நூல் செய்யுள்களே (257, 258).

உன்னிய முனிவர் தேவ ருதகதா னங்க ளுக்கும்
தன்னிருப் பிடம்பு ரோக்ஷ ணங்களா தரவு கட்கும்
மின்னலே பாணி வாத்யம் மிருகத்தின் செவிகள் தோணி
கண்ணிய மாக வேறுங் கரிபரி தட்டு தற்கே. 264

தகைக்குத்தண் ணீர்கு டித்த லிலச்சையாய் முகம றைத்தல்
சிகைக்குநற் றயிலம் வாங்கல் சிறங்கையா லள்ளு தற்கும்
பகைவரைக் கெலித்து முண்டாத் தட்டுதல் படமெ ழுதுதல்
குகைக்கும் பெண்குறிக ளுக்குங் குழவியேந் தற்கு மாமே.

ஆட்டுக்க லாட்டு தற்கு மம்மிக்கல் லரைப்ப தற்கும்
கூட்டிய வாசல் தன்னைச் சாணநீர் தெளிப்ப தற்கும்
நாட்டியே கோலம் போடல் நடைஇணை றிறங்கு தற்கும்
காட்டிய சர்ப்ப சீர்ஷக் கையென்று ரைக்கு நூலே. 266

சலனசர்ப்ப சிரம்.

பிசகாமற் சர்ப்ப சீர்ஷம் பிடித்துப்பெ ருவிர லாட்ட
விசையெனுஞ் சலன சர்ப்ப சிரமாகும் விதியோ கங்கேள்
பசையுள மெழுகு மையுங் கூளசோத னைக்குப் பற்றும்
நிசமென நார தன்ம தத்தினி னிகழ்த்து மானே. 267

262. தோற்றம் - திருமால். குலம் - தேவகுலம். நிறம் மஞ்சள். இருடி - இந்திரன். அதிதெய்வம் - [illegible]

263. இலக்.: பதாகக்கையில் விர[illegible]

263-266. விதி.: பாம்பு ; அந்தம ; யாணை மத்தகங்கள னங்கள் ; மல்லர்தோள்கள் ; முனிவர் ; தேவர்களுக்குரிய தானங்கள் ; தன் இருப்பிடம் புரோக்ஷணம் செய்தல் ; ஆதரவுகள் பாணிவாத்யம் ; மிருகத்தின் செவிகள் ; தோணி ; கரி, பரி தட்டுதல் ; தாகத்துக்குத் தண்ணீர் குடித்தல் ; இலச்சையாய் முகம் மறைத்தல் ; தலைமயிர்க்குத் தைலமிடல் ; சிறங்கையால் அள்ளுதல் ; பகைவரை வென்று தோள்தட்டுதல் ; படமெழுதல் ; குகை ; பெண்குறி ; குழந்தை ஏந்தல் ; ஆட்டுக்கல் ஆட்டுதல் ; அம்மி அரைத்தல் ; வாசலில் சாணநீர் தெளித்தல் ; கோலம் போடல் ; நடை இணறு இறங்குதல்.

சன்னசர்ப்ப சீர்ஷம்.

267. இலக். : சர்ப்பசிரக்கையில் கட்டை விரலை அடக்கல்.

விதி. : பசையுள மெழுகு, மை, கஸ்தூரி

இது, நாரத மதம்.



16. மிருகசிர அஸ்தம்

மிருகசி ரிடமே தோன்றும் விமலிபால் முனிக்கு லத்தாம்
வறுமைதீ ரமுத வண்ண மிருடிய தாமார்க் கண்டன்
பொறுமைசே ரதிதெய் வந்தான் புனலணிந் தோனே யாமென்
றுறுதியாய்ப் பரத நூலோ ருரைத்தனர் முறைதெ ரிந்தே.

அரிசர்ப்ப சிர்க்கை தன்னி லங்குட்டங் கனியை மீட்ட
மிருகசி ரக்கை யென்று விளம்பினர் விஞ்யோ கங்கேள்
திரிபுண்ட ரத்திற் கும்நற் றிரைகளுக் கும்ப டிக்கும்
கரமரி யாதை கட்குங் கபோலங்க ளுக்கு மென்ப. 269

பாதவிக் யாசங் கட்குப் பண்பான பெண்க ளுக்கும்
நாதங்கட் குஞ்சு வர்க்கு நல்லிருப் பிடங்க ளுக்கும்
தாதுகை பிடிப்ப தற்கு முகசலம் வழிப்ப தற்கும்
கோதியே வகுப்ப தற்குங் குறிவழி காட்டற் காமே. 270

காலுகை குத்து தற்குங் கதிக்கரீ றணிவ தற்கும்
கோலமா விடுவ தற்குங் குடைக்கும்வி வாதங் கட்கும்
சீலனே யழைப்ப தற்குஞ் சிலைமதன் சிரகத் திற்கும்
வாலிபர் கும்மி கொட்டல் விலங்கின்றன் வதன மாமே. 271

---

15. ஸர்ப்பசீர்ஷ ஹஸ்தம் (பாம்புப்படக்கை).

நா. சா. (ix : 84). உள்ளங்கையைக் குழித்துக் கட்டைவிரலும் பிற விரல்களும் ஒன்றோடொன்று நெருங்கியிருப்பது. உதகதானம், பாம்பு களின்கர்ச்சி, தண்ணீர் ஊற்றல், சண்டைக் இழுத்தல், யானை டித்தகன் களின் கர்ச்சி.

அபி. த. (தமிழ் 58-59) இந்நூலிலுள்ள 263, 264 செய்யுட்கள், 264 செய்யுளின் பின் இரண்டடிகள் மாறியுள்ளன.

விண்டகை முகமே ராக்க மெள்ளப்பே சென்ப தற்கும்
பண்டுநெஞ் சதனில் வைக்கப் பகர்சிவ லிங்கத் திற்கும்
கொண்டுகண் கடையில் வைக்கச் சைக்கினை வெட்கத் திற்கும்
நண்டிய சிறுபிள் ளைக்கு நாபியில் வைத்துக் காட்டே. 272

காட்டுங்கைப் பக்கம் நேரிற் காணலாம் யௌவ னஸ்திரீ
வாட்டமில் லாவ யிற்றில் வைத்திடப் பதுமி னிக்காம்
நாட்டிய சித்தி னிக்கே நன்மார்பு புயமே ராகச்
சூட்டுதற் சங்கி னிக்காஞ் சொல்நெற்றி யத்தி னிக்கே. 273

சிலிட்ட மிருகசிரம்.

திறமிரு கசிரந் தன்னிற் சிறுவிரல் வளைத்து நீக்கி
உரமதாய்ப் பிடிப்ப தற்கே யுரைக்கலாங் கோலிக் குண்டு
தரையிற்கை தள்ளு தற்குந் தாஷ்டகே னென்ப தற்கும்
பருசிலிட்ட மிருக சீரி டக்கையாய்ப் பகர லாமே. 274

முஷ்டிமிருகசிரம் : சங்கோசமிருகசிரம்.

செகமிரு கச்சி ரத்திற் சிறுவிர லுள்வ ளைக்கத்
தகும்விநி யோகங் கொண்டு சங்கோச மிருக மென்றே
நிகழ்முட் டியிற்க னிட்டாங் குட்டத்தை விரித்து நீட்டப்
புகழ்முட்டி மிருக மீதுப் புல்கலை மானுக் கென்னே. 275

268. : தோற்றம் - பார்வதி ; குலம் - முனிக்குலம் ; நிறம் - அமுதம் ; இருடி - மார்க்கண்டன் ; அதிதெய்வம் - சிவன்.

269. : இலக். : சர்ப்பசிரக்கையில் கட்டை விரலையும் சுண்டு விரலையும் நீட்ட மிருக சிரக்கையாகும்.

269-271. விநி. : திரிபுண்டரம் ; அலைகள் ; படி ; கைக்ளினுல் செய்யப்படும் மரியாதை ; கபோலங்கள் ; பாதவிந்யாசங்கள் ; பெண்கள் ; நாதங்கள் ; சுவர் இருப்பிடங்கள் ; தாது பார்த்தல் ; முகவியர்வை வழிப்பது ; தலை கோதி வருப்பது ; குறித்த வழிகாட்டல் ; கால், கைகுத்தல் ; திருநீறணிவது ; கோலமிடுவது ; குடை ; விவாதம் ; ஒருவனை (சீலனை) அழைப்பது ; மன்மதன் ; நிரகம் ; வாலிபர் கும்மி கொட்டல் ; மிருகங்களின் முகம் ;

272-273. இக்கையை முகத்தின் நேர்வைக்க, 'மெல்லப்பேசு' என்பதாம். நெஞ்சில் வைக்க. சிவலிங்கம் ; கடைக்கண்ணருகில்

வைக்க, சமிஞ்ஞை, ஒட்கம் ; நாபியில் வைக்க, சிறுபிள்ளை ; பார்சுவத்தில் வைக்க, யௌவன ஸ்திரீ ; வயிற்றில் வைக்க, பதுமினி. மார்பில், சித்தினி ; புயத்தில், சங்கினி ; நெற்றியில், அத்தினி.

சிலிட்ட மிருகசிரம்.

274. இலக்.: மிருக சிரக்கையில் சிறு விரலை வளைத்து நீக்கி உரமாய்ப் பிடிப்பது.

விநி.: கோலிக் குண்டினைத் தரையில் தள்ளுதல் ; 'தாஷ்டகேன் (கோலியாட்டத்தில் பிரயோகமாகும் ஒரு சொல்) என்பது.

முட்டி மிருகசிரம்.

275. இலக்.: மிருகசிரக்கையில் சுண்டுவிரலை உள் வளைத்தல்.

விநி.: சங்கோசம் ; மிருகம்.

சங்கோசமிருகசிரம்.

இலக்.: முட்டிமிருகசிரத்தில் சுண்டு விரலையும் கட்டை விரலையும் விரித்து நீட்டல். விநி.: கலைமான்.

17. சிம்மமுக அஸ்தம்.

இச்சிம்ம முகமே தோன்று மினியதக் கன்பாற் சாதி
மெச்சிய வேத ஞகும் நிறமது வெள்ளை யாகும்
பச்சமா மிருடி வேதன் பகர்ந்திடு மதிதெய் வந்தான்
நச்சுடைக் கழுத்தே தா னென்றே நவி லுமிப் பரதந் தூலே. 276

---

16 மிருகசீர்ஷ ஹஸ்தம் (மான்தலை).

நா. சா. (ix : 86) இலக்.: சர்ப்பசிர்ஷக்கையில் கட்டைவிரலையும் சுண்டு விரலையும் நிமிர்த்தி, பிற விரல்களைக் கீழ் நோக்கி அமைப்பது. "இங்கே, இப்பொழுது, இருக்கிறது, இன்று, சாத்தியம், பிரகாசம், சூதாடுதல், வியர்வை துடைத்தல், கோபபாவம்" இவற்றைக் குறிப்பது.

சிலப்: (பக். 96) மான்றலையாவது - பெருவிரலும் சிறுவிரலும் ஒழிந்த மூன்றும் தம்மில் ஒத்து ஒன்றி முன்னே இறைஞ்சி நிற்பது ; என்னை, 'மான்றலை யென்பது வகுக்குங் காலை, மூன்றிடை விரலு நிமிர்ந்தக மிறைஞ்சிப், பெருவிரல் சிறுவிரலென்றிவை நிமிர்ந்து, வருவ தென்ப வழக்கறிந் தோரே.

நா. சா. உம் சிலப்பதிகாரமும் இக்கைக்கு இலக்கணம் கூறுவதில் ஒத்துள்ளன.

அபி. தா. தமிழ். (60-61) இந்நூலிலுள்ள 269, 270 செய்யுட்களே. 61 இல் பின் இரண்டு அடிகள் மாறியுள்ளன.

அநாமிகை மத்தி மத்தோ டங்குட்ட நுனிகூட் டித்தற்
சனிகனிட் டிகையி ரண்டுந் தனித்தனி பரப்பி நீட்டில்
இனியசிங் கமுக மீதிற் கனியிதின் விகியோ கங்கேள்
வனிதையே வோம மானை மான்முய லுக்குந் தானே. 277

தாதுசோ தனைக்குஞ் சிங்கா சனத்திற்குந் தருப்பை கட்கும்
ஓதுதா மரைம ணிக்கு முரைபசு மேடம் பாகம்
நீதியாய்ப் பார்ப்ப தற்கு நிகழ்புங்கி தமதாய் வைத்த
போதது இடபத் திற்கு மார்புற மோக்க மாமே. 278

சிலிட்ட சிம்ம முகம்.

சிங்கமு கக்கை தன்னிற் சிறுவிரல் வளைக்க மேலாம்
திங்கள்சேர் முனிக லைக்கோட் டின்னுப மானத் திற்கும்
கங்கைநீ ரருவி கட்குங் காணுமொற் றைக்கொம் பன்வி
லங்குகள் முகந்த னக்குஞ் சிலிட்டசிங் கமுகக் கையே. 279

வக்கிரதந்த சிம்மமுகம். சங்கீர்ண சிம்மமுகம்.

சிலிட்டசிங் கமுகக் கையிற் சேர்ந்ததற் சனிவ ளைத்து
மெலிதாய் நிற்கக் கூழைக் கிடாய்முதல் மிருகத் திற்கும்
நலிவக்கி ரதந்த சிங்க முகக்கையாம் கீழே நோக்கில்
எலியணில் முகமுஞ் சூர்சங் கீர்ணசிங் கமுக மேற்கும். 280

தலசிம்ம முகம்.

பலசிம் மமுகச் கையிற் பெருவிரல் நீட்டி நின்றூல்
தலசிம் மமுகக் கையாகுந் தங்குப மானந் தானும்
வலிய காண்டா மிருகம் வனக்கிடாய்க் கொம்பு கட்கும்
நிலைமையாய்ச் சார்ஞி தேவர் நிகழ்த்தினர் பரத நூலில். 281

276. தோற்றம் - தக்ஷன்; ஜாதி - அந்தணன்; நிறம் - வெள்ளை; இருடி - பிரமன்; அதி தெய்வம் - நீலகண்டன்.

277-278. இலக்.: மோதிரவிரல், நடுவிரல், கட்டைவிரல், இவற்றின் நுனி கூட்டி, சுட்டு விரலும் சுண்டுவிரலும் தனித்தனி பரப்பில் சிம்ம முகக்கையாகும்.

விதி.: ஓமம், யானை, மான், முயல், ஆதுசோதனை, சிங்காதனம், தருப்பை, தாமரைமணி, பசு, ஆடு, பாகம் நீதியாய்ப் பார்ப்பது;

அதனைப் புங்கிதமாய் வைத்தால் இடபம்; மார்பு அருகில் வைத்தால், மோக்ஷம்.

சிலிட்ட சிங்கமுகம்.

279. இலக்.: சிங்கமுகக்கையில் சுண்டுவிரலை வளைத்தல்.

விநி.: கலிக்கோட்டுமாமுனி; கங்கை; நீரருவிகள்; ஒற்றைக் கொம்பன்; விலங்குகள் முகம்;

வக்கிரதந்த சிங்கமுகம்.

280. இலக்.: சிலிட்ட சிங்க முகக்கையில் சுட்டுவிரலை வளைத்து மெலிதாய் நிறுத்தல்.

விநி.: கூழைக்கிடாய் முதலான கூழை மிருகங்கள்.

சங்கீர்ண சிங்கமுகம்.

இலக்.: வக்கிரதந்த சிங்கமுகக்கையைக் கீழ்நோக்கிப் பிடித்தல்.

விநி.: எலிமுகம், அணில்முகம், மூஞ்சூறு.

தலசிங்கமுகம்.

281. இலக்.: சிங்கமுகக்கையில் கட்டைவிரல் நீட்டி நிற்றல்.

விநி.: காண்டாமிருகம்; வனக்கிடாய்க்கொம்புகள்.

இவ்வாறு பரதநூலில் சார்ங்கதேவர் கூறுகின்றார்.

18. காங்கூல அஸ்தம்.

இசையதாம் காங்கூ லஞ்ச னித்தது சிவனி டத்தில்
வசையிலாக் குலத்திற் சித்தன் வண்ணமே பொன்மை யாகும்
அசைவிலா விருடிக் கந்த னுருமே யதிதெய் வந்தான்
பசையுள கமல மாது என்னவே பகரு நூலே. 282

பதுமகோ சக்கை தன்னிற் பகராநா மிகைவ ளைத்தால்
இதுகாங் கூலக் கையா மிதற்கினி விநியோ கங்கேள்
அதோமுக மாக வைக்கக் கணிசமா மட்டம் தன்னில்
இதுகனி கவ்வற் கொவ்வை முந்திரிக் கனிமு கஞ்சேர். 283

---

17. ஸிம்ஹமுகஹஸ்தம் (சிங்கமுகக்கை)

நா. சா. சில்ப். ஸ. - ர.: இக்கை இல்லை.

அபி. த. (தமிழ்) 62-63. இந்நூலின் 277, 288 ஆம் செய்யுட்கள், சில மாறுபாடுகளுடன் உள்ளன.

சிறுதனங் கொட்டைப் பாக்குத் தேங்காயாம் பற்பூ விற்கும்
சிறுபொருள் சகோர பட்சி சிறந்தசா தகப்பட் சிக்காம்
சிறுகிண் கிணிக்கு மெலுமிச் சம்பழங் களுக்கு மென்று
அறியவே காங்கூ லக்கை யாமென்று விளம்பி னாரே. 284

சிலிட்டகாங்கூலம்.

விளம்பிய காங்கூ லத்திற் றற்சனி விரல்வ ளைக்க
வளம்பெறு வியாத னுக்கும் வகுத்தன ரன்றி லிற்கும்
விளம்பதாய்ச் சுக்கி ரன்றன் பரதத்திற் றேர்ந்து ரன்ரூய்
வெளிப்படச் சிலிட்ட காங்கூ லம்மென வுரைத்தார் மின்னே.

சங்கீர்ண காங்கூலம்.

உரைபத்ம கோசந் தன்னில் மத்திம முள்வ ளைக்க
கிறைந்தசிங் தாம ணிக்கு நிகழ்வது மாத விக்கும்
பிரகற்பதி யின்ம தத்திற் பேசுமிக் கைநா மத்தைக்
குறித்த னர்சங் கீர்ண காங்கூ லமாமென் றுமின்னே. 286

குறிப்பு : சிலர் இதனை லாங்கூலம் (வால்) என்பர்.

282. தோற்றம் - சிவன்; குலம் - சித்தர்குலம்; நிறம் பொன்மை; இருடி - கந்தன்; அதிதெய்வம் - பத்மா.

283–284. இலக்.: பதுமகோசக்கையில் மோதிரவிரலை வளைத்தல்.

விநி.: இக்கையை அதோமுகமாக வைக்க, கணிசம்; மட்டமாக வைக்க, ரவற்கனி, கோவைக்கனி, முந்திரிக்கனி; முகத்தில் வைக்க, சிறுதனம், கொட்டைப்பாக்கு, தேங்காய், ஆம்பற்பூ, சிறுபொருள், சகோரபட்சி, சாதகப்பட்சி, கிண்கிணி, எலுமிச்சம்பழம்.

சிலிட்ட காங்கூலம்.

285. இலக்.: காங்கூலத்தில் தர்ச்சனி விரலை வளைத்தல்.

விநி.: வியாதன்: அன்றில்.

இது, சுக்கிரன் பரதம்.

சங்கீர்ண காங்கூலம்.

286. இலக்.: பத்ம கோசத்தில் மத்திமத்தை உள்வளைத்தல்.

விநி.: சிந்தாமணி, மாதவி (குறுக்கத்தி).

இது, பிரகஸ்பதி மதம்.

---

18. காங்கூலஹஸ்தம்.

நா. சா. (ix : 88) ஸ. - ர. (7: 140): சுண்டுவிரல், சுட்டுவிரல், சட்டை விரல் தனித்தனியே நிமிர்த்தி, மோதிர விரலை வளைத்து, சுண்டுவிரலை உயர்த்துவது. ஸ்திரீகளின் கோபப்பேச்சின் விளைவுகள் முதலியன.

அபி. நி. (தமிழ் 64). இக்நூலின் 284 ஆம் செய்யுள்.

19. அலபதும அஸ்தம்.

அலபல்ல வந்தான் றேன்று மரியிட மதின்கு லந்தான்
துலேயிலா திலகு மேகங் துருவனன் னிறமே பச்சை
நிலேமையா மிருடி யேவ சந்தனு மதிதெய் வம்நேர்
குலவுமா தித்த னென்றே கூறுமிப் பரத நூலே. 287

விரலேந்தும் வளேத்து நீட்டி வேறுவே ருய்ப்பி டித்த
கரமல பதுமக் கையாங் கருதிய விடியோ கங்கேள்
விரகங்கண் ணுடி வட்ட மேல்வீடு முலேக ளுக்கும்
இரதமூர் பூர்ண சந்த்ர னெழில்குளங் களுக்கு மாமே. 288

கொண்டைகெம் பீரங் கர்வங் கோபங்கூக் குரல்ம லர்ந்த
முண்டகப் பூக பித்த முதலான கனிக ளுக்கும்
வண்டில்கொண் டாட்டம் சக்ர வாகமாம் சப்தத் திற்கும்
எண்டிசை புகழும் பந்து நிருத்தமு மழகுக் காமே. 289

அழகுடன் நாபி தன்னி லமைத்திட விகாரத் திற்கும்
வளம்பெறு முகநே ராக வைக்கவித் தனேதா னென்றும்
தளம்பதி சுபசந் தோஷ மதன்புய னேரி னிற்பாம்
தெளிந்தகை சிரத்தின் மீதிற் சேர்த்திடக் கிரீட மாமே. 290

சிலிட்ட அலபதுமம்.

நோக்கல பதுமக் கையில் நுனிகனிட் டிகைவ ளேக்கத்
தாக்கிய பனேசா கைக்கும் பருத்ததன் னியனு னிக்கும்
சூக்குமக் கயிறு தனக்கு மோதத்தின் சூசனத் திற்கும்
பார்க்கவே யிதுசி லிட்ட வலபதுமக் கையி தாமே. 291

287. தோற்றம் - அரி; குலம் - கந்தருவன்; நிறம் - பச்சை; இருடி - வசந்தன்; அதிதேவதை - ஆதித்தன்.

288-289. இலக்.: ஐந்து விரல்களேயும் வளேத்து நீட்டி வேறு வேருய்ப் பிடித்தல்.

விநி.: விரகம்; கண்ணுடி வட்டம்; மேல்வீடு; தனங்கள்; பூர்ணசந்திரன்; குளங்கள்; கொண்டை; கம்பீரம்; கருவம்; கோபம்; கூக்குரல்; மலர்ந்த தாமரை; கபித்தம் முதலான கனிகள்; வண்டில்; கொண்டாட்டம்; சக்ரவாகம், சப்தம்; பந்து; நிருத்தம்; அழகு.

290. இக்கையை நரபியில் வைக்க, விகாரம்; முகம் நேராக வைக்க, 'இத்தனைதான்' என்பது; புயத்தில் வைக்க, தளபதி, சுபசந்தோஷம்; தலைமீது வைக்க, கிரீடம்.

சிலிட்ட அலபதுமம்.

291. இலக்.: அலபதுமக்கையில் சுண்டு விரலின் நுனியை வளைத்தல்.

விநி.: பனைமட்டை, அதன் நுனி, சூக்குமமான கயிறு, ஓதத்தின் சூசனம், (ஒலிக்குறி).

20. பாண அஸ்தம்

கருதுமிப் பாணங் தோன்றுங் கந்தன்பாற் குலத்திற் பார்ப்பான்
நிறமது கறுப்ப தாகு மிருடியே நிமல னெனதும்
அருமைசேர் மொழியி னாளே யதிதெய்வங் கந்த னென்றே
பெருமையாய்ப் பரத நூலோர் பேசினர் முறைதெ ரிந்தே.

பகர்முட்டி கனிட்டமதா நீட்டலாகும்
பாணக்கை விநியோக மயிர்தி ருத்தல்
அகல்கலப்பை திருத்தியுழல் நந்திநாட்யம்
ஆரென்னுஞ் சங்கைக்கா வுடையா ருக்கும்
தகைமையிலா வேர்வைதனைத் தெறித்தலோடே
தாக்குமே கெண்டிச்செம் பிற்கு நீண்ட
நகங்களினூற் கிள்ளியதைக் குறிப்புக்காட்ட
லாகுமென வுரையாக நவிலு நூலே. 293

---

19. அலபத்மஹஸ்தம் (மலர்ந்த தாமரை),

நா. சா. (ix. 90) அலபல்லவ: விரல்களெல்லாம் உள்ளங்கையை நோக்கி, பக்கங்களிற் சாய்ந்து, ஒன்றோடொன்று பிரிந்து நிற்பது, தடுக்கவும், 'நீ யார்;' 'அது அன்று'; 'மூடத்தனம்' என்று சொல்லவும், ஒரு ஸ்திரீ தன்னைக்குறிக்கவும்.

சிலப். (பக். 94). அலாபத்திரம்: சிறுவிரல் முதலாகிய ஐந்தும் வளைந்து மறிவது: "அலாபத் திரமேயாயுங்காலைப், புரைமையின் மிகுந்த சிறுவிரன் முதலா, வருமுறையைந்தும் வளைந்து மறிவதுவே'.

ஸ - ர. (7: 147). வியாவிருத்தமாக்கி, விரல்களைப் பக்கங்களை அடைய நிறுத்தல்.

அபி. த். தமிழ் (65-66). இந்நூலிலுள்ள 288, 289, செய்யுட்களே. இக்கையை ஆனந்தக்குமாரஸ்வாமியின் அபி. த. லோலபத்ம என்றும். இதன் தோற்றம் கிருஷ்ணன் வெண்ணெயையும் பாலையும் திருடியகாலம் என்றும், கூறும்.

சங்கீர்ண பாணம்

அங்குட்ட மத்யங் கூட்டி யகாமிதற் சனிவ ஹேத்துத்
தங்குக னிட்டம் நீட்டிற் சங்கீர்ண பாண மாகும்
சங்கைதீர் விநியோ கங்கேள் காமதே னுவிற்காய்ச் சாற்றும்
பொங்கிய வானோர்க் காசான் மதத்தினிற் புகன்ரூன் பாரே.

292. தோற்றம் - கந்தன்; குலம் - அந்தணன்; நிறம் - கருமை; இருடி - நிமலன் (ஈசுவரன்); அதிதெய்வம் - கந்தன்.

293. இலக். : முஷ்டிக்கையில் சுண்டுவிரலை நீட்டல்.

விநி. : கூந்தல் திருத்தல்; கலப்பை திருத்தி உழுதல்; கந்தி நாட்டியம்; 'யார்?' என்று கேட்டல்; ஆவுடையார்; வேர்வை தெறித்தல்; கெண்டிச் செம்பு; நீண்ட நகங்களினால் கிள்ளியதைக் குறிப்புக் காட்டல்.

சங்கீர்ண பாண அஸ்தம்

294. இலக். : கட்டைவிரலையும் நடுவிரலையும் கூட்டி, மோதிர விரலையும் சுட்டுவிரலையும் வளைத்து, சுண்டுவிரலை நீட்டுதல்.

விநி. : காமதேனு.

இது பிரகஸ்பதி மதம்.

21. பிரமர அஸ்தம்

இப்பிர மரக்கை தோன்று மேலக்கா சிபனி டத்தில்
செப்பிய குலத்திற் றேவன் திகழ்நிறம் பச்சை யாகும்
ஒப்புடை யிருடி யாக வுரைத்திடுங் கபில னென்றே
துப்புறு மதிதெய் வந்தான் கருடனுஞ் சொல்லு நூலே. 295

மத்தியமங் குட்டங் கூட்டி மன்னுதற் சனிவ ஹேத்து
மத்தவி ரண்டு நீட்ட வரும்பிர மரக்கை யாகச்
சுத்திய பிரமரத் திற்குஞ் சுகங்கட்குங் கூடு தற்கும்
குத்தமில் சராச ரங்கள் கோகிலா திகட்குந் தானே. 296

தாநகம் வளைத லுக்குந் தங்கிய தும்பி கட்கும்
கானகப் பட்சிக் கெல்லாக் கருத்தறிந் துவமா னத்தும்
மோனமாம் யோகி கட்கு முகந்ததி யானத் திற்கும்
ஆனதோர் பிரம ரக்கை யின்விநி யோக மாமே. 297

---

20. பாண ஹஸ்தம் (அம்பு)
இக்கை பிற நூல்களில் இல்லை.

சிலிட்டபிரமரம்

சொல்லிய பிரமரக் கையிற் சுழித்தநா மிகைவ ளைக்கக்
கல்லினுட் டேரை கட்கு முட்டையின் குஞ்சு கட்கும்
துல்லிபங் குளவிக் கூண்டு சொல்சிலிட் டபிரம ரக்கை
வல்லப விதியோ கத்தை வகுத்தனர் பரத நூலோர். 298

பூருவபிரமரம்

தாரம முசாசி யத்திற் றற்சனி வளைத்த கையே
பூருவ பிரமர மாகும் புகலுமிவ் விதியோ கந்தான்
கூர்பிர மத்திற் குள்ள குணமதா மிதனை நந்தி
சாரும்பி ரமரக் கையாய்ச் சாற்றின ரறிந்து கொள்ளே.

295. தோற்றம் - காசிபன்; குலம் - தேவகுலம்; நிறம் - பச்சை; இருடி - கபிலன்; அதிதெய்வம் - கருடன்.

296-297. இலக்.: நடுவிரலையும், கட்டைவிரலையும் கூட்டி, சுட்டுவிரலை வளைத்து, மற்ற இரண்டையும் நீட்டுதல்.

விநி.: சுற்றும் வண்டு; கிளிகள்; கூடுதல்; சராசரங்கள்; கோகிலம் முதலியவை; நகம் வளைதல்; தும்பி; காட்டுப் பறவைகளைப் பிடிக்க அவைகளைப் போலக் கூவுதல்; மௌன யோகி; தியானம்.

சிலிட்ட பிரமரம்

298. இலக்.: பிரமரக்கையில் மோதிரவிரலைச் சுழித்து வளைத்தல்.

விநி.: கல்லினுள்தேரை; முட்டையில்குஞ்சு; குளவிக்கூண்டு.

பூர்வபிரமரம்

299. இலக்.: அம்சாசய அஸ்தத்தில் சுட்டுவிரலை வளைத்தல்.

விநி.: பிரமரக்கைக்குள்ள விதியோகங்களே.

இது நந்தி மதம்.

---

21. பிரமர ஹஸ்தம் (தேனீ)

நா. சா. (ix : 100) இலக்கணம் இங்குள்ள வரறே. தாமரை, அல்லி போன்ற கீண்ட தண்டுள்ள மலர்கள் பறித்தல்; கடுக்கன்.

சிலப். (பக். 94). அராமிகைவிரலும் நடுவிரலும் தம்மிற் பொருந்தி வலஞ்சாயப் பெருவிரல் நடுவிரலினுள்ளே சேரச் சுட்டுவிரலும் சிறுவிரலும் பின்பே வளைந்து நிற்பது.

அபி. த. (தமிழ் 69). இந்நூலின் 296-ஆம் செய்யுளொன்றே கொடுக்கப்பட்டுள்ளது.

22. சந்தம்ச அஸ்தம்

சந்தம் சந்தா னென்றுஞ் சரசுப தியினி டத்தில்
விந்தைசேர் குலம தாகும் வித்தியா தரனவ் வண்ணம்
அந்தமாம் வெண்சி வப்பு யிருடிவி சுவாவ சுவாகும்
உந்தகொள் ளதிதெய் வம்வால் மீகனென் றோது நூலே.

விடுத்திடு பதும கோசம் விரலைந்தும் வெவ்வே றுக
அடிக்கடி பரப்பிக் கூட்டி லதுதான் சந்தம் சம்மாம்
கொடுப்பது பலிதா னங்கள் கூறுமர்ச் சனையைத் திற்கும்
அடுப்புள் பிராண னுக்கும் மனப்பயங் களுக்குந் தானே.

பயமுறும் பெருவ ழுக்குப் பந்திமுத் துத்தி ராட்சம்
நயவச னங்க ளுக்கும் நல்வெள்ளிக் குளிகை காட்டல்
மெய்ப்புண் புளகங் காட்டல் விரிமல்லி கைக்கும் வாச
மயமுறு நாசி நாடும் வளர்நெஞ்சு சிந்த னைக்காம். 302

சிலிட்டசந்தம்சம்

சந்தம்ச வத்தந் தன்னில் நடுவஞ மிகையைத் தாங்கி
முந்தவே மடக்கிக் காட்டச் சிலிட்டசந் தம்ச முன்னே
கந்தையாம் நண்டு தேளு நட்டுவக் காலி கட்காம்
இந்தக்கை பரதந் தானு மியம்புங்கற் கடக மென்றே. 303

300. தோற்றம் - ஸ்ரஸ்வதி ; குலம் - வித்தியாதரகுலம் ; நிறம் - வெண்சிவப்பு; இருடி - விசுவாவசு; அதிதெய்வம்-வான்மீகன்.

301. இலக். : பதுமகோசக்கையின் ஐந்து விரல்களை வெவ் வேறுக அடிக்கடிக் கூட்டுவது.

விநி. : பலிகொடுப்பது; தானங்கொடுப்பது; அர்ச்சனை; ஐந்து; அடியுண்ட பறவையின் பிராணன் ; மனப்பயங்கள்.

302. பெருவழக்கு, பந்தி, முத்து, உத்திராட்சம், நயவசனங் கள், வெள்ளி, குளிகை, புண், புளகமுறுதல், மல்லிகை, நாசி ; சிந்தனை.

சிலிட்ட சந்தம்சம்

303. சந்தம்சத்தில், நடுவிரல் மோதிரவிரலைத் தாங்கும்படியாக மடக்கிக்காட்டல். நத்தை, நண்டு, தேள், நண்டுத்தெறுக்கால் ; இதனைப் பரதநூல் கற்கடகக்கை என்னும்.

---

22. ஸந்தம்ச ஹஸ்தம் (கிடுக்கி)

நா. சா. (ix 109) (இலக்) அராளஹஸ்தத்தின் சுட்டுவிரலையும் கட்டைவிரலையும் குறுக்கிட்டு, உள்ளங்கையைக் குழிவாக்குவது. இக்கை

23. தாம்பிரசூட அஸ்தம்

துடியுள தாம்பிர சூடம் சுருதியிற் பிறப்பாஞ் சாதி
திடமுள தேவ ஞகுஞ் சிறப்புடை நிறமாஞ் சங்கு
முடிபெறு மிருடி விண்ணோர் முதல்வனு மதிதெய் வந்தான்
வடிவுள வமரற் கர்சா னென்னவே வழுத்து நூலே. 304

தாங்கிய மூருளந் தன்னிற் றற்சனி தனவ ஊத்தல்
ஆங்கது தாம்பிர சூட மதற்கினி விதியோ கங்கேள்
ஓங்கிய கோழி காக்கை ஓலையி லெழுது தற்கும்
பாங்குறு மோர்பூ விற்கும் பாலர்க ளுக்குந் தானே. 305

மதாந்திர தாம்பிரசூடம்

மூட்டியிற் கனியங் குட்ட மோதிப்பின் னீக்கிக் கூட்ட
ஒட்டகை குதிரை கட்கு மூபமானம் பசுவும் செப்பும்
வெட்டுமின் னட்டாம் பூச்சி மேவுமு ழைத்து ளிக்கும்
திட்டந்தூள் சொக்கு மதாந்திர தாம்பிர சூடக் கையே. 306

304. தோற்றம் - வேதம்; சாதி - தேவர்; நிறம் - சங்கு. இருடி; இந்திரன்; அதிதெய்வம் - பிரகஸ்பதி.

305. இலக்.: முருளக்கையில் சுட்டுவிரலை வளைத்தல்.
விதி.: கோழி, காக்கை, ஓலையிலெழுதுதல், ஓர் பூ, பாலர்கள்.

ரஸங்களுக்கும் கிலேமைகளுக்கும் தக்கவாறு மூன்று வகைகளாக அமைக்கப்படும். (1) முன்னே பிடிப்பது; (2) வாய்க்கருகில் வைப்பது; (3) ஒரு புறமாகப் பிடிப்பது. (விகி.) (1) முன்னே பிடிப்பது; பூப் பறித்தல், மாலைகட்டுதல், புல், ரோமம் அல்லது நூலைப்பறித்தல், அம்பு பறித்தல், முள் எடுத்தல்—(2) வாய்க்கருகில் வைப்பது, கொடியிலிருந்து மலர் பறித்தல், விளக்குத்திரி, மஞ்சள், ஒரு பாத்திரத்தில் ஊற்றி நிரப்பல், திட்டல், கோபம், இரண்டு ஸந்தம்சஹஸ்தங்களைக் கூட்டிஞல்; பூணூல், பவழம் முதலியவற்றில் துவாரமிடல், வில்நாண், நுண்மை அம்பு, குறிவைத்த பொருள்கள், யோகம், தியானம், கொஞ்சம் என்பது. இக்கையை ஒரு புறமாய் வைத்து, அதன் ஓரத்தைக் கொஞ்சம் திருப்பிஞல், மென்மை, திட்டல், பொருமை இவற்றைக் காட்டும். இன்னும் அது, படம் தீட்டுதல், கண்ணுக்கு மையிடல், தண்டு, பத்ரலேகை எழுதுதல், ஸ்திரீகள் அரைக்குச்சாயம் பிழிதல் இவற்றைக்காட்டும்.

ஸ - ர. (7: 175) இலக். நா. சா. போன்றதே.

அபி. த. (தமிழ் 73) இந்நூலின் 301-ஆம் செய்யுளை

மதாந்திர தாம்பிரசூடம்

306. இலக்.: முஷ்டிக்கையில் சண்டுவிரலையும் கட்டைவிரலையும் மோதி, பின் நீக்கிக் கூட்டுதல்.

விநி.: ஒட்டகை, குதிரை, பசு, மின்னட்டாம்பூச்சி (வெட்டுக்கிளி?), மழைத்துளி, தூள் (சொக்குப் பொடி).

24. முகுள அஸ்தம்

வளருமிம் முகுளந் தோன்று மாருகி யிடத்திற் சாதி
வளம்பல வாக நிற்கும் வண்ணமே கபில மாகும்
அளவிலா விருடி கந்த னுருமே யதிதெய் வந்தான்
புளகித முலையி னிலே யிந்துவாய்ப் புகலு நூலே. 307

விரனுனி யைந்துங் கூட்டி மின்னுங்கை முகுள மாகும்
பரிவுறு போச னங்கள் பஞ்சபா ணங்க ளுக்கும்
வருநீல மலருந் திக்கும் வாழைப்பூ விற்கு மென்ப
தருபுகழ் முத்தி ராதி காரணத் துக்கும் தானே. 308

அர்த்தமுகுளம்

முகுளவஸ் தத்திற் றற்ச னியுமத்தி மையு முன்னுகச்
சிகமதை நீட்டிக் காட்டத் தேசாட்சி ராகத் திற்கும்
மிகுவாழை மாமர நொச்சி விதித்த வனுமா னத்தில்
பகுத்ததைச் செப்பு மர்த்த முகுளக்கை யென்னும் பண்பே.

---

23. தாம்ரசூட ஹஸ்தம் (கோழி)

நா. சா. (ix. 121–122): நடுவிரலும் கட்டைவிரலும் குறுக்கிட்டு, சுட்டுவிரல் வளைந்து, மற்ற இரு விரல்களும் உள்ளங்கையை ஒட்டியிருத்தல், காலத்தின் சிறு பகுதிகளைக் குறிக்க, இளம்பெண்ணை அழைத்துப் பேச. விரல்கள் ஒன்றோடொன்று நெருங்கி வளைந்து அவற்றின்மீது கட்டைவிரலை வைத்தலும் தாம்ரசூடஹஸ்தமாகும். அதன் விநியோகம் 100, 1000, 100000 பொன் காசுகளைக் குறித்தல்

நா. சா.; ஸ - ர். இதனோடு ஒத்தகை விவரணங்களை முடிக்கும்.

சிலப். (பக். 94) தாம்பிரசூடமாவது:—நடுவிரலும் சுட்டுவிரலும் பெருவிரலும் தம்முள் நுனியொத்துக் கூடி வளைந்து அணிவிரலும் முடங்கி நிமிர்வது.

ஸ - ர். (7: 181) பிரமரத்தின் சண்டு, மோதிர விரல்கள் உள்ளங்கையைத் தொடல்.

அபி. த. (தமிழ் 76): இந்நூலின் 305-ஆம் செய்யுள் மட்டும்.

சிலிட்டமுகுளம்

அர்த்தமா முகுளந் தன்னி லணிவிரல் நீண்டு மற்றத்
தற்சனி மத்தி மத்தைச் சார்ந்துமுன் னங்குட் டத்தோ
டொத்திவே டர்கு றிக்கு முயர்பிண்டி பாலத் திற்கும்
கொத்தினிற் பிரித லுக்குங் கூர்சிலிட்ட முகுளங் காணே.

கண்டமுகுளம் : முட்டிமுகுளம்

வளருமே முகுளந் தன்னிற் றற்சனி வலிதாய் நீட்ட
விளைகண்ட முகுள மாகும் விதியோகம் பெருச்சா ளிக்காம்
சூளைமுட்டி மத்தி மாங்குட் டம்முட்டி முகுள மாகும்
வளமைசேர் விதியோ கந்தான் வகுத்தனர் குரங்கிற் கென்றே.

மத்திமமுகுளம்—சந்தம்சமுகுளம்

குத்துமுட் டியில நாமி யங்குட்டம் பொருத்தக் கூட்டில்
மத்திம முகுள மாகும் விதியோகம் பூனை வாழ்த்தும்
கித்தவண் டிகளிலங் குட்டந் தற்சனி வளைத்துக் காட்ட
முத்தென வளர்சந் தம்ச முகுளங்கா கத்திற் கென்னே.

பிரதேசமுகுளம்

முகுளத்திற் கனிவ ளைத்தாற் பிரதேச முகுள மாகும்
தகும்விதி யோகஞ் சாற்றுஞ் சாரசப் பட்சிக் கென்று
நிகமஞ்சேர் சோம நாத னிகழ்த்தின னிவற்றை யெல்லாம்
மகிமைசேர் மொழியி னுளே மனதுணர்ந் துரைசெய் வாயே.

307. தோற்றம் - அநுமன். சாதி - சங்கீர்ணம். நிறம் - கபிலம். இருடி - கந்தன். அதிதெய்வம் - சந்திரன்.

308. **இலக்.** : ஐந்து விரல்களையும் நுனி கூட்டுவது.

விநி. : போஜனங்கள் ; பஞ்சபாணங்கள் ; நீலமலர் ; உந்தி ; வாழைப்பூ ; முத்திராதி தாரணங்கள்.

அர்த்த முகுளம்

309. **இலக்.** : முகுளத்தில் சுட்டுவிரலையும், நடுவிரலையும் முன்னுக நீட்டல்.

விநி. : தேசாட்சிராகம் ; வாழை ; மா ; நொச்சி ; அநுமானத்தாற் கொண்டவை.

சிலிட்ட முகுளம்

310. இலக். : அர்த்த முகுளத்தில் மோதிரவிரல் நீண்டு, சுட்டு விரல் நடுவிரல்களைச் சார்ந்து, கட்டைவிரலோடு ஒற்றுதல்.

விநி. : பிண்டிபாலம் ; கொத்தினில் பிரிதல்.

கண்ட முகுளம்

311. இலக். : முகுளத்தில் சுட்டுவிரலை நன்றாக நீட்டுதல்.

விநி. : பெருச்சாளி.

முட்டி முகுளம்

இலக். : நடுவிரலும், கட்டைவிரலும் முட்டி நிற்பது ?

விநி. : குரங்கு.

மத்திம முகுளம்

312. இலக். : முஷ்டிக்கையில் மோதிரவிரலும் கட்டைவிரலும் பொருந்தக் கூட்டல்,

விநி. : பூனை, வண்டி.

சந்தம்ச முகுளம்

இலக். : கட்டைவிரலையும் சுட்டுவிரலையும் வளைத்துக் காட்டல்.

விநி. : காகம்.

பிரதேச முகுளம்

313. இலக். : முகுளக்கையில் சுண்டுவிரலை வளைத்தல்.

விநி. சாரசம் என்னும் பறவை.

இவை ஸோமநாதன் மதம்.

25. சதுர அஸ்தம்

கருதுமிச் சதுரக் கையே காசிப னிடத்திற் ரேன்றும்
பெருகுலம் பலவ தாகும் பேசுஞ்சித் திரவண் ணந்தான்
இருடியாம் வால கில்ய னிதற்கதி தெய்வ மாகும்
கருடனை மென்றே நூலோர் கருதுவர் முறைதெ ரிந்தே. 314

அங்குட்டந் தனைவ ளைத்த நாமிகை யடியிற் கூட்டித்
தங்குமத் திமம நாமி தற்சனி மூன்றுங் கூட்டி
அங்கனிட் டிகைமூன் னீட்டி லந்தக்கை சதுர மாகும்
இங்கினி வினியோ கங்க ளியம்பின ரிசைவல் லோரே. 315

---

24. முகுள ஹஸ்தம் (மொட்டு)

நா. சா. (ix. 116) : அம்சாச்யக்கையில் விரல்கள் வளைந்து நுனி கூடுதல். சிலப். (பக். 95): ஐந்துவிரலும் தம்மில் தலைகுவிந்து உயர்ந்துநிற்பது.

ஸ - ர. (7: 169.) விரல்கள் நெருங்கி உயர்ந்து கட்டைவிரலின் நுனியில் பொருந்துவது.

அபி. த. (தமிழ் 74) : இந்நூலின் 308-ஆவது செய்யுளை.

கத்தூரி தங்கஞ் செம்பு காரீய மிரும்பு கட்கும்
பித்தலை வதனம் வர்ண பேதங்கள் கண்க ளுக்கும்
சத்திய மிரச பானஞ் சரசம்நெய் யெண்ணெய் மெல்ல
வைத்திடு நடைக ளச்சம் வருங்கொஞ்சப் பொருட்கு மாமே.
பொருந்திய செவிநே ராக்கக் கம்மலா மார்பு நேராய்த்
திருந்தம னவவதா னத்தின் திகழ்வெள்ளை பச்சை யாதி
வருணபே தங்க ளோடே யடையாளம் வகுத்துச் சொல்லும்
குருவினுற் றெரிந்து காட்டக் கொளுஞ்சது ரக்கை யென்னே:

அர்த்தசதுரம்

சதுரக்கை மத்தி மத்தில் நுனிவரை யங்குட் டந்தான்
இதமுடன் கூட்டிச் சேர்த்தா லிந்தோளி ராகத் திற்கும்
கொதிநீர்நெய்த் துளிக ளுக்குங் துரிதவி ராமத் திற்கும்
பதியது மான்ம தத்திற் பகரர்த்த சதுரக் கையே. 318

கண்டசதுரம்

சதுரம தாகுங் கையிற் றற்சனி நீட்டிற் கண்ட
சதுரமாம் விநியோ கங்கோ ரோசன மமுதம் பூதி
துதிபெறு சிவப்பு ரத்னந் துலங்கிய பாதிக் காமென்
றிதமுடன் யாள்ய வல்கன் மதத்தினி லியம்பு மின்னே. 319

சர்ப்பசதுரம்

சர்ப்பசீ ருடக்கை தன்னி லநாமிகாங் குட்டந் தன்னில்
நிற்பதா முபமா னந்தான் நிகழ்சர்ப்ப சதுர மென்பர்
கற்பனை மதுபா னங்கற் பூரஞ்சு தம்நெய் போஜ
னப்பிரிய கறிப தார்த்தம் நவிலுமே விநியோ கத்தே. 320

314. தோற்றம் - காசிபன். குலம் - சங்கீர்ணம். நிறம் - சித்திரவர்ணம். இருடி - வாலகில்யன். அதிதெய்வம் - கருடன்.

315. இலக். : கட்டைவிரலை வளைத்து மோதிரவிரலின் அடியிற்கூட்டி, நடுவிரலையும் மோதிரவிரலையும், சுட்டுவிரலையும் கூட்டி, சுண்டுவிரலை முன் நீட்டுதல்.

316. விதி. : கத்தூரி ; தங்கம் ; செம்பு ; காரீயம் ; இரும்பு ; பித்தளை; முகம்; வர்ணபேதங்கள்; கண்கள்; சத்தியம் செய்தல்; ரசபானம் ; சரசம்; நெய்; எண்ணெய்; மெல்லிய நடைகள்; அச்சம்; கொஞ்சம் பொருள்கள்.

317. இக்கையைச் செவியின் நேராக்க, கம்மல். மார்பு நேராகப் பிடிக்க, மன அவதானம், வெள்ளை பச்சை முதலான வருண பேதங்கள்.

அர்த்தசதுரக்கை

318. இலக்.: சதுரக்கையில் நடுவிரலின் நுனிவரையில் அங்குட்டத்தைக் கூட்டிச் சேர்த்தல், விநி.: இந்தோளி ராகம், கொதிநீர், நெய்த்துளி, துரிதம், விராமம்.

இது திருமாலின் மதம்.

கண்டசதுரக்கை

319. இலக்.: சதுரக்கையில் தர்ச்சனியை நீட்டல். விநி.: கோரோசனம்; அமுதம், விபூதி, சிவப்பு ரத்னம்; பாதி.

இது யாஞ்யவல்கியன் மதம்.

சர்ப்பசதுரக்கை

320. இலக்: சர்ப்பசிருடக்கையில் அகாமிகத்தை அங்குட்டத்தில் நிறுத்துதல். விநி.: கற்பூரம், மதுபானம், கற்பூரம், சூதம், நெய், உணவிற்குரிய கறிவகைகள்.

26. அம்சாசிய அஸ்தம்

துலங்குமம் சாசி யக்கை தோன்றுமே சிவனி டத்தில்
மலங்கலில் லாக்கு லத்தில் மறையோனு நிறம் வெளுப்பு
துலையிலா விருடி யாகுஞ் சுக்கிர னதிதெய் வந்தான்
மலரவ னகு மென்றே வழுத்துமிப் பர்த நூலே. 321

தற்சனி யுடனங் குட்டந் தன்னையே கூட்டி நீட்டி
மிச்சமூ வீரல்க டன்னை வேறுவே ருக நீட்டி
இச்சமு சாசி யக்கை யென்றனர் விநியோ கங்கேள்
நிச்சய மூபதே சங்கண் ணீர்த்துளி களுக்கு மாமே. 322

---

25. சதுர ஹஸ்தம் (சாதுர்யம்)

நா. சா. (ix 92): நான்கு விரல்களை நீட்டி, கட்டைவிரலை நடுவிரலை நோக்கி மடித்தல். சிலப் (பக். 96): சுட்டுவிரலும் நடுவிரலும் தம்முட் சேர்ந்து இறைஞ்சப் பெருவிரல் அகம்வர வைத்துச் சிறுவிரல் பின்பே நிமிர்ந்து நிற்பது.

ஸ - ர. (7: 154-5) ஸர்ப்ப சிராங்குஷ்டம் மத்திமையின் நடுக்கணுவில் இருத்தி கனிட்டிகையை உயர்த்தல். பதாகத்தின் அங்குஷ்டம் மத்திமையடியில் இருத்தலும் ஆம்.

அபி. த. (தமிழ் 67-58): இந்நூலின் 315, 316 ஆம் செய்யுள்களே.

ஆமது கிள்ளு தற்கு மவனென்றே குறிப்ப தற்கும்
பூமியி லறிவ தற்கும் பொன்தங்க முரைப்ப தற்கும்
நேமமுத் தாரம் போடல் நிறைதூபந் தூண்டு தற்கும்
காமியே யனுதி னங்கட் குவமானங் கைமு னிக்கே. 323

கைத்தலத் தாலே தாலி கட்டவுஞ் செய்தி யோதல்
சித்திரக் காசி தங்கள் சேர்ந்தெழு துகிற தற்கும்
கொத்துதற் றிரிப ரப்பல் கூர்ந்தெழு புளகங் கட்கும்
முத்துமல் லிகைமுல் லைப்பூ முதல்மலர் களுக்குந் தானே.
மலர்கொய்த லொன்றெ டுத்தல் வளர்மூக்குச் சிந்து தற்கும்
மூலதுனி நெருடு தற்கு முன்பூணூல் காட்டு தற்கும்
நிலதிரி கோண நாம நேர்வழி நீட்டு தற்கும்
கலையயன் விதிப்ப தற்குந் தக்கிணை மூர்த்திக் காமே. 325

ஆமது பார திக்கு மழகிய விலக்கு மிக்கும்
நேமமாஞ் செபமா லைக்கு நேர்கணை தொடுப்ப தற்கும்
காமியே நடன மாடுங் கடவுளா மழுக்கைக் கையின்
சேமமாய்க் காட்டு மம்சா சியக்கர விதியோ கம்மே. 326

தானது ரசித மாக்க ஜலபிந்து நிசமு மென்பர்
ஆனன நேராய்க் காட்ட வழகிய ரூபத் திற்கும்
ஏனம்பு லாக்கு மூக்குக் கிசைந்ததாள் போட வுக்கும்
பூணியே காதில் வைக்கப் போதணை யென்ன லாமே. 327

நந்தியம் சாசி யக்கை தன்னையே நார தன்ரூன்
சந்தமு சவஸ்த மென்றே சாற்றினர் விதியோர் கத்தில்
சிந்தையி லகத்தி யன்ரூன் சிலிட்டவம் சாசி யத்தைத்
தொந்தவம் சாசிய மென்றே சொல்லிய தறிந்து கூறே. 328

சிலிட்டவமுசாசியம்

எண்ணுமம் சாசி யத்தி விசைசந்தமத் நிமையைக் கூட்டில்
திண்ணிய மலர்மொட் டிற்குஞ் சிறுமுலை கொட்டைப் பாக்கு
நண்ணுகை மணிபி டித்தல் நற்பதம் பார்ப்ப தற்கும்
மொண்ணைனுஞ் செர்க்கட் டங்காய்க் குகந்திடுங் குவளைப் பூவே.

பூவுநீ ராம்ப லல்லி பொருந்திய வராளி மூன்று
தேவர்கள் கூடு தற்குஞ் செங்கழு நீர்ப்பூக் கொட்டைப்
பாவுநூல் பிடிப்ப தற்கும் பகர்சிலிட் டவம்சாச் யக்கை
மேவுவா ணதிபு னைந்தோன் விளம்பிய நூலிற் ரூனே.

அம்சாசியக்கை

321. தோற்றம் - சிவன்; குலம் - அந்தணன்; நிறம் - வெளுப்பு; இருடி - சுக்கிரன்; அதிதெய்வம் - பிரமன்.

322. இலக்., தர்ச்சனியுடன் கட்டைவிரலைக் கூட்டி நீட்டி, மற்ற மூன்று விரல்களையும் வேறு வேறுக நீட்டிக் காட்டல்.

விநி.: உபதேசம்; கண்ணீர்த்துளிகள்;

323. கிள்ளுதல்; அவன் என்று குறித்தல்; அறிதல்; பொன், தங்கம் உரைத்தல்; முத்தாரம் போடுதல்; தூபம் தூண்டுதல்; அனுதினம் என்று காட்டல்; முனி;

324. கையினால் தாலிகட்டல்; செப்திசொல்லல்; சித்திரம், காகிதம் எழுதுதல்; கொத்துதல்; திரிபரப்பல்: மயிர்க்கூச்சு; முத்து; மல்லிகை, முல்லை முதலான மலர்கள்;

325. மலர் கொய்தல்; ஒருமலர் எடுத்தல்; மூக்குச்சிந்துதல்; முலைநுனி நெருடல்; பூணூல் காட்டுதல்; நாமம் தீட்டுதல்; பிரமன் விதிப்பது; தக்ஷிணமூர்த்தி;

326. பார்தி; இலக்குமி; ஐபமாலை; கணிதைதொடுப்பது; நட ராஜனின் மழுக்கை;

327. அக்கையை ரேசிதமாக்க, நீர்த்துளி; உண்மை. முகத் தின் நேராய்க்காட்ட, அழகிய ரூபம்; புலாக்கு; மூக்குத்தூள் போடல். காதில் வைக்க, போதனை.

328. நந்தி அம்சாசியக்கை என்றதை நாரதன் சந்தம்ச அஸ்தம் என்றான்; அகந்தியன் சிலிட்டவம்சாசியத்தை, தொந்த அம்சாசிய மென்றான்.

சிலிட்டவம்சாசியம்

329. இலக்.: அம்சாசியத்தில் நடுவிரலைக் கூட்டுதல்.

விநி.: மலர்மொட்டு, சிறுமுலை, கொட்டைப்பாக்கு, கையில் மணி பிடித்தல், பதம்பார்த்தல், சொக்கட்டங்காய், குவளைப்பூ,

330. நீராம்பல், அல்லி, வராலி, முத்தேவர்களின் கூட்டம், செங்கழுநீர்ப்பூ, கொட்டைப்பாவு நூல் பிடிப்பது.

இது கங்காதரன் (வானதிபுனைந்தோன்) கூறியது.

---

26. ஓம்ஸாஸ்ய ஓஸ்தம் (அன்னத்தின் முகம்)

நா. சா (ix 103); ஸ-ர. (7: 161) சுட்டுவிரலும் நடுவிரலும், கட்டை விரலும் நெருங்கி நிற்க, மற்ற விரல்களை நீட்டுதல். (இது மேலே சொன்ன சிலிட்ட அம்சாசியம்).

அபி. த. (தமிழ் 70, 71): இந்நூல் 322, 324-ஆம் செய்யுட்களை.

27. அம்ஸபட்ச அஸ்தம்

பிரித்தவிவ் வமுச பட்சம் பிருங்கியி னிடமாய்த் தோன்றும்
விரித்திடுங் குலத்திற் றேவ வேசியா நிறங்க றுப்பு
பருத்திடு மிருடி யாகும் பரதனே யதிதெய் வந்தான்
கருப்புவில் லுடையோ னென்றே கருதுமிப் பரத நூலே.

ஓதியசர்ப் பசிரந் தன்னி லொருகனிட் டிகையை நீட்ட
ஈதம்ச பட்சக் கையா மிதற்கினி விதியோ கங்கேள்
சேதுபந் தனங்க ளுக்கும் தேகத்தி னகக்கு றிக்கும்
மாதுகே ளாறி லக்கம் வாகனங் களுக்கும் தானே. 332

நெத்திக்க டைக்கண் நேராய் நின்றது சைக்கி னைக்காம்
பத்தியா யழைப்ப தற்கும் பரிந்தகை லாகு விற்கும்
மித்ரசம் பாஷ் ணைக்கும் வெகுதுக்கம் நாசி தன்னில்
பொத்திய முகநேர் சொக்குப் பொடிமனத் திடமு மாமே.

சிலிட்ட அம்ஸபட்சம்

ஆமம்ஸ பட்சக் கையி லணிவிரல் வளைக்கு மாகில்
காமது தெற்குத் தேசந் தங்கிய மண்வெட் டிக்கும்
சாமிவை ரவர்க்கு கந்த கபாலத்தைத் தரித்த கையாய்க்
காமிநீ சிலிட்ட வம்ஸ பட்சக்கை காட்டி விள்ளே. 334

331. தோற்றம் - பிருங்கி ; குலம் - தேவதாசி ; நிறம் - கறுப்பு; இருடி - பரதன், அதிதெய்வம் - மன்மதன்.

332. இலக். : சர்ப்பசிரக்கையில் சுண்டுவிரலை நீட்டல்.

விதி. : சேதுபந்தனங்கள் (பாலங்கள்), நகக்குறி, ஆறு என்னும் இலக்கம், வாகனங்கள்.

333. இக்கையை கடைக்கண் நேராக நிறுத்த, சமிஞ்ஞை, பக்தியாய் அழைப்பது, கைலாகு கொடுப்பது, மித்ரசம்பாஷ்ணை ; நாசியில் வைக்க, வெகு துக்கம் ; முகத்தின் நேர்வைக்க, சொக்குப் பொடி, மனத்திடம்.

சிலிட்ட அம்ஸபட்சம்

334. அம்ஸபட்சக்கையில் மோதிரவிரலை வளைக்க, தென்தேச மண்வெட்டி, வைரவர் கைக்கபாலம்.

---

27. ஹம்ஸபக்ஷ ஹஸ்தம் (அன்னத்தின் சிறகு)

நா. சா. (ix 105) : மூன்று விரல்களை நீட்டி, சுண்டுவிரலை உயர்த்தி, கட்டைவிரலை வளைத்தல். (ஸ - ர. (7: 163) பதாகத்தின் தர்ச்சனி முதலிய மூன்றும் அடி சிறிது வளைந்திருத்தல்.

அபி. த. (தமிழ் 72) : இந்நூலின் 332-ஆம் செய்யுள்.

28. பூர்ணநாப ஹஸ்தம்

ஒதுமிப் பூர்ண நாப முதித்தது மாலி டத்தில்
நீதிசேர் சூலத்தில் வேந்தன் நிறம்மது சிவப்ப தாகும்
சாதுவா மிருடி யோதுஞ் சார்த்தூல முனிய தாக
ஆதிகூ ருமமே யீதற் கதிதெய்வ மென்னு நூலே. 335

பதுமகோ சத்தில் விரல்நுனிக ளெல்லாம்
வளைத்திட வேபூர்ண நா பமதாய்ப் பற்றும்
இதன்விநி யோகங் திருட்டுக்கு ரங்கு சிங்கம்
ஏற்றபுலி யாமைந ரசிங்கம் நாகும்
கதிபுடைத்த முலையரக்கன் கர்ன்னி காரங்
காட்டுமப ஜையமோவாய் தாங்கல் மற்றும்
சதிர்பெறு கெட்டிக்காரத் தனத்தி னேடே
தலைசொரித லாமெனவே சாற்று நூலே. 336

இப்பூர்ண நாபக் கையை யியம்பிய சார்ஞ் தேவர்
ஒப்பவே சங்கீர் ணுல பதுமக்கை யென்று கந்து
தப்பிலா வுறிக ளுக்குந் தரித்திர னென்ப தற்கும்
செப்பினர் வினியோ கத்தைச் செயலறிந் துரைசெய் வாரே.

335. தோற்றம் - மால்; குலம் - வேந்தன்; நிறம் - சிவப்பு; இருடி - சார்த்தூலமுனி; அதிதெய்வம் - ஆதி கூர்மம்.

336. இலக்.: பதுமகோசக்கையில் விரல் நுனிகளெல்லாம் வளைத்திடுதல். விநி.: திருட்டுக்குரங்கு, சிங்கம், புலி, ஆமை, நரசிங்கம், புடைத்தமுலை, அரக்கன், கர்ணிகாரம் என்னும் மலர், அபஜயம், மோவாய்தாங்கல், கெட்டிக்காரத்தனம், தலைசொரிதல்.

337. இக்கையைச் சார்ங்கதேவர் சங்கீர்ண அலபதுமக்கை என்று கூறி, அதற்கு வினியோகம் உறிகள், தரித்திரன் என்றும் கூறினர்.

29. திரிசூல அஸ்தம்

வருகனிட் டிகையங் குட்டம் வளைத்துமூ விரலை நீட்டத்
திருசூலக் கைய தற்குச் செப்பினர் விநியோ கங்கேள்
திரிபுர சிகரம் வில்வத் தழைதிரி சூலத் துக்கும்
திரிமூர்த்தி யென்ன நந்தி செப்பின கையி தாமே.

---

28. பூர்ணநாபஹஸ்தம்

இதை ஸ - ர. ஊர்ணநாபம் (சிலந்தி) என்னும்

இலக்.: சுண்டுவிரலையும் கட்டைவிரலையும் வளைத்து, மற்ற மூன்று விரல்களையும் நீட்டல்.

விநி.: திரிபுர சிகரம்; வில்வத்தழை; திரிசூலம்; திரிமூர்த்தி.

இது நந்தி மதம்.

30. வியாக்கிர அஸ்தம்

மிருகசீரிடக்கை தன்னில் மேவிய கனிஷ்டாங் குட்டம்
நிரைசமர னங்க ளாக நீட்டவே வியாக்கிர வஸ்தம்
மிருகராசன் மண்டு கம்வி ளங்கிய விராக்க தற்கும்
வெறிதரு குரங்கு கட்கு வியாக்கிரக் கையா மென்னே.

இலக்.: மிருகசீரிடக்கையில் சுண்டு விரலையும் கட்டைவிரலையும் சமமாக நீட்டல்.

விநி.: மிருகராசன் (இங்குப் புலி); தவளை; இராக்கதர்; குரங்கு.

31 பிண்டி அஸ்தம்

பரதமுனி சொல்லு வியாக்ரக் கைதனைக் கும்ப யோனி
வருசிங்க நகைக்கை யென்றுன் வளர்த்தி லன்ம தத்தில்
தருபூர்ண நாபக் கையாய்ச் சாற்றுமே லாகச் சுற்றிச்
சுருங்கிடப் பிண்டிக் கையாய்ச் சொல்லினர் பரத நூலோர்.

பரத முனிவர் வியாக்ரக்கை என்று சொன்னதை அகஸ்தியர் சிங்க நகைக்கை என்றார். தந்நிலின் மதத்தில் பூர்ண நாபக்கையாகச் சொல்லப் பெற்றதை மேலாகச் சுற்றிச் சுருக்கினால் அது பிண்டிக்கை யாகும் என்று பரத நூலோர் கூறினர்.

---

29. திரிசூல அஸ்தம் (முத்தலைச் சூலம்)

தமி. அபி. த. (77) வருகனிட் டிகையங் குட்டம் வளைத்துமூ வீரலே நீட்டில்
திரிசூலக் கைய தற்குச் செப்பினர் விகியோ கங்கேள்
திரிசூல பாவத் துக்குத் திரிசூலத் துக்குத் தானென்
றறிய ரத்த சூசி யங்கையைச் சொல்கின் றாரே.

30. வியாக்கிர ஹஸ்தம். (புலி)

தமி. அபி. த. (75) மூன்றுமடியில் 'விளங்கிய முத்துச் சிப்பி' என்ற மாறுபாட்டுடன் இச்செய்யுளே உள்ளது.

31. பிண்டி அஸ்தம்

சிலப் பச். (95) பிண்டியென்றது சுட்டுவிரல் பேடிவிரல் அநாமிகை, சிறுவிரல், ஒட்டி நெகிழ்ந்து முடங்க அவற்றின்மேலே குறுக்கிடப் பெரு விரல் கட்டி இலங்கி விரல் வழிமுறை யொற்றல்.

32 சலவக்ஷ அஸ்தம்

சிலிட்டமாம் பதும கோசக் கைதனிச் செப்பும் யாஞ்ஞ
வல்கியுஞ் சங்கீர் ணலை பதுமக்கை யாய்வ குத்தான்
சலவட்ச கரமே யென்றுஞ் சார்ங்கிதே வன்ம தத்தில்
சிலந்திப்பூச் சிக்கும் பூசம் செப்பினர் விநியோ கத்தே. 341

சிலிட்டபதும கோசக்கையை யாஞ்ஞவல்கியர் சங்கீர்ண அலபது மக்கை என்றனர். சார்ங்கதேவர் மதத்தில் சலவட்சகரம் என்று (இது) சொல்லப்படும். இதன் விநியோகம் ; சிலந்திப்பூச்சி ; பூசம்.

33. தூப அஸ்தம்

சாற்றிய திரிப தாகந் தற்சனி நடுமே லாகச்
சேர்த்திடத் தூப வஸ்தஞ் சிறந்தரா க்ஷதர்மு கத்தும்
தோற்றிய வீணர் கட்குஞ் சொற்பரத முனிவன் ரூ ணும்
போற்றினன் விநியோ கத்தைப் புகன்றதை யறிந்து கொள்ளே

இலக்.: திரிபதாகக்கையில் தர்ச்சனியை நடுவிரலின் மேலாகச் சேர்த்திடுதல்.

வி.நி.: ராக்ஷஸமுகம் ; வீணர்.

இதைக் கூறியவர் பரதமுனிவர்.

34. மண்டூக அஸ்தம்

அமையும்ப துமகோ சத்தை யதோமுக மாய்ப்பி டித்து
இமைவிலா தசைத்துக் காட்ட வித்துமண்டூ கக்கை யென்பர்
கமையதாம் விநியோ கங்கேள் கனவிர னங்க ளுக்கும்
சமையஞ்சேர் மதன னுக்குஞ் சாற்றினர் நூல்வல் லோரே.

வியாக்ரக்கை நா. சா. ல் கூறப்படவில்லை. அகஸ்தியர் அதனைச் சிங்க நகைக்கை என்று கூறிய விடமும் தெரியவில்லை. சிலப்பதிகாரம் இக்கைக்குச் சொல்லும் இலக்கணமும் இச்செய்யுள் கூறும் இலக்கணமும் வேறுபட்டுள்ளன. இக்கைக்கு வினியோகமும் கூறப்படவில்லை.

33. தீப ஹஸ்தம் (புகை)

சிலப்: (பக். 93). தூபமென்றது நிமிர்ந்த நடுவிரலும் சுட்டு விரலும் நாதிப்பட வளைய நிற்பது.

இலக்.: பதும்கோர்சக்கையைத் தலைகீழாகப் பிடித்து அசைத்துக்காட்டல்.

விரி.: பெரிய இரணங்கள்; மதனன்.

35. பிரம்ம அஸ்தம்

பதாகக்கை மத்தி மத்தி லங்குட்டம் பகர்ந்து கூட்ட
விதாயமாய்ப் பிரம்மக் கையாய் விளம்பினர் விஜியோ கங்கேள்
நிதானமாஞ் சுத்த சூன்ய வஸ்துவின் சொரூப நீளுஞ்
சுதாவுட னறிந்து செய்யச் சொல்வினர் நூல்வல் லோரே.

இலக்.: பதாகக்கையில் நடுவிரலின் பாதியில் கட்டைவிரலைக் கூட்டுதல்.

விரி.: சுத்த சூன்ய வஸ்துவின் சொரூபத்தை அறிந்து சொல்ல.

36. வர்ஜித அஸ்தம்

மருவிலா திருக்கும் செங்கை மணிக்கட்டுக் குழையக் கையைப்
பிரியவே சுற்றும் போது பேசுமவற் சிதக்கை யென்றே
பெருமையாம் விஜியோ கங்கேள் பேர்முலை தளர்த லுக்கும்
பொருளிலர் சேர்த லுக்கும் புகலலாம் நூலா ராய்ந்தே. 345

இலக்.: மணிக்கட்டுக் குழையக் கையைச் சுற்றல்;

விரி.: முலைதளர்தல்; பொருளிலர் சேர்தல்.

37. மானுஷ அஸ்தம்

காணும ராளக் கையிற் கனிட்டிகை வளைய் மாகில்
மானுட வஸ்த மாகும் வழங்கிய விஜியோ கங்கேள்
மானிடர் பொதுவ தாகு மரத்திலாந் தளிர்க ளுக்கும்
ஈனமிற் கடாரி பிச்சு மாயுதத் திற்குஞ் சொல்லே. 346

---

34. மன்டுக ஹஸ்தம் (தவளை)

35. ப்ரம்மஹஸ்தம்

36. வர்ஜித ஹஸ்தம் (நீக்கம்)

இலக்.: அராளக் கையில் சுண்டுவிரலே வகூர்த்தல்.

விநி.: மானிடர்ப்பொது; மரங்களிலுள்ள தளிர்கள்; கடாரி; பிச்சுவர.

38. கஜமுக அஸ்தம்

கொள்ளுஞ்சிங் கமுகக் கையிற் கூர்பெரு விரல கற்றி
மெள்ளநீட் டக்க சத்தின் முகக்கையாம் விநியோ கங்கேள்
விள்ளும்பாண் டியநாட் டுக்கு மிகுமணம் பார்த்த லுக்கும்
தெள்ளிய கண்மு கங்க டோர்ந்துகாட் டுதற்கு மாமே. 347

ஆனைக்கோர் செவியையாட்ட லடர்ந்தகாட் டெருமை கட்கும்
பூணிக்கை யொன்று மேலாய்ப் பொருந்த மற்றொன்று வைக்கில்
வானுல கத்தை யாளும் வாசவன் றனக்கு கந்த
சேனைய ராவ தத்தைச் செப்பலாம் விநியோ கம்மே. 348

பந்தமி லகத்தி யன்றன் பகர்கஜ முகக்கை தன்னைச்
சந்த்ரமி ருகச்சி ரக்கை யென்றனர் சார்ங்கி தேவர்
மூந்தவே நார தன்றன் மொழிபிர மரக்கை யென்றே
சொந்தமாய்ப் பரத நூலிற் சொல்லிய தறிந்து கொள்ளே.

இலக்.: சிம்மமுகக்கையில் பெருவிரலே அகற்றி, மெல்ல நீட்டல்.

விநி.: பாண்டியநாடு; மணம் பார்த்தல்; கண்காட்டல்; முகங் காட்டல்; யானைதன் ஒரு செவியை ஆட்டுதல்; காட்டெருமை; ஒரு கையின்மேல் மற்றொரு கை வைக்க, இந்திரன் சேனை; ஐராவதம்.

349. அகத்தியனுர் கஜமுகக்கை என்று கூறியதைச் சார்ங்கதேவர் சந்திரமிருகசிரசுக்கை என்றனர்; நாரதர் பிரமரக்கை என்றனர்.

---

37. மானுஷ ஹஸ்தம்

கஜமுக ஹஸ்தம் (யானைமுகம்)

கைகள் 29 முதல் 38 முடிய நா. சா. முதலிய பிறநூல்களில் இல்லை.

39. மென்னிலக்கை

அங்குட்டந் தனைக்குஞ் சித்து அடுத்தநால் விரல்வி ரித்து
நீங்காமுன் னீட்ட வேமென் னிலக்கையாம் விதியோ கங்கேள்
சங்கைதீர் சாமம் நாலுஞ் சாதிநாற் குழல்வா சித்தல்
பங்கய மலரோன் சென்னிப் பாகமென் றுரைப்பர் மாதே.

இலக்.: கட்டைவிரலை வளைத்து, அடுத்த நான்கு விரல்களை விரித்து முன் நீட்டுதல்.

விதி.: நான்கு சாமம்; நான்கு ஜாதி; குழல் வாசித்தல், பிரமன் சிரசு.

40. கூர்மக்கை

நடுவிர னீட்டி மற்ற நால்விரல் வளைத்துக் காட்டல்
குடிபெறுங் கூர்மக் கையாய்க் கூறுவர் விதியோ கங்கேள்
தடியிலா மைக்கு மோர்பூத கணத்திற்கு மொண்கு றிக்கும்
கொடுராக்ஷ தகணத் திற்குங் குலசோர்தற் காகு மெண்ணே.

இலக்.: நடுவிரல் நீட்டி, மற்ற நான்கு விரல்களும் வளைத்துக் காட்டல்.

விதி.: ஆமை, பூதகணம், ஒன்குறி(?); இராக்கத கணம், குலசோர்தல்.

41. திரிலிங்கக்கை

கூறுதற் கனியங் குட்டங் கூட்டிமற் றதைம டக்கில்
வாராகி யமணிக் கட்டை வளைப்பது திரிலிங் கக்கை
சேரவே விதியோ கங்கேள் திருவிளக் கும்முக் கோணம்
பாராரும் பணத்தைச் சுண்டல் பருவிரை யூன்றல் பாரே.

---

39. மென்னிலை

சிலப். (95) மெய்க்கிலை என்றொரு கை கூறப்படுகிறது; அதன் இலக்கணம், சிறு விரலும் அணிவிரலும் நடுவிரலும் சுட்டுவிரலும் விட்டு நிமிரச் சுட்டுவிரல்மேல் பெருவிரல் சேரவைப்பது.

40. கூர்ம அஸ்தம் (ஆமை)

இது முதல் 359 செய்யுள் முடியக்கூறும் கைகள் நா. சா. முதலிய வற்றில் இல்லை.

ஆவுடை யார்க்கும் யோனிக் குங்கொக்குந் குங்கோ ழிக்கும்
மேவுகூ ழைக்கி டாய்க்கும் விசையுற வூசி குத்தல்
காவுமெ ழுகுப தத்தைப் பார்ப்பதற் காகு மென்றே
பாவசாத் திரங்கற் றோர்கள் பாடிய திவ்வா றென்றே. 353

இலக்.: சுட்டுவிரலையும் கட்டைவிரலையும் கூட்டி, மற்றவற்றை மடக்கி, மணிக்கட்டை வளைத்தல்.

விநி.: திருவிளக்கு; மூக்கோணம்; பணத்தைச் சுண்டல்; விதை ஊன்றல்; ஆவுடையார்; யோனி; கொக்கு; கோழி; கூழைக் கிடாய்; ஊசிகுத்தல்; மெழுகுபதம் பார்த்தல்.

42. சாலாயக்கை

நிறையுமங் குட்டந் தற்ச னியுழத்தி மத்தை நீட்டி
மறுரெண்டு விரல்ம டக்கி மணிக்கட்டைச் சோர வாட்டல்
பெறுஞ்சாலா யக்கை யென்று பேசுவர் விதியோ கங்கேள்
அறும்பல கோலக் கோம ளப்பாவ னைகூத் திற்காம். 354

சூழும்வாத் தியமு டுக்குச் சுழல்பொரு வண்டு வீழல்
வாழ்வண்டு சுழற்றற் சூ ரவளிக்காற்றுக் குளிர்வா டைக்கும்
ஈழமின் வெட்டல் ராட்டு விசைகத்தி சுழற்றல் வேகம்
ஆழிவண் டியுருளல் பம்ப ரம்மெய்க்கூச் சிடுதல் மற்றும்.

தயிர்சி லுப் புதலெ ரிப்புத் தனித்தேங்கா யிடித்த லோடே
இயல்புறச் சந்தோ ஷித்த லேந்துசக் கரத்தைக் காட்டல்
அயிலா திதுகேள் சேடை யாமெனப் பரத நூலோர்
நயமுட னுரைத்த திந்த நடனபா வனைக ளென்னே. 356

இலக்.: கட்டைவிரல், சுட்டுவிரல், நடுவிரலை ஆகிய மூன்றையும் நீட்டி, மற்ற இரண்டு விரல்களையும் மடக்கி, மணிக்கட்டைத் தொங்கவிட்டு ஆட்டல்.

விநி.: பலவகையான கோமளப் பாவனைக் கூத்து; வாத்திய முடுக்கு; வண்டு வீழல்; வண்டு சுழற்றல்; சூரவளிக்காற்று; குளிர் வாடை; ஈழமின்னல் வெட்டல்; ராட்டின விசை; கத்தி சுழற்றல் வண்டிச் சக்கரம் உருளல்; பம்பரம்; மெய்க்கூச்சிடுதல்; தயிர் கிலுப் புதல்; எரிப்பு; தேங்காய் பிடித்தல்; சந்தோஷித்தல்; கையிலேந்து சக்கரம்;

---

41. திரிலிங்க லஸ்தம் (மூன்று இலிங்கங்கள்)

43. சிலீமுகக்கை

நிலையாமங் குட்டத் தின்னி ரையிற்றற் சனிக கத்தைப்
பலமாக வூன்றிற் றற்ச னியினடு வரைமேற் பற்றி
விலகாமத் திமைக கத்தை விசையூன்றி யிவ்வா றுகப்
பலசிறு விரல்வ ரைக்கும் பிடிப்பது சிலீமு கக்கை. 357

சொல்லுமிவ் வத்தத் திற்குச் சூழ்விநி யோகங் கேளு
புல்லுநாட் டியமும் லாசியம் பொருநடங் கீணதொ டுத்தல்
கிள்ளுநா மங்கீ றல்எகினச் சிறகுந்தவ த்து.....
நல்பல கணிக்குஞ் சங்கு சோழிநண் டுரு கற்கே. 358

தடையிலா தெதிரிற் றண்ணீர்த் தடாகத்தைக் காட்டு தற்கும்
அடைவுடன் காய்ந்த தண்ணீர் அதன்சூடு பார்ப்ப தற்கும்
கடமையா யபிந யித்துக் காட்டலா மென்று நூலோர்
படிமிசைக் கும்ப யோனி பாடின தறிந்து கொள்ளே. 359

இலக்.: கட்டைவிரலில் சுட்டுவிரலின் நகத்தைப் பலமாக ஊன்றி, தர்ச்சனியின் நடுவரை மேற்பற்றி, நடுவிரலின் நகத்தை விசையாக ஊன்றி, இவ்வாறு சிறுவிரல் வரைக்கும் பிடிப்பது. (இது விளங்கவில்லை).

விதி.: நாட்டியம்; லாசியம், நடம், கீண தொடுத்தல், நரம்பு கோறுதல், அன்னச் சிறகு, ...சங்கு, பலகணி, சோழி, நண்டு ஊர்தல்; எதிரில் நீர்க்குளமொன்றைக் காட்டுதல். காய்ந்த தண்ணீரின் சூடு பார்த்தல்.

சிலீமுகம் பெருவிர லின்கை நுனியினை
நலமுறு தற்சனி முன்வரை நாட்டி
மத்திமை யநாமிகை கடைவிர னுனியினை
உத்தம வங்கையி னுள்ளோ டூன்றுதல்.

என்பது பிறிதொரு நூலில் கண்ட விதி.
இவ்வாறு கூறினவர் அகஸ்தியர்.

44. சங்க அஸ்தம்

சர்ப்பசீ ருஷக்கை தன்னிற் சாருமங் குட்டம் நீளில்
செப்பிய சங்கம் பேருச் செய்யென விநியோ கங்கேள்
ஒப்பலாங் குட்ட ரோகிக் குவமானஞ் சுரத நீர்க்கும்
இப்புவி தன்னிற் கண்டு இசைந்துநீ பிடிப்பாய் மன்னே. 360

இலக்.: சர்ப்ப சிருஷ்டிக் கையில் கட்டைவிரலே நீட்டல்.

விநி.: குட்டரோகி; சுரதநீர்.

45. வலம்புரி அஸ்தம்

மாதாந்திர தாம்பிர சூட மருவிய கனிவ ரைக்கீழ்
தோதாக வங்குட் டத்தைத் தொந்தமாய் வைத்து நீட்ட
வேதாவ லம்பு ரிக்கை விதித்தனர் விநியோ கந்தான்
சூதாம்ந கக்கு றிக்குஞ் சொல்வர்மூக் குத்திக் காமே. 361

இலக்.: மதாந்திர தாம்பிர சூடக்கையில் சுண்டுவிரலின் கீழ் கட்டைவிரலைத் தொந்தமாக வைத்து நீட்டல்.

விநி.: நகக்குறி, மூக்குத்தி.

இது பிரமன் கூறியது.

46. இலதை அஸ்தம் 47. மண்டல அஸ்தம்

தற்சனி நடுவங் குட்டஞ் சேர்த்துமற் றிருவி ரற்றான்
வர்ச்சித மாய்வ ளைக்க வளரில தைக்கை யாகும்
மெச்சிய மலர்மொட் டிற்கு முறுக்கான்மூக் குத்தி மேவும்
மச்சுமு குளத்தில் நீட்டுங் கனிமண்ட லக்கை யாமே. 362

இலதா அஸ்தம்

இலக்.: தர்ச்சனி, நடு, அங்குட்டம் இவற்றைச் சேர்த்து மற்ற இரண்டையும் விட்டு வளைத்தல்.

விநி.: மலர்மொட்டு; புகையிலை; மூக்குத்தி.

மண்டல அஸ்தம்

முகுளக்கையில் கனிட்டிகையை நீட்டுவது.

அசம்யுத அஸ்த லக்ஷணம் முற்றும்.

---

44. சங்க ஹஸ்தம் (சங்கு)

சிலப்: (பக். 96) பெருவிரல் நிமிர ஒழிந்த நான்கு விரலும் வளைந்து நிற்பது.

45. வலம்புரி ஹஸ்தம்

சிலப்: (பக். 96) சிறுவிரலும் பெருவிரலும் நிமிர்ந்து சுட்டுவிரலின் அகம் வளைந்து ஒழிந்த விரண்டும் நிமிர்ந்து இறைஞ்சி நிற்பது.

46. இலதா ஹஸ்தம் (கொடி)

சிலப். (பக். 96) நடுவிரலும் சுட்டு விரலும் கூடி நிமிர, பெருவிரல் அவற்றின் கீழ்வரைசேர, ஒழிந்த இரண்டு விரலும் வழிமுறை பின்னே நிமிர்ந்து நிற்பது.

47. மண்டல ஹஸ்தம்

சிலப். (பக். 95) மண்டலமென்பது மாசறக் இளப்பின், பேடுதனியும் கூடி வளைந்ததம் முகிர்நுனை கௌவி, ஒழிந்த மூன்று மொக்க வளைவு தென, மொழிந்தனரென்ப முழுதுணர்ந் தோரே.

18. சம்யுத அஸ்தலக்ஷணம்

அஞ்சலி கபோதங் கற்க டகஞ்சுவத் திகமும் டோளம்
கஞ்சபுட் பபுட முத்சங் கஞ்சிவ லிங்கஞ் சேர்ந்து
அஞ்சாத கடகா வர்த்த கர்த்தரி சுவத்தி கந்தான்
மிஞ்சிய சகடஞ் சங்கஞ் சக்ரம்சம் புடம்பா சம்மே. 363

கீலக மச்சங் கூர்மம் வராகமுங் கருடன் கூட்டிக்
காலுள நாக பந்தங் கட்டுவ முடன்பே ருண்டம்
கோலமா குகஜ தந்த அவஹித்தங் கலசங் கூட்டி
மாலதா நிடத வர்த்த மானமாய்ப் பகரு மாதே. 364

பச்சவஞ் சிதமுத் தான வஞ்சிதம் தாடன பதாகை
பச்சம தாரு மேவ பயவர தோப சாரம்
சுச்சபத் மமுருள பாரதி மல்லுத்த கைதரி ஞானம்
நிச்சயச ஷாகிரு திக்கை நிகழ்சம்ய மிக்கை யென்றே. 365

ஆகிய சம்யு தக்கை யருளிய நாற்ப துக்கும்
பூகஞ்சேர் கழுத்தி னுளே பூருவ நூலு ணர்ந்து
வேகமாம் சம்யு தக்கை விநியோக மிலக்கி யத்தின்
பாகம தறிந்து மேலாம் பாரினி லுரைப்ப தாமே. 366

இரட்டைக்கைகளின் இலக்கணம்

363–366. சம்யுத ஹஸ்தங்களாவன :—

அஞ்சலி ; கபோதம் ; கர்க்கடகம் ; சுவஸ்திகம் ; டோளம் ; புட்ப புடம் ; உத்சங்கம்; சிவலிங்கம்; கடகாவர்த்தனம்; கர்த்தரி சுவஸ்திகம்; சகடம் ; சங்கம் ; சக்கரம் ; சம்புடம் ; பாசம் ;

கீலக ; மச்சம் ; கூர்மம் ; வராகம் ; கருடன் ; நாகபந்தம் ; கட்டுவா; பேருண்டம் ; கஜதந்தம் ; அவஹித்தம் ; கலசம் ; நிடதம் ; வர்த்த மானம்.

பட்சவஞ்சிதம் ; உத்தான வஞ்சிதம் ; தாடனபதாகம் ; அபய வரதம் ; உபசாரம் ; பதுமமுகுளம் ; பாரதி ; மல்லுத்தம் : திருஞானம்; சஷா கிருதிக்கை ; சம்யமி ;

ஆக சம்யுதக்கை நாற்பதாகும். இவற்றின் இலக்கண விநியோகங்கள் இனி கூறப்படும்.

ஸம்யுத ஹஸ்த லக்ஷணம் (இரட்டைக்கை)

மேலேயுள்ள செய்யுட்கள் ஸம்யுத ஹஸ்தங்களின் பெயர்களையும் தொகையையும் கூறுகின்றன. இவற்றைச் சிலப்பதிகாரம் இணக்கை

என்றும் இரட்டைக்கையென்றும் கூறும். உரையில் காட்டியபடி செய்யுள்களுள் குறிக்கப்பெற்ற பெயர்கள் முப்பத்தொன்பதே இருக்க, 366-ஆம் செய்யுள் தொகை நாற்பது என்று கூறுகிறது. பின்னே வரும் செய்யுட்கள் 47 இரட்டைக்கைகளே விவரிக்கின்றன. இவ்வேற்றுமை ஆராயத்தக்கது.

நா - சா. (ix 8-10) ஸ - ர. (7: 185-215): இச்கைகளின் தொகையை 13 என்று சொல்லும்; சிலப்பதிகாரம் (பக். 97) 15 என்றும், தமிழ் அபிநய தர்ப்பணமும், மனமோகன் கோஷ் அவர்கள் பதிப்பித்த அபிநயதர்ப்பண நூலும் 23 என்றும், ஆனந்தக்குமாரசாமி அவர்கள் பதிப்பித்த அபிநய தர்ப்பண நூலில் 24 என்னும், மதாந்தரங்களாகப் பின்னும் பலவும் கூறப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரம் கூறுவன :—(பக். 97).

எஞ்சுத லில்லா வீனக்கை யியம்பில்
அஞ்சலி தன்னெடு புட்பாஞ் சலியே
பதுமாஞ் சலியே கபோதம் கற்கடகம்
கலமாஞ் சுவத்திகம் கடகா வருத்தம்
நிடதந் தோரமூற் சங்க மேம்பட
உறுபுட் பபுட மகராஞ் சயந்தம்
அத்தமில் காட்சி யபய வத்தம்
எண்ணிய வருத்த மானந் தன்னெடு
பண்ணுங் கரலெப் பதினேந் தென்ப.

தமிழ் அபிநயதர்ப்பணம் பின்வரும் செய்யுள்களைக் கொண்டுள்ளது.

அஞ்சலி கபோதம் நீள்கற் கடகத்துடன் சுவத்திகம்
கொஞ்சிய டோளம் புட்ப புடத்தோடு சங்கவத்தம்
அஞ்சிவ லிங்கம் கடகா வர்த்தனர் தூய
வஞ்சியே கற்கடரி ஸ்வஸ்திகம் சகட மென்பர். (79)

பொங்குசன் குசக்கரம் சம்புடம் பாசங்கி லகந்தான்
மங்கையே மச்சம்கூர் மம்வராக நீளக் கருடவத்தம்
தங்கிய நாகபந்தந் தகைசேர் கட்வ வத்தம்
இங்கெழிற் பேருண்டத்தோ டிருபத்து மூன்று கையே. (80)

1. அஞ்சலி அஸ்தம்

விஞ்சைசேர் பதாக மாக விருகையுங் கூட்டிக் கொண்டால்
அஞ்சலி யஸ்த மாகும தற்கினி விதியோ கங்கேள்
அஞ்சியே சிரமே லீரா றங்குல மேலாம் நிற்கச்
செஞ்சிவப் பெருமா னுக்குஞ் சென்னிமேற் றேவர்க் காமே.

தூதலினே ராசா னுக்கும் நுவல்வாய்நேர் பிதாவு மன்னர்க்
கெதிர்மார்பு அந்த ணர்க்கா மிடையுந்தி மாதா வுக்காம்
இதமுள நமஸ்கா ரங்க ளிணங்குநீ றதைக்கு ழைத்தல்
விதமது அஞ்ச லிக்கை விதியோக மென்று செப்பே. 368

இலக்.: இரண்டு கைகளையும் பதாகமாகக் கூட்டிக் கொள்ளுதல்.

விதி: தலையின்மேல் 12 அங்குலம் உயர்த்தி நிற்கச் சிவபெருமானுக்கும் தலைமீது நிற்கத் தேவர்க்கும், நெற்றிக்கு நேரேவைக்க ஆசானுக்கும், வாயின் நேரில் வைக்கப் பிதாவுக்கும், மார்புக்கெதிரே வைக்க அந்தணர்க்கும், இடை உந்தியில் வைக்க மாதாவுக்கும் இக்கை நமஸ்காரங்களைத் தெரிவிக்கும், விபூதி குழைத்தலையும் குறிக்கும்.

2. கபோத அஸ்தம்

அஞ்சலி யத்தந் தன்னி லடிதுனிப் பக்கமி ரண்டும்
கொஞ்சமுன் வெளியாய்க் கூட்டிக் கொள்ளவே கபோத வத்தம்
மிஞ்சிய சத்தி யச்சொல் மெய்க்குரு வடனே பேசல்
அஞ்சிய விநயம் பேச லாமெனும் பேசற் காமே. 369

அஞ்சலி ஹஸ்தம் (வணக்கம்)

நா. சா. (ix 127–128). தலையில் வைக்கத் தெய்வங்களுக்கும், முகத்துக்குமுன் வைக்கப் பெரியோர்களுக்கும், மார்பில் வைக்க நண்பர்களுக்கும் நமஸ்காரம் சொல்ல.

சிலிப். (பக். 97):—இரண்டு கையும் பதாகையாய் அகமொன்றுவது.

அபி. த. (தமிழ் 81)

வீஞ்சைசேர் பதாக மாக விருகையும் கூட்டிக் கொண்ட
தஞ்சலி யத்த மாகு மதற்கினி விதியோ கங்கேள்
மிஞ்சு தெய்வக் குருக்கள் வேதியர்க் கும்நமக் காரம்
அஞ்சிர வதனஞ் செங்கை ஆய்முறை பிடியென் றாரே.

ஆவுடை யார்க்கும் வாழை மலர்த்தாழைக் குமிழு மாகும்
தாவியே திஷ்டி மண்ணைத் தலைசுற்றிப் போடு தற்கும்
கோவிலைச் சுற்றும் போதுங் குந்தடி முனைகூங் தாலின்
பாவிக்கும் பருமு லைக்கும் பகர்கும்ப முத்தி ரைக்காம். 370

இலக். : அஞ்சலி அஸ்தத்தில் கைகளின் அடி, நுனி, இரண்டு பக்கங்களும் சிறிதளவு உள்வெளியாய்க் கூட்டிக்கொள்ளல்.

விநி. : குருவுடன் சத்தியச் சொல் பேசல்; விநயம் பேசல்; ஆவுடையார்; வாழைமலர்; தென்னை; குமிழ்; திருஷ்டிகழிக்க மண்ணைத் தலையைச் சுற்றிப்போடல்; கோயிலைச் சுற்றுதல்; .....; பருத்தமுலை, கும்ப முத்திரை.

370 : 3. குந்தடிமுனை கூந்தலின் - பொருள் விளங்கவில்லை.

3. கற்கட்க அஸ்தம்

அஞ்சலி யத்தந் தன்னி லடர்ந்திடு விரல்கள் பத்தும்
மிஞ்சவொன் றிடையி லொன்று யிருபுறங் கையில்வ ளைக்க
விஞ்சைகற் கட்க வத்தம் விளம்பினர் விதியோ கங்கேள்
வஞ்சியே கூட்ட மாக வருவதற் கெல்லா மென்ப. 371

பரியது காட்டு தற்கும் பருங்கொப்பு வளைப்ப தற்கும்
உரியசங் கூது தற்கு முடல்பிடித் திடுவ தற்கும்
சிறுவர்கள் கிச்சுத் தம்ப லத்துஞ்சி வத்தியா னத்தும்
பெரியகொட் டாவி தோன்றிப் பேசுங்கற் கடகக் கையாம்

இலக். : அஞ்சலி அஸ்தத்திலுள்ள பத்து விரல்களையும் ஒன்றினிடையில் மற்றொன்றுக நுழைத்து, கைகளை இருபுறமும் வளைத்தல்.

கபோத ஹஸ்தம் (புறு)

நா. சா. (ix 129-130). பெரியோர்களிடம் பகைத்து நின்று, வணங்கிப்பேசல் (?); குளிர்ச்சி, பயம் இவற்றைக் குறிக்கப் பெண்டிர் இக்கையை மார்பில் வைக்க வேண்டும்.

சிலப். (பக். 97). கபோதமென்றது இரண்டு கையும் கபோதமாகக் கூட்டுவது. ஸ - ர. (7: 186-7) இதற்கு கூர்மகம் என்று வேறு பெயரைக் கூறும்.

அபி. த. (தமிழ் 82). இக்குலின் 369-ஆம் செய்யுளே.

விநி. : கூட்டமாக வருவதற்கெல்லாம்; உடல் பருத்த வஸ்த்துக் களைக் காட்டுதல்; , மரக்கொம்புகளை வளைத்தல்; சங்கு ஊதுதல்; உடல் பிடித்தல்; சிறுவர் ஆடும் இச்சுத்தம்பல விளையாட்டு; சிவத் தியானம்; பெரிய கொட்டாவி.

4. சுவத்திக அஸ்தம்

தனித்திடு பதாகம் ரெண்டுங் கணைக்கையிற் குறுக்கே கூட்டி
நுனிக்கையி ரண்டு மேலே நீட்டியுள் ளங்கை ரண்டும்
பிணக்கற முகத்தி னேரே பிடிக்கவே சுவத்தி கக்கை
இணக்கமாம் பயத்துந் தோத்ர மியம்பினர் விதியோ கந்தான்.

இலக். : இரண்டு பதாகக் கைகளைக் கணுக்கையிடத்தில் குறுக் கிட்டு வைத்து, கைகள் நுனிமேல் நோக்கி நிற்க வைத்து, உள் ளங்கை இரண்டும் முகத்தின் நேரே வரும்படி நீட்டுதல்.

விநி. : பயம் : தோத்திரம்.

5. டோள அஸ்தம்

அடைவுறு பதாக மிரண்டு மடித்துடை களுக்கு நேராய்
இடம்வல மிருபக் கத்து மிருகையுந் தொங்க நீட்டில்
திடமுறு டோள வத்தஞ் செப்பினர் விதியோ கங்கேள்
நடனவா ரம்பத் திற்கு நாடியே பருமை யென்ப. 374

---

3. கர்கட ஹஸ்தம் (நண்டு)

நா. சா. (ix 132–133). **விநி** : தேன்மெழுகு, கைகால்களைப் பிடித் தல், தூங்கி விழித்துக் கொட்டாவி விடல், பெரிய உடல், சங்கு ஊதல்.

சிலப். (பக். 97). தெரிசிலைக் கையிரண்டும் அங்குலி பிணைந்து வருவ தெனக் கொள்க.

அபி. த. (தமிழ் 83). இந்நூல் 371-ஆம் செய்யுளும் 372-ஆம் செய்யு ளில் முதல் இரண்டடிகளும்.

4. ஸ்வஸ்திக ஹஸ்தம் (குறுக்கிட்டது)

நா. சா. (ix 134). இது ஸ்திரீகளால் உபயோகப்படுத்தப்படுவது. இக்கைகளைப் பிரித்தால், மேகம், காடு, கடல், பருவம், பூமி போன்ற வஸ்துக்களைக் காட்டும்.

சிலப். (பக். 97). மணிக்கட்டிற் பொருந்திய பதாகை யிரண்டையும் மணிக்கட்டில் ஏற்றி வைப்பது.

ஸ - ர. (7: 192) இடப்பரிசுவத்தில் அமைதல் விசேஷமாகும்.

அபி. த. (தமிழ் 84). மேலேயுள்ள செய்யுளே.

தண்ணீரில் நீந்து தற்குந் தராசுக ளாடு தற்கும்
பண்ணிய கயிறுபா கத்தும் பறவைகள் சிறக டிப்பும்
திண்ணிய வாள்தன் னீளஞ் சிறுவரை யிணைப்ப தற்கும்
கண்ணிய மாகக் காட்டக் கருதுமே டோளக் கையாம். 375

இலக்.: இரண்டு பதாகங்களோ இரண்டு அடித் துடைகளுக்கும் நேராய், இடம் வலமாக் இரு பக்கங்களிலும் இரண்டு கைகளும் தொங்க நீட்டுதல்.

விதி.: நடனவாரம்பம், பருமை; தண்ணீரில் நீந்துதல்; தராசு கள் ஆடுதல்; கயிற்றின் பாக நீளம்; பறவைகள் சிறகடிப்பு; வாள் தன் நீளம்; சிறுவரை இணைப்பது.

6. புட்பபுட அஸ்தம்

சர்ப்பசி ரிடக்கை யிரண்டுந் தகுகனிட் டிகைப்பக் கத்தில்
பொற்பொடு கூட்டிற் புட்ப புடக்கையாம் விதியோ கங்கேள்
நற்புதல் வர்கள் சீரார் நீராஞ்சனங் கிழங்கு மந்திர
புற்பங்க ளர்க்கிய தானம் புகழ்கனி வாங்கத் தானே. 376

மன்னவ ரிடத்திற் சென்று வாய்பொத்திப் பேசு தற்கும்
கன்னிகல் யாணக் கோலங் காப்புக்கை கட்டு தற்கும்
பின்னுவ தனத்தி னீரை மேவிடும் பிச்சை வாங்கல்
தொன்னைபுட் பாஞ்ச லிக்குந் தோன்றுகைம் மண்டைக் காமே.

இலக்.: இரண்டு சர்ப்பசிரிடக் கைகளில் சுண்டுவிரல்களைப் பக்கத்தில் கூட்டுதல்.

விதி.: நல்ல புதல்வர்கள்; நீராஞ்சனம்; கிழங்கு; மந்திர புஷ்பம், அர்க்கியதானம்; கனிகள் வாங்குதல்.

---

5. டோள ஹஸ்தம் (ஊஞ்சல்)

நா. சா. (ix 142). ஸ-ர. (7: 195). இலக்.: இரண்டு தோள்களையும் இலகுவாக விட்டுக் கைகளைத் தொங்கவிடுதல்.

விதி.: அவசரம், தூக்கம், மூர்ச்சை, மதமயக்கம், சோர்வு, ஆயுதத் தாலுண்டான புண்.

சிலப். (பக். 98). தோரம்- இரண்டு கையும் பதாகையாக்கி அகம்புற மொன்றி முன் தாழ்ந்து நிற்பது.

அபி. நா. (தமிழ் 86). 374-ஆம் செய்யுளை.

அரசரிடத்திற் சென்று வாய்பொத்திப் பேசுதல்; கன்னி கலியாணக்கோலம்; காப்பு கையில் கட்டுதல்; வதனத்தின் நீரை மேலிடுதல்; பிச்சை வாங்கல்; தொண்ணை; புட்பாஞ்சலி; கையிலுள்ள பாத்திரம்.

7. உத்சங்க அஸ்தம்

ஏலவு மிருக சீருஷ மிருகையு மிருதோள் நேரே
கோலியே பிடித்ததுற் சங்கங் கூறினர் விதியோ கங்கேள்
ஆலிங்க னம்நா ணங்க டகங்கள் தொடவுஞ் சின்னம்
பாலர்கள் தனைச்சிட் சிக்கப் பகர்ந்தவுற் சங்க மின்னும். 378

குளிர்வாடை பனிம ழைக்குக் கூதலாய் நிற்ப தற்கும்
தழுவிமற் கட்டு தற்குந் தன்முலை மூடு தற்கும்
ஒழுக்கமாய் நிற்ப தற்கு முயர்கும்மி கொட்டு கற்கும்
களிப்புடன் பள்ள ராடல் விதியோகங் கருதும் பாரே. 379

இலக்.: இரண்டு மிருகசீருஷக் கைகளை இரண்டு தோள்களுக்கு நேரே பிடித்தல்.

விதி.: ஆலிங்கனம், நாணம், கடகம் தொடுதல், சிறிய பாலர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்தல்;

குளிர், வாடை, பனி மழை, இவற்றில் குளிருடன் நிற்பது; மல்கட்டு; மார்பை மூடுதல்; ஒழுக்கமாய் நிற்பது; கும்மி கொட்டுதல்; களிப்புடன் பள்ளராடல்.

---

6. புஷ்பபுட ஹஸ்தம் (மலர்க்கூடை)

நா. சா. (ix 144). விதி.: அரிசி, பழம், புஷ்பங்கள், பலவகை உணவுப் பொருள்கள் ஆகியவற்றை வாங்கிச் கொள்ளுதலும் தூக்கிச் செல்லுதலும்; நீர் இறைத்தல்.

சிலப் (பக். 98). குடங்கையிரண்டும் தம்மிற் பக்கங் காட்டி நிற்பது.

அபி. த. (தமிழ் 87). 376-ஆம் செய்யுளை.

7. உத்ஸங்க ஹஸ்தம் (அணைத்துக் கொள்ளுதல்)

நா. சா. (ix 137). ஸ - ர. (7: 198) அராளக்கைகளை எதிரிடையாக்கி, மேற்புறமாகத் திருப்பி வளைத்தல். ஸ்பர்ச உணர்ச்சி; மிகுந்த பிரியாசையுடன் ஒன்றைச் செய்வது, கோபம், எதையேனும் பிழிதல், ஸ்திரீகளின் பொறுமை.

சிலப். (பக். 98). ஒரு கை பிறைக்கையாகக் கொண்டு ஒரு கை அராளமாக்கி இரண்டு கையும் மணிக்கட்டில் ஏற்றி வைப்பது.

அபி. த. (தமிழ் 88). 378-ஆம் செய்யுளை.

8. சிவலிங்க அஸ்தம்

தகுமிடக் கையி லர்த்த சந்த்ரக்கை யடிய தன்மேல்
சிகரத்தை வலக்கை தன்னிற் சேர்த்திடக் கைமேல் வைத்தால்
அகமகிழ் சிவலிங் கக்கை யாமதின் விதியோ கங்கேள்
புகழ்சிவ லிங்கத் துக்கே புகன்றனர் பரதத் தோரே. 380

இலக்.: இடக்கையால் அர்த்த சந்திரக்கையும், அதன் அடியில், வலக்கையால் சிகரக்கையும் வைத்துப் பிடிப்பது.

விதி.: சிவலிங்கம்.

9. கடகாவர்த்தன அஸ்தம்

கடகாமு கக்கை யிரண்டுங் கூணக்கையிற் குறுக்கே கூட்டில்
கடகாவர்த் தனம தென்றே கையாகும் விதியோ கங்கேள்
திடமன்னர் மகிழ்பட் டாபி டேகம்பூ சைகள்கல் யாணத்
திடையறு கிடவு மேலா சீர்வாதஞ் செயவு மாமே. 381

காதினிற் கையை வைக்கிற் கணபதி வணக்கத் திற்கும்
நீதிசேர் கலியா ணத்தில் நின்றுகை மாறி வைத்தல்
தீதிலா விருத லீப்பட் சிக்குமாச் சரிய த்திற்கும்
மேதினி கிரிகை கட்கும் விண்டனர் பரத நூலோர். 382

இலக்.: இரண்டு கடகாமுகக் கைகளை மணிக்கட்டுக்குக் குறுக்கே கூட்டுவது.

விதி.: மன்னர் பட்டாபிஷேகம்; பூஜைகள்; கலியாணத்திடை அறுகிடுதல்; ஆசீர்வாதம் செய்தல். இக்கையைக் காதில் வைக்கக் கணபதி வணக்கம்; கைமாறி வைத்தால்; இருதலைப்பறவை; ஆச்சரியம்; பூமியில் செய்யும் கிரியைகள்.

---

8. சிவலிங்க ஹஸ்தம் (சிவலிங்கம்)

இது நா. சா. சிலப். ஸ. ர. என்ற நூல்களிற் காணப்படவில்லை.

அபி. த. (தமிழ் 89) மேலே உள்ள செய்யுளையே கொண்டுள்ளது.

9. கடகாவர்த்தமான ஹஸ்தம்

நா. சா. (1x 136). இது கடகாவர்த்தமானக என்று கூறப்படுகிறது. இது காதல் செய்யும் போதும், ஒருவரை வணங்கும் போதும் பிரயோகிக்கப்படும் என்றும் கூறுகிறது.

சிலப். (பக். 97). இரண்டு கையும் கடகமாய் மணிக்கட்டுக்கு ஏற இணையத்து நிற்பது.

அபி. த. (தமிழ் 90). இந்நூலின் 381-ஆம் செய்யுளே.

10. கர்த்தரீசுவத்திக அஸ்தம்

கர்த்தரி முகக்கை யிரண்டுங் கணைக்கையைக் குறுக்கே நீட்டில்
கர்த்தரி சுவத்தி கத்தின் கையென்றூர் விஞ்யோ கங்கேள்
விர்த்திசேர் மலைகள் கொம்பு விருக்ஷங்க ளுக்கு மாகும்
பத்தியாய்ப் பலக லைக்கூட் டங்களும் பகர லாமே. 383

பருப்பத சிகரங் கட்டும் பாரமுள் ளிலவு கட்டும்
பருஞ்சரக் கூடா ரத்தும் பாய்மரங் கட்டு தற்கும்
கருதிய சித்தி ரத்தின் கைத்தொழி லபிந யித்தும்
உறுதியா கற்றே ரிற்கு முவமையா மென்று சொல்லே. 384

இலக். : கர்த்தரி முகக்கைகள் இரண்டை மணிக்கட்டில் குறுக்கே நீட்டுவது.

விநி. : மலைகள், கிளைகள்; மரங்கள்; பல கலைக்கூட்டங்கள்; மலைச்சிகரங்கள்; முள்ளிலவுகள்; சரக்கூடாரம்; பாய்மரம் கட்டுதல்; சித்திரத்தின் கைத்தொழில்; தேர்.

11. சகட அஸ்தம்

வருபிர மரக்கை தன்னில் மத்திமாங் குட்டம் விட்டு
நிரவியே பரப்பி நீட்டில் நிகழ்த்தினர் சகட வத்தம்
தருவிநி யோகங் கேளாய் சகடிக்கும் ராக்ஷ தர்க்கும்
மருவிய சகட மென்றே வழுத்தினர் பரத நூலோர். 385

இலக். : பிரமரக் கையில் நடுவிரல், கட்டைவிரல் இரண்டையும் விட்டு நிரவிப் பரப்பி நீட்டுதல்.

விநி. : வண்டி; இராக்ஷதர்.

---

10. கர்த்தரீசுவத்திக ஹஸ்தம் (குறிக்கிட்ட கத்தரிக்கோல்)

அபி. நி. (தமிழ் 91). 383-ஆம் செய்யுளில் 4-ஆம் அடி 'கர்த்தரி சுவத்திகக்கை காணென்றூர் கரணத்தோரே' என்று மாறுபட்டுள்ளது.

11. சகட ஹஸ்தம்

அபி. நி. (தமிழ் 92) மேலேயுள்ள செய்யுளே உள்ளது.



1. காட்டிய உபயோக.....லக்ஷணம் 145

12. சங்க அஸ்தம்

வலக்கையின் சிகரத் துள்ளே வாமாங் குட்டஞ் சேர்த்து
நிலத்தகால் விரலும் பின்னே நீட்டியே கூட்டிப் பின்னும்
வலக்கையங் குட்டங் கூட்டி மன்னுங்கை சங்க மாகும்
கலக்கமில் விதியோ கஞ்சங் காதிகட் காகுந் தானே. 386

இலக். : வலக்கையில் சிகரஹஸ்தம் அமைத்து, இடக்கையின் அங்குட்டத்தைச் சிகரத்தின் அங்குட்டத்தோடு சேர்த்து நால்விரல்களைப் பின்னே நீட்டிக் கூட்டுவது.

விதி. : சங்கு முதலானவை.

13. சக்கர அஸ்தம்

அர்த்தசந் திரனி ரண்டு அஸ்தத்தி லும்பி டித்தே
யுத்தியா யொருகை மேலே யொருகையைக் குறுக்கே நீட்டி
வைத்த்து சக்க ரக்கை வழுத்தினர் விதியோ கங்கேள்
கத்தையே சக்க ராயு தங்களுக் காமென் றோதே. 387

இலக். : இரண்டு கைகளில் அர்த்த சந்திரஹஸ்தத்தைப் பிடித்து, ஒருகை மேலே ஒரு கையைக் குறுக்காக நீட்டி வைத்தல்.

விதி. : சக்கராயுதங்கள்.

14. சம்புட அஸ்தம்

விடுத்தசக் கரத்தில் பத்து விரல்நுனி வளைத்திட் டாற்சம்
புடக்கையா மென்ற தற்குப் புகன்றனர் விதியோ கங்கேள்
எடுத்தவஸ் துக்க ளெல்லா மின்பமாய் மூடு தற்கும்
புடைத்தெழு முலையாய் கேள்சம் புடத்துக்கு மாமென் றோரே.

இலக். : சக்கரக் கைகளில் பத்து விரல் நுனிகளையும் வளைத்திடுதல்.

விதி. : வஸ்துக்களை மூடுதல் : சம்புடம்.

---

12. சங்க ஹஸ்தம் (சங்கு)
அபி. த. (தமிழ் 93). ஷ. செய்யுளே.

13. சக்ர ஹஸ்தம் (சக்கரம்)
அபி. த. (தமிழ் 94). இச்செய்யுளையே கொண்டுள்ளது.

14. சம்புட ஹஸ்தம் (செப்பு)
அபி. த. (தமிழ் 95). இச்செய்யுளே உள்ளது.

15. பாச அஸ்தம்

இருகையுஞ் சூசி யாக்கி யிருதற்ச னியும்வ ளைத்துத்
திருகியொன் றேடொன் றுகச் சேர்த்திரு விரலு மாட்டிலை
வருமது பாச வஸ்த மாகுமேர் விதியோ கங்கேள்
ஒருபாசம் விலங்கு மாண்பெண் ணென்றுய்ச்சே ருதற்கு மென்னே.

வாதுவ ழக்கு கட்கும் மயிர்பிடிச் சண்டை கட்கும்
போதிய சங்கி லிக்கும் புதுமையாங் கலகத் திற்கும்
சாதிகா கம்பு ணர்ச்சி சரிபல வான்க ளுக்கும்
கீதறு பிடிவா தங்கோ பஞ்சிக்க லெனவே செப்பும். 390

இலக். : இருகைகளையும் சூசிஹஸ்தங்களாக்கி, இரு சுட்டுவிரல் களையும் வளைத்துத் திருகி ஒன்றோடொன்றுகச் சேர்த்து மாட்டல்.

விதி. : பாசம்; விலங்கு; புணர்ச்சி; வாதுவழக்குகள்; மயிர் பிடிச் சண்டை; சங்கிலி; கலகம்; மாகங்களின் புணர்ச்சி; சரிபல வான்கள்; பிடிவாதம்; கோபம்; சிக்கல்.

16. கீலக அஸ்தம்

மிருகசீ ரிடத்திற் சுண்டு விரலிரண் டையும்வ ளைத்து
இறுகவே யொன்றோ டொன்றுய் எதிரெதிர் மாட்டி யங்கே
அரியவாங் கீல கக்கை யாமதின் விதியோ கங்கேள்
நிறைசிநே கங்கட் கென்றும் நீடிய வுறவு மின்னே. 391

கோசலை முத்தி ரைக்குங் கூடுமாண் பெண்க ளுக்கும்
மாசிலா யோகி கட்கு மகாநன்மை முத்தி ரைக்கும்
தேசுறுங் கல்யா ணப்பெண் திருக்கையைப் பிடிப்ப தற்கும்
சூசனை யாகப் பந்து சுபசோப னங்கட் காமே. 392

இலக். : மிருகசீரிடக் கைகளில் சுண்டுவிரல்கள் இரண்டையும் வளைத்து, இறுகவே, அவற்றை ஒன்றோடொன்று எதிரெதிர் மாட்டுதல்.

விதி. : நிறைந்த நட்புக்கள்; நீண்ட உறவு; கோசலை முத்திரை; ஆண்பெண் கூட்டம்; யோகிகள்; மகாநன்மை முத்திரை; கல்யாணப் பெண்ணின் கையைப் பிடித்தல்; பந்து; சுபசோபனங்கள்.

15. பாச ஹஸ்தம் (கயிறு)

அபி. த. (தமிழ் 96) 389-ஆம் செய்யுளே.

16. கீலக ஹஸ்தம் (பிணிப்பு)

அபி. த. (தமிழ் 97). கடைசிவரி 'நிறைசிநே கங்கட் கென்று நிகழ்த்தினர் பரதத்தோரே' என்ற மாறுதலுடன் 391-ஆம் செய்யுளே உள்ளது.

17. மச்ச அஸ்தம்

இச்சையாய் வலக்கை தன்னை யிடக்கையின் புறத்தை மேலே
வைச்சிரு நுனியு நீட்டி வருகனிட் டிகையங் குட்டம்
மிச்சமாம் விரல்கள் நாலும் வெளிப்பட வேறே நீட்டில்
மச்சக்கை விநியோ கந்தான் ஜலசந்து மச்ச மென்னே. 393

பன்றிநாய்ப் பாய்ச்ச லுக்கும் படைக்கூட்ட மென்ப தற்கும்
அன்றிக்கு ரங்குப் பாய்ச்சல் வருமுய லுடும்பு மாகும்
தொன்றிய தர்ப்பை சுட்குஞ் சூழாமை முதலை கட்கும்
சென்றது மகரத் திற்கே செப்பினர் விநியோ கத்தே. 394

இலக்.: வலக்கையை இடக்கையின் புறத்தின் மேலே வைத்து, கனிட்டிகை அங்குட்டங்களாகிய தான்கின் நுனிகளையும் நீட்டுதல்(?)

விநி.: ஜல சந்துக்கள்; மீன்; பன்றி, நாய் இவற்றின் பாய்ச்சல்; படைக்கூட்டம்; குரங்குப் பாய்ச்சல்; முயல்; உடும்பு; தர்ப்பை; சூழாமை; முதலை; மகரம்.

18. கூர்ம அஸ்தம்

கதிர்நிகர் சக்க ரத்தின் கனிட்டிகாங் குட்ட நாலும்
விதமுட னீட்டி மற்ற விரலெலாம் வளைத்துக் கொண்டால்
அதுதானே கூர்ம அஸ்த மாமென்றூர் விநியோ கங்கேள்
விதியினுற் கூர்மத் திற்கே விள்ளலா மென்றூர் நூலோர்.

இலக்.: சக்கரக்கைகளில் சுண்டுவிரல், கட்டைவிரல்களாகிய நான்கினையும் நீட்டி, மற்ற விரல்களை யெல்லாம் வளைத்துக் கொள்ளல்.

விநி.: ஆமை.

---

17. மச்ச ஹஸ்தம் (மீன்)

425ம் பாடலில் இக்கை மகரமெனக் கூறப்படுகின்றது.

அபி. த. (தமிழ் 98) நாலாம் அடி 'மச்சமாம் விநியோகத்தான் மச்சத் துக்கே சொன்னரே' என்ற மாறுபாட்டுடன் 393-ஆம் செய்யுளே.

18. கூர்ம ஹஸ்தம் (ஆமை)

அபி. த. (தமிழ் 99). கடைசி இரண்டு சீர் 'விளம்பினர் பாதத் தோரே' என்ற மாற்றத்துடன் 395-ஆம் செய்யுளே உள்ளது.

19. வராக அஸ்தம்

மிருகசீ ரிடக்கை ரண்டும் பிடித்தங்குட் டங்க னிட்டம்.
திறமுட னலும் வேறுய்த் தெரியவே நன்றுய் நீட்டி
அரியவ ராகக் கையா மதற்கினி விதியோ கங்கேள்
குறியென வராகத் திற்கே கூறினர் பரத நூலோர். 396

இலக். : மிருகசீரிடக்கைகள் இரண்டு பிடித்து, கட்டைவிரல், சுண்டுவிரல் ஆகிய நான்கை நன்றுகத் தெரியும்படி நீட்டுதல்.

விதி. : வராகம்.

20. கருட அஸ்தம்

இருகையு மர்த்த சந்த்ர னிருகணைக் கைகு றுக்காம்
மருவியங் குட்டம் ரண்டு மன்னவே யொன்றுய்க் கூட்டிப்
பிரியமாய் முகத்தி னேரே பிடித்திடிற் கருட வஸ்தம்
கருதிய விதியோ கந்தான் கருடனுக் கேசொன் னரே. 397

இலக். : அர்த்த சந்திரக் கைகள் இரண்டினைக் கணுக்கையிடத்தில் குறுக்காக வைத்து, கட்டைவிரல்களை ஒன்றுகச் சேர்த்து, முகத்துக்கு நேரே பிடித்தல்.

விதி. : கருடன்.

21. நாகபந்த அஸ்தம்

கணித்திடுஞ் சர்ப்ப சீர்ஷக் கையிரு கைபி டித்து
இணக்கமாய்ச் சுவத்தி கம்போ லிருகையுங் குறுக்கே நீட்டிப்
பிணைத்திடி லிதுவே நாக பந்தமாம் விதியோ கங்கேள்
பணைத்தெழு முலையாய் நாக பந்தம தாமவ ணம்மே. 398

---

19. வராக ஹஸ்தம் (பன்றி)

அபி. த. (தமிழ் 100)

மிருகசீ ருடக்கை ரெண்டு மேவியொன் றின்மே லொன்றுய்ப்
புதங்கை யிரண்டு மேலாய்ப் பிடித்தங்குட் டகனிட் டங்கள்
திறமொடு நாலும் வேறுய்த் தெரியவே நன்றுய் நீட்டி
அறிவ ராகக் கைவிதி யோகமும் வராகத் தக்காமே.

20. கருட ஹஸ்தம் (கருடன்)

அபி. த. (தமிழ் 101). டை செய்யுளே.



21651

இலக். : இரு சர்ப்பசீருஷக் கைகளை, ஸ்வஸ்திகம்போல் குறுக்கே நீட்டிப் பிணைத்தல்.

விநி. : நாகபந்தம்.

22. கட்டுவ அஸ்தம்

சதுரக்கை யிரண்டு கையிற் றருமிரு நுனியுங் கூட்டி
அதனிற்றற் சனிகள் ரண்டு மங்குட்ட மிரண்டு நீட்டில்
இதுகட்டு வக்கை யென்றே யியம்பினர் விநியோ கங்கேள்
மெதுவுறுங் கட்டி லுக்கும் விசுபல கைக்கு மாமே. 399

இலக். : சதுரக்கைகள் இரண்டின் நுனிகளைக் கூட்டி, அவற்றில் தர்ச்சனிகளையும் அங்குட்டங்களையும் நீட்டினால் கட்டுவக்கை ஆகும்

விநி. : கட்டில் ; விசிபலகை.

23. பேருண்ட அஸ்தம

கவித்தக்கை யிரண்டு கையுங் கணைக்கையைக் குறுக்கே நீட்டி
உவப்புடன் பிடித்தி டப்பே ருண்டமாம் விநியோ கங்கேள்
புவியிற்பே ருண்டத் திற்கும் புருடன்பெண் கூடு தற்கும்
உவமைய தாகு மென்றே யோதினர் கமல மாதே. 400

இலக். : கபித்தக் கைகள் இரண்டினை, கணைக்கையில் குறுக்கே நீட்டுதல்.

விநி. : பேருண்டம் ; அதன் ஆணும் பெண்ணும் கூடுதல்.

---

21. நாகபந்த ஹஸ்தம் (பாம்பின் கட்டு)

அபி. த. (தமிழ் 102). மேலுள்ள செய்யுளே.

22. கட்வா ஹஸ்தம் (கட்டில்)

அபி. த. (தமிழ் 103). கடைசி அடி, 'மெதுவுறு கட்டிலுக்கே விளம்பினர் பரதத் தோரே' என்றுள்ளது.

23. பேருண்ட ஹஸ்தம்

இதுவே, கண்டபேரண்டம் என்றும் கூறப்படுவதுபோலும்.

அபி. த. (தமிழ் 104). கடைசி இரண்டடிகள் பின் வருமாறு உள்ளன:

புவிக்குள் பேருண்டத் துக்கே புகன்றனர் பரதத் தோர்கள்
செவிக்கி னிதாம்சொல் லாய்சிவ னயன்மால் கைசொல் வாரே.

இதனுடன் இந்நூலில் இரட்டைக்கை முற்றும்.

24. கஜதந்த அஸ்தம்

வாகுமேற் சர்ப்ப சீர்ஷக் கைமாறி வைத்து நீட்டும்
பாகமே கஜதந் தக்க பகர்விநி யோகங் கேளாய்த்
தாகமா மன்னம் பூசற் றழுவுதல் நாற்கோ ணத்தும்
காகபதா கக்கூர்பா சேர்த்தி கையெனச் செப்ப லாமே.

இலக். : சர்ப்பசீருஷக் கைகளை மாற்றி வைத்து நீட்டல்.

விநி. : இப்பகுதி விளங்கவில்லை.

25 அவகீர்ந்த அஸ்தம்

ஆமிரு மணிக்கை சேர்த்து அதோமுக மான கையில்
தாமிரு சுகதுண் டத்தைத் தரித்துக்கீழ் நோக்கு மாகில்
சேமவ கித்தக் கையாய்ச் செப்பினர் விநியோ கங்கேள்
கோமளக் கைய தற்கே கூறினர் பரதத் தோரே. 402

இலக் : இரு சுகதுண்டக்கைகளை, இரு மணிக்கட்டுக்களில் கூட்டித் தலைகீழாகப் பிடித்திறக்குதல்.

விநி. : கோமளக்கை (?)

---

24. கஜதந்த ஹஸ்தம் (யானைக்கொம்பு)

நா. சா. (ix 148) ஸ - ர. (7: 204) இலக். : இரண்டு சர்ப்பசீருஷக்கைகளை தோளுக்கும், முழங்கைக்கும் இடையில் தொடும்படி மாற்றி வைத்தல்.

விநி. : மாப்பிள்ளையையும் மணப்பெண்ணையும் சுமந்து செல்லல்; அளவுமிஞ்சிய சுமையை எடுத்தல்; தூணைப்பற்றுதல்; மலையையோ, பாறையையோ பெயர்த்தெடுத்தல்.

சிலப். (பக். 98) சயந்தமென்று குறிக்கப்பெற்ற கை இது வாகலாம் போலும். இதற்கு இலக்கணம் விடுபட்டிருக்கிறது.

25. அவஹிர்த ஹஸ்தம்

நா. சா. (ix 150–151). ஸ - ர. (7: 208) இலக். : இரு சுகதுண்டக்கைகளை மார்பில் கூட்டி, வளைத்து, மெதுவாகக் கீழே இறக்குதல்.

விநி. : பலமின்மை; பெருமூச்சு; தன்உடலைக் காட்டல்; உடலின் மெலிந்த தன்மை; காதலருக்காக எங்கி நிற்றல்.

சிலப். (பக். 98) இதனையே அபயவத்தமென்று கூறுகிறது போலும் : 'இருகையும் சுகதுண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது.

26. கலச அஸ்தம்

அர்த்தசந் திரனி ரண்டு மன்யோன்ய மாக நேராய்
வைத்தடி கூட்டிக் கொண்டால் மருவுமே கல்சக் கையாய்
வித்தது பூசா ரிக்கும் விஜ்ஞதவஸ் துவைக்காண் பித்தல்
உத்தபாத் திரத்தி னீரை யுண்ணுதற் காகு மென்னே. 403

இலக்.: இரண்டு அர்த்த சந்திரக்கைகளை நெருக்கமாக வைத்து அடி கூட்டிக்கொள்ளுதல்.

விநி.: பூசாரி; விஜ்ஞாத வஸ்துக்களைக் காண்பித்தல்; பாத்திரத்தின் நீரைப் பருகுதல்.

27. நிடத அஸ்தம்

வாமக்கை முகுள மாக்கி வலக்கைக்க பித்தம் வைத்தே
நேமமுத் வேஷ்டி தத்தால் நிகழ்த்தலாம் நிடதக் கையாய்
கோமள விநியோ கந்தான் கூறுதே வதைக ளுக்கோர்
சாமிய மென்று கையைச் சாற்றினர் பரதத் தோரே. 404

இலக்.: இடக்கையை முகுளக்கையாக்கி, வலக்கையில் கபித்தத்தைக் காட்டி, உத்வேஷ்டிதத்தால் நிகழ்த்துவது.

விநி.: தேவதைகள்.

28. வர்த்தமான அஸ்தம்

அம்ஸபட் சக்கை ரண்டு மதுபரா முகசு வத்தி
கம்சேர்த்துக் கூட்டி நீக்கக் காண்வர்த்த மானக் கையாய்
வஞ்சியே விநியோ கந்தான் மகாமேரு கிரித னக்கும்
கொஞ்சமந் தானங் கட்குங் கூறினர் பரத நூலோர். 405

---

26. கலச ஹஸ்தம் (மண் பாத்திரம்)

இது நா. சா. முதலிய நூல்களில் இல்லை.

27. நிஷத ஹஸ்தம்

நா. சா. (ix 139-140). இலக்.: இடக்கையால் வலப்புஜத்தை முழங்கைக்கு மேலே பிடித்து, வலக்கையால் அதே மாதிரி மூடிய கையினால் இடப்புஜத்தைத் தொடுவது.

விநி.: பொறுமை, போதை, கர்வம், உயர்வு, ஆசை, வீரம் முதலியன.

சிலப். (பக். 98). முட்டியாக இரண்டு கையும் சமம் செய்வது.

இலக். : அம்ஸபக்ஷக்கை இரண்டினை, பராமுகச் சுவத்திகமாகச் சேர்த்துக் கூட்டி நீக்குதல்.

விநி. : மகாமேருகிரி ; தானங்கள்.

29. பட்ச வஞ்சிதம்

இரண்டுகை யர்த்த சந்த்ர னிடுப்பினில் வைத்துக் கூட்டப்
பெரும்பட்ச வஞ்சி தக்கை பேணிய விதியோ கந்தான்
விருதுகளென் பதற்கு வெள்ளிய ரைஞ்ஞா ணுக்கும்
வரும்பக்ஷி ரெக்கை கட்கும் வகுத்தனர் பரத நூலோர். 406

இலக்.: இரண்டு அர்த்த சந்திரக்கைகளை இடுப்பினில் வைத்தல்.

விநி. : விருதுகள் ; வெள்ளி அரைஞாண் ; பறவை இறகுகள்.

30. உத்தான வஞ்சிதம்

வாகுக ளிரண்டும் நேராய் வைத்த கைகளைத் திரிப
தாகமே கூட்டி நீட்டு தானவஞ் சிதமே யாகும்
பாகமாம் விதியோ கங்கேள் பரந்தாம ஞான விஷ்ணுக்
காகுமே யின்னம் பின்னு றிந்துநீ சொல்லு மாதே. 407

இலக்.: இரண்டு திரிபதாகக் கைகளைத் தோளுக்கு நேராகப் பிடித்தல்.

விநி. : விஷ்ணு.

---

28. வர்த்தமான ஹஸ்தம் (மிகுதி)

நா. சா. (ix 152-154). முகுளக்கையை வர்த்தமானக் கையால் பிடிப்பது : அல்லது இரண்டு ஹம்ஸபக்ஷக்கையைக் குப்புறுத்தினால்.

சிலப். (பக். 98). முகுளக்கையில் கபோதக்கையை எதிரிட்டுச் சேர்ப்பது.

இக்கையின் விதியோகங்கள் ஒவ்வொரு நூலில் ஒவ்வொரு விதமாகக் கூறப்பட்டுள்ளது,

இனிவரும் கைகள் நா. சா. முதலிய நூல்களால் அறியக்கூடவில்லை.

29. பக்ஷவஞ்சித ஹஸ்தம் (வளைந்த இறகு)

ஆனந்தக் குமாரஸ்வாமியின் அபி. த. (பக். 62). இரண்டு திரிபதாகைக் கைகளை இடுப்பில் வைத்தல்.

30 உத்தானவஞ்சித ஹஸ்தம் (உயரே வளைத்தல்)

தெலுங்கு அபிநயதர்ப்பண நூலில் இது காணப்படுகிறது. இதனை விப்ரகீர்ண ஹஸ்தமென்றும் அது கூறும்.

31. தாடனபதாக அஸ்தம்

இடவலப் பதாக மர்த்த சந்த்ரன்மே லங்கு லம்மெட்
டெடுத்த டித்திட வேதாட னபதா கத்தைக் கேண்மின்
திடமதா யதுட்டா னந்தா ளங்காக பலிக்கு மாகும்
முடிமல ரணிசண் டேசர் முன்னின்று தட்ட லாமே. 408

இலக்.: இடக்கை பதாகமாகவும், வலக்கை அர்த்த சந்திர ஹஸ்தமும் கொண்டு எட்டங்குலம் மேலே தூக்கி அடித்தல்.

விதி.: அதுட்டானம்; தாளம்; காகபலி.

இதனைச் சண்டேசர் முன்னின்று தட்டலாம்.

32. அபயவரத அஸ்தம்

சுபகரப் பதாகை ரண்டில் வலதுனி மேலே தூக்கி
விபரமா யிடைது னிக்கீழ் விதித்தகை மேல்கீ ழாக்க
அபயவ ரதக்கை யாகு மதற்கினி விதியோ கங்கேள்
தபநிவர்த் திக்கு மீசன் றன்முதற் றேவர்க் காமே. 409

இலக்.: இரண்டு பதாகைகளில் வலப்பதாகையின் நுனியை மேலே தூக்கி, இடைப் பதாகையின் நுனியைக் கீழே வைத்து, இவ்வாறு கைகளை மேல் கீழாக வைத்தல்.

விதி.: தாப நிவர்த்தி; ஈசன் முதலிய தேவர்கள்.

33. உபசார அஸ்தம்

பிறைக்கைமேற் பிறைக்கை வைத்துப் பிடிப்பது பசாரக் கையாம்
உரைத்தது விதியோ கங்கேள் ஒழுக்கத்து மரியா தைக்கும
நிரைத்தெதி ரேந்து தற்கு நின்றொன்றை வாங்கு கைக்கும்
துருக்கர்ம ராட ருக்குச் சொல்வணக் கத்து மாமே. 410

இலக்.: பிறக்கைமேல் பிறைக்கையை வைப்பது.

விதி.: ஒழுக்கம்; மரியாதை; எதிரேற்பது; நின்று ஒன்றை வாங்குகை; துருக்கர், மராடர் ஆகியோருக்குச் சொல்லும் வணக்கம்.

---

31. தாடனபதாகஹஸ்தம்

32. அபயவரத ஹஸ்தம் (அபயம் வரதம் இவற்றைத் தரும்கை)

33. உபசாரஹஸ்தம் (மரியாதை)

34. பதுமமுகுள அஸ்தம்

பதிவிரல் நுனிக ளொன்றுய்ப் பதித்துவி ரித்து நீக்கப்
பதுமமு குளக்கை யாகும் பகர்ந்திடு விதியோ கங்கேள்
நிதிதனைக் கொடுத்தெ டுத்தல் நின்றுடுங் குஞ்சங் கட்கும்
துதிமன்னர் மகுடங் கட்குந் தோரணத் திற்கு மாமே. 411

இலக்.: விரல்களின் நுனிகளை ஒன்றுய்ப் பதித்து விரித்து நீக்குதல்.

விதி.: செல்வத்தைக் கொடுத்து எடுத்தல்; ஆடும் குஞ்சங்கள்; மன்னரின் மகுடங்கள்; தோரணம்.

35. பாரதி அஸ்தம்

மிருகசீ ரிடக்கை ரண்டு மின்னுதாய் மலர்த்திச் சேர்க்கப்
பருபார திக்கை யாகும் பகரக்கேள் விதியோ கந்தான்
சரசுவதி முதலோர் வீணை வாத்திய தானங் கட்கும்
சிறுகுழந் தைகளை யேந்திப் பால்கொடுத் தற்குஞ் செப்பே.

இலக்.: இரண்டு மிருகசீரிடக்கைகளை மலர்த்திச் சேர்த்தல்.

விதி.: சரசுவதி முதலோர்; வீணை வாத்திய தானங்கள்; சிறு குழந்தைகளை ஏந்திப் பால் கொடுத்தல்.

36. மல்லுத்த அத்தம்

நெஞ்சிரு பக்க முட்டிக் கைகளை நேர்பி டித்தால்
மிஞ்சுமல் லுத்தக் கையாம் விதியோகங் தைரியம் பூதம்
வஞ்சியே பருமை செண்டு மல்லர்போ ராயு தங்கள்
கொஞ்சிய கர்ப்பத் துள்ளாங் குழவிகட் காமென் றோதே.

இலக்.: நெஞ்சுப் பக்கத்தில் இரண்டு முட்டிக்கைகளை நேர் பிடித்தல்.

விதி.: தைரியம்; பூதம்; பருமை; செண்டு; மல்லர் போர்; ஆயுதம்; கர்ப்பத்துள்ளிருக்கும் குழந்தைகள்.

---

34. பத்மமுகுள ஹஸ்தம் (தாமரை மொட்டு)

35. பாரதி (சரஸ்வதி)

37. திருஞான அஸ்தம்

இடக்கைப் பதாகந் தன்னில் வலக்கைத்தி ரிபதா கத்தை
யொடுக்கமில் லாம னேரா யுத்வேஷ்டி தமதாய்ப் பற்ற
அடுப்பது திரிஞா னக்கை யருள்பாரி சாதம் ஞானம்
திடத்துறு மும்மூர்த் திக்குஞ் சமாதிக்குஞ் செப்பு மாதே. 414

இலக் : இடக்கைப் பதாகத்தில், வலக்கைத் திரிபதாகத்தை, ஒடுக்கமில்லாமல் நேராய், உத்வேஷ்டிதமாய்ப் பற்றல்.

விதி. : பாரிசாதம் ; ஞானம் ; மும்மூர்த்தி ; சமாதி.

38. சஷாகிருதிக்கை

அஞ்சலிக் கையி ரண்டுங் கனிகளுங் குட்டம் ரண்டும்
தஞ்சமாய்ச் சேர்த்துக் கட்டில் சஷாகிரு திக்கை யாகும்
கொஞ்சிய மகர ராசிக் கென்னவே குறைவில் லாமல்
வஞ்சிகோ களன்ம தத்தில் வழுத்தினர் விதியோ கம்மே.

இலக் : இரண்டு அஞ்சலிக் கைகளில் சுண்டுவிரல் கட்டை விரல் இரண்டையும் சேர்த்துக் கட்டல்.

விதி. : மகரராசி.

இது, கோகளன் மதம்

39. சம்யமி அஸ்தம்

இரண்டுகை யம்சா சியத்தைப் பரிவர்த்த னமாயி ணக்கி
முரண்டுபத் மாச னத்தின் முழந்தாளின் மீதில் வைத்தால்
பரந்துடன் சம்ய மிக்கை பகர்விதி யோகத் தைக்கேள்
தரம்பெறு முனிக ளுக்கே சாற்றுமவ் விதியோ கம்மே. 416

இலக் : இரண்டு அம்சாசியக் கைகளைப் பரிவர்த்தனமாக இணக்கி, பத்மாசனத்தில் இருந்துகொண்டு முழந்தாளின் மீது வைத்தல்.

விதி. : முனிகள்.

40. சதுரச்ர அஸ்தம்

கடகா முகமிரண்டு மார்பு நேராய்க்
கருதுசுவத் திகம்வளைத்துப் பிடிக்கக் காட்டும்
முடிசதுர சிரமாகும் விதியோ கந்தான்
முன்சா மரம்பிடித்தல் மணிகள் கோத்து

---

38. சஷாக்ருதி ஹஸ்தம் (மீன் வடிவம்)
39. ஸம்யமிஹஸ்தம் (முனி)
40. சதுரச்ரஹஸ்தம் (காற்கோணம்)

வடிவான ஆரங்க டன்னைப் பூணல்
மகிழுஞ்சக் கணிநடன மன்னு மென்று
படிமிசை யுணர்த்தி னர்கள் பரத நூலோர்
பரங்கறிந்து முறையாகப் பகரு வாயே. 417

இலக்.: இரண்டு கடகாமுகக் கைகளை மார்பு நேராகச் சுவத்திக மாக வளைத்துப் பிடித்தல்.

விநி.: சாமரம் பிடித்தல்; மணிகள் கோத்து ஆரம்பூணல்; சக்கணி நடனம்;

41. திரிபதாக சுவத்திகம்.

வருதிரி பதாகம் ரண்டும் மணிக்கட்டைச் சுவத்தி கஞ்செய்
துறுவது திரிப தாகச் சுவத்திக மாகக் காட்டும்
கருதிய விதியோ கங்கேள் கற்பகத் துடன்மே டைக்கும்
பருவதச் சிகரத் திற்கும் வருமெனப் பகரு நூலே. 418

இலக்,: இரண்டு திரிபதாகங்களை மணிக்கட்டைச் சுவத்திக்ம் செய்து அமைப்பது.

விநி.: கற்பகம்; மேடை; பருவத சிகரம்.

42. பதாகசுவத்திகம்

சொல்லிரு பதாகந் தன்னைத் தூய்மணிக் கட்டிற் ரூக்கி
நல்லசொத் திகமே செய்யப் பதாகசொத் திகமாய் நாட்டும்
கல்லெனும் விதியோ கங்கேள் கடல்கரா பொறுமை விருக்ஷம்
புல்லுஞ்சஞ் சலமா காய்த்த கலமாய்ப்பொ ருந்து மென்னே.

இலக்.: இரண்டு பதாகங்களை மணிக்கட்டில் தாக்கிச் சுவத் திகம் செய்தல்.

விநி.: கடல் முதலை; பொறுமை; மரத்தில் காய்த்து அகல மர்ய்ப் பொருந்துதல்.

43. மித்திரோத்சங்க அஸ்தம்

மிருகசீ ரிடமி ரண்டு மேலாய்வ யிற்றிற் சேர்க்கில்
தருமித்தி ரோற்சங்கம் புத்த சமயமே விதியோ கம்மாம்
ஒருகையெ டுத்தா விர்த்த மொக்கக்கன் னத்தில் வைத்தால்
வருவெட்க மச்சத் திற்கும் வழுத்துவாய் முறைதெ ரிந்தே.

---

41. த்ரிபதாகஸ்வஸ்திகஹஸ்தம்
42. பதாகஸ்வஸ்திகம்

இலக்.: இரண்டு மிருகசிரிடக் கைகளே வயிற்றின் மேலாய்ச் சேர்த்தல்.

விநி.: புத்த சம்யம்.

ஒரு கையை எடுத்து ஆவிருத்தமாகக் கன்னத்தில் வைத்தால் வெட்கமுண்டாதல், அச்சம் இவற்றைக் குறிக்கும்.

44. நிலக அஸ்தம்

ஏலவே திரிப தாக மிரண்டையு மெதிராய்ச் சேர்த்துச்
சீலமா கப்பி டிக்கத் திலகக்கை விநியோ கங்கேள்
கோலமாந் திலதந் தீட்டற் சந்தனந் திருத்தற் கூராம்
வேலெனும் விழியி னுளே புஷ்பாஞ்ச லிக்கும் விள்ளே. 421

இலக்.: இரண்டு திரிபதாகங்களே எதிர் எதிராகச் சேர்த்துப் பிடித்தல்.

விநி.: திலகம் தீட்டல்; சந்தனம் திருத்தல்; புஷ்பாஞ்சலி.

45. வைஷ்ணவ அஸ்தம்

பேணவே யிருப தாகம் பெருவிர லுடனே சேர்க்கில்
வீணிலா வைஷ்ண வக்கை விநியோகங் கூட்டத் தோசை
தாணுவா மிருகர்த் திரிக்கைத் தன்றோளில் வைத்து நிற்கில்
பூணுவைஷ் ணவக்க ரமாய்ப் புகன்றனர் வியாசர் தாமே.

இலக்.: இரு பதாகங்களில் கட்டை விரல்களேயும் சேர்த்தல்.

விநி.: கூட்டத்து ஓசை.

இரு கத்தரிக்கைகளேத் தோளில் வைத்தல் வைஷ்ணவக்கை யென்று வியாசர் கூறுவர்.

43, மித்ரோத்ஸங்கம்

44. திலகஹஸ்தம்

தெலுங்கு அபி. தர்ப். திரிபதாகங்களே நெற்றியிலும் மார்பிலும் வைத்தல்.

45. வைஷ்ணவஹஸ்தம்

தெலுங்கு அபி. த. (565). இரு திரிபதாக ஹஸ்தங்களே எதிரெதிராகப் பிடித்தல். **விநி.:** மஹாவிஷ்ணு.

46. வல்லபாயுத அஸ்தம்

சிகரவத் தததின் மேல்மி ருகசிரத் தைப்பி டித்தல்
பகருமே யிதனை வல்ல பாயுதம் விநியோ கங்கேள்
இகலுத்தாண் முதலா மேற்ற மேறல்மேற் சுரதஞ் செய்யல்
புகலுவாய் நூலிற் காட்டும் புலனறிந் திதனை மானே. 423

இலக்.: சிகர அத்ததத்தின்மேல் மிருகசிரத்தைப் பிடித்தல்,

விநி.: தாண்ட ஏறல்; ஏற்றம் ஏறல்; சுரதம் செய்தல்.

47. ரதாமோத அஸ்தம்

கூறுமா ளத்தில்மூ குளமிரண் டும்ப தாகம்
நேரில்விஸ் தாரம் பற்ற ரதாமோதக் கையாய் நேரும்
சாருமே வினியோ கந்தான் சௌசீதி பந்தங் கட்குச்
சேருமென் றேநூ லாய்ந்து செப்புவை கமல மாதே. 424

இலக்.: அராளத்தில் இரண்டு முகுளங்களும், பதாகநேரில் விஸ்தாரமாகப் பற்றுதல் (?)

விநி.: சௌசீதி பந்தங்கள் (?)

சம்யுத அஸ்த அதிதெய்வங்கள்

ஆகுமே புட்ப புடவதி தெய்வ
மளதேச னஞ்சலி க்ஷேத்ரபாலன்
அழகுச துரச்ர மிராக வன்த்ரி
பதாக சோத்திகமதா காசம்மாம்
அருமைப் பதாகச் சுவத்தி கம்பிர
மனேயாங் கர்த்தரீ சோத்திகம்
ஆறுமு கனண் டோள மதிதெய்வம்
வாணியாம் அவகித்த மார்க்கண்டனும்
ஏகாத வர்த்த மானத்திற் குவாசுகி
யெனச்சொல்லும் விஷ்ணு தேவன்,
ஏற்றவுத் தான வஞ்சி தமதாகப்
புகலுமே கலசமா மிந்திரன்
இசையதாம் பட்ச வஞ்சித மோது
மூமையென வினங்குகௌ தமனுச்சங்கம்
இன்பமுறு மித்திரோற் சங்கமது புத்தனு
மிசைதிலக மால தாகும்

1. நாட்டிய உபயோக.

விநி.: மேருவின் சிகரம்; சந்திரன்; [illegible] கள்; தேர்ச்சிபெற்ற பேச்சு; கலசம்; பறவை: உயர துவசத்தம்பம்; உயரப் பார்த்தல்.

3. அதோமுகச்சிரசு

அதோமுகங் கீழே பார்ப்ப ததன்விதி யோகங் தேஹ
இதமிகு மோகந் துக்க மிலச்சையு மூர்ச்சை மற்றும்
உதகத்தில் நானஞ் செய்யி லுண்மையாய் வணங்கும் போதும்
பதந்தொடல் பொருளைத் தேட லாமுதற் பகரு நூலே. 65

இலக்.: கீழே பார்ப்பது,

விநி.: மிகுந்த மோகம், துக்கம், இலஜ்ஜை, மூர்ச்சை, தண்ணீரில் ஸ்நானம் செய்தல், வணங்குதல், பாதத்தைத் தொடல், பொருளைத் தேடல் முதலானவை.

---

2. உத்வாஹிதசிரஸ் (உயரத்தூக்கிய தலை)

நாட்டிய சாஸ்திரம்: (viii: 25): ஒரு முறை உயரத்தூக்குவது. **விநியோகங்கள்:** கர்வம், உயரங்காட்டல், உயரப்பார்த்தல், தன் மதிப்பு போன்றவை.

அபி. த. (தமிழ் 4)

உயரப் பார்த்திடு முகந்தா னுத்துவா கிதமே யாகும்
நயமுற்ற வினியோ கங்கேள் நகங்கட்குத் துவசங் கட்கும்
வியனுற் றிடும்வின் னுக்கும் விண்ணிடைத் திரிவோ ருக்கு
உயரக் கண்டிடு பொருட்கு மூருஞ் சந்திர னுக்குந் தானே.

3. அதோமுகசிரஸ் (கீழ்நோக்கிய தலை)

நா. சா. இச்சிரசு கூறப்படவில்லை.

அபி. த. (தமிழ் 5-6)

பாருல கினைவ ணங்கிப் பார்த்து நின்றிடு முகத்தி
பேரதோ முகமி தற்குப் பின்விதி யோகங் கேளாய்
நேரில்துர்ப் புத்திக் குரன் னிலத்திடு பொருள்
மாரவா ளிகள்செய் மோக மயக்கங்க ளுக்கு மென்ப.

நாடிய லெச்சை கட்கும் நமக்காரஞ் செய்வ தற்கு
நீடிய துக்கத் துக்கும் நீரினில் மூழ்கு தற்கும்
கூடுமெ தோமு கம்பின் கூறுமா லோலி தங்கே
ஆடியே வட்ட மாக அலைக்கவா லோலி தங்

4. ஆலோலிதச்சிரசு

லா லிதமதாய்ச் சுற்ற லதின்விகி யோகந் தூக்கம்
எலுறல் சிரிப்புக் கூட்ட மிகுத்திடும் போது மூச்ச
சாலவே யடங்கி நிற்குந் தருணமு மேடு பள்ளம்
ஞாலமீ தலகை சுற்றல் நலமதாங் கம்பி தங் கேள். 66

இலக். : வட்டமாகச் சுற்றல்.

விநி. : தூக்கம் மேலுறல், சிரிப்பு, கூட்டம் மிகுத்திடும்போது, மூச்சு மிகவும் அடங்கி நிற்கும் தருணம், மேடு பள்ளம், பூமியின்மீது அலகை (பேய்) சுற்றல்.

5. கம்பிதச்சிரசு

கம்பித மேலுங் கீழுங் காட்டுதல் விகியோ கங்கேள்
என்பதே தென்னில் வாரு மிருமென வழைத்தல் கேள்வி
வெம்பியே கேட்கும் போது மிரட்டியே தட்டும் போதும்
அன்புள சமிக்கி னைக்கே யாகுமாம் துதஞ்சொல் வோமே.

இலக். : மேலும் கீழும் காட்டுதல்.

விநி. : 'வாரும், இரும்' என்று கூறி அழைத்தல்; கோபித்துக் கள்வி கேட்டல்; மிரட்டியே தட்டல்; அன்புள்ள சமிஞ்ஞை.

---

4. ஆலோலிதசிரஸ் (உருள்வது)

நா. சா. இச்சிரசு இல்லை.

அபி. த. (தமிழ் 7)

பிரமைக்கும் விகடத் துக்கும் பேய்த்தலை சுற்று தற்கும்
அரியசித் திரைக்கும் கள்ள மாகிய சிரிப்பி னுக்கும்
தரியுமே மயக்கத் துக்கும் தேகத்தின் மூர்ச்சைக் கும்முள்
மையாய் மருவு மேயா லோலிதச் சிரசு தானே.

5. கம்பிதசிரஸ் (அசைவு)

. (viii : 19) சிரசை வேகமாகவும் வெகுவாகவும் அசைத்தல்.

, (தமிழ் 10)

லுங் கீழு மசைத்த மெய்ச்சிரசாங் கம்பி தங்காண்
ங் கோபங் கட்கும் இருக்கச் சொல்வ தற்கும்
ங் கண்டனை கட்கும் கூர்ந்ததென்ன வென்ப தற்கும்
ன் மீது ஆவா கனங்கட்கு மாகுந் தானே.

1. நாட்டிய உபயோகம்.

6. துதச்சிரசு

துதம்வல மிடம சைத்த லுறும்விநி யோகம் பக்கம்
பதனமாய்ப் பார்க்கும் போதும் பகரென்போர்க் கில்லை யென்ப
திதுவுமாச் சரியந் தன்னி லெழுந்தசந் தோஷத் தோடு
மதமுண் டிதுவல் லாம லடுத்தப ராவிர்த் தங்கேள். 68

இலக். : வலமிடம் அசைத்தல்.

விநி. : பக்கத்தே மெதுவாய்ப் பார்த்தல் ; 'சொல்' என்பவர்க்கு 'இல்லை'யென்பது ; ஆச்சரியம் ; எழுந்த சந்தோஷம்.

7. பராவிருத்தச்சிரசு

தானென்ற பராவி ருத்தஞ் சமமுகந் திரும்பிப் பார்த்தல்
ஆனதன் விநியோ கந்தான் ஆதர வற்றுப் பார்த்தல்
மானமாந் தனத்தைப் பார்த்தல்,வருவெட்கம், பராமு கத்தில்
ஏனையோர் சத்தங் கேட்கும் விதத்தி லுட் சிப்தஞ் சொல்வோம்.

இலக். : சமமுகம் திரும்பிப் பார்த்தல்,

விநி. : ஆதரவற்றுப் பார்த்தல், ஸ்தனத்தைப் பார்த்தல், வெகம், பராமுகம், பிறரிடமிருந்து வரும் சத்தங் கேட்கும் விதம்.

---

6. துதசிரஸ் (பக்கத்தில் அசைத்தல்)

நா. சா. (viii : 22) மெதுவாசத் தலையை அசைத்தல். விருமின்மை ; தக்கம் ; ஆச்சரியம் ; நம்பிக்கை ; பக்கங்களிற் பார்த்வெறுமை ; தடுத்தல்.

அபி. த. (தமிழ் 8–9)

அன்னமே இடம் வலத்தில் அசைப்பது துதமு கந்த
வின்னியோ கங்கேள் பக்க மேவினோர் தமைய ழை
துன்னிய புன்சிரிப்புத் துக்க மாதரவு கட்கும்
வன்னியி னெரிச்ச லுக்கும் வருகுளிர்ச் சிக்கு மென்
அடிக்கடி பக்கங் கள்பார்ப் பதற்கும் நிசித்தங் கட்கு
திடத்தில்லை யென்ன வந்தன் தேகம் பார்ப்பதற் கு
குடிக்கிற போதும் யுத்தம் கோலிய போது மாகு
எடுத்த பிரியஞ் சந்தோ ஷமில்லா ததற்குந் தா

7. பராவிருத்தசிரஸ் (திரும்பிப் பார்த்த

நா. சா. (viii : 32) முகத்தைத் திருப்புவது.

8. உட்சிப்தச்சிரசு 9. பரிவாகிதச்சிரசு

உட்சிப்தம் தலையெ டுக்க லுவமைகா ரியங்கள் காட்டல
மெச்சுபரி வாகி தங்கேள் விளம்புவேன் மூளி ரண்டும்
பச்சத்திற் சிரசைச் சாய்த்துப் பார்க்குத லுபமா னந்தான்
இச்சையாய் மோகஞ் சோக மிசைந்தசந் தோஷ மாமே. 70

உட்சிப்தச்சிரசு

இலக்.: தலை தூக்கல்.

விதி.: காரியங்கள் காட்டல்;

பரிவாகிதச்சிரசு

இலக்.: இரண்டு தோள்களின்மீது பக்கத்தில் சிரசைச் சாய்த்துப் பார்த்தல்.

விதி.: மோகம்; சோகம்; சந்தோஷம்; பெரியோரை ஆசையாய்க் கண்டு அழைப்பது.

அபி. த. (தமிழ் 11)

பராமு கமாயிருந் தால்பரா விருத்தச் சென்னி யாகும்
வராத கோபங் கட்குங் வதனத்தைத் திருப்பு தற்கும்
நிராதர வான தற்கும் லெச்சை களுக்கு மாகும்
பராகஞ்சேர் கொண்டை தன்னைப் பார்க்கவு மாகுந் தானே.

8. உட்க்ஷிப்தசிரஸ் (மேலே தூக்கப்பட்டது)

நா. சா. (viii : 33) தலையைச் சிறிது தூக்கல். உயர்பொருள்களைக் [illegible]க்க; தேவ ஆயுதங்களைப் பிரயோகித்தல்.

அபி. த. (தமிழ் 12)

ஒருபக்கத் தியரப் பார்ப்ப தச்சிப்த சிரமே யர்கும்
பொருள்யா துங்கொடு வாவெனப் போவென வொப்புக்கொள்ள
[illegible]ருமையாய்ச் சமிஞ்ஞை செய்ய ஆதியாங் கருமங் கட்கு
[illegible]வியா தரிப்ப தற்கு மாகுமுச் சிப்தந் தானே.

9. பரிவாகிதசிரஸ் (தூர அகன்றிருத்தல்)

[illegible]. (viii : 32) தலையை மாறிமாறி இருபுறங்களிலும் அமைத்[illegible]னம், திடுக்கிடுதல், சந்தோஷம், நினைப்பு, சகிப்பின்மை, [illegible]றப்பு, காதல் விளையாட்டு.

[illegible] (தமிழ் 13)

[illegible]ம் போடல் போலே தலைதன்னை யிருபக் கத்தாங்
[illegible]ழ்ந் தலைத்தாற் பரிவா கிதசிரம் விதியோ கன்கேள்
[illegible]கந்துதி சந்தோ ஷம்வரு வீரக விசார
[illegible]யின் சோட்டு வகைகட்கு மாகுந் தானே.

மோகமாம் நாகபந்தம் சேடன் வைஷ்ணவ
மொழி யுமேமால் கபோதம்
முதல்வனுஞ் சித்ர சேனன் கற்கடக
விஷ்ணுமுண் டகடகா வர்த்தனம்
முறைகொளுஞ் சந்திரன் கஜதந்த மாகுமது
முன்செ லும்பர மாத்துமன்
முக்கிய மதாம் நிடதத்தும் புருவதாகு
மூயல் மகர மச்சதேவன்
தாகமா கியவல்ல பாயுத மதற்குக்
கந்தர்ப் பனேயதி தெய்வமாங்
தகும்ரதா மோதந்தனக் காகு மதிதெய்வஞ்
சாருமே யிரதி யாகத்
தக்கவிச் சம்யுதக் கரமதிற் கதிதெய்வங்
தங்கு மிவ்வா ருக ளே
தானெனுங் கோகள மதத்தினி லிதற்கெலாஞ்
சாற்றின னறிந்து கூறே. 425

புட்பபுடம் - குபேரன் ; அஞ்சலி - க்ஷேத்திரபாலன் ; சதுரச்ரம் - ராகவன் ; திரிபதாகசோத்திகம் - ஆகாயம் ; பதாகசோத்திகம் - பிரமன் ; கர்த்தரீ சோத்திகம் - முருகன் ; டோளம் - சரசுவதி , அவஹித்தம் - மார்க்கண்டன், வர்த்தமானம் - வாசுகி ; உத்தான வஞ்சிதம் - விஷ்ணு ; பட்சவஞ்சிதம் - பார்வதி ; உற்ரங்கம் - கௌதமன் ; மித்திரோற்சங்கம் ; புத்தன் ; திலகம் - விஷ்ணு ; நாகபந்தம் - ஆதிசேடன் ; வைஷ்ணவம் - விஷ்ணு ; கபோதம் - சித்திரசேனன் ; கற்கடகம் - விஷ்ணு ; கடகாவர்த்தனம் - சந்திரன் ; கஜதந்தம் - பரமாத்மா ; நிஷதம் - தும்புரு ; மகரம் - மச்சதேவன் ; வல்ல பாயுதம் - மன்மதன் ; ரதாமோதம் - இரதி.

இவ்வாறு கூறினவர் **கோகளர்.**

சம்யுத அஸ்த லக்ஷணம் முற்றும்.

19-வது நிர்த்த அஸ்த லக்ஷணம்

நிருத்தக்கை முப்ப தாக நிகழும்பே தங்கள் சொல்லும்
உருசது ரச்ர முத்வி ருத்தமுந் தலமு கத்தோ
டருசுவத் திகமும் விப்ர கீர்ணக் கையு மல்லால்
கருதுவர் பின்ன ராள கடகாமு கக்கை யென்றே. 426

ஆவித்த வக்த்ரஞ் சூச்யாச்யம் ரேசி தத்தோ
டேவர்த்த ரேசி தம்கி தம்பம்பல் லவமு மின்னும்
புற்ற கேச பந்தம் முத்தானவஞ் சிதமத் தோடே
அற்ற லதாகா ரஞ்சீர் பொருகரி யஸ்த மாமே. 427

பட்சவஞ் சிதமும் பட்ச பிரத்தியோ தகமுந் தண்ட
பட்சமே கருட பட்சம் ஊர்த்வமண் டலியோ டேபார்
உட்சுவ மண்ட லித்த வுரோமண் டலியி னோடே
மெச்சுவ முரப் பார்சுவ மண்டலி யாகு மென்னே. 428

முறுவல்சேர் மொழியி னாளே முட்டிச்சு வத்தி கக்கை
சுறுகாத நவின பத்ம கோசமே யலபத் மக்கை
மருவுமுற் பணக்கை யோடே வலிதமும் லலித மென்றே
முறையதாய்ப் பரதா சாரி முப்பது விதஞ் சொன்னாரே. 429

426-429. நிருத்த ஹஸ்தங்கள் 30 என்று பரதாசாரியர் கூறினார்; அவை, சதுரச்ரம், உத்விருத்தம், தலமுகம், ஸ்வஸ்திகம், விப்ரகீர்ணம், அராளகடகாமுகம், ஆவித்தவக்த்ரம், சூச்யாச்யம், ரேசிதம், அர்த்தரேசிதம், நிதம்பம், பல்லவம், கேசபந்தம், உத்தானவஞ்சிதம், லதாகாரம், கரிஹஸ்தம், பட்சவஞ்சிதம், பட்சப்ரத்யோதகம், தண்ட பட்சம், கருடபட்சம், ஊர்த்துவமண்டலி, பார்சுவமண்டலி, உரோ மண்டலி, உரப்பார்சுவமண்டலி, முட்டிகச்சுவத்திகம், நளினபதும கோசம், அலபத்மம், உல்பணம், வலிதம், லலிதம் என்பன.

426-429. ஸ. ர. (7 : 216-282) இக்கைகளேயே கூறும்.

சிலப். (பக். 81) அடிக்குறிப்பு : இக்கைகளின் பெயர்களைச் சில மாறுபாடுகளுடன் சுத்தானந்தப் பிரகாசமென்னும் நூலில் காட்டியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

1. சதுரச்சரநிர்த்தக்கை 2. உத்விருத்தநிர்த்தக்கை

இருகட காமுக கக்கை யெட்டங்கு லத்தில் மார்நேர்
உறவைக்கச் சதுரச் சக்கை யோதுமீ ரம்ச பட்சக்
கரமுயர்த் தித்த ணித்து அதோமுக மாகக் காட்டல்
பெருமுத்வி ருத்தக் கையாய்ப் பேசினார் நூல்வல் லோரே.

இரண்டு கடகாமுகக்கைகளை எட்டங்குல அளவில் மார்பின் முன் வைத்தல் சதுரச்சக் கைப்பாதும். இரண்டு அம்சப்பட்சக் கைகளை உயர்த்தித் தணித்து அதோமுகமாகக் காட்டல் உத்விருத்தக் கையாகும்.

3. தலமுகநிர்த்தக்கை 4. சுவத்திகநிர்த்தக்கை

உத்விருத்தம் பக்கம் பாரி சங்களி லொன்றற் கொன்றெ
திர்த்துவைத் திடவக் கையைத் தலமுக மென்றே செப்பும்
ஒத்திரு வம்ச பட்சம் ஒன்றுமே லொன்று வைத்தல்
எத்திய சுவத்தி கக்கை யெனவுரைத் திடுவாய் மாதே. 431

உத்விருத்தக் கைகளைப் பக்கங்களில் ஒன்றற்கொன்று எதிரிடையாகச் சாய்த்து வைத்தல் தலமுகமாகும்.

அம்சபக்ஷக் கைகளை ஒன்றுமேலொன்று வைத்தல் சுவத்திகக் கையாகும்.

430. நா. சா. (ix. 178, 179)

சதுரச்ர ஹஸ்தம் : கைகள் ஒன்றுக்கு ஒன்று எட்டு அங்குலம் இடைவெளியுள்ளதாய் மார்பின்மீது, இரண்டு தோள்களும் முழங்கைகளும் சமமாக வைத்துக் காட்டல்.

உத்வ்ருத்த ஹஸ்தம் : இரண்டு கைகளையும் விசிறிபோல் வீசல். இதன் மற்றொரு பெயர் தாளவ்ருந்த (விசிற).

ஸ. ர. (7 : 216-220)

431. நா. சா. (ix. 180, 181)

ஸ்வஸ்திகம் : தலமுகக்கைகளை மணிக்கட்டினிடம் குறுக்கே பிடித்தல். இவற்றை விட்டுவிட்டால் விப்ரகீர்ணமாகும் (விப்ரகீர்ணத்துக்கு இந்நூல் (432) தனித்துக் கூறும்.

ஸ. ர. (7 : 221-222)

21651

5. விப்ரகீர்ணநிர்த்தக்கை 6. அராளகட்காமுகம்

சுவத்திகக் கையை வேகத் துறவிட்டுத் தனத டத்தில்
அவமின்றி வைக்க விப்ர கீரண மாகுங் .....
கவர்வலக் கைக டகா முகமிடக் கைய ராளம்
அவையதோ முகம்பி டித்தா லராளகட காமு கம்மே. 432

சுவஸ்திகக் கையை வேகமாக விட்டுவிட்டு, மார்பில் வைக்க விப்ரகீர்ணக் கையாகும்.

வலக்கை கடகாமுகம், இடக்கை அராளமுமாய் அதோமுகமாகப் பிடித்தல் அராளகடகாமுகமாகும்.

7. ஆவித்தவக்த்ரநிர்த்தக்கை 8. சூச்யாசியநிர்த்தக்கை

பருமுழங் கைப ரப்பிப் பதாகாதி களேவ்யா விர்த்தக்
கரணத்துவ மாக வைத்தால் காணுமா வித்த வக்த்ரம்
குருசர்ப்ப சீரு ஷத்தங் குட்டமத் திமையுக் கூட்டி
வருசது ரச்ர பக்கம் வைத்தலாஞ் சூச்சி யாசியம். 433

முழங்கைகளைப் பரப்பி பதாகாதிக் கைகளை, வியாவிருத்தமாக வைத்தல், ஆவித்தவக்த்ரக் கையாகும்.

சர்ப்பசிரூஷக் கைகளில், கட்டைவிரல், நடுவிரல்களைக் கூட்டி சதுரச்ரமாக வைத்தல் சூச்யாசியமாகும்.

---

432. நா. சா. (ix. 182)

அராளகடகாமுகம்: இரண்டு அலபத்மக் கைகளை, உள்ளங்கைகளை மேல் நோக்க வைத்து, பதுமகோசக்கைகளாக ஆக்குதல். இதன் மற்றொரு பெயர் அராளகடகம்.

ஸ. ர. (7 : 223-229)

433. நா. சா. (ix. 183-184)

ஆவித்தவக்த்ர: இரண்டு கைகளும் எதிரெதிரான தோள்களையும், முழங்கைகளையும், முன்னங்கைகளையும் குடிலமாக (வளைவாக)த் தொட்டு, உள்ளங்கைகளைத் திருப்பி அகற்றுவது.

ஸூசீமுக: இரு ஸர்ப்பசிரூஷக்கைகளை, கட்டைவிரல்கள் நடுவிரல்களைத் தொட்டுக் கொண்டு, தூனிகளைச் சாய்த்து நீட்டுதல்.

ஸ. ர. (7 : 230-234)

இலயத்துடன் அடைவு பிடித்துச் சாரி, நடை, குதித்தல், பாய்தல், வளைதல், சுற்றுதல் முதலிய உடற்செய்கைகளுடன் ஆடுவது.

நிருத்தியம் என்பது அகச்சுவை பற்றி எடுக்கும் மெய்க்கூத்து, அகச்சுவை :- இராஜஸம், தாமசம், சாத்துவிகம். இவைகளிலி ருந்து ஒன்பது வகைச்சுவைகள் தோன்றும். ஒன்பதுவகைச் சுவைக ளாவன : சிருங்காரம், ஆசியம், கருணை, இரௌத்திரம், வீரம், பயம், குற்சை, அற்புதம், சாந்தம்.

நாட்டியம் அல்லது நாடகம் எனப்படுவது பண்டைக்காலக் கதைகளைத் தழுவி வருவது. பரதநாட்டியத்தில் அபிநயமே மிகச் சிறப்புடையது.

அபிநயம் என்ற சொல்லுக்கு நாட்டிய சாத்திரம் கூறும் பொருள்.

அபி என்னும் உபசர்க்கத்தை முன்னே கொண்டே நி என்ற வினைப் பகுதிக்கு 'நாடகத்தின் பிரயோகத்தை அதன் தாத்பர்யம் விளங்குவதற்காகத் தூக்கிச் செல்வது எதுவோ அது அபிநயமா கும். (அபிநயம் முன்னே செலுத்துவது). அபிநயம் என்றது பாவகம். அஃது இருபத்து நான்கு வகைத்து என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. தென்னகக் கோயில்களில் ஏராளமான கல்வெட்டுக் கள் உள்ளன. அவற்றில் அவை தோன்றிய காலத்திய வரலாறு, அரசியல், சமுகம், இலக்கியம், இசை, ஓவியம், நாடகம், நடனம் போன்ற பலதுறைகளையும் பற்றிய செய்திகள் காணப்படுகின் றன. அக்கல்வெட்டுக்களிலிருந்து நடனங்கள், கூத்துக்கள் என் னும் நாட்டிய நாடகங்கள் இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள லாம்.

பரதசாத்திரம் நாடகம், இசை முதலிய கலைகளைப்பற்றி விரிவாகக் கூறியபோதிலும் நடனத்தைப் பற்றியே அதிகமாகக் கூறுகின்றது. இந்நூலின் நான்காம் அத்தியாயம் நாட்டியத்திற்கான எல்லாக் கரணங்களையும் விவரிக்கின்றது (கரணம் - கைத்தொ ழில் அழகு பெறச் செய்து காட்டல். சிலப்பதிகாரம்) 18 முதல் 27 வரையுள்ள சுலோகங்கள் 32 அங்கஹாரங்களைக் கூறுகின்றன. அங்கஹாரம் என்பது பல கரணங்கள் ஒன்று சேர்ந்த ஒரு கூட்டு முத்திரையாகும். பரதநாட்டியத்திற்குக் கூறப்பட்டுள்ள முத்திரை கள் 108. நாட்டிய சாத்திரத்திற்கு முத்திரைகளே முக்கியமானவை. இந்த 108 முத்திரைகளையும் சிவபெருமான் ஆடியதாகக் கூறப்படு கிறது. ஆயினும் ஆகமங்கள் ஒன்பது முத்திரைகளையே கூறுகின் றன. ஒன்பது முத்திரைகளுள் 'புஜங்கத் திராச நிருத்தியம்' என்பது

பதிப்பாளர் குறிப்பு

விநாயகர் துதி

பக்தர்கள் புகழும் பாதமுடையான் பராபரன் பரமயோகி
சக்தியை இடத்தே வைத்த தற்பரன் பெற்ற பிள்ளை
முக்திக்கு வித்தாய் வந்து முளைத்த ஐங்கரத்து நாதன்
வித்தகன் குமரன் முன்னோன் விநாயகன் பாதம் போற்றி!

— மகாபரத சூடாமணி

இந்திராதி தேவர்கள் பிரமனை அணுகி நாட்டிய சாத்திரத்தை அருளிச் செய்ய வேண்டுமென்று கேட்க, பிரமன் இருக்கு வேதத்தினின்று பாட்டுக்களையும், சாமவேதத்திலிருந்து இசையையும், யசுர்வேதத்திலிருந்து அபிநயங்களையும், அதர்வ வேதத்தினின்று சுவைகளையும் எடுத்து இருக்காதி நான்கையும் அங்கங்களாகக் கொண்ட நாட்டிய சாத்திரத்தைச் செய்தருளினார். அதைப் பரதமுனிவருக்கு உபதேசித்தார். பிரமன் இந்திர விழாக் கொண்டாட்டத்தில் இந்நாட்டிய சாத்திரம் உபயோகத்திற்கு வருவதாக என்று அருளிச் செய்தார்.

உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் உடற்கூறுகள் வாயிலாகப் புறத்தார்க்குப் புலப்படுத்துவதே நாட்டியக்கலையின் நோக்கமாகும். இறைவரான நடராசர் நாட்டிய கருத்தா என்றும் அவரிடமிருந்தே நாட்டியக்கலை தோன்றியதென்றும் தமிழர்கள் கருதுகின்றனர்.

நாட்டியங்களுள் தலைமைபெற்றது பரதநாட்டியம். 'ப' காரம் பாவமாகும். 'ர' காரம் ராகமாகும். 'த' காரம் தாளமாகும். ஆகவே, பரதம் என்பது பாவ ராக தாளங்களுடன் கூடியது. இக்கலை தாண்டவம் லாஸ்யம் என இருவகைப்படும். தண்டு என்னும் சிவகணத்தவன் மூலம் சிவன் தந்த கலை தாண்டவம் எனவும், பார்வதிதேவி செய்தது லாஸ்யம் எனவும் பண்டைய நூல்கள் கூறுகின்றன.

தாண்டவத்தில் உத்தானதாண்டவம் என்பது ஒரு கூறு. அது நின்று அபிநயித்தல். லாஸ்யத்தில் சுகுமார லாசியம் என்பது ஒரு கூறு. அது உட்கார்ந்து அபிநயித்தல் ஆகும்.

நாட்டியக்கலை நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் அல்லது நாடகம் என மூன்றுவகை நடனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நிருத்தம் என்பது பாடுவதற்கு ஏற்பத் தாளத்தின்படி கால்களால்

9. ரேசிதநிர்த்தக்கை 10. அர்த்தரேசிதநிர்த்தக்கை

இரண்டுகை யம்ச பட்ச முயரமா யெடுத்த வற்றைத்
துரிதமா கத்தி ருப்பச் சொல்லுமே ரேசி தக்கை
வருரேசி தக்கை யொன்றைக் கடகாமு கமதாய் வைக்க
அரியைநே ரிடையி லுளே வர்த்தரே சிதக்கை யாமே. 434

இரண்டு அம்சபக்ஷக் கைகளை உயரமாய் எடுத்து, அவற்றைத் துரிதமாகத் திருப்பல் ரேசிதநிர்த்தக்கையாகும்.

ரேசிதக்கை யொன்றைக் கடகாமுகக்கையாக வைக்க, அர்த்த ரேசிதக்கையாகும்.

11. நிதம்பநிர்ந்நக்கை 12. பல்லவநிர்த்தக்கை

உற்றப தாகத் தைக்கம் தரத்திருங் துயர மாக
பெற்றதோ முகம்நி தம்பத் திற்பிடித் திடல்நி தம்பம்
சற்றப்ப தாகம் வியாவிர்த் தகரண முயர்த்திப் பரிவி
ருத்தமா யிறக்கிக் கையைப் பிடித்துறல் பல்ல வக்கை. 435

இரண்டு பதாகைக் கைகளை, கழுத்துப் பக்கத்திலிருந்து, உயர மாக்கி, பிறகு தலைமேராக நிதம்பத்தில் பிடித்தல் நிதம்பக்கையாம்.

பதாகங்களை, வியாவிர்த்தகரணமாய்ச் சற்று உயர்த்தி, புரி விர்த்தமாய் இறக்கிக் கைகளைப் பிடித்தல் பல்லவக்கை.

---

434. நா சா. (ix. 185-186)

ரேசித: இரண்டு அம்சபட்சக்கைகளை, உள்ளங்கைகளை மேலே நோக்க வைத்துத் துரிதமாக அசைத்தல்.

அர்த்தரேசித: ரேசிதத்தில் இடக்கையை சதுரச்சமாக வைத்து, வலக்கையை ரேசிதத்திலேயே நிறுத்துவது.

ஸ. ர. (7 : 235-237)

435. நா. சா. (ix. 188) இக்கைகளின் விளக்கம் முன்பின்னாக உள்ளது.

பல்லவ: இரண்டு பதாகங்களை மணிக்கட்டிடங்களில் கூட்டுவது.

நிதம்ப: இரண்டு பதாகங்களைத் தோள்களிலிருந்து பிருஷ்ட பாகத்திற்குக் கொண்டு வருவது.

ஸ. ர. (7 : 238-241)

13. கேசபந்தநிர்த்தக்கை 14. உத்தானவஞ்சிதக்கை

அப்பதா கத்தைத் தம்பா காரமாய்ப் பாரி சத்தில்
ஒப்பவே யிருந்து யர்த்தி யிறக்குதல் கேசபந் தம்மாய்ச்
செப்புதி ரிபதா கங்க ளியற்றி யம்சம் ரண்டும்
ஒப்பெதி ராய்நி றுத்த வுத்தான வஞ்சி தக்கை. 436

இருபதாகங்களை ஸ்தம்பாகாரமாய்ப் பக்கங்களிலே ஒரு நிலையாக உயர்த்தி இறக்குதல் கேசபந்தமாகும்.

திரிபதாகக்கைகள் இரண்டையும் இரு தோள்களின் எதிரே ஒத்து நிறுத்தல் உத்தானவஞ்சிதக்கையாகும்.

15. லதாகாரம் 16. கரிநிர்த்தக்கை

திரள்பதா கத்தை டோள மாகவே திரியக் காகப்
பிரசாரி தமதாய்ச் சேர்த்துப் பிடிப்பது லதாகா ரக்கை
கரியஸ்த லதாகா ரத்தைத் தும்பிச்சங் கைபோல் வைத்து
ஒருகட காமு கங்கா தோரந்திரி பதாகம் வைத்தல். 437

பதாகங்களை டோளமாக, திரியக்காக, பிரசாரிதமாகச் சேர்த்துப் பிடிப்பது லதாகாரக்கையாகும்.

லதாகாரக்கையைத் துதிக்கைபோல் வைத்து, ஒரு கடகாமுகத்தைக் காதோரம் திரிபதாகமாக வைத்தல் கரிநிர்த்தக்கையாகும்.

திரியக் - குறுக்காக ; பிரசாரித - பரவலாக ; தும்பிச்சங்கை துதிக்கை.

---

436. நா. சா. (ix. 189 & 187)

கேசபந்த : தலைமுடியிலிருந்து இரண்டு கைகளை எடுத்து, இரு பக்கங்களிலும் நிறுத்துதல்.

உத்தானவஞ்சித : இரு திரிபதாகக்கைகளைச் சிறிது சாய்த்து வளைத்து, முழங்கைகளையும் தோள்களையும் அசைத்தல்.

ஸ. ர. (7 : 242-5).

437. நா. சா. (ix. 190-191)

லதா : இரு கைகளைப் பக்கங்களில் சாய்த்து நீட்டுதல்.

கரி ஹஸ்த : லதாக்கைகளை உயர்த்தி ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்து ஆட்டி, திரிபதாகக்கையைக் காதோரம் வைத்தல்.

ஸ. ர. (7 : 246-54).

17. பட்சவஞ்சிதநிர்த்தக்கை **18.** பட்சப்பிரத்தியோதகம்

கனிதிரி பதாகம் ரண்டுங் கைகடி தலத்தில் வைத்து
நுனிவிரல் வளைக்கப் பட்ச வஞ்சித முறையா மந்தப்
பனிபட்ச வஞ்சி தத்தில் அணிவிரற் பக்க மாக
முனமெதிர் வைக்கப் பட்சப் பிரத்தி யோதகமாய் மூட்டே.

திரிபாதகம் இரண்டையும் கூட்டி இடுப்பில் வைத்து நுனி விரலை வளைக்கப் பட்சவஞ்சிதமாம்

பட்சவஞ்சிதத்தில் மோதிவிரலைப் பக்கமாக, எதிரில் வைக்கப் பட்சப்பிரத்யோதகமாகும்.

19. தண்டபட்ச நிர்த்தக்கை

ஒருகையை யமுச பட்ச முறமார்பின் பக்கம் வைத்து
மறுகையை யிலதா காரமாகத்தோ ளிடத்தில் வைத்துப்
பெருமுழங் கையைக் கீழா யிறக்கியே பிடிப்ப தாகும்
தருமலர்க் குழலி னாளே தண்டபட் சக்கை யென்றே. 439

ஒரு கையை அமசபட்சமாக மார்பின் பக்கம் வைத்து, மறு கையை லதாகாரமாகத் தோளிடத்தில் வைத்து, முழங்கையைக் கீழே இறக்கிப் பிடிப்பதாகும். இது தண்டபட்சக்கை எனப்படும்.

20. கருடபட்சம் **21.** ஊர்த்வமண்டலி நிர்த்தக்கை

காணிரு கைப்ப தாகங் கடிதட்டத் ததோமு கம்மாய்
தோணவே பிடித்த லென்று சொல்லுமே கருட பட்சம்
வாணவே பதாகம் ரண்டு மார்புநேர் நெற்றி மட்டும்
ஊணிப்பா ரிசம்பி டிக்க வூர்த்வமண் டலியா மென்றே. 440

---

438. நா. சா (ix. 192-193)

பக்ஷவஞ்சிதக : ஒரு திரிபதாகக்கையை இடுப்பில் வைத்து, மற்றொரு திரிபதாகக் கையைத் தலையில் வைத்தல்.

ப்ரத்யோதக : பக்ஷவஞ்சிதக் கைகளை இடம் மாற்றி வைத்தல்.

ல. ர. (7 : 255-6).

439. நா. சா. (ix. 194) தண்டபக்ஷம் இரண்டு அம்சபட்சக் கைகளை மாற்றி மாற்றி ஒரு தண்டம் போல் பிடித்தல்.

ல. ர. (7 : 257-8).

இருபதாகங்களைக் கடிதடத்தில், தலைகீழாய்ப் பிடித்தல் கருட பக்ஷமாம். இருபதாகங்களை மார்பிலிருந்து நெற்றிமட்டும் செலுத்திப் பக்கத்தில் பிடித்தல் ஊர்த்வமண்டலியாகும்.

22. பார்சுவமண்டலி 23. உரோமண்டலி நிர்த்தக்கை

அனமேகேள் பதாகம் ரண்டு மன்யோன்ய மாய்ப்பக் கத்தில்
மனமுறப் பிடித்த பார்சுவ மண்டலிக் கைய தாகும்
இனங்கீழ் மேற்பதாகம் பக்கத் திருமார்பு நேர்வ ளைத்தல்
தனிவரு முரோஜ மண்ட லிக்கையாய்ச் சாற்று மானே. 441

இரு பதாகங்களையும் பக்கத்தில் பிடித்தல் பார்சுவமண்டலிக்கை யாகும். இரு பதாகங்களையும் கீழ்மேலாக மார்புக்கு நேரே வளைத்தல் உரோமண்டலியாகும்.

24. உரப்பார்சுவ மண்டிலி நிர்த்தக்கை

ஒருகைமார் பிற்கு யர்த்தி யொருகையைத் தொங்க விட்டு
மறுபடி யும்வியா விர்த்த மாகவோர் கைய ராள
முறச்செய்ய மார்பு நேரில் வைத்துமற் றோரு கையைப்
பெருமப வேஷ்டி தத்தை யராளப்ர மாணஞ் செய்து
உரப்பார்ச்வ மண்ட லிக்கை யொப்புமென் றோது மானே.

ஒரு கையை மார்பிற்கு உயர்த்தி, ஒரு கையைத் தொங்கவிட்டு, மறுபடியும் வியாவிருத்தமாக, ஒரு கை அராளமாக மார்பு நேரில் வைத்து, மற்றொரு கையை அபவேஷ்டிதமாக அராள அளவுக்குச் செய்தல் உரப்பார்சுவ மண்டலியாகும்.

---

440. நா. சா. (ix. 195) ஊர்த்தவ மண்டலி: இருகைகளும் உடலின் மேற்பாகத்தில் வட்டமாகத்திரிதல். கருடபக்ஷ: கொடுக்கப்படவில்லை.

ஸ. ர. (7 : 259-61).

441. நா. சா. (ix. 195-6)

பார்சுவமண்டலி: ஊர்த்தவமண்டலியை ஒரு பக்கத்தில் செலுத்துவது.

உரோமண்டலி: மார்புக்கெதிரிலே, கைகளை வட்டமாகச் சுழற்றி, ஒரு கையை உயர்த்தி, ஒரு கையைத் தொங்கவிடுதல்.

ஸ. ர. (7 : 262 6).

442. இச்செய்யுளில் 5 அடிகள் உள்ளன. நா. சா. (ix. 197) உரப் பார்ச்வார்த்தமண்டலி: அலபத்ம, அராளக்கைகளை மாறி மாறி மார்புக்கு மேலும் பக்கங்களிலும் அசைத்தல்.

ஸ. ர. (7 : 267-9).

25. முட்டிகச் சுவத்திகம் 26. நளினபத்ம கோசம்

ஒருகைய ராள மற்ற வொருகைபல் லவமாய் மற்றும்
இருகட காமு கத்தா முட்டிகச் சுவத்தி கக்கை
மருசுவத் திகம்வ்யா விர்த்த மாய்ப்பரா முகம்பி டிக்கக்
குருவருள் நளின பத்ம கோசமென் றுரைப்பர் நூலோர்.

ஒரு கை அராளமாகவும், ஒரு கை பல்லவமுமாகவும் பிடித்து, பிறகு இரு கடகாமுகங்களாக்குதல் முட்டிகச் சுவத்திகக் கையாரும். சுவத்திகத்தை வியாவிர்த்தமாய்ப் பராமுகமாகப் பிடித்தல் நளினபத்ம கோசம் என்பர்.

27. அலபத்ம நிர்த்தக்கை 28. உல்பண நிர்த்தக்கை

மலரல பத்மத் தையு யரமார் பினிலி ருந்து
வலியகண் டத்தில் வைக்க வருமல பத்ம கோசம்
இலகிரு கையை முன்போற் கழுத்தெதி ரெதிர்பி டிக்கச்
சொலுமதை யுல்ப ணைக்கை துலங்கவே நூலின் மாதே. 444

அலபத்மக் கைகளை மார்பிலிருந்து கழுத்துக்கு உயர்த்துதல் அலபத்ம நிருத்தக்கையாம்.

அலபத்மக்கைகளை கழுத்தெதிர் பிடித்தல் உல்பண நிருத்தக்கை யாரும்.

---

443. நா. சா. (ix. 198, 9).

முஷ்டிகஸ்வஸ்திக: மணிக்கட்டில் வளையும்படி இரண்டு கடகாமுகக் கைகளைப் பிடித்துச் சுழற்றல்.

நளினீபத்மகோச: வியாவிருத்த, பரிவிர்த்த காரணக்களாய்க் கைகளை மாறி மாறி அசைத்தல்.

ஸ. ர. (7 : 270-5).

444. நா. சா. (ix. 200-1)

அலபல்லவ: இரு கைகளும் உத்வேஷ்டித காரணங்களில் சுகர்தல்.

உல்பண: இரண்டு கைகளையும உயர தீட்டி அலைப்பது.

ஸ. ர. (7 : 276-7).

29. வலிதநிர்த்தக்கை 30. லலிதநிர்த்தக்கை

துலங்குல தாகா ரக்கைச் சுவத்திக மாய்ப்பி டிக்க
வலிதக்கை யாகு மின்னம் வரும்பல்ல வக்க ரத்தை
இலகவே சிரத்தின் மீதி லிதைச்சுவத் திகமாய் வைத்தல்
லலிதக்கை யென்றிக் நூல நிந்துரை செய்ய லாமே. 445

லதாகாரக்கையைச் சுவத்திகமாய்ப் பிடிக்க வலிதக்கையாகும். பல்லவக்கையை தலையின்மீது சுவத்திகமாய் வைத்தல் லலிதக்கையாகும்

நிர்த்த அஸ்தலக்ஷணம் முற்றும்.

20. முத்திராஹஸ்த லக்ஷணம்

1. சுரபிமுத்திரை

கருமிருக ரங்கள்கோத் திடக்க னிட்டைத்
தற்சனிகள் வலத்தி னாநாமிகை மற்றும்
பெருகுமத்தி மையிற்பொருந்தி வலக்கை நீட்டப்
பிசகாத்தற் சனியிடத்த நாமி மத்தியம்
பொருத்தியதோ முகமாகப் பிடிக்க லாகும்
புகழ்சுரபி முத்திரைக்கைப் புலன நிந்து
உரைத்தனர்கள் பரதநூற் கற்ற மேலோர்
உததியலை யொத்தவிழி யுடைய மாதே. 446

இரண்டு கைகளையும் கோத்து, இடக்கையின் கனிஷ்டை தர்ச்சனிகளோ வலக்கையின் அநாமிகை, மத்திமையில் பொருத்தி, வலக்கையின் தர்ச்சனியை இடக்கை அநாமிகை மத்தியங்களோடு பொருத்தி அதோமுகமாகப் பிடித்தல் சுரபி முத்திரையாகும்.

---

445. நா. சா. (ix. 201) லலித :
அலபத்மக் கைகளைத் தலைமீது அசைத்தல்.
வலித : இரு லதாக் கைகளை முழங்கையோரமாய்க் குறுக்கே வைத்தல். ஸ. ர. (7 : 278-82).

446. இந்தப் பகுதிக்கு மூலம் வீணாங்கவில்லை. சிவபூஜைகளுக்குரிய முத்திரைகளுள் முப்பத்து மூன்றினைக் கொண்ட முத்திராலட்சணம் என்ற நூல் திருவாடுதுறை ஆதீனவெளியீடு எண் 85 இல் காணப்படுகிறது. உரிய இடங்களில் அந்நூலினின்றும் சிவபூஜாவிதி என்ற மற்றொரு நூலினின்றும் மேற்கோள்கள் அடிக்குறிப்பாகக் காட்டப்பெறும். மற்ற இடங்களில் ஒப்புமையோ மேற்கோளோ கிடைக்காமையால் செய்யுளில் உள்ளபடி வசனமாக்கி எழுதப்பெற்றுள்ளது.

1. காட்டிய உபயோக.....லக்ஷணம் 169

2161

2. கவுஸ்துபமுத்திரை

கீலகக்கை யிலனுமி மத்தி மத்தைக்
கீழ்நோக்கி யிடதுதற் சனியிற் பிடித்துக்
காலவலத் தற்சனியை யிடத்த னுமி
கைமத்திம மாங்குட்ட முன்னோர் சேர்ந்த
மூலநடு விடுக்கில் வைத்தல் கவுஸ்துபமென்
முத்திரையின் குறியெனவே யிதனைக் கற்றோர்
நூலறிந் துரைத்தனர்கள் சீயம் போன்ற
நுண்ணிடையை யொத்தநிரு வழகின் மாதே. 447

கீலகக்கையின் அநாமிகை மத்திமத்தைக் கீழ்நோக்கி இடக்கை யின் தர்ச்சனியிற் பிடித்து, வலத்தர்ச்சனியை இடக்கையின் அநா மிகை, மத்திமம், அங்குட்டம் இவற்றின் நடுவில் இடுக்குதல்.

3. ரவி முத்திரை

இரண்டுள்ளங் கைகளையு மாறி வைத்து
இடத்தற்ச னியைவலக் கனிட்டை யாலே
கிரப்பிடித்து வலத்தற்ச னியை யிடக்க
னிட்டையாற் பிடித்திடவ னுமி மத்யம்
வருவலதங் குட்டத்திற் சேர்ந்து நேரே
வலவனு மிகைமத்திய மிடதங் குட்டம்
உறச்சேர்த்து நடுத்து ளையாக்கிப்பி டித்த
லோதுமே யிரவிமுத் திரைய தாமே. 448

இரண்டு உள்ளங்கைகளையும் மாறிவைத்து, இடத்தர்ச்சனியை வலக் கனிஷ்டையாலே பிடித்து, வலத்தர்ச்சனியை இடக்கனிஷ்டை யால் பிடித்து, இடக்கையின் அநாமிகா மத்யம் என்றவைகளை வலது அங்குட்டத்தில் சேர்த்து, வல அநாமிகை மத்தியம் ஆகியவற்றை இட அங்குஷ்டம் உறும்படி சேர்த்து நடுத்துளையாக்கிப் பிடித்தல்.

4. பதுமமுத்திரை

மருவிட வனுமி மத்தி மத்தின்மேல் வலத்த னுமி
பெருமத்தி மத்தை வைத்துப் பின்னதின் மேலி டத்தில்
வருதற்ச னிக்க னிட்டை மேல்வலத் தற்ச னியும்
பிரிகனிட் டத்தை வைத்துப் பிடித்திடப் பதும மாமே. 449

இட அகாமிகையை மத்திமத்தின் மேல்வைத்து, வல அகமி கையையும் அதன் மத்திமத்தின்மேல் வைத்து, அதன்மீது இடக் கைத் தர்ச்சனி கனிட்டையும் வலக்கைத் தர்ச்சனி கனிட்டையும் வைத்துப் பிடிப்பது பதுமமுத்திரை யாகும்.

5. பிரசன்னமுத்திரை

அங்கையாற் செய்யு மங்குலிக் கரத்தைப்
புங்கித மாகப் பிடித்திடப் புகலும்
முங்கும் பிரசன்ன முத்திரைக் கையாய்ப்
பங்கு மெனவே பகர்ந்தனர் நூலோர். 450

அங்குலிகளே உள்ளங்கையால் புங்கிதமாகப் பிடித்தல், பிர சன்ன முத்திரையாகும்.

6. சந்நிகிதமுத்திரை

சிகரமி ரண்டை யுங்க னிட்டங்க னிட்டஞ் சேர
விகுவுடன் மலர்த்தி யெட்டு விரல்களாக் கொஞ்சந் தூக்கி
நிகரிலா தேகாட் டச்சன் னிகிதமுத் திரையா மென்ன
வகையறிந் திடவே நூலோர் வழுத்தினர் கமல மாதே. 451

இரண்டு சிகரக் கைகளிலும் சுண்டுவிரலேச் சுண்டுவிரலோடு சேர்த்து, விகுவுடன் மலர்த்தி, எட்டு விரல்களையும் கொஞ்சம் தூக்கிக் காட்டுவது சந்நிகிதமுத்திரையாகும்.

7. சந்நிரோதனமுத்திரை

இரண்டுபதா கங்களையு மணிக்கட் டோடு
மணிக்கட்டெ திர்த்துச் சேர்த்து
உரம்பெறவே தள்ளுதல்போல் புங்கி தஞ்செய்
தேபிடித்த லோங்கு மீதை

---

449. இரண்டு கையையும் பத்மம்போல் சேர்த்து நடுவில் இரண்டு பெருவிரல்களையும் கர்ணிகைபோல் சேர்ப்பது பத்மமுத்திரை. (சிவபூஜா விதி பக். 23).

451. பெருவிரல் உயர்ந்திடப் பிடித்தகை முட்டிகள்
சரிவுற வளைந்திடில் சன்னிதா னமதாம்
(முத்திராலக்ஷணம் 15).

வருமருட்சன் னிரோதமுத் திரைய தாகு
மெனவல்லோர் வகைபி ரித்துத்
திரமாகு நான் முறையாய்த் தவறில் லாதே
யுரைத்தார் செல்வ மாதே. 452

இரண்டு பதாகங்களையும் மணிக்கட்டோடு மணிக்கட்டு எதிர்த்துச் சேர்த்து, வலியத் தள்ளுதல்போல் புங்கிதம் செய்து பிடித்தல் சந்நிரோதனமுத்திரையாகும்.

8. யோனிமுத்திரை

இரண்டுதற் சனியி லிருகனிட் டைகளை
யியல்புடன் பின்மா றிப்பிடித்துப்
பரண்டி மற்றநால் விரல்க ளைமுன்
பாகவே நீட்டியப் பாலே
கரண்டுமங் குட்டங் களைக்கொண்ட னுமி
கையின்மேல் வரைதனில் வைத்தல்
திரண்டதோர் யோனி முத்திரை யென்வே
செப்பினர் மூதறி வோரே. 453

இரண்டு சுட்டுவிரல்களை இரண்டு சுண்டுவிரல்களோடு மாறிப் பிடித்துப் பிறகு முரண்படுத்தி, மற்ற நால்விரல்களை முன்பாகவே நீட்டி, பிறகு, அங்குட்டங்களைக் கொண்டு அநாமிகையின் மேல் ரேகையில் வைத்தல் யோனி முத்திரையாகும்.

9. நிர்யாணமுத்திரை

இரண்டுகை விரல்களைப் பரஸ்பரங் கோத்து வீதச்
சுருண்டிட மடக்கியே திருப்பிப்பின் னொன்றுய்ச் சூழ
இரண்டுதற் சனியுஞ்சேர்த் துப்புங்கித மாக நீட்டல்
வருந்துகிர் யாணமுத் திரைக்கையாய் வழுத்து நூலே. 454

இரண்டு கைவிரல்களையும் ஒன்றுடொன்று கோத்துச் சுருட்டி மடக்கித் திருப்பி ஒன்றுய்ச் சுற்றி, இரண்டு தர்ச்சனிகளையும் சேர்த்துப் புங்கிதமாய் நீட்டல் நிர்யாண முத்திரைக் கையாகும்.

---

452. அன்னசன் னிதானத் தருமுறப் பெருவிரல்
தன்னை மூட்டியில் நிறுத்தல்சன் னிரோதனம்

10. சகடமுத்திரை

சகடமுத் திரையிடச் சங்கீர்ண முட்டிமேல்
மகிமையாய் விளங்குவ லதுசங் கீர்ண
முட்டியை வைத்தல் மூளு மென்றே
திட்டமாய்ப் பரத நூல்செப் பிடும்மே. 455

இடச் சங்கீர்ண முட்டியின்மேல் வலச் சங்கீர்ண முட்டியை வைத்தல் சகடமுத்திரையாகும்.

11. ஆவாகனமுத்திரை

இரண்டு மர்த்த சந்த்ரனே விரித்து
மருண்டிடா துள்மடக் கிப்புங் கிதமாய்ச்
சுருண்ட தோமுகஞ் சூழச் செய்தல்
கரண்ட மாவா கனமுத் திரையே. 456

இரண்டு அர்த்தசந்திரக் கைகளே விரித்து உள் மடக்கிப் புங்கிதமாய்ச் சுருட்டி, அதோமுகமாகச் சூழச்செய்தல் ஆவாகனமுத்திரையாகும்.

12. ஸ்தாபனமுத்திரை

ஆவா கனக்கையை யாங்குகுப்பு றக்கவிழ்த்தி
மேவுதலாய்க் காட்டவென்றே விள்ளுமே—பூவுலகில்
தாபனமுத்தி ரைக்கைபி தாமெனவே சாத்திரத்தில்
சோபனமா மிம்மொழிகள் சொல். 457

ஆவாகனக்கையை குப்புறக்கவிழ்த்தி மேவுதலாய்க் காட்டல் ஸ்தாபனமுத்திரையாகும்.

---

456. அஞ்சலி தன்னுள் அணிவிரல் இரண்டினும்
விஞ்சிய அங்குட்டம் மேவிலா வாகனம்

(மு - ம். 13).

இரண்டு கையையும் அஞ்சலியாகச் சேர்த்து விரித்து இரண்டு மோதிர விரல்களிலும் இரண்டு பெருவிரல்களையும் சேர்ப்பது ஆவாஹநீ முத்திரை.

(சிவ. வித். பக். 22)

457. மேவும்அஞ் சலிதனே விரித்ததோ முகமுறத்
தாபனம் செய்வது தாபன முத்திரை

(மு - ம். 14).

13. அவகுண்டனமுத்திரை

இருபதா கத்தை யியல்புடன் சேர்த்துத்
திருத்த வெளியிற் றிருப்பி விரித்தல்
சிவபெரு மான்முன் சேரக் காட்டும்
அவகுண் டனமுத் திரையா மென்னே. 458

இரண்டு பதாகங்களை இயல்புடன் சேர்த்து, திருத்தமாக வெளியில் திருப்பி விரித்தல் சிவபெருமான் திருமுன் காட்டப்படும் அவகுண்டன முத்திரையாகும்.

14. க்ரதிதமுத்திரை

இருகைவி ரல்களையு மேற்கவே கோத்து
வறுமையில் லாமல் மடக்கக்—கிரதிதமெனு
முத்திரைக்கை யாமெனவே மூதறிவால் நூல்வல்லோர்
வித்தரித்தா ரென்றிதனை விள். 459

இரு கைவிரல்களையும் பொருந்தக் கோத்து மடக்குதல் க்ரதித முத்திரையாகும்.

15. ஷண்முகோன்முகமுத்திரை

ஷண்முக வன்முகத் தான முத்திரை
முன்னிரு முகுளக் கையை யெதிர்த்துத்
தாக்கிக் கீழ்மேற் றாக்கிக் காட்டல்
ஏற்கு மென்றே யியம்புவை மாதே. 460

இரு முகுளக்கைகளை ஒன்றோடொன்று எதிர்த்துத் தாக்கி, (பின்பும்) கீழ்மேல் (மாற்றித்) தாக்கிக் காட்டல் ஷண்முகோன்முக முத்திரையாகும்.

16. பாதுகைமுத்திரை

ஆதி யிரண்டு அர்த்தசந் திரனைக்
கோதிக் குளித்தங் குட்டத்தைத் தாக்கி
மீதாய்க் காட்ட வென்றுநூல் விள்ளும்
பாதுகை முத்திரைப் பாங்கீ தென்றே. 461

இரண்டு அர்த்த சந்திரக் கைகளை, கோதிக்குளித்து, (கூட்டித் தணித்து)(?) அங்குட்டங்களைத் தாக்கி மேலாகக் காட்டல் பாதுகை முத்திரையாகும்.

---

460. ஆக்கினை முதல்நடு அணிவீரல் செவிகண்
மூக்கினை மறைத்தல்சண் முகமுத் திரையே

17. முஸலமுத்திரை

முசல முத்திரை யிருமுட்டிக் கையை
உசிய வொன்றுமே றொன்றை யுயர்த்தித்
தூக்கிக் காட்டத் துலங்கு மென்றே
ஏக்க மில்லா தியம்பு நூலே. 462

இரு முட்டிக்கைகளை ஒன்றுமேற் ஒன்றுக உயர்த்தித் தூக்கிக் காட்டல் முஸல முத்திரையாகும்.

18. விஸ்தாரமுத்திரை

இரண்டு அர்த்த சந்த்ர னுகும்
கரத்தைச் சேர்த்துக் காட்டு தலாகும்
தரங்கொ ளும்விஸ் தார முத்திரையாய்
உரம்பெறப் பரத நூலோ திடுமே. 463

இரண்டு அர்த்த சந்திரக் கைகளைச் சேர்த்துக் காட்டுதல் விஸ்தாரமுத்திரையாகும்.

19. இரூ முத்திரை

மூட்டி போல் மூட்டி முத்தரம் வைத்து
மூட்டி மேற்றிரி சூலக் கைமணிக்
கட்டில் வைத்துக் காட்டுத லென்றே
காட்டு மிக்கு முத்திரைக் கையே. 464

முதலில், முட்டிகளை மூன்று தரம் சேர்த்து, பிறகு முட்டிமேல் திரி சூலக்கையை மணிக்கட்டில் வைத்துக் காட்டுதல் இரூ முத்திரையாகும்.

20. கும்பமுத்திரை

புகழ்பிடிக் கும்ப புட்ப புடக்கை
உகமையா மூர்த்வ முகமாய்ப் பிடித்தல்
கும்பமுத் திரையின் கூறென நூலோர்
அம்புவி யோர்கட் கறிவித் தனரே. 465

புட்பபுடக்கையை ஊர்த்துவ முகமாய்ப் பிடித்தல் கும்ப முத்திரையாகும்.

மகாபரதத்தில் சார்ஞ்தேவர் கூறிய காயத்திரி முத்திரைகள் 24

சமுகம்	அதோ முகம்	சம்புடம்	முஷ்டி
த்விமுகம்	சகடம்	அஞ்சலி	முத்கரம்
திரிமுகம்	யமபாசம்	வித்தம்	பல்லவம்
சதுர்முகம்	மத்ஸ்யம்	விச்ருதம்	சண்முகோன்முகம்
பஞ்சமுகம்	கூர்மம்	க்ரதிதம்	சிம்மாக்கிராந்தம்
ஷண்முகம்	வராகம்	ப்ரலம்பம்	மகாக்கிராந்தம்

முத்திராஹஸ்த லக்ஷணம் முற்றும்.

21-வது பாதபேதப் பிரகரணம்

சமபாத மண்ட லப்பா தங்குஞ்சி தப்பா தஞ்சேர்
கமையஞ் சிதப்பா தச்சீர் கரட்டிய வடிம்பு பாதம்
திமிர்தா டிதப்பா தத்தைச் சேர்காக பந்த சாட்க
திமருகிர்த் தப்பா தம்பட் சிக்கிறைப் பாதம் பத்தே. 466

பாதங்கள் 10 ஆகும். அவை: சமபாதம், மண்டலபாதம், குஞ்சிதபாதம், அஞ்சிதபாதம், வடிம்புபாதம், தாடிதபாதம், ராக பந்தம், ஷாட்கதிபாதம், கருடநிலைப்பாதம், நிருத்தநிலைப்பாதம் என்பனவாம்.

1. சமபாதம்

சாற்றுமிப் பதத்தில் முந்திச் சமபாத மிரண்டு பாதம்
மாற்றுமற் சமமாய் நிற்கில் வழங்குமவ் விடியோ கங்கேள்
போற்றிய குருவு மன்னர் புகழ்தேவ சன்னி திச்சீர்
ஏற்றிய பெரியோர் முன்னு மினியநாட் டியாரம் பத்தே.

இலக்.: பாதங்கள் இரண்டும் மாற்றுமல் சமமாய் நிற்றல்.

விநி.: குரு, மன்னர், பெரியோர் இவர்கள் முன்னும், தேவசந் நிதியிலும், நாட்டியாரம்பத்திலும்.

---

466. நா. சா. (x. 41-50). உத்கடித, சம, அக்ரதலசஞ்சார, அஞ்சித, குஞ்சித என்ற ஐந்து பாதங்களே கூறும்.

சிலப். உரை (பக். 81). 'அறுவகைநிலையும் ஐவகைப் பாதமும்' என்று ஐந்து பாதங்களையே கூறுகின்றன.

ஷே. பக்கம் அடிக்குறிப்பில் அவை: (1) சமநிலை, (2) உற்கடிதம், (3) சஞ்சாரம், (4) காஞ்சிதம், (5) குஞ்சிதமென்பன என்று சுத்தானந்தப் பிரகாசமென்னும் பாத நூலிற் காணப்படுவதாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

அபிநயதர்ப்பணம் (கோஷ்: 259-260; 274-275) முதலில், மண்டல, உத்பலவன, ப்ரமரி, பாதசாரி என்ற கால்களை நான்காகவும், சமபாத, ஏகபாத, ராகபந்த, ஐந்தர, கருட, ப்ரம என்று நிலைகளை ஆறாகவும் கூறும்.

இவ்வாறே, வேறு பல நூல்களும் கடை, சாரி, மண்டலம், ஸ்தானகம் என்ற தலைப்புக்களின்கீழ் பாதபேத லக்ஷணங்களைப் பலவாறு கூறுகின்றன. ஸ. ர. (7 : 312-325) பாதபேதங்களை விளக்குகின்றது.

467. நா. சா. (x. 41-50). இயற்கையாய் நிற்பதற்கும் வெவ்வேறு காரணங்களில் உடல் இயற்கை நிலையில் நிற்பதற்கும் இக்கால் வேண்டும்; ரேசகத்தில், பாதம் நகரவேண்டும்,

2. மண்டலபாதம்

இரண்டெனுங் குதியெ திர்த்து விடைவெளி யாக நிற்றல்
வருமண் டலப்பா தப்பேர் மருவிய விஞியோ கங்கேள்
கரிபரி கருட னேற்றற் கடும்புலிப் பாய்ச்சல் மாற்றுத்
திருநட னரம் பத்தும் நிலையிலு மாகு மின்னம். 468

அக்காலைப் பொருந்த வீரா றங்குல மகற்றிப் பின்னும்
ஒக்கவே தொடைமு ழந்தாள் ஒளிதருங் கடித டத்தைத்
தக்கதா குமிரு கைப்ப தாகைபோல் வளைத்தி டச்சீர்
ஒக்கிய வற்பு தக்கண் ணிக்கிர நிலையா மென்னே. 469

இலக்.: இரண்டு குதிகால்களை எதிர்த்துவைத்து இடைவெளி யாக நிற்றல்,

விதி.: கரி, பரி, கருடன் இவற்றின்மீது ஏறல்; கடும் புலிப் பாய்ச்சல், நடனரம்பம்.

அம்மண்டலக் காலைப் பன்னிரண்டங்குலம் அகற்றிப் பிறகு, துடை, முழந்தாள், கடிதடம் இவற்றைப் பதாகைபோல் வளைத்திட, அற்புதக் கண் கொள்ள, இந்திர நிலையாம். 466-ம் செய்யுளின் அடிக் குறிப்பில் காணும் ஐந்தர நிலை போலும்.

3. குஞ்சிதபாதம்

இருபாதம் நிலையா யூன்றி யிருகுதி யுயரத் தூக்கில்
வருகுஞ்சி தப்பா தச்சீர் வகுத்திடும் விஞியோ கங்கேள்
பெருகயிற் றினின டத்தற் பெரும்புலிப் பாய்ச்ச லாண்போல்
மருவுத லுண்ணி யேற்றல் மந்திப்பாய்ச் சலுக்கு மாமே.
ஆமென வரக்கன் முன்னு ளரக்கன்றன் முதுகி லேறி
நேமமாய் நடனஞ் செய்ய நின்றிடும் பாத மென்றே
தாமஞ்சேர் குழலி னுளே தரணியோ ரறிய நூலோர்
தாமுரைத் திட்ட விந்தச் சாத்திர மறிந்து சொல்லே. 471

இலக்.: இரு பாதங்களையும் நிலையாய் ஊன்றி, இரு குதிகால் களையும் உயரத்தூக்கல்.

விதி.: கயிற்றின்மீது நடத்தல், புலிப்பாய்ச்சல், ஆண்போல் மருவுதல், உண்ணி யேற்றல் (?) மந்திப் பாய்ச்சல்.

இப்பாதம் முன்னுளிலே அரக்கன் மற்றோரரக்கன் முதுகிலேறி நடனம் செய்த காலத்தில் உண்டானது என்பர்.

---

471. நா சா. (x. 50). குதிகால்களைத் தூக்கி, விரல்களையும் உள் ளங்கால்களையும் வளைத்தல். இது, உதாத்த (பிரபுத்வ) நடைக்கும், வலப் புறமாகத் திரும்புகைக்கும், அங்கிருந்து முன் நிலைக்குத் திரும்புவதற்கும், அதிக்கிராந்த சாரிக்கும் விதியோகமாகும்.

4. அஞ்சிதபாதம்

ஈரெண்டு குதியு மூன்றி யிருபட மேலே தூக்கச்
சாருமஞ் சிதப்பா தச்சீர் தரும்விநி யோகஞ் சொல்வாம்
பேருடை நெசவு பொய்க்காற் பெருமூலை கொட்டல் மண்ணைச்
சேரவே மிதித்த லுள்ளங் காலொட்டத் தட்டச் செப்பே.

இலக்.: இரண்டு குதிகால்களையும் ஊன்றி. இரு படங்களையும் மேலே தூக்குவது.

விநி.: நெசவு, பொய்க்கால் (ஆட்டம்), பெருமூலை கொட்டல், மண்மிதித்தல், உள்ளங்கால் ஒட்டத் தட்டல்.

5. வடிம்புபாதம்

வடிம்புதா னிரண்டு பாத மொருபக்கஞ் சாய்த்து நிற்றல்
கொடுவிநி யோகங் கேள்நெல் குற்றலு மண்மி தித்தல்
திடசட்டி யின்ப தார்த்தம் கடைதலுந் தண்ணீர் சேற்றைப்
படிமிதித் திடலு டன்சம் மணத்திலும் பகரு மானே. 473

இலக்.: பாதங்களின் ஓரங்கள் இரண்டும் ஒரு பக்கம் சாய்த்து நிற்றல்.

விநி.: நெல்குற்றல், மண்மிதித்தல், சட்டியில் பதார்த்தம் கடைதல், சேறுமிதித்தல், சம்மணங்கொட்டுதல் (கால்மடித்து உட்கார்தல்).

6. தாடிதபாதம்

தாடித பாதஞ் சொல்வாந் தனியொவ்வோர் பாத மாகச்
சூடுமெட் டங்கு லத்தைத் தூக்குதல் விநியோ கங்கேள்
ஆடிய கோபத் தும்பே ரணியட வியுமே மற்றும்
நீடிய வாட்டந் தன்னில் நிகழுமென் றுரைப்பர் மாதே.

இலக்.: ஒவ்வொரு பாதமாக எட்டெட்டங்குலம் தூக்குதல்.

விநி.: கோபம், பேரணி அடைவு, வாட்டம்,

---

472. நா. சா. (x. 50). குதிகள் தரையில் நிற்க, முன்னங்கால்களைத் தூக்கி, விரல்களை அகற்றி வைத்தல்.

முன்னங்காலில் பட்ட புண்ணைக் காட்டல், எல்லாப் புறங்களிலும் திரும்புதல், காலில் அடிபடுதல், பிரமரி ஆட்டம்; இவற்றிற்கு வீதியோகம்.

7. நாகபந்தம்

எடுத்திடு நாக பந்த மிருகாலே மாறிப் பின்னில்
தொடுத்திடு விகியோ கங்கேள் சொல்லுமோ இனிகி லேக்கும்
அடுத்துயோ இகள்தேர்ந் தொட்டி யாணங்கட் டுதற்குஞ் செக்கிக்
குடித்திடப் பாலே யூட்டிக் கொடுக்குங்கா லல்லால் மற்றும்

நாணிலா லாகிரிக் காரன் நடப்பதும் முனிகள் சித்தம்
பேணிய தவத்தும் ஊடல் மறுத்தறன் னுடனே மற்றும்
வேணுகோ பாலன் கால்வைப் பதிலுமே விளங்கு மென்று
வாணராற் சொல்லு மிந்த வகையெனத் தேர்ந்து கூறே.

இலக்.: இரு கால்களையும் மாறிப் பின்னுதல்.

விநி.: மோகினிகிலே, யோகிகள், ஒட்டியாணம் கட்டுதல், பாலூட்டல், லாகிரிக்காரன் நடை, முனிவர் தவம், ஊடல் மறுத்தல், வேணுகோபாலன் கால் வைத்தல்.

8. சாட்கதிபாதம்

நின்றிடு பாத நேராய் நிறுத்திப்பின் புறத்தில் மாறி
உன்றியே நடத்தற் சாட்க திக்குறும் விகியோ கங்கேள்
கன்றெரு பாம்பு பூதம் பசாசற்குப் பயந்தோன் பாதம்
மன்றுளா யுதத்திற் குப்பின் வாங்கினேன் காலு மாமே.

இலக்.: பாதத்தை நேராக நிறுத்தி, பின்புறத்தில் மாறி உன்ற நடத்தல்.

விநி.: கன்று, பாம்பு, பூதம், பிசாசுக்குப் பயந்தவன் கால், சண்டையில் ஆயுதத்திற்குப் பின் வாங்கியவன் கால்.

9. கருடலிலேப்பாதம்

இடதுகால் மண்டி யிட்டு இசைவலக் கால்முன் னீட்டித்
திடமூன்றி முட்டு யர்த்தச் செலுங்கரு டக்கா லாக
அடவிற்கு விகியோ கங்கேள் கருடனு மனுமன் பூதம்
கடவுளைச் சுமக்கும் போதுங் கருதுவ தல்லால் மற்றும். 478

துணிந்திரா வணன்கை லாயம் தூக்கும்போ தம்பு பாணம்
புணரவே தொடுக்கும் போது மம்மனை போடும் போதும்
பணியவே பயிரி னற்றைப் பறிக்கும் போதுமிப் பாதம்
இணையவீ ராச னத்தி லிருக்கலு மாகு மென்னே. 479

இலக்.: இடக்கால் மண்டியிட்டு, வலக்கால் முன்னீட்டி ஊன்றி முட்டுயர்த்தல்.

விநி.: கருடன், அனுமன், பூதம் இவர்கள் கடவுளைச் சுமத்தல். இராவணன் கைலையைத் தூக்கியது; பாணங்களைத் தொடரவே தொடுத்தல், அம்மனையாடுதல், பணிந்து நாற்றுப் பிடுங்குதல், வீராசனத்திலிருத்தல்.

10. நிருத்தநிலைப்பாதம்

நிருத்தமாம் வலக்கா லூன்றி நேரிடக் காலின் முட்டுத்
திருத்தமாய் வளைத்துத் தூக்கல் செப்பிய விநியோ கங்கேள்
விரித்தச பாப திக்கும் வீரபத் திரன்நி லைக்கும்
கருத்துடைத் துவார பால காளுக்கு மாகு மற்றும் 480

வழுதிக்காய் மதுரைச் சொக்கர் மாறியா டியநி லைக்கும்
செழுங்கோபஞ் செய்யும் போதுந் திறத்துதைக் கின்ற போதும்
வழுத்துவர் பரதங் கற்ற வாணர்கள் சொலுமிந் நூலை
முழுத்திற மோக மாதே மொழிந்திடு அடைவ றிந்தே. 481

இலக்.: வலக்காலூன்றி, இடக்காலின் முட்டைத் திருத்தமாய் வளைத்துத் தூக்கல்,

விநி.: சபாபதி, வீரபத்திரன்நிலை, துவாரபாலகர், பாண்டியனுக்காகச் சொக்கர் கால்மாறியாடியநிலை, கோபம்செய்தல், உதைத்தல்.

அடைவுகள்

உத்தம அடைவுவகை

கருதுமுத் தமநி ருத்தங் கானாட கடவைந் திற்கும்
மருவுதட் டடவு நாட்ட டவுகட்ட டவுடன் மற்றும்
விரவுபக் கடவு மெட்ட டவுவகைக் கிருபத் தைந்தாய்
உறுமட விவ்வா றாக உற்பவ மறிந்து கொள்ளே. 482

உத்தம (சுத்த) அடைவுகள் ஐந்து. அவை தட்டடைவு, நாட்டடைவு, கட்டடைவு, பக்கடைவு, எட்டடைவு. இவை ஒவ்வொன்றுக்கும் வகை இருபத்தைந்து.

அடைவு - குட்டனம் (ஸ. ர. 7 : 320). ஸங்கீத ஸாராம்ருதம் என்ற நூலில் இங்குக் கூறப்பட்ட அடைவுகளிற் சில உள்ளன.

மத்திம அடைவு

திருத்துமத் திமமாம் நிர்த்தம் தேசிக வடவைவந் தான
வருசற்குச் சிமிறி ரண்டாம் வகைக்குப்பத் தைந்த தாகும்
மருருத்து சுத்துத் தொக்க டவுவகைக் கைந்த தாகிப்
பெருகுமிவ் வட்வு மொத்தம் பேசுவாம் நாற்பத் தைந்தே.

மத்திம அடைவுகளுக்கு மற்றொரு பெயர் தேசிக அடைவு. அவை சருக்கடைவு, சிமிறடைவு, குத்தடைவு, சுற்றடைவு, தொக்கடைவு என ஐந்து. இவற்றுள் முதல் இரண்டிற்கும் ஒவ்வொன்றின் வகைகள் பதினைந்து. பின் மூன்றிற்கும் ஒவ்வொன்றின் வகைகள் ஐந்து, ஆக மத்திம அடைவுகளின் தொகை நாற்பத்தைந்து.

அதம அடைவு

கேளினி யதம நாட்டியங் கெருடிசே ரடவைந் திற்கு
வாள்மண் டிதண் டதாகு மதமத்துத் தம்மொன் பானும்
ஆழ்டொம்பன் காண மாகு மதமத்தில் மத்தி மஞ்சொல்
ஏழென்பர் வரிசைக் காகு மெண்ணிலா வனந்த மென்னே.

அதம் அடைவிற்கு வகைகள் கெருடி முதலிய ஐந்து; அவற்றிற்குரிய காரணங்கள் வாள், மண்டி, தண்டு, டொம்பன் என்ற நான்கு; ஆக ஒன்பது. இவ்விதமான அதம அடைவுகளில் மத்திமம் ஏழென்பர். வரிசைகளுக்கு வகைகள் அளவற்றவை.

ஆகுமிவ் வடவைந் தந்த வாசானி டத்தில் நேராய்
ஊகித்துத் தெரிந்து மேலே யோதிய விதிப்ப டிக்கு
வாகுடன் அபிந யித்தல் வருமெனப் பரத நூலோர்
மோகமா யுரைத்தா ரிந்த மொழிதனை யறிந்து கொள்ளே.

இவ்வடைவுகளை அந்த அந்த ஆசிரியரிடத்தில் நேராகக் கேட்டு, ஊகித்துத் தெரிந்துகொண்டு, மேலே கூறியபடி அழகாக அபிநயிக்க வேண்டுமென்று பரதநூலோர் உரைத்தனர்.

அடைவிற்கு அங்கங்கள்

உத்தர தேச சுத்த நிர்த்தங்கட் டடவிற் கோதும்
அத்தம்ப தாகமாய்நாட் டடவிற்குத் திரிப தாகம்
முத்தைநேர் மொழியி னுளே மூளுங்கட் டடவி னிற்குப்
பத்திய தாகு மர்த்த பதாகமென் றுரைசெய் மற்றும் 486

பக்கட விற்குக் கைப்ப தாகமெட் டடவு பற்றும்
சிக்கிலாச் சிவிட்ட வம்சா சியபதம கோசக் கையே
மைக்கறு விழியி னுளே வளர்பர தங்கற் றோரி
லக்கண முலகோர் காண வாக்கின ரறிந்து கொள்ளே.

மாராட்ர மிந்துஸ் தானி தேசத்தில் வாழ்நூ லாய்ந்து
சீராட்டும் பாட்ட ராலே செப்பிடு தேசி நிர்த்தம்
பேராம்சற் கடவு சந்திர களாசிமி றடவு பேசும்
கூர்டோள முச்சங்கக்கை குத்தட விற்கென் றோதே. 488

சுத்தட விற்குக் கையாய்ச் சொல்லுமே யர்த்த சந்த்ரன்
தத்துதொக் கடவு புங்கி தப்பிரே ரிதமாய்ச் செய்தல்
பத்திசேர் மொழியி னுளே பரதநூ லாய்ந்த மேலோர்
உத்தம மாகு மென்றே யோதின ரறிந்து கொள்ளே. 489

சாளய நிர்த்தஞ் சார்ந்த சற்கத்து டொம்ப வித்தை
நீள்சிலம் பத்தி னுடே நிகழ்ந்திடு கெருடி கட்காம்
வாள்மண்டி தண்டம் டொம்பன் கரணமாம் வரிசை யென்று
மீளட வைந்தி னுக்கு விள்கர முறைதெ ரிந்தே. 490

எந்தவஸ் தங்க ளேனு மிசைந்திட வுகஞ் செய்து
அந்தந்தக் கரத்தை யுத்வேஷ் டிதமப வேஷ்டி தத்தோ
ஒந்துவியா விருத்த மற்றும் பரிவிர்த்த முறைபி டித்தால்
விந்தைநேர் முகத்தி னுளே யியல்பதா மறிந்து கொள்ளே.

486-7. உத்தரதேசத்துக்குரியதான சுத்த நிருத்தத்துக்குரிய தட்டடைவுக்கு அஸ்தம் பதாகம்; நாட்டடைவிற்கு, திரிபதாகம்; கட்டடைவுக்கு அர்த்தபதாகம்; பக்கடைவிற்குப் பதாகம்; எட்டடைவுக்குச் சிலிட்டஅம்சரசியமும் பதுமகோசக்கையும்;

488-9. மகாரஷ்டிரம், இந்துஸ்தானி தேசங்களின் நூல்களை ஆராய்ந்த அறிவாளிகளால் சொல்லப்பட்ட தேசி நிர்த்தங்களுக்குரிய, சருக்கடைவிற்குச் சந்திரகளாக்கையும், சிமிறடைவுக்கும், குத்தடைவுக்கும் டோளக்கையும், உத்சங்கங்கக்கையும் ஆகும். சுற்றடைவுக்கு அர்த்தசந்த்ரன் கையாம்; தொக்கடைவுக்குப் புங்கிதப் பிரேரிதமாய்ச் செய்தல்.

490-1. சாளயநிர்த்தம், சற்கத்து, (circus ?), தொம்பவித்தை சிலம்ப மடித்தல், கெருடி இவைகளாவை ஐந்து அதம அடைவுகளுக்கும் உரிய கரணங்களான வாள், மண்டி, தண்டம், தொம்பன் ஆகியவற்றைக் கைகள் அறிந்து செய்க. பூகத்தினுல் உரிய கைகளைத் தேர்ந்தெடுத்து, உத்வேஷ்டிதம், அபவேஷ்டிதம், வியாவிருத்தம், பரிவிருத்தம் என்ற முறைகளிலே செய்ய வேண்டும்.

பாதபேதப் பிரகரணம் முற்றும்.

22. நவரசபேதப் பிரகரணம்

நாமகள் கலிகட் கெய்தும் நயம்பெறு நவர சங்கேள்
ஏமுறு நகையே துக்க மிளிவரல் மருட்கை யச்சம்
தோமுறு பெருமை வீரந் தொலிவிலா உவகை தாயோர்
தாமுறு சாந்தி யென்னு மொன்பது ரசமாய்ச் சாற்றே. 492

நவரசங்களாவன :—நகை, துக்கம், இளிவரல், மருட்கை, அச்சம், பெருமை, வீரம், உவகை, சாந்தி.

1. நகைரசம்

சாற்றிய நகையின் றன்மை சார்வது மொருவர் தம்மால்
தோற்றிய விகழ்ச்சி யானுந் தோன்றிய விழிசொல் லானும்
கூற்றிசை யறிவிற் பேதை குயிற்றினு மடமை யானும்
ஏற்றிய நகைவந் தெய்து மென்றனர் காட்சி யாக. 493

காட்சிசே ரற்பு தத்தின் கண்செய்யா சியமே கூச்சம்
மீட்சிசெய் யங்க வீனம் விகற்பமே ஞான மிக்கச்
சூட்சியி லங்க மேவுஞ் சுரத்தினிற் சினத்திற் போரில்
மாட்சிமை பிரமை கொண்டு வருநகை ரசமென் றூரே. 494

நகை ரசம் உண்டாகும் முறைகள் :—ஒருவரால் தோற்றிய இகழ்ச்சியாலும், இழி சொல்லாலும், பேதையர் பேச்சாலும், மடமை யாலும் நகை உண்டாகும் என்றனர்.

வியப்பினால் உண்டாகும் ஆசியம், கூச்சம், அங்கவீனம், விகற்ப ஞானம், சூழ்ச்சி, சுரம், போர், சினம், பிரமை, இவற்றினாலும் நகை ரசம் தோன்றும் என்பர்.

---

492. தொல்காப்பியம் : (மெய்ப்பாட்டியல் 251)
நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்(று)
அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.

நா சா (vi. 15) சிருங்கார, ஹாஸ்ய, கருண, ரௌத்ர, வீர, பயானக, பீபத்ஸ, அத்புத என்று 8 ரஸங்களையே கூறும். ஸ - ர. (7 : 1358) சாந்தமும் சேர்த்து ஒன்பதாகக் கூறும்.

சிலப் உரை (பக். 83). சுவைகள் ஒன்பது என்னும் ; அவை வீரம், பயம், இழிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரம் என்பன.

493-94. தொல் : மெய் : 253
எள்ளல் இளமை பேதைமை மடனென்(று)
உள்ளப் பட்ட நகைநான் கென்ப



2. துக்கரசம்

ஆரியர் விதித்த மெய்ப்பாட் டழுகைவந் தடுப்ப தாகும்
ஏரிலாப் பூச்சி யக்கே டெய்தினி னினியர் யாவும்
பார்தனி லிகழ்த்த லாலும் பரிவுறு நோயி னாலும்
சோர்வுள வறுமை யாலுந் துக்கமுஞ் சோக மன்னும். 495

மன்னர்தம் மிடுக்கத் தாலும் மரிப்பிரி மாத னங்கள்
புன்மையா வர்த்த நீரிற் புதைபொருள் போக்கி னாலும்
நன்னிசை யூட லாலும் நற்காமி கள்ள வழுகைக்
குன்னிய செய்கை யாலு முண்மையாய்த் துக்கந் தோன்றும்

அழுகை, பூச்சியக்கேடு, இனியர் இகழ்ச்சி, நோய், வறுமை இவற்றால் துக்கமுண்டாகும்; இதனின்று சோகம் பிறக்கும்.

இன்னும், மன்னரால் உண்டாகும் தண்டனை, மரித்தல், செல்வம் சூழ நீரில் அழுந்திப்போதல், ஊடல், காமி அழும்படி செய்த கள்ளச் செயலாலும் துக்கம் தோன்றும்.

3. இளிவரல்ரசம்

தோன்றிளி வரலின் றன்மை தோற்றவை தோற்ற லாலும்
ஏன்றமை மூப்பி னாலும் இகழ்பிணி யிடுக்கத் தாலும்
தான்றனி யொருவர் முன்னந் தாழ்வுபட் டிகழ்த லாலும்
ஆன்றமெய்ப் பாடு காட்டு மமலமா துன்மார்க் கந்தான். 497

துன்மார்க்க ருடனன் மார்க்கஞ் சூழினு மிசையா தாலும்
பின்பார்க்குந் தோல்வி யாலும் பிழைசெய்யுங் குற்றத் தாலும்
பன்மார்க்க வாஞ்சி யாலும் படர்ந்ததுர்க் கந்தத் தாலும்
மென்மார்க்கத் தாலுந் தானே யிளிவரல்வந் தெய்து மாதே.

இளிவரல் - இழிபு. இளிவரல், தோல்வி, மூப்பு, பிணி, இகழ்தல் இவற்றால் பிறக்கும்.

495-6. தொல்: மெய்ப்: (253)

இளிவே இழிவே யசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே.

இன்னும், துன்மார்க்கருக்கு நற்போதனை செய்தும் திருந்தாத விடத்தும், புறங்காட்டி ஓடச்செய்யும் தோல்வியாலும், பிழை செய்யும் குற்றத்தாலும், வாந்தி முதலியவற்றாலுண்டாகும் துர்க்கந்தத்தாலும், இழிந்த நடைகளாலும், இளிவரல் வரும்.

4. மருட்கைரசம்

மாதுகேள் மதிம யக்கம் மருட்கையா மரிதா மொன்றால்
மீதெழு துணுக்கத் தாலு மிகப்பெரு வடிவு தோன்றப்
பேதமாங் கலகத் தாலும் பேரறி வின்மை யாலும்
நீதியாய் நினைத்த தெய்தாக் காலையின் நிகழும் வறுமை. 499

வறுமையாம் விஷத்தாற் பூத வஸ்துவின் செய்கை யாலும்
உறுமன மயக்கத் தாலு முண்மைசேர் மணிமந் தரத்தால்
பொதுமைசேர் நன்ம யக்கம் பூவையர் மயக்கத் தாலும்
சருவமுந் தாங்கு பூமி தன்னிலே நிகழுமி ருட்கை. 500

மருட்கை - வியப்பு.

மருட்கை : ஏதேனும் அரியதொன்றால் உண்டாகும் துணுக்கத்தாலும், மிகப்பெரு வடிவுதோன்ற உண்டாகும் மனக்கலக்கத்தாலும், அறிவின்மையாலும், நினைத்தது எய்தாக் காலத்தும் உண்டாகும்.

இன்னும், வறுமை என்னும் விஷம், பூத வஸ்துவின் செய்கைகள், மனமயக்கம், மணிமந்திரங்களால் உண்டாகும் மயக்கம், ஸ்திரீகள் செய்யும் மயக்கு, இவற்றாலும் மருட்கை தோன்றும்.

5. அச்சரசம்

நிகழுறு மச்சந் தோன்று நெறியது நேர்மை யன்றி
வெகுளிவே தாளங் கூளி மேல்வருங் காலும் வெம்மை
தகுவிலங் குறுத லாலுஞ் சாகர மடைத லாலும்
தொகுமுறை யரசர் கோபஞ் சூழினு மிடிய தாமே. 501

497-98. தொல் : மெய்ப் : 254
மூப்பே பிணியே வருத்த மென்மையோ(டு)
யாப்புற வந்த இளிவரல் நான்கே.

499-500. தொல் : மெய்ப் : 255
புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.

இடிமழை காற்று மின்ன லிருளிஞல் வெயிலி ஞலும்
படிகமார் வெள்ளம் பாம்பு படிகச முன்னி ஞலும்
கொடுமையிற் படையிற் கூட்டங் குருதியிற் களத்தி ஞலும்
வெடியுட னுயர்பீ ரங்கித் தொனிமேவி லச்சந் தோன்றும்.

அச்சம் - பயம்.

அச்சம் : வேதாளம், பேய் முதலியன மேலெழுந்துவரும் போதும், கொடிய விலங்குகளாலும், சமுத்திரமடைதலாலும், அரசர் கோபத்தாலும்,

இடி, மழை, காற்று, மின்னல், இருள், வெயில், வெள்ளம், பாம்பு வாழ்கின்ற மடு, படைக்கூட்டம், போர்க்கள இரத்தம், பீரங்கியின் வெடிச்சத்தம் இவற்றினாலும் அச்சம் உண்டாகும்.

6. பெருமைரசம்

தோன்றிய பெருமை யான ரசமது சொல்லுங் காலை
வான்றுணைக் கல்வி யாலும் வாழ்வது மிகுத்த லாலும்
மேன்றகை யழகினாலு மெல்லியிற் கொடையாற் போரில்
ஊன்றிவெல் வெற்றி யாலு முற்றதென் றிசைப்பா ராதி.
ஆதிகத் தால்வி ருந்தா லாதியாம் பழமை யால்மெய்க்
கீதியாற் கீர்த்தி யால்நன் னியமத்தா மகத்தால் விண்ணோர்
கோதிலா மூன்று மூர்த்தி குலஞ்சயி லாதி வேலை
சோதிவேல் மூர்த்தி சந்த்ரர் குறைவிலாச் சூர்ய ராமே. 504

பெருமை - பெருமிதம்.

பெருமை : மிகுந்த கல்வி, வாழ்வின் மிகுதி, அழகு, கொடை, வெற்றி இவற்றால் உண்டாகும்.

பூஜ்யதை, விருந்து, பழமை, நீதி, கீர்த்தி, நியமமுடன் செய்யப்படும் யாகம், இவற்றாலும், தேவதைகள், மும்மூர்த்திகள், சயிலங்கள், கடல்கள், முருகன், சந்திர சூரியர் இவர்களாலும் இந்த ரசம் தோன்றும்

501-2. தொல் : மெய்ப் : (256)

நீணக்கே விலக்கே கல்வர்த மிறையெனப்
பிணக்கல் சாலா வச்ச நான்கே.

503-4. தொல் : மெய்ப் : (257)

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே.

வீரத்தைத் 'தறுகண்' என்று பெருமையுள் அடக்கிக் கூறப் பெற்றதைக் காண்க.

7. வீரரசம்

குறைகளைச் சொல்லும் போதுங் குலவீன னென்னும் போதும்
நிறைதப்புச் செய்கை யாலும் நீண்டசத் துருக்க ளாலும்
பொறையிலாக் களவும் பொய்யும் போதவே நடத்தும் போதும்
இறைகாண மானஞ் சொற்பொன் திருட்டினிற் றெரியு மேலும்

மேலுறு வெகுளி தோன்ற விரவிய வுறுப்பி லார்த்தம்
பாலது மொழித லாலும் பண்புடைக் குலமி லார்த்தம்
சீலமே சொலினுஞ் சிந்தை நினைத்தவை சேரா தேனும்
வேலுறுங் கொலையி னாலும் வெகுளிவந் துறுதல் வாதாம்.

வாதுமுற் கூற லாலும் மடிதனைப் பிடிக்கும் போதும்
சூதுசெய் யிடத்தும் வையுஞ் சொற்பிழை மதத்தி னாலும்
மூதுணர் மதபே தத்தில் முயற்சியைத் தடுக்கும் வீரம்
காதல்சேர் மொழிநல் லார்தங் காதலிற் றோன்று மெய்யாய்.

வீரம் - இங்குக் கோபம்.

வீரம்: குறைகளைச் சுட்டிக்காட்டும் போதும், 'உன்குலம் ஈனம்' என்னும் போதும், தப்புக்கள் நிரம்பச் செய்யும்போதும், நீண்ட சத்துருக்களாலும், களவு பொய் முதலியவற்றை நடத்தும்போதும், மானச்சொல் பேசும்போதும், பொன் திருட்டு நடத்தும்போதும், வெகுளி (கோபம்) தோன்றும்.

உறுப்பிலரிடம் பேசுதலாலும், குலமில்லாதவர் பெருமையைப் பேசுதலாலும், மனத்தில் நினைத்தவை கிடைக்காமற் போனாலும், ஆயுதங்களால் கொலை நிகழுமிடத்தும் வெகுளி உண்டாகும்.

வாது பேசுதல், மடிதனைப் பிடித்துச் (சண்டைக்கு) இழுக்கும் போதும், சூதாடுமிடத்தும், வைதல், சொற்பிழைத்தல், மதம் இவற்றாலும், மதபேதத்தால் முயற்சியைத் தடுக்கும்போதும் வீரம் (கோபம்) விளையும்.

8. உவகைரசம்

மெய்யுறு மூவகை யின்ப ரசமது விளம்பக் கேளீர்
தெய்வநன் னூல்க ளாலுஞ் சேருநற் புணர்ச்சி யாலும்
தையலார் விளையாட் டெய்துந் தயவினுஞ் சார்த்த லாலும்
பொய்யிலா வுவகை தோன்றும் பொருவில்மெய்ப் பாடு கல்வி

505-7. இவற்றுள் வெகுளியே இங்குக் கூறப்பட்டது காண்க.

தொல்: மெய்ப்: (258) வெகுளி:

உறுப்பறை குடிகோள் அலைகோலை யென்ற
வெறுப்பின் வந்த வெகுளி தானே

கல்வியாற் றிரையான் மிக்க கலியாணஞ் செய்த லாலும்
திலகமின் னர்பாற் கூடுஞ் செய்கையைச் செப்பும் போதும்
மலடிருந் தேக காளாய் மைந்தரைப் பெறுத லாலும்
நிலைமை நிட்சேபங் கண்ட நேர்மைசந் தோஷம் பொன்னே.

உவகை - மகிழ்ச்சி.

உவகை : தெய்வ நூல்கள், புணர்ச்சி, தையலர் விளையாட்டால் வந்தடைதல், இவற்றால் உவகை பிறக்கும்.

இன்னும், கல்வி, கலியாணம் செய்தல், மின்னர் கூடும் செய்கையைச் செப்பும்போது, நீண்டநாள் கழித்து மைந்தரைப் பெறுதல், புதையல் காணல், இக்காலங்களில் சந்தோஷ முண்டாகும்.

9. சாந்திரசம்

பொன்னணி மாதே சாந்தி பொருந்துசாத் வீகத் தாலும்
மன்னுசாத் திரங்க ளாலு மருமையி னேரி லாலும்
துன்னுசத் துருக்கள் தோன்றித் தொடர்நெருக் குற்ற தாலும்
அன்னியர் பொருமை யாலும் விளம்புவர் சாந்தி தானே.

சாந்தி - சமநிலை.

சாந்தி : சாத்துவிகம், சாத்திரங்களின்ஞானம், அருமை உணர்ச்சி, பகை, அன்னியர் பொருமை, இவை சாந்தி நிலைக்குக் களன்களாகும்.

நவரசபேதப் பிகரணம் முற்றும்.

முதலாவது அத்தியாயம்
நாட்டிய உபயோக அவயவபேத விநியோக லக்ஷணம்
மு ற் று ம்.

508-9. தொல் : மெய்ப் : 259

செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்லல் நீத்த உவகை தான்கே.

510. தொல் : மெய்ப் : 251 (பேராசிரியர் உரை) " மற்றிவ் வெட்ட னெடு சமநிலை கூட்டி ஒன்பதென்ஞமோ நாடக நூலும் போலவெனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறிய திலனென்பது ; அதற்கு விகார முண்டெனின் முன்னே எட்டனுள்ளும் சார்த்திக்கொள்ளப்படும். அஃதல்லதூஉம் அஃதுலகியல் நீங்கினூர் பெற்றியாகலின், ஈண்டு உலக வழக்கினுட் சொல்லியதிலனென்பது "

இரண்டாம் அத்தியாயம்

மூகூர்த்தாதி எழுவகைத் தோற்ற அபிநய லக்ஷணம்

காலத்தின் அபிநயம்

ஞாயிறல பல்லவந் திங்களிற் கர்த்தசசி
நற்றிரி பதாகஞ் செவ்வாய்
நாடுபுதன் சந்தம்ச மாஞ்சிகரம் வியாழஞ
நவில்வெள்ளி யேப தாகம்
ஆயசனி முட்டியா நிமிஷமே சந்தம்சம்
தன்னுமரை நாழி கைக்குச்
சொல்லுமே கரமரித்த சூசியா யொருநாழி
கைக்கோது மேசூ சியாய்ச்
சாயா தொருகடை யுமொரு ஜாமமம்
சாசிய நாளி னிற்கும்
தங்காத சூசியா மயனமொடு வருடம்
பதாக மாகப் புகலுமென்
ரோயாம லேவருங் காலபே தங்களுக்
குற்றிடுங் கரம றிந்தும்
உறுதியாய்ப் பரதவகை முறைய தாகவே
நந்தியோ தினனறிந்து கூறே. 511

ஞாயிறு - அலபல்லவம். திங்கள் - அர்த்த சந்திரன். செவ்வாய் - திரிபதாகம். புதன் - சந்தம்சம். வியாழன் - சிகரம். வெள்ளி - பதாகம். சனி - முட்டி. நிமிஷம் - சந்தம்சம். அரை நாழிகை - அர்த்த சூசி. ஒரு நாழிகை - சூசி. ஜாமம் - அம்சாசியம். நாள் - சூசி. அயனம், வருடம் - பதாகம்.

இது, நந்தி கூறியது.

---

511. வாரங்களின் அபிநயம் பின் 540ல் வேறுவிதமாகக் கூறியுள்ளது.



1. யுகாபிநயம்

கிருதயுகம்

சீர்வளர் யுகந்த னக்குச் செப்புங்கை விவரிக் கேண்மின்
தார்புகழ் வாமக் கைப தாகமாய்ச் சிகரக் கையும்
ஏர்எக்ஞ சூத்தி ரம்போ லியம்புத க்ஷிணத்தாற் காட்டில்
வாருடைத் தனத்தி னுளே வருகிருத யுகம தாமே. 512

1. கிருதயுகம்: இடக்கையைப் பதாகமாக்கி, சிகரக்கையை யஞ்ஞ சூத்திரம்போல் வலக்கையால் காட்டல்.

திரேதாயுகம், துவாபரயுகம்

பதாகமே தாக்ஷி ணக்கை பகர்சிக ரம்வா மக்கை
அதோமுக மாய்ப்பி டிக்கி லதுதிரே தாயு கம்மே
சுதாகட காமு கத்தைச் சொல்த க்ஷிணமம் சாசியம்
நிதானவா மத்தாற் காட்டி னிகழ்துவா பரம தாமே. 513

2. திரேதாயுகம்: வலக்கையைப் பதாகமாக்கி இடக்கையால் சிகரக்கையை அதோமுகமாகப் பிடித்தல்.

3. துவாபரயுகம்: வலக்கை கடகாமுகம், இடக்கை அம்சாசியம், இவ்வாறு காட்டல்.

கலியுகம்

தக்ஷிண சூசி யாகுஞ் சிகரமே வாம மாகும்
நிச்சய மாகத் தானே கலியுக நிகழ்த்து மென்ப
மெச்சிய விகத்து ளோர்க்கு மேவின யாக்ஞ வல்கர்
பக்ஷமாய்ப் பரத நூலிற் பகர்ந்ததைக் கண்டு கொள்ளே.

4. கலியுகம்: வலக்கை சூசி, இடக்கை சிகரமாகப் பிடித்தல்.

இவை யாஞ்ஞவல்கியர் கூறியன.

யுகாபிநயம் முற்றும்.

2. வருடாபிநயம்

பிரபவ திரிப தாகை பேசுமே விபவாண் டிற்கு
வருங்கர்த் தரீ மு கக்கை சுக்கில தபித்த மற்றும்
பிரமோதூ தப்ப தாகை பின்னுமப் பிரசோற் பத்திக்
கருமைசேர் கைய தாகு மர்த்தப தாக மென்றே. 515

ஆங்கீர சாமு சாஸ்ய மாகுமே ஸ்ரீமு காண்டில்
தாங்குமே சிகரக் கையாய்த் தனிபவ வருடத் திற்க
தாங்கட காமு கக்கை சரியுவ முட்டிக் கையா
மாங்கையாய்த் தாதாண் டிற்கேபர்த் தசத் திரனென் றேதே

காணீச் சுரச்சி லிட்டக் கடகாமு கக்கை யாகும்
கோணிலா வெகுதான் யாலாங் கூலமே பிரமா திக்குத்
தோணுமே யம்ச பட்சம் விக்ரம சுகதுண் டக்கை
பூணுடை விசுவாண் டிற்குப் பொருந்துந்தூ பக்கை யென்றே

சித்திர பானு பத்ம கோசமாஞ் சுபானு சேரப்
பத்திய சிலிட்ட சந்த்ரன் பகர்தாரு ணண்டி னுக்குத்
தத்துந்தா பரசங் கம்பார்த் திபவாண்டு முகுள சங்கம்
கொத்துறும் வியவாண் டிற்குக் குஞ்சிதக் கையென் றேதே.

சருவசித் துச்சந் தம்சம் சர்வதா ரிக்குக் கையாய்
அருமைசே ருஞ்சி லிட்ட வம்சாஸ்யம் விரோதிக் காகும்
பெரும்பாசம் விகுரு திக்குப் பிரமரக் கைய தாகும்
தருகர வருடத் திற்குத் தாம்பிர சூட மாமே. 519

நந்தன வருடத் திற்கு நவிலுமே கைசி லிட்ட
சந்தம்சம் விஜய வாண்டு சாலீயம் ஜயவாண் டிற்குச்
செந்திரு கஜமு கம்மன் மதசிம்ம முகமே யாகும்
சொந்ததுன் முகிசி லிட்ட சுகதுண்டக் கையாய்ச் சொல்லே.

ஏர்விளம் பிக்குப் பிரம்மக் கையாகு மினிவி ளம்பி
தேர்மண்டு கம்வி காரி சிலிட்டலாங் கூல மாகும்
சார்வரி பதும சங்கந் தனிப்லவ வலபத் மக்கை
தார்சுப கிருது வுக்குச் சதுரக்கை யர்மென் றேதே. 521

கேள்சோப கிருதுக் குச்சங் கீர்ணகாங் கூல மாகும்
வாள்குரோ திக்குக் கையாய் வருஞ்சிலீ முகம தாக
நீள்விசு வாவ சுக்கு நேர்மிரு கசீரி டக்கை
ஆள்பரா பவவாண் டிற்கே யபயமும் வரத மாமே. 522

பிலவங்க டமரு கக்கை பேசுங்கீ லகவாண் டுக்குத்
துலங் குஞ்சு வத்தி கக்கை சொல்லுஞ்சௌ மியவாண் டுக்குச்
சிலிட்டவ ராளக் கையாய்ச் செலுஞ்சாதா ரணவாண் டுக்குச்
சொலுஞ்சர்ப்ப சீரி டக்கை தோகைநீ யறிந்து கூறே. 523

விரோதி கிருதும தாந்திர தாம்பிர சூடம் விள்ளும்
பரிதாபி முகுளக் கையாய்ப் பகர்பிர மாதீச் சாவிற்
கருமையாங் கடகாவர்த்த னமதாகு மானந் தாண்டு
பெருமைசேர் கபோதக் கையாய்ப் பேசலா நூலை யாய்ந்தே.

தனியிராக் கதவாண் டிற்குச் சந்தான சிகர பந்தம்
முனிகள விலதை யாகு மூட்டுபிங் களவாண் டிற்கு
வினயமா மூர்ணு பக்கை விள்ளுமே கால யுத்தி
கனியுமிந் நூலாற் பிண்டிக் கையென வோது மாதே. 525

சித்தார்த்தி திரிலிங் கக்கை செப்புமே ரௌத்தி ரிக்கு
வைத்தவக் கினிக்கை துன்ம திக்காகு மகரக் கையாய்
யுத்ததுந் துபிக்கு நாக பந்தக்கை யுரிமை யாமு
ருத்திரோற் காரி பாணு வத்தமென் றோது மானே. 526

கருதுமி ரத்தாட் சிக்குச் சந்திர களாவத் தமாகும்
குரோதன வருடத் திற்குக் கூறுமே மவுரி சங்கம்
தெரிவையே யட்ச யாவிற் கஞ்சலி யத்த மென்ன
வருடக்கை யியல்பா மிந்நான் மதத்தினில் வருமென் பாரே.

60 வருஷங்களுக்குரிய கைகள்
செய்யுட்கள் (515 - 527)

வருஷம்	கை	வருஷம்	கை
1 பிரபவ	திரிபதாகை	31 ஹேவிளம்பி	பிரம்மம்
2 விபவ	கர்த்தரீமுகம்	32 விளம்பி	மண்டூகம்
3 சுக்ல	கபித்தம்	33 விகாரி	சிலிட்டகாங்கூலம்
4 ப்ரமோதூத	பதாகை		
5 ப்ரஜோத்பத்தி	அர்த்தபதாகம்	34 சார்வரி	சங்கம்
		35 பல்வ	அலபத்மம்
6 ஆங்கிரஸ	அமுசாசியம்	36 சுபக்ருது	சதுரம்
7 ஸ்ரீமுக	சிகரம்	37 சோபக்ருது	சங்கீரணகாங்கூலம்
8 பவ	கடகாமுகம்		
9 யுவ	முட்டி	38 க்ரோதி	சிலீமுகம்
10 தாது	அர்த்தசந்திரன்	39 விச்வாவசு	மிருகசீரிடம்
		40 பராபவ	அபயவரதம்
11 ஈசுவர	சிலிட்டகடகாமுகம்	41 ப்லவங்க	டமருகம்
12 வெகுதான்ய	காங்கூலம்	42 கீலக	சுவத்திகம்
13 ப்ரமாதி	அம்சபக்ஷம்	43 ஸௌம்ய	சிலிட்டவரகளம்
14 விக்ரம	சுகதுண்டம்		
15 விஷு	தூபம்	44 ஸாதாரண	சர்ப்பசீரிடம்
16 சித்ரபானு	பத்மகோசம்	45 விரோதிக்ருது	மதாந்திரதாம் பிரசூடம்
17 சுபானு	சிலிட்டசந்திரன்		
		46 பரீதாபி	முகுளம்
18 தாரண	சங்கம்	47 ப்ரமாதீச	கடகாவர்த்தனம்
19 பார்த்திப	முகுளசங்கம்		
20 வ்யய (விய)	குஞ்சிதம்	48 ஆனந்த	கபோதம்
21 சர்வஜித்	சந்தம்சம்	49 ராக்ஷஸ	சிகரபந்தம்
22 சர்வதாரி	சிலிட்டஅம்சாசியம்	50 அநல (நள)	இலதை
		51 பிங்கள	பூர்ணநாபம்
23 விரோதி	பாசம்	52 காளயுக்தி	பிண்டி
24 விக்ருதி	பிரமரம்	53 லித்தார்த்தி	திரிலிங்கம்
25 கர	தாம்பிரசூடம்	54 ரௌத்ரி	அக்னி
26 நந்தன	சிலிட்டசந்தம்சம்	55 துன்மதி	மகரம்
		56 துந்துபி	நாகபந்தம்
27 விஜய	சாகீரயம்	57 ருதிரோத்காரி	பாணம்
28 ஜய	கஜமுகம்		
29 மன்மத	சிம்மமுகம்	58 ரக்தாக்ஷி	சந்திரகளா
30 துர்முகி	சிலிட்டசுகதுண்டம்	59 க்ரோதன	சங்கம்
		60 அக்ஷய	அஞ்சலி

வருடாபிநயம் முற்றும்.

3. அயநாபிநயம்

அயனத்தி னபிந யந்தான ருளுத்த ராய ணத்திற்
நியம்புதகஷி ணக்கை சூசி யேகுமுத் வேஷ்டி தத்தால்
நயம்பெறச் சுற்றி வாமக் கைப்புற நாடி நிற்நில்
சயம்பெறு பரத நூலிற் சாற்றினர் திசையு ளோர்க்கே.

தெக்கணு யனத்தின் பாவந் திசைகொளும் வாமக் கையை
நிற்கவே சூசி யாக்கி நிலைசுற்றித் தகஷி ணத்தின்
பக்கமே சாயச் செய்தல் பகருமவ் வயனத் தின்கை
மிக்கவத் திரிம தத்தில் விளம்பினர் பரத நூலில். 529

அயனங்களுக்குக் கைகள்

உத்தராயணம்: வலக்கையைச் சூசிக்கையாக்கி உத்வேஷ்டிதமாகச் சுற்றி, இடக்கைப்புறத்தை நாடி நிற்கச் செய்தல்.

தக்ஷிணயனம்: இடக்கையைச் சூசியாக்கிச் சுற்றி வலக்கையின் பக்கத்தில் சாயச் செய்தல்.

இது, அந்திரி கூறியது.

அயநாபிநயம் முற்றும்.

---

4. ருதுவின் அபிநயம்

வசந்தமா மராளக் கையை வாமபா கத்தி லாட்டி
நிசந்தரு பதாகங் கூட்ட நிகழ்வசந் தவிருது வாகும்
பசையிரு பதாகக் கையை மேல்கீழாய்ப் பகுந்து நீட்டில்
அசைவிலா விருது கீஷ்ம மாகுமென் றறிந்து கொள்ளே.

இருகரமம் சாசி யத்தை யேத்திமேற் சலன மாக்கி
வருமொரு பதாகத் தாலே வருஷமாம் ருதுவு மென்பர்
கரமிரு பதாகத் தாலே கைகாட்டி யாட்டி நின்றால்
சரற்கால ருதுவா மென்று சாற்றினர் பரத நூலோர். 531

வாமதகஷி ணத்தி னுலே வளர்திரி லிங்கக் கையால்
வமந்த ருதுவா மென்ப ரியல்சிசி ருதுவுக் கேதான்
சேமப்பி ரேரி தச்சூ சிக்கரந் திரிலிங் கம்மாம்
சோமநா தன்ம தத்திற் சொல்லுவ தறிந்து செய்யே. 532

பருவகால அபிநயங்கள்

1. வஸந்தருது (சித்திரை—வைகாசி): இளவேனில்—அரளக் கையை இடப்பக்கத்தில் ஆட்டிப் பதாகங் கூட்டல்.

2. கிரீஷ்மருது (ஆனி—ஆடி): முதுவேனில்—இரு பதாகக் கைகளை மேல்கீழாய்ப் பதிர்ந்து நீட்டல்.

3. வர்ஷருது (ஆவணி—புரட்டாசி): கார்—இரண்டு கைகளில் அம்சாசியங்களை ஏற்றிச் சலனமாக்கி, ஒரு பதாகத்தால் நிறுத்துவது.

4. சரத்ருது (ஐப்பசி—கார்த்திகை): கூதிர்—இரு பதாகங் களைக் காட்டி ஆட்டல்.

5. ஹேமந்தருது (மார்கழி—தை): முன்பனி
6. சிசிரருது (மாசி—பங்குனி): பின்பனி

} இரு கைகளைத் திரிலிங்கமாகப் பிடித்தல். ப்ரேரித சூசிக் கரம், திரிலிங் கம்.

இது, சோமநாதன் மதம்.

ருது அபிநயம் முற்றும்

---

5. மாதங்களின் அபிநயம்

சித்திரை மாதத் திற்குச் சிலிட்டல பதுமக் கையாம்
பத்தும்வை காசி சிலிட்டப் பதாகமா மானி மாதம்
யுத்தசந் திரனு டிக்கு யோதுமென் னிலைக்கை யாகச்
சுத்தவா வணிக்குக் கையாய்ச் சொல்லுவர் சூசி யென்றே.

புரட்டாசி வற்சி தக்கை யைப்பசி மண்ட லம்பேர்
பெருங்கார்த் திகைக்குக் கூர்மம் பேசுமார் கழிக்குப் பல்லிக்
கரமர்த்த முகுளந் தையா மர்த்தசூ சிக்கை மாசிக்
கருள்வக்கிர சூசி மீனுக் கறைத்தனன் றசமு கன்ரூன். 535

மாதங்களின் கைகள்

மாதம்	கை	மாதம்	கை
சித்திரை	சிலிட்டஅலபதுமம்	ஐப்பசி	மண்டலம்
வைகாசி	சிலிட்டபதாகம்	கார்த்திகை	கூர்மம்
ஆனி	யுக்தசந்திரன்	மார்கழி	பல்லி
ஆடி	மென்னிலை	தை	அர்த்தமுகுளம்
ஆவணி	சூசி	மாசி	அர்த்தசூசி
புரட்டாசி	வர்ச்சிதக்கை	பங்குனி	வக்கிரசூசி

இவை, இராவணன் சொன்னவை.

மாதங்களின் அபிநயம் முற்றும்.

---

6. பக்ஷத்தின் அபிநயம்

வாமக்கை பிறைக்கை யாக்கி வானத்தை நோக்கு மற்ற
நேமக்கைச் சந்தம் சம்மாய் நிகழ்சுக்கில பட்ச மென்பர்
ஆமது பூர்ண நாபக் கரமதி லர்த்த சந்த்ரன்
தாமதை மறைக்கிற் கிருஷ்ண பட்சமாய்ச் சாற்று நூலே.

சுக்கிலபக்ஷம்: இடைக்கையைப் பிறைக்கையாக்கி, வானத்தை நோக்க வைத்து, வலக்கையைச் சந்தம்சமாக நிறுத்தல்.

கிருஷ்ணபக்ஷம்: பூர்ணநாபக்கையில் அர்த்தசந்த்ரக்கையை மறைத்தல்.

பக்ஷங்களின் அபிநயம் முற்றும்.

---

7. திதிகளின் அபிநயம்

அரிவையே திதிபத் தைந்திற் கத்தங்கே ளாய்ச்சி லிட்ட
பிருகசீ ரிடக்கை யாக மேவுமே பிரத மைக்கங்
கருமைசேர் துதிகைக் கர்த்த சதுரமத் திரிதி யைக்குப்
பெருமைசே ருஞ்சி லிட்டப் பிரமரக் கையென் றோதே. 536

கொடும்வியாக் கிரஞ்ச துர்த்தி கூறும்பஞ் சமிம யூரம்
நிடுசட்டிப் பார்வை சந்தம் சமதாஞ் சத்த மிக்கு
நடுவதா மர்த்த முட்டி நவிலட்ட மிக்குக் கூர்மம்
அடிதொழு நவமி சிலிட்ட வம்சபட் சக்கை யாமே. 537

தசமிவிச் சிலிட்டக் கையாய்ச் சாற்றுமே காத சிக்கு
வசைசிலிட் டக்க பித்தம் மருவுந்து வாத சிக்கே
அசைவிலா தோது மானே யர்த்தக பித்த மென்றும்
திசைகொடி ரயோத சிக்குச் சிலிட்டமு குளம்ம தாமே. 538

சதுர்த்தசி தனக்கு வக்ர திரிபதா கையதாய்ச் சாற்றும்
அதிதிசே ரமாவா சைக்கு அக்கினிக் கைய தாகும்
நிதிகொளும் பூர ணைக்கு நேர்பூர ணக்கை யாகும்
கதிகொளக் காசி பன்றன் மதத்தினிற் சாற்று நூலே. 539

திதிகளின் அபிநயங்கள்

திதி	கை	திதி	கை
பிரதமை	சிலிட்டமிருகசிரிடம்	சதுர்த்தி	வியாக்கிரம்
த்விதீயை	அர்த்தசதுரம்	பஞ்சமி	மயூரம்
த்ருதீயை	சிலிட்டபிரமரம்	ஷஷ்டி	சந்தம்சம்

திதி	கை	திதி	கை
சப்தமி	அர்த்தமுட்டி	துவாதசி	அர்த்தகபித்தம்
அஷ்டமி	கூர்மம்	த்ரயோதசி	சிலிட்டமுகுளம்
நவமி	சிலிட்டஅம்சபடீசம்	சதுர்த்தசி	வக்ரதிரிபதாகை
தசமி	விச்லிட்டக்கை(?)	அமாவாசை	அக்கினி
ஏகாதசி	சிலிட்டகபித்தம்	பௌர்ணமி	பூரணக்கை

இது, காசிபன் மதம்.

திதிகளின் அபிநயங்கள் முற்றும்.

8. வாரங்கள் கிரகங்கள் இவற்றின் அபிநயம்

சொல்லுமே ஞாயி றுக்குச் சூசியைச் சுற்றிக் காட்ட
வல்லுடை மதிக்குச் செங்கை யர்த்தசந் திரன்செவ் வாய்க்கு
செல்சிலிட் டமயூ ரக்கை புதன் சிலிட்ட கர்த்த ரிக்கை
கல்விசேர் வியாழ னுக்குச் சிலிட்டலாங் கூலக் கையே. 540

வெள்ளிக்குச் சிலிட்ட சந்த்ரன் விளம்பலா மந்த னுக்கு
வள்ளிதா மிரேகா சந்த்ரன் வளராகு சுகதுண் டக்கை
பள்ளிகே துவுக்கு முட்டிக் கைசுக்ர பரத நூலில்
விள்ளுமிக் கிழமை கட்கு நவக்கோள்களுக்கு மென்றே. 541

வாரங்கள்—கிரகங்கள்

ஞாயிறு	(சூரியன்)	சூசியைச் சுற்றிக்காட்டல்
திங்கள்	(சந்திரன்)	அர்த்தசந்திரன்
செவ்வாய்	(அங்காரகன்)	சிலிட்டமயூரம்
புதன்	(புதன்)	சிலிட்டகர்த்தரி
வியாழன்	(குரு)	சிலிட்டலாங்கூலம்
வெள்ளி	(சுக்கிரன்)	சிலிட்டசந்திரன்
சனி		ரேகாசந்திரன்
இராகு		சுகதுண்டம்
கேது		முட்டிக்கை

இவை, சுக்கிரபரதநூலில் உள்ளவை.

வாரங்கள் கிரகங்கள் இவற்றின் அபிநயம் முற்றும்.

இக்குக் கூறப்பட்ட வாரங்களின் அபிநயங்கள் முன் 511ல் வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளன. கிரகங்களின் அபிநயம் பின் 556-560 பாடலிலும் கூறப்படும்.

9. நக்ஷத்திரங்களின் அபிநயம்

பாரினி லசுப திக்குப் பகர்தாம்ப்ர சூட மாகும்
நேர்பர ணிக்கை சந்த நிகழ்சுக துண்ட மாகும்
ஆரற்குத் திரிப தாகை யாகுமூ ரோக ணிக்குச்
சீர்சிலிட் டமுகு ளந்தான் சேர்க்கையென் றறிந்து கொள்ளே

கொள்ளவே மும்மீ னுக்காங் கூறிய காங்கூ லக்கை
விள்ளுமா திரைக்கு ரேகை யாமென்பர் புநர்த நாட்குத்
தள்ளவே லீன முத்தி ரைக்கையாய்ச் சாற்றும் பூசம்
தெள்ளிய சலன பட்சஞ் சேர்ந்துரைத் தனர்நூல் வல்லோர்.

வல்லவா யிலிய நாட்கு வளர்சக்க ரைக்கை யாகும்
கல்லசேர் மகநாட் காகுங் காங்கூலக் கையே பூரம்
சொல்லிய தாம்ப்ர சூடஞ் சுழல்சிக ரக்கை தன்னீ
நல்லவுத் தரத்திற் கென்று ரவிலுவர் பரத நூலோர். 544

நூலாய்ந்த வத்தத் திற்கு நுவல்சலி தப்ப தாகை
காலமாஞ் சித்தி ரைக்குச் சலிதசந் தம்ச மாகும்
பாலெனுஞ் சோதி நாட்குப் பகர்கட காமு கக்கை
கோலமாஞ் சலித பத்ம கோசம்வி சாகத் திற்கே. 545

அனுடமா முட்டி சூசி யாகுமே கேட்டை நாட்கு
வினவக்கீழ் நோக்கு முத்து வேஷ்டித பதும கோசம்
மனமேகேண் மூல மர்த்த பதாகமங் குசம்போற் காட்டல்
கனமுறு பூரா டத்திற் காகுச மிக்ஞைக்கை யென்றே. 546

என்றுமா னிக்கு முயுத்த சந்திர ரேணத் திற்கு
மன்றிய கைச்ச லித்த மயூரமா மவிட்டத் திற்குக்
குன்றிய முகுள மாகுங் கூறிய சதய நாளுக்
கொன்றிய சூசிக் கையா யுற்றுநின் மனத்துட் டேரே. 547

தேர்ந்தபூ ரட்டா திக்காஞ் சங்கீர்ண பதாகச் செங்கை
ஆர்ந்திடு முத்திரட் டாதிக் காகுஞ்சு வத்தி சூசி
சேர்ந்தரே வதிக்கி யாணத் தந்தமாய்ச் செப்பு நூலிச்
சாரவே வசிஷ்டர் தாமுஞ் சாற்றின ரறிந்து கொள்ளே. 548

நக்ஷத்திரங்களின் கைகள்

செய்யுட்கள் 542—548.

நக்ஷத்திரம்.	கை.	நக்ஷத்திரம்.	கை.
அசுவினி	தாம்பிரசூடம்	அனுஷம்	முட்டி
பரணி	சுகதுண்டம்	கேட்டை	சூசி
கிருத்திகை	திரிபதாகை	மூலம்	கீழ்நோக்கும் உத்வேஷ்டித பதும கோசம்
ரோகிணி	சிலிட்டமுகுளம்		
மிருகசீரிடம்	காங்கூலம்		
திருவாதிரை	ரேகை	பூராடம்	அர்த்தபதாகம் அங்குசம்போல் காட்டல்
புனர்பூசம்	லீனமுத்திரை		
பூசம்	சலனபட்சம்		
ஆயில்யம்	சக்கரம்	உத்திராடம்	யுக்த சந்திரன்
மகம்	காங்கூலம்	திருவோணம்	சலித்த மயூரம்
பூரம்	தாம்பிர சூடம்	அவிட்டம்	முகுளம்
உத்திரம்	சிகரக்கை	சதயம்	சூசி
ஹஸ்தம்	சலிதப்பதாகை	பூரட்டாதி	சங்கீர்ணபதாகம்
சித்திரை	சலித சந்தம்சம்	உத்திரட்டாதி	சுவத்திக சூசி
சுவாதி	கடகாமுகம்	ரேவதி	யாணத் தந்தம்
விசாகம்	சலித பத்ம கோசம்		

இவை, வசிஷ்டர் கூறியவை.
நக்ஷத்திரங்களின் அபிநயம் முற்றும்.

---

10. யோகங்களின் அபிநயம்

கரப்பிர விசார மென்னுக் துவாதசப் பிராணக் கைமில்
தருசங்கே தக்கை யாலே சாரும்வி ஷ்கம்ப மாதி
பெருகுயோ கங்க ளுக்குப் பேணிக்கை பிடிப்ப தென்றே
பரதத்திற் சார்ஞ் தேவர் பகர்ந்தன ரிதுவா மென்றே. 549

யோகங்கள் விஷ்கம்பம் முதலான 27. இவற்றிற்குக் கரப்பிர விசாரம் என்னும் துவாதசப் பிராணக் கைகளிற் சாரும் சங்கேதக் கைகளாலே அபிநயம் காட்டுக.

இது, சார்ங்கதேவர் கூறியது.
யோகங்களின் அபிநயம் முற்றும்.

---

11. கரணங்களின் அபிநயம்

கரணங்கள் பதினொன் றிற்குங் கருதுவோம் பவசிங் கத்திற்
கொருகைசிங் கமுக மற்று மொருகைவி யாக்கி ரமாகும்
வருபால வம்பு லிக்கு விருகை வியாக் கிரமாய் வைத்தல்
தருகவு லவம்பன் றிக்குச் சாற்றும்வ ராகக் கையே. 550

தைதிலக் கழுதைக் கஞ்ச லிக்கையாங் கரசை யானைக்
கெதிர்க்கரி யஸ்த மாகும் வணிசையா மெருத்தி னுக்குப்
பதிசிம்ம முகக்கை யாகும் பத்திரை கோழிக் குக்கை
விதிகொளுந் தாம்ர சூடக் கையென விளம்பு மாதே. 551

சகுனிகாக் கைக்குக் கையம் சாசியம் சதுட்பா தம்நாய்
துகையிலா தோது மேகை சிலிட்டப தாகஞ் சூட்டும்
தகைநாக வம்பாம் பிற்குச் சர்ப்பசீ ரிடக்கை யாகு
மகிம்த்துக் கினமெ லிக்கு வர்த்தசூ சிக்கை மானே. 552

கரணங்களுக்குக் கைகள்

செய்யுட்கள் 550—552.

	சரகரணங்கள்.		கை.
1	பவம்	(சிங்கம்)	ஒரு கை, சிங்கமுகமும், மற்றொரு கை, வியாக்கிரம்
2	பாலவம்	(புலி)	இருகைகளும் வியாக்கிரம்
3	கௌலவம்	(பன்றி)	வராகக்கை
4	தைதிலம்	(கழுதை)	அஞ்சலிக்கை
5	கரசை	(யானை)	கரி அஸ்தம்
6	வணிஜை	(எருத்து)	சிம்மமுகம்
7	பத்ரம்	(கோழி)	தாம்பிர சூடக்கை
	ஸ்திரகரணங்கள்.		
8	சகுனி	(காக்கை)	அம்சாசியம்
9	சதுஷ்பாதம்	(நாய்)	சிலிட்டபதாகம்
10	நாகவம்	(பாம்பு)	சர்ப்பசீரிடம்
11	கிம்ஸ்துக்னம்	(எலி)	சூசி

கரணங்களின் அபிநயம் முற்றும்.

12. லக்னங்களினபிநயம்

ஆடுகாங் கூல மேறுக் காகுமே சிகரக் கையாய்
நீடிய மிதுனத் திற்கு நேர்சூசி சுகதுண் டக்கை
நாடிய நண்டிற் காகு நல்லரி கீழ்நோக் குற்றுத்
தேடிய வரிமு கந்தான் றெரிவைக்கு மிருகச் சென்னி. 553

சென்னிநேர் துலைக்குக் கையாஞ் சீர்கல சந்தே ளுககுப்
பன்னிய நண்டா குஞ்சா பத்திற்குச் சதுர மாகும்
முன்னுமஞ் சலிசு ரூவா யுறுகும்பம் பதும கோசம்
மன்னுமீன் றிரிப தாகை வகுத்தனர் பரத நூலோர். 554

பரதநூல் வியாசர் சொன்ன பன்னிரு ராசி தன்னைத்
திரமதா யூகத் தோடு சிறக்கவே யிருகை யாலே
பெருமையா யபிந யித்துப் பேசுங்கா லன்னே ரெல்லாம்
அருமைசேர் மகிழ்வினுலே யானந்த மடைவர் பாரே. 555

லக்னங்களினபிநயம்

	லக்கினம்.		கை.
1	மேஷம்	(ஆடு)	காங்கூலம்
2	ரிஷபம்	(ஏறு)	சிகரம்
3	மிதுனம்	(இரட்டை)	சூசி
4	கடகம்	(நண்டு)	சுகதுண்டம்
5	சிம்மம்	(அரி)	அதோமுகமான சிம்ம முகம்
6	கன்னி	(தெரிவை)	மிருகசீரிடம்
7	துலாம்	(துலை)	கலசக்கை
8	விருச்சிகம்	(தேள்)	கர்க்கடகக்கை
9	தனுசு	(சாபம்)	சதுரக்கை
10.	மகரம்	(சுரு)	அஞ்சலி
11.	கும்பம்	(குடம்)	பத்மகோசம்
12	மீனம்	(மீன்)	திரிபதாகை

இவை, வியாசர் கூறியவை.

லக்னங்களின் அபிநயம் முற்றும்.

13. நவக்கோள்களினபிநயம்

ஓமெனுங் கழுத்து வாகுக் குகந்தெதிர் கபித்தக் கையு
மாமல பதுமக் கையு மமைப்பது பானு வாகும்
வாமத்திற் பதுமக் கையாய் வலத்தினிற் பதாகம் வைத்தான்
மாமதிக் காகுமென்று வழுத்தினர் பரத நூலோர். 556

நூலினி லுரைத்த வாம நோக்குங்கை சூசி யாக்கி
மேல்வல முட்டி யாக்கு வித்தது செவ்வா யாகும்
கோலமா மிடது பக்கங் கூட்டிய முட்டிக் கையோ
டேலவே வலது கைப்ப தாகமே புதனுக் கென்பாம். 557

புதனென்ற குருவுக் கேதான் பொருந்திய சிகரம் ரண்டு
மிதமுள வெக்ஞ சூத்ரம் போலவே யியம்ப லாகு
மதிவல மிடமாங் கைக ளானதைக் கீழு மேலு
மதியுடன் முட்டி யாக்க வாமமாஞ் சுங்க னுக்கே. 558

வாமத்திற் சிகரம் வைத்து வலக்கைத்தி ரிசூலம் வைத்தால்
நேமமாம் சனியென் றோதி நிகழ்த்திடும் சர்ப்ப சீர்ஷம்
வாமத்தில் வைத்து சூசி வலக்கையி லேபி டித்தாற்
சேமமி ராகு விற்கே செப்பினர் பரதத் தோரே. 559

பரதத்தி லாய்ந்து ணர்ந்த் பாவக்கை யறிந்து மொண்பாண்
கிரகமாங் கேது விற்கே கிளம்பிய வலக்கை தன்னில்
அருத்தப தாகை யாக்கி யதனிட வத்தஞ் சூசி
உரைத்தவா னதிபு னைந்தோ னுகம தறிந்து செய்யே. 560

நவக்கிரகங்களின் அபிநயம்
செய்யுட்கள் 556—560

சூரியன் —கழுத்துக்கும் புஜத்திற்கும் எதிரே கபித்தக்கையையும் அலபத்மக்கையையும் நிறுத்துதல்.

சந்திரன் —இடத்தில் பதுமக்கையும் வலத்திற் பதாகமும் வைத்தல்.

செவ்வாய்—இடக்கை சூசியாக்கி, வலக்கை முட்டியாக்கி வைப்பது.

புதன் —இடக்கை முட்டியும், வலக்கை பதாகமும் ஆகும்

வியாழன் —இரண்டு சிகரக்கைகளே யஞ்ஞசூத்ரம்போல் வைப்பது.

வெள்ளி —வலமிடக்கைகளைக் கீழும் மேலும் முட்டிக்கைகளாக வைத்தல்.

சனி —இடக்கை சிகரமும், வலக்கை திரிசூலமும் வைத்தல்.
இராகு —இடத்தில் சர்ப்ப சிரஷமும் வலத்தில் சூசியும் வைத்தல்.
கேது —வலக்கை அர்த்த பதாகை, இடக்கை சூசி.

இவை, கங்காதரன் கூறியவை.

நவக்கோள்களின் அபிநயம் முற்றும்.

குறிப்பு—கோள்களின் அபிநயம் முன் 540-541ல் கூறப்பட்டது.

முகூர்த்தாதி அபிநயம் முற்றும்.

ஸ்தாவராதி அபிநயம்

1. உலகங்கள்

பூலோகம் புவர்லோகம்

சீலமாம் பதாகந் தன்னை யதோமுக மாகப் பற்றப்
பூலோகத் திற்காங் கர்த்தரிக் கையைப் பொருந்த வுந்திப்
பாலிரே சிதமாய்ச் செய்து பற்றிட லாகு மென்று
சாலவே புவர்லோ கத்தின் றகைமையை யறிந்து கொள்ளே.

சுவர்லோகம்

கரிய சூசிக் கையைக் கும்பமே ராகச் சக்ரா
கார வுத்வேஷ் டிதம்மாய்க் காட்டுதல் சுவர்லோ கப்பேர்
சாரு மென்றமர ராசான் மதந்தனிற் புகலு மிந்த
நேர றிந்தபி நயித்த னிகழ்த்தலாங் கமல மாமே. 562

ஜனலோகம் தபோலோகம்

நெடியதாம் வைஷ்ண வக்கை நெஞ்சினேர் ரேசிதஞ் செய்யில்
வடிஜன லோகஞ் சுங்கன் வழுத்தினன் தபோலோ கத்தைப்
பிடியுள்ளா னக்கை நாபியினுத் வேஷ்டி தம்மே சித்தல்
அடவுள கோக ளன்ம தஞ்சொலு மறிந்து கூறே. 563

மகர்லோகம் சத்தியலோகம்

சுகதுண்ட நெற்றி நேரிற் சமமாகச் சுற்றிக் காட்டல்
மகர்லோக மென்னச் சுப்ர மண்ணிய னுரைத்தான் சூசி
முகநேரிற் சக்ரா கார முறச்சுற்றி யபிந யித்தல்
தகைமைசேர் ஸத்ய லோகந் தனக்கென்றான் குமரன் றானே.

மேலேழு உலகங்களின் அபிநயங்கள்
செய்யுட்கள் 561–564

1. பூலோகம்—பதாகத்தை அதோமுகமாகப பற்றல்.

2. புவர்லோகம்—கர்த்தரிக்கையை, உந்தியிலிடம், ரேசிதக மாகச் செய்து பிடித்தல்.

3. சுவர்லோகம்: மார்பிலர் ரோகச் சூசிக்கையைச் சக்ராகார உத்வேஷ்டிதமாய்க் காட்டுதல். இது, பிரகஸ்பதி மதம்.

4. ஜனலோகம்: வைஷ்ணவக்கையை நெஞ்சின் ரோக ரேசி தம் செய்தல். இது, சுங்கன் மதம்.

5. தபோலோகம்: ஞாலக்கையை நாபியில் உத்வேஷ்டிதமாக ரேசித்தல். இது, கோகளன் மதம்.

6. மகர்லோகம்: சுகதுண்டக்கையை நெற்றி ரேகில் சமமாகச் சூற்றிக் காட்டல்.

7. சத்தியலோகம்: சூசிக்கையை முகத்தின் ரேகில் சக்ராகார முறச் சுற்றி அபிநயித்தல்.

இவை சுப்பிரமணியர் மதம்.

அதல, விதல, சுதல, ரசாதலம்.

அதலமாஞ் சிந்து பந்த மபவேஷ்டி தம்மதாய்ப் பற்றல்
விதலலோ கம்முத் தான மிருக சிரமப வேட்டி த்தல்
சுதலந்தந் தமிருகச் சென்னி யபவேஷ்டஞ் சொல்லு மேப
சதலமே ரோக பந்த மபவேஷ்டஞ் சாற்று மாதே. 565

தராதல, மகாதல, பாதாளம்.

சீர்தரா தலந்தரி கூட படமப வேஷ்டஞ் செப்புஞ்
சேர்மகா தலத்திற் குக்கை திரிசக்ர மபவேட் டித்தல்
பார்புகழ் பாதா ளத்தான் சங்கீர்ண பதாகம் தன்னை
நேரப வேஷ்டி தஞ்செய் திடலென நிகழ்த்து மாதே. 566

கீழேழு உலகங்களின் அபிநயங்கள்

1. அதலம்: சிந்துபந்தத்தை அபவேஷ்டிதமாகக் காட்டல்.

2. விதலம்: உத்தானமிருகசிரத்தை அபவேஷ்டிதமாகக் காட் டல்.

3. சுதலம்: மிருகசிரிடக்கையை அபவேஷ்டிதமாகக் கர்ட்டல்.

4. ரசாதலம்: நாகபந்தக்கையை அபவேஷ்டிதமாகக் காட்டல்.

5. தராதலம்: த்ரிகூடபடம்(?) அபவேஷ்டிதமாகச் செய்தல்.

6. மகாதலம்: சக்கரக்கையை அபவேஷ்டிதமாகச் செய்தல்.

7. பாதாளம்: சங்கீர்ண பதாகத்தை அபவேஷ்டிதம் செய்தல்.

உலகங்களின் அபிநயம் முற்றும்.

2. மலைகள்

இமயமலை, நிடதமலை, விந்தை

வர்த்தனீ யிமயக் கோடு மார்புநே ரிரண்டு கையைக்
கர்த்தரி சுவத்தி கத்தைக் காட்டுத னிடதத் தோடு
நெற்றிநே ரோரு கர்த்த ரீகமாய்ப் பிடித்தல் விந்தைக்
குற்றவக் கையை வாய்க்கு நேருறப் பிடித்த லாமே. 567

மாலியவான்கிரி பாரியாத்திரி

மாலிய வான்கி ரிக்கு வகுத்துச்சொல் லொற்றைக் கையை
ஆலஞ்சேர் கர்த்த ரீக மாய்வலத் தோளில் வைத்தல்
ஏலவே பாரி யத்தி ரிக்குவ யிற்றி னேரே
மேலுற வொற்றைக் கையை விசைகொளப் பிடித்த லாமே.

கந்தமாதனகிரி கைலாயம்

கந்தமா கிரிக்குக் கர்த்த ரிக்கையை முகத்து நேரே
அந்தமாய்ப் பிடித்த லாகு மரன்கயி லாயத் திற்கு
முந்திடக் கையு யர்த்தி யதோமுக வம்ச பட்சம்
சிந்தாக்கீ ழாய்வ லக்கைச் சிகரமாய்ப் பிடித்த லாமே. 569

மந்திரகிரி சக்கரவாளம்

கார்கொள்மந் திரகி ரிக்குக் கடகாமு கக்கை ரண்டும்
தேர்சுவத் திக்ம தாக்கித் திரிபதா கைப்பி டித்தல்
சேர்சக்ர வாளத் திற்கு விடக்கையைச் சிகர மாக்கி
வார்வலஞ் சூசி பற்றி மண்டலஞ் சுற்றிக் காட்டே. 570

மகமேரு நீலகிரி

மேருவிற் கிடது கர்த்த ரிக்கையா யதற்குக் கீழே
ஊர்வல மர்த்த சந்த்ர னுத்தான மாய்ப்பி டித்தல்
சார்நீல கிரிக்கி டக்கை சதுரஸ்த மதோமு கத்தாய்
நேருயர் வலத்தை யர்த்த சந்த்ரன்மேற் பிடித்து நேரே.

பலமலைகள்

ஆலீட சுத்தா னத்தி னிற்பதே யாகு மின்னம்
கால்பல மலைம ளுக்குக் கர்த்தரீ முகத்தைப் பின்னும்
ஏலவே சுவத்தி கக்கை பிடித்தலா மென்பர் நூலோர்
வேல்விழி மாதே மேலே விருக்ஷங்கட் குரைசெய் வோமே.

மலைகளின் அபிநயங்கள்

செய்யுட்கள் 567-572

1. *இமயம் :* மார்பின் நேராக இருகைகளைக் கர்த்தரி சுவத்திக மாகக் காட்டல்.

2. *நிடதம் :* நெற்றியின் நேர் ஒரு கர்த்தரீகம் காட்டல்.

3. *விந்தியா :* கர்த்தரீகக்கையை வாய்க்கு நேர் பிடித்தல்.

4. *மாலியவான்கிரி :* ஒற்றைக் கர்த்தரிக்கையை வல்த் தோளில் வைத்தல்.

5. *பாரியத்திரி :* அக்கையை வயிற்றின் நேரே விசைகொளப் பிடித்தல்.

6. *கந்தமாதனகிரி :* கர்த்தரிக்கையை முகத்து நேரே பிடித்தல்.

7. *கைலாயம் :* இடக்கையை அதோமுக அம்சபட்சமாக உயர்த்தி, வலக்கையைச் சிகரமாக்கிக் கீழே பிடித்தல்.

8. *மந்திரகிரி :* இரண்டு கடகாமுகக்கைகளைச் சுவத்திகமாக்கிப் பிறகு திரிபதாகை காட்டல்.

9. *சக்ரவாளம் :* இடக்கையைச் சிகரமாக்கி, வலக்கையைச் சூசி செய்து மண்டலம் சுற்றிக் காட்டல்.

10. *மகாமேரு :* இடக்கை கர்த்தரிக்கையாக்கி, அதற்குக் கீழே வலக்கையை அர்த்த சந்திரனுக்கி உத்தானமாய்ப் பிடித்தல்.

11. *நீலகிரி :* இடக்கையைச் சதுரக்கையாக்கி அதோமுகமாகப் பிடித்து, வலக்கையை அர்த்த சந்திரனுக்கி மேலாகப் பிடித்தல்.

12. *பல மலைகள் :* கால் ஆலீடமாக நிற்பது; இன்னும், கர்த்தரீமுகங்களைச் சுவத்திகங்களாகப் பிடித்தலும் ஆம்.

மலைகளின் அபிநயம் முற்றும்.

---

3. கடல்கள்

சொல்சமுத் திரம்ப தர்கைச் சுவத்திக முள்ளங் கைமேல்
மெல்லவே சுற்றி யத்தை யதோமுகம் பிடித்தன் மேவும்
வல்லிரு பதாகம் தன்னை யதோமுகச் சலன மாக்கல்
புல்லுவர் கடல்க ளுக்குப் பொதுவாக நூல்வல் லோரே. 573

உப்புக்கடல் கருப்பஞ்சாற்றுக்கடல்

முன்னுரை கடலின் சீரை மொழியுமே வெவ்வே றுகத்
தன்னிக ரில்லா வுப்புக் கடலுக்கு முகுளந் தன்னை
மன்னும்வியா விருத்தம் பற்றல் வழுத்துமிக் குக்க டற்கே
அன்னையே வமர ராச னலபத்மக் கையென் றோனை. 574

கட்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல்.

சாராயக் கடற்குச் சுங்கன் சங்கீர்ண பதாகஞ் சொன்னன்
தாரையாய் நெய்க்க டற்குச் சதுரக்கை யதுமன் சொன்னன்
தேரிய தயிர்க்க டற்றத் திலன்றிரி பதாகஞ் சொன்னன்
நாரதன் பாற்க டற்கு நவின்றன னரவின் சென்னி. 575

நல்ல நண்ணீர்க்கடல்

நானிலத் தோர்கட் கெல்லா நன்றென வுரைப்ப தற்குத்
தேனென விளங்கு கின்ற சுத்தோத கக்க டற்கு
மானனி யாளே கேளாய்க் கோகளன் மதத்திற் கையைத்
தோணவே பதாக மென்று சொல்லின னறிந்து கொள்ளே.

கடல்களின் அபிநயங்கள்

செய்யுட்கள் 573 576

பொது : பதாகைச் சுவத்திகத்தை உள்ளங்கைமேல் மெல்லச் சுற்றி அதனை அதோமுகமாகப் பிடித்தல்; இன்னும், இரு பதாகங்களை அதோமுகச் சலனமாக்கலும் ஆம்.

1. உப்புக்கடல் : முகுளக்கையை வியாவிருத்தமாகப் பற்றல்.

2. கருப்பஞ்சாற்றுக்கடல் : அலபத்மக்கை ; இது, தேவேந்திரன் மதம்.

3. சாராயக்கடல் : சங்கீர்ணபதாகம். சுங்கன் மதம்.

4. நெய்க்கடல் : சதுரக்கை. அநுமன் மதம்.

5. தயிர்க்கடல் : திரிபதாகம். நந்திலின் மதம்.

6. பாற்கடல் : சர்ப்பசிரிஷம். நாரதன் மதம்.

7. நல்ல தண்ணீர்க்கடல் (சுத்தோதகக்கடல்) : பதாகக்கை.

இது, கோகளன் மதம்.

கடல்களின் அபிநயம் முற்றும்.

4. நதிகள்

காவிரி

இருகட காமு கத்தைச் சுவத்திகஞ் செய்து ஏற்க
விரிவுக்கா தோரம் வைத்து இறக்கியே பிடித்தி டச்சீர்
பெருகிய பரத நூலோர் பேணிக்கா விரிந தித்கு
வருமென வுரைத்தா ரிந்த வகையறிந் துலகி லோதே. 577

துங்கபத்திரை

வடிவுள மிருகச் சென்னி மல்லாத்தி யங்குட் டத்தை
இடதுகைப் பாரி சத்திற் சலனஞ்செய் திடில வற்றைப்
படிமிசை மருவுந் துங்க பத்திரை நதிக்கா மென்று
மடமயி னடன மாதே வகுத்தனர் நூல்வல் லோரே. 578

ரேவா

உருமிரு பதாகந் தன்னை யொருகண்ச மீபஞ் சேர்த்துத்
தருகாமற் காட்டி மற்றோர் புறத்திட்டி சாய்த்து மற்றும்
பெருமைசேர் மொழியி னுளே பேணிய பரத நூலோர்
பெருகியே யோடும் ரேவா நதிக்கெனப் பேசி னரே. 579

கங்கை, கிருஷ்ணவேணி, காவிரி.

இயம்புவ ரிவைக ளின்றி யினங்கங்கை தாம்ர சூடம்
பயமப வேஷ்டி தவ்யா விரித்தமாய்ப் பற்ற லென்றும்
வியனுறு நதியாங் கிருஷ்ண வேணிச்சிம் மமுக மென்றும்
சயமுறு காவி ரிக்குச் சதுரக்கை யாகு மென்றே. 580

சரஸ்வதி, நர்மதா, கோதாவிரி, துங்கபத்ரா.

சரஸ்வதி நதிக்குக் கைப்ப தாகச் சதுரமே யாகும்
பரவிய நர்ம தாவிற் கர்த்தப தாகை யாகும்
தருகாக்கோ தாவ ரிக்குச் சங்கீர்ண பதாகம் பேசும்
அருமையாந் துங்க பத்ர வம்சாஸ்யக் கையென் றோதே. 581

சரயூ, வேத்ரவதி, சந்த்ரபாகை, சரயு, பீமநதி.

சாரவ திக்காம் பாணம் தருவேத்தி ராவ திக்குக்
கூறுமே சூசிக் கையாய்க் கொளுஞ்சக்ர பாகா விற்கு
ஆருமே சலனக் கையாய்ச் சரயுவுக் கலபத் மக்கைப்
பேரரா ளக்கை யாகும் பீமந திக்கென் றோதே. 582

சுவர்ணமுகி, பாபநாசம், தாம்ப்ரபர்ணி.

சொலுஞ்சுவர் ணமுகிக் கர்த்த சதுரமாம் பாப நாசம்
வலிதெனுஞ் சுகதுண் டக்கை தாம்ப்ர பன்னிக் கத்தம்
தலவாமஞ் சதுரக் தையாய் வலக்கரந் தனீனப்ப தாகச்
சலனமே செய்வ தென்று சாற்றுவாய் முறைதெ ரிந்தே.

வேகவதி

வருவேக வதிக்கு ரண்டு முட்டிக்கை வயிற்றி னேரே
குறுக்காகப் பிடித்தப் பாலே பதாகத்தைப் பரிவர்த் தங்கொண்
டருமையாய் முகமுன் னீட்டி நதியஸ்த மளவாய்க் காட்டில்
வருமென்றிங் நதிகட் கெல்லாம் வழுத்தினன் வியாழன் ருனே.

பொது

அறைந்திடும் நதியஸ் தங்க ளபவேஷ்டி தவ்யா விர்த்தம்
புரியவே பதாக மாக்கல் பொருந்தும தின்னங் கேளாய்
பெருமையா நதிக டற்குப் பேர்காம நாளைக் கொண்டு
அருமையா யபிந யித்த லாமென்ரூன் வியாழன் ருனே.

நதிகளில் அபிநயம்

செய்யுட்கள் 577-585

1. காவிரி : இரு கடகாமுகக்கைகளைச் சுவத்திகம் செய்து, காதோரம் வைத்து, இறக்கிப் பிடித்தல்.

2. துங்கபத்திரை : மிருகசிருடக்கையை மல்லாத்தி, அங்குட்டத்தை இடக்கைப் பாசித்தில் சலனம் செய்தல்.

3. ரேவா : இரண்டு பதாகங்களை ஒரு கண் சமீபம் சேர்த்து, சாயாமற் காட்டி, மற்றொரு கண்ணைச் சாய்த்தல்.

4. கங்கை : தாம்பர சூடக்கையை அபவேஷ்டித வியாவிருத்த மர்ப்பற்றல்.

5. கிருஷ்ணவேணி : சிம்மமுகக்கை.

6. காவிரி : சதுரக்கை.

7. சரஸ்வதி : பதாகமும் சதுரமும்.

8. நர்மதா : அர்த்தபதாகை.

9. கோதாவிரி : சங்கீர்ணபதாகம்.

10. துங்கபத்ரா : அம்சாசியக்கை.

11. சாரவதி : பாணக்கை.

12. வேத்திரவதி : சூசிக்கை.

13. சந்திரபாகை : சலனக்கை.

14. சரயு : அலபத்மக்கை.

15. பீமரதி : அராளக்கை.

16. சுவர்ணமுகி : அர்த்தசதுரக்கை.

17. பாபநாசம் : சுகதுண்டக்கை.

18. தாம்ப்ரபர்ணி : இடக்கை, சதுரக்கை; வலக்கை பதாகக் கை; இவற்றைச் சலிப்பது.

19. வேகவதி : வயிற்றின் நேரில் இரு முட்டிக்கைகளைக் குறுக் காகப் பிடித்தல்; பிறகு பதாகத்தைப் பரிவர்த்தஞ் கொண்டு, முக முன் நீட்டுதல்.

20. மேலே சொன்ன நதி அஸ்தங்கள் தவிரப் பொதுவாகப் பதாகத்தை அபவேஷ்டிதம், வியாவிருத்தம் செய்தலும் பொருந்தும். இன்னும் நதி, கடல் இவைகளை அவற்றின் நாம நாட்களைக் கொண் டும் அபிநயித்தலாகும்.

இது, வியாழன் மதம்.

நதிகளின் அபிநயம் முற்றும்.

---

5. குளம், படி, கிணறு.

அளவிலாச் சூசிக் கையை யபவேஷ்டி தமதாய்ச் செய்து
சுழலுநாற் கோண மாகச் சுற்றிப்ப தாகந் தன்னைக்
குளமாயவே சலனஞ் செய்தல் குளங்களுக் காகு மென்று
மழலைசேர் மொழியி னாளே வகுத்தனர் நூல்வல் லோரே.

கேளிரு சதுரக் கையைக் கீழ்மேலாய்த் தாவிக் காட்டல்
வாழிய படிக ளுக்கு வகுத்தலாஞ் சூசி சுற்றிப்
பாழிலாக் கபித்தந் தன்னை யபவேஷ்டி தமதாய்ப் பற்றி
நீளவா கருஷ ணித்த னிகழ்த்துவாய் கூபத் திற்கே. 587

குளம், படி, கிணறு இவற்றின் அபிநயம்

குளம் : சூசிக்கையை அபவேஷ்டிதமாய்ச் செய்து, நாற்கோண மாகச் சுற்றி, பதாகத்தைச் சலனமாக்குதல்.

படிகள் : இரு சதுரக்கைகளைக் கீழ்மேலாய்த் தாவிக் காட்டல்.

கிணறு : சூசிக்கையைச் சுற்றி, கபித்தக்கையை அபவேஷ்டித மாய்ப் பற்றி நீள ஆகர்ஷித்தல்.

குளம் முதலியவற்றின் அபிநயம் முற்றும்.

காவேரி, துங்கபத்திரை இவைகளுக்கு இரு இடங்களில் அபிநயம் கூறப்பட்டுள்ளது.

6. சுரப்பிறப்புத்தீவுகள்

சம்பு, பிலட்சம், குசம், க்ரவுஞ்சம்.

சம்புவாந் தீபத் திற்குச் சட்சம்புட் பபுடஞ் செப்பும்
தம்பமாம் பிலட்சத் வீபந் தைவத முச்சுங் கக்கைத்
தெம்பதாங் குசதீ பங்காந் தாரமாஞ் சிகர பர்தம்
கம்பநேர் கிரவுஞ் சத்தா மத்திமங் கபோதக் கையே. 588

சாகம், சால்மரி, புட்கரம்.

அருமைசேர் சாகத் தீபம் ரிஷபமா மஞ்ச லிக்கை
தருணபஞ் சமமுத் தான வஞ்சிதஞ் சால்ம லத்தாம்
பெருமைசேர் நிடாதஞ் சொத்தி புட்கரத் தீப மென்றே
பரதநூ லறிந்த வல்லோர் பகர்ந்தனர் முறைதெ ரிந்தே.

சுரப்பிறப்புக்களான தீவுகள்

	தீவு	சுரம்	கை
1	சம்பு	சட்சம்	புட்பபுடக்கை
2	பிலட்சம்	தைவதம்	உத்ஸங்கக்கை
3	குசம்	காந்தாரம்	சிகரம்
4	இரௌஞ்சம்	மத்திமம்	கபோதக்கை
5	சாகம்	ரிஷபம்	அஞ்சலி
6	சால்மலி	பஞ்சமம்	உத்தானவஞ்சிதம்
7	புட்கரம்	நிடாதம்	சுவத்திகக்கை

சுரப்பிறப்புத் தீவுகளின் அபிநயம் முற்றும்.

---

7. விருக்ஷங்கள்

மா, பிரம்பு, தெங்கு, நெல்லி, கதலி, நொச்சி, பேரீந்து.

சீருரை மரத்தின் கைகள் செப்புவோ மெவருங் காணப்
பாரில்மா பிரம்பு சூசிப் பதாகையார்ந் தேங்கு நெல்லி
சேருமே கதலி நொச்சி மரக்கரஞ் சிலிட்ட முகுளம்
பேரீந்து மர்த்த சந்த்ர சுவத்திக மெனவே பேசும். 590

இந்நூலின் நான்காம் அத்தியாயம், 23 ஆம் செய்யுள் சுரக்கள் பிறந்த தீவுகளைக் கூறும்.

எழுமிச்சை, பாதிரி, மருது, பலா, முருங்கை, பனை.

பேசலா மெலுமிச் சைக்குப் பிரமரக் கையே யாகும்
வாசமாம் பாதி ரிக்கு மருதுக்குஞ் சுகதுண் டக்கை
ஆசையாம் பலாமு ருங்கைக் காகுமே சதுரக் கைதான்
நேசமாம் டமரு கக்கை நெடும்பனை மரமே யாமே. 591

மந்தாரை, வில்வம், பலாசு, நாரத்தை, கோங்கு, கமுகு, அசோகு, செண்பகம், இலுப்பை, புளி, கடம்பு.

ஆகுமந் தாரை வில்வம் பலாசுக்கு மர்த்த சந்த்ரன்
பாகநா ரத்தை கோங்கு கமுகிற்கும் பதும கோசம்
சோகுசெண் பகமி ருப்பை கோதிலாப் புளிக டம்பு
ஆகுமிவ் வைந்துக் குங்காங் கூலமென் றியம்ப லாமே. 592

மகிழ், இலந்தை, தேக்கு, நாவல், கரும்பு, வன்னி, கருங்காலி.

அறையலா மகிழி லந்தைக் காகுஞ்சந் தங்கி சந்தான்
குறைவிலாத் தேக்கு நாவல் கூர்த்தப தாக மென்றே
பிரியமாங் கரும்பு வன்னி பேசலாம் சிலிட்ட கர்த்தரி
தரையினிற் கருங்கா லிக்குத் தாம்பிர சூட மென்றே. 593

அகத்தி, கொன்னை, புன்னை, முங்கில்.

என்னவே யகத்திக் குத்தா னேற்குமே வராளக் கையாய்க்
கொன்னையே மயூர மாகுங் குளிர்மலர் கள்பூக் கின்ற
புன்னையே யாம்ப தாகச் சதுரக்கை புகல லாகும்
பன்னைசேர் மூங்கி லுக்குப் பதாகைசு வத்திக மாமே. 594

அத்தி, தாழை, வேம்பு.

ஆமது சிலிட்ட சந்தங் கிசமது வத்தி யாகும்
தாமப்பா லிருகை சதுர சுவத்திகந் தாழை யாகும்
ஓமது சுகதுண் டஞ்சு வத்திகம் வேம்பென் றோது
நாமிப்பா லறிந்து சொன்னே நாடிநீ யறிந்து கொள்ளே.

மஞ்சாடி, மற்ற மரங்கள்

அறிந்துசெய் வலது கையைப் பதாகம தாய்ப்பி டித்துத்
திருந்ததே விடது கையைக் கர்த்தரி யாகச் சேர்த்துப்
பொருந்தவே சுவத்தி கஞ்செய் போதுமஞ் சாடி யாகும்
மரந்தனி லுலு பத்து வகுத்தன மின்னங் கேளே. 596

அரசு, புங்கு, கல்லத்தி, பவளமல்லிகை, சுரபுன்னை.

அரசுக்கு அலபத் மத்தை ரேசிதஞ் செய்யப் புங்கிற்
கருமபூ ரக்கை கல்லத் தியராளம் பவள மல்லிக்
கருமைசேர் சந்தம் சக்கை யாஞ்சுர புன்னைக் கேற்கும்
முறுதிப தாகத் தைத்தா னுற்றலாங் கூல மென்னே. 597

வைசிரவணம், புளிச்சி, பாணவிருக்ஷம், நீபவிருக்ஷம்.

வைசிர வணமே சர்ப்ப சிரக்கையாம் வண்பு ளிச்சிக்
கிசையதோ முகமாம் பத்ம கோசமே யேற்கும் பாணம்
விசையுறும் பாணந் தன்னை ரேசிதஞ் செய்ய மேவும்
வசையிலா நீப விருக்ஷம் கண்டலாங் கூலம் பாரே. 598

ஈசவிருக்ஷம், கதம்பம், குருவிருக்ஷம்.

ஈசவி ருக்ஷ மோது மினிதவ ரேகா சந்தரன்
ஓசையாங் கதம்பத் திற்கு மூட்டிரு சிக்கை யோதும்
வாசியாங் குருவி ருக்ஷம் வலதுகர்த் தரியோ டொதது
நேசமா மிடது பக்கந் திரிபதா கமெனவிள்ளே. 599

நளிந்தம், விளாமரம், திலகம், மருதோன்றி.

நளிந்தமே லீன முத்தி ரைக்கையாம் விளாம ரத்திற்
குளதல பத்மஞ் சொத்தி யோதுமே திலகத் திற்கு
வளர்கர்த்த நீப தாக மாகுமே மருதோன் றிக்குக்
கொளுமரா ளச்சு வத்தி கம்மெனக் கூறு மாதே. 600

சரளம், மாதுளை, மருவகம், சீம்சுபை, ஆமோசம்.

சரளம ரத்திற் கோதுஞ் சந்தம்ஸச் சுவத்தி கந்தான்
மருவுமா துளைலாங் கூலம் மருவக தாம்ப்ர சூடம்
பெருகுசிம் சுபைக்கா மர்த்த சந்தரசொத் திகமே பேசும்
இருபவா மோசத் திற்கு நேர்தல்லாங் கூல மாமே. 601

வேம்பு, பாலவிருக்ஷம்

வேம்பிற்குச் சுகதுண் டக்கை மேவுமே பால விருக்ஷம்
சோம்பிலா தாகுங் கைதான் சுவத்திக மென்ன லாகும்
ஆம்பிலா துலகோர் காணத் தத்திலா சிரியன் ருனத்
தேன்பொழி மதத்திற் சொன்ன திவ்வண மறிந்து கொள்ளே.

விருக்ஷங்களின் அபிநயம்

செய்யுட்கள் 590-602

	மரப்பெயர்		கை
1	மா	—	சூசி
2	பிரம்பு	—	பதாகை
3-6	தெங்கு, நெல்லி, கதலி, நெரச்சி		சிலிட்டமுகுளம்
7	பேரீந்து	—	அர்த்தசந்திரக்கை, சுவத்திகம்.
8	எலுமிச்சை	—	பிரமரக்கை
9-10	பாதிரி, மருது	—	சுகதுண்டக்கை
11-12	பலா, முருங்கை	—	சதுரக்கை
13	பனை	—	டமருகக்கை
14-16	மந்தாரை, வில்வம், பலாசு		அர்த்தசந்திரன்
17-19	நாரத்தை, கோங்கு, கமுகு		பதுமகோசம்
20-24	அசோகு, சண்பகம், இலுப்பை, புளி, கடம்பு		காங்கூலம்
25-26	மகிழ், இலந்தை	—	சந்தம்சம்
27-28	தேக்கு, நாவல்	—	பதாகம்
29-30	கரும்பு, வன்னி	—	சிலிட்டகர்த்தரீ
31	கருங்காலி	—	தாம்பிரசூடம்
32	அகத்தி	—	அராளக்கை
33	கொன்னை	—	மயூரக்கை
34	புன்னை	—	பதாகம், சதுரம்
35	மூங்கில்	—	பதாகைச்சுவத்திகம்
36	அத்தி	—	சிலிட்டசந்தம்சம்
37	தாழை	—	இருகை சதுரம், சுவத்திகம்
38	வேம்பு	—	சுகதுண்டம்சுவத்திகம்
39	மஞ்சாடி	—	வலக்கைப்பதாகமும், இடக்கை கர்த்தரியாகவும் கொண்டு சுவத்திகம் செய்வது
40	அரசு	—	அலபத்மத்தை ரேசிதம் செய்தல்
41	புங்கு	—	மயூரக்கை
42	கல்லத்தி	—	அராளம்
43	பவளமல்லி	—	சந்தம்சம்
44	சரபுன்னை	—	பதாகமும் லாங்கூலமும்

	மரப்பெயர்		கை
45	வைரவணம்	—	சர்ப்பசிரக்கை
46	புளிச்சி	—	அதோமுகமாம் பதும்கோசம்
47	பாணவிருக்ஷம்	—	பாணக்கையை ரேசிதம்செய்தல்
48	நீபவிருக்ஷம்	—	காங்கூலம்
49	ரசவிருக்ஷம்	—	ரேகாசந்திரன்
50	கதம்பம்	—	முட்டியும் சூசிக்கையும்
51	குருவிருக்ஷம்	—	வலக்கை கர்த்தரியும், இடக்கை திரிபதாகமும்
52	நளிந்து	—	லீனமுத்திரை
53	விளாம்பரம்	—	அலபத்ம சுவத்திகம்
54	திலகம்	—	கர்த்தரீபதாகம்
55	மருதோன்றி	—	அராளச்சுவத்திகம்
56	சரளம்	—	சந்தம்சசுவத்திகம்
57	மாதுளை	—	லாங்கூலம்
58	மருவகம்	—	தாம்பிரசூடம்
59	சிம்சுபை	—	அர்த்தசந்திர சுவத்திகம்
60	ஆமோசம்	—	லாங்கூலம்
61.	வேம்பு	—	சுகதுண்டம் (முன், 38ம்)
62	பாலவிருக்ஷம்	—	சுவத்திகம்

இவை, தத்திலாசிரியன் மதம்.

மரங்களின் அபிநயம் முற்றும்.

---

8. தேசங்கள்

காம்போஜம், கன்னட, கரஹட்ட, குரு தேசங்கள்.

கடகாமு கம்பி டித்தற் காம்போஜ தேச மாங்கன்
னடமபூ ரத்தைத் தகஷி ணப்பாக மாய்ப்பி டித்தல்
கடிசக்க ரத்தை மார்பு நேர்பற்றக் கரஹ டாவாம்
திடகுரு தேச மம்சா சியநுத னேர்ாய்ப் பற்றே. 603

அங்கம், வங்கம், கலிங்கம், காச்மீரம்.

அங்கதே சம்ப தாகத் தையூர்த்வ மாய மைத்தல்
வங்கமே முத்தி ரைக்கைச் சலனமாய் மருவிப் பின்க
ளிங்கங்கர்த் தரிமு கத்தைப் பிரேரித மாகப் பற்றல்
லாங்கூல மெதிரே காட்டக் காஷ்மீரம் வழுத்த லாமே. 604

குருரம், கொங்கணம், டெங்கனம், பாஞ்சாலம், பப்பர, மாளவம்.

குருரமே மரக்கை யாங்கொங் கணமரா ளக்கை யாம்
சுகதுண்டம் டெங்க ணத்தாஞ் சொல்கி கர்த்திரி முட்டி
முகுளம்பாஞ் சால தேசம் மூளும்பப் பரதே சக்கைச்
சிகரமா மாள வந்தான் சிலிட்டக பித்த மாமே. 605

நேபாளம், மலையாளம், சோழம், லாட, மராட்டம்.

இலகுநே பாளஞ் சூசி யேற்குமே கேர ளந்தான்
தலமுறும் பதும கோசஞ் சதுரக்கை சோழ தேசம்
பலகுமே லாட தேசம் பாணக்கை மராட தேசம்
சொலுமிரு கசிர மென்றே துடிமிடை யுடைய மாதே. 606

சௌராஷ்ட்ரம், சுச்சரி, விதேகம், விதர்ப்பம், சேரம்.

சௌராஷ்ட்ரம் சந்தம் சக்கை சுச்சரி காம்ப்ர சூடம்
விவரமாம் விதேக தேசம் விப்ரகீர் ணமதாய் விள்ளும்
அவமிலா விதர்ப்ப தேச மர்த்தசந் திரக்கை சேரன்
புவிவிப்ர கீர்ணச் சிம்ம முகமெனப் புகல லாமே. 607

யவனம், ஆந்திரம், பவுண்ட்ரம், பாண்டி, புளிந்தம், காந்தாரம்.

யவனதே சம்மச் சக்கை யஞ்சலி யாந்த்ர தேசம்
பவுண்டர தேச மாங்க போதக்கை பாண்டி தேசம்
புவிகச தந்தக் கையாம் புளிந்தமுத் வருத்த மாகும்
பவனிகாந் தார தேசம் பட்சவஞ் சிதமாய் விள்ளே. 608

கவுட, கூர்ஜ்ஜர, குந்தள, சுதேஷ்ண, சால்மரம்.

உரமதாங் கவுட தேச முச்சுங்கக் கையா குங்கூர்ச்
சரநாக பந்த மாங்குந் தளதேசம் ரேசி தக்கை
வருசுதே ஷ்ணமை தாம்பல் லவக்கரஞ் சால்ம ரிக்குத்
தருமர்த்த சதுரக் கையாச் சாற்றினார் நூல்வல் லோரே. 609

சேதி, நிடதம், உத்தரம்.

சேதிக்குக் கஜமு கத்தைச் செப்புமே நிடத தேசம்
ஓதுமே டமரு கக்கை யுத்தர தேசத் திற்குத்
தாதுள தண்ட பட்சஞ் சாற்றுமே மற்ற தேச
நீதியை யறிந்து மேலாய் நீயபி நயஞ்செய் மானே. 610

தேசங்களின் அபிநயம்

செய்யுட்கள் 603–610

	தேசம்.		கை.
1	கர்ம்போ ஜம்	—	கடகாமுகம்
2	கன்னட	—	மயூரத்தை வலப்பக்கமாகப் பிடித்தல்
3	கரஹடா	—	சக்கரக்கையை மார்பு நேர் பிடித்தல்
4	குரு	—	அம்சாசியத்தை நெற்றி நேர் பிடித்தல்
5	அங்கம்	—	பதாகத்தை ஊர்த்வமாய்ப் பிடித்தல்
6	வங்கம்	—	முத்திரைக்கையைச் சலனமாக்கல்
7	களிங்கம்	—	கர்த்தரி முகத்தைப் பிரேரிதமாகப் பற்றல்
8	காஷ்மீரம்	—	லாங்கூலம் எதிரே காட்டல்
9	குகுரம்	—	மரக்கை
10	கொங்கணம்	—	அராளக்கை
11	டெங்கணம்	—	சுக துண்டம்
12	பாஞ்சாலம்	—	சுவத்திக கர்த்தரி, முட்டி முகுளம்
13	பப்பர	—	சிகரம்
14	மாளவ	—	சிலிட்ட கபித்தம்
15	நேபாளம்	—	சூசி
16	கேரளம்	—	பத்மகோசம்
17	சோழம்	—	சதுரக்கை
18	லாட	—	பாணக்கை
19	மராட	—	மிருகசீரிடம்
20	சௌராஷ்டிரம்	—	சந்தம்சக்கை
21	குச்சரி	—	தாம்பிரசூடம்
22	விதேகம்	—	வீப்ரகீர்ணம்
23	விதர்ப்பம்	—	அர்த்த சந்திரக்கை
24	சேரம்	—	விப்ரகீர்ணச்சிம்மமுகம்
25	யவனம்	—	மச்சக்கை
26	ஆந்திரம்	—	அஞ்சலி
27	பவுண்டரம்	—	கபோதம்
28	பாண்டி	—	கஜதந்தம்
29	புளிந்தம்	—	உத்விருத்தக்கை (?)
30	காந்தாரம்	—	பட்சவஞ்சிதம்
31	கவுட	—	உத்ஸங்கக்கை
32	கூர்ஜ்ஜர	—	நாகபந்தம்

	தேசம்.		கை.
33	குந்தள	—	ரேசிதம்
34	சுதக்ஷண	—	பல்லவக்கை
35	சால்மரி	—	அர்த்த சதுரம்
36	சேதி	—	கஜமுகம்
37	நிடதம்	—	டமருகம்
38	உத்தரம்	—	தண்டபட்சம்

பிற தேசங்களுக்கு, அறிந்து செய்க.

தேசங்களின் அபிநயங்கள் முற்றும்.

---

9. பட்டணம், ஊர், கிராமம்.

பட்டண மென்ப தற்குப் பதுமகோ சக்க ரத்துத்
வெட்டித மாய்த்தி ருத்தி விசையுறக் காட்ட லாகும்
காட்டியே யிக்க ரந்தா னவில்கிராம மூர்க ளுக்கும்
காட்டலா மென்று நூலெக் கற்றவ ருரைசெய் தாரே. 611

பட்டணம், ஊர், கிராமம் ஆகியவற்றிற்கு, பதுமகோசக்கையை உத்வேஷ்டிதமாய்த் திருப்பி விசையுறக் காட்டலாகும்.

பட்டணம் முதலியவற்றின் அபிநயம் முற்றும்.

---

10. வீடுகளும் அவற்றின் பகுதிகளும்

குச்சுவீடு, ஓட்டடுக்கு, ஓலைவீடு, பர்ணசாலை.

குச்சுவீட் டிற்கி ரண்டு பதாகத்தின் றலையைக் கூட்டி
மெச்சவே பிடிப்ப தாகும் விளம்பிய விந்தக் கையே
அச்சமி லோடு வோலை பன்னசா லைக்கு மாகும்
நிச்சய மறிந்து மேலே யேபி நயஞ்செய் வாயே. 612

மச்சுவீடு, மாடி, மேடை, உப்பரிகை.

இருமிரு கரிரந் தன்னை யிறுகவே சேர்த்துக் காட்டல்
வருமச்சு வீட்டுக் கென்பர் மாடிக்கு விந்தக் கையும்
இருசது ரக்கை கீழு மேலுந்தா வுதலா யேற்றல்
வருமிது மேடை யுப்ப ரிகைகட்கும் வழுத்து மாதே. 613

சன்னல், கதவு, பூட்டு, திறவுகோல்.

சன்னலே மென்னி லுக்கைச் சார்கவா டம்ப தாகம்
திண்ணிய பதாகந் தன்னிற் கபித்தத்தைத் திரூத்திக் காட்டத்
துன்னிய பூட்டி னுேடே திறவுகோ லிதற்கா மென்று
உன்னியே பரத நூலோ ருரைத்தன ரறிந்து கொள்ளே.

வீடுகளுக்கும் அவற்றின் பகுதிகட்கும் அபிநயங்கள்

செய்யுட்கள் 612-614

குச்சுவீடு, ஓட்டடுக்கு, ஓலைவீடு, பன்னசாலை ஆகிய இவற் றிற்கு, இரண்டு பதாகக் கைகளின் தலைகளைக் கூட்டிப் பிடிப்பதாகும்.

இரண்டு மிருக சீரிடக் கைகளை இறுகச் சேர்த்துக் காட்டல் மச்சு வீட்டுக்கு ஆம். இந்தக் கையே மாடி வீட்டுக்கும் ஆம்; மாடி வீட்டுக்கு மேலே சொன்ன கையோடு, இரு சதுரக் கைகளைக் கீழும் மேலும் தாவுதலாக ஏற்றலும் கூறப்படும். இதனை மேடை, உப்பரிகைகளுக்கும் கூறுவர். சன்னலுக்கு மென்னிலைக்கையும், கதவிற்குப்பதாகமும், பதாகத்தில் கபித்தக்கையைத் திருத்திக் காட்டல் பூட்டிற்கும் திறவுகோலுக்கும் ஆம்.

விடுகள் முதலியவற்றின் அபிநயம் முற்றும்.

---

11. சாலைகள்

பிரம்ம சாலை

சாலைகள் பதினு லுக்குஞ் சாற்றுமே பிரம்ம சாலைக்
கேலவே மிருக சீரி டக்கைரண் டும்மார் பிற்குச்
சாலநேர் முன்னே நீட்டிப் பின்வாங்கிக் கரத்தைச் சாற்றும்
கோலஞ்சேர் கொங்கை மானே குறுக்காகப் பிடித்த லாமே.

குரவிச்சாலை, விளம்பினிச்சாலை

சங்கைதீர் குரவி யென்னுஞ் சாலைக்குத் திரிபதா கத்தைப்
புங்கித சேசி தஞ்செய் திடலெனப் புகல்வ ரென்றும்
இங்கித விளம்பி னிக்கு மிருகசீ ரிடங்கு றுக்கே
வாங்கிச்ச லனசற் பஞ்செய் திடலென வழுத்து மானே. 616

கெருடிச்சாலை, யாகசாலை

திரமதாங் கெருடிச் சாலை மிருகசீ ரிடங்கு றுக்கே
உரிமையாய் வாங்கி யக்கை முகுளவுத் வேஷ்டி தத்தாம்
மருவிலா யாக சாலை மான்றலைக் கைகு றுக்கே
உரிமையாய் வாங்கிச் சந்தங் கிசம்பிடிப் பதுவென் றோதே.

இடுப்பொரு பிடியாங் கோப மீனர்கள் வந்த னத்தும்
பிடிவாத மென்ப தற்கும் பின்புசா திப்ப தற்கும்
நெடியமன் மந்தி ரிக்கும் பரசுநேர் பிடிப்ப தற்கும்
கொடியசங் கேத ஸ்தானங் குறிப்பிட மாகும் பாரே. 222

பாருமே மார்பில் வைக்கப் பதருண்ட நாய னுக்கும்
சாருமே பலபொ ருட்கள் தனித்தனி பிடிப்ப தற்கும்
சேருமே பரத நூலிற் செப்பிடு புலன றிந்து
கூருமே முட்டிக் கையிற் குறித்தது விளியோ கம்மே. 223

அர்த்தமுட்டி சிலிட்டமுட்டி

யோகமா முட்டி தன்னி னுள்நடு வங்குட் டத்தைத்
தாகமாய் நுழைய வைத்தல் சலத்தினுட் பறவைக் கெல்லாம்
ஆகுமே தற்ச னிக்குள் ளமைத்திடிற் பெண்கள் பூவாம்
பாகக்கை யர்த்த முட்டி பகர்சிலிட்ட முட்டிக் கையே. 224

சங்கீர்ணமுடி

முட்டியில் மத்தி மத்தோ டணிகனி முன்பு கீளிற்
கெட்டிதுப் பாக்கி வாயி னுரல்கே ணித்துணீக ளுக்கும்
வட்டமாம் பரத நூலில் வகுத்திடு மேசங் கீர்ண
முட்டிக்கை யென்றே கோரட் சகன்மத முழங்கும் வாறே.

220. தோற்றம் - மான்; குலம் - சூத்ரன்; நிறம் - நீலம்; இருஷி - ருத்ரன்; அதிதெய்வம் - வீரபத்ரன்.

221. இலக்.: நான்கு விரல்களையும் உள்ளங்கையில் வளைத்து, அதன்மேல் கட்டைவிரலை வளைத்தால் முட்டிக்கை ஆகும்.

221-223. விநி.: ஸ்திரம்; தலைமயிர் பிடிப்பது; மல்லர்களின் யுத்தம்; சேலைகட்டுதல்; ஒருபிடியில் அடங்கும் இடுப்பு; கோபம்; ஈனர்களின் வந்தனம்; பிடிவாதம்; சாதிப்பு; அரசனின் மந்திரி; கோடரியைப் பிடித்தல்; சங்கேதஸ்தானம் குறிப்பது;

இக்கையை மார்பில் வைக்க:—பதருண்டநாயன், (பயந்தவீரன்); தனித்தனியே பொருள்களைப் பிடித்தல்.

அர்த்தமுஷ்டி

224. இலக்.: முஷ்டிக்கையில் நடுவுள் அங்குஷ்டத்தை நுழைய வைத்தல்.

விநி.: நீர்ப்பறவைகளெல்லாம்.

சிலிட்டமுஷ்டி

இலக்.: முஷ்டிக்கையில் அங்குஷ்டத்தைத் தர்ச்சனிக்குள் அமைத்தல்.

விதி.: பெண்கள் பூவாம்.

சங்கீர்ணமுட்டி

225. இலக்.: முஷ்டிக்கையில் மத்திமம் அணிவிரல் சுண்டுவிரல் இவைகள் முன்னே நீள்வது.

விதி.: துப்பாக்கி வாய்; உரல்; கேணி; தூணைகள்.

இது, கோரட்சகன் மதம்.

10. சிகர அஸ்தம்

இச்சிக ரக்கை தோன்று மீசன்பாற் குலங்கந் தருவன்
கச்சிலா நிறங்க றுப்பு நவிலுமே யிருடி யாக
அர்ச்சுன னகு மென்றே யதினதி தெய்வ மாகிப்
பச்சைவில் லுடைய மார னென்னவே பகரு நூலே. 226

உதவிய முட்டி அஸ்தத் துயரங்கு குட்ட நீட்ட
இதமுறுஞ் சிகர மாகு மிதற்கினி வினியோ கங்கேள்
அதரத்திற் கும்வில் லிற்கு மாலிங்க னங்க ளுக்கும்
மதனுக்கு மிலிங்கத் திற்கு நிச்சய வரம்பிற் காமே. 227

இல்லையென் பதுநி னைத்த லிளைத்தரு பங்கள் நாதம்
பல்லுடன் பிதிருகர்மம் பக்கங்க ளிற்கு மென்ப
நல்லபி நயனு ரம்ப நாதஞ்சேர் மணிக ளுக்கும்
மெல்லிய ரிடையிற் கட்டி விரைந்திழுக் கவுந்தா னுமே. 228

---

9. முஷ்டி ஹஸ்தம் (முட்டிக்கை)

ந்ர. சர. (ix : 55 - 56) அடித்தல்; யுத்தம்; வெளியேறுதல்; பால் கறக்கப் பிடித்தல்; ஸம்வாகனம்; கத்தியைப் பிடித்தல்; ஈட்டி, கதை முதலியவற்றைப் பிடித்தல்.

சிலப். (1-3 : 18 உரை) முட்டி யென்பது மொழியுங் காலைச், சுட்டு நடுவிர லநாமிகை சிறுவிரல், இறுக முடக்கி யிவற்றின்மிசைப் பெருவிரல், முனைப் பிடித்த முறைமைத் தென்ப.

ஸ - ர. (7: 130) கான்கு விரல்களையும் உள்ளங்கைக்குள் வளைத்து, மேல் நடுவிரலைப் பொருந்தக் கட்டைவிரலை அமைத்தல்.

அபி. நி. (தமிழ் 45) இந்நூல் 221-ஆம் செய்யுளை ஒத்ததே.

கந்தசாலை, ஓமகுண்டசாலை

கந்தசா லைக்கு மான்ற லைக்கையைக் குறுக்கே வாங்கிச்
சிந்தாவுத் வேஷ்டி தம்ரே சிதஞ்செய்து சிங்காஸ் யக்கை
அந்தமாய்ப் பிடிப்ப தாகு மழகிய பெண்டிற் குச்செய்
துந்திய வோம குண்ட சாலைக்கு மோது வோமே. 618.

சாஸ்திர சாலை

மான்றலைக் கைகு றுக்கே வாங்கியுத் வேஷ்டி தத்தைத்
தான்றிரே சிதமாய்ச் செய்து தாம்ப்ரசூ டம்பி டித்தல்
குன்றைநேர் நகிலி னளே குண்டல வேத சாத்திரம்
மன்றுசா லைக்குக் கையை வகுத்துநீ யுரைசெய் வாயே. 619

சயனச்சாலை

சந்தங்கி சம்பி டித்துத் தான்மறு படியும் பார்வை
சந்தங்கி சமதாய்ப் பற்றல் சாற்றுமே சயன சாலைக்
குந்துமான் றலைக்க ரத்தைக் குறுக்கேவாங் கியதை மற்றும்
கொந்தலர் பதாகக் கையைக் குறுக்காகப் பிடித்த லாமே.

நடனசாலை, சங்கீதசாலை

விருப்பா நடன சாலை மிருகசீ ரிடக்க ரத்தைக்
குறுக்கேவாங் கியதை மற்றும் பதாகமாய்ப் பிடித்தல் கூறும்
மிருகசீ ரிடங்கு றுக்கே பிடித்துமே முகுளம் பற்றல்
பெருக்கமாங் கீத சாலை விதியெனப் பேசு மானே. 621

வாத்யசாலை, சமர்க்களம்

வாத்திய சாலைக் குக்கேள் வலமிருக சீரி டத்தை
நேத்தியாய்க் குறுக்கே வாங்கி லலிதகிர்த் தக்கை பற்றல்
வீத்திலா சமர்க்க ளத்தை மிருகசீ ரிடம்பி டித்துப்
பாத்துப்ப தாக முந்திரிப் பதாகமாய்ப் பிடித்த லாமே. 622

சரஸ்வதிசாலை

சலனமில் பள்ளிக் கூடஞ் சரச்சுவ திச்சா லைக்கு
வலதுசந் தம்ச மாக்கி வருபதம கோசம் பற்றல்
நிலபெறுங் கையா மென்று நீணில மறிய முன்னுள்
கலசத்தி லுதித்து வாழ கத்திய ரோதி னளே. 623

சாலைகளின் அபிநயம்

செய்யுட்கள் 615-623

1 பிரம்மசாலை — இரண்டு மிருக சீரிடக் ைகைளை மார் புக்கு நேரே நீட்டிப் பின்வாங்கிக் குறுக்கே பிடித்தல்

2 சூரனிச்சாலை — திரிபதாகத்தைப் புங்கித ரேசிதம் செய்திடல்

3 விளம்பினிச்சாலை — மிருக சீரிடத்தைக் குறுக்கே வாங்கிச் சலனச்சர்ப்பம் செய்தல்

4 கெருடிச்சாலை — மிருக சீரீடத்தைக் குறுக்கே வாங்கி அதனை முகுள உத்வேஷ்டிதம் செய்தல்

5 யாகசாலை — மான்தலைக் கையைக் குறுக்கே வாங்கி, சந்தம்சம் பிடித்தல்

6 கந்தசாலை — மான்தலைக்கையைக் குறுக்கே வாங்கி, உத்வேஷ்டிதம், ரேசிதம் செய்து சிங்காஸ்யக்கையை அந்தமாய்ப் பிடிப்பது

7 ஓமகுண்டசாலை — பெண்டிற் குரியகை

8 சாஸ்திரசாலை — மான்தலைக் கையைக் குறுக்கே வாங்கி, உத்வேஷ்டிதம், ரேசிதம் செய்து, தாம்பிரசூடம் பிடித்தல்

9 சயனச்சாலை — சந்தம்சம் பிடித்து, மறுபடியும் சந்தம்ச மாய்ப் பற்றல்; பிறகு மான்தலைக் கையைக் குறுக்கே வாங்கி, மறுபடி யும் பதாகக் கையைக் குறுக்காகப் பிடித்தல்.

10 கடனசாலை — மிருகசீரிடக் கையைக் குறுக்கே வாங்கி, அதைப் பின்னும் பதாகமாய்ப் பிடித்தல்

11 சங்கீதச் சாலை — மிருகசீரிடத்தைக் குறுக்கே பிடித்து, முகுளமாகப் பற்றல்

12 வாத்யசாலை — வலப்பக்கத்தில் மிருகசீரிடத்தைக் குறுக்கே வாங்கி, பிறகு லலித நிர்த் தக்கை பிடித்தல்

13 சமர்க்களச் சாலை — மிருகசிரிடம் பிடித்து, பதாகமும் திரிபதாகமுமாய்ப் பிடித்தல்

14 சரஸ்வதி சாலை — வலப்பக்கம் சந்தம்சமாக்கிப் பதுமகோசம் பற்றல்

இவை, அகத்தியர் மதம்.

சாலைகளின் அபிநயம் முற்றும்.

1. ஸ்தாவராதி அபிநயம் முற்றும்.

---

12. ஜலஜந்துக்கள்

மீன், நண்டு, தவளை, ஆமை, முதலை.

மீனுக்கு மச்சக் கையாய் விளம்பின ரலவ னுக்குத்
தானிரு கையுங் கற்க டகமதாந் தவளைக் காகும்
ஊனமில் சக்க ரக்கை யாமைக்கு வுண்ணு வத்தம்
மானேமீ முதலைக் குச்சு வத்திகப் பதாகை சொல்லே. 624

அட்டை

செப்புமே யட்டைக்குச்சி லிட்டசி கரக்கை யாக
ஒப்பவே பரத நூலோ ரோதின ரீதுவல் லாமல்
தப்பிலா வபிந யத்தைத் தாபரங் கட்குந் தேர்ந்து
வைப்புடன் மலைக ளுக்கு வகையினி முன்சொல் வோமே.

13. ஊர்வன

எறும்புசெல் கறையா னுதி யூர்ந்திடுஞ் செந்துக் கெல்லாம்
வருமபி நயத்தைக் கூறில் மதாந்திர தாம்ப்ர சூடம்
கரமதந் தந்த ஐந்துக் களினியல் பறிந்து காட்டல்
பரிவாகு மிதன டுத்துப் பறவைகட் குரைசெய் வாமே. 626

ஜந்துக்கள்.

செய்யுட்கள் 624-626

மீன் - மச்சக்கை ; நண்டு - இரண்டு கைகளும் கற்கடகங்கள். தவளை - சக்கரக்கை. ஆமை - உண்ணுவத்தம் (?) (கூர்மக்கை.) முதலை - சுவத்திகப் பதாகை. அட்டை - சிலிட்ட சிகரம். எறும்பு, செல், கறையான் திகளான் ஊர்வனவுக் கெல்லாம், மதாந்திர தாம்ப்ர சூடம். இனி, பிறவற்றிற்கு அவ்வவற்றின் இயல்புகளை அறிந்து கைகள் அமைத்துக் கொள்ளலாகும்.

625 ஆம் செய்யுளில் தாவரங்களுக்கும் மலைகளுக்கும் இனிச் சொல்வோம். என்று கூறி, அடுத்த செய்யுள் வேறுக அமைந் துள்ளது. இவை முன்னே சொல்லப்பட்டுள்ளன.

2. ஜலஜந்துக்கள், 3. ஊர்வன அபிநயம் முற்றும்.

---

14. பறவைகள்

அன்னம், கவுதாரி, கிளி, கழுகு, அன்றில்.

அன்னத்திற் காகு மஸ்த மம்சாஸ்யங் கௌதா ரிக்குச்
சொன்னதோர் பாணக் கையாஞ் சுகதுண்டங் கிளிக்கே யாகும்
மன்னிய கழுகு ஞான முத்திரை யன்றி லுக்கு
அன்னமே கேள்சி லிட்ட வலபத்மக் கைய தாமே. 627

குயில், ஊர்க்குருவி, செம்போத்து.

புகலுவாய் குயிற னக்குப் புங்கித வராளக் கையாய்ச்
சிகையுமூர்க் குருவி யெல்லாஞ் சிலிட்டமுட் டிக்கை யெம்போ
தகுமென்பர் மொழியா லின்பந் தந்திடுங் கமல மாதே
மகிசெம்போத் ததோமு கச்சி லிட்டசுக துண்ட மாமே. 628

மீன்கொத்தி, வெண்புரு, மாடப்புரு, காட்டுப்புரு.

இயம்புவாய் மீன்கொத் திக்குச் சாலயக் கையே யேற்கும்
கயவெண்பு ரூக்க போதக் கைகுறுக் காய்ப்பி டித்தல்
புயன்மாடப் புரூக்க போதக் கையைப்புங் கிதமாய்ச் செய்தல்
அயல்காட்டுப் புரு விரண்டு அர்த்தசந் திரனென் றோதே.

கொக்கு, மின்மினி, வண்டு, காக்கை.

கொக்குச்சி லிட்ட வம்சா சியங்கூறு மின்மி னிக்கு
முக்யமா முகவம் சத்தை முகத்துநேர் பிடித்த லாகும்
வக்கிர வண்டிற் குப்பி ரமரக்கை யாங்காக் கைக்குத்
திக்கெலா மகிழு மாதே சிலிட்டவ ராள மாமே. 630

மைனா, குயில், நாணவந்தான்.

வலக்கையைத் கபித்த மாக்கி மறுகையை யர்த்த சந்த்ரன்
துலக்கவே யாக்கி யப்பாற் சோராமற் கனிட்டந் தன்னைப்
பலக்கவங் குட்டத் தோடே பின்னுதல் குயிலு மின்னம்
நலம்பெறு மைனா வோடே நாணவந் தானுக் காமே. 631

கண்டபேரண்டம், வல்லூறு, வலியான்.

கண்டபே ரண்டத் திற்குக் கண்டபே ரண்டக் கையரம்
கொண்டவல் லூறுக் காகுங் குயிற்கையி லிடது கையை
விண்டிலாட் டோள மாக்கன் மேவுமே வலியா னுக்குக்
கண்டக பித்தந் தன்னிற் கபித்தத்தை கீட்ட லாமே. 632

ஆந்தை, கூழைக்கடா, சிட்டுக்குருவி.

ஆந்தைக்குச் சொல்வர் வியாக்ர வஸ்தம்புங் கிதமாய்ச் செய்தல்
சேர்ந்தகூ ழைக்க டாய்க்கு வக்ரசிம் மமுக மாகும்
கூந்தனேர் மானே சிட்டுக் குருவிவ லியான் போலே
நேர்ந்துரை செய்வா யென்றே நிகழ்த்தினர் நூல்வல் லோரே.

கோழி, காளங்கோழி

கோழிக்குத் தாம்ப்ர சூடங் கூறுங்கா ளங்கோ ழிக்குப்
பாழிலாப் புங்கி தச்ச லனக்கையாய்ப் பகருங் கண்டாய்
வேழமத் தகத்தை நேர்ந்து விம்மிய முலையி னாளே
வாழிய சலசந் துக்கு வகையினி யுரைசெய் வோமே. 634

பறவைகள்

செய்யுட்கள் 627-634

1	அன்னம்	—	அம்சாசியம்
2	கௌதாரி	—	பாண அஸ்தம்
3	கிளி	—	சுக துண்டம்
4	கழுகு	—	ஞான முத்திரை
5	அன்றில்	—	சிலிட்ட அலபத்மம்
6	குயில்	—	புங்கித அராளம்
7	ஊர்க்குருவி	—	சிலிட்ட முட்டி
8	செம்போத்து	—	அர்தாமுகச் சிலிட்ட சுகதுண்டம்
9	மீன் கொத்தி	—	சாளீயக்கை
10	வெண்புரு	—	கபோதக்கையைக் குறுக்காய்ப் பிடித்தல்
11	மாடப்புரு	—	கபோதக்கையைப் புங்கிதமாய்ச் செய்தல்
12	காட்டுப்புரு	—	இரண்டு அர்த்த சந்திரக்கைகள்
13	கொக்கு	—	சிலிட்ட அம்சாசியக்கை

---

634 ஆம் செய்யுளில் சலசந்துக்கு 'வகையினியுரை செய்வோம்' என்று கூறியிருத்தலால் 624-5 செய்யுள்கள் இடம் மாறியுள்ளனபோலும்.

14	மின்மினி	—	அம்சாஸ்யத்தை முகத்தின் நேர் பிடித்தல்
15	வண்டு	—	பிரமரக்கை
16	காகம்	—	சிலிட்டவராளம்
17	மைனு	—	வலக்கையைக் கபித்தமாக்கி, மறுகையை அர்த்த சந்திரனுக்கி, பிறகு சுண்டு விரலோப் பலமாகக் கட்டைவிரலோடு பின்னுதல்
18	குயில்		
19	நாணவந்தான்		
20	கண்டபேரண்டம்	—	கண்டபேரண்டக்கை
21	வல்லூறு	—	குயிற்கையில் இடக்கையை டோளம்மக்கல்
22	வலியான்	—	கபித்தத்தோடு கபித்தத்தை நீட்டல்
23	ஆந்தை	—	வியாக்ர அஸ்தத்தைப் புங்கிதமாய்ச் செய்தல்
24	கூழைக்கடா	—	வக்ரசிம்மமுகம்
25	சிட்டுக்குருவி	—	வலியான் போன்றது
26	கோழி	—	தாம்பிரசூடம்
27	காஞங்கோழி	—	மே கையைப் புங்கிதம்மாகச் சலனஞ் செய்தல்

4. பறவைகளின் அபிநயம் முற்றும்.

---

15. விலங்குகள்

சிங்கம், புலி, பன்றி, முட்பன்றி, கரடி.

சிங்கமா மிடது சிங்க முகம்வலப் பதாகஞ் சேரில்
அங்கமி லர்த்த சந்த்ர னதோமுகம் புலியாய்ப் போற்றும்
சங்கீர்ண மகரம் பன்றி தருகஜ முகமுட் பன்றி
கொங்கலர் பதாகம் பத்ம கோசமாங் கரடிக் கென்னே. 635

எருமைக்கடா, மான், கணத்தி, கடமான்.

பேர்சிலிட்ட மிருக சிரத்திற் பெருவிரல் வலத்தன் மேதி
கோர்மிரு கச்சி ரம்மா னிகழுமே கணத்திக் குக்கை
ஓர்வீன முத்தி ரைப்புங் கிதமாகுங் கடமா னுக்குத்
தோர்விலா தர்த்த சந்த்ரன் சுவத்திக மாகச் சாற்றே. 636

கவரிமான், ஆண்மான், குரங்கு, நரி.

கவரிக்கு முட்டி முத்தி ரைக்கையா மாண்மா னுக்கு
அவமிலா தாவி ருத்த மிருகசிர மாங்கு ரங்கிற்
குவமைய தாகு முட்டி முகுளமே யுறுந ரிக்குப்
புவிதனில் வக்ர சிம்ம முகமெனப் புகலு மாதே. 637

பூனை, உடும்பு, கலிமான், கணுஞ்சு.

பூனைக்குக் கைய தாக மத்திம முகுளம் புல்லும்
ஊனமிற் றலப தாக முடும்பிற்காங் கலிமா னுக்கு
மோனமா முட்டிக் கையிற் கனிபெரு விரலு நீட்ட
மானேக ணுஞ்சு நாக பந்தமாய் வழுத்து நூலே. 638

பெருச்சாளி, எலி, முயல், யானை, நாய்.

முகுளமுந் தருவா மர்த்த முகுளமே யெலிய தாகும்
பகர்முயல் தலப தாகம் பக்கத்திற் பிடித்தல் யானைக்
குக்கையா மலபத் மம்ம தோமுகம் பிடித்த லுய்க்குப்
பகருவர் பரத நூலிற் சிலிட்டப தாக மென்றே. 639

ஒட்டகை, ஆட்டுக்கடா, ரிஷபம், கழுதை.

கண்டாஞ்ச லிக்கை யொட்ட கைக்குவாட் டுக்கி டாய்க்கு
ரெண்டுசி கரத்தைக் கூட்டல் தலசிங்க முகம்வி டைக்கு
மண்டுபின் ஞஞ்ச லிக்கை கழுதைக்கு வகுத்த லாகும்.
* * * * * 640

ஒட்டகத் திற்குச் சொல்லு முத்வேஷ்டி தாஞ்ச லிக்கை
ஆட்டுக்கி டாய்க்குச் சொத்தி கச்சிக ரக்கை யாகும்
தேட்டமா மிடபத் திற்குச் சிம்மமு கக்கை யென்னும்
பூட்டிலாக் கழுதைக் காகும் புட்பபு டக்கை யென்றே. 641

யாளி.

தற்சனி மத்தி மத்தைச் சேர்த்தனு மிகையங் குட்டம்
வற்சமில் லாம லேயுட் புறஞ்சேர்த்து வகைய தாக
மிச்சம தாமி ரண்டு சிறுவிரல் வளைத்துக் காட்ட
நிச்சய மாக யாளிக் காமென நிகழ்த்து வாரே. 642

முதலை, பசு, புருஷாமிருகம்.

தோணுமு தலைக்குத் தான்ப தாகச்சு வத்தி கக்கை
ஊணுள பசுவிற் குச்சங் கீர்ணமுத் திரைக்கை யோதும்
தாணுவாம் புருட ரூபந் தனைக்காட்டி மிருகக் கையைப்
பூணவே பிடித்தா லதனைப் புருஷாமி ருகத்திற் கோதே. 643

புள்விமான், கலைமான்.

செப்புவோ மின்ன மும்ப ரதமுனி மதத்திற் றோர்ந்து
ஒப்பிலா விலங்கு கட்கு ஓதிய வபிந யக்கை
தப்பிய புள்ளி மானின் றனக்குமான் றலைக்கை யாகும்
கைப்புடைக் கலைமா னுக்குக் கஜமுகக் கையென் றோதே.

வெள்ளாடு, பெருச்சாளி, எலி, ஓணன்.

வெள்ளாடு சூசிக் கையாய் விளம்புவர் பெருச்சா ளிக்கு
விள்ளுமே யர்த்த முட்டி விசையோடு மெலித னக்குப்
பிள்ளையே கேள்சி லிட்ட பிரமர மோணை னுக்குத்
துள்ளிய கரம தாகும் வக்கிர சூசி யென்றே. 645

பல்லி, சிலந்திப்பூச்சி, நாய்.

ஏச்சிலாப் பல்லிக் குச்சி லிட்டம யூர மாகும்
வாச்சிலந் திப்பூச் சிசந்தங் சிசக்கை யாகப் பற்று
மாச்சியாஞ் சிங்கத் திற்கும் யானைக்கு முவமா னஞ்சொல்
பாச்சனுய்க் குச்சி லிட்ட பதாகக்கை யாக வோதே. 646

பசு, யானை, புலி.

பசுவுக்குச் சுரபிக் கையாய்ப் பகருவர் யானைக் குக்கை
நிசமதாங் கரியஸ் தம்போல் நீட்டிய புலித னக்கு
வசையிலா தோது வர்சு வத்திக மூர்ஞ பக்கை
இயையுமிக் கரங்க ளென்றே யியம்பினர் நூல்வல் லோரே.

யாளி, நரி, முயல், குதிரை.

யாளிக்கு வர்த்த சந்த்ர னிரண்டையும் டோள மாக்கல்
வாழிய நரிக்குச் சொல்வர் வக்கிரசிம் மமுக மென்றே
பாழிலா முயற னக்குப் பகருஞ்சிம் மமுக மென்று
மீளிகுதி ரைக்கு மான்ற லெச்சுவத் திகமாய் விள்ளே. 648

சரபம்

வலக்கைவி யாக்கி ரத்தைப் புங்கிதஞ் செய்து மற்றும்
சிலபெறு மிடது கையைச் சிகரம தாக்கி யப்பால்
பலமதா கவேவ்யா விர்த்தம் பிடித்திட லாகு மென்று
நிலபெறுஞ் சரபத் திற்கு நேர்ந்துரை செய்வாய் மானே.

விலங்குகள்

செய்யுட்கள் 635-649.

1	சிங்கம்	—	இடக்கை சிங்கமுகமும், வலக்கை பதாகமும்
2	புலி	—	அர்த்த சந்திரனை அதோ முகமாய்ப் பிடித்தல்
3	பன்றி	—	சங்கீர்ண மகரம்
4	முட்பன்றி	—	கஜமுகம்
5	கரடி	—	பதாகம், பத்மகோசம்.
6	எருமைக்கடா	—	சிலிட்ட மிருகசிரத்தின் பெருவிரலை வளைத்தல்
7	மான்	—	மிருகசிரம்
8	கணத்தி	—	லீன முத்திரையைப் புங்கிதமாக்குதல்
9	கடமான்	—	அர்த்த சந்திரன் சுவத்திகம்
10	கவரி	—	முட்டி
11	ஆண்மான்	—	ஆவிருத்த மிருகசிரம்
12	குரங்கு	—	முட்டி முகுளம்
13	நரி	—	வக்ரசிம்மமுகம்
14	பூனை	—	மத்திம முகுளம்
15	உடும்பு	—	தலபதாகம்
16	கலைமான்	—	முட்டிக்கையில் சுண்டு விரலையும் பெரு விரலையும் நீட்டல்
17	கணுஞ்சு	—	நாகபந்தம்
18	பெருச்சாளி	—	முகுளம்
19	எலி	—	அர்த்த முகுளம்
20	முயல்	—	தலபதாகம் பக்கத்தில் பிடித்தல்
21	யானை	—	அலபத்மம் அதோமுகம் பிடித்தல்
22	நாய்	—	சிலிட்டபதாகம்
23	ஒட்டகை	—	அஞ்சலிக்கை
24	ஆட்டுக்கிடாய்	—	இரண்டு சிகரக்கைகளைக் கூட்டல்
25	ரிஷபம்	—	தலசிங்கமுகம்

26	கழுதை	—	அஞ்சலிக்கை
27	ஒட்டகம்	—	உத்வேஷ்டித அஞ்சலிக்கை
28	ஆட்டுக்கடா	—	சொத்திகச் சிகரக்கை
29	ரிஷபம்	—	சிம்மமுகக்கை
30	கழுதை	—	புட்பபுடக்கை
31	யாளி	—	சுட்டுவிரல், நடுவிரலைச் சேர்த்து அதன் உட்புறத்துள் இடைவெளியின்றி, மோதிரவிரல், கட்டைவிரல் இவற்றைச் சேர்த்து, சிறுவிரல்களை வளைத்து இவ்விதம் இரண்டு கைகளையும் செய்தல்
32	முதலை	—	பதாகச் சுவத்திகம்
33	பசு	—	சங்கீர்ண முத்திரைக்கை
34	புருஷாமிருகம்	—	புருடரூபம் காட்டி, மிருகக்கை பிடித்தல்
35	புள்ளிமான்	—	மான் தலைக்கை
36	கலைமான்	—	கஜமுகக்கை
37	வெள்ளாடு	—	சூசிக்கை
38	பெருச்சாளி	—	அர்த்த முஷ்டி
39	எலி	—	சிலிட்ட பிரமரம்
40	ஓணன்	—	வக்கிரசூசி
41	பல்லி	—	சிலிட்ட மயூரம்
42	சிலந்திப்பூச்சி	—	சந்தம்சம்
43	நாய்	—	சிலிட்டபதாகம்
44	பசு	—	சுரபிக்கை
45	யானை	—	கரியஸ்தம்
46	புலி	—	சுவத்திக பூர்ணநாபக்கை
47	யாளி	—	அர்த்த சந்திரன் இரண்டையும் டோள மாக்குதல்
48	நரி	—	வக்கிர சிம்மமுகம்
49	முயல்	—	சிம்மமுகம்
50	குதிரை	—	மான்தலைச் சுவத்திகம்
51	சரபம்	—	வலக்கையை வியாக்கிரமாக்கிப் புங்கிதம் செய்து, இடக்கையைச் சிகரமாக்கி வியாவிருத்தம் பிடித்தல்

5. விலங்குகளின் அபிநயம் முற்றும்.

குறிப்பு : இங்கு 51 விலங்குகள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் செல திருப்பிக் கூறப்பட்டுள்ளன.



மனிதப்பகுதி

16. மானிடர்—பொது

தானமா மிரண்டு கையைச் சந்தம்ஸ மாகக் கூட்டி
ஈனமில் வலக்கை தன்னை யிரண்டுமூன் றுதரஞ் சோயத்
தானேக்கி யக்க ரத்தைச் சலனம தாகச் செய்தல்
கோருறப் பரத நூலோர் நிகழ்த்தினர் முறைதெ ரிந்தே. 650

மானிடர்: இரண்டு கைகளைச் சந்தம்சமாகச் செய்து, வலக் கையை இரண்டு மூன்று தடவைகள் கீழ்நோக்கிச் சலனமாகச் செய்தல்.

மானிடர் பொது அபிநயம் முற்றும்.

---

17. ஜாதிகள்

பிராமணன், க்ஷத்திரியன்

சீர்மறை யோர்க்குப் பூணூற் காட்டியே சிகரம் பற்றல்
பார்பதா கக்க ரத்தை வியாவிர்த்த மாகப் பற்றித்
தார்சிக ரம்பி டித்தற் சத்திரர்க் காகு மென்று
கோருறப் பரத நூலோர் நிகழ்த்தினர் முறைதெ ரிந்தே. 651

வைசியன்

இடக்கர மதனி லம்சா சியமேற்று வலக்க ரத்தில்
கடகாமு கம்பி டித்துச் சிகரக்கை தன்னைக் காட்டல்
படிமிசை வைசி யர்க்குப் பகரலா மென்று நூலோர்
திடமுள முறைதெ ரிந்தே செப்பினர் கமல மாதே. 652

பிறர்

பாசிடஞ் சிகரம் பற்றிப் பனுவலாம் வலக்க ரத்தில்
சூசியைக் காட்டி யேசி கரம்பற்றற் சூத்தி ரற்காம்
மாசிலாப் புவியில் வாழு மற்றச்சா திகளுக் கெல்லாம்
தேசமுந் தொழிலும் வர்ண ச்ரமங்கண்டு செப்பு மானே. 653

மற்றொரு வகை

மறையோன்

மறையோனுக் கமுசாஸ் யத்தை மாறிநேர் பிடிக்கச் சின்னம்
நிறையதாய்க் கொளும்ப தாகச் சதுரத்தை முகத்து நேரில்
திறைகொளப் பிடிக்கத் தானத் தெரிசன மாகு மென்று
குறைவிலா தபிந யித்துக் கூறுவை முறைதெ ரிந்தே. 654

க்ஷத்திரியன்

பிசகாம லலப துமமுத் வேஷ்டிதம் பிடிக்கச் சின்னம்
ருசுவதாம் பதாகந் தன்னி னுனிவிரல் கூவள வூத்துத்
தசையுள புயத்தில் வைத்தற் ருன்றெ ரிசன மீதை
விசைகொளுஞ் சத்தி ரர்க்கு விளம்புவாய் மூறைதெ ரிந்தே.

வைசியன்

இட்டமாய்ப் பதாகக் கையை யெழில்பெறுந் துடையின் கிட்டத்
தட்டாமற் சேர்க்க வைக்கத் தான்றெ ரிசன மென்னும்
மட்டிலா தக்க ரந்தான் வளம்பெற வபிர யித்தல்
சுட்டுவாய் வைசி யன்றன் சொரூபத்தைக் கமல மாதே. 656

சூத்திரன்

பொன்னுள வராளக் கையைப் புங்கித மாய்ப்பி டித்தல்
சின்னக மாஞ்சங் கீர்ண சிகரக்கை தனிற்சி றக்கத்
துன்னுமங் குட்ட நீட்டச் சொல்லுஞ்சங் கீர்ண பாணந்
தென்னுசி கரமே தானத் தெரிசனம் சூத்தி ரற்கே. 657

ஜாதிகளின் அபிநயம்.

செய்யுட்கள் 651-657

மறையோர் : பூணூல் காட்டிச் சிகரக்கை அமைத்தல்.

க்ஷத்திரியர் : பதாகக்கையை வியாவிர்த்தமாகப் பற்றிச் சிகரம் பிடித்தல்.

வைசியர் : இடக்கையில் அம்சாசியமும், வலக்கரத்தில் கடகா முகமும் பிடித்துப் பின் சிகரக்கையைக் காட்டல்.

சூத்திரர் : இடக்கை சிகரமும் வலக்கை சூசியும் காட்டிப் பின் சிகரம் பிடித்தல்.

மற்றவர் : மற்றவர்களுக்குத் தேசம், தொழில், வருணசிரமும் கொண்டு காட்டுக.

(வேறொரு வகை)

மறையோர் : அமுசாசியத்தை மாறி நேர்பிடித்து, பதாகத்தை யும் சதுரக்கையையும் முகத்து நேரில் பிடித்தல்.

க்ஷத்திரியர் : அலபத்மத்தை உத்வேஷ்டிதமாய்ப் பிடித்து, பதாகத்தில் நுனி விரல்களை வளைத்துப் புயத் தில் வைத்தல்.

வைசியர் : பதாகக்கையைத் துடையின் அருகே வைத்தல்.

சூத்திரர் : அராளக்கையைப் புங்கிதமாய்ப் பிடித்து, சங்கீர்ண சிகரக்கையில் அங்குட்டத்தை நீட்டிச் சங்கீர்ண பாணமாக்கிச் சிகரம் பிடித்தல் (?)

ஜாதிகளின் அபிநயம் முற்றும்.

---

18. நாயகிகள்

(i) மடந்தையர்

குலமடந்தை

இடதமு சாசி யத்தைக் கழுத்தில்வைத் தேவ லக்கைப்
படிபரி வர்த்த மாகப் பதாகத்தைப் பிடித்தல் சொந்தக்
குடிவாழத் தாலி கட்டிக் கொண்டப திவிர தைக்கு
அடுமெனப் பரத நூலோ ரறைந்தன ரறிந்து கொள்ளே.658

அயல் மடந்தை

கலியாணம் செய்து கொண்ட கணவனை நீங்கி வேறே
கொழுநனைத் தேடிக் கூடுங் கோதைக்குக் கலவிக் கையைப்
பலங்காட்டி வலக்கை தன்னைப் பரிவிர்த்த பதாகம் பற்றல்
செலுமெனப் பரத நூலோர் தேர்ந்துரை செய்தார் மானே.

விலை மடந்தை

கடகாமு கக்கை சுண்டிக் கலவியைக் காட்டி யேயப்
படிவலம் பரிவர்த் தப்ப தாகமா யபிந யித்தல்
வடிவுள விலைமா தர்க்கு வகுத்திட லாகு மென்று
திடமதாய்ப் பரதங் கற்ற சிறப்புளோ ருரைசெய் தாரே. 660

(i) மடந்தையர்

குலமடந்தை : [முறையே மணந்த மனைவி]. இடக்கை அமுசாசியத்தைக் கழுத்தில் வைத்து, வலக்கையால் பரிவர்த்தமாகப் பதாகத்தைப் பிடித்தல்.

ஜாதிகளுக்குரிய கையை அபி. த. தமிழ் (117-119) செய்யுட்களில் வேறு விதமாகக் கூறும்.

அயல் மடந்தை : [மணம் புரிந்தவனை விட்டு அந்நியனை நாடு பவள்]. கலவிக் கையைப் பலங்காட்டி (?) வலக்கையைப் பரிவர்த்தபதாகம் பற்றல்.

விலைமடந்தை : [பரத்தையர்]. கடகாமுகக் கையைச் சுண்டி (?) கலவிக் கையை (?) க்காட்டி வலக்கையைப் பரிவர்த்தபதாகமாய்க் காட்டல்.

(ii) நற்சாதிப் பெண்கள்

பதுமினி, சித்தினி

சட்சதை வதங்கள் கோருஞ் சதுரையாம் பதுமி னிக்கு
வட்சமாஞ் சுகதுண் டக்கை யபவேஷ்டி தமதாய்ப் பற்றல்
உச்சரி ஷபஷி ஷாதங் கோருஞ்சித் தினிக்கு வோதும்
மெச்சிய பரத நூலின் மிருகசீ ரடக்கை யென்றே. 661

சங்கினி, அத்தினி

பஞ்சம மத்தி மங்கள் பற்றிய சங்கி னிக்கு
வஞ்சிடா தம்ஸ பட்ச மபவேஷ்டி தம்பி டித்தல்
கொஞ்சுகாந் தாரங் கோருங் கோதையா மத்தி னிக்குத்
தஞ்சம தாக வர்த்த சதுரக்கை பிடித்த லாமே. 662

இன்னமிம் மாத ருக்கு வியல்பதாங் கோவை பற்றிப்
பொன்னல பல்ல வத்தை நெற்றியும் புயமு மார்பு
நன்னய நாபி யும்மிவ் விதமாக நயந்து காட்டல்
மன்னுமென் றறைந்தார் நந்தி கேச்சுரர் வகைய றிந்தே.

(ii) நற்சாதிப் பெண்கள்

பதுமினி : [சட்ஜம், தைவதம் இவற்றிற்குரியவள்]. சுகதுண் டக்கையை அபவேஷ்டிதமாய்ப் பற்றல்.

சித்தினி : [ரிஷபம், நிஷாதங்களுக்குரியவள்]. மிருகசீரிடக்கை பற்றல்.

சங்கினி : [பஞ்சம, மத்திமங்களுக்குரியவள்]. அம்ஸ பட்சத்தை அபவேஷ்டிதமாகப் பிடித்தல்.

அத்தினி : [காந்தாரத்துக் குரியவள்] அர்த்த சதுரக்கை.

வேறொரு வகை : அலபல்லவத்தை, நெற்றி, புயம், மார்பு, நாபி இவற்றில் முறையே வைத்துக் காட்டல்.

இது, நந்திகேசுவரர் கூறியது.

(iii) அஷ்டவித நாயகிகள்

சுவாதீனபதிகா

நினைத்ததை முடிக்கு நாய கனைக்கொண்டே நேரி ழைக்குச்
சினமிலா வலக்கை தன்னிற் றிரிலிங்க முட்டி காட்டிப்
பினும்சிக ரம்ப தாகம் பரிவர்த்தம் பிடித்துக் காட்ட
மனுமெனப் பரத நூலோர் வகுத்துரை செய்தார் மானே.

வாஸகஸஜ்ஜிகா

குணமுடன் பள்ளி நின்று கொழுநன்றன் வரவைப் பார்க்கும்
வனிதைக்குச் சிகரங் காட்டி மற்றும்ப தாகந் தன்னைத்
தனிகேர்புங் கிதம தாகச் சலனஞ்செய் தேதி ரும்பப்
பனிகிகர் மொழியி னுளே பதாகத்தைப் பிடிப்ப தாமே. 665

விரஹோத்கண்டிதா

நாயகன் றன்னைச் சேர விரகத்தைக் கொள்ளு நங்கை
தாயக மாக நெஞ்சிற் சந்தம்சம் பிடித்து மற்றும்
சாயாமற் பரிவிர்த் தப்ப தாகத்தைப் பிடிப்ப தென்றே
நேயமாய்ப் பரத நூலோர் நீணிலத் துரைசெய் தாரே. 666

விப்ரலப்தா

காதன்செய் மோச மெண்ணி நற்சகி யைக்கோ பிக்கும்
பேதைக்கு வர்த்த சந்த்ரன் பிடித்துவி ரித்துப் பின்னும்
காதலாய்த் தணித்துக் கோத்துக் கடுமையா முகத்தி னுடே
மாதேமுன் போற்ப தாக மாகவே பிடித்த லாமே. 667

கண்டிதா

ஏலத்தன் கொழுநன் வேறே யேந்திழை கூடி யந்தக்
காலவந் தவனைக் கண்டு கண்டிக்கு மாத ருக்கு
மாலிடஞ் சிகர மாக்கி வலம்வ்யாவிர்த் தப்ப தாகம்
கோலமாய்க் கண்டித் துப்பின் னுயகி தரத்தைக் கொள்ளே.

கலகாந்தரிதா

மணவாளன் றனைக்கோ பித்துத் துரத்திப்பின் மயங்கு மங்கை
மணியிடஞ் சிகரம் மற்றிவ் வலப்பதா கத்தா னீக்கி
அணியப்பின் கற்க டத்தை யதோமுக மாய்க்க விழ்த்துப்
பணியவே பரிவர்த் தம்ப தாகத்தைப் பற்ற லாமே. 669

ப்ரோஷித பர்த்ருகா

ஊர்சென்ற கணவன் றன்னை நினைந்துரு கும்பே தைக்கும்
சோராமற் சிகரம் பற்றிச் சூசிக்கை யால்வ்யா விர்த்தம்
மீரூமற் காட்டி யப்பால் விரகக்கை தன்னைக் காட்டல்
தேருமென் றுலகிற் காணச் செப்பினர் நூல்வல் லோரே.

அபிஸாரிகா

கொழுநனைக் குறித்துச் செல்லுங் கோதைக் கிருகை டோளும்
குழைவிலா தாக்கி மேனி குலுங்கியே நடந்து காட்டல்
பழியாமற் காட்டி யந்தப் பரிவிர்த்த பதாகம் பற்றல்
உழவெனப் பரத நூலோ ரோதின ரறிந்து கொள்ளே. 671

மற்றநா யகிக ளுக்கு வழுத்துவர் பானு தத்தன்
சொற்றவ் வடநூ லின்மஞ் சரிதனை யறிந்த வர்க்கே
உற்றிடும் பக்கு வம்ப ருவங்கண் டபிந யித்தல்
பற்றுமென் றுரைத்தார் பெய்யாம் பரதநூ லுணர்ந்தே மேலோர்.

(iii) அஷ்டவித நாயகிகள் 664-672

நா. சா. (xxiv. 210-211.) எட்டுவித நாயகிகளின் பெயர்களைப் பின்வருமாறு அமைக்கும் (1) வாஸகஸஜ்ஜிகா, (2) விரஹோத்கண்டிதா, (3) ஸ்வாதீனபர்த்ருகா, (4) கலஹாந்தரிதா, (5) கண்டிதா, (6) விப்ரலப்தா, (7) ப்ரோஷிதபர்த்ருகா, (8) அபிஸாரிகா.

(1) சுவாதீனபதிகா :—நினைத்ததை நாயகனைக் கொண்டு முடிப்பவள்—. வலக்கையில் திரிலிங்கமுட்டி காட்டி, பிறகு சிகரம், பதாக பரிவர்த்தம் பிடித்துக் காட்டல்.

(2) வாஸகஸஜ்ஜிகா : [கூட்டத்துக்குத் தயாரித்துக் கொண்டவள்]—படுக்கையிலிருந்து கொண்டு கணவன் வரவை எதிர்பார்ப்பவள்—. சிகரம் காட்டி, பதாகத்தை நேர்புங்கிதமாகச் சலனம் செய்தே, திரும்பப் பதாகத்தைப் பிடிப்பது.

(3) விரஹோத்கண்டிதா : [கணவன் பிரிவால் வருந்துபவள்]—நாயகனைச்சேர விரகங் கொள்பவள்—. நெஞ்சுக்கு நேரே சந்தம்சம் பிடித்து, மற்றும், சாயாமல் பரிவர்த்த பதாகம் பிடித்தல்.

(4) விப்ரலப்தா : [கணவனால் மோசம் செய்யப்பட்டவள்]—நாதன் செய்த மோசத்தை எண்ணிச் சகியைக் கோபிப்பவள்—.

அர்த்த சந்திரனைப் பிடித்து விரித்துப் பிறகு, காதலாய்த் தணித்துக் கோத்து, கடுமையான முகத்தோடே முன்போல் பதாகமே பிடித்தல்.

(5) கண்டிதா: [காதலனோடு கோபிப்பவள்]—வேறொருத்தியோடு கூடிக் காலையில் வந்த கொழுனைக் கண்டு கோபிப்பவள்—. இடம் சிகரமாக்கி, வலம் வியாவிருத்த பதாகம் பிடித்தல்.

(6) கலகாந்தரிதா: [கணவனிடமிருந்து கலகத்தால் பிரிந்தவள்] —கணவனைக் கோபித்து அவனைத் துரத்திப் பிறகு மயங்குபவள்—. இடக்கையில் சிகரம் வைத்து, அதனை வலக்கைப் பதாகத்தால் நீக்கி, பிறகு கற்கடகத்தை அதோமுகமாய்க் கவிழ்த்து, பிறகு பரிவர்த்த பதாகத்தைப் பற்றல்.

(7) ப்ரோஷிதபர்த்ருகா: [கணவனைப் பிரிந்துள்ளவள்]—ஊர் சென்ற கணவனைப் பிரிந்துருகுபவள்—. சிகரம் பற்றி, சூசிக்கை யால் வியாவிருத்தம் காட்டி, அப்பால் விரகக்கை காட்டல்.

(8) அபிஸாரிகா : [காதலனை நோக்கி நகர்பவள்]—கணவனைக் குறித்துச் செல்பவள்—. இரு கைகளையும் டோளமாக்கி, மேனி குலுங்கியே நடந்து காட்டி, பிறகு பரிவாத்த பதாகம் பற்றல்.

மற்ற நாயகிகள்: அவரவர் பக்குவம், பருவங் கண்டு, **பானுதத்தன் இயற்றிய மஞ்சரி** (ரஸமஞ்சரி) என்ற வடநூலில் உள்ளபடி அபிநயித்தல்.

நாயகிகளின் அபிநயம் முற்றும்

---

19. நால்வகை முதல்வர்

கூஷ்மாண்டன், பாஞ்சாலன்.

மாசிலா வராளக் கையை மார்புநேற் பிடித்துக் காட்டக்
கூசிமா ரனுக்கா மென்றே கூறுவர் சுகதுண் டக்கை
நேசமு தாகப் பற்றி நெற்றிநேர் பிடித்துக் காட்டப்
பேசுவ ரதைப்பாஞ் சாலன் றனக்கெனப் பேதை மாதே.

பத்மரன், நந்தன்.

பத்மரன் றனக்கு மூட்டிக் கரமார்பு நேராய்ப் பற்றல்
புத்மிசேர் தத்த னுக்குச் சிகரக்கைப் புயத்தி னேரே
வைத்திட லாகு மென்று மாநிலத் தோர்கள் காண
அத்தங்கள் பிடிப்ப வர்க்கா யறைந்தனர் நூல்வல் லோரே.

நால்வகை முதல்வர்

செய்யுட்கள் 673-674

கூஷ்மாரன்(?) : அராளக்கையை மார்பு நேர் பிடித்துக் காட்டல்.

பாஞ்சாலன்: சுகதுண்டக்கையை நெற்றி நேர் பிடித்துக் காட்டல்.

பத்திரன் : முட்டிக்கையை மார்பு நேராகப் பற்றல்.

தத்தன் : சிகரக்கையைப் புயத்தின் நேரே வைத்தல்.

நால்வகை முதல்வர் அபிநயம் முற்றும்.

---

20. மூவித நாயகர்கள்

பதி, உமாபதி

பேசுவாய் பதிக்குச் சொந்தப் பேதைகை காட்டி யப்பால்
மாசிலாச் சிகரக் கையை மகிழ்வுடன் பிடித்த லாகும்
நேசமா முமாப திக்க யல்மின்கை காட்டி நேரே
தேசிக சிகரக் கையைப் பிடிப்பதா மெனவே செப்பே. 675

வைசிகன் அபிநயம்

செப்புவாய் வைசி கன்ற னக்குவே சிப்பெண் கையை
ஒப்புடன் காட்டி யேசி கரம்பிடித் திடலே யோதும்
மைப்படி குழலி னளே மற்றநா யகர்க ளுக்குத்
துப்புற வவர்கு ணங்கள் துலங்கமேற் காட்டு மாதே. 676

மூவித நாயகர்கள்

பதி : சொந்த மனைவிக்குரிய கைகாட்டி, அப்பால் சிகரக்கை யைப் பிடித்தல்.

உமாபதி : அயல் பெண்ணுக்குரிய கைகாட்டி, தேசிகச் சிகரக் கையைப் பிடித்தல்.

வைசிகன் : வேசிப்பெண்ணுக்குரிய கைகாட்டி, சிகரம் பிடித் திடல்.

மற்றவர் : அவரவர் குணங்கள் துலங்கக் காட்டுதல்.

மூவித நாயகர்களின் அபிநயம் முற்றும்.



21. பாந்தவ்யம்

புருடன், பெண், தம்பதி.

வாமத்திற் சிகரம் சேர்த்தால் வரும்புரு டற்கே யாகும்
மாமிரு கசிரந் தன்னை வலக்கைசேர்த் தாற்பெண் ணுக்காம்
வாமத்திற் சிகர மற்ற வலக்கையில் மிருக சீர்ஷம்
பூமலி குழலீர் சேர்த்தாற் புருடன்பெண் டாட்டிக் காமே.

தாய்

வாமமாங் கைவா மப்பால் வருமர்த்த சந்த்ரன் சேர்த்துத்
தாமமார் வலக்கை தன்னிற் சந்தம்ஸம் பிடித்த லோடே
வாமென வயிற்றிற் சுற்றி யதன்பின்னே வாமக் கையில்
மாமிரு கசிரஞ் சேர்த்தான் மாதாவுக் காகுந் தானே. 678

தகப்பன், மாப்பிள்ளை.

இயம்பிய தாய்க்க ரத்தி லிடக்கையிற் சிகரஞ் சேர்த்தால்
சயந்தருந் தகப்ப னுர்க்குந் தன்மாப்பிள் ளைக்கு மாக
நயந்தரு பரத சாஸ்திர நன்னூலோர் யாவர் நெஞ்சும்
மயங்கிடா வண்ணஞ் சொந்த மாமிக்குக் கைசொல் வோமே.

மாமியார்

இலகுமம் சாசி யத்தை யிடக்கையாற் கழுத்திற் சேர்த்து
வலதுசந் தம்சந் தன்னை வயிற்றினிற் சுழற்றி யேபின்
கலமிகு மிடக்கை தன்னில் தன்மிருக சீர்ஷஞ் சேர்த்தல்
மலர்மலி குழலீர் சொந்த மாமிக்கா மென்று சொல்லே. 680

மாமனார், அண்ணன், தம்பி.

மாமிதன் கையிற் றானே வலக்கையிற் சிகரம் சேர்த்தல்
மாமனு ருக்கா மென்று வழுத்தினர் பரதந் கற்றோர்
மாமபூ ரக்கை தன்னில் வருமுன்னும் பின்னுங் காட்டில்
தாமஞ்சேர் குழலீ ரண்ணன் றம்பிக்கு மாகுந் தானே. 681

குறிப்பு :—பாந்தவியக்ஷோக் குறிக்கும் இப்பகுதி, இப்படியே தமிழ் அபிநயதர்ப்பண நூலிலும் (120-129) உள்ளன. அபிநயதர்ப்பண ஆங்கிலப் பதிப்புக்களிலும் இவ்வாறே உள்ளன.

மைத்துனன், நாத்தி.

வாமக்கை சிகரம் பக்க வலக்கைகர்த் தரிமு கஞ்சேர்த்
தாமைத் துனனிற் போகு மதின்வலக் கையின் மீதே
நீமிரு கசிரஞ் சேர்த்தா னிகழ்த்துவர் காத்த னுர்க்கே
பூமலர்க் குழலி னுளே புத்திரன் றனக்குச் சொல்வாம். 682

புத்திரன், நாட்டுப்பெண்.

வலக்கைசந் தம்ஸம் சேர்த்து வயிற்றினி லேசு முற்றி
இலக்கிய விடக்கை தன்னி லெழுசிக ரம்பி டித்தால்
பலத்தபுத் திரனுக் காகும் பிசகிலா மிருக சீர்ஷம்
வலக்கையிற் பிடித்தாற் சொந்த நாட்டுப்பெண் வழுத்து மானே.

சக்களத்தி

பாசக்கை பிடித்தி ரண்டு பக்கமு மிரண்டு கையால்
நேசித்து மிருகச் சென்னி நீபிடித் திட்ட போது
காசினி தனில்வா முஞ்சக் களத்திக்கா மென்ற நித்துப்
பேசினர் பரத நூலோர் பிரபல மாகத் தானே. 684

பாந்தவ்யங்கள்

செய்யுட்கள் 677-684

(1) புருஷன் : இடக்கையில் சிகரம்.

(2) பெண் : வலக்கையில் மிருகசீரிடம்.

(3) தம்பதி : இடக்கையில் சிகரமும், வலக்கையில் மிருகசீரிட மும் வைத்தல்.

(4) தாய் : இடக்கையில் அர்த்தசந்திரனைச் சேர்த்து, வலக் கையில் சந்தம்ஸத்தைப் பிடித்து, வயிற்றில் சுற்றி, அதன்பின் இடக்கையில் மிருகசீரிடம் சேர்த்தல்.

(5) தகப்பன் : மேலே சொன்ன தாய்க்கைகளில், இடக் கையில் சிகரம் சேர்த்தல்.

(6) மாப்பிள்ளை ; ஷே.

(7) மாமியார் : அம்சாசியத்தை இடக்கையால் கழுத்தில் சேர்த்து, வலக்கையில் சந்தம்சம் கொண்டு வயிற்றிலில் சுழற்றி, பிறகு இடக்கையில் மிருகசீரிடம் சேர்த்தல்.

(8) மாமனர் : மாமியார்க்குரிய கைகளில், வலக்கையில் சிகரம் சேர்த்தல்.

(9) அண்ணன், தம்பி : மயூரக்கையை முன்னும் பின்னும் காட்டல்.

(10) மைத்துனன் : இடக்கை சிகரம், வலக்கை கர்த்தரீமுகம் கொள்ளல்.

(11) நாத்தி : மைத்துனர்க்குரிய கையில் வலக்கை மிருகசிரிடம் கொள்ளல்.

(12) புத்திரன் : வலக்கை சந்தம்சம் சேர்த்து வயிற்றினிலே சுற்றி இடக்கையில் சிகரம் பிடித்தல்.

(13) நாட்டுப்பெண் : வலக்கையில் மிருகசிரிடம் கொள்ளல்.

(14) சக்களத்தி : பாசக்கையைக் காட்டிப்பின், இரு கைகளா லும் மிருகசிரக்கையை இரண்டு பக்கங்களிலும் காட்டல்.

பாந்தவ்யங்களின் அபிநயம் முற்றும்.

---

22. அரசர்கள்

அரிச்சந்திரன், நளன், புரூரவன்.

திருவரிச் சந்தி ரற்குச் செப்புவர் சுகதுண் டக்கை
இரவிநேர் நளன்ற னக்கு விடமுடுக் குவல மஞ்ஞை
அருள்புரூ ரவருக் கத்த மாம்வலத் தினின்முட் டிக்கை
தெரிவையே யிடது கையிற் றிரள்பத்ம கோசம் பற்றே. 685

சகரன், இராவணன், அம்பரீஷன், சிபி.

கோசல சகரர்க் கத்தங் கொளுமிரு கைப்ப தாகை
மாஸில்ரா வணன்ப தாகை வகுத்தன ரம்ப ரீஷன்
நேசஞ்சேர் சிகரக் கையாய் நிகழ்த்துவர் சிபித னக்குப்
பேசுவர் கபித்த மென்றே பிறைநுதற் கமல மாதே. 696

கர்ணன், அருச்சுனன், பீமன், சகாதேவன்.

மாதேகேள் கர்ண னுக்கு வழுத்துவர் முகுளக் கையாய்
மேதினி யருச்சு னற்கு விளம்பினர் திரிப தாகை
கோதிலா வீம னுக்குக் கூறுவர் முட்டிக் கையாய்
நீதிசேர் சகாதே வர்க்கு நிகழ்த்துவர் மகர மென்றே. 687

நகுலன், பகீரதன், நந்தி, ரகு.

மகரஞ்சேர் நகுல னுக்கு வகுத்தனர் தாம்ப்ர சூடம்
பகிரத னர்த்த சந்திரன் பகர்நந்தி வலது கையில்
சுகமுறு முகுள மோடு சூசியா மிடது கையில்
தகைமைசேர் ரகுப தாகை சாற்றினர் பரத நூலோர். 688

தசரதன், ராமன், பரதன்.

பரதநூற் றசர தற்குப் பகரல பதுமக் கையைத்
திரமதா யுத்வேஷ் டிதத்துச் சேர்த்தசொத் திக்கை யென்றே
முறைவரி ராம னுக்கு முற்றிலுஞ் சிகரக் கையாய்த்
தெரிவையே வலது தோண்மேற் சிகரக்கை பரதற் காமே.

இலக்குமணன், சத்துருக்கன், சேரன்.

மேலதாஞ் சத்து ருக்க னிடதுதோள் சிகர மேவிச்
சாலிலக் குமன்ற னக்கு மார்புநேர் சிகரஞ் சாற்று
ஓலமாஞ் சேர னுக்கு வுத்தான வஞ்சி தத்தோ
டேலவே வலது கையில் டமருக மென்ன வுன்னே. 690

சோழன், பாண்டியன்.

உன்னவே சோழ னுக்கு வுத்தான வஞ்சி தத்தோ
டன்னமே யிடஞ்சி லிட்ட முகுளமாம் வலது கையில்
சொன்னசந் தம்ஸ மாகுந் தூயபாண் டியனுக் கத்தம்
மன்னுமுத் தான வஞ்சி தச்சுக துண்டஞ் சொஸ்தி. 691

தருமன், துரியோதனன்.

சொத்திசேர் பரத நூலோர் சொல்லுவ ரரசர்க் கெல்லாம்
மொத்தமாய்த் தசர தற்கு மொழிந்தல பதுமக் கையே
நித்தமாந் தரும னுக்கு நிகழ்த்துவ ரலபத் மக்கை
பத்திலாச் சுயோத னன்ரூன் பாபக்கை யலபத் மம்மே. 692

புருஷச்சன், திலீபன், பயராசன், மருத்து.

மேற்சொலு மரச ரோடே விளம்புரு குச்ச னுக்கு
வாச்சது டமரு கக்கை வருதிலீ பன்ப தாகம்
தோர்ச்சியாம் பயரா சன்சூ சிக்கையா மருத்து மூட்டி
கூச்சமில் லாதே காட்டக் கொருநமெனச் சொல்வாய் மாதே. 693

யயாதி, ரந்திதேவன்.

காதலர் யயாதிக் குக்கை தாம்பிர சூட மாகும்
நீதிசேர் ரந்தி தேவன் முகுளஞ்சூ சிக்கை நேரும்
கோதிலா திந்த மன்னர்க் குச்சுக்கி ரன்ம தத்தில்
ஓதுமிப் பயனைக் கண்டு உரைசெய்வாய் கமல மாதே. 694

இரவிகுலத்தரசர், இந்துகுலத்தரசர், பொது

இரவிகு லத்து மன்னர்க் கியல்வலப் புறத்தி னேரே
பரவிய சசிகு லத்துப் பார்வேந்தர்க் கிடத்தோ ணேரே
பெருமையா யபிந யித்தாற் பிசகிலா திருக்கு மென்று
பிருகும தத்திற் றூனே பேசின னறிந்து கொள்ளே. 695

அரசர்கள்

செய்யுட்கள் 685-695

1	அரிச்சந்திரன்	—	சுகதுண்டம்
2	நளன்	—	இடக்கை உடுக்குக்குரிய கை, வலக்கை மயில்
3	புரூரவன்	—	வலக்கை முஷ்டி, இடக்கை பதுமகோசம்
4	சகரன்	—	இரு கைகளும் பதாகங்கள்
5	இராவணன்	—	பதாகம்
6	அம்பரீஷன்	—	சிகரம்
7	சிபி	—	கபித்தம்
8	கர்ணன்	—	முகுளம்
9	அருச்சுனன்	—	திரிபதாகை
10	பீமன்	—	முஷ்டி
11	சகாதேவன்	—	மகரம்
12	நகுலன்	—	தாம்பிரசூடம்
13	பகீரதன்	—	அர்த்தசந்திரன்
14	நந்தி	—	வலக்கையில் முகுளம் இடக்கை சூசி
15	ரகு	—	பதாகம்
16	தசரதன்	—	அலபதுமக்கையை, உத்வேஷ்டித்துச் சேர்த்த சொத்திக்கை
17	இராமன்	—	சிகரம்
18	பரதன்	—	வலத்தோள்மேல் சிகரக்கை வைத்தல்
19	இலக்குமணன்	—	மார்பு கேர் சிகரம்
20	சத்ருக்னன்	—	இடத்தோள் சிகரம்

21 சேரன் — உத்தான வஞ்சிதத்தோடு வலக்கை டமருகம்
22 சோழன் — உத்தானவஞ்சிதத்தோடு இடம் சிலிட்ட முகுளம், வலம் சந்தம்சமுமாகும்
23 பாண்டியன் — உத்தானவஞ்சிதம், சுகதுண்டம் சுவத்திகம்
23 அரும்ன் — அலபதுமம்
25 துரியோதனன் — மே
26 புருகுச்சன் — டமருகம்
27 திவீபன் — பதாகம்
28 பயராசன் — சூசி
29 மருத்து — முஷ்டி
30 யயாதி — தாம்பிரசூடம்
31 ரந்திதேவன் — முகுளம், சூசிக்கை
இரவிகுலமன்னர் — வலப்புறத்தின் நேர் அபிநயம் செய்தல்
இந்துகுலத்து மன்னர் — இடத்தோள் நேரே அபிநயம் செய்தல்

பிற அரசர்க்கெல்லாம், தசரதர்க்கு உரைத்த கையே.

இவை, சுக்கிர மதம்.

695-ஆம் செய்யுளிற் கூறியது பிருகு மதம்.

அரசர்களின் அபிநயங்கள் முற்றும்.

அரசச்சின்னங்கள்

சிம்மாசனம், கட்டில், நாற்காலி, சிவிகை.

இருசது ரத்தி ரண்டு தற்சனி நீக்க யேற்கக்
கரமீது கரமி யற்றற் காட்டுஞ்சிங் காச னஞ்சீர்
வருமீது நாற்கா லிக்கு மகிழ்பெறு மஞ்சத் திற்கும்
பெருவிர லிரண்டு நீளிற் பேர்சிவி கைக்கு மாமே. 696

சிங்காதனம்: இரண்டு சதுரக்கைகளில் தர்ச்சனிகளை நீக்கி ஒரு கை மீது ஒரு கை வைத்துக் காட்டல்.

நாற்காலி; சிவிகை மஞ்சம்: மே கைகளில் கட்டை விரல்கள் நீள்வது.

வேசியர்

இடங்கட காமு கத்தும் வலஞ்சந்தங் கிசமி ருத்தி
வடிவுள்ள மார்பு நேராய் வைத்தது விகாரப் பார்வை
குடிலமாய்ப் பார்ப்ப தென்றே கோதறப் பரத நூலோர்
அடவுடன் வேசி யர்க்கு வமைத்திட வுரைசெய் தாரே. 697

வேசியர் : இடக்கை கடகாமுகமும், வலக்கை சந்தம்சமும் பிடித்து, மார்பு நேராய் வைத்து, பார்வையை வஞ்சகமாகப் பார்ப்பது.

அரசச்சின்னங்களின் அபிநயம் முற்றும்.

---

23. சங்கீதம்

சப்தசுரம்

அழகிய சட்ச மத்திற் கபவித்த மயூர மாகும்
மழவிலா ரிஷபத் திற்கு வபவித்த மிருகச் சென்னி
முழுதுங்காந் தாரத் திற்கு வபவித்த வஜாமு கக்கை
சுழன்மத்தி மத்திற் காகும் அபவித்த சுகதுண் டக்கை. 698

பஞ்சமந் தனக்குச் சொல்லு மபவித்த பதும கோசம்
தஞ்சமாந் தைவ தத்திற் குப்புங்கி தப்ப தாகை
அஞ்சாகி டாதத் திற்கு வபவித்த வராளக் கையாம்
கொஞ்சிய மொழியி னாளே கூறுவாய் முறைதெ ரிந்தே. 699

சப்த சுரங்கள்

செய்யுட்கள் 698-699

1	சட்சம்	—	அபவித்த மயூரம்
2	ரிஷபம்	—	அபவித்த மிருகசிரடம்
3	காந்தாரம்	—	அபவித்த அஜாமுகம்
4	மத்திமம்	—	அபவித்த சுகதுண்டம்
5	பஞ்சமம்	—	அபவித்த பதுமகோசம்
6	தைவதம்	—	புங்கித பதாகம்
7	நிடாதம்	—	அபவித்த அராளம்

சுரங்களின் அபிநயங்கள் முற்றும்.

---

24. இராகங்கள்

பூபாளம், மலகிரி, வேளாகிரி, பௌளி.

புருடபூ பாளத் திற்குப் புகலல பத்மக் கையாய்
மருவதின் பெண்டீ ரான மலகிரிக் காம்லாங் கூலம்
திருவார்வே ளாகி ரிக்குச் சிலிட்டமு குளக்கை யாகும்
பெருமைசேர் பௌளிக் கொக்கும் பிரமக்கை பதும மாதே.

பைரவி, மேகரஞ்சி, குறிஞ்சி, தேவகிரி.

நாயக பைர விக்குத் ரிபதாக நவிலு மந்த
நாயக னுக்கு நாய கிகளாகு மேக ரஞ்சி
சாயாத தாம்ப்ர சூடங் குறிஞ்சிக்குச் சதுரக் கையாம்
தோயுந்தே வகிரி யாஞ்சொல் சிம்மமு கக்கை யென்றே. 701

ஸ்ரீராகம், இந்தோளம், மாதுரி, பலாரி.

மானேபு ருடஸ்ரீ ராகங் கர்த்தரி முகம்வ ழுத்துந்
தானதன் பெண்மை யிந்தோ ளத்திற்கர்த் தசது ரக்கை
வானுறு மாது ரிக்கு மதுரக்கை யாம்ப லாரிக்
கானகு சுகதுண் டக்கை யணியிடை யுடைய மாதே. 702

இராகபஞ்சரி, தேசி, சங்கராபரணம், லலிதா.

விள்ளுமே புருட ராக பஞ்சரிக் குத்விர்த் தக்கை
பள்ளியன் மனைவி தேசிக் கர்த்தப தாகக் கையாம்
தள்ளாத சங்க ராப ரணத்திற்குச் சந்தம் சக்கை
கள்ளமில் லலிதைக் காகும் லதாக்கர மெனச்சொன் மானே.

வசந்தா, ராமக்கிரியை, வராளி, கவுசிகை.

ஆடவர் வசந்தா விப்ர கீர்ணம தின்பெண் ணைகிக்
கேடிலா தோங்கும் ராமக் கிரியைக்குப் பாணக் கையாம்
வாடவ ராளிக் குச்சி லிட்டகர்த் தரிவ ழுத்தும்
பாடிலாக் கவுசி கைக்குப் பதுமகோ சக்கை யோதே. 704

மாளவம், கெள்ளை, குச்சரி, குண்டக்கிரியை.

ஆணகு மாள வப்பேர் சிகரக்கை யதன்பெண் டீராம்
கோணுத கவுளை யுக்த சந்திரன் குச்ச ரிக்குத்
தோணுமே முட்டி சூசி குண்டக்கி ரியைக்குச் சொல்லும்
தாணுவை வணங்கு மாதே சக்கரக் கைய தாமே. 705

பங்காள, தன்யாசி, காம்போஜி, கன்னடகவுளம்.

பங்காளப் புருட னுக்குப் பதாகமா மதற்கில் ஷளாம்
பொங்கிய தன்யா சிக்கு வராளக்கை காம்போ ஜிக்குக்
கங்கண கபித்த மாகுங் கன்னட கவுளத் திற்கு
மங்கள மிருக சீரி டக்கையாய் வகுக்க லாமே. 706

நாட்டை, நாராயணகௌள, தேசாக்ஷி, ஆகிரி.

நாடையாங் கொழுக னுக்குச் சூசிக்கை யதனி னங்கை
ஊடுநா ராய ணக்க வுளமம்சா சியக்கை யாகும்
மாடுதே சாக்ஷிக் கர்த்த முகுளமா மாகி ரிக்குத்
தேடுதற் கரிதா மின்னே யவகித்தக் கையாய்ச் செப்பே.707

சாரங்கநாட்டை; செள்ராட்டிரம், சாவேரி, சுத்தஜாளி, மாளவஶ்ரீ.

சாரங்கர நாட்டைக் காகுஞ் சையமக் கைசௌ ராட்ரம்
சாருமே யம்ஸ பட்சஞ் சாவேரி ஞான முத்திரை
தாருக சுத்த ஜாளி(?) சங்கீர்ண பதாக மாகும்
கோரிய மாள வஶ்ரீ கலசக்கை கூறு மாதே. 708

தோடி, கண்டாரவம், ஹெஜ்ஜஜ்ஜி, முகாரி, மேசபௌளி.

காணுந்தோ டிக்கு வர்த்த மானக்கை கண்டா ராவ
மீணுமே ரேகா வஸ்த மேஜிஜ்யா விற்கர்த்த சந்த்ரன்
பாணிசேர் முகாரி நாக பந்தமா மேச பௌளி
சாணிலா விடையி னளே தண்டபட் சக்கை யாமே. 709

தேசாவளி, மங்களகவுசி, சுத்தவசந்தா, பாடி.

தேசாளம் வைஷ்ண வக்கை மங்கள கவுசி செப்பும்
மாசிலாக் கர்த்த ரிச்சு வத்திக மாகு மென்றே
வாசினே ரான சுத்த வசந்தாவிற் கஞ்ச லிக்கை
தேசிக பாடிக் காகுஞ் சிவமுத்தி ரக்கை யென்றே. 710

மாதவி, கேதாரகவுளம், நாதநாமக்கிரியை, சாமந்தா.

தாமது மாத விக்குச் சங்கீர்ண காங்கூ லக்கை
காமம தாங்கே தார கவுளரே சிதக்கை யாகும்
கோமள நாத நாமக் கிரியைக்குத் தலமு கங்கொள்
சாமந்தா விற்கா விர்த்த வக்கிரக் கையாய்ச் சாற்றே. 711

இராகமொத்தம்

ஆமிரா கங்கண் மொத்த மைம்பதிற் கனுமன் சொன்ன
நேமமாம் பரத நூலி லபிநயித் திடனி கழ்த்து
மாமலர்க் குழலி னுளே மற்றரா கங்கட் கெல்லா
காமகட் சத்தி ரச்சீர் கவின்றபி நயிக்க லாமே. 712

இராகங்கள்

செய்யுட்கள் 700-712

	இராகம்		கை
1	பூபாளம்	—	அலபத்மம்
2	மலகிரி	—	காங்கூலம்
3	வேளாகிரி	—	சிலிட்டமுகுளம்
4	பவுளி	—	பிரமக்கை
5	பைரவி	—	த்ரிபதாகம்
6	மேகரஞ்சி	—	தாம்பிரசூடம்
7	குறிஞ்சி	—	சதுரம்
8	தேவகிரி	—	சிம்மமுகம்
9	ஸ்ரீராகம்	—	கர்த்தரீமுகம்
10	இந்தோளம்	—	அர்த்தசதுரம்
11	மாதுரி	—	மதுரக்கை
12	பலாரி	—	சுகதுண்டம்
13	இராகபஞ்சர	—	உத்விர்த்தம் (அர்த்தபதாகம்)
14	தேசி	—	அர்த்தபதாகம்
15	சங்கராபரணம்	—	சந்தம்சம்
16	லலிதா	—	லதாக்கரம்
17	வசந்தா	—	விப்ரகீர்ணம்
18	ராமக்ரியை	—	பாணக்கை
19	வராளி	—	சிலிட்டகர்த்தரி
20	கௌசிகை	—	பதுமகோசம்
21	மாளவம்	—	சிகரம்
22	கவுளை	—	யுக்தசந்திரன்
23	குச்சரி	—	முஷ்டி ; சூசி
24	குண்டக்கிரியை	—	சக்கரக்கை
25	பங்காள	—	பதாகம்
26	தன்யாசி	—	அராளம்
27	காம்போஜி	—	கபித்தம்

	இராகம்		கை
28	கன்னடகவுளம்	—	மிருகசீரிடம்
29	நாட்டை	—	சூசி
30	நாராயணகவுள	—	அம்சாசியம்
31	தேசாக்ஷி	—	அர்த்தமுகுளம்
32	ஆகிரி	—	அவகித்தக்கை
33	சாரங்கநாட்டை	—	சையமக்கை(?)
34	சௌராட்டிரம்	—	அம்சபட்சம்
35	சாவேரி	—	ஞானமுத்திரை
36	சுத்தஜாளி(?)	—	சங்கீர்ணபதாகம்
37	மாளவஸ்ரீ	—	கலசக்கை
38	தோடி	—	வர்த்தமானக்கை
39	கண்டாரவம்	—	ரேகாவஸ்தம்
40	ஹெஜ்ஜஜ்ஜி	—	அர்த்தசந்திரன்
41	முகாரி	—	நாகபந்தம்
42	மேசபௌளி	—	தண்டபட்சக்கை
43	தேசாவளி	—	வைஷ்ணவக்கை
44	மங்களகவுசி	—	கர்த்தரிச்சுவத்திகம்
45	சுத்தவசந்தா	—	அஞ்சலிக்கை
46	பாடி	—	சிவமுத்திரைக்கை
47	மாதவி	—	சங்கீர்ணகாங்கூலம்
48	கேதாரகவுளம்	—	ரேசிதக்கை
49	நாதநாமக்கிரியை	—	தலமுகக்கை
50	சாமந்தா	—	ஆவிர்த்த வக்கிரக்கை(?)

இவ்வாறு 50 இராகங்களுக்கு அபிநயங்கள் அநுமன் சொன்னவை; பிற இராகங்களுக்கெல்லாம் அவ்வவற்றின் நாம நக்ஷத்திரங்களைக் கொண்டு அபிநயிக்க.

இராகங்களின் அபிநயம் முற்றும்.

---

25. நவரசம்

நகை, துக்கம், இளிவரல், மருட்கை, அச்சம், பெருமை.

நகைக்கல பதுமக் கையா நாடிய துக்கத் திற்சூத்
தகுமுட்டிக் கைய தாகு மிளிவரலே சூசி சாற்று
மிகுமருட் கைப்ப தாகை யச்சம்வண் டுக்கை விள்ளு
மகிமைசேர் பெருமைக் காகு மிருகசீ ரிடக்கை மானே. 713

வீரம், உவகை, சாந்தி.

வீரர சந்த னக்கு டமருக மாக விள்ளும்
பாரினி லுவகைக் காகும் பகர்கில கக்கை யென்றே
ஆறிய சாந்த மாமி ரசந்தனக் கபயக் கையாய்ச்
சீருள வடிவின் மாதே செப்புவை முறைதெ ரிந்தே. 714

நவரசங்கள்

செய்யுட்கள் 713-714

	சுவை	கை		சுவை	கை
1	நகை	அலபதுமம்	6	பெருமை	மிருகசீரிடம்
2	துக்கம்	முஷ்டி	7	வீரம்	டமருகம்
3	இளிவரல்	சூசி	8	உவகை	கிலகம்
4	மருட்கை	பதாகம்	9	சாந்தி	அபயம்
5	அச்சம்	வண்டு			

நவரசங்களின் அபிநயம் முற்றும்.

26. புணர்ச்சி முதலியன

புணர்ச்சி, சமரதி

சொல்லுமே புணர்த லுக்குச் சுகசோப னக்கை யென்று
இல்லுடை வலக்கை மேலு மிடதுகை கீழு மாக
வெல்லுமி ரண்டு கர்த்த ரீமுக மிணக்கிக் காட்டல்
புல்லுவர் சமர திக்குப் பொருந்திட நூல்வல் லோரே. 715

உபரதி

இடதுக ரத்தை மேலு மினிவலங் கீழு மாகக்
கடிதிலாக் கர்த்த ரீமு கந்தனைப் புணைத்துக் காட்ட
மடலவிழ் குழலி னுளே பரதநூற் கற்ற வாணர்
திடமதா முபர திக்குச் செப்பினர் முறைதெ ரிந்தே. 716

புணர்ச்சி முதலியன

புணர்ச்சி : சுகசோபனக்கை.

சமரதி : வலக்கை மேலும் இடக்கை கீழுமாக இரண்டும் கர்த்தரீ முகம் காட்டல்.

உபரதி : இடக்கை மேலும் வலம் கீழுமாக கர்த்தரீமுகங்களை இணைத்துக் காட்டல்.

புணர்ச்சி முதலியன முற்றும்.

27. பாந்தவ்ய அபிநயம்

அன்னைக்கு வம்சாஸ்ய மிருகசிர மதனை
யபவேஷ்டி தம்பி டித்தல்
ஆகுமே தந்தைக்குச் சிகரஞ் சகோதரர்க்
கமையுமே கர்த்த ரீகம்
பொன்னனையு மாமிமா மன்முகுள சர்ப்பசிரம்
பொருந்துமைத் துனன்ற னக்குப்
போலுஞ்சந் தம்சமுட னர்த்தசந் திரனைகப்
புல்லு மேபந் துக்களாய்த்
துன்னும்ப தாகமதி ரண்டும்பி ராணேச்
சுரன்சிகர மாய்வி ளங்கும்
சுகமதாம் பெண்டினுக் கேமிருக சிரமதாம்
தாயமு குளமாப் பிள்ளைக்
கென்னவே பந்துக்க ளபிநயக் கூறிதை
யிணங்(கு)முன் யாஜ்ஞ வல்கன்
இயல்பதா யுலகறிய வேயுரைத் திட்டநூ
லிதமா யறிந்து கூறே. 717

பாந்தவ்யம் (மற்றொன்று)

யாஞ்ஞவல்கியர் மதம்.

1. அன்னை—அம்சாசியம், மிருகசிரம் அபவேஷ்டிதமாய்ப் பிடித்தல்.
2. தந்தை—சிகரம்.
3. சகோதரர்—கர்த்தரீமுகம்.
4, 5. மாமி, மாமன்—முகுள சர்ப்பசிரம்.
6. மைத்துனன்—சந்தம்சத்துடன் அர்த்தசந்திரன்.
7. பிற பந்துக்கள்—இரண்டு பதாகங்கள்.
8. பிராணேசுவரன்—சிகரம்.
9. பெண்டிர்—மிருகசிரம்.
10. மாப்பிள்ளை—முகுளம்.

பாந்தவ்ய (வேறு) அபிநயம் முற்றும்.

முன் (676-683) செய்யுட்களில் இவ்வபிநயம் வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது.

23. சர்வாங்க அபிநயம்

கருதுபா தம்நெற்றி யாம்பதா கங்குதிக்
காலிடை கழுத்து மூட்டி-
கணைக்கால் கபோத மாகுஞ்ச டைமுழங்
கால்கமுக் கூட தாகுங்
கமழர்த்த சந்த்ரன் துடைகரித் துடைச்சந்து
கடகா முகக்கை யாகும்
காணைக்குத் தலமதமு சாசிய மாண்குறிக்
காகு மிருகச் சென்னியே
மருவுபீ சமிரண்டு திரிபதா கங்குட்சி
வளரதோ முகக்க போதம்
மன்னுங் கணுப்புப்பல் வரிசைசுக துண்டமாம்
வளர்நாபி பார்வை புருவம்
வாசியா முதடுநற் குணகாசி புத்திக்கு
வாய்த்திடுஞ் சூசி முகமா
மன்னுளாங் காதுக்குச் சந்தம் சமாம்ரோம
வரைசர்ப்ப சிரமு மார்பு
பொருதுசுவத் திகமூல யினுனி தாளைப்ப
பொருந்துமே முகுள முலைதான்
புல்பதும கோசமாய்க் கன்னமுன் னெற்றிமயிர்
மூட்டுமே திரிப தாகம்
புவிநீளு மயிர்க்கத் தரிசொத்தி கங்கொண்டை
போலு மேயல பல்லவம்
பொலிவா மலைவிகா ரங்கள்கர்த் தரிவார்த்தை
பூங்களச் சந்தம் சமாம்
விருதுபெற் றெளிருநகங் களுக்கா முகுளம்
விசையான பாண முடனே
மேன்மைபெற் றிடுதிரி பதாகமுங் கூட்டியிது
வெல்லா வுறுப்பு கட்கு
மீளாப்பொ ருந்துமென நந்தியின் மதந்தனில்
விண்டன னுலக நியவே
மீனப் பழித்தவிழி வேலைப் பழித்தகடை
மேவற்பு தப்பெண் ணரசே.

சர்வாங்கம்

பாதம்	பதாகம்	காது	சந்தம்சம்
நெற்றி		ரோம வரிசை	சர்ப்பசிரம்
குதிகால்	முஷ்டி	மார்பு	சுவத்திகம்
இடை		முலை நுனி	முகுளம்
கழுத்து		முலை	பதுமகோசம்
கணைக்கால்	கபோதம்	கன்னம்	திரிபதாகம்
சடை	அர்த்த சந்திரன்	முன்நெற்றி மயிர் மூட்டு	
முழங்கரல்		கூந்தல்	கர்த்தரீ சுவத்திகம்
கழுக்கு			
துடை	கடகாமுகம்	கொண்டை	அலபல்லவம்
துடைச்சந்து		மனோவிகாரங்கள்	கர்த்தரி
நாக்கு	அமுசாசயம்		
ஆண்குறி	மிருகசிரம்	வார்த்தை	சந்தீம்சம்
பீசம் இரண்டு	திரிபதாகம்	நகங்கள்	முகுளம்
வயிறு	அர்தாமுக கபோதம்	பிற	பாணம், திரிபதாகம் முதலியன
பல்வரிசை	சுகதுண்டம்		
நாபி	சூசீமுகம்		
கண்			
புருவம்			
உதடு			
நாசி			
புத்தி			

இவை நந்தியின் மதம்.

சர்வாங்கங்களின் அபிநயம் முற்றும்.

---

29. இரத்தினங்கள்

வயிரமது சிங்கமுகம் ரசதஞ் சதுரமாம்
வைடூர் யம்மஜ முகம்
வளர்சந்திர காந்தமே யர்த்தசந் திரன்புஷ்ப
ராகங்காங் கூலம் வாழ்த்தும்
சுயமான பதுமரா கமதுசந் தம்சமாம்
துலங்கு முத்தியம் சாசியம்
தோராத நீலமே கடகாமு கம்பவளம்
சிகரமென் றேது திக்கு

நயமான கோமேதக மதுவர்த்த பதாகை
நன்மைதரு காந்த மணியே
நவிலுமல பல்லவம தாகுமென வேமுகுள
நாடியே யாஞ்ஞ வல்கன்
பயனுற நவரத்தி னங்களுக் கபிநயம்
பாங்கா யுரைத்த நூலைப்
பார்த்துலகி லிம்முறை யோதுவாய் வல்லைப்
பழித்த முலையி னாளே. 719

இரத்தினங்கள்

(1) வைரம்	—	சிங்கமுகம்
(2) ரஜதம்	—	சதுரம்
(3) வைடூரியம்	—	அஜமுகம்
(4) சந்திரகாந்தம்	—	அர்த்தசந்திரன்
(5) புஷ்பராகம்	—	காங்கூலம்
(6) பதுமராகம்	—	சந்தம்சம்
(7) முத்து	—	அம்சாசியம்
(8) நீலம்	—	கடகாமுகம்
(9) பவளம்	—	சிகரம்
(10) கோமேதகம்	—	அர்த்தபதாகம்
(11) காந்தமணி	—	அலபத்பம் ; முகுளம்

இவ்வாறு கூறியவர் யாஞ்ஞவல்கியர்.

இரத்தினங்களுக்கு அபிநயம் முற்றும்.

---

30. நவ உலோகங்கள்

தங்கஞ் சதுர மாகும் வெள்ளி
பதாகம் திரிபதாகந் தாம்ப்ரம்
பொங்கும் பித்தளை கண்ட சதுரமதா
மீயங்காங் கூலம் புல்லும்
வெண்கலமே சிங்கமுகம் இரும்பு முட்டி
தகரமர்த்த பதாக மேவும்
சங்கையிலா தீருக்குச் சூசி யெனவிரத்ஞ
கரன்முன் சாற்றி னானே. 720

உலோகங்கள்

	உலோகம்	கை		உலோகம்	கை
1	தங்கம்	சதுரம்	6	வெண்கலம்	சிங்கமுகம்
2	வெள்ளி	பதாகம்	7	இரும்பு	முஷ்டி
3	தாமிரம்	திரிபதாகம்	8	தகரம்	அர்த்தபதாகம்
4	பித்தளை	(கண்ட) சதுரம்	9	உருக்கு	சூசி
5	ஈயம்	காங்கூலம்			

இவை இரத்னகரன் கூறியவை.

உலோகங்களின் அபிநயம் முற்றும்.

---

31. நவரசாபிநயம்

சிங்கார மலப்துமம் ரேகாசந்த்ரன் செலும்வீரந்
தருபதாகங் கருணை முகுளம்
மங்காத வற்புதஞ்சந் தம்ஸமாஸ்ய மருவுமே
வம்சாஸ்யம் பயமூர் ணைபந்
தங்காத பீபச்சந் திரிபதாகந் தன்னுடன்
கர்த்தரி ரவுத்ரஞ்சு கதுண்டந்தான்
இங்கிதமாம் சமமம்ச பட்சமென் றியம்பினன்
முன்பரதா சாரிய ராய்ந்தே. 721

நவரசங்கள்

1	சிங்காரம்	அலபத்மம்	7	பீபத்ஸம்	பூர்ணசாபம்
2	வீரம்	ரேகாசந்திரம்	8	ரவுத்ரம்	திரிபதாகமும் கர்த்தரியும்
3	கருணை	பதாகம்			
4	அற்புதம்	முகுளம்	9	சமம்	சுகதுண்டம் அம்சபக்ஷம்
5	ஹாஸ்யம்	சந்தம்சம்			
6	பயம்	அம்சாசியம்			

இவை பரதாசாரியன் கூறியவை.

நவரசாபிநயம் முற்றும்.

---

721. முன் இவற்றிற்கு அபிநயங்கள் 712-713 செய்யுட்களில் வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளன.

32. எண்கள்

ஆதியொன் றுஞ்சூசி ரண்டினுக் கர்த்த
பதாகமா மூன்றி னுக்கு
வணிதாம் பிரசூட மாகான் கினுக்குச்
சிகரமைந் தினுக்கே முகுளமாம்
ஒதுமே வாறினுக் குப்பாண மேழினுக்
குற்றவமு சாசிய மாக
வொப்பிலா திருநான்கு சந்தம்ச மேயாகு
முற்ற கடகா முகக்கை
நீதமுள வொன்பதிற் காய்வழுத் தும்பத்து
நேரு முகுளத்தை யிருபா
னீளவிட்டுப் பிடிப்ப தாகு மிவ்வாறு
கின்ற பன்னென்று முதலாய்
மீதிலோ தியவகை படியாய்க் கரம்பற்ற
வேணு மெனவே நூலினுள்
விண்டனன் பரதவா சாரிய னுலகறிய
மின்னினைத் திகழும் வடிவே. 722

எண்கள்

1	சூசி	7	அமுசாசயம்
2	அர்த்தபதாகம்	8	சந்தம்சம்
3	தாம்பிரசூடம்	9	கடகாமுகம்
4	சிகரம்	10	முகுளம் இருபால் நீள விட்டுப் பிடிப்பது
5	முகுளம்		
6	பாணம்		

11 முதல் மேற்கண்டவாறு கரம் பற்ற வேண்டும்.

இவ்வாறு கூறியவர் பரதாசாரியார்.

எண்களின் அபிநயங்கள் முற்றும்.

---

33. சாஸ்திரம்

முன்னிரு சதுரக் கையை முகத்தினேர் நீட்டிக் காட்டி
மன்னிய திரிலிங் கக்கை வாய்க்குநேர் விரித்துக் காட்டத்
தன்னிகர் பரத நூலோர் சாத்திர மென்ப திற்குப்
பன்னியே யுரைத்தா ரந்தப் பனுவலை யறிந்து கொள்ளே.

சாஸ்திரம்

முன்னே இரு சதுரக்கைகளை முகத்தின் நேர் நீட்டிக் காட்டி, பிறகு திரிலிங்கக்கையை வாய்க்கு நேர் விரித்துக் காட்டுதல்.

சாஸ்திரத்தின் அபிநயம் முற்றும்.

6. மனிதப்பகுதி முற்றும்.

தேவர் முதலியோர்

34. தேவர்

பிரமன், ஈசன்.

வலக்கையம் சாஸ்ய மற்ற வாமத்திற் சதுர வஸ்தம்
நலத்துட னேபி டித்தா னன்முக னுகு மென்ப
வலக்கையிற் றிரிப தாக மறுமையின் மிருக சீர்ஷம்
இலக்கண மாய்ப்பி டித்தா லீசனுர் தமக்கா மென்னே.

விட்டுணு, பாரதி, பார்வதி.

இருகையுந் திரிப தாக மிணக்கிடிற் றிருமா லுக்காம்
வரும்வலக் கரத்திற் சூசி வாமத்திற் கபித்தஞ் சேர்த்தால்
சரஸ்வதிக் காகு மர்த்த சந்திரத் திடக்கை [1]மேலாய்ப்
பரிவலக் கைமேற் காட்டப் பார்வதிக் காகு மென்றே. 725

இலக்குமி, கணபதி.

கருதுமி ரண்டு கையுங் கழுத்திற்கு நேர தாக
வருகபித் தம்பி டித்தான் மலர்மக ளுக்கே யாகும்
இருகையுங் கபித்த மாக வினங்கமுன் பாற்பி டித்தால்
அருடருங் கணப திக்கே யாகுமென் றுரைசெய் மாதே.

முருகன், மன்மதன்.

வலக்கையிற் சிகர மற்ற வாமத்திற் றிரிசூ லந்தான்
நிலத்திரு கையு மேலாய் நீட்டிடின் முருக னுகும்
கலக்கமில் வலக்கை தன்னிற் கடகாமு கம்வா மத்தில்
நலம்பெறு சிகர மாக நாட்டிடின் மதனுக் காமே. 727

இந்திரன், அக்கினி.

திரிபதா கம்மி ரண்டுஞ் சேரவே சுவத்தி கம்போல்
மருவவே மேலாய் நீட்ட வாசவ னுக்கே யாகும்
திரிபதா கம்வ லக்கை திகழிடக் கைகாங் கூலம்
அருமையாய்ப் பிடித்துக் காட்ட லக்கினி தேவ னுமே. 728

(பி - ம்.) 1. கீழாய்

இயமன், நிருதி.

வாமத்திற் பாசம் வைத்து வலக்கையிற் சூசி வைத்தால்
ஆமது தென்றிக் காளு மந்தகன் றனக்குப் பின்பு
நேமமாங் கட்டு வக்கை நிகழ்த்திய சகடக் கையும்
காமெனு நிருதிக் கென்றே சாற்றினர் நூல்வல் லோரே.

வருணன், வாயு.

வாமக்கை சிகர மாக்கி வலக்கைப்ப தாகம் வைத்தால்
நாமமே வருண னாகும் நவிலுமர்த் தபதா கத்தை
வாமத்தி லேபி டித்து வலக்கைய ராளஞ் சேர்க்கில்
மாமலர்க் குழலி னாளே வாயுதே வனுக்கா மென்றே. 730

குபேரன், ஈசானன்.

இச்சித்தி டக்கை பத்ம மெழிற்கைவ லக்கை தன்னில்
நிச்சித்துத் தோண்மேற் காட்டி னிதிபதிக் காகு மென்பர்
நச்சுண்ட சிவன்கை யாகு நவிலுமீ சானி யற்கு
மெச்சிய சிவக ணங்க டன்னிமேற் சொல்வோ மாதே. 731

தேவர்கள்

செய்யுட்கள் 724-731

1. பிரமன் : வலக்கை அம்சாஸ்யம், இடக்கை சதுரம்.

2. ஈசன் : வலக்கை திரிபதாகம், இடக்கை மிருகசீரிடம்

3. விட்டுணு : இரு கைகளும் திரிபதாகம்.

4. ஸரஸ்வதி : வலக்கரத்தில் சூசி, இடக்கரத்தில் கபித்தம்.

5. பார்வதி : வலக்கையைத் தூக்கி அர்த்தசந்திரனுக்கி, கீழே இடக்கையிலும் அர்த்தசந்திரனை அமைத்துக் காட்டல்.

6. இலக்குமி : இரு கைகளையும் கபித்தமாக்கிக் கழுத்தின் நேரே பிடித்தல்.

7. கணபதி : இரண்டு கைகளையும் கபித்தமாக முன்பு பிடித்தல்.

8. முருகன் : வலக்கையில் சிகரமும், இடக்கையில் திரிசூலமும் கொண்டு மேலாய் நீட்டல்.

9. மன்மதன் : வலக்கையில் கடகாமுகமும் இடக்கையில் சிகரமும் பிடித்தல்.

10. இந்திரன் : இரண்டு திரிபதாகங்களைச் சுவத்திகமாக்கி மேலே நீட்டல்.

11. அக்கினி : வலக்கை திரிபதாகம், இடக்கை காங்கூலம் பிடித்தல்.

12. இயமன் : இடக்கையில் பாசம், வலக்கையிற் சூசி.

13. நிருதி : கட்டுவக்கையும் சகடக்கையும் பிடித்தல்.

14. வருணன் : இடக்கை சிகரம், வலக்கை பதாகம் வைத்தல். (இடக்கை பதாகமும் வலக்கை சிகரமும் என்று கோஷ். அபிநய தர்ப்பணம் கூறும்).

15. வாயு : இடக்கை அர்த்தபதாகம், வலக்கை அராளம் பிடித்தல்.

16. குபேரன் : இடக்கை பத்மம் வலக்கையில் எழிற்கை யமைத்துத் தோள்மேல் வைத்தல். (வலக்கையில் கதை என்று கோஷ். அபி. த. கூறும்).

17. ஈசானன் : சிவன் கையே.

[1]தேவர்களின் அபிநயம் முற்றும்.

---

35. சிவகணங்கள்

வீரபத்திரன்

தார்வலக் கையுத் வேஷ்டி தச்சிக ரம்மி டக்கைச்
சீரதோ முகமுட் டிக்கை வலக்காலத் தூக்கிச் சேர்த்
கூருட னிடக்கா றன்னைக் குஞ்சித மாக வைத்தால்
வீரபத் திரனுக் கென்று விண்டனர் பரத நூலோர். 732

ஐயனார்

இடதுகைப் பதும கோசம் வலங்கட காமு கத்தின்
கடந்தெரி யுஞ்ச மதிஷ்டி சதுரஸ்ர மாய்ப்பி டித்தால்
திடம்பெறு சாத்த னுக்குச் செலுமெனப் பரத நூலோர்
மடமைசேர் மனத்தி லுளே வழுத்தினர் முறைதெ ரிந்தே.

---

1. இங்கு 17 தேவர்களுக்கு அபிநயங்கள் கூறப்பட்டுள்ளன. தமிழ் அபிநயதர்ப்பணச் சுவடியிலும், வருணன், வாயு இல்லாமல் இச் செய்யுள்களே சிறிய சொல் வேற்றுமைகளுடன் அமைந்துள்ளன. கோஷ். பதிப்பிலும் 16 தேவர்களின் அபிநயங்கள் இவ்வாறே கூறப்பட்டுள்ளன. இதனை அடுத்துள்ள சிவகணப்பகுதி அவ்விரண்டிலும் இல்லை.

க்ஷேத்திரபாலகன்

சூத்திர வலதுமுட்டி யுயர்த்தியே சூழ்ந்தி டக்கை
பூத்திடும் டோள மாக்கிப் பொருந்தவே சாய்ந்த பார்வை
பார்த்திடற் குரூர திஷ்டி பயிற்றிடப் பாத நூலோர்
க்ஷேத்திர பால ரூபஞ் சிறக்குமென் றுரைசெய் தாரே. 734

வைரவன், துவாரபாலகர்

மருவிடம் பதும கோசம் வலந்திரி சூலம் பற்றப்
பெருகிய வடுகன் ரூற்றம் பேணுமா நடன பாதம்
கருவிடம் பதும கோசம் வலக்கையை டோளங் காட்டில்
குருவருள் துவார பாலர்க் காமெனக் கூறு மாதே. 735

தெக்கணமூர்த்தி, நந்தி

வலதுகைச் செபச ரத்தி னிடக்கைடோ ளமதாய் வைத்தல்
இலகிய தெக்க ணமூர்த் திக்கென்பர் வலக்கை சூசிப்
பலனிடந் திரிப தாக மாகவே பிடித்துக் காட்டில்
நிலையுள நந்திக் கென்று நிகழ்த்தினர் நூல்வல் லோரே.

சண்டேச்சுரன், துர்க்கை

இடங்கட காமு கம்வைத் தெழில்வலஞ் சூசி யாய்ப்பற்
றிடச்சண்டேச் சுரனும் வாமஞ் சிகரமாய் வலக்கை தன்னைக்
கடகா முகம்பி டித்துக் கழுத்துமட் டுகடத்தி யப்பால்
அடவுடன் காட்டிற் றுர்க்கைக் காமென வுரைசெய் மானே.

சிவகணங்கள்

செய்யுட்கள் 732-737

1. வீரபத்திரன் : வலக்கை உத்வேஷ்டிதச் சிகரம், இடக்கை அர்தாமுக முட்டிக்கை; இவ்வாறு கைகளை அமைத்துக் கொண்டு, வலக்காலைத் தூக்கி, இடக்காலைக் குஞ்சிதமாக வைத்தல்.

2. ஐயனார் : இடக்கை பதுமகோசம், வலம் கடகாமுகம் ; இவ்வாறு வைத்து, சமதிருஷ்டியுடன் சதுரஸ்ரமாய்ப் பிடித்தல்.

3. க்ஷேத்திரபாலகன் : வலக்கை முஷ்டியாக உயர்த்தி, இடக்கை டோளமாக்கி, சாய்ந்த பார்வையாய்க் ரூர திருஷ்டியாகப் பார்த்தல்.

4. பைரவர் : இடக்கை பதுமகோசம், வலக்கை திரிசூலமாகப் பற்றல்.

5. துவாரபாலகர் : இடக்கை பதுமகோசம், வலக்கை டோளம் பிடித்தல்.

6. தக்ஷிணமூர்த்தி : வலக்கையில் ஜபசரம், இடக்கை டோளம்.

7. நந்தி : வலக்கை சூசி, இடக்கை திரிபதாகம்.

8. சண்டேசுவரன் : இடக்கை கடகாமுகம், வலக்கை சூசி.

[1]சிவகணங்களின் அபிநயம் முற்றும்.

---

36. தேவியர்

சாமுண்டி

பகர்வலம் சிகரம் வைத்திடக் கையிற் பதும கோசம்
சுகமுறக் காட்டிக் காலைத் தூக்கியே மடக்கிக் காட்டல்
தகைமைசேர் பரத நூலோர் சாமுண்டிக் காகு மென்று
மகிமையா யுரைத்தா ரிந்த வையக மறிய மானே. 738

மூதையினபிநயம்

இடங்கட காமு கஞ்செய் தினியதாம் வலக்கை தன்னைத்
தொடரவே திட்ட மாய தோமுக பதும கோசம்
படியவே பற்றி யப்பா லதோமுக திஷ்டி பார்த்தல்
படிமிசைச் சேஷ்டா தேவிக் காமெனப் பகரு மாதே. 739

விஜயலட்சுமி

இசையவே வாயுஸ் தானந் தனினின் றிடது கையை
வசைகட காமு கத்தாய் வலஞ்சூசி யுக்ர திஷ்டி
விசையுறப் பார்த்த லாகும் விஜயலட் சுமிக்கி தென்று
அசைவறப் பரத நூலோ ரருளினர் கமல மாதே. 740

வீரலக்ஷ்மி

சேரவே யிடது கையைக் கடகாமு கமதாய்ச் சேர்த்துக்
கூருடன் வலது கையின் திரிபதாகங் குறுக்கே காட்டிச்
சாரவே திருட்டி தன்னைச் சலனத்தைச் செய்த லாகும்
வீரலட் சுமிக்கே யென்று விண்டனர் நூல்வல் லோரே. 741

---

1. குறிப்பு : — துர்க்கையின் அபிநயம் அடுத்த பகுதிகளில் உரைக்கப் படும்.

மகேசுவரி

ஏலவா யுஸ்தா னத்தி லிடங்கட காமு கஞ்செய்
மேலதாம் வலது கையை மிருகஸ்ர மலது சக்கரம்
கோலமாய்ப் பிடித்துக் காட்டற் கூறுமே மகேசுவ ரிக்கென்
ரூலஞ்சேர் விழியி னுளே யறைந்தனர் நூல்வல் லோரே. 742

கௌமாரி

தவமுறும் வலம்ப தாகத் தைக்கடி கையிலே வைத்துக்
கவியவே யிடது கையைக் கடகாமு கமதாய்ப் பற்றி
அவைமார்பு நேராய்க் காட்டி வாயுத்தா னத்தி னிற்றல்
கவுமா ரிக்கு மென்றே கருதுவாய் கமல மாதே. 743

வாராகி

முகத்தையஞ் சலிபோ னீட்டி முன்னிரு கைக டன்னில்
தொகையதாந் த்ரிபதா கத்தைத் தோளுக்கு நேர தாக
முகியவே நிறுத்தி யேயான் முத்திரை யாகக் காட்டப்
புகலுவர் வராகிக் கென்றே புவிமிசை நூல்வல் லோரே. 744

வைஷ்ணவி

கடகாமு கம்மி டக்கை வலதுகைத் திரிப தாகம்
வடிவுள தோளி னேராய் வைத்ததை மார்பி னேராய்
அடவுடன் பிடித்துக் காட்ட வதுவைஷ்ண விக்கா மென்று
படிமிசைப் பரத நூலோர் பகர்ந்ததை யறிந்து கொள்ளே.

பூமிதேவி

காணவே யிடக்க ரத்தைக் கடகாமு கமதாய்ப் பற்றிப்
பூணவே வலம்ப தாகம் பொருந்தக்கீழ் நோக்கிப் பாதம்
பேணவே நடித்தற் போலப் பிரியமாய்க் காட்டி நிற்றல்
வேணுநேர் தோளி னுளே பூமிதே விக்காய் விள்ளே. 746

கங்காதேவி

இனிவலங் கர்த்த ரிக்கை மேனோக்கி யிடப்ப தாகம்
பனுவலா யேந்திப் பின்ன தோமுக மாகப் பார்த்தல்
புனிதமாங் கங்கா தேவிக் காமெனப் புவியின் கண்ணே
இனமுடன் பரதங் கற்ற யாவரு மறிய வோதே. 747

தேவியர்

செய்யுட்கள் 738-747.

1. துர்க்கை : இடக்கையைச் சிகரமாக்கி, வலக்கையைக் கடகா முகம்பிடித்து, கழுத்து மட்டும் நடத்தி அடைவுடன் காட்டுதல்.

2. சாமுண்டி : வலம் சிகரமாக்கி, இடக்கையில் பதுமகோசம் காட்டி, காலைத் தூக்கி மடக்கிக் காட்டல்.

3. மூதை : இடம் கடகாமுகமாக்கி, வலம் அதோமுகபதும கோசமாக்கி, அதோமுக திருஷ்டியுடன் பார்த்தல்.

4. விஜயலக்ஷ்மி : வாயுஸ்தானத்தில் நின்று இடக்கையைக் கடகாமுகமும் வலம் சூசியும் ஆக்கி, உக்கிர திருஷ்டியுடன் விசை யுறப் பார்த்தல்.

5. வீரலக்ஷ்மி : இடக்கையில் கடகாமுகம் பிடித்து வலக்கையில் திரிபதாகத்தைக் குறுக்கே காட்டி, சலன திருஷ்டியாகப் பார்த்தல்.

6. மகேசுவரி : வாயுஸ்தானத்தில் நின்று, இடக்கையில் கடகா முகமும் வலக்கையில் மிருகசிரம் அல்லது சக்கரம் அமைத்து, கோல மாய்ப் பிடித்துக்காட்டல்.

7. கௌமாரி : வலப்பதாகத்தைக் கடிகையிலே (?) வைத்து, இடக்கை கடகாமுகத்தை மார்புநேராய்க் காட்டி வாயுஸ்தானத்தில் நிற்றல்.

8. வாராகி : முகத்தை அஞ்சலிபோல் நீட்டி, இருகைகளா லும் திரிபதாகம் செய்து தோளுக்கு நேராக நிறுத்தி, ஆன் முத் திரையாகக் காட்டல்.

9. வைஷ்ணவி : இடக்கை கடகாமுகம், வலக்கை திரிபதாகம் பிடித்துத் தோளின் நேராக வைத்து, பிறகு மார்பின் நேராய் அடை வுடன் பிடித்துக் காட்டல்.

10. பூமிதேவி : இடக்கை கடகாமுகமாக்கி, வலம் பதாகம் பொருந்த, கீழ்நோக்கி, பாதத்தை நடித்தற்போலக் காட்டி நிற்றல்.

11. கங்காதேவி : வலக்கையில் கர்த்தரிக்கையை மேல் நோக்கிப் பிடித்து, இடக்கையைப் பதாகமாக ஏந்தி, அதோ முகமாய்ப் பார்த்தல்.

தேவியரின் அபிநயம் முற்றும்.

37. பிறதேவர் முதலியோர்

தரும தேவதை

வலஞ்சது ரஸ்ரஞ் செய்து முகத்தினேர் வைத்துப் பின்னும்
சிலகொளு மிடக்கை தன்னே மிருகசி ரமதாய் மேலே
சலனமில் லாம னேக்கற் றருமதே வதைக்கா மென்று
கலமுடன் பரத நூலோர் கவின்றதை யறிந்து பேசே. 748

பஞ்சபூதங்கள்

பிரிதிவி மூட்டிக் கையாம் பதாகத்தைச் சலனஞ் செய்தல்
பரிவுள வப்பு விற்காம் தேயுவுக்குத் திரிப தாகம்
அருமையாங் கால ராளச் சலனமா காயத் திற்குத்
திரமதாய் முகுள முத்வேஷ் டிதமதாய் விரித்த லாமே. 749

இந்திராணி

இந்திர வஸ்தங் காட்டிக் கழுத்திலம் சாஸ்ய மேற்றுச்
சந்ததம் பிடித்து நாய கிக்கரந் தன்னைக் காட்டல்
மந்தர மலையை நேரு மாதனத் துடைய மாதே
இந்திரா ணிக்கா மென்று இயம்பினர் பரத நூலோர். 750

சயந்தன்

சுயமதா யிந்தி ரன்கை காட்டித்தொப் பூழ்க்கு நேரே
வியனுறு முகுளந் தன்னை விரித்துப்பின் வலக்க ரத்தால்
நயமுள்ள சிகரம் பற்ற கவி லுவர் மகவான் பெற்ற
சயந்தனுக் காகு மென்று சாற்றுவாய் முறைதெ ரிந்தே.

நளகூபரன்

அளகாபு ரிக்கு பேர னத்தத்தைக் காட்டி யப்பால்
விளங்கவே முகுளக் கையை விரித்துச்சி கரம்பி டித்தால்
புளகித மூலயி னுளே குபேரன்றன் புதல்வ னென
நளகூப ரன்ற னக்கு கவி லுவர் நூல்வல் லோரே. 752

வசந்தன்

நிசமதா மென்னி லக்கை சலனஞ்செய் ததனை நீட்டி
வசையிலா தேய தைப்பின் வாங்கியே சிகரம் பற்ற
விசையுறுங் குரலி னுளே யிதுவசந் தனுக்கா மென்று
திசைகொளப் பரத நூலோர் செப்பினர் முறைதெ ரிந்தே.

ருதுக்கள்

மற்றரு துக்க ளுக்கு வதின்குணம் வடிவாய்க் காட்டிச்
சிற்றிய லிருது வம்சா சியத்தூக்கி யிறக்கிக் காட்டல்
உற்றது கையா மென்றே யுலகிலுள் ளோர்கள் காண
முற்றிலும் பரத நூலோர் மொழிந்தன ரறிந்து கொள்ளே.

பகல், இரவு

உதயமாங் கிரியின் பக்கஞ் சூசிக்கை யுறவே காட்டிப்
பதமுள்ள பூர ணக்கை பிடித்திடிற் பக லுக்கு காகும்
துதியிர விற்கா மஸ்த கிரிப்பக்கஞ் சூசி காட்டிக்
கதிகொள வர்த்த சந்த்ரன் கையினுன் மறைத்த லாமே. 755

பூத கணங்கள்

மாதுடை மூட்டிக் கையாற் பருமையைக் காட்டி மற்றும்
போதவே சிகரங் காட்டிற் பூதக ணங்க ளுக்காம்
சாதுவா மற்றத் தேவர் தன்ரூபத் தியானங் கொண்டு
ஓதுவா யஸ்தத் தன்னை யுறுதியாம் பயன தின்றே. 756

பஞ்சபூதங்கள்

பஞ்சமி லிடக்கை சூசி யாக்கியே பக்கப் பார்சுவ
மிஞ்சியே சுற்றி யப்பால் வலக்கைப்ப தாக மேற்றுத்
துஞ்சிடா வக்க ரத்தைத் தோளுக்கு நேர்பி டித்தால்
பஞ்சபூ தத்திற் கென்று பகர்ந்தனர் பரத நூலோர். 757

தேவர், துவாதசாதித்தர், விசுவதேவர்

தேவர்க்குப் பதாக முத்வேஷ்டி தம்பிடித் தலைனச் செப்பும்
துவாதசா தித்த ருக்கு விரண்டுகை சூசி யாக்கிச்
சீவநெற் றியில்வைத் தேரே சிதஞ்செய்த லென்பர் விசுவ
தேவர்க்கார்த் தபதா கத்தை யுத்வேஷ்டி தம்செய் யென்றே.

வசுக்கள், துவஷ்டா, அநிலன்

அஷ்டவ சுக்க ளுக்கூர்ம் மக்கட காமு கம்முத்
வேஷ்டிதஞ் செய்த லென்று விள்ளுவ தல்லாற் பின்னும்
துவஷ்டற்குச் சதுரக் கையாய்ச் சொல்லுவ ரனில னுக்குத்
வேஷ்டித மர்த்த சந்த்ரன் விள்ளுவர் நெற்றி நேரே. 759

பிதுர்தேவதை, சாத்தியர், இயக்கர்

தக்கவே பிதுர்தே வர்க்குத் தர்ப்பணக் கைய தாகும்
திக்குள சாத்தி யர்க்குச் சிகரக்கை நெற்றி நேரே
ஒக்கவுத் வேஷ்டி தஞ்செய் தோதுவை யியக்க ருக்கு
மிக்கப தாக மூர்த்வ ரேகிதம் விள்ளு மாதே. 760

ஊர்வசி

அருமையா மற்றத் தேவர்க் கவர்சொரு பத்தைக் கண்ட
பெரியோரி டந்தெ ரிந்து பேசுவா யூர்வ சிக்குத்
தருவலக் கைய ராள நெற்றிநேர் சலனஞ் செய்து
பெருமிடங் கடகா முகத்தைப் பிரசன்னமாய்ப் பார்த்த லாமே

பிற தேவர் முதலியோர்

செய்யுட்கள் 748-761

1. தருமதேவதை : வலம் சதுரஸ்ரம் செய்து முகத்தின் நேர் வைத்து, பின் இடக்கையை மிருகசீரிடமாக்கி, மேலே சலனமில்லா மல் நோக்கல்.

2. பஞ்ச பூதங்கள் : பிருதிவி - முஷ்டிக்கை.

அப்பு - பதாகத்தைச் சலனம் செய்தல்.

தேயு - திரிபதாகம்.

வாயு - அராளச்சலனம்.

ஆகாயம் - முகுளத்தை உத்வேஷ்டிதமாக்கல்.

3. இந்திராணி : இந்திர அஸ்தம் காட்டி, கழுத்தில் அமு சாசியமாக வைத்து, நாயகிக் கையைக் காட்டல்.

4. சயந்தன் : இந்திர அஸ்தம் காட்டி, தெரப்புளுக்கு நேரே முகுள அஸ்தத்தை வைத்து, வலக்கையால் சிகரக்கை காட்டல்.

5. நளகூபரன் : குபேரன் அஸ்தம் காட்டி, பிறகு முகுளக்கை யும் சிகரக்கையும் பிடித்தல்.

6. வசந்தன் : மென்னிலைக் கையைச் சலனம் செய்து அதனை நீட்டிப் பின்வாங்கி, சிகரம் பற்றல்.

7. ருதுக்கள் : அந்த அந்த ருதுவின் குணத்துக் கேற்ப அபி நயம் காட்டி, அமுசாசியத்தைத் தூக்கி இறக்கிக் காட்டல்.

8. பகல், இரவு : உதயகிரியைச் சுட்டிச் சூசிக்கையைக் காட்டிப் பூரணக்கை பிடித்தல் பகல் ; அஸ்தகிரிப்பக்கம் சூசிக்கையைக் காட்டி, அர்த்த சந்திரக்கையால் மறைத்தல் இரவு.

9. பூதகணங்கள் : முட்டிக்கையால் பருமை காட்டி, சிகரம் காட்டல்.

மற்ற தேவர்கள் : மற்ற தேவர்களுக்கு அவரவர்க்குரிய தியான சுலோகங்களைக் கொண்டு கை அமைத்துக்கொள்க.

10. பஞ்சபூதங்கள் : இடக்கை சூசியாக்கிப் பக்கப் பார்சுவ மாகச் சுற்றி, பிறகு வலக்கையில் பதாகம் ஏற்று, அக்கையைத் தோளுக்கு நேரே பிடித்தல்.

11. தேவர் (பொது) : பதாகத்தை உத்வேஷ்டிதமாகப் பிடித்தல்.

12. துவாதசாதித்தர் : இருகைகளையும் சூசியாக்கி நெற்றியில் வைத்து ரேசிதம் செய்தல்.

13. விசுவதேவர் : அர்த்தபதாகத்தை உத்வேஷ்டிதம் செய்தல்.

14. அஷ்ட வசுக்கள் : கூர்மம், கடகாமுகங்களை உத்வேஷ்டிதம் செய்தல்

15. துவஷ்டா : சதுரக்கை

16. அகிலன் : உத்வேஷ்டித அர்த்த சந்திரக்கை.

17. பிதுர்தேவதை : தர்ப்பணக்கை.

18. சாத்தியர் : சிகரக்கையை நெற்றி நேரே உத்வேஷ்டிதம் செய்தல்.

19. இயக்கர் : பதாகத்தை ஊர்த்துவரேசிதம் செய்தல்.

20. ஊர்வசி : வலக்கை அராளத்தை நெற்றி நேர் சலனம் செய்து இடக்கையைக் கடகாமுகமாகச்செய்து பிரசன்னமாய்ப் பார்த்தல்.

மற்றத் தேவர்களுக்கு அவரவர் சொரூபங்கண்ட பெரியோர் களிடம் கேட்டறிக.

பிறதேவர் முதலியோர் அபிநயம் முற்றும்.

தேவர்பகுதி முற்றும்.

---

35. அசுரர் முதலியோர்

அசுரர், கின்னரர், கந்தருவர், இராக்கதர்.

செப்புவா யசுர ருக்குச் சிங்கக்கையாங் கின்ன ரற்கு
ஒப்புமம் சாஸ்யஞ் சிங்க நகமென வோதும் பின்னும்
தப்புகந் தருவ ருக்கு விரண்டர்த்த சதிரே சித்தல்
வெப்பிராக் கதருக் குச்ச கடக்கையாய் விளம்ப லாமே. 762

1. அசுரர் : சிங்கக்கை.
2. கின்னரர் : அம்சாசியம், சிங்கநகம் (சிங்கநகை).
3. கந்தருவர் : இரண்டு அர்த்த சந்திரக்கைகளை இரேசித்தல்.
4. இராக்கதர் : சகடக்கை.

அசுரர்

சூரபத்மா

இடக்கரஞ் சூசி யாக்கி யேலவே வலது கையைப்
படியவே சூசி சுற்றி மறுபடி திரிபதா கத்தை
அடவுடன் ரௌளின் மீதி லமைந்திட விருத்திக் காட்டல்
திடமுள சூர பத்மன் றனக்கெனச் செப்பு மாதே. 763

கார்த்தவீர்யார்ச்சுனன்

சாரவே வலது கையைப் பதாகம தாக்கி மீசை
ஏறவே திருத்தி மற்று மிரண்டுகை டோள மாக்கி
நேர்சுவத் திகமாய் வைத்து நீதியா யபிநயித்தல்
சோர்கார்த்த வீரி யார்ச்சு னனுக்கென்று சொல்லு மாதே.

இராவணன்

கைலாய பருப்ப தத்தைக் காட்டியே மற்று மக்கைப்
பயனுற விரண்டு பத்ம கோசம தாகப் பற்றி
இயல்புடன் தோட்கு நேரே யிக்கரந் தனைப்பி டித்தால்
தியமமி ராவ ணன்ற னக்கென நிகழ்த்த லாமே. 765

கும்பகர்ணன்

பம்பிய முட்டிக் கையாற் பலாட்டியந் தன்னைக் காட்டித்
தம்பமா மொருக ரம்ப தாகத்திற் சயனங் காட்டி
எம்பிலா மற்றோர் கையை யிராக்கதக் கரம்பி டித்தல்
கும்பகர் ணனுக்கா மென்று கூறினர் பரத நூலோர். 766

வாணசுரன்

கோணுத முட்டிக் கையைக் கூருட னீட்டி மற்றும்
தோணவே யிரண்டு கையுண் டோளம தாக்கி நேராய்க்
காணவே யபிந யித்தற் கருதுவர் பரத நூலோர்
வாணசு ரனுக்கி தாகு மென்னவே வனச மாதே. 767

திரிபுராதிகள்

இரண்டுகை மிருக சீரி டத்தினி லியல்ப தாகக்
கருகனிட் டத்து டன்மற் றொருகனிட் டத்தைச் சேர்த்து
மருவிலா விராக்க தக்கை மறுபடி பிடித்துக் காட்டத்
திரிபுரா திகளுக் கென்றே செப்பினர் பரத நூலோர். 768

இரணியன்

வருபிடஞ் சூசி பற்றி வலதுப தாகந் தன்னைப்
பிரேரித மாகச் செய்து பின்பிரா கதருக் கான
கரமதைக் காட்ட வத்தைக் கருதுவர் பரத நூலோர்
இரணியன் றனக்கா மென்றே யியல்பினை யறிந்து கொள்ளே.

பிரகலாதன்

இரணிய வத்தத் தோடே யினியநா பியிற்சந் தம்ஸம்
அருமையாய்ப் பிடித்து நேரே யஞ்சலி செய்து பின்பு
பெருமையா மிராக்க தக்கை பிடித்திட லாகும் பேராம்
பிரகலா தனுக்கா மென்று பேசினர் நூல்வல் லோரே. 770

விபிடணன்

இராவண னஸ்தங் காட்டி ரம்யமாம் வலது கையில்
மேவிய கர்த்த ரீமு கஞ்செய்து காட்டி மேலே
காவிராக் கதக்க ரத்தைக் காட்டியே யபிந யித்தல்
மாவிபீ டணனுக் கென்று வழுத்துவ ரினிய மாதே. 771

மாவலிச்சக்கரவர்த்தி

அடவுடன் வலது சூசி யான்மண் ணும்விண் ணுங்காட்டித்
திடமுடன் பதாகந் தன்னை யபவேஷ்டி தமதாய்ச் செய்து
வடிவுள ராக்க தக்கை வண்ணம தாகக் காட்டப்
படிமிசை மாவ லிக்குப் பகருவர் பரத நூலோர். 772

நரகாசுரன்

முந்தவே பூமா தேவிக் காங்கர முயர்த்திக் காட்டி
உந்தியிற் சந்தம் சத்தை யுறுதியாய்க் காட்டி யப்பால்
வந்திடு மிராக்க தக்கை வகையுடன் பிடித்துக் காட்டத்
தொந்தமா நரகா சூர னுக்கெனச் சொல்லு மாதே. 773

சலந்தராசுரன் முதலியோர்

சலந்தரா சூர னுதி ராக்கதர் சகல ருக்கும்
நிலையாவவ் வவர்க ளுக்கு நேர்குணஞ் சேட்டை கண்டு
பலம்பெறு மஸ்தங் காட்டிப் பயன்மன தறிந்த பின்பு
அலைவிலா ராக்கதவத் தத்தை வபிநயித் திடுவாய் மாதே.

அசுரர்

செய்யுட்கள் 763 774.

1. சூரபத்மன் : இடக்கரம் சூசியாக்கி, வலது கையையும் சூசி யாக்கிச் சுற்றி, மறுபடி திரிபதாகத்தை அடைவுடன் தோளின்மீதில் அமைந்திட இருத்திக் காட்டல்.

2. கார்த்த வீர்யார்ச்சுனன் : வலக்கையைப் பதாகமாக்கி, மீசை ஏறத் திருத்தி, பிறகு இருகைகளையும் டோளாமாக்கி, சுவஸ்திகமாக வைத்து அபிநயித்தல்.

3. இராவணன் : கபிலாய மலைக்குகையை காட்டிப் பிறகு இரண்டு பதுமகோசக் கைகளைத் தோளுக்கு நேரே பிடித்தல்.

4. கும்பகர்ணன் : முஷ்டிக்கையைப் பருக்கக்காட்டிப் பலாட்டி யத்தைத் தெரியப்படுத்தி, ஒருகையைப் பதாகமாக்கிச் சயனம் காட்டி, மற்றொரு கையால் இராக்கதக்கரம் பிடித்தல்.

5. வாணாசுரன் : முட்டிக்கையைக் கூராக நீட்டி, பிறகு இரு கைகளை டோளாமாக்கி அபிநயித்தல்.

6. திரிபுராதிகள் : இருகைகளில் மிருகசிரிடம் அமைத்து, ஒரு சுண்டுவிரலுடன் மற்றொரு சுண்டு விரலைச் சேர்த்து, மறுபடி இராக்கதக்கை காட்டல்.

7. இரணியன் : இடம் சுழி, வலக்கை பதாகம் பிடித்து, பிரே ரிதமாகச்செய்து, பின்பு இராக்கதக்கை பிடித்தல்.

8. பிரகலாதன் : இரணிய அஸ்தத்தோடு, நாபியில் சந்தம் சத்தைப்பிடித்து, அஞ்சலி செய்து, பிறகு இராக்கதக்கை பிடித்தல்.

9. விபீடணன் : இராவணனஸ்தம் காட்டி, வலக்கையில் கர்த்தரீமுகம் பிடித்துப் பின் இராக்கதக்கரம் பிடித்தல்.

10. மாவலி : அடைவுடன் வலக்கை சூசியால் மண்ணியும் விண்ணியும் காட்டி, பதாகத்தை அபவேஷ்டிதமாகச் செய்து, இராக்கதக்கையைக் காட்டல்.

11. நரகாசுரன் : முதலில் பூமிதேவிக்காகும் கையை உயர்த்திக் காட்டி, உந்தியில் சந்தம்சத்தை வைத்துக்காட்டி, பிறகு இராக்க தக்கையைக் காட்டல்.

12. சலந்தராசுரன் முதலியோர் : சலந்தரன் முதலான அரக்கர் களுக்கு அவரவர் குணம், செயல் இவற்றைக் கண்டு கைகளை அமைத்துக் காட்டுக.

அசுரர் முதலியோரின் அபிநயம் முற்றும்.

---

36. இருடிகள்

பதஞ்சலி

ஏலவி ரண்டு வம்சா சியம்வைத் திரண்டு கண்ணும்
மீலித திஷ்டி பார்த்த லிருடிகட் காகு மென்பர்
சாலவே பதஞ்ச லிக்குச் சர்ப்பசி ரத்தி னேடப்
பாலிருடி யஸ்தங் காட்டற் பகரலாங் கமல மாதே. 775

வியாக்ர மகாரிஷி, அகத்தியர்

அசையாச்சிம் மருகந் தன்னை யதோமுக மாக வூன்றி
ரிஷியஸ்தங் காட்டில் வியாக்கி ரமருக்கா மென்றி றைஞ்சும்
குசலமா முட்டி காட்டிக் கொளும்ரிஷி யஸ்தங் காட்டல்
நிசமதா மகத்தி யர்க்கு நேருமென் றுரைசெய் மானே. 776

பிரகஸ்பதி

இயலுமா யுத்தா னத்தி லிடங்கட காழ கஞ்செய்
தயரிலா வலது கையில் அர்த்தசந் திரனைப் பற்றிக்
கயலினைப் பொருகண் ணுளே கடிகையிற் பிடித்துக் காட்டப்
பயிலுமே பிரகற்ப திக்குப் பரதநூன் முறைதெ ரிந்தே. 777

கலிக்கோட்டுமுனி, வசிட்டர்

சிலிட்டகிம் மமுகம் பற்றி ரிஷியஸ்தஞ் சிறந்து காட்டல்
கலிக்கோட்டு மாமு னிக்குக் கருதுவர் வசிட்ட னுக்குச்
சொலுந்தெட்ச ணூமூர்த் திக்கை தொடுத்துப்பின் ரிஷிகை காட்டல்
செலுமெனப் பரத நூலோர் செப்பினர் முறைதெ ரிந்தே.

விசுவாமித்திரன், வியாசர்

நிசமுள சொர்க்கங் காட்டி நேர்ரிஷி யஸ்தங் காட்டல்
விசுவாமித் திரற்கா மென்று விள்ளுவர் வியாச ருக்குத்
தசையுள மென்னி லுக்கை சதுரக்கை காட்டி யப்பால்
ரிஷியஸ்தங் காட்ட வென்றே நேர்ந்துரை செய்வை மானே.

சுகர், நாரதர்

சுகதுண்டங் காட்டி யப்பாற் றேன்றவே ரிஷிகை காட்டல்
சுகருக்கா ரார தர்க்குச் சொலுமிட மிருகச் சென்னி
வகையுள வலக்கை தன்னைக் கடகாமு கமதாய் வைத்து
மகிமைசேர் ரிஷியஸ் தத்தைக் காட்டுதல் வழுத்த லாமே.

சூதர்

இடதுகை சதுர மாக்கி மார்புநே ரியல்பாய் வைத்துப்
பொடியவே வலது அம்சா சியத்தைப்புங் கிதமாய்ச் செய்து
முடிபெரு ரிஷியஸ் தத்தை மோகமாய்ப் பிடித்துக் காட்டல்
துடியிடை யுடைய மாதே சூதருக் குரைசெய் வாரே. 781

காசிபர்

வலதுகை தேவ வஸ்த வாழிட மிராட்ச தக்கை
நலமுடன் காட்டிப் பின்னு நாபியிற்சந் தம்சம் செய்(து)
இலகவே ரிஷியின் கையை யிழிவறப் பிடித்துக் காட்டல்
பலமுறுங் காசி பர்க்குப் பகரலாம் பதும மாதே. 782

பிருகு

மாறுதி ருடிகட் கின்னம் வழுத்துவோ மார்பு நேரே
சீராம்வா மப்ப தாகம் பிடித்திடங் கசதந் தக்கை
நேராகப் பிடிக்க வுத்தா னக்கச தந்த நேருங்
கூராமவ் வபிந யத்தைப் பிருகிற்குக் கொள்வாய் மாதே.

அத்திரி

பத்தியாய் மார்பு நேர்வா மப்பதா கத்தின் மேலே
யுத்தியாய் வலத்தைச் சூசி யாக்கவுத் தான சூசி
ஒத்ததை யபிந யித்த லுறுதியாந் தவமி குந்த
அத்திரி தனக்கா மென்றே யறைகுவாய் முறைதெ ரிந்தே.

கௌதமன்

மவுனஞ்சேர் நெஞ்சி னேரே யிரண்டம்ச பட்ச மாக்கி
அவமிலா தொன்றின் மேலே மற்றொன்றை யாக்கி லத்தை
நவிலுமே சிலிஷ்டோச் சங்கக் கையதை யபிந யிக்கக்
கவுதமற் காகு மென்று கருதுவாய் கமல மாதே. 785

குச்சன்

அச்சமில் மார்பு நேரே வாமம்ப தாக மாக்கி
இச்சையாய் வலத்தாஞ் சிங்க முகமேலே யியல்பாய்ப் பற்றல்
செச்சையா மதுவுத் தான சிங்கமு கமதா மத்தைக்
குச்சனுக் காகு மென்று கூறிய் தறிந்து கொள்ளே. 786

ஆங்கீரசன்

ஏங்காவா மப்ப தாகம் மார்புநே ரிட்டு மேலில்
லாங்கூலம் வலத்திற் பற்ற வுத்தான லாங்கூ லம்மாம்
தாங்கிய வக்க ரத்தைச் சலியாம லபிந யித்தால்
ஆங்கீர சனுக்கா மென்றே யறைந்ததை யுணர்வாய் மாதே.

துருவாசன்

மாரினே ரிடப்ப தாகம் போல்வல முத்தி ரைக்கை
ஊரிடப் பிடித்த லாகு முத்தான முத்தி ரைக்கை
நேருறப் பிடித்துக் காட்ட நிலையதாந் தவத்தி லோங்கும்
தூருவா சனுக்கா மென்றே சொல்லுவை யிதம றிந்தே.

மார்க்கண்டன்

மார்நேர்வா மப்ப தாக மேல்வலம் மயூரம் பற்றத்
தார்கொளு மவற்றை யேயுத் தானவஞ் சிதமாய்க் கூறும்
பேர்கொளு மிக்க ரத்தைப் பிடித்தபி நயத்தைக் காட்டல்
மார்க்கண்ட னுக்கா மென்று வழுத்துவை முறைதெ ரிந்தே

கபிலர், தும்புரு

ஞானக்கை நெற்றி நேராய்க் கொளக்கபி லர்க்கு நாட்டும்
சூனிரு மிருகச் சென்னி தோட்குநேர் கீழ்க்கு மேலும்
ஈனமில் லாமலே காட்டிடிற் றும்புரு வுக்கா மென்று
தேனல ரிதழி னுளே செப்புவை முறைதெ ரிந்தே 790

அகத்தியன்

வகையுள்ள நெஞ்சி னேராம் வாமப்ப தாகத் தின்மேல்
இகலிலா வலக்க ரத்தின் முகுளம தாக யேற்றல்
உகிர்தலில் லாத வீதே யுத்தான முகுள மென்று
தகைமைசேர் கலசந் தன்னிற் சனித்தமு னிக்கென் றோதே.

பரத்துவாசன்

உரத்துநே ரிடப்ப தாக மாக்கியே யுறும்வ லக்கை
யுரத்துமுத் திரைபி டிக்க வுத்தான முத்தி ரைக்கை
வருமிதை யபிந யித்தன் மன்னுமே தவத்தோர் தன்னில்
பரத்துவா சனுக்கா மென்று பாகமா யறிந்து கூறே. 792

ஆபஸ்தம்பன்

வாதிலா மார்பு நேராம் வாமப்ப தாகத் தின்மேல்
தீதிலா வலக்கை சர்ப்ப சிரம்பற்றிக் காட்ட லாகும்
ஈதபி நயித்துக் காட்ட லேற்குமா பஸ்தம் பர்க்கு
மாதகு தனத்தி னுளே வழுத்துவை நூலு ணர்ந்தே. 793

போதாயனன்

வாதிலா மார்பு நேராம் வாமப்ப தாகத் தின்மேல்
தீதிலா வலக்கை சர்ப்ப சிரம்பற்றிக் காட்ட லாகும்
மாதேயுத் தான சர்ப்ப சிரமென்பர் நூதனேர் வைத்தல்
போதாய னன்ற னக்குப் புகலுவர் முறையு ணர்ந்தே. 794

சாவான்னி

மாரினே ரிடப்ப தாக நேர்வலஞ் சிகரம் பற்றல்
சீராகு மதுவுத் தான சிகரம வற்றை நெற்றி
நேரின்மேற் றூக்கிப் பற்றி நின்றபி நயிப்பா ராகில்
கூறுசா வான்னிக் கென்று குலவிய மொழி யினுளே. 795

கண்ணுவர்

எண்ணிய மார்பு நேரா மிடப்பதா கத்தின் மீது
உண்வல மயூரம் பற்ற வுத்தான மயூர மாகும்
திண்ணமா மக்க ரத்தைச் சீர்கொள வபிந யித்தல்
கண்ணுவர்க் காகு மென்று கருதுவாய் மனத்துட் டேர்ந்தே

கார்க்கியன் முதலியோர்

மூர்க்கமி லானைக் கையை முகத்தினேர் பிடித்துக் காட்டல்
கார்க்கியன் றனக்கா மென்று கருதுமித் துறவோர்க் கெல்லாம்
ஏற்கவே மேலு ரைத்த வெழில்பெறு மபிந யத்தைக்
கார்த்திகே யன்ம தத்திற் கருதினன் முறைதெ ரிந்தே. 797

இருடிகள்

செய்யுட்கள் 775-797

பொது :—ரிஷி அஸ்தம் : இரண்டு அம்சாஸியம் வைத்து, கண்கள் மீலித திருஷ்டி பார்த்தல்.

1. பதஞ்சலி : சர்ப்ப சிரமும் ரிஷிஹஸ்தமும்.

2. வியாக்ரர (பாதர்) : சிம்மமுகத்தை அதோமுகமாகக் கொண்டு, ரிஷிஹஸ்தம் காட்டல்.

3. அகத்தியர் : முட்டி அஸ்தமும் ரிஷி அஸ்தமும். (பின்னும் 791ல் அகஸ்தியருக்குத் தனியே கூறப்படும்).

4. பிரகஸ்பதி : உத்தானத்தில், இடம் கடகாமுகம் செய்து, வலம் அர்த்த சந்திரனைப் பற்றிக் கடிகையில் (?) பிடித்தல்.

5. கலிக்கோட்டுமுனி : சிலிட்டமுகம் பற்றி, இருஷி ஹஸ்தம் சுாட்டல்.

6. வசிட்டர் : தக்ஷிணமூர்த்திக்கை காட்டிப் பின் இருஷிக்கை காட்டல்.

7. விசுவாமித்திரர் : சுவர்க்க ஹஸ்தம் காட்டிப்பின் இருஷி ஹஸ்தம் காட்டல்.

8. வியாசர் : மென்னிலைக்கையும் சதுரக்கையும் காட்டி, ரிஷி ஹஸ்தம் காட்டல்.

9. சுகர் : சுகதுண்டம் காட்டி, அப்பால் ரிஷிக்கை காட்டல்.

10. நாரதர் : இடம் மிருகசீருடம், வலம் கடகாமுகம் காட்டிப் பின் இருடிக்கை காட்டல்.

11. சூதர் : இடக்கை சதுரமாக்கி மார்புநேர் வைத்து, வலக்கை அம்சாசியத்தைப் பிடித்துப் பிறகு இருவி அஸ்தத்தைப் பிடித்தல்.

12. காசிபர் : வலக்கை தேவ அஸ்தமும், இடம் இராட்சதக்கை யும் பிடித்துப் பிறகு நாபியில் சந்தம்சக்கையையும் இருத்திக்கையையும் காட்டல்.

13. பிருகு : மார்புக்கு நேரே இடக்கைப் பதாகத்தைப் பிடித்து அவ்விடத்து கசதந்தக் கையை நேராகப் பிடிக்க உத்தானகசதந்த மாகும் ; இது பிருகுவிற்கு.

14. அத்திரி : மார்பு நேரே இடக்கைப் பதாகமும் அதன்மேல் வலக்கை சூசியும் வைத்தால் உத்தான சூசியாகும்; இது அத்திரிக்கு.

15. கௌதமன் : மவுனமாய் நின்று, நெஞ்சின் நேரே இரண்டு அம்சபக்ஷங்களை ஒன்றின்மேல் ஒன்று வைத்தல், சிலிட்டோச்சங்கக் கையாகும் ; இது கௌதமனுக்கு.

16. குச்சன் : மார்புக்கு நேரே இடக்கைப் பதாகம் வைத்து, அதன் மேலே வலக்கை சிங்கமுகமாக்கி வைத்தல் உத்தான சிங்க முகமாகும் ; இது குச்சனுக்கு.

17. ஆங்கீரசன் : இடக்கைப் பதாகத்தை மார்பு நேரிட்டு, அதன்மேலே வலக்கையால் லாங்கூலம் பற்றல் உத்தான லாங்கூல மாகும் ; இது, ஆங்கீரசனுக்கு.

18. துருவாசன் : மார்பின் நேரே இடப்பதாகம் வைத்து, வலக்கையால் முத்திரக்கை பிடித்தல் உத்தான முத்திரக்கையாகும் ; இது துருவாசனுக்கு.

19. மார்க்கண்டன் : மார்பின் நேரே இடப்பதாகம் வைத்து, வலக்கையால் மயூரம் பிடித்தல் உத்தான வஞ்சிதமாகும் ; இது மார்க்கண்டனுக்காம்.

20. கபிலர் : ஞானக்கை நெற்றி நேராய்க் கொள்ளல்.

21. தும்புரு : இரு மிருகசிரங்களைத் தோளுக்கு நேராய்க் கீழும் மேலும் காட்டல்.

22. அகத்தியன் : நெஞ்சின் நேரே இடக்கைப்பதாகமும், அதன்மேல் வலக்கை முகுளமும் அமைத்தல் உத்தான முகுளம்; இது, அகத்தியருக்கு. முன் 776ல் வேறுவிதமாகக் கூறப்பட் டுள்ளது,

23. பரத்துவாசன் : மார்புக்கு நேரே இடக்கைப் பதாகமும், வலக்கை முத்திரையும் பிடிப்பது உத்தான முத்திரக்கை ; இது பரத்துவாசனுக்கு.

24. ஆபஸ்தம்பன் : மார்புக்கு நேரே இடக்கைப்பதாகமும் அதன்மேல் வலக்கை சர்ப்பசிரமும் பற்றல்.

25. போதாயனன் : மார்புக்கு நேரே இடப்பதாகமும் அதன் மேல் வலக்கை சர்ப்ப சிரமும் பற்றல் உத்தான சர்ப்பசிரம் ; இது போதாயனருக்கு.

26. சாவான்னி : (ஜன்ஹ ?) மார்புக்கு நேரே இடப்பதாகமும் அதன்மீது வலம் சிகரமும் பற்றல் உத்தான சிகரமாகும் ; இது, சாவான்னிக்கு.

27. கண்ணுவர் : மார்பு நேராக இடப்பதாகமும் வலமயூரமும் பற்றுதல் உத்தான மயூரமாகும் ; இது கண்ணுவர்க்கு.

28. கார்க்கியர் : ஊனக்கையை(?) முகத்தின்நேர் பிடித்துக் காட்டல்.

இது, கார்த்திகேயன் மதம்.

இருடிகளின் அபிநயம் முற்றும்.

---

37. காமதேனு முதலியன

காமதேனு, அரிசந்தனம்

கபித்தப தாகந் தன்னை டோளஸ்வஸ் திகமாய்க் காட்டச்
சபலமாய் விளங்குங் காம தேனுவ தாகச் சாற்றும்
விபுமுத்தி ரைக்க ரத்த தோமுக மாக மேவத்
தபவரி சந்த னச்சீர் சாற்றலாங் கமல மாதே. 798

மந்தாரம், சந்தானதரு

சொல்லுமே சொர்க்க லோகா திபத்தருக் கபிந யக்கை
அல்லிலா மந்தா ரத்திற் கலபல்ல வஞ்சு வத்தி
னில்கர்த்த ரிக்கை ஸ்வஸ்தி கெற்றிபி லதோமு கஞ்செய்
தல்சந்தா னத்த ருக்காய்ச் சாற்றுவர் நூல்வல் லோரே. 799

கற்பகம், ஐராவதம், உச்சைச்சரவம் (குதிரை), மாதலி (தேர்ப்பாகன்).

கற்பக முகுளஞ் சுவத்திக் கையதோ முகம்பி டித்தல்
மற்பொரை ராவ தத்தாம் வண்டுக்கை மார்பு நேராய்ச்
சொற்கத்தின் குதிரை மான்ற லச்சுவத் திகம்பி டித்தல்
னிற்பன மாத லிக்குச் சூசிக்கை விளம்ப லாமே.

பாரிஜாதம்

இடதுப தாகமார்பு மேற்பிடித் தெழில்வ லக்கை
குடிதிரி பதாக மாக்கிப் பதாகத்தின் மீதிற் கொள்ளும்
படியுத்வேஷ் டிதமாய் வைத்தற் பகர்திரி ஞான வஸ்தம்
திடமுள பாரி சாதத் திற்கென வுரைசெய் மாதே. 801

மேகம்

வலக்கைக ளகாமு கம்மாய் வலதுபக் கத்தி ருத்தி
விலக்கிடைக் கைப்ப தாக மாய்விரல் கஜாவி ரித்து
அலக்கின்றி மேலே மோக்கி யதோமுக மாய்ப்பி டித்தல்
துலங்குமே மேகங் கட்குத் தோகைநீ யறிந்து கூறே. 802

ஆதிசேடன்

தீதிலா திடக்கை சர்ப்ப சீரிடம்பி டித்த தன்மேல்
தாதுடை வலக்க ரம்ப தாகம தோமு கஞ்செய்
காதர வாகக் காட்ட லாதிசே டனுக்கா மென்று
கோதறப் பரத நூலோர் கூறின ரறிந்து கொள்ளே. 803

காமதேனு முதலியன

செய்யுட்கள் 798-803

1. காமதேனு : கபித்த பதாகத்தை டோள ஸ்வஸ்திகமாய்க் காட்டல்.

2. அரிசந்தனம் : முத்திரைக்கையை அதோமுகமாக அமைத்தல்.

3. மந்தாரம் : அலபல்லவம், ஸ்வஸ்திகக்கை.

4. சந்தானதரு : கர்த்தரிக்கை ஸ்வஸ்திகத்தை நெற்றியில் அதோமுகம் செய்தல்.

5. கற்பகதரு : மூகுள ஸ்வஸ்திகத்தை அதோமுகமாகப் பிடித்தல்.

6. ஐராவதம் (யானை) : வண்டுக்கை மார்பு நேராகப் பிடித்தல்.

7. உச்சைச்சரவம் (குதிரை) : மான்றலிச் சுவத்திகம் பிடித்தல்.

8. மாதலி (தேர்ப்பாகன்) : சூசிக்கை.

9. பாரிஜாதம் (தரு) : இடக்கையைப் பதாகமாக மார்பு நேர் பிடித்து, வலக்கையைத் திரிபதாகமாக்கி, பதாகத்தின் மீது உத்வேஷ்டிதமாய் வைத்தல் நிரிஞான அஸ்தமாகும்; இது பாரிஜாதத்துக்கு,

10. மேகம் : வலக்கையைக் கடகாமுகமாக்கி வலப்பக்கத் திருத்தி, இடக்கைப் பதாகமாய் விரல்களீ விரித்து, மேலே நோக்கி, அதோமுகமாய்ப் பிடித்தல்.

11. ஆதிசேடன் : இடக்கை சர்ப்பசீரிடம் பிடித்து, அதன் மேல் வலக்கைப் பதாகத்தை அதோமுகமாக வைத்தல்.

காமதேனு முதலியவற்றின் அபிநயம் முற்றும்.

38. தசாவதாரம்

மச்சாவதாரம்

பச்சமாய்ச் சொல்லுங் கைகள் பரந்தாமன் முன்னுட் கொண்ட
விச்சையா முருக்கள் பத்திற் கிய்ம்பிடி லிடைக்கு நேராய்
மச்சக்கை பிடிப்ப தாகு மச்சாவ தாரத் திற்கும்
மச்சக்கு லங்க ளுக்கு மாகுமென் றுரைசெய் தாரே. 804

கூர்மாவதாரம், வராகாவதாரம்

கூர்மக்கை யிடக்கை நேராய்க் குலவியே பிடித்தான் மிக்கக்
கூர்மாவ தாரத் திற்கே குறிப்பர்கள் வலக்கை தன்னைச்
சீர்மருங் கிற்கு நேராய்ச் செப்பமா கப்பி டித்தால்
பேர்மலி யும்வ ராகப் பெருமானுக் காகும் பாரே. 805

நரசிங்காவதாரம், வாமனவதாரம்

வருசிங்க முகமி டக்கை வலக்கையிற் றிரிப தாகம்
தெரியவே பிடித்தா னுர சிங்காவ தாரத் திற்கும்
ஒருமுட்டி வலக்கை மேற்பா லொருமுட்டி யிடக்கை கீழ்ப்பால்
வருவித்துப் பிடித்தற் றாய வாமன மூர்த்திக் காமே. 806

பரசுராமாவதாரம், இராமாவதாரம்.

வலக்கையர்த் தபதா கந்தான் மருங்கினி லிடைக்குச் சேர்த்தே
இலக்கிய மாய்ப்பி டித்தாற் பரசுரா மனுக்கி தாகும்
வலக்கையிற் கபித்தம் சேர்த்து வாமத்தின் முட்டி சேர்த்து
நலத்துட னேபி டித்தா லிராமாவ தார மாமே. 807

பலராமாவதாரம், கிருஷ்ணவதாரம்

வலக்கையிற் பதாகஞ் சேர்த்து வாமத்தின் முட்டி சேர்த்தால்
பலராமற் காம்வ லப்பாற் பண்பான கழுத்தி னேராய்
இலகிய மிருக சீர்ஷ மிடக்கனிட் டிகையின் மிக்க
வலதங்குட் டத்தைச் சேர்த்தாற் கிருட்டினன் மருவும் பாரே

பௌத்தாவதாரம், கல்கியவதாரம்

வலமுட்டி கீழே நோக்கி வாமத்தின் மயூரம் வைத்தால்
பலமுள சமண ருக்கும் பௌத்தாவ தாரத் திற்காம்
வலத்தினிற் பதாகங் காட்டி மறுகைச்சிங் கமுகங் காட்டில்
கிலேத்தகற் கியவ தார நெடுமா லுக் காகு மென்றே. 809

தசாவதாரம்

செய்யுட்கள் 804–809

1. மச்சாவதாரம் : இடைக்கு நேராய் மச்சக்கை பிடிப்பது. இது எல்லா மச்சங்களுக்கும் ஆகும் (அபி. த. தோளுக்கு நேராய்ப்பிடித்தல்).

2. கூர்மாவதாரம் : இடக்கையைக் கூர்மக்கையாகப் பிடித்தல் (அபி. த. இரு கூர்மக்கைகளீனத் தோளுக்கு நேராய்ப் பிடித்தல்).

3. வராகாவதாரம் : (வராகக்கைகளீர) இடுப்புக்கு நேராகப் பிடித்தல் (அபி. த. இடுப்புக்கு நேராகப் பக்கங்களிற் பிடித்தல்).

4. நரசிங்காவதாரம்: இடக்கை சிம்மமுகம், வலக்கை திரிபதாகம்.

5. வாமனாவதாரம் : வலக்கை முஷ்டி மேலேயும், இடக்கை முஷ்டி கீழேயும் பிடித்தல்.

6. பரசுராமாவதாரம் : வலக்கை அர்த்த பதாகத்தை இடையின் பக்கங்களில் வைத்துப் பிடித்தல் (அபி. த இடக்கையை இடுப்பில் வைத்து, வலக்கையால் அர்த்தபதாகம் பிடித்தல்.

7. இராமாவதாரம்: வலக்கை கபித்தம், இடக்கையில் முஷ்டியும் சேர்த்துப் பிடித்தல் (அபி. த. வலக்கை கபித்தமும் இடக்கையில் சிகரமும் பிடித்தல்).

8. பலராமாவதாரம்: வலக்கை பதாகமும், இடக்கை முஷ்டியும்.

9. கிருஷ்ணாவதாரம் : வலப்பக்கத்தில் கழுத்தின் நேராக இரு மிருகசீரிடங்கள் பிடித்து, இடக்கையின் கனிட்டிகையையும் வல அங்குட்டத்தையும் சேர்த்தல். (அபி. த. இரு மிருகசீரிடக்கைகளீன ஒன்றுக்கொன்றுக் கெதிராக முகத்தினருகே பிடித்தல்).

10. பௌத்தாவதாரம் : வல முஷ்டியைக் கீழே நோக்கி, இடக்கையில் மயூரம் வைத்தல் சமணருக்கும் பௌத்தாவதாரத்துக்கும் ஆகும். (இக்கை அபி. த. இல் இல்லை).

11. கல்கி : வலக்கை பதாகமும் இடக்கை சிங்கமுகமும் காட்டுவது (அபி. த வலக்கை பதாகமும், இடக்கை திரிபதாகமும் காட்டல்.

7. தேவர் முதலியோரின் பருதி முற்றும்.

அபி. த. தமிழில் 10 அவதாரங்களே கூறப்பட்டுள்ளன. கோஷ். அபி. த. ல் உள்ள மாறுபாடுகள் அங்கங்கே காட்டப்பட்டுள்ளன.

பிற்சேர்பு - உரைநடை

1. தாம்பூலம் முதலியன

வாமக்கைப் பதாகத்தில் வலக்கை அங்குட்ட மூன்ற—வெற்றிலை. ஷை அங்குட்டத்தைத் தடவிக்காட்ட—சுண்ணும்பு.

வாமக்கைக் கடகா முகத்தில் வலக்கைக் கர்த்தரீகாட்ட—பாக்கு, ஜாதிக்காய், கொட்டைப்பாக்கு.

இரண்டு கைக்கபித்தத்தைக் கிள்ளிக்காட்ட—புகையிலை.

சந்தனம்—பதாகை விநியோகத்திற் காண்க.

குங்குமம்—கடகாமுக விநியோகத்திற் காண்க.

தேங்காய்—சாலாயக்கை விநியோகத்திற் காண்க.

பழம்—மூகுளக்கை விநியோகத்திற் காண்க.

2. ஆபரணங்கள் முதலியன

ஆபரணம்—அமுசாசிய விநியோகத்திற் காண்க.

உச்சிப்பூ—பதுமகோச விநியோகத்திற் காண்க.

உட்கட்டு—அர்த்தசந்திரக்கை விநியோகத்திற் காண்க.

சரப்பள்ளி—சர்ப்ப சிரிடக்கை விநியோகத்திற் காண்க.

கடகம்
தோள்வளை
தண்டை } —சந்த்ரகலாவஸ்த விநியோகத்திற் காண்க.

சிலம்பு—கடகாமுகவஸ்த விநியோகத்திற் காண்க.

ஒட்டியாணம்—இரண்டு அர்த்தசந்திரன் இடுப்பில் வைக்க.

பட்டுச்சேலை—இரண்டு சதுரம்.

சரிகைச்சேலை—இரண்டு அமுசாசியத்துடன் இரண்டு சதுரக்கை காட்டுதல்.

ரவிக்கை—இரு சிகரங்களைத் தனத்துக்குநேரிழுத்துக் காட்டல்.

கடுக்கன்—இரண்டு அமுசாசியம் இரண்டு காதில் வைக்க.

கவடு, கண்டிமணி—இரண்டு கடகாமுகம் முகத்துக்கு நேர் காட்டி, இரண்டு சர்ப்ப சிரிடம் கழுத்திற் போடுவதாகும்.

3. உடை முதலியன

சோமன்—பதாகத்தை வீசித் தோளிற் போடுவதும் இடுப்பில் கட்டுவதுமாம்.

பாதக்குறடு, சோடு, செருப்பு—இரண்டு சதுரக்கையால் முன்னீட்டி நடத்திக் காட்டுவதாம்.

8. புணர்ச்சி வகை

1. இரண்டு கர்த்தரிக்கையை யொட்டி யிடுக்கிற் கொடுக்கப் புணர்ச்சி. புணர்ச்சிக்குக் கலவி யென்பதும், லீலைக்குச் சமரதி யென்பதும் பேராம்.

2. ஷி கையைச் சுழற்றி மேலே சொன்னபடி பிணைத்துக் காட்ட உபரதி யென்றும், ஸ்திரீ கலவி யென்றும் பேராம்.

3. சிம்ம முகக்கைகளை ஒன்று மேலொன்று வைக்கப் பசுபந்த மாகும்.

4. சர்ப்பசிரக்கைகளைப் பின்னிக்காட்டுதல் நாக பந்தமாம்.

5. கஜமுகக்கைகளை மல்லாத்திப் பொருத்திக் காட்டுதல் கஜபந்தமாம்.

இரண்டாம் அத்தியாயம்

முகூர்த்தாதி எழுவகைத் தோற்ற அபிநய லக்ஷணம்

முற்றும்

உ

மூன்றும் அத்தியாயம்

சபாநாயகாதி சர்வவாத்திய பாத்திர லக்ஷணம்

---

1. தோற்கருவி

மத்தளம்

ஆதியிற் பரமன் றிருவுலாச் செய்யும்
போது தன்றிரு வடியை
யவனிமேற் றட்டுமவ் வோசை வேதத்
தாயின விதனைமா லுடன்சங்
கீதமாக் கித்தும் புருநா ரதர்க்குக்
கிருபையா யுரைத்திட வதனைக்
கேசரர் போற்றும் பரமன்முன் பாடக்
கேட்டவர் நடிக்கவா யுதங்கள்
நாதமே புரியப் படைத்திடு மென்ன
நான்முக னவ்வுரை கேட்டு
நயமுடன் விசுவ கருமனுக் குரைக்க
நன்றென வவனுளங் கனிந்து
சாதுவா மத்த கிரியினைக் கடைந்து
தனிக்கநாற் பதுவிர னீளந்
தன்னுடன் முப்ப தாம்விர லுயரஞ்
சரியளவா கச்செய் தனனே. 810

ஆதியிற் பரமசிவன் திருவுலாச் செய்யுத் திருவுளங் கொண்டு தன் திருவடிகளைப் பூமியில் தட்ட அவ்வோசை வேதத்திற் பிறந்தமையால், அதைத் திருமால் கீதமாகப் பாடித் தும்புரு நாரதர்க் குரைக்க, அவர்கள் பரமசிவன சந்நிதானத்திற் பாடும்போது, தாண்டவம் புரிவதற்கு வாத்தியங்களுண்டாக்க வேண்டுமென்று தன்னைப் பணிந்து நின்ற தேவர்கள் முதலானவர்களுக்கருளிச் செய்ய, அதைக் கேட்டிருந்த பிரமன் முதலிய தேவர்கள் அந்தப்படி விசுவகர்மாவுக்குத் தெரியப்படுத்த, அவன் பரமசிவன் ஆடும் ஆனந்தத் தாண்டவத்திற்காக, அஸ்தகிரியைக் கடைந்து 40 விரல் நீளமும் 30 விரலுயரமுஞ் செய்து,

செய்து வாசுகியை வாராகக் கோத்துத்
திறமையா மிடக்கண் டனக்குச்
சேடையா மந்தக் குரலேயுண் டாக்கித்
திடம்பெறும் வலக்கண் டனக்கு
மையுறும் கடிகைக் குரலேயுண் டாக்கி
வலக்கண்மத் திமகோ சந்தனிலே
வருமுதல் துளைக்கும் பதினன்காம் துளைக்கு
மங்கள புருடனு மாலை
ஐயமில் லாமலோம் நமோ நாரா
யணவெனு மந்திரத் தாலே
யழகுட னிருத்தி யிரண்டாந் துளைக்கு
அயிராணி கொழுநனுய் விளங்கும்
செய்யமங் களகணத் தினிற்கதி பன்றே
வேந்தி ரன்றனைச் சிறக்கச்
செழும்சம் பூர்ணய நமவென்னு மந்திரத்தாற்
றிறம்பெற நிறுத்தின னடைவே. 811

வாசுகியை வாராகக் கோத்து இடக்கண்ணுக்கு மந்தக் குரலும், வலக்கண்ணுக்குக் கடிகைக் குரலுமாக்கி, வலக்கண்ணின் மத்திம கோசத்தில் முதல் துளைக்கும் பதினன்காந் துளைக்கும் மங்கள புருடனை விஷ்ணு தேவனை, "ஓம் நமோ நாராயணய நம:" என்னும் மந்திரத்தாலே நிறுத்தினன்; இரண்டாந் துளைக்குத் தேவேந்திரனைச் "சம்பூர்ணயநம:" வென்னு மந்திரத்தால் நிறுத்தினன்.

அமையுமூன் றாந்துளைக் குநிதிக் குவேந்த
னைகு பேரனை வித்தியா சம்பூர்ணய
நமவெனு மந்திரத் தானிறுத் திமற்ற
நான்காந் துளைக்கு யாவரும் விரும்பச்
சுகமுட னேவிளங் கியமரர் போற்றும்
சுப்பிர மணியதே வனைப்பண் பாகச்
சயமிகும் சண்முக தேவாயநம வென்னுந்
தகைமைபெறு மந்திரத் தானிறுத் தினனே. 812

மூன்றாந்துளைக்கு நிதிக்கதிபனை குபேரனை, "வித்தியா சம்பூர்ணய நம:" என்னும் மந்திரத்தால் நிறுத்தினன். நான்காம் துளைக்கு யாவரும் விரும்பும் சுப்பிரமணிய தேவனைச் "சண்முக தேவாய நம:" என்னும் மந்திரத்தால் நிறுத்தினன்.

ஐந்தாகுந் துளைதனக்கு மீமாம் சாதி
யத்துவிதம் விளங்கச்செய் யிரவி தன்னை
வந்தசர்வ லோகசமா யநமா வென்னு
மந்திரத்தா னிறுத்தியா றைந்து ளைக்குச்
செந்திருநான் முகத்தின்மறை யோதி காயத்
திரிசாவித் திரிதரித்த பிரமன் றன்னைத்
தந்தசத்ய லோககுலா யநமா வென்னுந்
தனித்தமந் திரத்தாலே நிறுத்தி னனே. 813

ஐந்தாந் துளைக்கு மீமாம்ஸை முதலான அத்துவிதங்களை விளங்கச்செய்யுஞ் சூரியனைச் "சர்வ லோக சமாயநம:" என்னு மந்திரத்தால் நிறுத்தினன். ஆறாந்துளைக்கு நான்கு முகத்தாலும் வேதம் விதிக்கும் காயத்திரி சாவித்திரி தரித்த பிரமதேவனைச் "சத்தியலோக குலாய நம:" என்னும் மந்திரத்தால் நிறுத்தினன்.

ஏலவே யேழாகுந் துளைத னக்கு
எவர்வினைக ளையும்போக்குங் கணேசன் றன்னைப்
பாலவிநா யகாயநமா வென்னுமந் திரத்தாற்
பாங்குடனே நிறுத்தியெட் டாந்துளை தனக்கு
வேலைக்குத் தேவதையாம் வருணன் றன்னை
மிக்கதோ ஷாந்தரா யநமா வென்னும்
கோலமுள மந்திரத்தா னிறுத்தி னன்பொற்
குடநிகர்த்த கனதனத்தாற் குலாவு மானே. 814

ஏழாந்துளைக்கு எல்லாருடைய வினைகளையும் போக்கும் கணபதியைப் "பால விநாயகாய நம:" என்னும் மந்திரத்தால் நிறுத்தினன். எட்டாந்துளைக்குக் கடலுக்குத் தேவதையான வருணனைத் "தோஷாந்தராய நம:" என்னும் மந்திரத்தால் நிறுத்தினன்.

தருமொன் பான்றுளைக்குச் சாமளையாம் பெண்ணின்
றலைவனென வினங்குகின்ற மறலி தன்னை
வறுமையிலாச் சத்வாம்சா யநமா வென்னு
மந்திரத்தா னிறுத்திப் பத்தாந் துளைக்குக்
குருவென்னு மிருகண்டு வீன்றெ டுத்த
குணநிதியாய் விளங்குமார்க் கண்டன் றன்னைப்
பொருதுசிவப் பிரியாய நமவென் றோதும்
புதுமையுள மந்திரத்தா னிறுத்தி னனே. 815

ஒன்பதாம் துலைக்குச் சாமளை யென்னும் பெண்ணுக்குத் தலைவ னான மறலியைச் "சத்வாம்சாய நம:" என்னும் மந்திரத்தால் நிறுத்தி னான். பத்தாம்துலைக்குச் சிவசேஷம் புசிக்குஞ் சாயுச்சியம் பெற்ற மார்க்கண்டனைச் " சிவப்ரியாய நம:" என்னும் மந்திரத்தால் நிறுத்தி னான்.

கதியருளும் பதினொன்றும் துலைத னைக்குக்
கடும்விசையாய்ச் செலும்வடுகக் கடவு டன்னை
மதிமிகுத்த க்ஷேத்ரபா லனமா வென்னு
மந்திரத்தா னிறுத்திப்பன் னீராம் துலைக்குப்
பதினெண்வீ ணைக்கதிப நாரதனை நார
தாகலகப் பிரியவகி லகலகந மாவென்
றிதம்பெறவே நிறுத்திவைத்தா னன்னப் புள்ளை
யிகழ்ந்தசிறு கடையுடைய வெழில்சேர் மானை.

பதினோராந்துலைக்கு விசையாய்ச் செல்லும் வடுகக் கடவுளை, "க்ஷேத்ரபால நம:" எனும் மந்திரத்தால் நிறுத்தினன். பன்னிரண் டாம் துலைக்குப் பதினெட்டு வீணைக்கதிபனை நாரதனை, "நாரத கலகப்ரிய, அகிலகலக நம:" என்னும் மந்திரத்தால் நிறுத்தினன்.

தனிப்பதின் மூன்றும் துலைக்கு நால்வேதந்
தனையோதிச் சுகமிக வருளுந்
தலகுலோத் தமனை மிருடியைச் சகல
சாஸ்திரபு ராணைய நமவென்
றினியமந் திரத்தா னிறுத்திப் பன்னொந்து
மீரெட்டாந் துலைகட்கு வாணள்
ளலவே மிகுத்து மூன்று காலத்தி
னியல்பெலா மனந்தனி லுணர்ந்த
முனியாமு ரோமரிஷி யைரோம சபுண்
யாயமக ரிஷேநம வென்னு
மந்திரத் தாலே நிறுத்தின னிதற்கு
வலப்புறஞ் சிவமிடப் புறத்தில்
உனுமுரை மந்தக் குரலா கையாலு
மோதுமிப் பதினாறு துலைக்கும்
உறுதிகொள் பெண்தே வதைகளா மவர்கட்
குற்றபே ரோதுவோம் பிரித்தே.

பதின்மூன்றுதுளைக்கு நான்கு வேதத்தையும் ஒதிச் சுகந்தருங் குலோத்தம மகரிஷியை, "சகல சாஸ்திர புராணாய நமः" எனும் மந்திரத்தால் நிறுத்தினன். பதினைந்து பதினாறுந் துளைகளுக்கு வரணன் மிகுத்து மூன்று காலத்தின் வரலாறும் உணர்ந்த ரோம ரிஷியை, "ரோமசபுண்யாய மகரிஷே நமः" (?) எனும் மந்திரத்தால் நிறுத்தினன். வலப்புறஞ் சிவமாகையாலும், இடப்புறம் மந்தக் குரலாகையாலும், அப்பதினாறு துளைக்கும் பெண் தேவதைகள் விளங்குவார்கள்.

துளைகளின் அதிதேவதைகள்

இலக்குமிதா ரைசுசீலை வாணி வள்ளி
யிதமருளு முமைவண்டோ தரிய யிராணி
துலக்குமுஷ துரோபதை மேனகை யரம்பை
சொலகலிகை திலோத்தமை யூர்வசி பூமாது
பெலக்குமிவ் வாறுன மிருதங்கத் திற்குப்
பிரமவாத் தியமென்னும் பேர்பெற் றேங்குந்
தலத்திலென விம்முறை யெல்லாம் விளங்கச்
சாற்றுமே கும்பமுனி மதத்திற் றனே. 818

இவர்கள் பெயர்கள் இலக்குமி, தாரை, சுசீலை, சரசுவதி, வள்ளி, பார்வதி, வண்டோதரி, இந்திராணி, உஷாதேவி, துரோபதை, மேனகை, அரம்பை, அகலிகை, திலோத்தமை, ஊர்வசி, பூமிதேவி யென்பவைகளாகும். இப்படிக்கான மிருதங்கத்துக்குப் பிரம்ம வாத்திய மென்று பெயராகும். இவை கும்பமுனி என்னும் அகஸ்திய மதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

தத்தித் தொன்னம் பிறந்தவகை.

ஆதியிற் பரமன் றுண்டவம் புரியு
மப்போது காற்சிலம் பவிழ்ந்து
ஆகாயந் தொட்டு விழுமோசை முதலி
லவர்புயத் துடைபாதங் களிலே
மோதியே நிலத்தில் விழுந்தவே கத்தின்
முழக்கமாய்த் தத்தித்தொன் னமென
முதலுள சப்தம் பிறந்ததவ் விடத்தின்
மொழிந்திடு மொவ்வொன் றினுக்குஞ்

சாதியு மெழுத்துக் களுந்தனித் தனியே
சதாசிவ னுரைத்திடு மதனைத்
தரணியிற் சிறந்த மிருதங்க முதலாஞ்
சகலவாத் தியங்கட்கு முதலிற்
தீதற வாசித் திடற்குமா டலுக்குஞ்
சேர்ந்திதே முதலெழுத் துக்களாய்ச்
செலுமென வறிஞருல குளோர் காணச்
செப்பினர் நூன்முறை தெரிந்தே. 819

முன்பு பரமசிவன் தாண்டவ மாடும்போது காற்சிலம்பவிழ்ந் தெழும்பி ஆகாசத்தைத் தொட்டு விழும்போது, முதலில் புயத்தி லும், அப்பால் துடையிலும், பாதத்திலுந் தொட்டு, நிலத்தில் விழும் வேகத்தில் தத்தித் தொன்னம் என்னுஞ் சப்தங்கள் பிறந்தன; அவற் றுள் ஒவ்வொரு சப்தத்திற்கும் ஜாதிகளும் எழுத்துக்களும் பரம சிவனலுண்டாக்கப்பட்டன. அவை பூமியில் மிருதங்காதி வாத்தியங் களுக்கு முதன்மையான அக்ஷரங்களாயின.

நாத லட்சணம்

வலக்கை யிடக்கை வாத்தியங் களுக்கு
மகிழ்சத்தி சிவனதி தெய்வம்
வாசிக்கு முதலிலி ரண்டுகைச் சமமாய்
வளர்ந்தீந் தீந்தித் திமியென்று
ஒலித்திட மற்றுந் தாந்தா மதென்னு
மோசைகள் முழக்கவே வேண்டும்
ஓதிய வந்தச் சமவஸ்த முழக்க
மொருமிக்கும் போதினி னிதாய்த்
துலக்கிய சுரங்க டம்முடன் கூடிச்
சோர்விலா நாதமுண் டாகுஞ்
சொல்லுநா தத்தி னகாரம் பிராணன்
றோய்ந்த தகாரமக் கினியாம்
பலத்திடு மந்தப் பிராண னக்கினியும்
பிசகாதி ரண்டுமே கூடிப்
பெருமையா நாத மாயின வென்றே
பேசுவர் நூன்முறை தெரிந்தே. 820

819. இவ்வாறே ஸங்கீதராஜ என்ற நூலில் கும்பகருணரும், பிருஹத் தேசீ என்ற நூலில் மதங்கரும் கூறுவர்.

வலக்கை இடக்கை வாத்தியங்களுக்குச் சத்தியுஞ் சிவனும் அதிதேவதைகளாகும். முதலில் வாசிக்கும்போது இரண்டு கைகளுஞ் சமமாகத் தீந்தீந்நித்திமி என்றும், தாம் தாம் என்றும், ஓசைகள் முழங்கச் செய்யவேண்டும். அந்த அஸ்தம் ஒருமிக்கும்போது, அதில் இனிமையான சுரத்தோடுங் கூடிய நாதம் பிறக்கும். நாதமென்னும் சொல்லின் அக்ஷரங்களுக்கு, நகாரம் பிராணனும், தகாரம் அக்கினியும் எனப்படும். இந்தப் பிராணக்கினி இரண்டுங்கூடி நாதம் என்று பெயராயிற்று.

மத்தளப் பஞ்சப் பிராணன்

இசையுமிந் நாதம் நந்த சுகோஷ
மெனமூ வகையதாய் விளங்கு
மேற்குமந் தரமத் திமதா ரமதா
மெழில்பெறுஞ் சுரங்களே மிகுந்து
நசையறப் பேச நந்த நாதஞ்சு
நாதமுங் கோஷநா தமென
நாடுமூ வகையா யிவற்றுடன் ரூள
நயம்பெறு கானமுஞ் சேர்ந்து
பசைகொ ளிவ்வைந்து மிருதங்கத் திற்குப்
பஞ்சப் பிராண னேயாகும்
பாவிய தாளங் கானத் துடனே
பகரும் வாத்திய மனுசரிக்கும்
வசையிலா திம்மூன் றுஞ்சேர்ந்து முழங்கும்
வாத்திய மிருதங்க மென்ன
வாழ்த்தினர் நூலைப் பார்த்துணர்ந் தவர்கள்
மதிதனைத் திகழ்முக மாதே. 821

இந்த நாதம் மூன்று வகைப்படும். அதில் நந்தநாதம், சுநாதம், கோஷநாதம் என்னும் மூவகை நாதங்கள் விளங்கும். மந்தர, மத்திம, தார சுரங்கள் மிகுந்து இனிமையாய்ப் பேசினது நந்த நாத மென்றும், சுநாத மென்றும், கோஷ நாத மென்றும் மூவகையாய்த் துலங்குவதுடன், தாளமுங் கானமுஞ் சேர்ந்து ஐந்தாகி, இவ்வைந்தும் மிருதங்கத்திற்குப் பஞ்சப் பிராணங்களாகும். தாளத்துடனும் கானத்துடனும் வாத்தியம் அனுசரிக்கும். இம்மூன்றுஞ் சேருமாகில் மிருதங்க மென்று சொல்லப்படும்.

820. இவ்வாறே, ஸங்கீதராஜ என்ற நூலில் கும்பகருணரும், பிருஹத்தேசி என்ற நூலில் மதங்கரும் கூறுவர்.

உத்தம, மத்திம, அதம வாத்தியங்கள்

இதம்பெறு மிக்கீத வாத்திய நிர்த்தங்க
ளிம்மூன்று மரனயன் மால்சொரூப மாகும்
அதைகாவாற் கொனிப்பித் தலுத்த மம்பே
ரங்கையால் வாசிக்கு மந்த வாத்தியம்
சதிர்பெறு மத்திமம்பா தத்தால்வா சித்தல்
சங்கையிலா ததமமெனச் சாற்று நூலே
விதிமுறையா யுணர்ந்துரைத்தார் மேலோர் முன்னுள்
வேலினைத் திகழ்ந்தகரு விழியி னாளே. 822

கீத வாத்திய நிருத்தங்கள் மூன்றும் பிரமா விஷ்ணு ருத்திரர் சொரூபம். அதில் நாவினுற் கொனிப்பிக்கும் வாத்தியம் உத்தமம் கையினால் வாசிக்கும் வாத்தியம் மத்திமம்; பாதத்தினால் வாசிக்கும் வாத்தியம் அதமமாகும்.

சிவனிருப்பிடம்

பிரகிருதியே தேகமத் தேகத்திற் பிராண
னுண்டாகு மந்தப் பிராண னூடே
மருவியதோ ரோசை யுண்டா மவ்வோசைக்
குள்வளர் நாதமுண் டாகுமந் நாதத்துள்
பரமசிவ னிருப்பனிம் மூர்த்திகளுக் திற்கும்
பண்பான பிரம மதிதெய்வ மென்று
பொருளனிக்கு நூலதனை யாய்ந்து ணர்ந்தோர்
புகன்றனர்கள் பரதவிதம் புல்லு வார்க்கே. 823

பிரகிருதி தேகம். அந்தத் தேகத்தின் மத்தியில் பிராணனுண்டாகும்; பிராணன் மத்தியில் ஓசையுண்டாகும்; அந்த ஓசை மத்தியில் நாத முண்டாகும்; நாத மத்தியிற் பரமசிவனிருப்பன்; இவ்வைந்து மூர்த்திகளுக்கும் பிரமம் அதி தெய்வமாகு மென்பது.

நிருத்த பஞ்சப் பிராணன்

சுருதிதாய் கீதம் தந்தை தோழன்மத் தளமே யாகும்
வருதாள முடன்பி றப்பாம் வளரிர சமதே யில்லாள்
பெருகுமிவ் வைந்தும் பஞ்சப் பிராணனு டனைத் திற்கென்
றுறுதியா யிவற்றை யெல்லா முரைத்தனன் பரதன் ருனே

சுருதி, தாய்; கீதம், தகப்பன்; மிருதங்கம் (மத்தளம்), சிநேகிதன், தாளம், சகோதரன்; இரசம், மனைவி; இவவைந்தும் நடனத்திற்குப் பஞ்சப் பிராண னென்பது பரதமுனி மதம்.

மத்தள அக்ஷர லக்ஷணம்

அதி தெய்வங்கள்

மத்தள மெனுமெ முத்தில் மகரமே சிவசொ ரூபம்
வித்தகத் தகர மாகும் விட்டுணு வின்சொ ரூபம்
புத்தமு தெனும்ள காரம் பொருந்தும யன்சொ ரூபம்
இத்தகை மையதா மென்றே யியம்பினர் நூல்வல் லோரே.

மகாரம், சிவசொரூபம்; தகாரம், விஷ்ணு சொரூபம்; ளகாரம், பிரம சொரூப மென்பதாம்.

அக்ஷரங்குறிலெடில் விவரம்

முன்னுள மகார மூன்றிப் பேசலால் நெடிதாய் மூளும்
பின்னுள தகாரத் தோடே பிதற்றுள கார மிரண்டும்
மன்னுமே குறில்க ளாக வகுத்திதை நூல்வல் லோர்கள்
சொன்னவக் கருத்த றிந்து சொல்லுவாய் கமல மாதே. 826

முதலிலுள்ள மகாரம் மத் என்று ஊன்றிப் பேசுவதால் நெடிலா யிற்று. மற்றத் தகார ளகார மிரண்டுங் குறில்களாயின.

குருலகு சப்தங்களின் விவரம்

சொல்லிய மகாரத் திற்குத் தோன்றுமே குருசப் தந்தான்
புல்லிய தகரத் தோடே பொருந்துள காரம் ரண்டும்
வல்லிதாம் லகுசப் தங்கள் வழங்குமே வெவ்வே ரூக
அல்லெனுங் குழலி னுளே யறைந்தனர் நூல்வல் லோரே.

மகாரம் குருசப்தமாகும், தகார ளகாரங்களிரண்டும் லகுசப்தங் களாகும்.

அக்ஷரத்தின் உரு

யானைமேற் றுலங்க வைத்த கொடியென மகார மாகும்
வானிடை யுமைக முத்தில் சர்ப்பச்சீ ராகத் .....
தோணுமே தகர மற்றுள் சொல்லிய ளகரந் தானும்
மானெனும் விழியி னுளே வளர்பிள்ளைப் பிறைபோ லென்னே.

மகாரம் யானையின் பேரில் நிறுத்திய கொடியைப் போலும், தகாரம் பார்வதி கழுத்தில் அணிந்திருக்கும் நாகாபரணம் போலும், ளகரம் பிள்ளைப் பிறை போலுந்துலங்கும்.

---

826. ஊன்றிப்பேசுதல் மத்த என்று அழுத்துதல்.

அக்ஷர நிறம்

சாற்றிய மகாரத் திற்குத் தனிவெள்ளை நிறமே யாகும்
போற்றிடுந் தகர மேபொன் னிறமென வியம்பு மற்றும்
போற்றிய ளகர மேக பிலநிற மெனவே புல்லும்
நாற்றிசை யறிய நூலோர் நவின்றதை யறிந்து கூறே. 829

மகாரம் - வெள்ளை நிறம்; தகாரம் - பொன்னிறம்; ளகாரம் - கபில நிறமென்பது.

அக்ஷரபீஜம்; அதிதெய்வம்

அடுத்திடு மகரத் திற்கு ஆகாய பீச மாகும்
தொடுத்திடுந் தகரத் திற்குச் சொல்லுமே பூமி பீசம்
வடித்திடு ளகரத் திற்கு வழங்கிய தப்பு பீசம்
படைத்திடு மிவைக டாமே வதிதெய்வ மென்னும் பாரே. 830

மகாரம் - ஆகாசபீசம்; தகாரம் - பூமி பீசம்; ளகரம் - அப்புபீச மென்பது. இந்த ஆகாயம் மகாரத்திற்கும், பூமி தகாரத்திற்கும், அப்பு ளகாரத்திற்கும் அதி தெய்வங்களாகு மென்பது.

பலன் கொடுப்போர்கள்

நிலைபெற முன்பு ரைத்த நெடிலெனு மகரத் திற்குப்
பலமருட் டெய்வ மாகப் பரமசிவ னேயே சாற்றும்
தலைமைசேர் குறில ளான தகரள கரங்க ளுக்குப்
பலமதை யருளுந் தெய்வம் பார்வதி யென்னு நூலே. 831

முதற் சொல்லிய நெடிலெழுத்திற்குப் பரமசிவனும் மற்றக் குறிலிரண்டுக்கும் பார்வதியும் பலன் கொடுப்பவர்களென்பது.

ஓசையின் கணம்

வாரான நெடிலொன்று குறிலி ரண்டு
வகைசேர்ந்து பகணமென வரும திற்குச்
சீரான சதிதெய்வ நிறமே வெண்மை
திங்கள்வங் கிசங்குலத்திற் செட்டி யோனி
பேரான பாம்பு பதியாஞ் சோமன்
பெருமிடப ராசிகுண மமுத மாகும்
வீரான சுபபலனெண் கணங்க ளுக்கு
மோலகுஞ் சந்தசுக்குள் விள்ளும் பாரே. 832

இந்த மகரம் நெடிலாய்த் தகரளகரங்கள் குறிலாயிருப்பதால் அது பகணமாயிற்று. அந்தக் கணத்திற்குச் சந்திரன் தெய்வம்; சந்திரனோத்த வெண்மை நிறம்; வைசிய குலம்; சந்திர வமிசம்; தேவ கணம்; சர்ப்ப யோனி; சந்திரனதிபதி; விருஷபராசி; அமுதகுணம்; பலன் - சுபம்; எட்டுக்கணங்களுக்குள் முக்கியமானது. இது, **சந்தஸ் சாஸ்திரத்திலடங்கியது.**

வாத்தியக்காரருக்குப் பஞ்சப் பிராணன்

மூற்றுமத் தளம தென்னு மூன்றெழுத் துண்ம காரம்
வித்தாகு மேத காரம் விளங்குமே முளைய தாக
அத்தனி ளகர மொன்று மதிலுடைப் பலன்க ளாகும்
சத்தெனு மொழியி னுளே சாற்றுவை நூலை யாய்ந்தே. 833

இயம்பிய விவற்றி னோடே யிணங்கிய தோலும் வாரும்
பயனுற விரண்டுங் கூடிப் பஞ்சேந்தி ரியம்போ லாகும்
வயணமா யிதைவா சிக்கும் வாத்தியக் கார னுக்குத்
தயவுள பஞ்சப் பிராண னுமெனச் சாற்று நூலே. 834

மூன்சொன்ன மத்தளமென்ற மூன்றெழுத்துக்களுக்குள், மகரம் வித்து; தகரம் முளை; ளகரம் அதன் பழம்; இவற்றுடன் தோலும் வாரும் இரண்டுஞ் சேர்ந்து பஞ்சேந்திரிய மென விளங்கும். இந்த ஐந்தும் அந்த வாத்தியக்காரருக்குப் பஞ்சப் பிராண னென்பது.

மத்தள மரங்களும் அளவும்

கருதுசந் தனமும்பலா கருங்காலி
செங்காலி வேம்பெனு மரத்திற்
கண்டதெது வாகிலு மாதியோ
டந்தமாய்க் கணுநாற்பத் தெட்டங்குலப்
பிரமாண மரைவிரற் கடைமந்த
மாகப் பிணைத்திடது முகமதனிலே
பேசுபதி னுலுவல முகமதிற்
பதின்மூன்று பெரும்விரற் கடைஞீளமுந்
தருநடுவி டங்கட்டை விரலுயரமாய்ச்
செய்துதே னுசர்மத்தை மூட்டிக்
சாதுவாந் தேசியத்திற் கீரெட்டுடன்
சாருபனி ரண்டு முதலாய்ப்

பொருதுளை களிலும்வார் பூட்டிச்சோ
றூட்டிப் பொலிவுபெற வேவமைத்தல்
புதுமையா மத்தளத்தி னிலக்கண
மெனப்புக லுவர்கணூல் வல்லோரே. 835

சந்தனம், கருங்காலி, செங்காலி, பலா, வேம்பு, இம் மரங்களில் எதிலேனும் முதல்தொட்டுக் கடைசி வரையிலும் 48 அங்குலம் பிரமாணமும், அரைவிரற்கிடை மத்தத்தில் (?) இடது முகத்தில் 14, வலது முகத்தில் 13 அங்குல நீளமும், நடுவிடத்திற் கட்டை விர லுயரமும் பொருந்தச்செய்து பசுவின் தோலான் மூடிச் சுத்தசுதி யத்துக்கு 16, 12, முதற்றுளைகளுக்கு வார் பூட்டிச் சோறமைத்துச் செய்வது மத்தளத்துக்காகு மென்பது.

மத்தளம் வாசிக்கும் வகை

ஆனமத் தளவோசை தத்தத்தி தான் னம்மெனமூன்
னக்கர மொலிக்க வேண்டும்
அதனிவா சிக்குங்கை யர்த்தசக் கிரனுகு
மதற்கதி பதிநக் தியாம்
தானமாக் கபிலநிற மாஞ்சக்க ரம்போன்ற
கண்களு மிருக்க வேண்டும்
கனிவான சாம்பலுட னண்ணமூஞ் சேரக்
கலந்தரைத் திட்ட சோற்றைத்
தோணிடது பக்கத்திற் கோதும்பை சேர்த்தற்போற்
றுலங்கவே நாலங் குலமாய்ச்
சேராம லொருமேனி யாய்வலப் பக்கத்திற்
றெரட்டிடத் தகுமி வற்றைத்
தானுக வேயுணர்ந் திந்தவாத் தியக்காரன்
றக்கபடி வாசிப் பதுவே
தகுதியென வேபரத சாத்திர முணர்ந்தவர்கள்
சாற்றினர்கண் முறைதெ ரிந்தே. 836

இப்படிக்கான மிருதங்க வாத்தியத்தில் முதலில் தத்தித் தொன்னமென்னும் அக்ஷரம் பேசவேண்டும். வாசிக்குங் கைகள் அர்த்த சந்திரனுகும் ; அதற்குக் கர்த்தா நந்திகேசுவரன் ; கபில நிற முடைய சக்கரங்களைப் போல இருபக்கங்களிலுங் கண்களிருக்க வேண்டும் ; சாம்பலுஞ் சோறும் அரைத்த சோற்றை இடப்பக்கத்திற்

கோதுமை யாவாயெடுத்துச் சேர்த்து நாலங்குலம் ஒரு மாதிரியாக வலப்பக்கத்திலிடத்தகும். இவைகள் அறிந்து அந்த வாத்தியக் காரன் வாசிக்க வேண்டும்.

மத்தளம் முற்றும்.

பஞ்சக்கருவிகளின் லக்ஷணம்

ஓசைகொண்ட தோற்கருவி யுற்ற துளைக்கருவி
நேசச் சுருதி மிடக்கருவி—மாசிலா
நாதநரம் புக்கருவி நல்லகஞ் சக்கருவி
பேதமுறு மோசைப் பிறப்பு. 837

கருவிகள் ஐந்து விதம்: அவை, தோற்கருவி, துளைக்கருவி, மிடற்றுக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி ஆம்.

தோற்கருவி 36க்கு லக்ஷணம்

மானேகேள் தோற்கருவி வாத்திய மூப் பத்தாறிற்
கானவித நான்கா யமையுமே—மீனமிலா
உத்தமமத் திமமதமம் வீரமெனு மோர்நான்காய்
வைத்ததனில் விஞ்ஞும் வகை. 838

36 விதமான தோற்கருவிகள் உத்தமம், மத்திமம், அதமம், வீரமென நான்கு வகையாகக் கூறப்படும்.

---

836. மூன்றாவது அடிக்குப்பொருள் விளங்கவில்லை. மத்தளம் என்றும் மிருதங்க மென்றும் உரை மயங்கியே செல்லுகின்றது.

இதற்குமேல் பழைய உரை இல்லை.

838. இம் முப்பத்தாறின் பெயர்களையும் பின்வரும் செய்யுள்களிற் காண்க. சிலப்பதிகாரம் உரை. பக். 105இலும் இப் பெயர்கள் பின் வருமாறு கொடுக்கப் பெற்றுள்ளன. பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வலயம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிசகம், வீரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை என்பன. இவை ஏழு வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

838ல் தோற்கருவி 36 என்றும் அவை நான்கு வகைப்படும் என்றும் குறித்துப் பிறகு 839—841ல் உத்தம, மத்திம, அதம, வீர, என்ற வகைகளில் 41 வாத்தியங்கள் கூறப்பட்டுள்ளன.

உத்தம வாத்தியங்கள்

படகமே ரிகைமத்த ளங்கரடி கைத்திமிலைப் பருமு டுக்கை
குடமுழாச் சல்லிகை யிடக்கை டமருகமெனக் கூர்வாச் சியம்பத்தும்
படிமிசை யுத்தம மாகுமால் வேத னெடுசூல பாணியாதி
வடிவுளதே வர்க்குகந்த வாத்தியமா மென நூலில் வழுத்து மாதே.

உத்தம வாத்தியங்களாவன: படகம், பேரிகை, மத்தளம், கரடிகை, திமிலை, உடுக்கை, குடமுழா, சல்லிகை, இடக்கை, டமருகம் என்ற பத்து. இவை, மால், வேதன், சூலபாணி முதலான தேவர்க்கு உகந்த வாத்தியங்களென்று நூல்கள் கூறும்.

மத்திம வாத்தியம்

தண்ணுமை மத்த ளத்துந் துபிதடா ரித்து டும்பு
கண்விடு தூம்பு தக்கை சல்லரி கமழு முல்லை
நண்ணிய பறையிவ் வொன்பா னுகுமத் திமமாய் வாத்தியம்
விண்ணுளு மகவான் கந்தன் முதலாக்தே வர்க்கு விள்ளே.

மத்திம வாத்தியங்கள்: தண்ணுமை, மத்தளம், துந்துபி, தடாரி, துடும்பு, கண்விடுதூம்பு, தக்கை, சல்லரி, முல்லைப்பறை இவ்வொன்பதும் இந்திரன், கந்தன் முதலான தேவர்களுக்காம்.

அதமவாத்தியம்

அந்தரி முழாகாழி கைப்பறைப்பாங்
கிப்பறைப் பாலைப் பறைச்சீர்
சந்த்ரவலை யந்தகுணி கணப்பறைபல்
பறையுடனே சார்ந்து நிற்குந்
தந்தவிர லேறுடனும் வாத்தியமொன்
பதுங்காளி சாத்தன் றுர்க்கை
முந்துவை ரவன்வனக்கா ளிகிராம
தேவதைக்கு முகந்த தென்னே. 841

அதம வாத்தியங்களாவன: அந்தரி, முழவு, நாழிகைப்பறை, பாங்கிப்பறை, பாலைப்பறை, சந்திரவலையம், தகுணி, கணப்பறை, விரலேறு. இவை, காளி, சாத்தன், துர்க்கை, வைரவன், வனக்காளி, கிராமதேவதைகளுக்காம்.

டம்மாரஞ் சண்டா தர்சா டங்காதர் டிதத்தி ஞேடு
பம்மிய முரசு மோர்கண் முரசெனப் பகரு மேழும்
கம்மிய வசுரர்க் கும்ராக் கதருக்கு மாகு மாகச்
செம்மிய விவ்வீ ரெட்டு மதமவாத் தியமாய்ச் செப்பே. 842

அதமவாத்தியங்கள் : டம்மாரம், சண்டா, தர்சா, டங்கா, தாடிதம், (பம்மிய) முரசு, ஓர் கண் முரசு, இவ்வேழும், அசுரர்க்கும் இராக்கதருக்குமாகும். இப் பதினொறும் அதம வாத்தியங்களாகும்.

வீரவாத்தியம்

தம்பட்டம் டக்கை யும்நி சாளமு முரசு நெய்தற்
பம்பிய பறைகு றிஞ்சிப் பறையெனும் வீர மாறும்
தம்பமா யுலகை யாளுந் தராபதிக் காகும் மேல்வி
ளம்பிய வாத்ய மெல்லாம் யாவருஞ் சமயங் கொள்வார். 843

வீரவாத்தியம் : தம்பட்டம், டக்கை, நிசாளம், முரசு, நெய்தற் பறை, குறிஞ்சிப்பறை ஆகிய ஆறும் அரசர்க்கு உரியனவாம்.

மிருதங்கலக்ஷணம்

நந்திமதம்

வினவிய மிருதங்க மண்ணுட னுதன்
மிக்கதாம் பிரதிஞ் ஞாதல்
முனிவிலாப் பிரமக் கடமெனச் செய்து
முத்திரை யீரே ழங்குலத்தில்
சினமிலாக் குரங்கின் றோலதாற் கட்டித்
திரிகிட வெனுமொலி முழக்கில்
கனமிரு தங்க மாமென நந்தி
கருதின னீசநாட் டியத்தே. 844

நந்தி, ஈச நாட்டியத்துக்குரிய மிருதங்கத்தின் இலக்கணம் கூறியவாறு : மண்ணுலாவது, தாம்பிரத்தினுலாவது, பிரம்கடமாகச் செய்து, முத்திரை 14 அங்குலங்களில் அமைத்து, குரங்கின் தோலாற் கட்டி, திரிகிட என்ற ஒலி முழக்கும்படி செய்தல்.

வாத்தியங்களின் தொனிலக்ஷணம்

மிருதங்கத்தொனி

திரிகிட திரிகிட தகதொக திகிகிட
கிட்டக் கிட்டக் கிட்டத் தகிகுங்
கும்கும் கும்மெனக் கொள்ளும்
துங்கமிர் தங்கத் தொனியிலக் கணமே. 845

திமிலைத்தொனி

தத்துவந் தத்துவந் தத்துவங் ஙுகித
தத்ததத்தத் தோம் தோம் தரிய
தரிய தத்தத் தோமென்னும்
பெரிய திமிலை வாத்தியத் தொனியே. 846

அனுவாத்தியத்தொனி

தரைதத்தோந் தரைதத்தோந் தரைதத்தோந் தத்தோந்
தரைதத்தோந் தரைதத்தோந் தரைதரை—தரையுரைவாம்
பனுவ லறிந்தபா வலர்க ளீதை
அனுவாத் தியத்தொனி யென்பார். 847

கரடிகை வாத்தியத்தொனி

தரர ரரியா தரர ரரியா
தத்ததத் தத்தை யுந்தத் தோந்தோந்
துதரதர துதர தரது தொங்கிடதோங்
கருதுங் கரடிகை வாத்தியத் தொனியே. 848

டக்கா வாத்தியத்தொனி

தகதிதி திங்திதிதோந் தகதிங் திணகதித்தோம்
மிகுதோந்தோந் தேணுரு வென்றன்—மகிமீதிற்
றிக்காகு மோசை செனிக்கு மிதின்பெயரை
டக்காத் தொனியெனவே சாற்று. 849

படகத்தொனி

டடடட்ட சரடிடிடி சரரகச ஙடிசரட
தரகிரியா வென்றசொல்லைச் சாற்றும் படகமெனும்
வாத்தியத் தொனிக்கு வகையாமென் னூலில்
மூத்துரகை யொத்தமயி லே. 850

முரசு, கைம்மணிகளின்தொனி

மாரார டண்ட மரும மரடண்ட மமரடண்டங்
காரார டண்ட கத்தாந் தாமதென்றி டுகைமணிக்கு
முரசுக்கும் பேசுந் தொனியாகு மென்றிதை மூதுரையில்
அருமைய தாக வுரைத்தார் நூலோர்க ளதிசயித்தே. 851

உடுக்குத்தொனி

ஒங்கிட கிடதகி டாங்கிட தங்கிட டங்கிடா
ஆங்கிடி யாகிடி யாவெனுஞ் சொல்லைய மையமுன்னுள்
ஏங்கவி லாது ரைத்தார் நூலறிந் தியல்புகொளும்
பாங்கிய ரேயுடுக் கின்ரொனி யாமெனப் பற்றறிந்தே. 852

தவில், தம்பட்டத்தொனி

கிணகிண கிணகிணஜேம் கிக்கிண கிணகிணஜேம்
குரார ரகுகிண கிணஜேம் பணியிலகும்
அம்புவியி லிச்சொல் லறைவர்தவி லுக்குமற்றும்
தம்பட்டத் திற்குந் தனித்து. 853

மத்தளத்தொனி

தத்தித் தொன்னந் திமிகிகி தாதா
தாந்திமி ககிதா தாவெனுஞ் சொல்லை
மத்தள வாத்திய மாகு மென்றே
சுத்தமா நூலிற் சொல்லு மாதே. 854

845–854 செய்யுட்கள்

இவற்றின் பொருள் வெளிப்படை.

தோற்கருவி முற்றும்.

---

2. துளைக்கருவி

மங்கள வாத்தியம்

முகவீணை நாகசுர மொழிபாம்பு நாதசுரந்
தகுசிங் குழன்முதலாய்ச் சாற்றுஞ்—சுகமிகவே
தங்குமிவ் வாத்தியத்திற் காய்ந்திட்டார் நூல்வல்லோர்
மங்கள வாத்யமெனு நாமம். 855

21651

மங்கள வாத்தியங்களென்னும் துளைக்கருவிகள் :—முகவீணை, நாகசுரமொழிபாம்பு (மகுடி ?) நாதசுரம், குழல் முதலியன. (??)

நாதசுரத்தின் லக்ஷணம் முதலியன

ஆமப்பா நாதசுர மென்ற தேது
அரியமே லீணசுகீ ழீணசு ஏது
போமப்பா புல்லேது அச்சு ஏது
புகழான சில்லேது கண்டை யேது
தாமப்பா தோரணத்தின் கயிறுதா னேது
தாட்டிகமா யதிலெழுந்த நாத மேது
ஓமப்பா வூதுமிலக் கணந்தா னேது
யுறுதியா யிவ்வகையை யுரைக்கக் கேளே. 856

நாதசுரம் என்றது, அதன் மேலீணசு, கீழீணசு, புல்லு, அச்சு, சில்லு, கண்டை, தோரணக்கயிறு, நாதம் இவற்றின் இலக்கணங்கள் இனி கூறக்கேள்.

வகையின்னஞ் சொல்லுகிறேரும் விவர மாக
மகத்தான தாளத்தின் மத்தி யத்தைத்
தொகையான நாதசுர சூட்ச்ம மெல்லாஞ்
சொல்லுகிறேன் வெளிதிறந்து தொன்னூ லாய்ந்து
சுகமாக வூதுதற்குங் கேட்ப தற்குந்
துணிவுபெற வோமென்றே யுன்னி நிற்கப்
பகையில்லை துன்பமில்லை கேடு மில்லை
பாங்குகொளு முறையதனைப் பகரக் கேளே. 857

தாளத்தின் மத்தியத்தைத் தொகையாகத் தன்னிடம் கொண்ட நாதசுரத்தின் சூட்சுமமெல்லாம் சொல்லுகிறேன். நூல்களிற் சொல்லியபடி வெளிதிறந்து சுகமாக ஊதுவதற்கும் கேட்பதற்கும் மனஉறுதியுடன், 'ஓம்' என்று தியானித்து நிற்கப் பகை நீங்கும்; துன்பம் நீங்கும்; கேடும் வாராது; இனி ஊதும் முறை சொல்லக் கேள்.

கருவான நாதசுர மரத்தைக் கேளு
கருங்காலி யும்வேங்கை தோத கத்தி
மரத்துடனே வேம்புபலா சந்த னந்தான்
மற்றதெல்லா மூன்னூலி லுரைத்தா ரப்பா

திருவருளு மதினுடைய வளவு நீளஞ்
செப்புகிறே னந்தவகை தேர்ந்து பாரு
குருவென்னு நான்முறையைக் கண்டா யானுற்
குவலயத்தி னீயுமொரு குருவென் பாரே. 858

பாரப்பா நாதசுர மரத்தி னீளம்
பண்பான வொருநூற் றிருப தாகும்
சீரப்பா வொருவிர லு மிரண்டு நெல்லும்
செவ்விதா மறுதலையில் வீதி கேளு
ஆரப்பா விரண்டுவிர லு நெல்லு
யளவாக வீதியடா சுரத்தின் மார்க்கம்
நேரப்பா வொருநெல்லு நீளம் வேணும்
நிச்சயமாய்ச் சத்தசுர நேரும் பாரே. 859

கருங்காலி, வேங்கை, தோதகத்தி, வேம்பு, பலா, சந்தனம் முதலான மரங்களால் நாதசுரம் செய்யப்பெறும். அதன் நீளம் 120 (விரல்கள்); மறுதலையிலுள்ள வீதி 1 விரலும் இரண்டு நெல்லும்; மற்றொருதலை வீதி இரண்டுவிரல் 4 நெல்; சுரத்தின் மார்க்கம் ஒரு நெல் நீளம். இவ்வாறு அமைந்த வாத்யத்தில் சபத சுரங்கள் எழும்.

நேரான துளைக்கருவி யிதுவே யாகும்
நினைத்தபடி சுரமெல்லா மிவற்றுட் பேசும்
சீராமி ராகமதைச் செலுத்தும் போது
ஸ்ரீ ஓமென் றேயுன்ன வசிய மாகும்
பேரான மேல்ஸ்ணசா காய மாகும்
பலத்தசில் லீணசுபிரு திவியே யாகும்
தீரானபுல் லதுசிதம் பரமே யாகும்
சிவசிவா வதிலுள்ள செய்தி கேளே. 860

இவ்வாறு அமைந்ததே நேரான துளைக்கருவியாகும்; இதனுள் நினைத்தபடி சுரங்கள் பேசும்; இதனில் இராகத்தைச் சீராக வாசிக்கும்போது, 'ஸ்ரீஓம்' என்று தியானிக்க வாத்யம் வாசிப்பவரின் வசப்படும்; அதன் மேல் அணசு ஆகாயம்; [1]சில்லணசு பிருதிவி; புல்லு சிதம்பரம்; அதிலிருந்து வெளிவரும் நாதம் சிவம்.

---

859. அணு எட்டுக்கொண்டது தேர்த்துகள்; தேர்த்துகள் எட்டுக் கொண்டது இம்மி; இம்மி எட்டுக்கொண்டது எள்ளு, எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு; நெல்லு எட்டுக்கொண்டது பெருவிரலெனக் கொள்க (சிலப். பக். 114).

1. சில்லணசு—இங்குக் கீழணசைக் குறிக்கும் போலும்.

கேளப்பா பதினுயிரத் தெட்டு ராகக்
கெடியான பேர்களுக்குப் பேசும் பேசும்
பாழப்பா விராகமது பேசா தாகிற்
பைத்தியங்கொ ண்டதுபோலே பாரி லோட்டும்
கீழப்பா மன்னவர்க்கு மறைய வர்க்குங்
கெடுதியுண்டா மூதேவி வாழ்வ ளூரில்
தாளப்பா விதையறிய மாட்டா கிற்குஞ்
சுணிகெட்ட மாந்தர்களைத் தூரத் தள்ளே. 861

இத்தகைய வாத்தியம் கெடியான பேர்களுக்கு 10,008 இராகங் கள் பேசும்; அப்படிப் பேசாவிட்டால் வாசிப்பவருக்கும் பயித்தியம் உண்டாகும்; மன்னவர்க்கும் மறையவர்க்கும் கெடுதியுண்டாகும்; ஊரில் மூதேவி வாழ்வாள்; இதை அறியமாட்டாத மாந்தர்களைத் தூரத்தள்ளு.

தள்ளப்பா வச்சதுதா னீசன் ராசன்
சார்வான செக்குலக்கை யாகும் பாரு
விள்ளப்பா சில்லதுதான் வாயு வாகும்
வீரான கண்டையது வன்னி யாகும்
உள்ளதப்பா சொல்லுகிறேன் ரூர ணத்தை
யுருவான வாசுகியென் ரூத லாகும்
மெள்ளப்பா வதிலெழுந்த நாதந் தன்னை
வேதத்திற் பிறந்ததென விளம்பு நூலே. 862

அச்சு - ஈசன்; செக்குலக்கை - இந்திரன்; சில்லு - வாயு; கண்டை - அக்னி; தோரணம் - வாசுகி; அவ்வாத்தியத்தில் எழும் நாதம் வேதத்தில் பிறந்தது; இவ்வாறு நூல்கள் கூறும்.

விளம்புவே னுள்ளதுதா னுகை ராசா
வீரான தாளமது ஆதி யாகும்
தளம்பெறவே யிந்தவகை யறிந்த பேர்க்குச்
சத்ருக்க ளில்லையடா தர்க்க மில்லை
வளம்பெறவே யிவ்வகையை யொருவ ராலே
மதித்திடவே போகாது மாற்ரு னில்லை
இளம்பிறையும் ரவியுமிதி லெழுந்த நாத
மேகமென்ற வோரெழுத்தை யிதனுட் பாரே. 863

.....நாகராசர(?). தாளம் - ஆதி. இம்மாதிரி இதன் பெருமையை அறிந்தவர்க்குச் சத்துருக்களில்லை; தர்க்கமில்லை; இதன் பெருமையை ஒருவரால் மதித்துரைக்க முடியாது; இதற்குப் பகை இல்லை. இளம்பிறை ரவி என்ற கலிகளில் எழுந்த நாதம் ஏகம். இதனை ஆராய்ந்து பார்.

பாரப்பா நாதசுர மென்ற தாளம்
பாங்கான சிவமென்று பகரு வார்கள்
நேரப்பா சுருதியிது சத்தி யாகு
நிசமான பெண்ணென்று நிகழ்த்து வார்கள்
சீரப்பா நாதசுர மரச னகுஞ்
சிப்பான சுருதியது னமைச்ச னகும்
ஆரப்பா விந்தவகை விவரந் தன்னை
யறிந்தவர்க ளிவ்வுலகி லில்லை தானே. 864

நாதசுரம் என்ற தாளம் (இசை ?) சிவமே என்று கூறுவார்கள். இதன் சத்தி சுருதி; இது பெண். நாதசுரம் அரசன்; சுருதி அமைச்சன். இதன் உண்மை அறிந்தவர்கள் இவ்வுலகில் இல்லை.

தானென்ற மத்தளமந் திரியே யாகுந்
தருவான தாளமது ஈச னகும்
வானென்ற சுரஞ்சத்த ரிஷியே யாகும்
வகையான ஷட்ஜமுடன் ரிஷப மாகும்
கானென்ற காந்தார மத்தி மங்கேள்
கருவான நிஷாதமொடு பஞ்சமமே யாகும்
ஆனென்ற வேழுவகைச் சுரங்க ளுக்கு
மாகுமிந்த நாமமென வறையு நூலே. 865

மத்தளம் மந்திரி; தாளம் (வாத்யம்) ஈசனாகும்; சுரம் சத்த ரிஷிகள்; ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், நிஷாதம், பஞ்சமம் (தைவதம்) இவை ஏழு சுரங்களின் பெயர்கள்.

ஆகுமடா தெய்வமொடு மேழு மாச்சு
அப்பனே சரிகம பதநி யென்று
போகுமடா சத்தமது மத்திமகாந் தாரம்
புகழான பஞ்சமமும் பிதுர்க்க ளாகும்

ஊகமடா ரிஷியடுத்து உரைக்கு மிந்த்
மூறையான வசியமென்றே வுரைப்பர் மேலோர்
ஆகுமடா விதையறிந்தா னீயே யாசா
னவையெனக் கும்பமுனி யருள்செய் தாரே. 866

இதனைச் சரிகமபதநி என்ற எழுத்துக்களால் பேசுவர். மத்திமம், காந்தாரம், பஞ்சமம் ஆகியவை பிதுர்க்கள்; மற்றவை ரிஷிகள். இம்முறையை வசியம் என்று கூறுவர். இதனை அறிவாயானால் நீயே ஆசானுவாய்.

இவ்வாறு கும்பமுனி கூறினார்.

துளையது கருவி யாகத் தோயு நாத சுரத்தின்
வளையது விரலே யாறு வாய்தனி லணைத்தே யோத
களைதரு சர்ப்பம் பாலன் களைகடீர்ந் தமுத முண்ணும்
வளைவரே மீதின் மேவும் வாமனுக் காசை யுண்டாம். 867

துளைக்கருவியான நாதசுரத்தில் விரல்களை ஆறு வாய்களில் அணைத்து ஊத, சர்ப்பபாலன் (நாகம்) களைகள் தீர்ந்து அமுதமுண்டு வளைவர்; இதனில் பொருந்தும் வாமனுக்கு ஆசையுண்டாம்.

தேவதைகள்

கண்காலி தன்னன் மிக்கச் சமைத்ததோ ருளவ தாகும்
வண்பெறு மாய னாகும் வரைவரை யரவ தாகும்
பண்பெறு மணைசே சத்தி பராம்மே லணைசே வேதன்
கண்பெறுங் கண்டை யீந்தான் கதிர்வட்டஞ் சில்ல தாமே.

கருங்காலியால் அமைத்த நாதசுரம் திருமால் ஆகும்; வரைகள் பாம்பாகும்; இசையைப்பெறும் (கீழ்) அணைசு, மேல் அணைசு, சத்தி பராம்; கண்டை, பிரமன்; சில்லு, கதிர்வட்டம்.

சீவளி யிலைவே தத்தின் சிவமெனு நாத கீதம்
பாவளி யச்சுக் காளி பாரமாய் வகுத்து நன்றூய்ப்
பூவளி சுரங்க ளேழும் புகழ்சத்த மாதா வாகும்
நாவளி யிசையே பேசு நாதத்தின் சுரமி தாமே. 869

சீவளி இலை, வேதத்தில் கூறப்படும் சிவமெனும் நாதகீதம்; அச்சு, காளி; சுரங்கள் ஏழும் சத்த மாதாக்கள்; நாக்கால் (வாயால்) உண்டாகும் இசையே நாதத்தின் சுரம்.

---

867. சர்ப்பம், பாலன் ஆகியோர் தமக்கு உண்டான களைகள் தீர்ந்து அமுது உண்பர்; வினையாடுவர் மன்மத ராகமுண்டாகும் என்ற ஒரு பொருளும் தோன்றுகிறது.

வேதியன் பரமன் ரூனு மிகுந்ததோர் கண்டை யாகும்
ஆதியே முருகன் மூன்ரு யமர்ந்ததோர் சுரங்க டேவர்
சோதிசேர் கயிறு நாகம் துளையது சத்த தேவி
சாதிமே லணேசே தெய்வம் தயங்குமித் திரனே யாகும். 870

கண்டை, வேதியனை பிரமனுகும்; சுரங்கள், தேவர்; கயிறு, நாகம்; துளேகள், சத்த தேவிகள்; மேலணேசின் தெய்வம் மித்திரன். முருகன் மூன்ரையமர்ந்த சுரங்கள் என்று கூட்டுக.

இருக்கின்ற சுரமே ழைந்து மெழுநாத சுரத்தின் மீது
மருக்கொளு மணேசே வட்ட மட்டமாய் நாகஞ் சூழச்
சுருக்கமாஞ் சில்லு சோமன் ரெனியதிற் புல்லே சத்தி
பெருத்தமா றுளேயே யென்று பேசினன் பிரமன் ரூனே.

ஏழு சுரங்களும் எழும் நாதசுரத்தின்மீதுள்ள அணேசை வட்ட மட்டமாய், நாகம் சூழும். சில்லு, சோமன்; புல்லு, சத்தி; துளே, மால். இவ்வாறு கூறினவன் பிரமன்.

மேகமாம் வண்ண னூது மேற்சுரந் தன்னைக் கோது
வேகமா மாதி சத்தி யிறையவன் றன்னிற் றெய்வ
மாகமா மலரோன் கையி லழகுட னெழுத்து வாமம்
பாகமாய் நின்ற சத்தி பரிவுடன் கூட லுற்ரூர். 872

இப்பாடலின் பொருள் விளக்கமாயில்லே.

நாதசுரத்தின் பாஷை

அகங சஞடண தநபம யரலவ
தானளற னவ்வென்னும் பதினெண். வர்ணத்
தொகைக்குப் பதினெட் டிராகங் களாகச்
சொல்லுமே அகரமே யசாவே ரிக்குக்
ககரங் கல்யாணி ஙகரங் காம்போதி
சகரமதே சங்கரா பரணங் காட்டும்
ஞகரஞ் சாவேரி டகர மூகாரி
ணகரங் கேதார கவுளமென நாட்டே. 873

871. 'சுரமேழைத்துமெழும்' என்று கூறியதன் பொருள் விளங்கவில்லே. பின் (875) 12 துளேகள் என்றிருப்பதால் 12 துளேகளில் எழும் சுரங்கள் என்று அமைக்கலாம் (?)

வருதகரந் தோடி நல்வே நவரோ
சாகு மற்பந்து வராளிமத் திமாவதீம
கரயகர மோகனம் ரகரஞ் சார்ங்கங்
காணும் லகரமெது குலகாம் போதி
தருவகரம் பைரவியே ளகரமா னந்த
பயிரவி யேறகர பியாக டைச்சீர்
கருனகர மேயடாணு வென்றே நாத
சுரத்தின் பாஷையெனக் கருது நூலே. 874

அ, க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ள, ற, ன என்ற வர்ணத்தொகைகளும் பதினெட்டு இராகங்களும் சொல்லப்படும். அவை :—

அ—அசாவேரி
க—கல்யாணி
ங—காம்போதி
ச—சங்கராபரணம்
ஞ—சாவேரி
ட—முகாரி
ண—கேதாரகௌளம்
த—தோடி
ந—நவரோசு
ப—பந்துவராளி
ம—மத்திமாவதி
ய—மோகனம்
ர—சார்ங்கம்
ல—எதுகுலகாம்போதி
வ—பைரவி
ள—ஆனந்தபைரவி
ற—பியாகடை
ன—அடாணு

நாதசுரத்துளைகள் 12க்கு அதிதேவதைகள்

முதற்றுளை யீசனிரண்டாந் துளைக்குக் கௌரி
மூன்றாந்து ளைக்குவிஷ்ணு துளைநான் கிற்குப்
பதிகும்ப முனியைந்தாந் துளைக்கு வேதன்
பகருமா றாந்துளைக்கு மகவான் மற்ற
கதியுள்ள வாறு துளைக்கு மாறு
சாத்திரங்க ளாகுமென வீரா றுக
விதிபெற்ற நாதசுரந் துளைக ளுக்கு
விள்ளுமதி தேவதைகள் விவர நூலே. 875

முதல் துளை—ஈசன்
இரண்டாம் துளை—கௌரி
மூன்றும் துளை—விஷ்ணு
நான்காம் துளை—கும்பமுனி
ஐந்தாம் துளை—பிரமன்
ஆறும் துளை—இந்திரன்

மற்ற ஆறு துளைகளுக்கும் அதிதேவதைகள் ஆறு சாத்திரங்கள்.

புல்லாங்குழல்

திரைகொள்ளும் யமுனைநதிக் கரையடுத்துத்
திருமால்புல் லாங்குழலா வேணுதன்னைச்
சரிகம பதநியெனுங் கானம்வாசித்
தடைவுபெறு மிசைகடனைக் கூடும்போது
விரல்கள்வழி யமுதொழுக வதிற்சாடுப
மேவுமவ டுபம்சம் பூர்ணமென்னப்
பெருகியே யிசைமூவி தங்களர்கப்
பேசியதென் றேநூலிற் பேசுமாதே. 876

அலைகள் வீசும் யமுனை நதிக்கரையிலே, திருமால் புல்லாங் குழலாகிய வேணுவைச் சரிகமபதநி என்று கானம் வாசித்து, அடைவுபெறும் இசைகளை எழுப்பும்போது, விரல்களின் வழியே சாடுபம், அவடுபம், சம்பூர்ணம் என்று இசை மூவி தங்களாகப் பேசி யது என்று நூல்கள் கூறும்.

துளைக்கருவி முற்றும்.

---

3. கஞ்சக்கருவி

வானிலே பிறந்த நாத மாணிக்க வொளிய தாகும்
தானது சிவமாய்த் தோன்றிச் சகலமுந் தானே யாகும்
பானல மொழியாள் பங்கன் பாதமே யோசை யாகும்
மோனமுற் றோர்கள் கண்டு முத்தியி லிருப்பர் தாமே. 877

ஜாலரா

கஞ்சக் கருவி கருது மிலக்கணத்திற்
துஞ்சாத வெண்கலத்தாற் றூசறவே—மிஞ்சச்செய்
சாலரா வாதி சகலத்திற் காமென்பர்
நீலமயிற் சாயலின்மின் னே. 878

வெண்கலம் பிறந்த விவரம்

வானின்மின் மின்னிற் றோன்றி வருமிடி மிடியில் வாயு
ஆனவா யுவினில் வன்னி யதிற்சல மதனின் மண்ணும்
ஈனமண் ணதனி லீய மீயத்திற் செம்பு செம்பில்
ஊனமி றராவிம் மூன்று முருக்கவெண் கலம தாமே. 879

876. குழலின் இலக்கணங்களைப்பற்றிச் சிலப். 110-111, 452-453 பக்கங்களிற் காண்க.

வானிலே தோன்றும் நாதத்தின் ஒளி மாணிக்க ஒளியாகும். அது தானே சிவமாய்த் தோன்றிச் சகலமும் சிவமேயாகும்; பால் போன்ற மொழியாள் பங்கன் பாதமே ஓசையாகும்; மௌனிகள் அதனைக் கண்டு முத்தியிலிருப்பார்கள்.

கஞ்சக் கருவிகளுக்குள், நல்ல வெண்கலத்தில், குற்றம் நீங்க, நன்முகச் செய்யப்பட்ட ஜாலராவே எல்லாவற்றிற்கும் ஆதி என்பர்.

[1]ஆகாசத்தில் மின்னலும், மின்னலில் இடியும், இடியில் வாயுவும், வாயுவில் அக்கினியும், அக்கினியிற் சலமுஞ், சலத்தில் மண்ணும், மண்ணில் ஈயமும் ஈயத்திற் செம்பும், செம்பில் தாராவும் பிறந்தன. ஈயம் செம்பு தாராவென்னுமிம் மூன்றையும் உருக்க வெண்கலமாயிற்று.

கஞ்சக்கருவி முற்றும்.

---

4. தாள வகைகள்

சுத்ததாள லக்ஷணம்

ஈரெண் பலத்தி லிசைசுத்த தாளத்தைச்
சாரவே தேவர் சபைதனிலும்—பேராம்
மறையோர்கள் கூடி மகிழுஞ் சபையிற்
றறநடத்தல் சுத்ததா ளம். 880

சாளக தாளம்

ஈராறு பலத்தி லேனு மிருநான்கு பலத்தி லேனு
மாரூத சாள கத்தா ளந்தனை மன்னர் கூடும்
நேரான சபையி லும்வித் வான்சபை தனிலு மாடப்
பேராகு மிதற்கி னங்தே சித்தாள மென்னும் பேரே. 881

சங்கீர்ண தாளம்

தங்குநாற் பலத்திற் கொண்ட வெகுசாரி தாள மென்னும்
சங்கீர்ண தாள நானு சாதிபல் பேர்கள் கூட்டிப்
பங்கிய சபைந டித்தல் பகருமுத் தமமா மென்று
திங்கணேர் முகத்தி னுளே செப்பினர் பரத நூலோர். 882

---

1. இவ்வுரை சுவடியில் உள்ளது.

18 பலத்தில் செய்யப் பெற்ற சுத்த தாளத்தைத் தேவர் சபையி லும் மறையோர் சபையிலும் நடத்தலாகும்.

பன்னிரண்டு பலத்திலேனும் எட்டுப் பலத்திலேனும் செய்யப் படுவது சாளக தாளம். இதனை மன்னர் சபையிலும், வித்வான் கள் சபையிலும் வாசிப்பர். இதற்கு இனம் தேசித் தாளமாகும்.

நான்கு பலங்களிற் செய்யப்படுவது வெதாளித் தாளம் என்னும் சங்கீர்ண தாளமாகும். இதைப் பல நானு சாதியர் கூடிய சபையில் வாசித்தல் உத்தமமான தது.

தாளவகை முற்றும்.

---

5. பாடகன் முதலியோர் லக்ஷணம்

பாடகன்

ஆசார முஞ்சுரப் பிரஸ்தார விவரமுந் திர்ஸ்தா யிக்காக
நேசமுள தாளலய ஞான சமயபேத நிகழுங் கீர்த்தி
வாசிகற் பனைசுர ஞானமுடன் மேளகர்த்தா மனோஞர னஞ்சேர்
ஈசபத்தி வைராக்யம் மிருதுவசன முடையவன்பா டகனு மென்னே.

ஆசாரமும், சுரப்பிரஸ்தார விவரமும், திரிஸ்தாயிக்குரிய தாளலய ஞானமும், சமய பேதங்களுக் கேற்றபடி பாடும் தன்மையும், கற்பனை சுர ஞானமும், மேளகர்த்தாக்களைப் பற்றிய அறிவும், மனோ ஞானத் தோடு கூடிய ஈசுவர பக்தி, வைராக்கியமும், மிருதுவசனமும் உடைய வன் பாடகனுவான்.

தாளகிரி

தாளப் பிராஸ்தார விவரமுட னுசாரஞ் சார்ந்த வன்ய
தாளகற் பனையுமட்ட கணங்களுட் பிரமாணஞ் சதிசப் தத்தின்
மேளமுச் சரிப்புடனே பொறுமையு மானந்த முடன்விமலன் பத்தி
நீளவனு சரித்தவனே தாளகிரி யெனநூலில் விள்ளு மானே

தாளப் பிரஸ்தார விவரமுடன், அங்கிய தாளக் கற்பனையும், அட்ட கணங்களின் உட்பிரமாணம், சதிசப்தத்தின் மேள உச்சரிப்பும் ஆகிய, இவற்றின் அறிவும் பெற்று, பொறுமை, ஆனந்தம், ஈசுவர பக்தி இவற்றை உடையவனே தாளகிரி ஆவான்.

---

883. இசையாசிரியன் லக்ஷணம். சிலப். அரங்கேற்று காதை 26-36 வரிகளில் காண்க.

மிருதங்கி

பகவத் தியானமனே தர்மமும் வாசா
லகமும் பனுவ றன்னைத்
தகக்கூட் டிக்குறைத் திடுத்தீ ரத்துவமு
நட்டுவன் சித்தத்திற் கொண்ட
தொகையறி தற்சனச்சேர்க் கைசெய்தல் சுதிஞான
மெல்லாச் சதியுக் தோற்ற
மிகக்கரத் திலாக்கு தல்சிங் காரவாச்
சியமியம் பும்விருத் திமற்றும். 885

குடிலஞ்சேர் புத்தி யில்லான் குறித்ததோர் கருவி வாத்யத்
துட்குண பேதா பேதந் துலங்கவே யறிதல் கைகர்ல்
திடமூப சாந்தஞ் சப்தஞ் செப்புதல் குருவ ணக்கம்
உடையவன் மிருதங் கக்கா ரனுக்குறு மென்றே யோதே.

பகவத்யானம், மனைதர்மம், வாசாலகம், பனுவலைத் தக்கபடி கூட்டிக் குறைத்திடும் தீரத்துவம், நட்டுவன் சித்தத்தில் கொண்ட தொகையறிதல், ஜனச்சேர்க்கை செய்தல், சுருதி ஞானம் ஆகிய அழகிய அறிவுகளைப் பெற்று, எல்லாச் சதியும் தோற்றம் மிகக் கையினல் ஆக்குதல், சிங்கார வாத்தியம் இயம்பும் விருத்தி அறிவு பெற்றிருத்தல் குடிலம் சேர்ந்த புத்தியில்லாமல் இருத்தல், குறித்த தோற்கருவி வாத்யத்தின் உட்குண பேதாபேதங்கள் துலங்க அறிதல், கைகால்கள் திடமாயிருத்தல். உபசாந்த சப்தம் செப்புதல், குருவணக்கமுடைமை ஆகியவை மிருதங்கக்காரரின் இலக்ஷணங்களாகும்.

முகவீணை, நாகசுரம், வேணுக்காரர்கள் லக்ஷணம்

தூளக்கருவி பேதசுர பேதப்பிரஸ்
தாரமுகற் றூய்மை பத்தி
வளையுமனே ஞானத்தாற் ரூளலய
மற்றிதலா சார மேன்மை
களிப்புபொறு மையும்புத்தி நுட்பமுஞ்சூக்
குமம்பிறர் மனத்தைக் காணல்
விழிப்புடையோ னகசுர முகவீணை
வேணுகொண் டோன்வித மிதாமே. 887

885. சிலப் அரங்கேற்றுகாதை 45-55 வரிகளில் கூறப்பெற்ற தண்ணுமை யாசிரியனின் அமைதியோடு ஒப்பிடுக.

துணைக்கருவி பேதங்கள், சுரபேதங்கள், பிரஸ்தாரம் இவற்றில் அறிவும், தூய்மை, பக்தி, மனோஞானம், தாளலய அறிவு, ஆசார மேன்மை, பொறுமை, புத்தி நுட்பம், சூக்ஷமம், பிறர் மனத்தைக் காணல் ஆகிய இவற்றைப் பெற்றவர்களே சிறந்த முகவீணை, நாகசுரம், வேணு இவற்றைக் கையாளுதற்குரியராவர்.

வைணிகன் லக்ஷணம்

நித்தியா நுஷ்டானம் ஜெபதபங்
களாமா சாரநிய மந்தேவ
பத்தியுள மனஞ்சூக்ம ஞானம்
பிழையற்ற பனுவல் பேசல்
ஒத்திருக்குஞ் சிறுநாதம் பின்னமில்லா
வவயவங்க ளுறுதிச் சொல்லும்
மெத்ததையை சங்கீத சாஸ்திரவுணர்ச்
சியும்பெரியோர் மீதி னட்பும். 888

கனநய தேசிக் கூறு காட்டுதன் மேள கர்த்தர
வினுடைய வதிதெய் வத்தின் மீதில்விசு வாசம் வைத்தல்
கனியவே நிகழ்ந ரம்புக் கருவியின் குணங்கா ணனன்
மனமுடை யோனே சுத்த வைணிக னென்னு நூலே. 889

நித்யானுஷ்டானம், ஜபதபங்கள், ஆசாரநியமம், தேவபக்தி இவை பெற்றவனும், சூக்ஷம ஞானம், பிழையற்ற பனுவல் பேசல், சிறு நாதங்களையும் ஒத்திருக்கச் செய்யும திறமை, பின்னமில்லா அவயவங்கள் பெற்றிருத்தல், உறுதிச்சொல் பேசுதல், மிகுந்ததயை, சங்கீத சாஸ்திர உணர்ச்சியுடைமை, தேசிக்கூறு காட்டுமறிவு, மேளகர்த்தாக்களின் அதி தெய்வங்களிடம் பக்தியுடைமை, நரம்புக் கருவியின் குணங்களைக் காணும் அறிவு, நல்ல மனமுடைமை ஆகியவை வைணிகரின் இலக்ஷணங்களாம்.

சுருதிக்காரன் (ஒத்துக்காரன்)

இட்டது தவறுச் சித்தங் கோபமே யில்லாப் புத்தி
மட்டில்லாச் சுருதி ஞான மரியாதை யொழுக்க மென்னும்
திட்டமாம் பொறுமை யீசன் றிருவடி வணங்க லீசன்
இட்டமு முடையோன் வாய்ச்சித் திரன்சுதிக் கார னென்னே.

நினைத்ததைத் தவற விடாத சித்தம், கோபமே யில்லாத புத்தி, மட்டில்லாச் சுருதி ஞானம், மரியாதை, ஒழுக்கம், பொறுமை, ஈசன்

திருவடி வணங்கல், ஈசன் அருங்கிரகமுடைமை, வாய்ச்சித்திர முடைமை. இவை சுருதிக்காரர்—ஒத்துக்காரர்—இலக்ஷணங்களாம்.

தவில்காரன்

ஆசாரம் பொறுமை வணக்க மொழுக்கஞ்
சதிசப்த மாய்ந்து காணல்
பேசிய சொற்கட் டறித ரூற்கருவி
வாச்யகுண பேத மோர்தல்
மாசிலாக் கருங்காலி பன்னிரண் டங்குலத்
தண்டில் வலக்கை கோலும்
நேசமா மிடக்கையிற் சொற்கட்டி சைப்போன்
றவிற்கார னென்னு நூலே. 891

ஆசாரம், பொறுமை, வணக்கம், ஒழுக்கம், சதிசப்தம் ஆராய்ந்து காணல், சொற்கட்டறிதல், வாத்திய குணபேதம் ஓர்தல் ஆகியவை தவில்காரர் இலக்ஷணங்களாம். கருங்காலியால் பன்னிரண்டங் குலத்தில் செய்தகோல் வல்கையிற் கொண்டு, இடக்கையில் சொற் கட்டுமுடையோரே சிறந்த தவில்காரராம்.

டம்மாரக்காரன், பேரிகைக்காரன்

தாள லயத்தைத் தக்க வனுசரித்து
மீளுமந்தி யோபாந்த்ய நேர்தெரிந்தோன்—வாளுலகிற்
பேசுடம்மா ரக்காரன் பேரிகைக்கா ரன்னெனவே
பேசு மிலக்கண நூ லிற்பேர். 892

தாள லயத்தைத் தக்கபடி அனுசரித்து, அந்தியோபாந்தியங் களோ நன்முகத் தெரிந்தவரே நல்ல டம்மாரக்காரர், பேரிகைக்காரர் ஆவர்.

பாடகன் முதலியோர் லக்ஷணம் முற்றும்.

---

6. நட்டுவன்

தானகம் பாத சாரி மண்டலத் தலகை பாவம்
ஊனமில் கரண நாட்ட முலிவில்ர வங்க காரம்
ஈனமி றுழிலோன் சுற்ற மிணங்குசா ளவசங் கீர்ணம்
ஆனதோர் தாள பேத மடங்க லு மறிவோ னுகி. 893

துய்யதோர் துளைக ரம்பு சுருதிசேர் கஞ்சம் பாடல்
மெய்யதாங் கருவி தாள மிகுந்த தேதசாங் கத்தின்
செய்கையா னடன பேதந் தெளிந்துதான் செய்ய வல்லோன்
ஐயமிற் சருவ பாஷை யறிந்துசே விக்க மிக்கோன். 894

அங்கத்திற் குறையு நோயு மற்றவன் றகையொன் றில்லான்
பங்கமில் குலத்தோன் சுவாமி பத்தியிந் திரியம் வென்றோன்
சங்கத்தி னிருத்த பேதந் தனிப்பிர பந்தஞ் செய்யல்
இங்கிவை வல்லோ னகி லிவனடம் புரிய லாமே. 895

துளைக்குவட் டணைக ளெட்டுந் தூசியோ டாற தாகும்
கிளர்த்தமண் டலங்கள் பத்துங் கிளர்கய னங்க ளேழும்
முழங்குசங் கீத நாலு மொய்யலங் கார மைந்தும்
அளந்தநட் டுவனே யாகி லவனடம் புரிய லாமே. 896

மதுரம்வாக் கியம்ரூபந் தைரியம்
வாசால கஞ்சா மர்த்தியநற்
கதிதருமுத் தமகுலமும் பரதசாத்
திரமுணர்ச்சி கானம் வாச்யம்
நிதிதரு நிர்த்தக்யானம் பொறுமையுங்
கற்பனையுஞ் சரீர நேசம்
சதுரத்வங் குறிப்பறிதல் சார்ந்தகுணம்
பிறர்மனவி தன்னை யெண்ணன். 897

சுத்தமுடன் றேசியஞ்சொற் பொருளியாப்
பலங்காரஞ் சொல்லு மெழுத்தும்
கற்றிதன் மனஞ்செவிகண் வாய்மூக்கு
முகத்தினில் விகற்ப மின்மை
பத்தியுடன் சிரத்தைதயை பரதத்திலுண்மை
சத்தியமும் பனுவல் காணல்
மெய்த்திறமை யுடையவனே நிர்த்தகனு
மெனநூலில் விள்ளு மாதே. 898

பாட்டிசைக்கப் பாடப் பரதவிதத் தாற்கூத்தை
ஆட்டுவிக்க வாட வருகரணம்—பூட்டிவைக்கத்
திட்டமுடன் பாஷைபல தேர்ந்துகற்றுச் சொல்லிவைக்க
இட்டமுள னட்டுவனு மே. 899

குறுவிலான் மெலியோ னுகான் கூனிலன் கெருவி யாகான்
அறிவிலி கைகால் வெள்ளை யங்கத்தி லீன னுகான்
நெறியுள கல்வி கேள்வி நிறைந்தநட் டுவனு மென்று
அறிவுடன் பொதிகை வாழு மகத்திய னருளி னானே. 900

சொல்லியநால் வகையபி நயங்கள்கற்றுந்
தொன்மையுள பலபரத நூலையாய்ந்து
வல்லிதெனும் தாளதசப் பிராணனஸ்த
மருவுதுவா தசப்பிராண மார்க்கங்கண்டு
புல்பேர ணிச்சக்க ணிச்சாரியாதி
புகழ்சுத்த தேசியசிரோ நயனபேதம்,
பல்லறிந்து பாத்திரத்தை யாட்டிவைக்கும்
பாவமிலான் பொறியைவென்றோ னடவனும்பாரே

நட்டுவன் லக்ஷணம்

செய்யுட்கள் 893-901.

ஸ்தானகம், பாதசாரி, மண்டலங்களின் அளவு, பாவம், கரணம், நாட்டம், அங்ககாரம் இவற்றில் நல்ல அறிவும், ஊனமில்லாத தொழி லுடைமையும் சுற்றங்களுடைமையும் பெற்று, சாஸ்வ, சங்கீர்ண, தாள பேதங்களனைத்தையும் அறியும் அறிவும்,

துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி ஆகிய கருவி களின் அறிவும், தானம் மிகுந்த தாரங்கத்தின் (?) செய்கையாலான நடனபேதங்களின் தெளிவும் பெற்று, அவற்றைத் தானே செய்ய வல்லவனும், சருவ பாஷைகளின் அறிவு பொருந்தினவனும் இருப்பவன் நட்டுவனுவான்.

இன்னும், அங்கக்குறை, நோய், முதலியனவும், பிறதடுப் புக்குரிய எக்குற்றமும் இல்லாதவனும், பங்கமற்ற குலப்பிறப்பும், கடவுள் பக்தி, இந்திரிய வெற்றி ஆகியவை உடையவனும், கிருத்த பேத அறிவு, தானே பிரபந்தம் செயும் ஆற்றல், இவற்றில் வல்ல வனும்,

எட்டு வட்டணைகள், ஆறு தாசி, பத்து மண்டலங்கள், ஏழு நயனங்கள், நாலுவித சங்கீதங்கள், ஐந்து அலங்காரங்கள் ஆகிய வற்றில் தேர்ச்சி பெற்றவனான நட்டுவனே நடனம் புரியலாவான்.

இன்னும், மதுர வாக்கியம், ரூபம், தைரியம், வாசாலகம், சாமர்த்தியம், உத்தம குலப் பிறப்பு, பரத சாஸ்திர உணர்ச்சி, கானம்,

வாத்யம், நிர்த்தம் என்ற மூன்றிலும் நல்ல ஞானம், பொறுமை, கற்பனைசக்தி, சரீரநேசம், சதுரத்வம், குறிப்பறிதல், சாந்தகுணம், பிறர்மனே எண்ணுமை என்னும் குணங்களைப் பெற்றவனும்,

சுத்தம், தேசியம் ஆகியவற்றில் அறிவும், சொல், பொருள், யாப்பு, அலங்காரம், சொல்லும் எழுத்தும் ஆகிய இவற்றை நன்முகத் தெரிந்தமையும், மனம், செவி, கண், வாய், மூக்கு, முகம் இவற்றில் விகற்பமில்லாமை, பக்தி, சிரத்தை, தயை, பரத்தில் நம்பிக்கை, சத்தியம், பணிவல் காணல் ஆகியவற்றில் மெய்த்திறமையுடையவனும், நிர்த்தனுவான் என்று நூல்கள் கூறும்.

பாடச்செய்ய, பாட, பரதமுறைப்படி கூத்தை ஆட்டுவிக்க, ஆட, கரணம் பூட்டிவைக்க, பல பாஷைகள் கற்றுச் சொல்லிவைக்க இட்டமுடையவனும் நட்டுவனுவான்; அன்றியும்,

குறுகிய உடல், மெலிந்த உடல், கூன் முதலியன இல்லாதவனும், கர்வம், அறிவில்லமை, கைகால்களில் வெள்ளே, அங்கலேம் முதலியன இல்லாதவனும், நெறியுள்ள கல்வி கேள்வி நிறைந்தவனும், ஆகியோன் நட்டுவனுவான்.

இவ்வாறு **அகத்தியன்** கூறியருளினன்.

இன்னும், கூறப்பட்ட நால்வகை அபிநயங்கள் கற்றும், பழைமையான பல பரத நூல்களைப் பயின்றும், தாள தசப்பிராணன்,[1] அஸ்த துவாதசப் பிராணன், மார்க்கம், பேரணி, சக்கணி, சாரி, ஆகியவற்றையும், சுத்த, தேசியங்களையும், சிரோங்யன பேதங்கள் முதலானவற்றையும் அறிந்து, பாத்திரத்தை ஆட்டிவைப்போனே நட்டுவனுவான்.

நட்டுவன் லக்ஷணம் முற்றும்.

குறிப்பு: நட்டுவனை ஆடலாசிரியன் என்று சிலப். கூறும்.

ஸ. ர. (7 : 1327)

1. தாள தசப்ராணங்கள்: காலோ மார்க்கரியாங்காஷி க்ரஹோ ஜாதி: கலா லய: 1 யதி: ப்ரஸ்தாரகச்சேதி தாலப்ராணு தச ஸம்ருதா: (நாலகலாவர்த்தி—அச்யுத).

7. பாத்திர லக்ஷணம்

மன்னர்முதன் மூன்றுகுலத் தொருத்தியாய்ச்
சிவந்தழகாய் வண்மை காட்டும்
அன்னமன்னாள் வேந்தனரி யாசனமுன்
னூரெட்டி முழுத்துக் கீழ்பான்
மன்னுமெழி னியைகீக்கி மதிகலைபோன்
மலர்பூத்த வஞ்சி போல
மின்னுருண்ட கருமேகந் திறந்துவெளிப்
பட்டதென விளங்கத் தோன்றல் 902

ஒத்தியதா ளச்சுருதி தவறுத
சொல்லையொக் கடித்த பின்னர்
கற்றகல்வி மறவாமற் சாஸ்திரவி
சாரணையிற் கருத்தைத் தாக்கிப்
பித்தொடுநோ யில்லாமற் சலியாமல்
மெலியாமற் பின்செல் லாமல்
பத்திசெய்து மதுரவா சகம்பகர்ந்து
சங்கீதப் பாடல் கற்றே 903

மிகப்பருத்தன் மிகவிளைத்தன் மிகுமுயர்ச்சி
மிகுங்குறுகன் மேவா மெய்யும்
தகுரூப மெவ்வனமுத் தமதனமு
மறிவுர கத்வஞ் சார
சகலமனே கரங்ரகித் தருளசுரக்
கியானமும்வி சால நேத்ரம்
மிகுமவய வத்திளைளிர் முகமலர்ச்சி
அஸ்தாங்க வின்யா சத்தாம் 904

ஏற்றகுச் சரர்ம ராடர்
விலாடர்சௌ ராஷ்ட்ர மன்னர்
கோத்திர மிவற்றில் வந்து
குறினெடி லிசைய றிந்து
காத்திர மனத்தை யோர்ந்து
கபடமுங் கோப மின்றி
நீத்தகன் மறையோர் தெய்வங்
குருவின்மே னேசம் வைத்தாள். 905

மண்டலத் தான நிர்த்தம் வாத்தியங் கீதந் தாளம்
மண்டிட வனுச ரித்த லணிவதுத் தமமாம் பண்கள்
எண்டிசை புகழு மாதே யிவ்விலக் கணங்க ளுள்ளாள்
பண்டிதர் மெய்க்கு நிர்த்தப் பாத்திர மென்ன லாமே. 906

பாத்திர லக்ஷணம்

செய்யுட்கள் 902-906

மன்னர் முதல் மூன்று குலத்தில் உதித்தவள்; சிவப்பாய், அழகாய் உள்ளவள்; வளப்பம் பொருந்திய அன்னம் போன்றவள்; அரசனின் சிம்மாசனத்தின் முன்னே பத்து முழம் விட்டு, கீழ்த்திசையில், எழினியை (திரையை) நீக்கி, பூர்ணசந்திரன் போலவும், பூத்தவஞ்சிக்கொடி போலவும், கார்மேகம் திறந்து மின்னல் வெளிப்பட்டது போலவும் விளங்கத் தோன்றுவாள்.

அவள், ஒத்திய தாளச் சுருதி தவறுத சொல்லோ ஒக்க அடித்த பிறகு, தான் கற்ற கல்வி மறவாமல், சாஸ்திர விசாரணையில் கருத்தை ஊன்றி, பித்து, நோய், சலிப்பு, மெலிவு, பின்செல்லுதல் முதலியன இல்லாமல், பக்தி (தியானம்) செய்து, மதுரவாசகம் பேசி, இசைப் பாடலோப் பாடுவாள்.

மேலும், அவள், மிகப்பருத்தல், மிகஇளைத்தல், மிகஉயர்ச்சி, மிகக்குறுகல் ஆகியவை பொருந்தாத உடலும், தக்கரூபமும், உத்தம தனங்களும், அறிவு உரமும் பொருந்தியவளாய், சகல மனோகரம், தாள சுர ஞானமுடைமை, விசாலகேத்திரம், அவயவ அமைப்பு, முகமலர்ச்சி இவற்றையுடையவளாய், அஸ்தாங்க வின்யாஸங்களோ அறிந்தவளாயிருப்பாள்.

சூர்ஜ்ஜர, மராட, விலாட, சௌராஷ்டிர மன்னர்களின் கோத்திரத்தில் பிறந்தவளாய், குறில் நெடில் இவற்றின் இசையை அறிந்தவளாய், பிறருடைய மனத்தைத் தெரிந்துகொள்ளல், தான் கபடமும் கோபமுமில்லாமல், துறவிகள் குருக்கள் இவர்களிடம் நேசமும் கொண்டுள்ளவளாயிருப்பவள்.

மண்டலம், தானம், நிர்த்தம், வாத்தியம், கீதம், தாளம் இவற்றை அனுசரிக்கும் அறிவும், உத்தமமான ஆபரணங்களும் பூண்டு இருப்பவள்.

இத்தகைய இலக்கணங்கள் பெற்றவளே நிர்த்தபாத்திரமாவாள்.

குறிப்பு: பாத்திர இலக்ஷணங்கள் கூறும் பிற இடங்கள்:—
நா. சா. xxvii 97-98.
சிலப். அரங்கேற்று: 8-11.
அபி. த. (கோஷ்.) 23-28.
ஸ. ர. (7: 1224-1230).

பாத்திரத்தின் பகிப்பிராணன்

நாதமுள மத்தள தா ளஞ்சீங்
குழற்கான நவிலும் வீணை
பேதமிலாச் சுதியுடனே கிண்கிணியும்
கீதமிகப் பெரிதாய் வாழும்
சாதுவா நட்டுவனு நிருத்தஞ்செய்
மாதருக்குத் தகைமை யாக
ஓதுபகிப் பிராணனென்னு மருப்பினைத்
திகழ்ந்ததன முடைய மாதே 907

நாதமுடைய மத்தளம், தாளம், குழல், கான்ம், வீணை, சுருதி, கிண்கிணி, கீதம், நட்டுவன் ஆகியவை நிருத்தம் செய்யும் மாதருக்குப் பகிப்பிராணன்களாம்.

பாத்திரத்தின் அந்தப்பிராணன்

திரமுள மிரேகை திஷ்டி தேகம்மா யாச மின்மை
அருமையாஞ் சிரத்தை புத்தி யதுத்தல்சாக் கிரதை மேன்மை
தரமெனத் துலங்கு மாமி ரசப்பிர தான வாக்கும்
அரிவையர்க் கிவ்வீ ரைந்து மந்தப்பி ராண ஞமே. 908

ஸ்திரம், இரேகை, திருஷ்டி, தேகம், ஆபாசமின்மை, சிரத்தை, புத்தி, சாக்கிரதை, மேன்மை, இரசப்பிரதான வாக்கு என்ற பத்தும் ஆடும் அரிவையர்க்கு அந்தப் பிராணனுகும்.

---

907. அபி. நா. (ஆனந்த.) பக். 35 : இவ்வாறே கூறுகிறது.

அபி. நா. (ஆனந்த) பக். 36. (கோஷ்) 27-28. அந்தப் பிராணன்களைப் பின்வருமாறு அமைக்கும் :—

திரிதம், ஜாக்ரதை, ரேகை, ப்ரமரி, திருஷ்டி, பொறுமை, புத்தி, சிரத்தை, சொல்வன்மை, பாடல்.

"ரேகை, ஸ்திரம், தாளம், வாக்கு, பிரமரி, திருஷ்டிரசமி, ப்ரீதி: மேதா, வசः, கீதம் என்ற பத்தும் நிருத்தியத்துக்குப்பிராணன்" என்று கும்பர் என்பவர் ஸங்கீதராஜ என்ற நூலில் கூறுகிறார்.

பாத்திர அலங்காரம்

சோம்பலின்மை வட்டமதாய்ப் புடைதனம்
நிலைவைப்போற் றுலங்குங் காந்தி
பம்பிகிளர் நாமமுடன் கவுரவர்ண
மழகான பணிகள் பூணல்
தம்பமெனு மாவ பாவந்
தெரிதல்சங் கீதந்தாள மொத்துத்
தென்புடைய பிரபந்தம் தனையறிதற்
கறுத்தகுழற் றெளிவாம் ரூபம் 909

வண்டொத்த பூங்குழலு மெவ்வனமும்
நற்குலமும் வளர்நெ டுங்கண்
தொண்டையித முவயவவி லக்கணமும்
மிகுங்குழலுஞ் சுகந்த வாடை
கீண்டசடை பிரசன்ன மாமுகமுங்
கண்களில்லை நெற்றி தன்னிற்
கண்டுபுனற் றிவலையள வாந்திலதஞ்
சொல்வசன சுத்தி மற்றும் 910

ஒளியுடைய கைவளைகள் கருணைமனங்
தாளியிலை யொத்த காதும்
எழில்பெறு கபோலமதிற் கத்தூரி
யான்மகர மெழுத லாரங்
களையணிந்து துலங்குதனத் தினஞ்சாத்
திரப்படிக்காம் ரவிக்கை கையில்
வளையும்விரல் களினீல மாணிக்கம்
வச்சிரமோ திரமும் விள்ளும் 911

சந்தன மணிந்த மேனி சரிகையுத் தமமா மாடை
கொந்தல ரிதத்தோ டகை கோபமில் லாமை வச்யம்
வந்திடு கால தேச வர்த்தமா னத்தைக் காணல்
தொந்தமாம் பெருமை சாத்து விதகுணந் தோகைக் காமே.

பாத்திர அலங்காரம்

செய்யுட்கள் 909-912

சோம்பலின்மை, வட்டமதாய்ப் புடைத்த தனம், கிலவைப் போல் துலங்கும் காந்தி, விளங்கும் நாபம், கௌர வர்ணம், அழகான பணிகள் பூணல், ஹாவம், பாவம் தெரிதல், சங்கீதம், தாளம், ஒத்து, பிரபந்தம் ஆகியவற்றை அறிதல், கரியகுழல், ரூபர்;

வண்டொத்த பூங்குழல், யௌவனம், கற்குலம், வளர்ந்த நெடுங்கண், தொண்டைக்கனி போன்ற இதழ், அவயவலிலக்கணம், மிகும்குழல், சுகந்தவாசனை, நீண்டசடை, பிரசன்னமான முகம், கண்களில் மை, நெற்றியில் நீர்த்திவலையளவு திலகம், நல்லவசன சுத்தி ;

ஒளியுடைய கைவளைகள், கருணையுள்ள மனம், தாளியிலையொத்த காது, அழகிய நெற்றியில் கத்தூரியால் எழுதிய மகரப் பொட்டு, ஆரங்களால் விளங்கும் தனம், சாத்திரப்படி தைத்த ரவிக்கை, வளையும் விரல்களில் நீலம், மாணிக்கம், வைரம் பதிந்த மோதிரங்கள் ; சந்தனமணிந்தமேனி, உத்தம சரிகையாடை, கொத்துப்பூ (கொண்டையில்?), சுகை, கோபமின்மை, வசியர், காலதேச வர்த்தமானங்களைக் காணல், பெருமை, சத்துவகுணம்.

இவை பாத்திர இலக்ஷணங்களும் அலங்காரங்களுமாகும்.

பாத்திரத்தின் வஸ்திரலக்ஷணம்

உத்தமமாம் வெண்புடவை யோதுமத்தி மஞ்சிவப்பு
முற்று மதம மொழியுமே—சாத்திரத்திற்
பஞ்சவர்ண மாகுமிந்தப் பாவமறிந் தேயுடுத்தி
மிஞ்சாடிப் பாரெனவே விள். 913

உத்தமம் வெள்ளைப்புடைவை ; மத்திமம் சிவப்பு ; அதமம் பஞ்சவர்ணம். இதனை அறிந்து பாத்திரம் வஸ்திரம் உடுப்பாள்.

பாத்திரத்தின் ரவிக்கை

வினவிய ரத்தினப் பணிகள் பூண்டாடு
மடந்தையின் ரவிக்கைக் குக்கேள்
தனங்களை மூடிய விடங்கட் கதிதெய்வ
மேருவுமந் தரம தாகும்

நா. சா. அத். 23, பாத்திர அலங்காரங்களை விரிவாகக் கூறும். ஸ. ர. (7 : 1239-1246.)

பினுமையத் ததிதெய் வம்பூ மியதா
மிரண்டுநுனி பிணைக்குந் தானம்
வனசமலர்த் திருவாகு மதிதெய் வமென
நூலில் வழுத்து மாதோ 914

இரவிக்கையின் அதிதெய்வங்கள்

இரத்தினப் பணிகள் பூண்டு ஆடும் மடந்தையின் ரவிக்கைக்கு, தனங்களை மூடிய இடங்களின் அதிதெய்வங்கள் மேருவும் மந்தர கிரியுமாம்; மையத்து அதிதெய்வம் பூமி; இரண்டு நுனிகளும் பிணைக்குமிடம் இலக்ஷ்மி.

கிண்கிணி லக்ஷணம்

வெண்கலஞ் செம்பு மற்ற வெள்ளியிம் மூன்றி லொன்றால்
பங்கிய நற்சு ரங்கள் பலுகவே யழகாய்ச் செய்த
கிண்கிணி தனக்குத் தாரா கணமதி தெய்வ மாங்க
ருங்கயி றதனிற் கோத்திட் டுறுதியாய் மூடிச்சைப் போடே
கருதுமக் கெச்சக் தன்னைக் காற்கிரு நூறு வீதம்
பொருகவே யணிவா யல்லால் வலக்காலி னூறு பூட்டி
மருவிய விடக்கா றன்னி லிருநூறு மாகக் கட்டி
அருமையாய் நடனஞ் செய்த லாமெனப் பகரு மாதோ 916

கிண்கிணி

வெண்கலம், செம்பு, வெள்ளி இம்மூன்றுள் ஏதேனும் ஒன்றால், சுரங்கள் எழுந்து ஒலிக்கும்படி அழகாகச் செய்யப்படும் கிண்கிணிக்குத் தாராகணம் அதிதெய்வமாகும். அதனைக் கருப்புக் கயிற்றில் கோத்து உறுதியாய் முடிப்புப் போடவேண்டும்.

காலொன்றுக்கு இருநூறுவீதம் கெச்சை கட்டி அணிவதே நல்லது. அல்லது, வலக்காலில் நூறும், இடக்காலில் இருநூறு மாகப் பூட்டி நடனம் செய்யலாமென்பர்.

அபி. த. (ஆனந்த.) பக். 34. கிண்கிணி லக்ஷணம் இவ்வாறே கூறும்.

அபாத்திர லக்ஷணம்

பெருஞ்சென்னி செங்கண்ணி பேழ்வாய்ச்சி
கால்கைகள் பெரிதா மின்னுள்
மருவுளகர்ப் பிணிப்பிணியா டடித்தமெய்யாள்
கோங்கையில்லாள் வதன மெய்யிற்
பெருகியவே ருவைதுடைத்தாள் கண்பிசைத்தா
டலிசொரிவாள் பின்னுஞ் சோம்பி
உருவெளிப்பாள் வேந்தனுக்குப் பின்காட்டு
வாணடுங்கு முடலி யுற்றாள் 917

பூவுடைநேத் திரமுள்ளாள் கூந்தலில்லாள்
முகத்திலம்மைப் புள்ளி யுள்ளாள்
மேவுதனம் தொஞ்சலுள்ளாள் மிகப்பருத்தாள்
மிகவிளைத்தாள் மிஞ்சு கூனுள்
கோவமுள்ளாள் திடமில்லாள் ஒருகண்ணுள்
வெள்ளுதடாள் குமரியி லாதாள்
தாவுபசி யெனவுயர்ந்தாள் மிகக்குறுகல்
ஈனசுரந் தளர்ந்த மெய்யாள் 918

மாறுகண்ணுள் முழிகண்ணுள் குழிக்கண்ணுள்
நீர்க்கண்ணுள் மாலைக் கண்ணுள்
கூறியசொற் பொருளறியாள் குறிப்பறியாள்
பொறுமையில்லாள் குருவின் சொல்லை
மீறியகடக் கையுள்ளாள் வாத்தியகா
னகிர்த்த விதத்தைக் காணுள்
காறுகிறஞ் செவிடுமுளாள் கண்டமுக
நீட்சியுள்ளாள் கல்வி யில்லாள் 919

கார்குழலிச் சபைமுன்னே கோதிமுடிப்
பாண்மெய்யைத் தான்சொ ரிந்தும்
ஈர்நாக்கு தனைக்கொண்டு இதழ்தடவு
வாளுதட்டை மிகக்க டிப்பாள்
பார்மூக்கைத் தடவுவாள் இருசூரலாள்
ஆடுமப்போ பாரில் வீழ்ந்த
நேர்கலனை ஆராய்வாள் இவளையபாத்
திரமெனவே விள்ளு நூலே. 920

அபாத்திர லக்ஷணம்

செய்யுட்கள் 917 920

பெரியதலை, செங்கண், பிளந்தவாய், பெரிய கால்களைகள், கர்ப்பமுடைமை, நோய், தடித்தமெய் இவற்றை உடைமையும், கொங்கையில்லாமையும், முகத்தில் பெருகும் வியர்வை துடைத்தல், கண்பிசைதல், தலைசொரிதல், சோம்பி உருநெளித்தல், அரசனுக்குப் பின்காட்டுதல், நடுங்கும் உடலைப் பெற்றிருத்தல் ஆகியவையும்,

பூவிழுந்தகண், கூந்தலில்லமை, அம்மைவடுவுள்ள முகம், தொஞ்சியதனம், மிகப்பருத்திருத்தல், மிகவிளைத்திருத்தல், அதிகம் கூனல், கோபம், திடமின்மை, ஒருகண்ணுடைமை, வெள்ளதடு, மிகவிளமை, பனைபோன்ற உயரம், மிதக்குறுகல், ஈனசுரம், தளர்ந்த மெய் ஆகியவையும்,

மாறுகண், முழிக்கண், குழிக்கண், நீர்க்கண், மாலைக்கண் ஆகிய கண்குற்றமுடைமையும், சொற்பொருள் அறியாமை, குறிப்பறியாமை, பொறுமையின்மை, குருவின்சொல் மீறிய நடக்கையுடைமை, வாத்தியம் கானம் கிருத்தம் இவற்றின் விதங்களை அறியாமை, கருப்புநிறம், செவிடு, கழுத்துநீளம், முகநீளம் ஆகிய வற்றை உடைமை, கல்வியில்லாமை ஆகியவையும்,

கூந்தலைச் சபைமுன்னே கோதிமுடித்தல், மெய்சொரிதல், சரநாசுகினால் இதழ்தடவல், உதட்டை மிகக்கடித்தல், மூக்கைத் தடவுதல், இருகுரலுடைமை, தரையில் விழுந்த ஆபரணத்தைத் தேடல் ஆகியவையும் கொண்டவள் அபாத்திரமாவாள்.

பாத்திர லக்ஷணம் முற்றும்.

---

8. தண்ட லட்சணம்

பர்மன்முன் னடனம்புரிந் ததினுலே
பத்திர்கா ளியைச்செ யிக்கப்
பாங்குடன்றன் கைப்பற்றி யப்பிரம்பைப்
பாணியால் டோளமாய்ப் பிடித்துத்

அபி. த. (சோஷ், 26-27 ; ஆனந்த. பக். 34) அபாத்திரலக்ஷணங்கள் பத்தெனக் கூறும்.

ஸ. ர. (7 : 1237-1238).

திரமுடன் சமபாதத் தினின்று
தீயெனுமோ சையா னடிக்கச்
சிந்தையிற் காளியதை யனுசரித்துத்
தத்ததித் தீயெனுஞ் சொல்லாற்
பெரிதென நடிக்கவப் போதொருகால்
பேணியுத் வேஷ்டித மாகப்
பிரித்துத்தய் யென்றுதண்ட மேல்வைக்கப்
பெருலச்சை யுடனந்தக் காளி
வெருவியே நிற்கப்பிர மாதிமுத
லாம்விண்ணவ ரனைவரும் புகழ
விமலன்களிப் பாயந்தத் தண்டத்தை
விரிஞ்சனுக் களித்தா னன்றே 921

அயன்மகவா னுக்களித்தா னவன்நா
ரதன்கையிற் கொடுக்க வக்கோலை
அன்றுகந் தருவமன்ன னுக்களிக்க
வவனமர்க்குடன் கொடுக்க
வியனுறும்பூ மிதனினுட் யாரம்பம்
விளைத்திட வெழுசா ணீளம்
மேவுமூவிர லாம்பருமன் மூங்கிலினுல்
விந்தைசேர் தண்டொன்று செய்து
அயனமாம் புதுப்பட்டி னைச்சுற்றி
மிருதங்கா தியாங்கரு விகளுடனே
ஆனைமுகத் தோன்முன் வைத்துப்புதுப்
பாத்திரத்தா லேபூசிக் கச்செய்து
வயனமாந் தண்டையிரு பெண்கள்கையில்
வளம்பெறப் பிடித்திடச் செய்து
மன்னியசுவ பாத்திர முடைக்கச்சை
வழங்கிக் கச்சமுந் தரித்தே 922

விளங்கியதண் டின்மத்தியி னெல்லை
விரித்திடு ராசியி னிறுத்தி
மேவியதண் டின்மத்தி யிற்பிடிக்க
வேசெய்து குருவுசி தமதாய்

வளம்பெறு தத்தித் தய்யென
முதலில்வரு மடவா னடிப்பித்து
மன்னியபூர்வ வரங்கம்போற் புஷ்பாஞ்
சலிசெய்து மங்கள மாகத்
தளம்பெறுஞ்சிட் சைசொல்ல வேண்டுமெனத்
தரணியோர்க் கத்தேவ ராடவே
தயவுடன்கொடுத் தாரென்ன முன்கார
தாதிக ளுரைத்த நற்பரதந்
துலங்கிய சாத்திரஞ் சொலுமிவற்றைத்
தொல்லுலகி னன்னட னம்புரியத்
தொடுக்குமா ரம்பஞ்செய வேணுமென்று
சொல்லுவை நூன்முறை தெரிந்தே. 923

தண்ட லக்ஷணம்

செய்யுட்கள் 921-923

பரமன் முன் நடனம் புரிந்து, அதனாலே பத்திரகாளியை ஜயிக்க, தம் கையில் பற்றிய பிரம்பைக் கையினால் தோளமாய்ப் பிடித்து, நிறமுடன் சமபாதத்தில் நின்று, 'தீய்' எனும் ஓசையால் நடிக்க, காளி தன் மனத்தினால் அதனை அநுசரித்து, 'தத்தித்தீ' என்னும் சொல்லால் நடிக்க, அப்போது பரமசிவன் ஒரு காலை உத்வேஷ்டிதமாகப் பிரித்து, 'தய்' என்று தண்டமேல் வைக்க, அந்தக் காளி பெரு லஜ்ஜையுடன் பயந்து நிற்க, பிரமன் முதலான தேவர்கள் அனைவரும் ஈசனைப் புகழ, அவர் களிப்புடன் அந்தத் தண்டத்தைப் பிரமனிடம் கொடுத்தார்.

பிரமன் அதனை இந்திரனுக்குக் கொடுக்க, இந்திரன் நாரதனிடம் அதைக் கொடுக்க, நாரதர் அதனைக் கந்தருவ மன்னனுக்கு அளிக்க, அவன் தேவர்களுக்குக் கொடுத்தான். "பூமியில் நாட்யாரம்பம் செய்யும்போது, ஏழுசாண் நீளம், மூவிரல் பருமன், மூங்கிலினால், அழகான தண்டு ஒன்று செய்து, நல்ல பட்டைச் சுற்றி, மிருதங்காதி வாத்யங்களுடனே கணபதியின் முன் வைத்து, புதுப்பாத்திரத்தாலே பூசிக்கச் செய்து, அந்தத் தண்டை இரண்டு பெண்களின் கைகளிற் கொடுத்துப் பிடிக்கச் செய்து, பிறகு பாத்திரத்திற்கு உடைக்கச்சையளித்து அதனைத் தரிக்கச்செய்து,

தண்டினை நெற்குவியலில் மத்தியில் நிறுத்தி, அதன் மத்தியைப் பிடிக்கச் செய்து, குருவானவர், 'தத்தித்தய்' என முத

லில் வரும் அடைவால் நடிப்பித்து, பூர்வ அரங்கம்போல் புஷ்பாஞ் சலி செய்து, மங்களமாகத் தளம்பெறும் சிலேஷ சொல்ல வேண்டும்" என்று உபதேசித்துத் தேவர்கள் தயவுடன் கொடுத்தார்கள்.

இவ்வாறு நாரதாதிகள் கூறிய பரதசாஸ்திரங்கள் கூறும். இந்த வகையில், நூல்முறை தெரிந்து, நாட்டியாரம்பம் செய்ய வேண்டும்.

நண்டலக்ஷணம் முற்றும்

---

9. தேங்காய் லக்ஷணம்

பத்தர்கள் பரவு தாளான் பராபரன் பரம யோகி
சத்தியை யிடத்தே வைத்த தற்பரன் தந்த கன்று
முத்திக்கு வித்தாய் வந்து முளைத்த வைங்கரத்து நாதன்
வித்தகன் குமரன் முன்னோன் விநாயகன் பாதம் போற்றி

சித்தியாம் பலவித் தைக்குஞ் செய்தொழின் முகூர்த்தங் கொள்ள
உத்தம பூமி தன்னி லுகந்தகோ சலஞ்சா ணாகம்
அத்துட னீரு மொன்று யகலநாற் கோண மாகப்
பத்தியா மரங்கள் தன்னிற் பரிவுள கன்னி மூலை 925

அத்தினின் மெழுகிப் பின்ன ரானதோர் கன்னி தன்னில்
வித்தகக் கணேசன் றன்னை விளங்குமா சனத்தில் வைத்து
முத்தொடு பருப்பு நெல்லு முழுமணி யரிசி சாதம்
அத்திர மெழுக்கின் மேலே யணிபெறப் பரப்பிப் பின்னர்

பத்தியாய்ப் பிள்ளை யார்க்குப் பரிவுடன் பூவுஞ் சாத்திக்
கொத்தலர் மாலை சாத்திக் குரவைவாத் தியமு முழங்க
உத்தம விளக்கு மட்ட மங்கல நிறைந்த நாளில்
கத்தகன் முன்னே வைத்துக் கண்களி கூர்ந்து நின்று 927

சித்தத்திற் றியானித் தெட்டுத் திக்கிலும் பூசை யாற்றி
அத்திர நடுவிற் பிரம்ம சந்தியின் மலர்சொ ரிந்து
உத்தம மான தேங்காய்க் குகந்தசந் தனமும் பூசிச்
சித்தமாய்த் தூப தீபஞ் சீர்பெறச் செய்த பின்னர் 928

921—3 :—" ஐயாண்டில் தண்டியம் பிடித்து " என்ற (சிலப். உரை. பக். 25) பகுதியையும் தலேக்கோலின் இலக்கணங் கூறும் அத்நூல் (அரங். 114-28 உரை ; கடலாடு : 18-25 உரை) பகுதிகளையும் ஒப்பிட்டுக்காண்க.

அத்திர புதல்வ ராலு மழகுபுத் திரிக ளாலும்
சுத்தமாய் விரதஞ் செய்து தூயவெண் ணீறுஞ் சாற்றி
உத்தம மான கோடி வஸ்திரங் கொண்டு தைத்துச்
சுத்தமா முடையுங் கோத்துக் கச்சையு மருங்கிற் கட்டி 929

கைக்கரங் கூப்பிப் பின்னர் கவின்பெற வேந்தி நின்று
தெக்கணக் கரத்தி லுலே சீர்திரு விளக்கைப் போற்றி
அக்கணம் பிள்ளை யாரை யழகுறப் போற்றி நின்று
புக்கிதன் குலதெய் வத்தோ டானதிக் கெட்டும் போற்றி930

மிக்குற தேவர் சந்தி விண்ணுறுந் தேவர் போற்றி
சற்குரு பாதம் போற்றித் தயவுடன் றேங்காய் போற்றிச்
சிக்கடை பொரியெள் ளுண்டை தீங்கரும் பிளநீ ரோடு
முக்கனி யடைக்காய் வைத்து முன்பதை நேவே தித்து 931

உற்பன மான தேங்காய் தெட்சணை யுடன டைக்காய்
நற்குரு நாதன் கையிற் கொடுத்துநா டோறும் வித்தை
சொற்பெறப் படிக்க வேண்டித் தொடங்குகின் றந்த நேரம்
நற்கண பதிமுன் றேங்கா யுடைப்பது நன்மை யாகும். 932

ஒத்துடன் முறியு மாகி லுண்மையாம் வித்தை யுண்டாம்
கைத்தலம் விட்டு நீங்கித் தெறித்தோடின் மரணங் காணும்
இத்திற முடைத்த தேங்காய் முறிந்தநீ ரு நின்ரூல்
வித்தகச் செல்வ முண்டாம் விளங்குசந் ததிக ளுண்டாம்

சித்திர மாகச் சற்றே சிறிதெனுங் குழவி யுண்டாம்
பத்தியில் லாமை யாலே பலவித மாகப் போகில்
பித்தராய்த் துட்ட ராவார் வித்தையும் பிரிந்து சோரக்
கத்தனே கண்ணிற் கீறிற் கணுநோயுங் கொள்வன் ரூனே

என்றிள மரத்தின் காயு மிடைநடு பெருத்த தாணும்
அன்றலிப் படிபெ ருத்தா லக்கிரம் பெருகிற் கண்ணு
மொன்றுமூ வகையி லாணு முயர்மரங் கிரிகை யிற்பெண்
ணன்றுபெண் கிரிகை தன்னி னபுஞ்சகந் திரத்தி லாமே

அண்டங்க ளாயிரத்தெட் டானதொரு தேங்காயைக்
கண்டமா தாயடிக்கக் காரியமென்—மண்டலத்தில்
நாத முதலமுதாய் நாதாந்த மேவுருவாய்
வேதமுதன் ஞானம் விளங்கும். 936

அடிபெருத்த தேங்காய்பெண் ணுமலியா மதனின்
முடிபெருத்தாற் பெண்ணு முழுதுந்—தடியாலுல்
ஆணுந் தலைக்கண்ணே யங்குறவே பொத்தியபின்
கோணுமை லேயடித்துக் கொள். 937

நொற்பனமா நான்மறையோ னெற்பனத்தி லுங்கனத்தால்
அற்புதமாங் கொற்றவனுக் காரமுதாம்—வெற்பனைய
தேங்காயைச் செட்டியெனுந் தேய்ந்துகனத் தாலதனைப்
பாங்கான சூத்திரனும் பார். 938

வலியகண்ணி லேவிடுத்தால் வாராது வித்தை
பலியெடுப்பே னிதற்குப் பலன்கேள் – கலியுகத்தில்
வாம நயனத்தால் வந்தால் வனிதையரும்
சேமஞ் சிதறிவிடுங் தேர். 939

ஆமலி வானுபம் வங்கிச விருத்த மிக்கச் .....
சாமதே புருட தீர்க்கஞ் சட்சுநோய்க் கண்ணி லூனம்
காமுறு ரேகை யீனங் காத்திரம் ரோக மாகும்
தேமலி சிகையில் லாத சிரசுநோ யழுகல் பூசல் 940

சலமீனம் வருட நாசஞ் சட்சுநோய் கண்ணி லூனம்
பலநெறி வாயு வீனம் பலவர்ணஞ் சொர்ண நாசம்
குலவிய கொன்னுய் நீயங் குழன்றதிற் கோப மாகும்
தலைமுறை யிவகை நீக்கிச் சற்குரு வெடுக்க நன்றே 941

கொள்வது தோஷ மாகுங் கூடிய தில்லை யாலும்
அள்ளியே சலத்தை விட்டு அத்திர மதனற் பூசி
மெள்ளவே திரியம் பகத்தால் விப்பிரன் பரிசிப் பித்தே
உள்விலாங் குட்டத் தாலே யொருவிர னயனம் பொத்தி

பொத்தியே கனிட்டை மூலம் பிடித்திடும் புருவ மட்டா
எத்தியோர் தாட னத்தா லிருமுறி யாக நன்றே
மத்திம மடிரண் டாகி லவரமுச் சரித்துச் செய்ய
உத்தம கண்ணில் விட்டா லுயர்குல நாச மாமே 943

ஆணுக் காணுக வறிந்துடைநீ தேங்காயை
வீணுக் காகாமல் விதியினற்—பேணியொரு
சாதிக் குச்சாதி தனையறிந்து தானுடைத்தால்
சோதிக்கும் பாங்காகச் சொல். 944

மணிபிரம னங்குட்ட மாதுமைதான் மையம்
பணிமகுட மாலானும் பார்க்கி—லணிவிரலிற்
ஆதவனுங் கைத்தலத்தி லாங்கவளு மாகவே
பேதமறத் தேங்காய் பிடி.. 945

21661

தேங்காய் லக்ஷணம்

செய்யுட்கள் 924-945

விநாயகபூஜை

பக்தர்கள் புகழும் பாதமுடையான்; பராபரன், பரமயோகி, சக்தியை இடத்தே வைத்த தற்பரன் பெற்ற பிள்ளை; முத்திக்கு வித்தாய் வந்து முளைத்த ஐங்கரத்து நாதன்; வித்தகன்; குமரன்; முன்னோன்; விநாயகன் பாதம் போற்றி;

பல வித்தைகளும் சித்தியாவதற்காக நல்லவேளை பார்த்து, உத்தம பூமியில் கோசலம், கோமயம், நீர் இவற்றைக் கலந்து, கன்னிமூலையிலே நாற்கோணமாக,

மெழுகி, பின் கன்னிதிசையில் விநாயகனை விளங்கும் ஆசனத்தில் வைத்து, மெழுக்கின்மேலே முத்து, பருப்பு, நெல், முழுமணி, அரிசி, சாதம் இவற்றைப் பரப்பி,

பக்தியுடன் பிள்ளையாருக்குப் பூச்சாத்தி, மாலைசாத்தி, குரவை வாத்தியங்கள் முழங்க, உத்தம விளக்கும் அஷ்டமங்கலங்களும் நல்லவேளை பார்த்து வைத்து, கண் களிகூர்ந்து பார்த்து,

தேங்காய்ப்பூஜை

மனத்தினால் தியானித்து, எட்டுத் திக்குக்களிலும் பூஜை செய்து, நடுவில் பிரமசந்தியில் மலர்சொரிந்து, உத்தமமான தேங்காய்க்குக் கந்தசந்தனம் பூசி, தூபதீபம் காட்டி,

நாட்டியமாடும் புதல்வரும் புத்திரிகளும் விரதங்கள் செய்து, தூயவெண்ணீறும் சாற்றி, கோடி வஸ்திரம் கொண்டு தைத்த உடை உடுத்து, கச்சையும் கட்டி.

கைகளைக் கூப்பிப் பிறகு கைகளை ஏந்திக்கொண்டு நின்று, வலக்கையினாலே விளக்கைப் போற்றி, கண்பதியையும் வணங்கி, குலதெய்வத்தையும் எட்டுத் திக்குக்களையும் வணங்கி,

சந்தியாதேவர், விண்ணுறும் தேவர் ஆகியோரைப் போற்றி, சற்குரு பாதத்தில் வணங்கி, தேங்காயை வணங்கி, அதன்முன் அடை, பொரி, எள்ளுருண்டை, கரும்பு, இளநீர், முக்கனி, அடைக்காய் முதலியவற்றை வைத்து நிவேதித்து,

தேங்காய், தக்ஷிணை, அடைக்காய் இவற்றைக் குருநாதன் கையிற் கொடுத்து, நாள்தோறும் வித்தைப் புகழ்பெறப் படிக்க வேண்டி வித்யாப்யாசம் தொடங்குகின்ற அந்நேரத்தில் தேங்காயைக் கணபதிமுன் உடைப்பது நன்மையாகும்.

தேங்காய் உடைதலின் பயன்

தேங்காய் (இருபகுதிகளும்) ஒத்து உடையுமானால் உண்மையான வித்தை உண்டாகும்; அது கையை விட்டுத் தெறித்து ஓடினால் மரணம் உண்டாகும்; உடைந்த தேங்காயில் நீர் இன்றால், சிறந்த செல்வமும் சந்ததிகளும் உண்டாகும்; கல்ல குழந்தை பிறக்கும். அப்படிக்கின்றி, பக்தியில்லாமல் உடைத்தால் பல பகுதிகளாக உடைந்து போகுமானால் பித்தராய், துஷ்டராவர்; வித்தையும் பிரிந்துபோம். கண்ணில் கீறினால் கண்நோய் உண்டாகும்;

தேங்காய் லக்ஷணம்

இதன் பொருள் விளங்கவில்லை. (ஆண், பெண், அலித் தேங்காய்களின் லக்ஷணம் இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளது. இதுவே பின்னும் கூறப்படும்,

தேங்காய்க்குறி

ஆயிரத்தெட்டென்ற அண்டங்களின் உருவான தேங்காயை உடைப்பதன் பயன் யாதெனில், மண்டலத்தில் நாதம் முதல் அமுதமயமான நாதாந்தமே அதன் உருவானதால், வேதமுதல் ஞானம் விளங்கும்: இதுவே பயன்.

அடிபெருத்த தேங்காய் பெண்ணும்; அலியாம் முடி பெருத்தால்; பெண்ணும் முழுதும் தடியானால்; ஆணை தேங்காயின் கண்ணை நன்றாகப் பொத்திக்கொண்டு கோணமேலே அடிக்க.

நொற்பனமாய் (கனமற்றதாய்) உள்ள தேங்காய் அந்தணன்; கொஞ்சம் கனமாய் உள்ளது அரசன்; மலைபோல் உள்ளது வணிகன்; கனத்தால் தேய்ந்தது சூத்திரன்.

உடைக்கும்போது வலக்கண்ணில் உடைந்தால் வித்தைவாராது; இடக்கண் உடைந்தால் சேமம் சிதறிவிடும்.

சிகையில்லாததும் சிரசு நோயுள்ளதும், அழுகல் உள்ளதும், உள்ளே பூசலுள்ளதுமாகத் தேங்காயிருந்தால், பசுக்கள் நாசமடையும்; வமிசம் பாழாகும்; ஆண்சந்ததி குறையும்; கண்நோய் கண்ணில் ஊனம், ரேகை, ஈனம், காத்திர ரோகம் முதலிய நோய்கள் உண்டாகும்.

ஜலமில்லாதது, வருஷநாசம்; கண்நோய், கண்ணில் ஊனம்; பலநெறி, வாயுவீனம்; பலநிறம் சொர்ணநாசம்; கோம்பைத் தேங்காய், கோபமுண்டாகும். இத்தகைய குற்றங்களுடைய தேங்காய் களை நீக்கி, சற்குரு நல்லதாகப் பொறுக்கியெடுத்தல் நன்றாகும்.

இப்படித் தோஷங்களில்லாத காயைப் பொறுக்கி, ஜலத்தை அள்ளிவிட்டு அலம்பி, அஸ்திரத்தால் பூசி, திரியம்பகத்தால் பிராமணனைக்கொண்டு தொடச்செய்து, கட்டைவிரல் உட்புறத்தாலே ஒரு கண்ணைப்பொத்தி,

கனிஷ்டை மூலம் பிடித்து, புருவமட்டாய் உயர்த்தி, ஒரே அடியில் இரண்டாகும்படி அடித்தல் நன்று. இரண்டடிகளாகில் மத்திமம்; மூன்று தரம் அடித்தல் அதமம்; விடும்போது கண்ணில் விட்டால் குலநாசமாம்.

தேங்காயை ஆணுக்கு ஆணாக அறிந்து உடைத்தலும், சாதிக்குச் சாதிப் பாங்காகவும் சோதித்து உடைத்தலும் வேண்டும்.

தேங்காய்க்குரிய தேவதை: அங்குட்டம், பிரமன்; மையம், உமை; மகுடம், மால்; விரல், ஆதவன்; கைத்தலம் அவள் (?).

தேங்காய் லக்ஷணம் முற்றும்.

---

10. பிரம்பு லக்ஷணம்

ஓங்கார வித்துளதா யொவ்வெழுத்தே வேருளதாய்
ஆங்கார மானந்த மாநிலையாய்ப்—பாங்காக
நன்றாக வேமூளத்த நாதசிவ மாமெனவே
ஒன்றாக வந்தபிரம் புற்று. 946

மூளத்தது நிலங்கள் பூமி மொழிசிவ சத்தி பூணத்
தழைத்தது இலையும் வேருந் தங்கிய கொழுந்தின் சாயத்
திளைத்தது நந்தி கோடி யெடுத்தது கொரூபந் தன்னில்
இளைத்தது கூட்டந் தன்னிற் கிரணமாம் பிரம்பு தானே.

நட்டுவர்க்கு மூன்றரைச்சா ணங்கிக் கிரெட்டிப்பு
மூட்டற்ற பண்டிதர்க்கு மூன்றேசாண்—திட்டனவே
பட்ட வரையெழுப்பும் பஞ்சாக் கரத்தோருக்
கெட்டுவிரற் சாணென் றியம்பு. 948

நன்றாய்ச் சிவஞானக் கொழுந்தாய்ப் பச்சை
நாகமெனத் தலைநீட்டி வேத நான்கும்
ஒன்றாக முளைத்தெழுந்து புவிவிட் டேக
வோரைந்து.....
குன்றாத விரனாற்பத் திரண்டே கூரிட்டுக்
கூறி.....
நின்றாரும் பிரம்புதன்னை வெட்டி நீட்டி
நிருத்தர் திருக்கரத் தேந்திநின் றாரே. 949

அஞ்சுகணு வீசனா மளவே நெடுமாலா
மிஞ்சுகணுக் கீழ்வாம வேந்தனா—மிஞ்சிப்
பிடித்தகரஞ் சூசியாம் பேருலகோர் முன்னே
எடுத்தபிரம் பேயாகு மென். 950

அச்சமற வாதியரா யாடியதோர் நிர்த்தத்தை
உச்சிதமா யானு முரைக்கின்றே—னிச்சயமே
முச்சாண ரைப்பிரம்பே முதற்குருவே மும்மூர்த்தி
தத்ததாப தாகத்தைத் தாக்கு. 951

தாக்கிய தோர்பிரம்பு தான்பாதி யானாக்கால்
வாக்கிற் பிடித்து வலமாகி—நோக்குடனே
யானபர தத்தொழிலை யாட்டிவைத்தா னாடலிவை
தானறிந்த கைப்பிரம்பாற் றான். 952

பிரம்பு லக்ஷணம்

செய்யுட்கள் 946-952.

ஓங்காரம் என்னும் வித்தும், அதன் பகுதிகளான எழுத்துக்கள் என்னும் வேர்களும், ஆனந்த நிலையும், இவ்வாறு நன்றாக முளைத்த நாத சிவமே ஒன்று கூடிப் பிரம்பாயிற்று.

பூமியில், சிவசத்திபூண முளைத்து, தழையும் இலையும் கொழுந்தும் வேரும் விட்டு வளர்ந்த பிரம்புகளை எடுத்தவர்கள் கோடி நந்திகள். இவ்வாறு சிவ சொரூபமாய்ப் பிரம்புகள் கூட்டமாக விளைந்தன.

இப் பிரம்பு நட்டுவர்க்கு மூன்றரைச்சாண் ; நந்திக்கு இரட்டிப்பு ; பண்டிதர்க்கு மூன்றுசாண் ; இறந்தவரையும் எழுப்பவல்ல பஞ்சாக்ஷரத்தோருக்கு, எட்டு (விரல்) சாண்(?) என்று கூறுவாயாக.

நிருத்தர்க்குரிய பிரம்பு, நன்ருகச் சிவஞானக் கொழுந் தாயும், பச்சைநாக மெனத்தலே நீட்டி, வேதம் நான்கும் ஒன்ருக முளைத்தது என்று சொல்லப்படும்;.....அளந்து வெட்டி நீட்டிய பிரம்பை நிருத்தர் கையில் ஏந்துவர்.

ஐந்து கணுக்கள் உடைய பிரம்பு ஈசனும்; நான்குள்ளது மாலாம்; அதற்குக் கீழுள்ளது வாமதேவந்தன் (மன்மதனும்). அதைப் பிடிக்கும் கை சூரியாம்

அச்சமற ஆடியதோர் நிர்த்தத்தை உரைக்கின்றேன்; மூன்றரைச் சாணுள்ள பிரம்பே முதல்குரு; மும்மூர்த்தி; அதனைத் 'தத்ததா' என்று பதாகத்தால் தாக்குக.

பிரம்பால் பாதி தாக்கி, பிறகு வாக்கினலும் நோக்கினலும் ஆசிரியன் ஆட்டுவிப்பான்.

பிரம்பு லக்ஷணம் முற்றும்.

---

948. அறம் வளர்த்தான் இயற்றிய பரத சங்கிரகம் என்ற நூலில் பின் வருமாறு காணப்படுகிறது.

நட்டுவற்கு மூன்றரைச் சாண்நடத்திக் கிரட்டிப்பு
முட்டிபுகும் பார்ப்பார்க்கு மும்மூன்றே—நிட்டையுடன்
பட்டவரை யெழுப்பும் பஞ்சாட் சரத்தோற்கு
எட்டிலகு லட்சணமென் றெண்.

949. இச்செய்யுளின் இடையிரண்டடிகளில் சீர்கள் குறைந்துள்ளன.

950. பரத சங்கிரகம் என்னும் நூலில் பின் வருமாறு காணப்படுகிறது.

அஞ்சுகணு வீச னதனடு வேகெடுமால்
விஞ்சிடுமஞ் சக்கரத்தால் மெய்ப்பிலற்றை யஞ்சப்
பிடித்த கவுத்தமே பேசிஉல கெண்ண
எடுத்தவ னேவேதா வென்.

957. பரத சங்கிரகத்தில் பின்வருமாறு காணப்படுகிறது:

அச்சமற ஆதிநின்று சூடியதோர் தாண்டவத்தை
மெச்சுமதி மின்னேயிக வாட்டுவிக்க—முச்சாண்
அரைப்பிரம்பு மும்மூர்த்தி யாங்கவத்து வத்தைத்
தரைக்குளவ ரும்புகழத் தாக்கு.

குறிப்பு: இப்பகுதிக்குத் திருப்திகரமான உரை எழுதப்படவில்லை. யாட்டிலுள்ள சொற்களேயே பிரித்து எழுதப்பட்டுள்ளன.

11. உடைக்கச்சை லக்ஷணம்

வேங்கை வரியுடையான் மெய்ஞ்ஞானக் கச்சையான்
ஓங்குமூய லகனுதிர மெண்ணெயாய்த்—தாங்குபுகழ்
நாகமே மென்முடியாய் நர்த்தகனென் றேசமைந்தான்
ஏகமாய் நின்ற ஈசன். 953

புலித் தோலாடையுடையவன், மெய்ஞ்ஞானத்தைக் கச்சையாகப் பூண்டவன், முயலகன் உதிரத்தை எண்ணெயாகும்படி மிதித்துக் கொண்டு, நாகத்தையும் முடியில் தரித்துக்கொண்டு, நர்த்தகன் என்றே அமைந்தான்; அவன் யாரெனில், ஏகமாய் நின்ற ஈசன்.

---

12. நாடக அரங்கம் முதலியன

சங்கஸ்தாபனம்

தாபர நாடகத் தரங்கஞ் செய்தற்
கான விடந்தனிற் சங்கத்
தாபனஞ் செய்வு மாகிய நாளுஞ்
சார்ந்திடு ராசிவாஸ் துவினுள்
தீபமாய் விளங்கு முத்திரட் டாதி
திகழுத் திராடம் ரோகணியும்
சேர்ந்திடு மிருக சீரிடம் பூசஞ்
சீருறு மிராசியா மகரங்
கூபமாய் விளங்கும் விருச்சிக ராசி
கூடிய விரதநல் வேளை
குணமதாம் சங்கத் தாபனஞ் செய்யக்
கூறினர் நூன்முறை தெரிந்து
பாபமில் லாத பரதநூல் கற்றோர்
பனிவரை யெனத்திகழ்ந் தெழுந்து
பணிகளைச் சுமந்து மார்பெலா மடர்ந்த
பருந்தனத் துடையமெல் லியலே. 954

---

953. பரதசங்கிரகம் **என்ற** நூலிற் காணும் பாடல் பின்வருமாறு:
வேங்கையுரித் தோலுடையாய் மென்னூல மேகயிரூய்
ஈங்குமுய லகனுதிர மெண்ணெயாய்ப்—பாங்குடனே
மன்றினடித் தார்செயலால் மானிலத்தில் நிர்த்தகர்க்கும்
வென்றியுள்ள பாவனையா மென்.

நாடக அரங்கு ஸ்தாபனத்துக்கான இடத்தில், சங்கத்தாபனம் (தம்பத்தாபனம்?) செய்தலாகிய நாள்களும் ராசிகளும் ஆவன : உத்திரட்டாதி, உத்திராடம், ரோகிணி, மிருகசீருடம், பூசம் ஆகிய நாட்களாம் ; லக்கினம், மகரம், விருச்சிகங்களாம். இப்படிப்பட்ட நல் வேளையில் சங்கஸ்தாபனம் செய்ய வேண்டும்.

வாஸ்துவின் மாதம்

கன்னிதுலாம் விருச்சிகம தாய்விளங்கு
மிம்மாதங் களிற்கி ழக்கே
சென்னியுந்தெற் கின்முகம தாய்த்துயி லுங்
தனுமகரஞ் சேர்ந்த கும்பம்
தன்னிறைற்குத் தலைமேற்கு முகந்துயி லும்
பங்குனி சித்திரை வைகாசி
உன்னியமேற் குத்தலையும் வடக்குமுகந்
துயி லுமென வோது மின்னும். 955

மிதுனமுங் கடகஞ் சிங்க மிதில்வடக் காகச் சென்னி
முதிரவே வைத்து மேற்கு முகமாகச் சயனங் கொள்ளும்
மிதுனமுங் கன்னி சாப மீனமிந் நான்கு மாதம்
கதிகொளு மூலை மூலை கால்தலை வைத்துத் தூங்கும். 956

ஆதலினு லிந்நான்கு மாதமும் விலக்கிமற்ற தாகுமாதங்
கோதுமரங் கழும்வீடுந் தச்சுசெயச் சுகமென்பர் குறுக்காய்வாஸ்து
மேதினியிற் கிடவாம லவனெழுந்த மாதமதில் விளம்புகின்ற
தேதிகளின் முன்னுரைத்த நாளுமிரா சியுங்கூட்டிச் செய்யநன்றே.

வாஸ்துவின் மாதம்

செய்யுட்கள் 955-957.

கன்னி, துலாம், விருச்சிகம் இம்மாதங்களில் வாஸ்து கிழக்கே தலையும் தெற்கே முகமுமாய் வைத்துத் தூங்கும் ; தனுசு, மகரம், கும்பம் இம்மாதங்களில் தெற்கே தலையும் மேற்கே முகமுமாய்த் தூங்கும் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் மேற்கே தலையும் வடக்கே முகமுமாய்த் துயிலும்.

மிதுனம், கடகம், சிங்கம் இவற்றில் வடக்கே தலையும் மேற்கே முகமும் வைத்து உறங்கும் ; மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இம்மாதங்களில் மூலைக்குமூலை தலையையும் காலையும் வைத்துத் தூங்கும்.

ஆதலால் இங்ஙன்கு மாதங்களும் நீக்கி, மற்றவை அரங்கம், வீடு, தச்சுவேலை ஆகிய செய்யச் சுகம் என்பர். வாஸ்து குறுக் காய்க் கிடக்காமல் எழுந்த மாதத்தில் நல்ல தேதிகளில் முன்சொன்ன நாளும், லக்கினமும் கூடிச் செய்தல் நலமாகும்.

வாஸ்து எழுநாள்

சித்திரைபத் தாம்வைகா சியிலிருபத்
தொன்ருகும் தெய்தி யாடிப்
பத்துடனெண் ருமாவ ணிக்குமுப்
பதாகு மைப்பசிப் பன்னென்ரும்
முத்தியகார்த் திகைக்கெட்டா மொழியுத்தை
பனிரண்டாய் முழங்கு மாசி
யெத்துமிரு பதுவான தேதிகளில்
வாஸ்துவெழுந் திருக்கும் பாரே. 958

சித்திரை 10, வைகாசி 21, அடி 11, ஆவணி 30, ஐப்பசி 11 கார்த்திகை 8, தை 12, மாசி 20, இத்தேதிகள் வாஸ்து எழும் நாட்களாம்.

மண்டப லக்ஷணம்

நன்ருய்க் கீழ்மே லறுபத்து நாலுமுழ மாகிய நீளம்
ஒன்ருய் முப்பத்தி ரண்டு முழமகலமா மண்டப மதனில்
குன்ருய்த் தெற்கு வடக்கோடு குணபான் மேற்குவா சலுமாய்க்
கன்ருய் மயனால் விதிப்படியே கனக்கச்செஞ் சாளரந் திறந்தே

மண்ணிநீர் புழுகு நெய்யும் வகைப்படி வடித்துத் துய்ய
கண்ணென மாசு போக்கிக் கனகசித் திரங்க ளட்டி
நண்ணிய நிலைக்கண் ணாடி நாடகப் பத்தி யேற்றி
விண்ணவ ரரங்க மென்ன விரிஞ்சனும் புகழச் செய்தே 960

நிலத்தினிற் களபச் சாந்தா னிகரித்து நிலவைத் தானே
தலத்தினிற் பதித்த தென்னச் சந்திர காந்த மென்னப்
பலப்படும் புனலி னூடே பளிங்கொளி பரந்த தென்ன
நலத்தினிற் சிறப்புச் செய்தே நவமணி விளக்கை யேற்றி.

பூரண கும்பம் வைத்தே புதுநறும் பஞ்ச தூபம்
காரண மாகக் கோலி கனக்கமேற் கட்டி கட்டிச்
சீரணி வயிர முத்துஞ் செழுமணிப் பவளந் தூக்கிப்
பேரணி துவச வாசற் பெருத்தபூ மாலை தூக்கி. 962

மண்டப லக்ஷணம்.

செய்யுட்கள் 959-962.

கீழ்மேல் அறுபத்துஈரு முழம் நீளமும், (வடகீழ்) முப்பத் திரண்டு முழ அகலமுமாய் மண்டபம் செய்து, மயன் நூலில் விதித்தபடி தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என்ற பக்கங்களில் வாயில்கள் அமைத்துக் கனமான சாளரங்கள் திறந்து,

நீரால் அலம்பி, புழுகுநெய் இவற்றுல் கண்ணுடிபோலச் சுவர் களைப் பளபளப்பாகச் செய்து, கனக சித்திரங்கள் வரைந்து, நிலைக்கண்ணுடிகளை நாடகப்பத்தியில் ஏற்றி, தேவர் அங்கமோ என்று பிரமனும் புகழுமாறு செய்து,

தரையில் களபச் சந்தனத்தால் மெழுகி, நிலவோ, சந்திர காந்தமோ, நீரினுள்ள பரந்த பளிங்கோ என்னும்படி தரையைப் பளபளப்பாக்கி, நவமணி விளக்கை ஏற்றி,

பூர்ணகும்பம் வைத்து, புதிய நறிய பஞ்சதூபம் அமைத்துக் கனமாக மேற்கட்டி கட்டி, வயிரம், முத்து, மணி, பவளம் இவற்று லான மாலைகளையும் கட்டி, துவஜ வாசலிலே பெரிய பூமாலைகளையும் தொங்க விடவேண்டும்.

நட்டசாலை

பாரித்த நடன சாலை பலவலங் காரஞ் செய்தே
வாரிச்செம் பவள முத்தும் வயிரமா ணிக்க மற்றும்
பூரித்த மணிய நேகம் புனைந்தகிங் காச னத்தை
நேரிட்ட வரங்கந் தன்னி னெறியினிற் குடபால் வைத்தே

வயங்கிய நிருத்த சாலை வகைமையா யலங்க ரித்துத்
தயங்குசிங் காச னத்திற் றமனியத் தவிசின் மீது
வியங்கொளெண் டிசைசூ ழோசை வேலைமண் புரக்கும் வேந்தன்
இயங்குநங் குணபா னேக்கி யினிதிருந் தருளு மாதோ. 964

அரங்கின் அமைதியைச் சிலப் 3 : 95–113 வரிகளிலும் அவற்றின் உரைகளிலும் காண்க.

நா. சா.: இரண்டாம் அத்தியாயமும், 'நாட்டியசாலை நிர்மாணவிதி' என்ற தலைப்பின் கீழ் விபுலானந்தர் எழுதியவையும் காணத்தக்கன. (பரத சோசம் பக். 320–322)

நடனசாலே

நன்ருக அலங்காரம் செய்யப்பெற்ற நடனசாலேயிலே, பவளம், முத்து, வயிரம், மாணிக்கம் இவை பதித்த சிங்காதனத்தை அரங் கிற்கு மேற்கே வைத்து,

(விளங்கும் நிர்த்த சாலேயை நன்ருயலங்கரித்து) தங்க ஆசனத் தின்மீது, கடல் சூழ்ந்த இவ்வுலகையாளும் அரசனேக் கிழக்கு நோக்கி இருந்தருளச் செய்யவேண்டும்.

இராஜ லக்ஷணம்

வழுதிதன் குலத்தில் வந்து வயங்குமன் னவனே யாகி
அழகினின் மிகுந்த தென்ன வரிவையர்க் கொருவ னுகிப்
பழுதறப் பரத நூலே யாய்ந்துட னுணர்ந்தோ னுகி
எழுகடல் வளேயும் ஞாலத் திறைவனு யிருப்பன் மாதோ.

தன்மகிழ் தனேயு நன்ருய்த் தகுந்தகன் னிறத்தோ னுகி
வன்மங்க ளேது மில்லா மனத்தனுய் வாகு ளானுய்க்
கன்மங்கள் சற்று மில்லாக் காகுத்த னெப்பா னுகி
இன்மங்க ளங்க ணன்ரு யியல்புடன் வகுக்க லாமே. 966

குலத்தினுற் பகையை வெல்லுங் குணத்தினுற் ரூனு மாரு நலத்தகு கொடையால் வன்மை நலத்தினுற் சகல வித்தை சொலத்தகும் தெளிவாற் கீர்த்தி துய்யவ னிருத்தங் கண்டு கலக்கமுள் குற்ற நீக்கிக் குணங்கொளுங் காவல் வேந்தே.

இதம்பெறக் குணபா னேக்கி யிருந்தரு ளந்த வேலே விதம்பெறுங் குமரர் மற்ற வெற்றிவா ளமைச்சர் சேனே திதம்பெறு மண்டலீகர் திரள்படைத் தலேவர் வேந்தர் பதம்பெறு வலது பாகம் பணிந்துசே வித்து நிற்க 968

மாதவர் புராண நூலோர் மாகதர் மற்ற நூலோர் கோதறு பரத மிக்கோர் குறித்திடுங் கணிதங் கற்ரூர் போதஞ்சே ரந்த ணுளர் புரோகிதர் நாட கத்தோர் தீதில்பா டகரெல் லோருஞ் சிறப்புட னிடத்தே நிற்க 969

ஒளிமணிக் கடகக் கையா லுபயசா மரைகள் வீச
அளிதிகழ் விரைம லர்ப்பந் தாலவட் டங்கண் ணுடி
தெளிதரு முடைவா ளேந்திச் சித்திர மடவார் சூழக்
களிமயிற் போலி ராச கன்னியர் குடபா னிற்க 970

பொருந்துசபா பதிக்குமுன்னம் புகழ்நடனந்
திகழரங்கப் புறம்பா னிற்கப்
பிரம்புகரந் தனிற்ருங்கிப் பேர்பெறுங்கட்
டியக்காரன் பிரியா நிற்கக்
கருந்தடங்கண் ணுர்நடன நடிக்குவகை
யுளமகிழ்ந்து காணும் வேந்தன்
திருந்திடுமவ் வரங்கத்தி னுற்புறத்துச்
சதுரங்க சேனை சூழ. 971

குலவிய குமரர் சேனை கொற்றவக் குலத்தி லுள்ளோர்
அலைவிலா மண்டலீக ரருந்திற லமைச்சர் சேனைத்
தலைவர்மெய்க் காவல் செய்வோர் தலம்புகழ் தானை யாரும்
வலமுற மதித்து வேந்தை வணங்கியே மகிழ்ந்து வைக. 972

இராஜ லக்ஷணம்

செய்யுட்கள் 965-972.

பாண்டிய வமிசத்தில் தோன்றி, விளங்குகின்ற அரசனுகி, அழகிய மாதரெல்லோரும் அதிசயிக்கும்படி அழகுடையவனுகி பரதநூலைப் பழுதற ஆராய்ந்த உணர்ச்சி பெற்றவனுகி, கடல்சூழும் பூமிக்கு இறைவனுயிருப்பான்.

தர்ம சிந்தனையும், நல்லமேலியும், மங்கலங்களில்லா மையும், அழகுடைமையும், இராமனையொத்த வீரியமும், நல்ல மங்களம் நிறைந்த இயல்புகளும் உடையனுய்,

குலப்பெருமையால் பகை வெற்றி, மாருக்குணம், கொடையும், வண்மைகலம், சகல வித்தைகள், சொல்லும் தெளிவும், கீர்த்தியும் இவற்றைப் பெற்றவனுய், நிருத்தம் கண்டு குற்றம் நீக்கிக் குணத்தைக் கொள்பவனுயும், உள்ளவன் மன்னன்.

இழக்கு நோக்கி விற்றிருக்க, அரசகுமாரர், அமைச்சர், சேனைகளையுடைய மண்டலீகர், படைத்தலைவர், வேந்தர் ஆகியோர் வலப்புறம் பணிந்து சேவித்து நிற்கவும்.

பெருந்தவசிகள், புராண நூலோர், மாகதர், மற்ற நூலோர், பரதம் மிக்கோர், கணிதம் கற்றோர், புலமை மிகுந்த அந்தணர், புரோகிதர், நாடகத்தோர், பாடகர் ஆகியோர் இடப்பக்கத்தே நிற்கவும்,

பணிப்பெண்கள் மணிவகையல்களணிந்த தம் கைகளால் சாமரைகள் வீச, மலர்ப்பந்து, ஆலவட்டம், கண்ணாடி, உடைவாள் இவற்றை ஏந்திக்கொண்டு அழகிய மடவார் சூழ, இராஜ கன்னியர் மேற்குப் பக்கத்தில் நிற்கவும்,

இவ்வாறு அமைந்த அரங்கப்புறத்திலே, கையில் பிரம்புடன் கட்டியக்காரன் அவனைப் பிரியாமல் நிற்க, அவ்வரங்கின் நாற்புறமும் சதுரங்க சேனைகள் சூழவும்,

அரசகுமாரர் சேனை, அரசகுலத்துள்ளோரான மண்டலீகர் சேனை, மந்திரிகள் சேனை, மெய்க்காவல் செய்வோர் சேனை (புறத்திலே) வலப் பக்கத்தில் நின்று அரசனை வணங்கி மகிழ்ந்து நிற்கவும்,

அரசன் கொலுவிருப்பான்.

மந்திரி லக்ஷணம்

உறுதிச்சொனற் குணங்கீர்த்தி யைக்கோரல்
பிறருடைய வுள்ளங் காணல்
மருவுநடு நிலைமைகுண தோஷபே
தங்தெரிதன் மகிழ்சிங் காரத்
துறுலீலை தனிலிச்சை நீதிநன்ம
னங்கல்வி யுகந்த வர்க்கு
அரசபே தாபேத மறிஞான
முடையவனே யமைச்ச னுமே. 973

சொல்லுறுதி, நற்குணம், கீர்த்தி விருப்பம், பிறர் உள்ளங் காணல், நடுவுநிலைமை, குணதோஷ பேதம் தெரிதல், சிருங்காரலீலை களில் இச்சை, நீதி, நல்லமனம், கல்வி, அரசர்க்கு உவப்புண்டாம்படி நடத்தல், பேதாபேதமறியும் ஞானம் இவற்றை உடையவனே அமைச்சனாவான்.

---

973. அபி. த. (ஆனந்தக்) பக். 33 அபி. த. (கோஷ்) 18.

சபா லக்ஷணம்

சத்திய மொழுக்க மறங்குணங் கீர்த்தி
மறைமொழிகள் சார்த்த னேமம்
எத்திசை மன்னரும் பரவல் வேதாந்தம்
வீணைகவி யிலக்க ணச்சிர்
ஒத்திடு சவுரியம் விளங்கன் மன்னமன்னர்
நிறைந்திருத் தலுண்மை யோர்தல்
பத்திய விப்பதி னேந்துஞ் சேர்ந்தவிடஞ்
சபையெனவே பகரு நூலே. 974

சத்தியம், ஒழுக்கம், அறம், குணம், கீர்த்தி, மறைமொழிகள் சார்தல், நியமம், எத்திசை மன்னரும் புகழ்தல், வேதாந்தம், வீணை ஞானம், கவியிலக்கணம், சவுரியம், மன்னர் நிறைந்திருத்தல், உண்மை ஓர்தல், பக்தி, இப்பதினேந்தும் நிறைந்த இடமே சபை யென்று நூல்கள் கூறும்.

சபாசப்தாங்க லக்ஷணம்

வித்துவான் கவிகள் வந்தி விகடஞ் சங்கீ தத்தோடு
முத்தருட் புராண முன்ஞண் மொழியிதி காச மென்னும்
பத்திசே ரிந்த வேழும் பகர்ந்தனர் சபைக்கு ரித்தாம்
சத்தாங் கமெனவல் லோர்கள் சாத்திரந் தன்னின் மாதோ.

வித்துவான், கவிகள், வந்தி (துதிபாடகன்) விகடம், சங்கீதம், புராணம், இதிகாசம், இவ்வேழும் சபைக்குரிய சப்தாங்கங்கள் எனச் சாத்திரத்தில் விதித்திருக்கிறார்கள்.

சபாமண்டபம்

உரையங் கத்தில் வடக்குமுகத் திலேனு
முற்றகீழ் முகத்திலேனும் துலங்குகின்ற
அரியா சனத்திற் சபாபதி யிருக்க
வலங்கரித் தவன்றேவி யிடத்திருக்கப்

'ஸபாலக்ஷணம்' என்னும் விஷயத்தைப் பற்றி அபி. நி. (ஆனந்தக்) பக். (32), அபி. நி. (கோஷ்) 19; ஸோமராஜதேவர் ஸம்மீரர் ஆகியோர் கூறியவற்றையும் காண்க. (பரதகோச. பக். 960).

பெருவலத் திலமைச்சன் வலமிடத் திற்கற்ற
பேரான கவிகா யகாளிருக்கப்
பிரகரு திற்புவி யரசர்கின் றிருத்தல்
பெற்றியாஞ் சபாமண் டபத்தின்சீ ரே. 976

அரங்கத்தின் வடக்கு முகத்திலேனும், கிழக்கு முகத்திலேனும் சிம்மாசனத்தின் மீது சபாபதி இருக்க, அவன் தேவி அலங்காரங் களுடன் அவன் இடப்பக்கத்தில் இருக்க, வலப்பக்கத்தில் அமைச்ச னும், வலமிடங்களில் கற்றபோர்களான கவி காயகர்களுமிருக்க, மற்றப் புவியரசர்கள் கின்றிருத்தல் சபாமண்டபத்தின் சீராகும்.

சபாநாயக லக்ஷணம்

சீமான் சகல சாஸ்திர முணர்ந்தவன்
கலாசோதனை தெரிந்த நிபுணன்
தீம்பா வமற்ற வனற்குணந் தயவுசத்
தியவாக் விதட்சண முளான்
பூமான் பிரசன்னமுகன் தருமசிந் தனைகீர்த்தி
பொறுமையா தரவை யுடையோன்
புண்ணியர் யாவரு மதித்திடு மீகை
யான்புகழ் சௌர்ய ஞானவுசிதன்
சேமவான் கீத வாத்ய நிருத்தச்
சுத்த தேசியத்தியல் பறிந்தோன்
செய்ய சரசம் பொறுமை வேடிக்கை
தனினினவு சென்றகன நயவிலாசன்
காமனே ரழகுடைய னுக முடையோ
னிலக்கண மிலக்கிய மறிந்தோன்
கனவான் ஸராதர மறிந்த சதுரன்
சபைக்கு அதிபனென் றோதுநூலே. 977

ஸ்ரீமான், சகல சாத்திரமுணர்ந்தவன், கலாசோதனை தெரிந்த நிபுணன், தீய பாவம் அற்றவன், நற்குணம், தயவு, சத்திய வாக்கு, தாட்சணியம் இவற்றையுடையவன், பூமான், பிரசன்ன முகன், தரும சிந்தனை, கீர்த்தி, பொறுமை, ஆதரவு உடையோன், புண்ணியர் யாவரும் மதித்திடும் ஈகையுடையான், புகழ், சௌர்யம், ஞானம் இவற்றிலுசிதன், க்ஷேமவான், கீத, வாத்ய, நிருத்த, சுத்த, தேசிய வகைகளறிந்தவன், சரசம், பொறுமை, வேடிக்கை இவற்றில் மனம்

செலுத்தும் கன நய விலாசமுடையவன், காமன் ஒத்த அழகுடைய வன், யுகமுடையவன், இலக்கண இலக்கியமறிந்தவன், கனவான், தராதரம் அறிந்த சதுரன், இத்தகையோன் சபைக்கு அதிபனுவான் என்று நூல்கள் கூறும்.

சபாநாதனிருப்பு

இந்த விதமா யிசைந்த சபைநாதன்
முந்திக் கிழக்கு முகமா யிருந்தவுடன்
உரவோ ரமைச்ச ரிசையுற்ற கவிவாணர்
இருபா னிறைந்தி ருப்பதே. 978

இந்த விதமாக அமைந்த சபைநாதன் முதலில் கிழக்குமுகமாக உட்கார்ந்தவுடன், வலிமை மிகுந்தோர் (தபசிகள் முதலானோர்), அமைச்சர், கவிவாணர், (முன் சொல்லியபடி) இரண்டு பக்கங்களிலும் நிறைந்திருப்பார்கள்.

சபையிலுள்ளோர் லக்ஷணம்

இரசிகள் கன்மஷ மில்லார் பொதுவர்
மேன்மையுள ரெழிற்சாவ தான முடையோர்
இணையிலாப் படர்நடன காய கர்களின்
மறதி மோச மெல்லாம் பொறுத்துப்
பரிவுட னீதி விவரிக்கு மறிவுடையர்
பாவா பாவ முணர்ச துரராய்ப்
பாங்கான குணமுடையர் காரியத் தைரியம்
பண்பு பெறும்வி நயமு டையோர்
திரமுடைய மதமாச் சரிய மிலாதவர்
களேற்றிட் டதுரு வாத மில்லார்
தீங்கற்ற நினைவுடைய ரெக்கா லுமுப
காரம் செய்கின்ற சித்த முற்றோர்

சபாநாயக லக்ஷணம் :—

ஸ. ர. 7 : 1345–1350

அபி. த. (ஆனந்த) பக். 33 (கோஷ்) 17.

வேமபூபாலன, கும்பன்; இவர்கள் கூறிய இலக்கணக்கள், பரதகோசம் 960 ஐயும் காண்க.

பெருமைபெறு சபைநா யகன்நினைவை யோர்ந்
துசிதம் பேசு வசனத் திறமையோர்
பேராத பொறுமை யோர்சபை யாள
ரென்னவே பேசு மிப்பரத நூலே. 979

இரசிகர்கள், மனக்கல்மஷமில்லாதவர், மேன்மையுள்ளவர், சாவ தானமுடையவர், இணையிலா நடன காயகர், மதி, மோசம் எல்லா வற்றையும் நீக்கி அன்புடன் நீதி கூறும் அறிவுடையவர், பாவ பாவம் உணரும் சதுரர், சிறந்த குணமுடையவர், மதமாச்சரியமில் லாதவர், துர்வாதமில்லாதார், தீங்கில்லாத எண்ணமுடையவர், எக் காலும் உபகாரம் செய்கின்ற சித்தமுற்றோர், சபாநாயகரின் மன மறிந்து இதமாகப் பேசும் சொல் வல்லமையுடையோர், அசையாத பொறுமையுடையவர், இத்தகையோரே சபையாளராவர் என்று பரத நூல் கூறும்.

சபையில் பாத்திரமிருக்கும் லக்ஷணம்

அரிதாஞ் சபைத்தலைவ னெதிரிற் பாத்திரநிற்
றலவள் வலப்புர மத்தளம்
அவளருகிற் சங்ககா ளவாத்யக் காரன்
அன்னவ ளிடப்பு றத்தில்
திரமுள்ள காயக னவன்பின் சுதிக்காரன்
சேர்ந்தருகி லாஸ்யக் காரன்
சீர்பெறும் பாத்திரத் தின்பின்னர் நட்டுவன்
தேனெனும் பரத சரணி
தெரிவித்து நிற்பனிச் செயலுடைய கானமும்
சீரான வாத்தி யங்களும்
செய்கின்ற நர்த்தனமு மபிநயாதி களெல்லாம்
திறம்பெற விருந்து என்னும்
பரிவுடன் கேட்டவர் புரிந்தவர்கள் சமுகசம்
பத்து சந்ததி யாயுளும்
பதமுடைய வாரோக்கிய மடைவ ரெனவேமுன்
பகர்ந்தனன் மதங்க முனியே. 980

சபைத்தலைவன் எதிரில் பாத்திரம் நிற்க, அவள் வலப்புறம் மத்தளம், அவளருகில் சங்க, காகள வாத்தியக்காரன், அவள் இடப்புறத்தில் காயகன், அவன்பின் சுருதிக்காரன், அவனருகில்

சேர்ந்த லாஸ்யக்காரன்; நிற்கப் பின் நட்டுவன், பரதசரணியைத் தெரிவித்துக்கொண்டு நிற்பான்:

இவ்வாறு நின்று, நர்த்தனத்தையும் அபிநயத்தையும் வாத்யங்களோடு செய்வதைத் திறமையுடன், விருந்தென்றெண்ணி, அன்புடன் கேட்டவர், செய்தவர்கள், சுமுக சம்பத்து, சந்ததி, ஆயுள், ஆரோக்கியமும் பெறுவர்.

இவ்வாறு கூறினவர் மதங்கமுனி.

சபைவணக்கம்

வேதங்கள் கொம்புகளாய் மேலாகுஞ் சாத்திரங்கள்
தாதுகள்வி ளங்குமலர்த் தாருகளாய்—நீதமுடன்
கற்றோரே தும்பிகளாய்க் கண்டசபா கற்பகத்தைப்
போற்றுவே னென்பாய்ப் புகழ்ந்து. 981

வேதங்கள் கிளைகளாகவும், சாத்திரங்கள் மலர்த்தாதுக்களாகவும், கற்றோர்கள் தும்பிகளாகவும் அமைந்த சபா கற்பக விருக்ஷத்தைப புகழ்ந்து போற்றுவேன்.

அரங்கபூமிலக்ஷணம்

நாற்கோணம் பொன்வடிவா கல்லலகா ரம்பீசம்
தேக்கும் பிரமனதி தெய்வமாம்—ஏற்கும்
அரங்கத் தலபூமிக் காமிலக்க ணந்தான்
குறையறவே நூலாய்ந்து கூறு. 982

பிரமன் அதிதெய்வமாம். (மூதலடிக்குப் பொருள் விளங்கவில்லை).

அரங்கபூமியைத் தொழுதல்

அரிபத்தி யுண்டாக்கி யழகியரத்
தினப்பணிபூ ணகில மாதே
பெருமிரத் தினந்தருந் தாயேகூர்மஞ்
சேடன்முடி பெரிதா மேரு
மருவியதிக் கயங்கடனைப் பூண்டவளே
ஐம்பூத மமைந்த மின்னே
பொறுமைகொள்வாய் நடனத்தி னடிநின்மேற்
படுங்குற்றம் போற்றி போற்றி. 983

980. சிலப். பக். 117, அபி. நா. ஆனந்த பக். 33, கோஷ். 20-23.
981. அபி. நா. கோஷ். 13; ஆனந்தக் பக். 34.

" அரி பக்தி உண்டாக்கி, அழகிய இரத்தினப் பணிகன் பூணும் பூம்மாதேவியே ! பெரிய இரத்தினங்களைத் தரும் தாயே ! கூர்மம், (ஆதி) சேஷன் முடியில் அமைந்தவளே ! மகமேருவை (மத்தியில்) உடையவளே ! திக்கஜங்களைக் கொண்டவளே ! ஐம்பூதங்களமைந்த மின்னே ! பொறுமை கொள்வாய் ! நடனத்தில் என் பாதங்கள் உன் மேல் படுங் குற்றங்களைப் பொறுத்துப் பாதுகாப்பாய் ! பாதுகாப்பாய் !

அரங்கத்தில் பாத்திரம் நிற்கும் லக்ஷணம்

நடனத்திற் கானவிட மரங்கமென்று
பரவவரங் கருவின் மின்னுள்
அடுத்திருத்தல் நட்டுவனும் வலப்புறத்திற்
ரூளகிரி அடுத்த பக்கத்
திடத்தினின்மத் தளம்வேணு விவர்கணடுச்
சங்கித மிதமாய்க் கூடும்
படிவான சுதியுநிற்ப தாகநர்த்த
னஞ்செய்தற் பண்பாம் பாரே. 984

நடனத்திற்கு ஆன இடம் அரங்கம் : அந்த அரங்க நடுவில் மின்னற் கொடிபோன்ற நர்த்தகி நிற்க, அவளை அடுத்து நட்டுவனும், வலப்புறத்தில் தாளகிரியும், இடத்தில் மத்தளம், வேணுக் காரர்களும், இவர்களின் நடுவில் சங்கீதம், படிவான சுருதி இவைகளும் நிற்ப, நர்த்தனம் செய்தல் பண்பாகும்.

அரங்கதேவஸ்துதி

பரதகுல பாக்கியமே பாவரசா னந்தத்
துருவா யெழுந்த வொளியே—மருவுசக
மோகனமே யின்ப முதலே யரங்கநிலை
யாகவள ரம்மையெனை யாள். 985

பரதகுல பாக்கியமே ! பாவ, ரஸ, ஆனந்த உருவாய் எழுந்த ஒளியே, ஜகன் மோகனமே ! இன்பமுதலே! அரங்க நிலையாக வளரும் அம்மையே ! என்னை ஆள்வாயாக "

வே. வேறு

விக்கின மின்றி யுலகெலாங் காக்க
விண்ணவ ரதிசயங் கொள்ள
விருப்பம தாக வடுத்தவர் வாழ
மேன்மைய தாஞ்சபை நாதன்
திக்குறுங் கீர்த்தி யுடன்வளர்ந் தேறச்
சீர்கொளும் பாத்திரஞ் செழிக்கத்
தெளிவதா யாசா னேதிய சிட்சைத்
திறம்பெற வுன்னியுந் தனுக்கு
முக்கிய புட்பாஞ் சலிசெய்தே னெனவே
முழங்கவே யரங்கதே வதையை
மொழிகளா னடன முதலிலே துதித்து
முடிந்தமே னுட்டியங் கீதம்
பக்குவந் தோய்ந்த வபிநயம் பனுவற்
பாவமுந் தெரிந்திட நடித்தல்
பண்பதா மெனவே வழுத்தினர் மேலாம்
பரதநூ லாய்ந்துணர்ந் தவரே. 986

"உலகமெல்லாம் விக்கினமின்றிக் காக்க, தேவர்கள் அதிசயிக்க, அடுத்தோ ரெல்லோரும் வாழ, சபாநாதனின் கீர்த்தி திக்கெல்லாம் படர, பாத்திரம் செழிக்க, ஆசாரியன் கற்பித்த சிட்சை திறம்பெற, இவற்றையெல்லாம் பிரார்த்தித்து, உனக்கு முக்கிய புஷ்பாஞ்சலி செய்தேன்" என்று அரங்கதேவதையைப் பாடித் துதித்து முடிந்த பிறகு, நாட்டியம், கீதம், அபிநயம், பாடல், பாவம் இவற்றைத் தெரிந்திட நடித்தல் பண்பாகும் என்று பரதநூல் ஆராய்ந்துணர்ந்தோர் கூறினர்.

பாத்திரநட்டுவ பாந்தவ்யம்

நிர்த்தன ரம்பஞ் செய்யும்வரை யாசா
னீள்ரச பாவசின் னங்கள்
நிகழ்ந்திடு மங்கவின் னியாசங்கள்
நிறைகாட் டும்வரை யிலாமாமன்
விர்த்தியா மரங்கந் தனிலாடும் போது
விள்ளுவ ருடன்பிறப் பென்ன
மிகுசபைத் தலைவ னிடம்பாவம் பிடிக்கில்
விளங்குவன் றந்தையா மெனவே

வர்த்தமாம் வீட்டி லிருந்தரங் கம்போ
யகம்வரும் வரையிலீன் றெடுத்த
வன்னையா மென்ப ராகவிவ் வைந்து
மாடிடும் பாத்திரத் திற்குக்
கீர்த்தியாய் விளங்கு நட்டுவ னுகுங்
கிளையென நூன்முறை தெரிந்தோர்
கிளர்த்தினர் கிரியும் யானையின் முடியுங்
கிளர்ந்தெழுந் தடதன மாதே. 987

கிர்த்தம் ஆரம்பம் செய்யும் வரையில் ஆசான் ; ரசபாவ சின்னங் கள் காட்டும் அங்க வின்யாஸங்களின் நிறைவு காட்டும் வரையில் மாமன் ; அரங்கத்தில் ஆடும்போது உடன்பிறப்பு ; சபைத் தலைவ னிடம் பாவம் பிடிக்கும்போது தந்தை ; விட்டிலிருந்து அரங்கம்போய் வீட்டுக்குத் திரும்பும் வரையில் தாய் ;

இவ்வாறு ஆடும் பாத்திரத்திற்கு நட்டுவன் ஐந்து வித்தங்களாக அமைகிறான். இவையே அவர்களுக்கிடையே யுள்ள பாந்தவ்யம்.

பாத்திரமேள பாந்தவ்யம்

பாத்திரத்தின் றந்தையாம் மிருதங் கந்தாயாம்
நேத்திரமாந் தம்புருவு நேர்கீதம்—பூத்தமலர்
மாதே யுடன்பிறப்பா மாறுத காளலய
மாதி முதலா யறி. 988

பாத்திரத்தின் தந்தை மிருதங்கம் ; தாய் தம்புரு ; தாளலய மாதி கீதம் உடன் பிறப்பு.

பாத்திரசொரூப லக்ஷணம்

மருங்குக்குக் கீழயனு மால்தோ ளளவும்
இருங்கணமே சென்னியள வீச—னெருங்குதனம்
வண்டணியும் பூங்குழலாள் வந்தாட வேயிருந்த
மண்டலமே லிங்கவடி வாம். 989

ஆடும் பாத்திரம் லிங்க வடிவு ; அவள் இடுப்புக்குக் கீழ் பிரமன் ; தோள் அளவும் திருமால் ; தலை வரையில் கணங்கள் ; தனம் ஈசன்.

கூத்தின் உறுப்புக்கள்

மண்டலங்க ளாறும் வருகரண நூற்றெட்டு
மண்டவரு தானகமோ ரைம்பத்தொன்—பண்டே
வருசாரி யீரெட்டும் வட்டமே லாகக்
குருசாதி நூலுரைத்த கூத்து. 990

கூத்தில் வரும் மண்டலங்கள் ஆறு; கரணம் நூற்றெட்டு தானகம் ஐம்பத்தொன்று; சாரி பதினெட்டு.

நாடக அரங்கம் முதலியன முற்றும்.

---

13. நாட்டியக்கிரமம்

கணபதி பூஜை

முந்தவே கணபதிக்கு முரசுடனே
வேத்திய முழங்கி வானம்
சிந்தைமகிழ் பூமிக்கு மவ்வவ்வாத்
தியமுழங்கிச் சிந்தை செய்து
அந்தமிகுங் குருமொழியை மனங்கொண்டு
சுகம்பெறவே யாலா பித்துப்
பந்தமுறப் பாடுவது பரம்பொருளுக்
கேற்குமெனப் பகரு நூலே. 991

முதலில் கணபதிக்கு முரசு வாத்தியத்துடன் நைவேத்தியம் செய்து, வானத்திற்கும் பூமிக்கும் அவ்வவ்வாத்தியம் முழங்கித் தியானித்து, குருமொழியை மனத்திற்கொண்டு, சுகமாக ஆலாபனம் செய்து, கட்டுப்பாட்டுடன் பாடுவது பரம்பொருளுக்கு ஏற்கும் என்று நூல்கள் கூறும்.

மண்டிலம் பதினெண்டு (சிலப் : 3 : 145).

கரணம் நூற்றெட்டு (சிலப் : உரை. பக். 80)

தானகம்—ஸ்தானம் : இதன் விவரத்தை அனுபந்தச் செய்யுட்களாலறிக.

சாரி முப்பத்திரண்டென்றும் (நா. சா. xi : 7–12) கூறுவர்.

நா. சா. (xi, xii) சாரி மண்டலங்கள் இவற்றை விளக்கிக் கூறும்.

நாட்டியக்கிரமம்

முன்னோர்க ணடனத் துக்காய் மொழிந்தகா ரியச்சொ றோந்து
மன்னிய விஷ்ட தெய்வ முதற்சபை வணக்கஞ் செய்து
உன்னியே நடனஞ் செய்த லுத்தம மென்று மேலோர்
நண்ணுநாட் டியக்கிரமத்தை நவின்றன ரறிந்து கொள்ளே.

நாட்டியமேளக்கோவை

தாக்குமத் தளமே சல்லி யிடக்கைதண் ணுமையு டுக்கை
வாக்கமை கரடி காளம் வழங்கிய முபாங்கஞ் சங்கம்
தூக்கிய தாளந் தண்டி சுருதியாள் வீணை கண்டம்
தேக்கிய வெக்கத் தாளஞ் செவ்வையிற் சிலம்பும் போது

நற்றக னிடக்கை சல்லி நவின்றிடும் பாடல் கற்றோன்
வெற்றிசே ரரங்க மாதர் மின்னுறச் சிறுவர் வீணை
முற்றியா மிராவ ணஸ்த முகவீணை வேணு நாத
முற்றபல் வீணை சந்த்ர னுடல்மத் தளமே தாளம் 994

சீர்பெற்ற வரங்கத் தேறித் திகழ்தரு கருவி யைந்து
பேர்பெற்ற மத்த ளத்திற் பிறங்கிய வோசை மேலாய்
ஏர்பெற்ற கருவி யெல்லா மிசைந்தமத் தளத்திற் கூட்டி
நேர்பெற்ற மத்தி மாதி காயக னின்று பாட 995

அங்கண்வா ச்சியங்க ளோசை யடங்கலு மடங்கிப் பின்னர்
வங்கிய முபாங்க மூத மாகதர் வணங்கி மாலோன்
சங்கரன் றன்னைப் போற்றித் தலம்புகழ் மத்தி மாதித்
துங்கவ ளரப்பங் கீதந் தொடங்கிமுன் பாடு மெல்லை 996

மூவைந்து பேரு நன்ரூய் முறைபிறை போலே நிற்கக்
காவலன் முன்னீரைந்து கதித்திடு முழத்திற் கீழ்பால்
தேவலோ கத்த ணங்கின் ஜகத்தணங் கழகின் மிக்க
பூவைமூ வேழு கீக்கிப் பொலிந்தனள் நடன சாலை. 997

நாட்டியக்கிரமம்

முன்னோர்கள் நடனத்துக்காகச் சொல்லி வைத்த முறைகளை மனத்திற்கொண்டு, இஷ்டதெய்வத்தையும் சபையையும் வணங்கி, நினைப்புடன் நடனம் செய்தல் உத்தமம் என்று மேலோர்கள் நாட்டியக் கிரமம் கூறியுள்ளார்கள்.

நாட்டியமேளக்கோவை

மத்தளம், சல்லி, இடக்கை, தண்ணுமை, உடுக்கை, கரடி, காளம், பிற உபாங்கங்கள், சங்கு, தாளம், தண்டி, சுருதி, வீணை, எக்கத் தாளம் ஆகியவை செவ்வையாய் ஒலிக்கும்போது,

இடக்கை, சல்லி, பாடகன், அரங்கமாதர், சிறுவர், வீணை, இராவணஸ்தம், முகவீணை, வேணு, பலவீணைகள், சந்திரனுடல், மத்தளம், தாளம்,

மேலே சொல்லப்பெற்றவையுடையவர்கள் அரங்கத்தின்மீது நின்றபின், மத்தள ஓசையில் இணைந்து ஐந்து கருவிகளும் ஒலிக்க, மத்தள ஓசை மேலாக அமைய, காயகன் மத்திமாவதி பாடவும்,

வாத்தியங்கள் ஓசை முழுவதும் அடங்கிப் பிறகு, உபாங்கமான குழல்ஊத, மாகதர் வணங்கித் திருமாலையும் சங்கரனையும் ஸ்தோத்திரித்து, மத்திமாவதியிலேயே கீதம் தொடங்கிப் பாடும்போது,

பதினைந்து பேர்களும் பிறைச்சந்திர வட்டம்போல் வளைந்து நிற்க, அரசன்முன் பத்து முழங்களுக்குக் கீழ்பால், தேவப்பெண்களையும் பூலோகப்பெண்களையும் மிஞ்சிய அழகுவாய்ந்த ஆடல்பெண் இருபத்தொன்றும் (குற்றங்கள்) நீக்கி விளங்குவாள்.

நாட்டியக்கிரமம் முற்றும்.

---

14. பெண்களின் வகை

நாட்டிய உத்தம மத்திம அதமதேசப்பெண்

உத்தமமா நிருத்தமது உத்தரதே சத்தாகு மோதுகின்ற
மத்திமமா நிருத்தமது மத்திமதே சத்தாகு மற்றுமிந்தச்
சாத்திரத்திற் சொல்லதமந் தட்சணதே சத்தாகுந் தாசிமின்கள்
உத்தமமத் திமமதமம் பெண்களா கும்மெனவே வோதுநூலே.

உத்தரதேச நிருத்தம் உத்தமமாகும்; மத்திமதேச நிருத்தம் மத்திமமாகும்; தட்சிணதேச நிருத்தம் அதமமாகும். தாசிகள் உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்று பிரிவினையுடையவர்களும் ஆவர் என்று நூல்கள் கூறும்.

---

996. கடைசி அடியின் பொருள் விளக்கமாயில்லை.

நாட்டியப்பெண் வயது

ஐந்து வயதுமுத லைம்பதா மாண்டுவரை
எந்தவித மாது மிணங்கவே—விந்தையதாம்
நாட்டியமு ழங்கலாக வின்றதற்கு மீதாகு
நாட்டியமா காதெனவே நாட்டு. 999

ஐந்து வயது முதல் ஐம்பதாம் ஆண்டுவரையில் எந்தவிதப் பெண்டிரும நாட்டியத்துக்கு உரியவராவர்; அந்த எல்லைக்கு மீறினவர் நாட்டியத்துக்கு ஆகார்.

பெண்பருவம்

பேதைவய தேழாம் பெதும்பைபதி னொன்றுமங்கை
மாதே பதின்மூன்று கும்மடந்தை—யோதுபதி
னொறிவை யாமிருபத் தைந்துமுப்பத் தொன்தெரிவை
பேரிளம்பெண் ணூற்பதெனப் பேசு. 1000

பேதைக்கு வயது ஏழு; பெதும்பைக்குப் பதினொன்று; மங்கைக்குப் பதின்மூன்று, மடந்தைக்குப் பதினாறு; அரிவைக்கு இருபத்தைந்து; தெரிவைக்கு முப்பத்தொன்று; பேரிளம்பெண் ணுக்கு நூற்பது.

மணப்பெண் லக்ஷணம்

எண்வயதாங் கன்னி யிசையுமோன்ப தாம்வயதின்
பெண்ணுக்கு ரோகிணியென் பேராகும்—வண்ணமிசை
மாகிலாப் பத்து வயதிற் கவுரியப்பாற்
றூசுடைய பெண்ணெனவே சொல். 1001

எட்டுப் பிராயமுடையவள் கன்னி; ஒன்பது பிராயமுடையவள் ரோகிணி; பத்து வயதுடையவள் கவுரி; அப்பால் மணலக்ஷணம் கடந்தவளாவாள்.

மணப்பெண்பருவம்

உத்தம மாங்கன்னி மத்திம மு ரோகிணியாம்
பத்துவய நிற்பெண்ணும் பாரதமர்—மூத்துநகை
மாதே யிதி லுத்த மாமணக்குங் கன்னிமற்ற
மீதிரண்டுங் கூடாதாய் விள். 1002

மணத்துக்கு உத்தம பருவம் கன்னி; மத்திமம் உரோகிணி; அதமம் பத்து வயதுப்பெண். இவர்களுள் கன்னிப்பருவமே மணத்துக்கு மிகப்பொருத்தமானது; மற்றவர் கூடாதவர்.

பெண்களின்வகை முற்றும்.

15. சில நாட்டிய வகைகள் முதலியன

கத்தி நாட்டியம்

இசையநாற் கால்க ணைட்டி யீராறங் குலத்தின் மேலே
பசைகொளு மீரெண் கத்தி யாங்குடன் கட்டி யப்பா
லேசிமைய நுனியி னின்று ஆடக்கா மார்த்த மோக்கம்
ஏசமதாய்த் தருமென் றீச னியம்பின னந்திக் கன்றே. 1003

நான்கு கால்கள் நாட்டி, பன்னிரண்டு அங்குலங்களுக்கு மேலே உள்ள பதினாறு கத்திகளைக் கட்டி, அவற்றின் நுனியில் நின்று ஆடக் காமார்த்த மோக்ஷம் தரும் என்று ஈசன் நந்திக்குக் கூறினன்.

பேரணி நாட்டியம்

பாவமதி னறிதா ளத்தி னைடே
பகர்தத்தித் தொன்னமென் சொல்லை
ஏவிமட் கலத்தின் மீதினி னின்று
ஏகதாளத் தையோர் கையின்
மேவிமற் றொருகை தனிலன்ய தாளம்
விளங்கவே நடிப்பதா மெனவே
கூவிளம் புனையுமர னந்தி கேட்கக்
கூறின னிதைமனங் கொள்ளே. 1004

பாவம், அதனைத் தெரிவிக்கும் தாளம் இவற்றினைடே, 'தத் தித்தொன்னம்' என்ற சொல்லைச் சொல்லிக் கொண்டு, மட்கலத் தின்மீது நின்று, ஒரு கையில் ஏகதாளமும் மற்றொரு கையில் அன்ய தாளமும் விளங்கும்படி நடிப்பது பேரணி நாட்டியம் என்று சிவபெருமான் நந்திக்குக் கூறினன்.

நாட்டிய ஆரம்ப அந்திய வந்தனம்

இரண்டுகை யிடுப்பில் வைத்துட னிமிர்ந்து
இரண்டுதாள் சேரவே நின்று
இரண்டுகை சிகர மாக்கியே மார்பி
லியற்கையாய் நிறுத்திக்கா லிரண்டும்
உரம்பெறத் தட்டிப் பின்னொரு கையை
டோளமாய்ப் பூமியைத் தொட்டுத்
திரங்கொள நிமிர்ந்து வணங்கல் நாட்டியத்திற்
செயுமாதி யந்த்யவந் தனமே. 1005

இரண்டு கைகளை இடுப்பில் வைத்து, நிமிர்ந்து, இரண்டு பாதங்களும் சேர நின்று, இரண்டு கைகளைச் சிகரங்களாக்கி மார்பில் இயற்கையாய் நிறுத்தி, கால்கள் இரண்டையும் உரமாகத் தட்டி, ஒரு கையை டோளமாய்ப் பூமியைத் தொட்டு, பிறகு நன்றாக நிமிர்ந்து வணங்கல் நாட்டியத்தில் ஆதியிலும் அந்தத்திலும் செய்யும் வந்தனங்களாகும்.

உட்கார்ந்த அபிநயம்

இரண்டு பாதங்கள் சம்மணங் கூட்டி
யிருதுடை படிய விருந்து
இரண்டுகை யிடுப்பில் வைத்துமார் விரித்து
மிருபுயங் களையு முயர்த்தித்
திரம்பெறு மிடக்கை யிடுப்பினில் வைத்துச்
சிகரமாய் வலக்கரங் காட்டிச்
சிரமுகங் களங்கண் சம்ப்ரசா ரிதமாய்ச்
செய்தபி நயித்திட லென்னே. 1006

இரண்டு பாதங்களைச் சம்மணம் கூட்டி, இரு துடைகள் படிய இருந்து, இரண்டு கைகளை இடுப்பில் வைத்து, மார்பு விரித்து, இரு புஜங்களையும் உயர்த்தி, (பிறகு) இடக்கையை இடுப்பில் வைத்து, வலக்கையைச் சிகரமாய்க் காட்டி, சிரம், முகம், கழுத்து, கண்கள் சம்ப்ரசாரிதமாய்ச் செய்து அபிநயித்தல்.

நின்ற அபிநயம்

முன்னுரை செய்த வவயவங் களுடன்
முழங்கிய கருடபா தமதாய்
உன்னியே பனிரண் டங்குல வளவா
[1]முயர கலத்தி லிருந்து
துன்னிய முழந்தா ளுயர்த்தியோர் காலைத்
தூக்கிக்குஞ் சிதமாய்த் தட்டி
கின்னய மாக நின்றபி நயித்த
னீதியா யுரைத்தனர் நூலோர். 1007

---

1. 'உயர் தலத்திலிருந்து' என்ற பாடமிருப்பின் பொருள் விளங்கும்.

மேலே சொன்ன அவயவங்களுடன், கருடபாதமாக, பன்னிரண்டங்குல அளவாய் உயரகலத்திலிருந்து(?), முழந்தாள் உயர்த்தி, ஒரு காலைத் தூக்கிக் குஞ்சிதமாய்த் தட்டி, நிர்ணயமாக நின்று அபிநயித்தல் என்று நூலோர் உரைத்தனர்.

நாட்டியஞ்செய்யும் ஸ்தலங்களின் லக்ஷணம்

நாட்டிய மென்னு மிந்த நற்றொழில் தன்னை நேர்ந்து
ஈட்டம தாகச் செய்யு மிடமது விளம்புங் காலை
கூட்டமா மறையோ ரில்லங் குடிபுகு மிடத்தி னும்பேர்
நாட்டுமா சற்ற சோதி வழங்குமி டத்து நண்ணே. 1008

சுகசோப னத்தி னும்பேர் சுதன்பெறு சங்கி னுஞ்சீர்
மகதேவர் கொலுவி னுந்தார் மன்னர்தங் கொலுக்கூட் டத்து
மகமகிழ் திருநா டன்னி லபிடேகஞ் செயுமி டத்தும்
மகிமைசேர் மகுடஞ் சூட்டு மன்னர்க ளிடத்தும் பாரே. 1009

தேவர்கள் பொருந்தி டும்யாத் திரைசெய்யு மிடத்துங் கையால்
பூவையர்க் குகந்து மங்கி லியம்பூட்டு மிடத்தும் விந்தை
மேவுபட் டணங்கி ரகப்ர வேசமா கியவி டத்தும்
தாவிய ருதுவாங் கன்னி ருதுசாந்தி தலத்து மென்னே 1010

மறையோர்கள் புகுத்த பின்னு மண்டபந் தனிலு மென்றும்
குறைவில்லா தேயா கங்கள் கூடிய விடத்தே மிக்கப்
பொறுவிலாப் புண்ய காலம் பொருந்துமவ் வேளை தன்னு
மறமுணர் வேந்தர் செய்யும் யாத்திரை தனிலு மென்னே.

நாடகத்துக்குரிய தலங்கள்

செய்யுட்கள் 1008-11

நாட்டியமென்ற இந்த நல்ல தொழிலை ஆராய்ந்து செய்யுமிடங்களாவன :—

மறையோர்கள் கூட்டமாக இருக்கும் குடியிருப்பிடங்களும், புகழ் வரக்கூடிய ஜோதி வழங்கும் பிற இடங்களும்,

சுகசோபன இடங்கள், பிள்ளைபெறும் இடங்கள், மகாதேவர் கொலு, மன்னர்களின் கொலுக்கூடம், திருநாட்களில் அபிஷேகம் நடக்கும் இடங்கள், பட்டாபிஷேக இடங்கள்,

யாத்திரை செய்யும் இவ்யதேசங்கள், திருமங்கலியம் சூட்டுமிடங்கள், பட்டணப்பிரவேசம், இரகப்பிரவேச சமயங்கள், ருதுசாந்தித்தலம்,

பிராமண போஜனத்துக்குப்பின் அவர்கள் உட்காருமிடம், யாக சாலை, புண்யகாலம், அரசர்களின் யுத்தயாத்திரை சமயங்கள் இவை நாட்டியத்திற்குரிய தலங்களும் நேரங்களுமாம்.

நாட்டியப்பலன்

வேதத்தி லுதித்த விந்தச் சங்கீதம்
விப்பிர ரிருவர்கள் கூடி
வீணையின் முகமாய் வேள்வியா மசுவ
மேதமண் டபந்தனிற் கானம்
நீதியாய்ச் செய்யி லுலச்வரிய மதாம்
நிறைகொளும் வாத்திய முழக்கில்
நேர்மைசேர் சுபமாங் குறைவின் றிசைய
நிருத்தஞ் செய்திடி லாயுளுண்டாம்
ஓதிய தாள மடைவுடன் கொள்ள
வுலகெலா மாட்கையா மிதனை
உறுதிசேர் மனத்தா லுணர்ந்து சாத்திரத்திற்
குற்றமார்க் கந்தனை யோர்ந்து
மேதினி தன்னி லியாவரு மறிய
விளம்புவை பூரணை யுதித்த
விதுதனைத் திகழ்ந்து கதிகொள வொளிர்ந்து
வேட்கைசேர் முகத்துடை மானே. 1012

வேதத்தில் உதித்த இச்சங்கீதத்தை இருவிப்பிரர்கள் சேர்ந்து வீணைமுகமாக அசுவமேத யாக மண்டபத்தில் கானம் செய்ய (உலகில்) ஐசுவரியம் பெருகும்; வாத்தியங்கள் முழங்கில் சுபம்; அவற்றோடு நிருத்தம் செய்யில் ஆயுள் பெருகும்; தாளத்துடன் அடைவு செய்ய உலகை ஆளும் சக்தி உண்டாகும். இதை நன்றாக உணர்ந்து சாத்திரத்திற்கொத்த மார்க்கத்தைத் தெரிந்து கொண்டு உலகம் விளங்கக் கூறுவாய்.

நாட்டியத்தின் அசுபபலன்

கானம தீன மாகின் மிடியெனக் கருதும் வாத்யம்
ஈனம தாகிற் கீர்த்தி யிலைநாட்டிய மீன மாகில்
தானமா ரோக்ய நட்டந் தாளவீ னமதே யாகில்
தேனுறு மொழியி னுளே சுகமில்லை யென்று தேரே. 1013

கானம் ஈனமாகில் வறுமையுண்டாம்; வாத்யம் ஈனமாகில் கீர்த்தி யில்லை; நாட்டியம் ஈனமாகில் ஸ்தானம், ஆரோக்யம் நஷ்டமாகும்; தாளம் ஈனமாகில் சுகம் இல்லை.

நீசநாட்டியம்

பேசுமே யிஷ்ட தெய்வப் பிரார்த்தனைச் சபைவ ணக்கம்
நேசமாய்ச் செய்யா நிர்த்த நீசநாட் டியம தாகும்
பாசுள விந்நிருத் தத்தைப் பார்ப்போர்சந் ததிக ளற்றுக்
கூசிய பசுவின் யோனி பிறப்பர்க ளென்னும் நூலே. 1014

இஷ்ட தெய்வப் பிரார்த்தனை, சபைவணக்கம் இவற்றை உள்ளன்புடன் செய்யாத நிருத்தம் நீச நாட்டியம் எனப்படும். இதனைப் பார்ப்பவர்கள் சந்ததிகள் அற்று, விலங்குகளாய்ப் பிறப்பர் என்று நூல்கள் கூறும்.

சாபவிவரம்

கிருதயு கத்திற் றோன்றக் கிட்டுமே நொடிக்கு ளேதான்
வருதிரே தாயு கத்தில் வளர்பத்து நாளே யாகும்
நிரைதுவா பரத்தின் மாத நீள்கலி வருட மென்றே
தரணியிற் பராச ரன்சொற் சாபத்தின் விப ரமே. 1015

கிருதயுகத்தில் சாபம் நொடிக்குள்ளே பலிக்கும்; திரேதாயுகத்தில் 10 நாளில் பலிக்கும்; துவாபரத்தில் ஒரு மாதத்திலும், கலியில் ஒரு வருடத்திலும் பலிக்கும். இவ்வாறு பராசரர் சாபத்தின் விவரம் கூறுகிறார்.

சில நாட்டியவகைகள் முதலியன முற்றும்.

---

16. விருது லக்ஷணம் முதலியன

தேவதைகள்

விருதெனுஞ்சொன் மூன்றெழுத்திற் கதிதெய்வங்
களின்விவரம் விள்ளக் கேண்மின்
திரமுறு விகாரமதே வீமனும்
ருகாரமு ருத்திரனுந் துர்க்கை
மருவிய துகார மதாமெனப்
பரதநூல் கற்றோர் வகைதெரிந்து
உரைசெய்தார் முறைப்படியே யழகியசென்'
கமலத்தி லுதித்த மாதே. 1016

விருது என்பதில் உள்ள 3 எழுத்துக்களுள் வி என்பதன் அதிதெய்வம் வீமன்; ரு க்கு ருத்திரன்; து வுக்குத் துர்க்கை.

விருது—நிறம், சாதி

பொன்மைவி காரமாகும் பொருருகா ரஞ்சி வப்பாம்
கன்மையா நீல வர்ண ரவிலுந்து காரமாகு
மின்மைவி காரஞ் சித்தி நியதாஞ்சங் கினிரு காரம்
வன்மைத்து காரமத்தினி யதாக வழுத்துஞ் சாதி. 1017

நிறம்	சாதி
வி—பொன்மை	சித்தினி
ரு—சிவப்பு	சங்கினி
து—நீலம்	அத்தினி.

விருதுகளணியுமிடங்கள்

புயநடு வணியி லிருடிகண் மகிழ்வர்
பொருந்திய வயிற்றின்மீ தணிந்தால்
புகழுவர் நட்சத்திர தேவர் கணைக்கால்
பொருத்தவச் சுவினிதே வர்க்காம்
நியமமாய் முழந்தாள ணிந்திட வியாழனேர்
பாதங்க ளிலதைப் பூண்டால்
நீதியாம் வருணன் கான்முழி யணிந்தா
னேர்கண தேவர்கண் மகிழ்வர்
பயன்படு பாத முதலங்க ளெல்லாம்
பரவுமித் தேவர்கண் மற்றும்
பகருவர் சென்னி தன்னி லணிந்திடவப்
பரமன்மெய்த் திடுவனென் றிதனைத்
தயவுடன் முன்னுட் பாவலர் நூலிற்
சாற்றின ரிம்முறை தெரிந்து
தரணியோர்க் குரைப்பாய் களங்கமில் லாத
சசிநிகர் முகமொளிர் மாதே. 1018

புயநடுவில் அணிந்தால் இருடிகள் மகிழ்வர்; வயிற்றின்மீது அணிந்தால் நட்சத்திரதேவர் புகழ்வர்; கணைக்காலில் பொருத்த அசுவனிதேவர்க்கு மகிழ்ச்சியாம்; முழந்தாளில் அணிந்திட வியாழன் மகிழ்வன்; பாதங்களில் பூண்டால் வருணனுக்கு மகிழ்ச்சி.

ஆகும். கால் மு(வி)ழியில் அணிந்தால் கணதேவர்கள் மகிழ்வர். இனி, பாதம் முதல் மேல் அங்கங்களுக்கு இவ்வாறு தேவர்கள் மகிழ, தலையில் அணிந்திட்டால் பரமனுக்கு மகிழ்ச்சி யுண்டாகும்.

விருதுகளும் அணிபவர்களும்

விருது நான்கு விதமதாம் பெயர்கள்
விள்சகங் குலசலாங் கிகமாய்
மேதினி யாள்வோர்க் காஞ்சகத் தென்னும்
விருதெலாங் கற்றுணர்ந் தோர்க்கு
அருமைசேர் குலமென் றோதிய விருதா
மன்யோன்யஞ் சரியெனக் கற்றோர்
ணிவது சலமென் றோதிய விருதா
மகிலமீ தொருவனே யாகில்
திரமெனப் பலவாம் வித்தைகள் கற்றோர்க்கு
செப்புவ ராங்கிக விருதை
செப்புமிவ் விருதினு ருவங்கேண் முத்துச்
சீர்பெறு மங்குசம் வர்ணம்
மருவிய வாடை மணிவிடை கொண்ட
மாவுடன் பாதுகை கடகம்
வளமைசேர் சல்லிதீ வட்டி யென்ன
வழுத்தினர் விருதினு கரமே. 1019

விருதுகள் நான்குவிதம்: சகம், குலம், சலம், ஆங்கிகம். **சகம்** என்ற விருது உலகாள்பவர்களுக்குரியது; எல்லாம் கற்றுணர்ந்தோர் அணிவது **குலம்** என்ற விருது; இரண்டுபேர் சரிநிகராகக் கற்றவர் அணிவது **சலம்** என்ற விருது; உலகத்தில் இவன் ஒருவனே என்று சொல்லத்தக்கவாறு பலவித்தைகள் கற்றவர் அணிவது **ஆங்கிகம்** என்ற விருது.

இவ்விருதுகள்: முத்துக்கட்டிய அங்குசம், வர்ணம் தீட்டிய ஆடை, மணிகட்டிய யாணை, பாதுகை, கடகம், சல்லி, தீவட்டி ஆகும்.

பரதம் என்பதற்கு லக்ஷணம்

பகரமே பிரமன் மாயன் பண்பென்ப ரகர மாகும்
தகரமே யீசன் மவ்வுஞ் சத்தியின் கூற தாகு
மகரமே யுயிர்ப்படைத்த லழித்தன்முத் தொழிலாய்ச் சொன்னன்
சிகரமா மலைய மர்ந்த செந்தமிழ் முனிவன் றானே. 1020

செவ்விய பரத மென்னுஞ் செப்புகா லெழுத்து ளந்தம்
மவ்வெனு மொற்றே மூல மந்திரப் பொருள தாகும்
எவ்வமில் பார்நீர் தீகாற் றெழில்வான மென்ப தண்மை
அவ்வெனு மாதி யோர்க்கு மனுதிசத் திக்கும் வித்தே. 1021

ப, பிரமன்; ர, மாயன்; த, ஈசன், ம் சத்தி. இவற்றுள் மகரம் உயிர்களைப் படைத்தல் (காத்தல்) அழித்தல் ஆகிய முத்தொழிலும் ஆகும்; இவ்வாறு சொன்னவர் அகஸ்தியர்.

பரதம் என்ற நான்கெழுத்துச் சொல்லில் ம் மூலமந்திரப் பொருளாம்; அது பஞ்சபூதஸ்வரூபமுமாம்; ஆதியோர்க்கும் மனுதிசத்திக்கும் அதுவே வித்தாகும்.

நம்பியார் தீபமெடுத்தல்

பாங்குள தீபந் தன்னைப் பரிவுடன் கடகக் கையால்
வாங்கியே யளந்து மூன்று வள்முக மட்டுஞ் சென்றூற்
றீங்கிலா நிருபால் வென்று மென்னுமே சலித்துத் தேர்த்துத்
தாங்கியே வொருவன் வாங்கிக் கொடுப்பது தண்மை யாமே.

தண்மையா யர்ச்சித் துப்பின் றட்டியைக் கையில் வாங்கி
வண்மையாய் ப்ரசண்டோற் பத்தி வகையுடன் செய்யப் பின்னர்
வெண்மல ரெடுத்து வேதம் விண்ணப்பந் தேவா ரந்தான்
தண்மையாய் முகித்துப் பின்னர் சாற்றினர் வெண்ணீ றென்னே.

நம்பியார் கடகக்கையினுல் தீபத்தை வாங்கி, முகமட்டும் தூக்கி, இரண்டு பக்கங்களிலும் அதனை மூன்றுமுறை அசைத்துக் காட்ட, அதனை ஒருவன் வாங்கிக் கொடுத்தல் வேண்டும்; பிறகு தட்டியை அர்ச்சித்துக் கையில் வாங்கி, பிரசண்டோற்பத்தி வகை செய்து(?), வெண்மலர் எடுத்து, தேவாரம் விண்ணப்பம் செய்து, நன்மையாய் முடித்து, வெண்ணீறு இடுவர்.

விநது லக்ஷணம் முதலியன முற்றும்.

மூன்றும் அத்தியாயம்

சபாநாயகாதி சர்வவாத்ய பாத்திர லக்ஷணம்

முற்றும்.

அநுபந்தம்

1. ஒற்றைக்கை

ஆண், பெண், அலி, பொது

சிகரத்துடன் முட்டி யன்னவாய்ச் சூரியுஞ்
சிலீமுகப் பதாகை தானுஞ்
சீர்கொண்ட முகுளம் மிருகசி ரத்துடன்
செப்பிலாண் கையு மெட்டாம்
பகருகட காமுகம் வம்சபட் சந்திரி
பதாகையுஞ் சர்ப்ப சிரமும்
பாவனை பிறைக்கைதிரி லிங்கமல பதுமமும்
பாங்கான பெண்கை யேழாம்
அகமகிழப் பூரணம் பதும கோசமுஞ்
சந்தங் கிசஞ்சிங் கமுகமாகுங்
கபித்த மென்னிலைக் கர்த்தரிக் கையிவ்
வாறுட னொன்ற தாகும்
முகபேத மொற்றைக்கை வகையிற் பொதுக்கர
மொழிவதெண் பத்து நான்காம்
மூலபர தத்தில்வரு முறைமையைத் திகழ்கும்ப
முனிவனி துரைத்த வாறே. 1024

2. இரட்டைக்கை

ஆண், பெண், அலி, பொது

அஞ்சலிக் கருடக்கை சங்கற்ப டோளமு
மபயவர தங்க போத
மானதா டனபதா கைக்கூர்ப்பா சுவத்திக
மாண்கையிது வெட்ட தாகும்
இன்சொல்புஷ் பாஞ்சலி சுவத்திக முற்சங்க
மியல்பான சுபசோ பனமிசை
பாரதிப் பதும முகுளகட காவர்த்த
மின்னவகைப் பெண்கை யேழாம்

குறிப்பு : இவ்வநுபந்தத்துள் சேர்க்கப்பெற்றுள்ள பாடல்கள் மூலத்தில் தனியே காணப்பட்டன. அவற்றை ஆராய்ந்து பதிப்பிக்க வேறு உதவி கிடைக்காமையால் மூலத்தில் கண்டவாறே அவை இங்குப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

மிஞ்சுமல் லுத்தம கரங்கலக முபசாரம்
வெற்றிகர்த் தரிசு வத்திகம்
மேன்மைதரு கற்கடகக் கையாற லிக்கையாம்
விளம்பில் பொதுபதி னுறெனச்
செஞ்சொலால் வருகின்ற விரட்டைக்கை வகைதனைச்
செப்பின்முப் பத்தி யேழாஞ்
செகமீது மூலபர தத்தில்வரு மென்னவே
செப்பி னர்தமிழ் முனிவரே. 1025

---

3. தானகம்

51க்கு விவரம்

தானக மைம்பத் தொன்றி லாணிலை யாறு மாதர்
கோனிலை யேழு மைங்கான் கும்மூன் றுபொதுகி லக்கும்
தானென முகமூன் றுக வரசர்தந் நிலையாய்ச் சாரும்
ஆனது சுப்பி தந்தா னகமாறு வகையாய்ச் செப்பே. 1026

ஆணிலை, பெண்ணிலை

வைணவ சமபா தம்வை சாகமண் டலமா லீடம்
இணையதாம் ப்ரத்யா லீட மிவ்வாறு மாணி லக்காம்
அணையாயு தமவ கித்தஞ் சுவகாரந் தையுவ லீதம்
பிணைமோடி தம்விநி விர்த்தங் கேதாகே தம்பெண் ணேழே.

பொதுநிலை

சங்கதஞ் சமபா தஞ்சு வத்திகம் வர்த்த மானம்
தங்குநந் தயாவர்த் தஞ்சேர் சதுரஸ்ரம் பாட்டவி விர்த்தம்
பொங்குபாட் டினிபக் கத்தோட் பொருந்துமே யேக பார்சுவம்
பங்குள வேசா னுபரா விர்த்தம் பருட்டோத் தானம். 1028

தானதா மேகபாதம் ப்ரமணம்வை ணவமுஞ்சைவம்
வானுறு காருடன் கமஞ்சிலிட மோடே
மானேகண் டஞ்சியுங்கூர் மாசன நாகபந்த
நீநேர்வ்யா சனமாய்ப்பொத் திநிலையிரு பத்துமூன்றே.

---

4. அங்கநிலை

உகந்திடும் பரம யோகி யுற்றிடுங் கூத்து தன்னைச்
செகம்பெற நடித்த வங்கஞ் செப்பிடிற் றிசைக டோறும்
அகம்பெற வகக்கூத் தாகு மதுதொடுத் தகமாந் தன்னைத்
தொகம்பெற வுரைக்க லுற்றேன் முனிவோர்கள் சொல்லக் கண்டே.

டி அங்கம். 64க்கு விவரம்.

அரிவையே கேளா யங்க மறுபத்து நாலுக் கும்பேர்
சரியதா மிரேகை தர்ப்ப ணஞ்சவுட் டவமே டாள
நிரையதாந் தாள சந்தி நிச்சேவ னையுந்து கஞ்சீர்
குருலயம் வடிவத் தோடே கோமளி ரசவி ருத்தி. 1031

அன்னக தியுட் னங்க மாகுமே மதமந் தார
மன்னவி தடந்த டத்தொய் யாரம் வசீத ரஞ்சேர்
கன்னல்க ளாச மும்மு கரசமே லளித மற்றும்
சொன்னதோர் பாவ காங்கந் தூகளி பிரச மாமே. 1032

அணுமானம் ப்ரமாணஞ் சங்கை யாண்டெவ்வை சுரேகை யோடு
பிணுமங்க சார மங்க னங்கமே பெருநீ டாளந்
தணுமந்த மாரு தஞ்சேர் தராதரஞ் சங்கம் டில்லாய்
மணுகல னணியு முல்லா சங்கீதம் வேவர்த்த னத்தாம்.1033

தாளக்கி ரகமே சாளி சாளனம் லங்கி தஞ்சேர்
வாளுமே கிரகந் தாண்ட வமுசகந் திகபா வத்தா
மாளிருக் காகு நேசி காரம்ப யப்ப டாதம்
நீள்வெகுச் சாயை யோடு நியமத்து லங்ங னம்நேர். 1034

தருதொக் காரம் ரங்க னம்பிர சன்னஞ் சலாசலி
தெரிய வாத முற்கண் டியுமபி நயச்சி றப்பும்
சருவுஞ்சங் கீத வாத்யஞ் சண்டனந் தாப னத்தாம்
கருவபி யான கம்மு காதமிரங் கமெனச் செப்பே. 1035

அங்கரேகை

சிரமூரம் பக்கம் பாதஞ் செயல்கிரி கையதி னூடே
பரவிய ரேகை யங்கம் பரிந்திடு கைக ளூடே
உரமிக வோங்கிச் சற்றே யுன்னத மாக வொன்றிக்
கரமிக விலதை யூடு கண்டனன் முனிவன் கார்த்தே. 1036

கார்த்துடன் சமபா தத்துள் ளுருவின் புறங்கை காக்க
யோர்த்திடுஞ் சமதிஷ் டிக்கு ளெழில்பெற விலங்க மார்பும்
சேர்த்திடு மங்க காரந் திரவத்தங் கொள்கை யூடே
சீர்த்தெழுந் தாண்ட வத்துட் செய்கரகை யிதற்குச் செப்பும்.

செப்பிய நடன நாட்யம் வாச்சிய கிருத்தஞ் செய்கை
ஒப்புறு மகக்கூத் தாகும் புறக்கூத்தி லிவைய தென்றே
நட்புடன் பாதந் தாண்டி நல்கிய கரமுஞ் சாரி
இப்புவி மண்ட லங்கொண் டிவைக்கெல்லா மிரேகை தானே.

ஏர்த்ததோ ரிரேகைக் கேற்கும் தொழில்பல வியங்க வங்ஙன்
சீர்த்தெழு மூபதே சங்க ளாசாரங் கரிமாச் செய்கை
கோர்த்தெழு மாயு கத்தின் மல்லுத் தம்விற் கோர்வை
ஓத்தென புருஷிக் கொப்பு லாச்சிய மியற்கை யூடே. 1039

டாளவங்கம்

ஓங்கிய டாள வங்க முரைத்தலாஞ் சிங்க டன்னைத்
தாங்கிய கரத்தி னுலே சரியார்க்கும் வலிதல் போலத்
தீங்குமெய் யங்கந் தன்னைத் திகழ்திரந் தாளத் திறத்தில்
ஓங்குமச் சஞ்ச ரத்தி லணுக்கணு முயர்ந்து தோன்றும்.1040

தோன்றிடு மிருபத் தன்னு ளகத்திறந் துலங்க வங்ஙன்
ஈன்றுபா ராட்டின் றன்னு லியல்புடன் பின்னே வாங்கும்
சான்றுடன் சரித்து வோடங் தன்னிலும் தைவுற் றூங்கே
மான்றுடன் வரத்திற் காணுங் குளிர்பனி யூதை யப்போ.

வைப்புடன் கட்டித் தோய்ந்த லணுக்கலோ டுதன்மெய் வாங்கல்
செப்பமாய்த் தட்டி வாங்கிக் குட்சியி லூரு சேர்ந்து
மைப்புடன் சலனந் தன்னிற் சரீரமங் கத்தில் வாகாய்
இப்புடன் டாள வங்க மிசைந்திடு மியல்பு தானே. 1042

தாளசந்தி அங்கம்.

உரைத்திடுந் தாள சந்தி நிபுணமா மங்க மோர்பால்
கரைத்திங்க ணம்மி லவம்வ யங்கு காட்டை நிமிடம்
விரைத்திடுந் துளிக்கு லாகங் துரிதமாம் லகுக்கண் மெய்யே
பரித்திடுங் குருப்லு கத்தோ டுன்னூன்றற் றூன்ப தித்தே.

தூன்னிய துள்ள லாகுக் தூங்கலே வொழுகற் ரூன்றன்
மன்னிய வாரோ சைக்குண் மாரூசை வயங்க வாகாய்க்
கன்னல்சேர் தெக்க ணத்தாற் காலமைந் துடனே காணு
மின்னிய லோட்ட மாகு முறுநடை யியனண் டுர்ந்தே. 1044

அன்னதோர் சமம தீத மனுகதம் விடம மென்ரூங்
குன்னிய வானந் தன்னு லொளிபெறு சொற்க ளோடு
நீன்னதோர் காண்ட வத்தி னிகரா ஞள்ந் தன்னில்
உன்னிய முகிவி னேடு தீர்ந்திடும் லயத்தி லுற்றே. 1045

ஓர்ந்திடுங் களாசந் தன்னி லொளிபெறுஞ் சொற்க ளோடு
தீர்ந்திடுந் தாள காலக் கிரிகையாந் தெளிவி-லுற்றுச்
சேர்ந்தோ ர்ங்க மாகிச் செயரூறுந் திரியு மாங்கே
ஆய்ந்திடுந் தாள சந்தி நிபுணமென் னதற்குத் தானே. 1046

அநுபந்தம் முற்றும்

செய்யுண் முதற்குறிப்பகராதி.

(எண்—பாட்டு எண்)

அக்காலைப்பொருந்த 469
அகஙசஞடண 873
அகமகிழராளந் 215
அங்கண்வாச்சியங்க 996
அங்கத்திற்குறையு 895
அங்கதேசம்ப 604
அங்குட்டந் தனைக்குஞ் 350
அங்குட்டந்தனைவ 315
அங்குட்டமத்யங் 294
அங்குலிகளைமுன் 150
அங்குலிதனைப்ப 257
அங்குலிநாலு 164
அங்குலிநாலையு 221
அங்கையாற்செய்யு 450
அச்சமறவாதியரா 951
அச்சமில்மார்பு 786
அசையாச்சிம்மமுகந் 776
அஞ்சலிக்கருடக்கை 1025
அஞ்சலிக்கையிரண்டுங் 415
அஞ்சலிகபோதங் 363
அஞ்சலியத்தந் 369
அஞ்சலியத்தந்தன்னி 371
அஞ்சனமலைகா 165
அஞ்சுகணுவீசனு 950
அடவுடன்வலது 772
அடித்திடும்பெரியோர் 168
அடிபெருத்ததேங்காய்பெண் 937
அடுத்திடுமகரத்திற்கு 829
அடைவுறுபதாக 374
அண்டங்களாயிரத்தெட் 936
அணிபதாகக்க 173
அத்திரபுதல்வ 929
அத்தினின்மெழுகிப் 926
அதரபேதங்கள் 123
அதலமாஞ்சிந்து 565
அதற்காகுநமஸ்கா 129
அதுவதுவென்ப 250
அதோமுகங்கீழே 65
அந்தரிமுழாநாழி 841
அநாமிகைமத்தி 277
அப்பதாகத்தைத் 436
அப்பதாகம்பி 163
அம்சபட்சக்கை 405
அம்முறைதன்னை 9
அமையும்பதுமகோ 343
அமையுமூன்றுந்துளைக் 812
அயன்மகவானுக்களித்த 922
அயனத்தினபிந 528
அர்த்தசந்திரனி 403
அர்த்தசந்திரனிரண்டு 387
அர்த்தபதாகத் 185
அர்த்தமாமுகுளந் 310
அரசுக்குஅலபத் 597
அராளமாமஸ்தந் 213
அரிசர்ப்பசிரக்கை 269
அரிதாம்சபைத்தலைவ 980
அரிபத்தியுண்டாக்கி 983
அரிவையேகேளா 1031
அரிவையேதிதிபத் 536
அருமைசேர்சாகத் 589
அருமையாமற்றத் 761
அருள்ஜன்ம 155
அரைவிழியாய்வி 86
அலபல்லவந்தான் 287
அவதுதமிருபு 74
அவனியைப்பார்த்த 89
அழகியசட்ச 698
அழகுடன்நாபி 290
அளகாபுரிக்கு 752
அளவிலாச்சூசிக் 586
அறிந்துசெய்வலது 596
அறைந்திடும்நதியஸ் 585
அறையலாமகிழி 593
அன்னகதியுட 1032
அன்னத்திற்காகு 627
அன்னதோர்சமம 1045

அன்னமேபதாகந் 176
அன்னேக்கு வம்சாஸ்ய 717
அனமேகேள்பதாகம் 441
அனுடமாமுட்டி 546
அனுபாவிகதிதந்த 39
அனுமானம்ப்ரமாணஞ் 1033
அஷ்டவசுக்க 759

ஆக்கவேவதன 239
ஆகாரியபிநய 45
ஆகியசம்யு 366
ஆகியவகை 20
ஆகியவீம்ம 190
ஆகுமடாதெய்வமொடு 866
ஆகுமந்தாரை 592
ஆகுமிவ்வடவந் 485
ஆகுமேசுகதுண் 218
ஆகுமேநயன 77
ஆகுமேபுட்பபுடவதி 425
ஆகுமேமயூரந் 194
ஆங்கிகாவபிந 56
ஆங்கிகாவபிநயம் 32
ஆங்கீரசாமு 516
ஆசாரம் பொறுமை 891
ஆசாரமுஞ்சுரப் 883
ஆசையாய்ப்பெரியோ 71
ஆட்டுக்கலாட்டு 266
ஆடவர் வசந்தா 704
ஆடுகாங்கூல 553
ஆணுகுமாள 705
ஆணுக்காணுக 944
ஆதலினுலிங்நான்கு 957
ஆதிகத்தால்வி 504
ஆதிநாளீசன் 1
ஆதிமூலப்பரத 4
ஆதியாம்பொருளில் 7
ஆதியாயெங்கும் 13
ஆதியிரண்டு 461
ஆதியிற் பரமன் 810
ஆதியிற்பரமன்ருண் 819
ஆதியொன்ருஞ்சூசி 722
ஆந்தைக்குச்சொல்வர் 633
ஆமணிக்கட்ட 18
ஆமதுகிள்ளு 323
ஆமதுசந்த 187
ஆமதுசிலிட்ட 575
ஆமதுபார திக்கு 326
ஆமப்பாகாதசுர 856
ஆமபிநயங்கள் 29
ஆமம்ஸபட்சக் 334
ஆமலிவானுசம் 940
ஆமிராகங்கண் 712
ஆமிருமணிக்கை 402
ஆமெனப்பிரகம் 136
ஆமெனவரக்கன் 471
ஆமெனுங்குழல்வ 229
ஆமெனுச்சாக 138
ஆமெனும்பதார்த்த 158
ஆமெனுமுற்பலி 21
ஆமேதினுக்கண் 80
ஆய்ந்தகன்னத்தில் 202
ஆரியர்விதித்த 495
ஆலிடசுத்தா 572
ஆலோளிதமதாய் 66
ஆவாகனக்கையை 457
ஆவித்தவக்த்ரஞ் 427
ஆவுடையார்க்கும் 353
ஆவுடையார்க்கும் வாழை 370
ஆழிக்கும்கப்ப 260
ஆனசூசிகம 34
ஆனமத்தளவோசை 836
ஆனவநேராய் 230
ஆனைக்கோர்செவியை 348

இக்கர்த்தரீமு 184
இச்சிகரக்கை 226
இச்சித்திடக்கை 731
இச்சிம்மமுகமே 276
இச்சையாஞ்சிகரந் 235
இச்சையாய்வலக்கை 393
இசுகாந்தானஞ் 75
இசைபதாம்காங்கூ 282
இசைபநாற்காலக 1003
இசையவேவாயுஸ் 740
இசையுமிங்நாதம் 821
இட்டதுதவருச் 890

இட்டமாய்ப் பதாகக் 656
இடக்கரஞ்சூசி 763
இடக்கரமதனி 652
இடக்கைப்பதாகங் 414
இடங்கடகாமு 697
இடங்கடகாமுசஞ் 739
இடங்கடகாமுகம்வைத் 757
இடதமுசாசியத்தைக் 658
இடதுகரத்தை 716
இடதுகால்மண்டி 478
இடதுகைசதுர 781
இடதுகைப்பதும 733
இடதுபதாகமார்பு 801
இடமாகுமிரதத் 95
இடவலப்பதாகமர்த்த 408
இடிமழைகாற்று 502
இடுப்பொருபிடியாங் 222
இடுமிவ்வராளத் 209
இத்திரிபதாகங் 175
இதம்பெறக்குணபா 968
இதம்பெறப்பரத 214
இதம்பெறுமிக்கித 822
இதிலபிசாரி 46
இந்தவிதமா 978
இந்திரவஸ்தங் 750
இந்துபாலிரவி 6
இப்பிரமரக்கை 295
இப்பூர்ணநபக் 337
இமையவர்போலே 82
இயம்பியதாய்க்க 679
இயம்பியநடுவின் 141
இயம்பியவிவற்றி 834
இயம்புங்கபித்தங் 240
இயம்புவரிவைக 580
இயம்புவாய் மீன்கொத் 629
இயல்புலாட் 40
இயலுமாயுத்தா 777
இரசிகள்கன்மஷ 979
இரண்டு அர்த்த 463
இரண்டுகைமிருக 768
இரண்டுகையம்ச 434
இரண்டுகையம்சா 416
இரண்டுகையர்த்தசந்திர 406
இரண்டுகையிடுப்பில்வைத் 1005
இரண்டுகைவிரல்களீப் 454
இரண்டுதற்சனியி 453
இரண்டுபதாகங்களீயு 452
இரண்டுபாதங்கள் 1006
இரண்டுமர்த்த 456
இரண்டுள்ளங்கைகளீயு 448
இரண்டெனுங்குதியெ 468
இரணியவத்தத் 770
இரவிகுலத்து 695
இராவணனஸ்தங் 771
இருக்கின்றசுரமே 871
இருகடகாமு 577
இருகடகாமுகக்கை 430
இருகரமம்சாசி 531
இருகையுஞ்சூசி 389
இருகையுந்திரிபதாக 725
இருகையுமர்த்த 397
இருகைவிரல்களீயு 459
இருசதுரத்தி 696
இருந்தேதோர்கபித்தங் 251
இருபதாகத்தை 458
இருபாதம்கிலேயா 470
இருமிருகசிரந்தன்னீ 613
இல்லையென்பதுங் 228
இலக்குமிதாரைசுசீலை 818
இலகுநேபாளம் 606
இலகுமம்சாசி 680
இன்னமிம்மாத 663
இன்னமும்பேத 147
இனவபவேஷ்டி 149
இனிவலங்கர்த்த 747

ஈச விருக்ஷ 599
ஈராறுபலத்தி 881
ஈரெட்டதாம்பூ 23
ஈரெண்டுகுதிய 472
ஈரெண்பலத்தி 880

உக்கிரவுத்திரா 216
உகந்திடும்பரம 1030
உட்சிப்தந்தலையெ 70
உத்தமமாங்கன்னி 1002

உத்தம்மாகிருத்தமது 998
உத்தமமாம் வெண்புடவை 913
உத்தரதேச 486.
உத்விருத்தம்பக்கம் 431
உதயமாங்கிரியின் 755
உதவியமுட்டி 227
உபதேதவாசி 43
உயரவேபார்த்த 87
உரத்து நேரிடப்ப 792
உரம்தாங்கவுட 609
உருமிருபதாகந் 579
உரைக்கும்வித்தர்க்கி 107
உரைத்திட்ட 27
உரைத்திடுந்தாள 1043
உரைத்திடுமங்க 22
உரைபத்மகோசர் 286
உரையரங்கத்தில் 976
உற்பனமான 932
உற்றபதாகத் 435
உறுதிச்சொனற்குணங்கீர்த்தி
உறுதியாங்கண்ட 127 [973
உன்னவேசேழனுக்கு 691
உன்னியமுனிவர் 264

ஊர்சென்றகணவன் 670

ஏட்டதாமிமையின் 16
எடுத்திடுநாக 475
எண்ணியமார்பு 796
எண்ணியேதூக்கி 122
எண்ணுமம்சாசி 329
எண்வயதாங்கன்னி 1001
எந்தவஸ்தங்க 491
எறும்புசெல்கறையா 626
என்பதோரமுகமாய் 259
என்றகைநெஞ்சில் 253
என்றதோரற்பம் 57
என்றிளமரத்தின் 935
என்றுமானிக்கு 547
என்னவுத்வர்த்தி 118
என்னவேபண்டி 201
என்னவேமுன்னோர் 72
என்னவேயகத்திக் 594

ஏங்காவாமப்ப 787
ஏச்சிலாப்பல்லிக் 646
ஏர்த்ததோரிரேகைக் 1039
ஏர்விளம்பிக்குப் 521
ஏலத்தனகொழுநன் 668
ஏலவாயுஸ்தா 742
ஏலவிரண்டு 775
ஏலவுமிருக 378
ஏலவேதிரிபதாக 421
ஏலவேயேழாகும் 814
ஏற்றகுச்சரர்ம 905

ஐந்தாகுந்துளீதனக்கு 813
ஐந்துவயதுமுத 999

ஒட்டகத்திற்குச் 641
ஒத்தியதாளச்சுருதி 903
ஒத்துடன்முறியு 933
ஒருகைமரர்பிற்கு 442
ஒருகையராளமற்ற 443
ஒருகையையமுசா 439
ஒவ்வுமேமிக்க 142
ஒளிமணிக்கடகக் 970
ஒளியுடைய கைவளைகள் 911

ஓங்காரவித்துளதா 946
ஓங்கிடகிடதகி 852
ஓங்கியடாளவங்க 1040
ஓசைகொண்டதோற்கருவி 837
ஓதியசர்ப்ப 332
ஓதியமுகத்தி 204
ஓதுசுரீத 42
ஓதுமிப்பூர்ண 335
ஓதுமிம்முட்டிக் 220
ஓதுமேபேத 33
ஓமெனுங்கழுத்து 556
ஓர்ந்திடுங்களாசந் 1046

கஞ்சக்கருவி 878
கடகாமுகக்கைசுண்டிக் 660
கடகாமுகக்கைதன்னிற்கருதுந்
தற் 249 .

கடகாமுகக்கைதன்னிற் கனியணி 246
கடகாமுகக்கை யிரண்டுங் 381
கடகா முகத்திற் 247
கடகாமுகந்தோன் 242
கடகாமுகம்பி 603
கடகாமுகம்மி 745
கடகாமுகமிரண்டு 417
கண்காலி தன்னுன் 868
கண்டதிரிபதா 182
கண்டபேரண்டத் 632
கண்டாஞ்சலிக்கை 640
கண்ணவலோகி 78
கணித்திடுஞ்சர்ப்ப 398
கத்தூரி தங்குஞ் 316
கதியருளும் பதினென்றும் 816
கதிர்கிகர்சக்க 395
கந்தசாலூக்கு 618
கந்தமாகிரிக்குக் 569
கபித்தபதாகங் 798
கம்பிதமேலுங் 67
கர்த்தரிமுகக்கை 383
கர்த்தரீமுகக்கை 189
கரணங்கள்பதினென் 550
கரப்பிரவிசார 549
கரியசூசிக் 562
கருதுங்காதருகே 203
கருதுசந்தனமும்பலா 835
கருதுநூலகமார்க் 26
கருதுபாதம்நெற்றி 718
கருதுமக்கெச்சந் 916
கருதுமவதுதத் 62
கருதுமிச்சதுரக் 314
கருதுமிப்பாணங் 292
கருதுமிரண்டு 726
கருதுமிரத்தாட் 527
கருதுமுத்தம 482
கருவம்விட்டராதி 76
கருவானகாதசர 558
கல்லெனுங்காந்தைக் 94
கல்வியாற்றிரையான் 509
கலியாணம் செய்து 659
கவரிக்குமுட்டி 637
கவித்தக்கையிரண்டு 400
கற்பகமுகுளஞ் 800
கன்னிதுலாம்விருச் 955
கனகயதேசிக் 889
கனிதிரிபதாகம் 438

காசிபன்வியாசன் 10
காட்சிசேரற்பு 494
காட்டியதிரியாங் 58
காட்டியேகண்கண் 96
காட்டுங்கைப்பக்கம் 273
காணவேயிடக்க 746
காணிருகைப்பதாகங் 440
காணீச்சுரச்சி 517
காணுந்தாடிக்கு 709
காணுமராளக் 346
காதினிற்கையை 382
காற்கொள்மந்திரகிரி 570
கார்த்துடன் சமபாதத்துள் 1037
காலத்துமிருட்டாக் 109
காலுகைகுத்து 271
கானமதீன 1013

கிணகிணகிணகிணஜேம் 853
கிருதயுகத் 1015

கீலகக்கையிலனுமி 447
கீலகமச்சந் 364

குகுரமேமரக்கை 605
குச்சுவீட்டிற்கிரண்டு 612
குடிலஞ்சேர்புத்தி 886
குணமுடன்பள்ளிகின்று 665
குத்துமூட்டியில 312
குலத்தினுற்பகையை 967
குலவியகுமரர் 972
குளிர்வாடைபனிம 379
குறுவிலான்மெலியோ 900
குறைகளோச்சொல்லும் 505

கூந்தற்சிறுக்க 192
கூர்மக்கையிடக்கை 805
கூறக்கேள்பிறந்த 28

கூறுதற்சனியங் 352
கூறுமராளத் 424
கூறுமுட்டியிலங் 233
கூறுமேபிரத்தி 59

கேட்டிடுமனையிற் 171
கேள்சோபகிருதுக் 522
கேளப்பாப தினுயிரத் 861
கேளிருசதுரக் 587
கேளினியதம 484
கேளுநீபிரபந் 90
கேளுநீயிருகண் 104

கைக்கரங்கூப்பிப் 930
கைத்தலத்தாலே 324
கைமூன்று 19
கையினுற்காட்டும் 156
கைலாயபருப்ப 765

கோக்குச்சிலிட்ட 630
கொடும்வியாக்கிரஞ்ச 537
கொண்டைகொப்பீரங் 289
கொழுனைக்குறித்துச் 671
கொள்வதுதோற்ற 942
கொள்ளவேமும்மீ 543
கொள்ளுஞ்சிங்கமுகக் 347

கோசலசகரர்க் 686
கோசலைமுத்தி 392
கோணைதமுட்டிக் 767
கோழிக்குத்தாம்பர 634

சக்கரஞ்சுழற்றல் 251
சகடமுத்திரையிடச் 455
சகுனிகாக்கைக்குக் 551
சங்கதஞ்சமபாதஞ் 1028
சங்கேதநிர்ண 153
சங்கைதீர்முரளி 616
சட்சதைவதங்கள் 661
சத்தியமொழுக்க 974
சதுர்த்தசிதனக்கு 539
சதுரக்கைமத்தி 318
சதுரக்கையிரண்டு 399
சதுரம்தாகுங் 319
சந்தங்கிசம்பி 620
சந்தம்சந்தா 300
சந்தம்சவத்தங் 303
சந்தனமணிந்த 912
சம்புவாந்தீபத் 588
சமபாதமண்ட 466
சர்ப்பசிரக்கை 262
சர்ப்பசீரிடக்கை 376
சர்ப்பசீருடக்கை 320
சர்ப்பசீருஷக்கை 360
சரளமரத்திற் 601
சரஸ்வதிநதிக்குச் 581
சருவசித்துச்சந் 519
சலந்தராசூர 774
சலமீனம்வருட 941
சலனமில்பள்ளிக் 623
சன்னலேமென்னி 614

சாத்விகவபியஞ் 48
சாரங்கநாட்டைக் 708
சாரவதிக்காம் 582
சாரவேவலது 764
சாராயக்கடற்குச் 575
சாருமேசூசி 35
சாலிகள்பதினலுக்குஞ் 615
சாளயநிர்த்தஞ் 490
சாற்றியதிரிபதாகங் 342
சாற்றியநகையின் 493
சாற்றியமகாரத் 829
சாற்றியவயிறு 137
சாற்றுமரங்கே 31
சாற்றுமிப்பதத்தில் 467

சிகரத்துடன்முட்டி 1024
சிகரமிரண்டை 451
சிகரவத்தத்தின் 423
சிங்கமாமிடது 635
சிங்கமுகக்கை 279
சிங்காரமலபதமம் 721
சித்தத்திற்றியானித் 928
சித்தார்த்திதிரிலிங் 526
சித்தியாம்பலவித் 925

சித்திரபானு 518
சித்திரமாகச் 934
சித்திரைபத்தாம் 958
சித்திரைமாதத் 533
சிரமுதற்சமமா 61
சிரமுரம்பக்கம் 1036
சிலிட்டசிங்கமுகக் 280
சிலிட்டசிம்மமுகம் 773
சிலிட்டமாம்பதும 341
சிறுதனங்கொட்டைப் 284

சீமான்சகலசாத்திர 977
சீர்தராதலந்திரி 566
சீர்பெற்றவரங்கத் 995
சீர்மறையோர்க்குப் 651
சீர்மிகுபாணி 145
சீர்வளர்யுகந்த 512
சீராறுயன 15
சீருரைமரத்தின் 590
சீலமாம்பதாகந் 561
சீவளியிலீவே 869

சுகசோபனத்திலும்பேர் 1009
சுகதுண்டங்காட்டி 780
சுகதுண்டநெற்றி 564
சுகமுறும் 93
சுத்தடவிற்குக் 489
சுத்தமுடன்றேசியஞ்சொற் 898
சுத்தலாட் 41
சுந்தரியிலக்க 128
சுபகரப்பதாகை 409
சுயமதாயிந்திரன்கை 751
சுருதிதாய்கீதந் 824
சுவத்திகக்கையை 432

சூத்திரவலதுமுட்டி 734
சூழும்வாத்தியமு 355

செகமிருகச்சி 275
செப்பியசிகரந் 232
செப்பியநடன 1038
செப்பியநாட்டி 49
செப்பியமிதப்பு 117
செப்புமாகாரங் 157
செப்புமுத்தான 146
செப்புமேயட்டைக்குச்சி 625
செப்புவரய்வைசி 676
செப்புவரயகர 762
செப்புவோமின்ன 644
செய்துவாசுகியை 811
செய்யவேயிமையுங் 103
செய்யவேவொன்றைப் 110
செவ்வியபரத 1021
சென்னிநேர் 554

சேதிக்குக்கஜமு 610
சேர்த்ததுநாபி 212
சேரவேயிடது 741
சேவையாம்பகைவ 98

சொத்திசேர்பரதநூலோர் 692
சொல்சமுத்திரம்ப 573
சொல்லியசமசி 63
சொல்லியநால்வகையபி 901
சொல்லியபிரமரக் 298
சொல்லியமகாரத் 827
சொல்லியவதன 17
சொல்லியவிக்க 234
சொல்லிருபதாகந் 419
சொல்லுசங்கேத 152
சொல்லுமச்சிலிட்ட 120
சொல்லுமர்த்தபதர 181
சொல்லுமாவாக்கி 37
சொல்லுமிவ்வத்தத் 358
சொல்லுமேசொர்க்க 799
சொல்லுமேஞாயி 540
சொல்லுமேபுணர்த 715
சொல்லுவரிடைபி 199
சொலுஞ்சுவர் 583

சோம்பலின்மைவட்டமதாய்ப் 909

சௌராஷ்ட்ரம்சந்தம் 607

ஞாயிறலபல்லவம் 511
ஞானக்கைநெற்றி 790

டட்டட்டசரடிடி 850
டம்மாரஞ்சண்டா 842

தக்வர்த்தபதா 183
தக்கவேபி துர்தே 760
தககிகிகிகிங்கிகிதே தாந் 849
தகுமிடக்கைபி 380
தகுரேகாசந்திர 208
தகைக்குத்தண்ணீர் 265
தங்கஞ்சதுரமாகும் 720
தங்குகபித்தக் 243
தங்குநாற்பலத்திற் 882
தசமிவிச்சிலிட்டக் 538
தடையிலாதெதிரிற் 359
தண்ணீரில் நீந்து 375
தண் ணுமைமத்த 840
தண்மையாயர்ச்சித் 1023
தத்தித்தெதன்னன் 854
தத்துவந்தத்துவந் 846
தம்பட்டம்டக்கை 843
தயிர்சி லுப்புதலை 356
தருசிம்மமுககாங் 162
தருதாக்காரம் 1035
தருமிருகரங்கள்கோத் 446
தருமொன்பான்றுனீக்குச் 815
தரைதத்தோந்தரைதத்தோந் 817
தவமுறும்வலம்ப 743
தள்ளப்பாவச்சதுதா 862
தற்சனிநடுவங் 362
தற்சனிமத்தி 642
தற்சனியுடனங் 322
தன்மசிந்தனீயு 966
தனித்திடுபதாகம் 573
தனிப்பதின்மூன்றுந் 817
தனியிராக்கதவாண் 525
தக்ஷிணசூசி 514

தாக்கியதோர்பிரம்பு 952
தாக்குஞ்சங்கிதக் 81
தாக்குமத்தளமே 993
தாங்கியமுகுளந் 305
தாடிதபாதஞ் 476
தாண்டவலாஸ்ய 54
தாதலர்யயாதிக் 694
தாதுசோதனைக்குஞ் 278
தாநகம்வனீத 297
தாபரநாடகத் 954
தாமதுமாத 711
தார்குழலிச்சபைமுன்னே 920
தார்வலக்கையுத் 732
தாரமமுசாசி 299
தாரரரியா 848
தாளக்கிரகமே 1034
தாளப்பிரஸ்தார 884
தாளலயத்தைதத் 892
தான்சரநோட்டம் 198
தானக்கரமே 217
தானகம்பாதசாரி 893
தானமாமிரண்டு 650
தானகமைம்பத் 1026
தானதாமேக 1029
தானதுரசித 327
தானென்றபராவி 69
தானென்றமத்தளம் 865
தாவென்னப்புருவ 179
தானெனவுரைத்த 170

திட்டம்பதாகக் 196
திடமுடன் மலர்கள் 244
திரமதாங்கெருடிச் 617
திரமூளமிரேகை 908
திரள்பதாகத்தை 437
திரிகிட திரிகிட 845
திரிபதாகத்த 180
திரிபதாகம்மி 723
திருத்துமத்திமமாம் 485
திருவிரிச்சந்திரற்குச் 685
திரைகொள்ளும் 876
திறமான 11
திறமிருகசிரந் 274
திறமொடுமுன்னும் 132
தீதிலாதிடக்கை 803

துடியுள்தாம்பிர 304
துணிந்திராவணன்கை 479
துதம்வலமிடம 68

துதிக்குமிவ்வர்த்த 195
துய்யதோர்துளைக 894
துர்மார்க்கருடனன் 498
துலங்கியகுஞ்சி 144
துலங்குமம்சாசி 321
துலங்குலதாகா 445
துளைக்கருவிபேதசுர 887
துளைக்குவட்டணை 896
துளையதுகருவி 867
துன்னியதுள்ள 1044

தெக்கணையனத்தின் 529
தெரியக்கைரேகை 200
தெரியிடம்வலத்திற் 131
தெரிவையேசங்கி 113
தெருவில்லுண்டைகள் 237
தெலுங்கெழுதெழுத்தா 241

தேவர்க்குப்பதாக 758
தேவர்கள்பொருந்தி 1010
தேசாளம்வைஷ்ண 710
தேடியவற்பு 101
தேர்ந்துபூரட்டா 548

தைதிலக்கழுதைக் 551
தையலேபதாகங் 210

தொய்யுமுடாம்பகக் 100

நோணுமுதலிக்குத் 543
தோன்றிடுமிருபத் 1041
தோன்றியபெருமை 503
தோன்றிளிவரலின் 497

நகைக்கலபதுமக் 713
நட்டுவர்க்குமூன்றரைச்சா 948
நடனத்திற்கானவிட 984
நடுவிரலீட்டி 351
நந்தனவருடத் 520
நந்தியம்சாசி 328
நந்தியேநட்டுவனும் 12
நமிராமாவிடமே 134
நவரசமொன்ப 25
நவரத்னமுப்ப 154
நவிலஸ்ததுவாத 159
நளிந்தமே 600
நற்றகனிடக்கை 994
நன்றுய்க்கிழ்மே 959
நன்றுய்ச்சிவஞானக் 949

நாசியின்பேத 119
நாட்டமாங்கரங்களுக்கு 148
நாட்டிடுகம்பி 121
நாட்டியம்கிருத்தம் 52
நாட்டியமென்னு 1008
நாடையாங்கொழுங 707
நாணிலாலாகிரி 476
நாதமுளமத்தளதா 907
நாதன்செய்மோச 667
நாமகள்கலீகட் 492
நாயகபைர 701
நாயகன்றன்னேச் 666
நாவுதவுமல் 3
நாற்கோணம்பொன்வடிவா 982
நாணிலத்தோர்கட் 576

நிகடகரமுகத்திற் 219
நிகழ்சாடையாய்ப்பிர 83
நிகழுறுமச்சங் 501
நிசமதாமென்னிலைக்கை 753
நிசமூனசொர்க்கங் 779
நிஷ்தியரனுஷ்டானம் 888
நிர்த்தனரம்பஞ் 987
நிருத்தக்கைமுப்பதாக 426
நிருத்தமாம்சசபா 53
நிருத்தமாம்வலக்கர 480
நிரையுமுத்தான 55
நிலத்திலிற்களபச் 961
நிலைபெறமுன்பு 831
நிலையாமங்குட்டத் 357
நிறையுமங்குட்டங் 354
நின்றிடுபாத 477
நினைத்தைதமுடிக்கு 664

நீச்சுடன்மௌனஞ் 166

நுதலினேராசா 368
நுனிபார்க்குங்கல் 99

நூலைத்தத்தமிழாற் 14
நூலாய்ந்தவத்தத 545
நூலினி லுரைத்த 557

நெஞ்சிறுபக்கமுட்டிக் 413
நெடிதாம்வைஞ்ண 563
நெத்திக்கடைக்கண் 333

நேமித்தபந்து 211
நேரானதுலீக்கருவி 860

நோற்பனமாநான்மையோ 938

நோக்கல்பதுமக் 291
நோக்கியேவிடியோ 102

பக்கடவிற்குக் 487
பக்கத்திலுயர 252
பக்கமிரண்டும் 85
பகர்மூட்டிகளிட்டமது 293
பகர்வலம்சிகரம் 73
பகரமேபிரமன் 1020
பகருமேதீரம் 140
பகருமேநரம்பி 174
பகவத்தியரனமலை 885
பங்காளப்புருட 706
பச்சமாய்ச்சொல்லுங் 804
பச்சவஞ்சிதமுத் 365
பசுவுக்குச்சுரபித் 647
பஞ்சமந்தனக்குச் 699
பஞ்சமமத்தி 662
பஞ்சமிலிடக்கை 757
பட்சவஞ்சிதமும் 428
பட்டணமென்ப 611
படகபேரிகை 839
பத்தர்கள் பரவு 924
பத்தியாய்ப்பிள்ளை 927
பத்தியாய்மரர்பு 784
பத்திரன்றனக்கு 674
பதாகக்கைமத்தி 344
பதாகத்திரிபதாக 161
பதாகமென்றுரைத்த 169
பதாகமேதாகஹி 513
பதிவிரல்நுனிக 411
பதுமகோசக்கைதன்னிற் 283
பதுமகோசக்கைதோன்றும் 256
பதுமகோசத்தில் 336
பந்தமிலகத்தி 349
பம்பியமூட்டிக் 766
பயமுறும்பெறுவ 302
பரததலபாகீயம் 985
பரதத்திலாய்ந்து 560
பரதநூல்வியாசர் 555
பரதநூற்றசர 689
பரதமுனிசொல்லு 340
பரமன்முன்னடனம்புரிந் 921
பரியதுகாட்டு 372
பருப்பதசிகரங் 384
பருமுழங்கைப் 433
பலசிம்மமுகக் 281
பன்றிநாய்ப்பாய்ச்ச 394

பாங்கரகுமபிரய 30
பாங்குளதீபம் 1022
பாசக்கைபிடித்திரண்டு 684
பாசிடஞ்சிகரம் 653
பாட்டிசைக்கப்பாடப் 899
பாத்திரங்களுக்கு 197
பாத்திரத்தின்றன்தையாம் 988
பாதவிங்யாசங் 270
பாம்புபோல்துபோ 130
பார்க்குமாங்கருணை 97
பார்த்திடுந்திரஸ்தா 108
பார்த்திடுவயிறு 21
பாரப்பா நாதசுர 859
பாரப்பாநாதசுரமென்ற 864
பாரர்த்தசந்திர 205
பாரிசங்களிற்கு 84
பாரித்தடனசரஸ் 962
பாரினிலசுப 542
பாருத்வாகிதஞ் 64
பாருமேபதாகங் 172
பாருமேமார்பில் 223

பாருனிப்புலுதா 106
பாரேசிங்கா 50
பாவமதின்றித்தா 1004
பாவாபியமே 36
பாவிகதொந்த 38

பிசகாமலலப 655
பிசகாமற்சர்ப்ப 267
பிடிஜபமாலை 238
பிரகிருதியேதேகமத் 823
பிரபவதிரிப 515
பிராண்ருளம் 5
பிரிகரம்பின்பு 151
பிரித்தவிவ்வமுச 331
பிரிதிவிபட்டிக் 749
பிலவங்கடமரு 523
பிறைக்கைமேற்பிறைக்கை 410

புகலுவாய்குயிற 623
புகழ்பிடிக்கும்ப 465
புதனென்றகுருவுக் 558
புயநடுவணியி 1018
புரட்டாசிவற்சி 534
புருடபூபாளத் 700
புருவபேதங்கள் 116
புஜபேதமூர்த்வ 133

பூரணகும்பம் 962
பூவிநீராம்பலல்லி 330
பூவுடைநேத்திரமுள்ளாள் 918
பூஜைக்குக்கைய 638

பெருஞ்சென்னிசெங்கண்ணி 917

பேசலாமெலுமிச் 591
பேசுமேயிஷ்ட 1014
பேசுவாய்பதிக்குச் 675
பேணவேயிருபதாகம் 422
பேணுமிச்சூசிக் 248
பேதைவயதேதழாம் 1000
பேர்சிலிட்டமிருக 636

பொத்தியேகனிட்டை 943
பொருந்தியசெவிநே 317
பொருந்துகைமார்பு 231
பொருந்துசபாபதிக்த 971
பொன்மைவிகார 1017
பொன்னணிமாதே 510
பொன்னுளவராளக் 657

போதுநேர்ங்யனங் 92

மகரஞ்சேர்ங்குலனுக்கு 688
மண்டலங்களாறும் 990
மண்டலத்தான 906
மண்ணிர்புழுத 960
மணவாளன்ற னேக்கோ 669
மணிக்கட்டினயனங் 160
மணிபிரமனங்குட்ட 945
மத்தளமெனுமெ 825
மத்தியமங்குட்டங் 296
மதிபேதங்க 188
மதுரம்வாக்கியம்ரூபன் 897
மரமுடன்சுடர்வி 178
மரரடண்ட 851
மராட்ரமிந்துஸ் 488
மருங்குக்குக்கீழயனு 989
மருவிடம்பதும 735
மருவிடவனுமி 449
மருவிலாதிருக்கும் 342
மலர்கொய்தலொன்றே 325
மலரலபத்மத் 444
மவனஞ்சேர்நெஞ்சி 785
மற்றநாயகிக 672
மற்றருதுக்களுக்கு 754
மறைப்புடன்வாளின் 167
மறையோர்கள்புசித்த 1011
மறையோனுக்கமுசாஸ் 654
மன்னர்தம்மிடுக்கத் 496
மன்னர்முதன்மூன்றுகுலத் 902
மன்னவிடத்திற் 377
மனதினில்விகார 126

மாசிலாவராளக் 673
மாதவர்புராண 969
மாதாந்திரதாம்பிர 361
மாதுகேள்மதிம 499

மாதுடைமூட்டிக் 756
மாதேகேள்கர்ணனுக்கு 687
மாதேகேள்சூசி 255
மாம்பழங்களுக்கும் 258
மாமிதன்கையிற் 681
மார்கேர்வாமப்ப 789
மாரினேரிடப்ப 788
மாரினேரிடப்பதா 795
மாலியவான்கி 568
மாருதிருடிகட் 783
மாறுகண்ணுள் 919
மான்றலீலக்கை 619
மானேகேள்தோற்கருவி 838
மானேதற்சனியங் 207
மானேபுருடஸ்ரீ 702

மிக்குறதேவர் 931
மிகப்பருத்தன்மிக 904
மிதுனமூங்கடகஞ் 956
மிருகசீரிடக்கைதன்னில் 339
மிருகசீரிடக்கைரண்டும் 396
மிருகசீரிடக்கைரண்டுமி 412
மிருகசீரிடத்திற் 391
மிருகசீரிடமிரண்டு 420
மிருகசீரிடமே 268
மின்னுங்கருணை 114

மீனுக்குமச்சக் 624

முகத்தையஞ்சலிபோ 744
முகராகம்நான்க 125
முகவீணாகாசுர 855
முகுளத்திற்கனிவ 313
முகுளமுந்துருவா 639
முகுளவஸ்தத்திற் 309
முசலமுத்திரை 462
முட்டிபோல்முட்டி 464
முட்டியில்மத்தி 225
முட்டியிற்கனியங் 306
முத்துரத்தினங்க 245
முதற்றுரீயசனிரண்டாம் 875
முதுகுபேதங்கள் 139
முந்தவே கணபதிக்கு 991
முந்தவேபக்க 143
முந்தவேபூமா 773
மூனாத்தது நிலங்கள் 947
மூற்றுமத்தளம 833
மூறுவல்சேர்மொழியி 429
முன்னிருசதுரக் 723
முன்னுரைகடலில் 574
முன்னுரைசெய்த 1007
முன்னுளமகார 826
முன்னேர்கணடனத் 992

மூர்க்கமில்லானக் 797
மூவைந்துபேரு 997

மெய்யுறுமூவகை 508

மேகமாம்வண்ண 872
மேருவிற்கிடது 571
மேலதாஞ்சத்து 690
மேலதாமைதீட் 193
மேலிடங்கீழி 88
மேலுந்தசங்கள் 91
மேலுறுவெகுவி 506
மேவியகுஞ்சி 111
மேற்சொலுமரச 693
மேன்மையாமூபாங்கம் 60
மேனிமூடாம்ப 79

மையுருகர்த்த 191

யவனதேசம்மச் 608

யாளிக்குவர்த்த 648
யாழினமேற்றுலங்க 828

யுத்தசந்திரக்கை 206

யோகமாம்விழிதி 105
யோகமாமுட்டி 224

வகையின்னஞ்சொல்லு 857
வகையுள்ளநெஞ்சி 791
வசந்தமாமராளக் 530

வஞ்சமதிலாது 124
வடிம்புதானிரண்டு 473
வடிவுளமிருகச் 578
வண்டொத்தபூங்குழலு 910
வயங்கியநிருத்த 964
வயிரமதுசிங்கமுகம் 719
வர்த்தனையிமயக் 567
வருகனிட்டிகையங் 338
வருசிங்கமுகமி 806
வருதகரந்தோடி 874
வருதிரிபதாகம் 418
வருபதுமகோசக் 261
வருபிரமரக்கை 385
வருமார்புபேத 135
வருமிடஞ்சூசி 769
வருமுபசப்த 44
வருவேகவதிக்கு 584
வல்லவாயிலிய 544
வலக்கைகடகாமு 802
வலக்கைசந்தம்ஸம் 683
வலக்கையம்சாஸ்ய 724
வலக்கையர்த்தபதா 807
வலக்கையிடக்கை 820
வலக்கையிற்சிகர 727
வலக்கையிற்பதாகஞ் 808
வலக்கையின்சிகரத் 386
வலக்கையைக்கபித்த 631
வலக்கைவியாக்கி 649
வலஞ்சதுரஸ்ரஞ் 748
வலதுகைச்செபச 736
வலதுகைதேவ 782
வலமுட்டிகீழே 809
வலியகண்ணிலேவிடுத்தால் 939
வழுதிக்காய்மதுரை 481
வழுதிதன்குலத்தில் 965
வளருமிம்முகுளந் 307
வளருமேமுகுளந் 311
வறுமையாம்விஷத்தாற் 500

வாகுமேற்சர்ப்ப 401
வாகுகளிரண்டும் 407
வாத்தியசாலைக் 622
வாதிலாமார்பு 793
வாதிலாமார்புநேராம் 794
வாதுமுற்கூற 507
வாதுவழக்கு 390
வாமக்கைசிகர 730
வாமக்கைசிகரம் 682
வாமக்கைபிறைக்கை 535
வாமக்கைமுகுள 404
வாமத்திற்சிகரம்சேர்த்தால் 677
வாமத்திற்சிகரம்வைத்து 559
வாமத்திற்பாசம் 729
வாமதக்ஷிணத்தி 532
வாமமாங்கைவா 678
வாரானநெடிலொன்று 832
வாரிசூழ்ந்திடும 115
வானிலேபிறந்த 877
வானின்மின்மின்னிற் 879

விக்கினமின்றி 986
விஞ்சைசேர்பதாக 367
விடுத்தசக்கரத்தில் 388
விடுத்திடுபதும 301
விண்டகைமுகநே 272
விண்டதோர்கபோல 177
வித்துவான்கவிகள் 975
விதூதமேதலைந 73
விபசாரியபிந 47
விரலைந்தும்வளைத்து 288
விரனுனியைந்துங் 308
விரிஞ்சனம் 8
விருத்தியாம்பாவி 51
விருதுநான்குவிதமதாம் 1019
விருதெனுஞ்சொன்மூன் 1016
விருப்பாநடனசாலை 621
விரும்பியதூப 236
விரைசேர்பதாகந் 263
விரோதிகிருதும 524
விள்ளவேயச்சு 112
விள்ளுமேபுருடராக 703
விளங்கியதண்டின்மத் 923
விளம்பியகாங்கூ 285
விளம்புவேனுள்ளதுதா 863
வினவியமிருதங்க 844
வினவியரத்தினப் 914

வீரரசந்த 714

வெண்கலஞ்செம்பு 915
வெள்ளாடுருசிக் 645
வெள்ளிக்குச்சிவிட்ட 541

வேங்கைவரியுடையான் 953
வேதக்கள்கொம்புகளாய் 981
வேதத்திலுதித்த 1012
வேதியன்பரமன் 870

வேம்பிற்குச்சுகதுண் 602
வேழமுகத்தோன் 2

வைசிரவணமே 598
வைணவசமபாதம் 1027
வைப்புடன்கட்டித் 1042
வையத்தில்வீழ்த 186

ஷண்முகவன்முகத் 460

ஒ

அரும்பதம் முதலியவற்றின் அகராதி

(எண் - பாட்டெண்)

அகப்பிதச்சிரசு 74
அங்ககாரம் 32
அங்கங்கள் ஏழு 58
அங்கநிலை 1030
அங்கம் 61க்கு விவரம் 1031-5
அங்கரேகை 1036-9
அச்சரசம் 501-2
அச்சுதாதிருஷ்டி 112
அச்லிட்டநாசி 120
அசம்யுத அஸ்தலக்ஷணமாகிய கரகரணமென்னும் ஒற்றைக்கை லக்ஷணம் பக். 73
அசுரர்கள் அபிநயம் 763-774
அசுரர் முதலியோர் அபிநயம் 762
அஞ்சலி அஸ்தம் 367-8
அஞ்சிதசிரசு 72
அஞ்சிதபாதம் 472
அடைவிற்கு அஸ்தங்கள் 486-91
அடைவுகள் பக். 179
அதிப்புதிருஷ்டி 101-2
அதம அடைவு 484-5
அதரபேதங்கள் நான்கு 123
அதரபேதப் பிரகரணம் பக். 59
அதருமமதக்கண் 115
அதோமுகச்சிரசு 65
அநமிதகடு 142
அநுசரயி 30
அநுபந்தம் 1024-46
அநுபாவம் பக். 5, பக். 7
அநுபாவிகதோந்தாபிநயம் 39
அநுவிருத்திருஷ்டி 88
அபயவர்த அஸ்தம் 409
அபவர்த்திதப்புருவம் 118
அபவேஷ்டிதப்பிராணன் 151
அபாத்திரலக்ஷணம் 917-20
அபிசாரி ஆகாரியம் 46
அபிநய உத்பவம் பக். 7
அபிநய நியாய லக்ஷணம் பக். 7
அபிநயம் இன்னதென்பது பக். 7
அபிநய விவரம் 28
அம்சாசிய அஸ்தம் 321-30
அம்ஸபட்ச அஸ்தம் 331-34
அமிதப்புருவம் 117
அயநாபிநயம் 528-9
அர்த்தகபித்தம் 240
அர்த்தசதுர அஸ்தம் 318
அர்த்த சந்திர அஸ்தம் 195-208
அர்த்தசிகர அஸ்தம் 232

அர்த்தசூசி 254
அர்த்தபதாகம் 181-3
அர்த்தமுட்டி அஸ்தம் 224
அர்த்தமுருள அஸ்தம் 309
அர்த்தரேசிதகர்த்தக்கை 434
அரங்கத்தில் பாத்திரம் நிற்கும் லக்ஷணம் 984
அரங்க தேவஸ்துதி 985-6
அரங்கபூமியைத் தொழுதல் 983
அரங்கபூமி லக்ஷணம் 982
அரசச்சின்னங்களின் அபிநயம் 696-7
அரசர்களின் அபிநயம் 685-95
அராதிகச்சிரசு 76
அராள அஸ்தம் 209-13
அராளகடகாமுகஹர்த்தக்கை 432
அலபத்மஹர்த்தக்கை 444
அலபத்ம அஸ்தம் 287-91
அவஹித்த அஸ்தம் 402
அவகுண்டன முத்திரை 458
அவதுதச்சிரசு 74
அவலோகித திருஷ்டி 89
அவையடக்கம் 6
அக்ஷர ஓசையின் கணம் 832
அக்ஷரங்களின் பலன் கொடுப் போர் 831
அக்ஷரங்குறினெடில் விவரம் 826
அக்ஷரத்தின் உரு 828
அக்ஷர நிறம் 829
அக்ஷரபீஜம் அதிதெய்வம் 830
அஷ்டவித்தராயகிகள் அபிநயம் 664-72
அஸ்த அங்குலிகளின் தேவதைகள் 160
அஸ்தம் 32

ஆகாரியாபிநயம் பக். 7
ஆகாரியாபிநயம் 29-31
ஆகாரியாபிநயம் மூன்று வகை 45
ஆங்கிகாபிநயத்தின் நான்குவகை 34
ஆங்கிகாபிநயத்தின் 12 பேதங்கள் 32
ஆங்கிகாபிநயம் பக். 7
ஆங்கிகாபிநயம் 24, 29
ஆசியாக்கண் 111
ஆசிரியர் சுட்டிய பிறமதங்கள்:—
அகஸ்தியர் (கும்பமுனி) பக். 128, 131, 134, 221, 304, 315.
அநுமன் பக். 59, 78, 90, 206 247.
அருச்சுனன் பக். 78, 88.
அறுமுகன் (சுப்பிரமணியர்) பக். 64, 203, 275.
இந்திரன் (தேவேந்திரன்) பக். 64, 206.
இரத்னகரன் 253
இராவணன் பக். 63
கங்காதரன் பக். 202
கோகளன் பக். 67, 96, 155, 203, 206.
கோரட்சகன் பக். 94
சார்ங்க தேவர் (சார்ஞ்தேவர்) பக். 111; 127, 129, 131, 174, 198.
சுக்கிரன் பக். 85, 89, 112, 242.
சுங்கன் பக். 83, 203, 206.
சோமராயமகாராஜன் பக். 4.
தத்திலன் பக். 66, 128, 206, 214.
திருமால் பக். 123
நந்தி (நந்திதேசுவரர்) பக். 62, 88, 116, 128, 188, 232, 251, 297.
நாரதன் பக். 100, 107, 131, 206.
பரதமாமுனிவன் பக். 6, 129, 253, 254.
பிரகஸ்பதி (வியாழன்) பக். 63 112, 115, 203, 209.
பிரமன் பக். 135
யாஞ்யவல்கியர் பக். 123, 129, 189, 249, 252.
வசிஷ்டர் பக். 198

விநாயகர் பக். 65, 88, 92, 174.
வியாசர் பக். 157
ஆதிமூலபரதம் பக். 11
ஆதூதச்சிரசு 73
ஆபரணங்கள் முதலியன-அபிநயம் பக். 279
ஆலோகித திருஷ்டி 83
ஆலோளிதச்சிரசு 66
ஆலோளிதபார்சுவம் 143
ஆவாக்ய தொந்தாபிநயம் 37
ஆவாசன முத்திரை 456
ஆவித்தவக்த்ரநிர்த்தக்கை 433

இசுகாந்தானச்சிரசு 75
இடுப்புப்பேதங்கள் மூன்று 141
இடுபுபுப்பேதப் பிரகரணம் பக். 66
இரட்டைக்கை - ஆண், பெண், அலி, பொது 1025
இரண்டாம் அத்தியாயம்முற்றும் பக். 282
இரத்த முகம் 126
இரத்தினங்களின் அபிநயம் 719
இரத்ன கடகாமுகம் 247
இரவிமுத்திரை 448
இராகங்களின் அபிநயம் 700-712
இராஜலக்ஷணம் 965-72
இருட்டாக்கண் 109
இருடிகள் அபிநயம் 775-97
இரேகாசந்திர அஸ்தம் 206-7
இலட்சுமி முதலியோர் அபிநயம் பக். 281
இலதை அஸ்தம் 362
இலாட்சணிகாபிநயம் 40
இளிவரல்ரசம் 497-8
இக்ஷு முத்திரை 464

ஈஷார்ஷயவதரம் 124

உக்கிரதிருஷ்டி 92
உட்கார்ந்த அபிநயம் 1006
உட்சிப்தச்சிரசு 70
உடை முதலியன-அபிநயம் பக். 279
உத்சங்க அஸ்தம் 378-9
உத்தம அடைவு வகை 482
உத்தம, மத்திம, அதம வாத்தியங்கள் 822
உத்தான தாண்டவம், சுகுமாரலாசியம் 55
உத்தான தாண்டவம் பக். 9
உத்தான வஞ்சிதக்கை 436
உத்தான வஞ்சிதம் 407
உத்வர்த்திதப்புருவம் 118
உத்வாகிதச்சிரசு 64
உத்வாகிதமார்பு 165
உத்விருத்தநிர்த்தக்கை 430
உத்வேஷ்டிதப்பிராணன் 151
உபகீதவாசிகம் 43
உபசப்தவாசிகம் 44
உபசார அஸ்தம் 410
உபாங்கங்கள் பன்னிரண்டு 60
உரப்பார்சுவமண்டலிநிர்த்தக்கை 442
உருசரசக்தி 33
உரோமண்டலிநிர்த்தக்கை 441
உல்பணநிர்த்தக்கை 444
உல்லோகிததிருஷ்டி 87
உலகங்களின் அபிநயம 561-66
உவகைரசம் 508-9
உஷாதேவி பக். 58

ஊகிதசங்கேதம் 155
ஊர்த்வமண்டலிநிர்த்தக்கை 440
ஊர்வனவற்றின் அபிநயம் 626

எண்களின் அபிநயம் 722

ஒற்றைக்கை - ஆண், பெண், அலி, பொது 1024
ஒற்றைக்கைகள் இருபத்தெட்டு 162

க்ரதித முத்திரை 459

கஞ்சக்கருவி 877
கட்டுவ அஸ்தம் 399

கடகாமுக அஸ்தம் 242-7
கடகாவர்த்தன அஸ்தம் 381-2
கடல்களின் அபிநயம் 573-6
கண்டசதுர அஸ்தம் 319
கண்டபேதங்கள் ஒன்பது 127
கண்டபேதப் பிரகரணம் பக். 61
கண்டமுகுளம் 311
கணபதி தோத்திரம் 1
கணபதி பூஜை 991
கத்தி நாட்டியம் 1003
கபித்த அஸ்தம் 234-40
கபோத அஸ்தம் 369-70
கம்பிதசிரசு 67
கம்பிதநாசி 121
கர்த்தரீ சுவத்திக அஸ்தம் 383-4
கர்த்தரீமுக அஸ்தம் 184-88
கர்வோதரம் 138
கரகேத்திரமென்னும் பாணித்தானப் பிரகரணம் பக். 68
கரணங்களின் அபிநயம் 550-52
கரணம் 24-26, 32
கரப்பிரசாரமென்னும் அஸ்துவாதசப்ராணப் பிரகரணம் பக். 69
கரிகிர்த்தக்கை 437
கருட அஸ்தம் 397
கருடகீலப்பாதம் 478-9
கருடபட்சநிர்த்தக்கை 440
கருணதிருஷ்டி 97-9
கருணமதக்கண் 114
கலச அஸ்தம் 403
கலியுக அபிநயம் 514
கவஸ்துபமுத்திரை 447
கற்கடக அஸ்தம் 371-2
கஜதந்த அஸ்தம் 401
கஜமுக அஸ்தம் 347-9

காங்கூல அஸ்தம் 282-6
காத்திராஜாநுபாவம் பக். 7
காந்தக்கண் 94-5
காமதேனு முதலியன - அபிநயம் 798-803
காலத்தின் அபிநயம் 511
கிரஸ்தாதிருஷ்டி 108
கிருதயுக அபிநயம் 512

கீலக அஸ்தம் 391-2

குஞ்சிததிருஷ்டி 111
குஞ்சிதப்பிராணன் 150
குஞ்சிதபாதம் 471
குஞ்சிதபார்சுவம் 144
கும்பமுத்திரை 465
குருலகுசப்தங்களின் விவரம் 826
குளம், படி, கிணறு இவற்றின் அபிநயம் 586-7

கூர்ம அஸ்தம் 395
கூர்மக்கை 351

கேசபந்தநிர்த்தக்கை 436

சக்கர அஸ்தம் 387
சகட அஸ்தம் 385
சகட முத்திரை 455
சங்க அஸ்தம் 360
சங்க அஸ்தம் 386
சங்கஸ்தாபனம் 954
சங்கிததிருஷ்டி 113
சங்கீத அபிநயம் 698-712
சங்கீர்ண காங்கூலம் 112
சங்கீர்ணசிகர அஸ்தம் 233
சங்கீர்ண சிம்மமுகம் 280
சங்கீர்ணபதாகம் 169
சங்கீர்ணபாண அஸ்தம் 294
சங்கீர்ணமுட்டி 225
சங்கேதகரப்பிரசாரம் பக். 70
சங்கோசமிருகசிரம் 275
சஞ்சாயி 30
சத்புடநாசி 122
சதுர அஸ்தம் 314-20
சதுரச்ர அஸ்தம் 417
சதுரச்ரநிர்த்தக்கை 430
சந்தம்ச அஸ்தம் 300-303
சந்தம்சமுகுளம் 312
சந்தஸ்சாஸ்திரம் பக். 293

சங்கிதை முத்திரை 451
சங்கிரோதன முத்திரை 452
சப்தசுரங்களின் அபிநயம் 698-99
சப்தம் 33
சபாசப்தாங்கலக்ஷணம் 975
சபாநாயக லக்ஷணம் 977
சபாநாதனிருப்பு 978
சபாமண்டபம் 976
சபாலக்ஷணம் 974
சபையில் பாத்திரமிருக்கும் லக்ஷணம் 980
சபையிலுள்ளோர் லக்ஷணம் 979
சபை வணக்கம் 981
சம்புட அஸ்தம் 388
சம்யமி அஸ்தம் 416
சம்யுத அஸ்த அதிதெய்வங்கள் 425
சம்யுத அஸ்த லக்ஷணம் 363-66
சமசிரசு 63
சமதிருஷ்டி 82
சமபாதம் 467
சமபிருஷ்டம் 139
சம்மார்பு 135
சமவதரம் 123
சர்ப்பசதுர அஸ்தம் 320
சர்ப்பசீர்ஷ அஸ்தம் 262-67
சர்வாங்க அபிநயம் 718
சரசுவதி துதி 3
சலவக்ஷ அஸ்தம் 341
சலனேதரம் 137
சலிதத்திரிபதாகம் 180
சஷாகிருதிக்கை 415

சாசிதிருஷ்டி 84
சாட்கதிபாதம் 477
சாட்சுஷியசாத்விகம் 48
சாத்விகபாவம் பக். 5
சாத்விகாபிநயம் பக். 7
சாத்விகாபிநயம் 30-32
சாத்விகாபிநயம் - இரண்டுவகை 48
சாந்திரசம் 510
சாபவிவரம் 1015
சாயி 30
சார்ங்கதேவ மகாமுனி மகாபரதத்தைச் சோமராய மகாராஜனுக்கு உபதேசித்தது பக். 4
சார்ங்கதேவ மகாமுனி மகாபரதம் இயற்றியது பக். 3-4
சார்ங்கதேவர் சோமராசனுக்குக் கூறியது பக். 72
சாலீகள் முதலியன அபிநயம் பக் 280
சாலீகளின் அபிநயம் 615-23
சாலீயக்கை 354-5

சிகர அஸ்தம் 226-233
சித்தவிருத்தி பக் 7, 49-50
சித்தஜாநுபாவம் பக். 7
சிம்மமுக அஸ்தம் 276-81
சிம்மாசனம் முதலியன - அபிநயம் பக். 281
சியாமமுகம் 126
சிரக்கரகருமமென்னும் சிரப்பாணிகர்மப் பிரகரணம் பக். 68
சிரோபேதங்கள் 19, 61-62
சிரோபேதப் பிரகரணம் பக். 33
சிரோபேதம் 32
சில நாட்டியவகைகள் 1003-15
சிலிட்ட அம்சாசிய அஸ்தம் 329-30
சிலிட்ட அம்ஸபட்ச அஸ்தம் 334
சிலிட்ட அராளம் 213
சிலிட்ட அலபதுமம் 291
சிலிட்ட கடகாமுகம் 246
சிலிட்ட கபித்தம் 240
சிலிட்ட கர்த்தரீமுகம் 189
சிலிட்ட காங்கூலம் 285
சிலிட்ட சந்தம்சம் 303
சிலிட்ட சந்திர அஸ்தம் 205
சிலிட்ட சிம்மமுகம் 279
சிலிட்ட சுகதுண்ட அஸ்தம் 218
சிலிட்டநாசி 120
சிலிட்டபதாகம் 172
சிலிட்டபதுமகோசம் 261

சிலிட்டபிரம்மம் 298
சிலிட்டபுடநாசி 121
சிலிட்டமயூரம் 194
சிலிட்டமிருகசிரம் 274
சிலிட்டமுகுளம் 310
சிலிட்டமுட்டி 224
சிலீமுகக்கை 357-9
சிவகணங்களின் அபிநயம் 732-37
சிவலிங்க அஸ்தம் 380
சிவனிருப்பிடம் 823
சின்னகரப்ரசாரம் பக். 72

சுகதுண்ட அஸ்தம் 214-19
சுகிதவாசிகம் 42
சுகுமாரலாசியம் பக். 9
சுசித்தவாசிகம் 43
சுத்தலாட்சணிகாபிநயம் 41
சுந்தரிகண்டம் 128-9
சுப்பிரமணியர் துதி 2
சுபாவ அதரம் 923
சுபாவ நடு 141
சுரப்பிறப்புத்தீவுகளின் அபிநயம் 588-9
சுரபிமுத்திரை 446
சுருதிக்காரன் லக்ஷணம் 889
சுவத்திக அஸ்தம் 373
சுவத்திகநிர்த்தக்கை 431
சுவாபாவிகமுகம் 126

சூச்யாசியநிர்த்தக்கை 433
சூசனதிருஷ்டி 91
சூசிஅஸ்தம் 248-55
சூசிகாபிநயம் 35

டம்மாரக்காரன், பேரிகைக்காரன் லக்ஷணம் 892

டாளவங்கம் 1040-2

டோள அஸ்தம் 374-5

தசாவதார அபிநயம் 804-9
தண்டபட்சநிர்த்தக்கை 438
தலசிம்மமுகம் 281
தலபதாகம் 173-4
தலமுகநிர்த்தக்கை 431
தலரேகாசந்திர அஸ்தம் 208
தவில்காரன் லக்ஷணம் 891

தாடனபதாக அஸ்தம் 408
தாடிதபாதம் 474
தாண்டவம் 32
தாண்டவம், லாஸ்யம் 54
தாம்பிரசூட அஸ்தம் 304-6
தாம்பூலம் முதலியன - அபிநயம் பக். 279
தாளகிரி லக்ஷணம் 884
தாளசந்தி அங்கம் 1043-6
தாளவகை 880-82
தானகம் 51க்கு விவரம் 1056
தானகம்-ஆணிலை, பெண்ணிலை, பொதுநிலை 1026-9
தானப்பிரமணம் 32

திதிகளின் அபிநயம் 536-9
திரச்சீலாகண்டம் 150
திரஸ்தாதிருஷ்டி 108
திரிசூல அஸ்தம் 338
திரிபதாக அஸ்தம் 175-80
திரிபதாக சுவத்திகம் 418
திரியக்கதானனச்சிரசு (திரியங்முதாநந்நதம்) 75
திரியாங்கம் 58-60
திரிலிங்கக்கை 352-3
திருஞான அஸ்தம் 414
திருநடனா வணக்கம் 5
திரேதாயுக, துவாபரயுக அபிநயம் 513
திலக அஸ்தம் 421

தீனதிருஷ்டி 107

துக்கரசம் 495-6
துதசச்சிரசு 68
துரிததிருஷ்டி 90
துளாக்கருவி 855

தூப அஸ்தம் 342
தூரதிருஷ்டி 93

தேங்காய் லக்ஷணம் 924-945
தேசங்களின் அபிநயம் 603-10
தேவர்களின் அபிநயம் 725-31
தேவியர் அபிநயம் 738-47

தொந்தாபிநயம் 36
தொன்யாத்மகம் பக். 7

தோற்கருவி 810
தோற்கருவி 36க்கு லக்ஷணம் 838
தோற்கருவி, உத்தம, மத்திம, அதம வாத்தியங்கள் 839-41
தோற்கருவி - வாத்தியங்களின் தொனி லக்ஷணம் 845-56

நகைரசம் 493-4
நட்டுவன் லக்ஷணம் 893-901
நடனசாலை 963-4
நதிகளின் அபிநயம் 577-85
நம்பியார் தீபமெடுத்தல் 1022-3
நமிதநடு 142
நயனபேதங்கள் முப்பத்தாறு 77-81
நயனபேதப் பிரகரணம் பக். 43
நர்த்தனம் இன்னதென்பது பக். 8
நவ உலோகங்களின் அபிநயம் 720
நவக்கோள்களினபிநயம் 556-60
நவரசங்கள் 492
நவரசங்களின் அபிநயம் 713-14
நவரசபேதபிரகரணம் பக். 182
நவரசாபிநயம் 721
நளினபத்மகோசநிர்த்தக்கை 443
நற்சாதிப்பெண்கள் அபிநயம் 661-63
நக்ஷத்திரங்களின் அபிநயம் 542-48

நாகபந்த அஸ்தம் 298
நாகபந்தபாதம் 475-6
நாசிபேதங்கள் ஐந்து 119
நாசிபேதப்பிரகரணம் பக். 57
நாட்டிய உத்தம மத்திம அதம தேசப்பெண் 998
நாட்டியக்கிரமம் 992, 991-7
நாட்டியஞ்செய்யும் ஸ்தலங்களின் லக்ஷணம் 1008-1011
நாட்டியத்தின் அசுபபலன் 1013
நாட்டியப்பலன் 1012
நாட்டியப் பெண் வயது 999
நாட்டியம் 32
நாட்டியம் இன்னதென்பது பக். 8
நாட்டியமேளக்கோவை 993-7
நாட்டிய விவரம் 27
நாட்டியாரம்பாங்கியவந்தனம் 1005
நாடக அரங்கம் முதலியன 954-90
நாடகம், நிருத்தம், நிருத்தியம் 52-3
நாத உத்பவம் பக். 7
நாதசுர அதிதேவதைகள் 868-72
நாதசுரத்தின் பாஷை 873-4
நாதசுரத்தின் லக்ஷணம் 856-867
நாதசுரத்துஸ்ரகள் 12க்கு அதி தேவதைகள் 875
நாந்தி 12
நாயகிகள் அபிநயம் 658-672
நால்வகை முதல்வரின் அபிநயம் 673-4
நான்குவித அபிநயம் 29-48

நிகஞ்சிதச்சிரசு 71
நிடத அஸ்தம் 404
நிதம்பநிர்த்தக்கை 435
நிமீலித திருஷ்டி 86
நிர்த்த அஸ்தலக்ஷணம் 426-9
நிர்த்தநிஷ்டசங்கேதம் 155
நிர்யாணமுத்திரை 454
நிருத்தநிலைப்பாதம் 480-1
நிருத்தபஞ்சப்பிராணன் 824

நிருத்தம்இன்னதென்பது பக். 8
நின்ற அபிநயம் 1007
நிஜாகாரியாபிநயம் 45

நிசாசாட்டியம் 1014

நூலின்வரலாறு 7-11

நேத்திரபேதம் 32

பஞ்சக்கருவிகளின் லக்ஷணம் 837
பட்சப்பிரத்தியோதகக்கை 438
பட்சவஞ்சிதநிர்த்தக்கை 438
பட்சவஞ்சிதம் 406
பட்டணம்,ஊர், கிராமங்களின் அபிநயம் 611
பதாக அஸ்தம் 163-74
பதாக சுவத்திகம் 419
பதார்த்தடீகம் பக்.73
பதுமகோச அஸ்தம் 256-61
பதுமமுகுள அஸ்தம் 411
பதுமமுத்திரை 449
பயாநக திருஷ்டி 96
பரதத்தின் ஆறங்கங்கள் பக். 8
பரதத்தின் தோற்றம் பக்.2-3
பரதம் என்பதற்குப் பொருள் பக்.9
பரதம் என்பதற்கு லக்ஷணம் 1020-1
பரதம் என்பதன் பொருள் பக்.5
பரதம் வந்தவகை - கர்த்தாக்களின் பெயர் பக். 9-10
பரதம்வேதஸாரம் என்பது பக்.8
பரதலக்ஷணம் பக்.5
பரதஸாரஸங்கிரகம் (நூல்) பக் 5, 7
பராவிருத்தசிரசு 69
பரிவர்த்தனகண்டம் 131
பரிவாகிதசிரசு 70
பரிவிருத்தப்பிராணன் 151
பல்லவநிர்த்தக்கை 435
பறவைகளின் அபிநயம் 627-34
பக்ஷத்தின்அபிநயம் 535
பாசஅஸ்தம் 389-90
பாடகன் முதலியோர் லக்ஷணம் 883-92
பாடகன் லக்ஷணம் 883
பாண அஸ்தம் 292-94
பாத்திர அலங்காரம் 909-12
பாத்திரசொரூபலக்ஷணம்989
பாத்திரத்தின் அந்தப்பிராணன் 908
பாத்திரத்தின் உடைக்கச்சை லக்ஷணம் 953
பாத்திரத்தின் கிண்கிணி லக்ஷணம் 915-6
பாத்திரத்தின் தண்ட லக்ஷணம் 921-23
பாத்திரத்தின் பகிப்பிராணன் 907
பாத்திரத்தின் ரவிக்கை 914
பாத்திரத்தின் வஸ்திரலக்ஷணம் 913
பாத்திரநட்டுவபாந்தவ்யம் 987
பாத்திரமேளபாந்தவ்யம் 988
பாத்திரலக்ஷணம் 902-06
பாதசாரி 32
பாதபேதங்கள் 10, 466
பாதபேதப்பிரகரணம பக். 175
பாதுகைமுத்திரை 461
பாந்தவ்யஅபிநயம் 717
பாந்தவ்யங்களின் அபிநயம் 677-84
பாயிரம் 13-23
பார்சுவபேதப்பிரகரணம் பக். 67
பார்சுவமண்டலிநிர்த்தக்கை 441
பார்சுவாபிமுகச்சிரசு 76
பாரதி அஸ்தம் 412
பாவ உத்பவம் பக் 7
பாவம் இன்னதென்பது பக். 7
பாவம் என்பதன் பொருள் பக்.5
பாவவிருத்தி லக்ஷணம் பக். 7
பாவாபிநயம் 36
பாவார்த்தலக்ஷணம் பக். 5
பிரவாலங்காரம் ஐந்து பக். 5
பாவிகதொந்தாபிநயம் 38

பாவியவிருத்தி பக். 7
பாவியவிருத்தி 49 , 51
பானுதத்தன் இயற்றிய மஞ்சரி பக். 235

பிண்டி அஸ்தம் 340
பிரகம்பித கண்டம் 132
பிரகம்பிதமார்பு 136
பிரசன்னமுகம் 126
பிரசன்னமுத்திரை 450
பிரத்தியாங்கங்கள் ஒன்பது 59
பிரதேசமுகுளம் 313
பிரம்புலக்ஷணம் 946-52
பிரம்ம அஸ்தம் 344
பிரமசாரி முதலியோர் அபிநயம் பக். 281
பிரமசுகதுண்ட அஸ்தம் 219
பிரமர அஸ்தம் 295-99
பிரமன் செய்த பரதம் 32 லக்ஷம் கிரந்தம் கொண்டது 8
பிரலோகித திருஷ்டி 85
பிரவிசார சேஷ்டை பக். 9
பிரஸாரணப்பிராணன் 150
பிருஷ்டபேதங்கள்மூன்று 139
பிருஷ்டபேதப்பிரகரணம் பக். 65
பிரேரிதப்பிராணன் 151
பிறதேவர்முதலியோர் அபிநயம் 748-61

புங்கிதப்பிராணன் 150
புட்பபுட அஸ்தம் 376-7
புணர்ச்சி முதலியன அபிநயம் 715-716
புணர்ச்சி வகை அபிநயம் பக். 282
புத்தியார்ம்பாதுபாவம் பக். 7
புருவபேதங்கள்நான்கு 116
புருவபேதப்பிரகரணம் பக். 56
புல்லாங்குழல் 876
புஜபேதங்கள் 16, 134
புஜபேதப்பிரகரணம் பக். 63

பூர்ணநாபஅஸ்தம் 335-37
பூருவபிரமரம் 299

பெண்களின்வகை 998-1002
பெண்பருவம் 10 0
பெருமைரசம் 503-4

பேரணிகாட்டியம் 1004
பேருண்டஅஸ்தம் 400

மகாபரதத்தில் சார்ஞ்தேவர் கூறிய முத்திரைகள் பக். 174
மகாபரதம் லக்ஷம்கிரந்தம் கொண்டது பக், 3-4
மங்கள வாத்தியம் 885
மச்ச அஸ்தம் 393-4
மடந்தையர் அபிநயம் 658-60
மண்டபலக்ஷணம் 959-62
மண்டல அஸ்தம் 362
மண்டலபாதம் 468-9
மண்டலம் 33
மண்டூக அஸ்தம் 343
மணப்பெண்பருவம் 1002
மணப்பெண்லக்ஷணம் 1001
மத்தளம் - அதிதெய்வங்கள் 825
மத்தளம் - இலக்கணம் 810-17
மத்தளம் - தத்தித்தொன்னாம் பிறந்தவகை 819
மத்தளம்-துணைகளின் அதிதேவதைகள் 818
மத்தளம் - காதலக்ஷணம் 820
மத்தளம் - பஞ்சப்பிராணன் 820
மத்தளம் - மரங்களும் அளவும் 835
மத்தளம் - வாசிக்கும் வகை 836
மத்திம அடைவு 483
மத்திமமதக்கண் 114
மத்திமமுகுளம் 312
மதக்கண் 113
மதாந்திர தாம்பிரகூட அஸ்தம் 306
மதுரை மீனாட்சி சுந்தரேசர் துதி 4
மந்திரி லக்ஷணம் 973
மயூர அஸ்தம் 190-94
மருட்கைரசம் 499-500

மல்லுத்த அஸ்தம் 413
மலிந் திருஷ்டி 110
மலைகளின் அபிநயம் 567-72

மாதங்களின் அபிநயம் 533-34
மார்புபேதங்கள் மூன்று 135
மார்புபேதப்பிரகரணம் பக். 63
மானிடர் - பொது அபிநயம் 650
மானுஷ அஸ்தம் 346

மித்ரோதாசங்க அஸ்தம் 420
மிதப்புருவம் 117
மிருகசிர அஸ்தம் 268-75
மிருதங்க லக்ஷணம் 844
மிருதங்கி லக்ஷணம் 885-6

முகங்கள் நான்கு 125
முகராகப்பிரகரணம் பக். 60
முகவீணை, நாகசுரம், வேணுக் காரர்கள் லக்ஷணம் 887
முகுள அஸ்தம் 307-313
முட்டி அஸ்தம் 220-25
முட்டிகச்சுவத்திக நிர்த்தக்கை 443
முட்டிமுகுளம் 311
முத்ராஹஸ்தலக்ஷணம் 446
முஷ்டிமிருகசிரம் 275
முஸல முத்திரை 462

மூடாரம்பக்கண் 100
மூவிதநாயகர்களின் அபிநயம் 675-76
மூன்றும் அத்தியாயம் தொடக் கம் பக். 283
மூன்றும் அத்தியாயம் முடிவு 360

மென்னிலக்கை 350

யுக்தசந்திர அஸ்தம் 205
யுகாபிநயம் பக்.189

யோகங்களின் அபிநயம் 549
யோனிமுத்திரை 453

ரதாமோதஅஸ்தம் 424

ருதுவின் அபிநயம் 530-532

ரேசிதநிர்த்தக்கை 434
ரேசிதப்பிராணன் 150

லக்ஷணங்களினபிநயம் 553-5
லதாகாரக்கை 437
லம்போதரம் 138
லலித திருஷ்டி 110
லலிதநிர்த்தக்கை 445
லலிதபிருஷ்டம் 139

லிபிஉத்பவம் பக். 7

வக்கிரதுண்டசிம்மமுகம் 280
வக்கிரார்த்தபதாகம் 183
வக்ரசூசி 255
வடிம்புபாதம் 437
வயிறுபேதப்பிரகரணம் பக். 64
வர்த்தமான அஸ்தம் 405
வர்ஜிதஅஸ்தம் 345
வராகஅஸ்தம் 396
வருடாபிநயம் 515-527
வருஷத்மகம் பக். 7
வல்லபாயுதஅஸ்தம் 423
வலம்புரி அஸ்தம் 361
வலிதநிர்த்தக்கை 445
வலிதபிருஷ்டம் 140

வாகாரம்பாநுபாவம் பக். 7
வாசிகாபிநயம் பக். 7
வாசிகாபிநயம் 29, 30-32
வாசிகாபிநயம் நான்குவகை 42
வாத்தியக்காரருக்குப் பஞ்சப்பிரா ணன் 833-4
வாரங்கள் கிரகங்கள் இவற்றின் அபிநயம் 540-41
வாஸ்து எழுநாள் 958
வாஸ்துவின்மாதம் 955-7

விகசித அதரம் 124
விகற்பதிருஷ்டி 104

விதர்க்கிததிருஷ்டி 107
விதூரதச்சிரசு 73
விப்பிரசாந்ததிருஷ்டி 105
விப்புலுததிருஷ்டி 106
விப்ரகீர்ணகிர்த்தக்கை 432
விபசாயி 30
விபஞ்சக சாத்விகம் 48
விபாவம் பக். 5
வியபிசாரி ஆகாரியம் 47
வியபிசாரிபாவம் பக். 5
வியாக்கிர அஸ்தம் 339
வியாவிருத்தப்பிராணன் 151
விருத்தி 49-51
விருதுகளணியுமிடங்கள் 1018
விருதுகளின் தேவதைகள் 1016
விருதுகளும் அணிபவர்களும் 1019
விருது - நிறம், சாதி 1017
விருதுலக்ஷணம் முதலியன 1016-23
விருக்ஷங்களின் அபிநயம் 590-602
விலங்குகளின் அபிநயம் 635-949
விலோளித பார்சுவம் 144
விஷாணதிருஷ்டி 105
விஸ்தாரமுத்திரை 463

வீடுகள், அவற்றின் பகுதிகளின் அபிநயம் 612-14
வீரதிருஷ்டி 103
வீரரசம் 505-7
வீரவாத்யம் 843

வெகுவான அபிநயம், அற்பமான அபிநயம் 56-57
வெண்கலம் பிறந்த விவரம் 879

வைணிகன் லக்ஷணம் 888
வைஷ்ணவ அஸ்தம் 422

2.16 ரி



நூல் நிலையம்